# கோதையின் பக்திப் பாதை

(ஆண்டாள் வரலாறு, திருப்பாவை,
கோபிகள், நாச்சியார் திருமொழிகளின்
திவ்விய தத்துவார்த்த விளக்கத்துடன்)

**ஆக்கியோன்**

திவ்விய தேசச் சுடரொளி, கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்,

**பேராசிரியர், டாக்டர் - சர், ஆர். இராமாநுஜம்**
M.A., Ph.D., D.Litt., D.Lett., D. Edn., D.D., Kt., FCGA, RLSS

**வெளியீட்டாளர்**

*பேராசிரியர் - ஆர். இராமாநுஜம்
20/1, ஐந்தாவது தெரு,
டாக்டர் சுப்பராயன் நகர், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024 (✆ : 4725439)
தமிழ்நாடு.*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kodhayin Bakthi Padhai |
| Language | : | Tamil |
| Author | : | Prof. R. Ramanujam |
| Date of Birth | : | 05.07.1936 |
| Edition | : | First Edition (Offset Printing) |
| Published Month and Year | : | 18th day of April 1999 |
| Copy right Holder | : | Author |
| Occupation of the Author | : | Director, Parthasarathy Cultural Academy. Chennai |
| Paper used | : | Maplitho 60 GSM |
| Size of the book | : | Demy size (1/8) |
| Printing point used | : | 10 point |
| No.of Pages | : | 24 + 60 + 200 = 284 |
| Sponsored by | : | T.T.D. Tirupati |
| Printed Copies | : | 1000 |
| Type of Printing | : | Computer Typeset, Laser output and Offset Printing |
| Laser Printing | : | PUSHPAM COMPUTERS, Pager No.9628446271 |
| Printer | : | RAJAM OFFSET PRINTERS Phone: 5224844 |
| Wrapper Designed by | : | PUSHPAM COMPUTERS, Pager No.9628446271 |
| Binding | : | Section stich |
| Price | : | Rs.100/- |
| Publisher | : | Author |
| Sales right | : | Author |
| Subject | : | Literary Sacred Philosophy |

# இந்நூலின் பயன்




1. நினைத்த காரியங்கள் இறையருளோடு நிறைவேற வேண்டுமென்று லட்சோபலட்சம் குடும்பங்களில் மார்கழி பூஜை செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம், மார்கழி விரதத்தின் மகிமையை நன்றாகப் புரிந்து கொண்டு முறைப்படி பூஜையைச் செய்வதற்கு இந்த நூல் ஓர் அதி அற்புதமான வரப்பிரசாதமாகும்!

2. மார்கழி பூஜை செய்பவர்களுக்கும், திருமணங்களுக்கும், எல்லாவிதமான ஆன்மீகப் பற்றுள்ள வைபவங்களுக்கும் இந்த நூலை ஈடு இணையற்றப் பரிசுப் பொருளாக வழங்கலாம்!

3. எழுபது வயதுக்கும் மேற்பட்ட என்னுடைய ஆன்மீக அனுபவத்தில் – ஆண்டாள், திருப்பாவை, கோபிகைகள், நாச்சியார் திருமொழிகள் ஆகியவைகளைப் பற்றிப் புதிதாகத் தெரிந்து கொள்ளத்தக்க விஷயங்கள் இந்நூலுக்கு மேல் வேறு விஷயங்கள் வேறு எதிலும் இல்லை என்பது என் கருத்து!

*பல்கலைச் செம்மல், ஆன்மீகச் சுடர்,*
*டாக்டர், புலவர் –சிதம்பர வீரப்பனார்,* D.LITT
*துணை இயக்குநர்*
*பார்த்தசாரதி உலகளாவிய கலாசார கழகம்*
*(இல்லம்: தாமரங்கோட்டை - தஞ்சை மாவட்டம்)*

# கோதையின் பக்திப் பாதை



This Book is Published with the financial Assistance of Tirumala Tirupati Devasthanams under the Scheme - Aid to publish Authors Scheme

கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்,
பேராசிரியர், டாக்டர் – சர், ஆர். இராமாநுஜம்

# உள்ளுறை

Title Page I
Bibliographical Data II
இந்நூலின் பயன் III
தேவஸ்தான படம் IV
உள்ளுறை V
சமர்ப்பணாஞ்சலி VI
சமர்ப்பணாஞ்சலி பெறுகின்றவர்கள்
அ) திருமதி. வித்யா ஜோதி லைலா சுப்பிரமணியம் XII
ஆ) சர், டாக்டர், K.V. குப்புசாமி XVII
இ) சர். டாக்டர், பி.ஏ.துரைசாமி XX
ஈ) திருமதி. கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ் 1-4

அணிந்துரைகள்
அ) நீதியரசர், டாக்டர் P. R.கோகுல கிருஷ்ணன் 5 - 9
ஆ) பேராசிரியர், டாக்டர், K. வேங்கட சுப்பிரமணியன் M.A., B.L, B.T.Ph.D. 10 - 12
இ) திருமதி. டாக்டர். பூமா வேங்கட கிருஷ்ணன் M.A., B.Ed, Ph.D. 13 - 14
ஈ) திருமதி. லலிதா அண்ணாமலை, B.Sc., B.Ed. 15 - 20
உ) நூலாசிரியரின் துணைவியார் கூறுகிறார் 21 - 22
ஊ) ஸ்ரீலஸ்ரீ வரத எதிராஜஜீயர் சுவாமிகளின் அணிந்துரை – மங்களாசாசனங்கள் 23 - 33
ஆக்கியோன் உரை 34 - 53
கோபி கோதை ஆண்டாளின் திருப்பாவைப் பிரபந்தங்கள் 54 - 60
கோதையின் பக்திப்பாதை 1 - 200

# சமர்ப்பணாஞ்சலி

முதற்கண் அடியேனின் இப்படைப்பை T.T.D. அங்கீகரிக்கப் பேரருள் சுரந்த "என்னைத் தனதாக்கித் தன்னை எனக்குள் வைத்த" எம்பெருமான் திருவேங்கடமுடையானின் பாதார விந்தங்களை மன, மொழி, மெய்களால் வழிபடுகின்றேன்.

*'ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!' - இதைத்தான் உலகத்திலுள்ள எல்லா மதங்களும், மார்க்கங்களும் , சமயங்களும் கூறிக் கொண்டிருக்கின்றன.*

*ஆன்மீக அடிப்படையில் அமைந்த இக்கொள்கையால் தான் - உலகில் சமாதானம் தழைக்கும்! சகோதரத்துவம் வளரும்! சமரசம் மலரும்!*

*உலகம் முழுவதற்கும் கடவுள் ஒன்றுதான் என்றால் - அந்தக் கடவுள் ஆணா? அல்லது பெண்ணா? மனிதகுலம் படைக்கப்படும் பொழுதே, வெறும் ஆண்களாகவும் படைக்கப்படவில்லை! வெறும் பெண்களாகவும் படைக்கப்படவில்லை! அதனால்தான் - கடவுள் ஆணா? அல்லது பெண்ணா என்ற வினாவை, நமக்கு நாமே சிந்திக்க வேண்டி வந்தது!*

*ஒன்றே கடவுள் என்ற கொள்கையை வேதங்களின் வழியாக மனித சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லும் எல்லா மதங்களுமே,* **கடவுளுக்கு ஆண் வடிவம் கொடுத்துத்தான்** *உருவமாகவும், அருவமாகவும் சாஸ்திரங்களைப் போதிக்கின்றன.*

*ஒன்றே கடவுள் என்ற ஒப்பற்ற ஆன்மீக தத்துவார்த்தத்தை நியாயப்படுத்த வேண்டும் என்பதற்காக, மனிதகுலம் தழைத்து சாந்தி சமாதானத்துடன் வாழ்வதற்குக் காரணமாக விளங்கும்* **பெண்மையைக் கடவுள் நிலையோடு சேர்க்காமல்** *புறக்கணிப்பது நீதியாகுமா?*

*தாய் , தாரம், மகள், சகோதரி, பாட்டி, மாமி - இப்படி அவ்வப் பொழுது வடிவங்கள் மாறி மாறித் தோன்றி மகிழ்விக்கும் பாச உணர்வுகளிலெல்லாம் - கடவுளின் தன்மை தவழ்வதை, ஏன் வேதங்கள் மறந்துவிட்டன?*

*கடவுளை வழிபடும் பக்தி மார்க்கங்களிலும்கூட - பெண் சமுதாயத்திற்கு உலகம் முழுவதும் சரியான முதன்மை தரப்படவில்லையே, இது ஏன்?*

ஆன்மீக நிலையில் - ஆலய மூலக் கருவறைக்குள் செய்யப்பட்டு வரும் வழிபாட்டு அர்ச்சனைகள், யாக வேள்விகளில் குருபீடத்தில் அமர்ந்து யாகத்தை நடத்தும் தலைமை நிலை, மதச் சார்புடைய புரோகித வைதீக வாத்திமைத் தலைமை - போன்றவைகளில்கூட ஆண்களுக்கே உரிமை! ஆனால் கூட்டிப் பெருக்கித் துடைத்துத் தூய்மை செய்து கோலம் போடுதல், கவர்ச்சியுடன் ஆடிப்பாடுதல், பூத்தொடுத்தல், பிரசாதங்களை சமைத்தல், உணவைப் பரிமாறி எச்சில் இலைகளை எடுத்தல் போன்ற எடுபிடி வேலைகள் - போன்றவைகளெல்லாம் பெண்களுக்காகவே ஒதுக்கப்பட்டவை! இத்தகைய ஏற்றத்தாழ்வு கொண்ட ஆன்மீக சமுதாய அமைப்பு சரியான ஒன்றா?

ஆணும் பெண்ணும் அற்ற உயிரின் நிலைதானே ஆன்மீகம்? ஆன்மீகத்திலும் கூடப் பெண்குலம் புறக்கணிக்கப்படுவது சரியா? சரியான தெய்வீக நெறி ஆகுமா?

கடவுள் தன் அம்சத்தோடு மனித குலத்தைப் படைத்திருப்பது உண்மையானால் - மனித குலத்தில் உள்ள பெண்மையின் அம்சத்தில் கடவுளின் அம்சம், இல்லவே இல்லையா? தாய்மைக்குள் கடவுள் அம்சத்தைக் காண்பதாகச் சொல்வதெல்லாம் - பொய்யான போலி வார்த்தைகளா?

உலகில் பெண்கள் தினம் எங்கெங்கும் கொண்டாடப்பட்டு வரும் இந்த ஆண்டில் எனக்குள்ளாக எழுந்த சிந்தனைகள் இவை! இச்சிந்தனை ஓட்டத்தின் பின்னணியையும் இணைத்துக் கொண்டு மலர்ந்த ஆன்மீகப் படைப்பே - **கோதையின் பக்திப் பாதை!**

பக்தி மார்க்கத்தில் - அனைத்தும் இறைவனே என்று ஒரு ஆண் மகன், தன் ஆசைகளையும் சரீர அனுபவ சுகங்களையும், பொறிகளையும் புலன்களையும் அடக்கி ஒடுக்கிக் கொண்டு, முழுத் துறவற நிலையில் இறைவனின் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவதற்கு வேத சாஸ்திரங்கள் இடம் தந்திருக்கும்பொழுது -

இதே நிலையில் - ஒரு பெண்ணும், தன்னை அடக்கி ஒடுக்கிக் கொண்டு இறைவழியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, காதல் உணர்வுகளோடு பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு, இறைவனோடு சங்கமம் ஆகக் கூடாதா?

தெய்வ நிலையை அடைவதில்கூட ஆணுக்கு ஒரு சாஸ்திரம்! பெண்ணுக்கு ஒரு சாஸ்திரம்! - என்று எங்கும் எழுதப்படவில்லையே? இத்தகைய பெண்குல ஆன்மீகப் புரட்சியின் இன்றைய வினாவிற்கு - அந்தக் காலத்திலேயே, தானே உதாரண நாயகியாக விடையளித்த பெண்குல பக்திமார்க்கப் பெருந்தகைதான்,

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த ஆண்டாள் கோதை நாச்சியார்!

பெண்ணாகப் பிறந்தாலும் கடைசி வரையிலும் கன்னி கழியாமல் பக்தி நெறியில் உள்ளத்தையும், உணர்ச்சியையும், உடலையும், உயிரையும் வைத்துக் கொண்டு - ஆதிமூல நாயக னாகிய இறைவனையே தன் நாயகன் என்று தேர்ந்தெடுத்த ஒப்பற்ற நாயகிஆகி - நாயகி நாயக சரணாகதித்துவ அர்ப்பணிப்பில் "இறைவனோடு தன் சரீரத்துடனும் ஜீவாத்மாவுடனும் சங்கம மாகிய ஒரே பெண்தான் இந்த உலகத்தில் வாழ்ந்திருக்கிறாள்!" என்று சொல்லும் நிலையில் அமைந்த பெண்மைக்குரிய நாயகியின் பக்தி மார்க்கத்தில், ஒரே சாட்சி! - ஒரே உதாரணம்! கோபி கோதை ஆண்டாள் நாச்சியார் மட்டுமே!

பக்தி மார்க்கத்தில் பரமாத்ம சங்கம நிலையின் முழு எல்லையையும் கண்ட கோதை நாயகி, தன் ஜீவாத்மாவை ஆதி நாயகனாகிய பரமபுருஷனுக்கு சொந்தமாக்கியதோடு - தன் பெண்மையையும் இறைவனுக்கே சொந்தமாக்க உறுதி பூண்டு - அதே நேரத்தில், தன்னைப் போல சரீரம் எடுத்த மனிதகுலம் சமாதான சகோதரத்துவ ஒருமைப்பாட்டு நிலையில் - உலகில் செல்வம் செழிக்க, மாதம் மும்மாரி பொழிய, செல்வ வளங்கள் கொழிக்க, மனிதகுலப் பாவங்கள் தீயில் கருகும் பஞ்சைப்போல் பொசுங்க, இறையருள் எங்கெங்கும் மலர - பிரபந்தப் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

கோதையின் பிரபந்தங்கள் - எண்ணற்ற பக்தி விழுதுகளோடு படரும் பலவகைப்பட்ட ஞானமரங்களைத் தனக்குள் அடக்கிக் கொண்டுள்ள வேத ஆன்மீக விதை! எளிய இனிய நடையில் உயர்ந்த நோக்கு! தோண்டத்தோண்ட புதுப்பொருள் சுரக்கும் பக்தி நீர் ஊற்றெடுக்கும் மணற்கேணி! எளியார்க்கு எளியது! அரியார்க்கு அரியது! அழகின் அமைப்பு! ஆனந்த ஊற்று! யாப்பின் இலக்கணம்! அணி அலங்கார இலக்கணங்களுக்கு சாட்சி! பண்ணிசை ராகதாள நடனங்களுக்கு ஓர் அரங்கம்! ஆன்மீக ஆராதனை! அறத்திற்கு ஒரு நிலையான வடிவம்! செல்வம் பெருகுதற்கு ஓர் சேமிப்புப் பெட்டகம்! இன்பத்தேக்கமடு! பெண்ணின் ஆன்மீக விடுதலை வேட்கை! பக்திப்பாராயணம்! மார்கழியின் மாண்பு! தூயநோன்பு! பிரபந்தர் உயிர்நிலை! வைணவவிளக்கம்! கைங்கரியத்தில் களையறுக்கும் அரிவாள்! அஞ்ஞான மயக்கங்களுக்கு அருமருந்து! கடவுளைக் காட்டும் விளக்கு! இறைவன் மீது காதல் உணர்வை ஊட்டும் இன் அமுது!

இத்தகைய 'கோதையின் பக்திப் பாதை' என்ற இப்படைப்பை சமர்ப்பணாஞ்சலி செலுத்துதற்குப் பெண்மையைப் போற்றிடும் நால்வரைத் தேர்ந்தெடுத்துக் காணிக்கையாக்கியுள்ளேன்.

ஒருவர் - குடந்தை மாநகரத்தில் பொதுப்பணிகளிலும் கல்விப் பணிகளிலும், ஆன்மீக நெறியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து வரும் ராஜமரியாதைக்குரிய வித்யாஜோதி, ஆண்டாள் அருட்செல்வி, லேடி - டாக்டர், லைலா சுப்பிரமணியம், D.Edn., LOG (Crown of Susiana) அவர்கள்!

மற்றொருவர், ஈடு இணையற்ற எண்ணற்ற கல்வி நிறுவனங் களை நடத்தி வரும் - வித்யா ஜோதி, செவாலியர், சர் - டாக்டர். K.V. குப்புசாமி Ph.D. Kt. அவர்கள்!

மற்றொருவர் - பெண்மையின் மாபெரும் தாய்மையின் தெய்வ நிலையை உலகத்திற்குத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் கொண்டி ருக்கும் சக்தி வழிபாட்டை எண்ணற்ற ஆண்டுகளாக உலகெங்கும் பரப்பி வருகின்ற ஓம் சக்தித் தொண்டர், ஆண்டாள் அருட் செல்வர், சர்வ தேசப் பாதுகாப்பு சமாதானப் பாராளுமன்ற செனட்டர், சுவாலியர் - சர், டாக்டர் P.A. துரைசாமி, M.B.B.S., M.I.P அவர்கள்.

மற்றொருவர் - பிறவியிலேயே கலைச் செல்வியாகப் பிறந்தும், இல்லற தர்மநெறி பிறழாத மிகச் சிறந்த குடும்பத் தலைவியாக விளங்கி வருவதோடு - தான் கற்ற கலைச் செல்வத்தைப் பல கலை நிகழ்ச்சிகளின் மூலம் பொருளையும், புகழையும் ஈட்டினாலும் - புகழை மட்டுமே தான் ஏற்றுக் கொண்டு, பொருள் முழுவதையும் மனித நேய சமுதாயப் பணிகளுக்கும், அறக் கட்டளைகளுக்கும் வாரி வழங்கி வரும் ஒரு புண்ணிய புனித மாதரசியாகிய பாரத கலா ரத்னா, நாட்டிய மயூரி, லேடி - டாக்டர் திருமதி. கார்த்தியாயினி ஸ்ரீநிவாஸ் Ph.D. LDA (Crown of Susiana) அவர்கள்!

இவர்களுக்கு இப்படைப்பை சமர்பணாஞ்சலிக் காணிக்கை யாக்குவதோடு - என் பொதுப் பணிகளையும், படைப்பிலக்கியப் பணிகளையும் ஆன்மீகப் பணிகளையும் ஊக்குவித்து வரும் பின் வரும் மூவருக்கும் என் இதயம் பூத்த நன்றி மலர்களைப் பாசத்துடன் - மூவர் தம் கள்ளமிலா தூய நல்ல உள்ளங்களில் சொரிகின்றேன்.

ஒருவர்:- என் உடன் பிறவா அன்புத் தம்பி, நல்வழிநாயகர் - மனித நேய மாணிக்கம், சர்வதேசப் பாதுகாப்பு சமாதானப் பாராளுமன்ற செனட்டர், செவாலியர் - சர் N.K.R. ஷண்முகம், M.I.P., Kt. (Crown of Susiana) அவர்கள்!

இத்தம்பி - செனட்டர், சர் ஷண்முகம் ஒரு நாத்திகர்! 'நல்வழி எவ்வழி, அவ்வழி நம்வழி' என்ற கொள்கை வழி நடந்துவரும் ஒளிவு மறைவற்ற நேர்மையும் அஞ்சாமையும் கொண்டுள்ள - திறந்த புத்தகமாக இதயத்தைக் கொண்டுள்ள ஒரு நக்கீரன்!

விளம்பரமில்லாமல், விளம்பரத்தை விரும்பாமல் - எவ்வளவோ பொதுப்பணிகளைப் பிரதிபலன் கருதாமல் ஆற்றிவரும் ஒரு தொழிலதிபர்! மனித நேய உணர்வுகளிலும், சமுதாய சமாதான சகோதரத்துவ ஒருமைப்பாட்டிலும் ஊறியவர்! இழப்புக்களோ, துன்பங்களோ - தன்னை நோக்கி வரும் பொழுது தாங்கிக் கொள்ளும் எதையும் தாங்கும் இதயம்! அதே நேரத்தில் மற்றவர்களுக்கு இவை ஏற்பட்டால், கண்ணில் வழியும் கண்ணீருக்குப் பதிலாகச் செந்நீரைக் கசியும் அருள் கனிந்த உள்ளம்!

நாத்திகர் என்றால் - எப்படிப்பட்ட நாத்திகர்? கண்ணால் யாருமே கண்டிராத ஒன்றைக் கடவுள் என்று நம்பிக் கொண்டு, கடவுளைக் காரணம் காட்டிக் கொண்டு பஞ்ச மகா பாதகங்களைக் கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் செய்து வரும் போலித் தனமான ஆஷாடபூதி ஆத்திகத்தில ஈடுபடாமல், ஆத்திகம் வகுத்துள்ள மூட நம்பிக்கை ஆசார அனுஷ்டானங்களில் காலத்தைக் கடத்தாமல் - கண்ணால் நேரில் காணும் நல்லவர்களையே மனிதனாக மதிக்கும் ஒரு மனிதர்! தாய், தந்தை, நல்வழி காட்டும் ஆசான் - ஆகியோரைத் தெய்வமாகக் கருதுபவர்! வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும், உலகத்திற்கும் இயன்ற கடமைகளைக் குறைவின்றி ஆற்றி வருபவர்! 'தெய்வம் இல்லை!' என்றும் சொல்வார்! அதே நேரத்தில் பெற்றோரையும் குருவையும் தனக்குள் தியானித்த வண்ணம் 'குரு ஈஸ்வரா!' என்றும் கூறுவார்.

தொழிலில் ஈடுபடும் பொழுதெல்லாம் மட்டுமே - இவர் வியாபாரி! மற்ற நேரங்களிலெல்லாம் மனித இலக்கணம் அவ்வளவும் கொண்ட ஒரு நல்ல மனிதன்! நண்பனுக்கு நண்பன்! சகோதரனுக்கு சகோதரன்! ஒரு ஒழுக்கமுள்ள நல்ல குடும்பத் தலைவன்! பொய் பேசத் தெரியாத ஒரு வாய்மையாளன்!

இப்படிப்பட்ட என் நாத்திகத் தம்பிக்கு - எதற்குக் கடவுள்? கடவுளும், கடவுளின் அருளிற்காகக் காத்திருக்கும் என்னைப் போன்றவர்களுமல்லவா இத்தகைய நாத்திகத் தம்பியைத் தேடிச் சென்று கொண்டிருக்கின்றோம்?

இதே ஆத்திக நாத்திக ஒருங்கிணைப்பு மனித நேய அடிப்படையில்தான், இந்த ஆன்மீக மனித நேயப்படைப்பின் முதல் பிரதியை என் அருமந்த இளவல், நல்வழி நாயகர், மனித நேய மாணிக்கம், -

செனட்டர், செவாலியர், சர் N.K.R. ஷண்முகம் - கம்பனின் இராமகாதை அரங்கேற்றப் படைப்பைப் பெற்றுக் கொண்ட சடையப்ப வள்ளலின் நிலையில், எனக்கமைந்த ஒரு சடையனாக, நூல் அரங்கேற்ற வேளையில் பெற்றுக் கொள்கிறார்! இதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி!

மற்றொருவர் - ஆன்மீகப் படைப்புக்களை உருவாக்கி வந்த அந்தக் காலம் முதல் இன்றுவரை என்னை ஊக்குவித்து வரும் எண்பத் திரண்டாண்டு நிரம்பிய பெரியவர், என்பு முறிவு மருத்துவ சிகிச்சையில் ஒப்பற்ற சகாப்தம் படைத்துக்காட்டிய மருத்துவ திலகம், தெலுங்குப்பாளையம் எலும்பு முறிவு மருத்துவ மனையின் நிறுவனர், டாக்டர் அர்ஜுனன் அவர்கள்!


மற்றொருவர்:- அறுவை சிகிச்சை மருத்துவத்தில் ஈடு இணை யற்றவரும், தமிழில் புலமை மிக்க கவிஞரும், சோதிட அறிவிய லில் ஆழ்ந்த ஆய்வு நுணுக்கம் கொண்டவரும், இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகத்தின் அறுவைத் துறையின் தலை வரும் பல்கலைக்கழக Deanம் ஆகிய இராஜமரியாதைக்குரிய செவாலியர் - சர், பேராசிரியர் - டாக்டர், D. ஞானப்பிரகாசம், M.S., F.I.C.S., F.I.A.P., Kt., RLSS அவர்கள்!

இப்படைப்பை உருவாக்க ஊக்குவித்த மேற்கண்ட மூவரையும் நினைவு கூர்வதோடு - இப்படைப்பின் சமர்ப்பணாஞ்சலிக் காணிக்கை பெறுகின்றவர்களை இனி அறிமுகம் செய்து என் சமர்ப்பணாஞ்சலி உரையை நிறைவு செய்கின்றேன்.

ஆர். இராமானுஜம்

# சமர்ப்பணாஞ்சலி பெறுகின்றவர்கள்

## திருமதி - வித்யாஜோதி, ஆண்டாள் அருட் செல்வி, ராஜ மரியாதைக் குரிய Lady - Dr. லைலா சுப்பிரமணியம், D.Edn., LOG (Crown of Susiana)



*பொன்னி வளம் கொழிக்கும் 'சோழ நாட்டின் திருக் குடந்தையில் - ஈடு இணையற்ற உழைப்பின் ஒப்பற்ற நிலையில் உயர்ந்து சட்டமன்ற உறுப்பினராகவும் நகரமன்றத் தலைவராகவும் கொடி கட்டிப் பறந்த தொழிலதிபர், அமரர், தெய்வத்திரு.ஏ.ஆர். இராமசாமி அவர்களின் ஒரே அருந் தவப் புதல்வியாவார் - 10.03.1949ல் பிறந்த திருமதி. வித்யா ஜோதி. ஆண் டாள் அருட்செல்வி, Lady - Dr லைலா சுப்பிரமணியம், D.Edn., LOG (Crown of Susianna) அவர்கள்:-*

*A.R.R. தொழில் நிறுவனங்களின் இயக்குனராக விளங்கி வருவதோடு - கல்விப் பணியிலும், சமூக நலப்பணியிலும், ஆன்மீகப் பணியிலும் ஒப்பற்று விளங்கி வருகின்றார்.*

*கோபி கோதை ஆண்டாள் நாச்சியாரின் பிரபந்தப் பாசுரங்களில் மிக்க ஈடுபாடு கொண்ட இவர் -*

**"பாதகங்கள் தீர்க்கும்! பரமனடி காட்டும்!<br>
வேதமனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்<br>
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை<br>
வையம் சுமப்பது வம்பு!"**

*என்ற ஆன்மீகப் பிடிப்புடைய, மாதர்குல மாணிக்கம் ஆவார்.*

*இம்மாதரசிக்கு இப்படைப்பைக் காணிக்கையாக சமர்ப்பணாஞ்சலி செய்யும் பொழுது - இவரைப் பற்றிய பின்வரும் வாழ்க்கைக் குறிப்புக்களையும் தர விரும்புகின்றேன்.*

| | | |
|---|---|---|
| *1. கலைப்பயிற்சி* | : | *கர்நாடக சங்கீதம், வீணை, ஓவியம், கைவினைப் பொருட்கள் செய்தல், தையல், எம்பிராய்டரி.* |
| *2. சமுதாய சேவை* | : | *கும்பகோணம் பன்னாட்டு மகளிர் சேவை மைய முன்னாள் தலைவி, (Inter Wheel Club - International). பெண்கள் பணி அமைப்புகளில் அங்கம்.* |

3. குறிப்பிடத்தக்கப் பணிகள்:-

அ. கல்வி நிலையப் பொறுப்புக்கள்

A.R.R. மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி

A.R.R. ஆங்கில போதனாப்பள்ளி,
A.R.R. பள்ளி முன்பருவ குழந்தைகள் மையம்,
A.R.R. பள்ளி (Unit II) மேலக்காவேரி,
A.R.R. கணிப்பொறிமையம்,
A.R.R. அகெடெமி, மேலக்காவேரி,
(English Exposure Centre)
கலாகேந்திரா - (கர்நாடக சங்கீதம், சங்கீதக் கருவிகள், பரத நாட்டியம்) ஆகியவை பயிற்றுவிக்கும் பள்ளி ஆகியவற்றின் நிர்வாகக் குழு செயலர்.

ஆ. தொழில்

A.R.R. தொழில் நிறுவனங்களின் இயக்குனர்.

இ. கல்விப்பணி

1) தமது ஆளுகைக்கு உட்பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் பள்ளிச் சேர்க்கையிலும், வேலை வாய்ப்பிலும் பெண்களுக்கு முன்னுரிமை- A.R.R. கல்விச் சாலைகளில் 75%க்கு மேல் ஆசிரியப் பணி புரிவோர் பெண்களே.

2) மாணவ மாணவிகளுக்கு தொழில் கல்லூரிகளில் இடம் பெற உதவ தனி வகுப்புகள் நடத்துவதன் மூலம் பெருமளவில் பெண்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பயன் பெறுகின்றனர்.

3) A.R.R. அறக்கட்டளை மூலம், கும்பகோணம் நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள அனைத்து உயர் நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் பொதுத் தேர்வில் வெற்றி பெற்று

தத்தம் பள்ளிகளில் முதலிடம் பெறும் மாணவ மாணவியர்க்கு ரூ.500/= ஊக்க ரொக்கப் பரிசு ஆண்டு தோறும் அளித்து வருதல்.

4) கலாகேந்திரா மூலம் இசைப் பயிற்சி அளித்து சுயவேலை வாய்ப்புக்கு உதவி.

5) சிறப்பு ஆங்கிலப் பயிற்சி பெற்று வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்திக் கொள்ள உதவுவது.

ஈ. சிறப்புப்பணிகள் : 1) இன்னர் வீல் அமைப்பின் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடுதல், ஏழைப் பெண்கள், குறிப்பாகக் கைம் பெண்கள், கை விடப்பட்டோருக்கு தையல், கை வினைப்பொருள் தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்து சுயவேலை வாய்ப்பு பெற உதவு வது - இவர்களுக்குத் தேவைப் படும் கருவிகள் அளித்தல், தயாரிக்கும் பொருட்களுக்கு ற்பனை உதவி.

2) கணிப்பொறிப் பயிற்சி, STD Booth அமைத்துக் கொடுத்தல்.

3) கிராமப்புற பெண்கள் மேம் பாட்டில் தனிக் கவனம்.

4) தமது தொழில் நிறுவனங்களில் பணிபுரிய பெண்களுக்கு முதலி டம் - தற்போது பணியாளர்களில் 50% பெண்களே!

5) மருத்துவ உதவிகள் செய்தல்: குறிப்பாக இருதய அறுவை சிகிச்சை, கருப்பை அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு முழு நிதியுதவி அளித்தல்.

6) முன்னேற்றமடையாத கிராமத்தைத் தத்து எடுத்து அதற்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்தல்.

7) பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், யூனிபாம் உடைகள், ஸ்கூல் பீஸ் கொடுத்தல்.

8) அனாதைக் குழந்தைகளுக்கும் தொழுநோயாளர்களுக்கும் விசேஷ தினங்களில் புத்தாடை வழங்குதல், உணவு, இனிப்பு வழங்குதல்.

உ) ஆன்மீகப் பணி — சிறுவயது முதலே தெய்வப்பற்று.

1) தம் வீட்டிற்கு அருகில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி ஆலயத்தை தம் முழுப் பொறுப்பில் பராமரித்து, நித்திய பூஜைகள், உற்சவாதிகள் நடத்தி வருதல்.

2) பட்டீஸ்வரம் துர்க்கை அம்மனிடம் தனி பக்தி - திருப்பணி கைங்கரியத்தில் பெருமளவு பொருள் வழங்கி பங்கு பெற்றது.

3) அருள்மிகு சுவாமிநாத சுவாமியிடம் தளராத நம்பிக்கை.

4) நண்பர்கள், உறவினர்களுடன் திவ்ய தேச யாத்திரை.

5) பள்ளிக்குழந்தைகட்கு, திருப்பாவை, திருவெம்பாவை, நீதிநெறி விளக்கம், அபிராமி அந்தாதி, கந்தர்கலி வெண்பா ஆகியவற்றில் போட்டிகள் நடத்திப் பரிசளித்தல்.

ஊ) பிற பணிகள் : 1) தமது கண்களை விழியிழந்தோர்க்களிக்கப் பதிவு, மற்றும்

நண்பர்களையும் கண் தானத்தில் ஈடுபடுத்துவது.


2) ஆண்டு தோறும் தமது தந்தையாரின் நினைவு நாளில் (செப் - 6) கண் சிகிச்சை முகாம் அமைத்து ஆயிரக்கணக்கானோருக்கு சிகிச்சை, புரை நீக்கம், கண்ணாடி வழங்குதல்.

அம்மையாரின் பொதுப்பணி, கல்விப்பணி, ஆன்மீகப் பணி ஆகியவற்றை ஊக்குவித்து வருபவரும் உலக நாடுகளைச் சுற்றி வந்தவரும் ஆகிய இவர் கணவர் தொழிலதிபர் செவாலியர் - சர். Dr.S. சுப்பிரமணியம், D.Litt (H.C.), Kt அவர்கள் அம்மையாரின் அனைத்து வளர்ச்சிகளுக்கும் பேருக்கம் தந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வித்யாஜோதி, ஆண்டாள் அருட் செல்வி, லேடி டாக்டர் - லைலா சுப்பிரமணியம் D.Edn, LOG அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணாஞ்சலிக் காணிக்கை.

# சமர்ப்பணாஞ்சலி

## வித்யா ஜோதி, செவாலியர் - சர். டாக்டர். கே.வி. குப்புசாமி, Ph.d., (Edn-Hc), Kt.



கல்வித்துறை, விவசாயம், ஆன்மீகம் ஆகியவற்றில், தனக்கென ஒரு தனி சகாப்தம் படைத்துக் காட்டிவரும் பெருந்தகை, வித்யாஜோதி - செவாலியர், சர் - டாக்டர் கே. வி. குப்புசாமி அவர்கள் ஆவார்.

ஒப்பற்ற கடின உழைப்பு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அன்பு - எவரிடமும் கண்டிராத தன்னடக்கம் - எளிமை - இனிமை - மலர்ந்த முகம் - அருள் கனிந்த விழிகளின் மலர்ச்சி ஆகிய பண்புகள், எவருக்கும் இல்லையென்று சொல்லாத வள்ளல் தன்மை, செல்விருந்து ஓம்பி வருவிருந்து நோக்கி வைகலும் உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரியும் பாசம், சான்றோர்களை மதித்துப் போற்றும் இயல்பு, எளிய இயலாதவர்களின் குறைகளைக் கூர்ந்து செவி மடுத்து அவற்றைப் போக்க வழி வகைகளைச் செய்யும் பண்பாடு - அரசியல், ஜாதி, மதங்களைக் கடந்த மனிதநேயம் - இவற்றின் சொந்தக்காரராக விளங்கும் மொத்த முழுவடிவமே, டாக்டர், சர்.கே.வி. குப்புசாமி அவர்கள்!

அமரத்துவமெய்திய தன் தெய்வத் திருமகன் இரத்தினவேல் சுப்பிரமணியத்தின் பெயரால் நிறுவப்பட்ட அறக்கட்டளையின் சார்பில், இவர் நிறுவி நடத்திவரும் கல்வி நிறுவனங்கள் பின் வருமாறு:

1. R.V.S. College of Engg. & Technology (offering B.E. Course in Civil, Mechanic, Computer & Electronics & Communications)
2. R.V.S. Polytechnic
3. R.V.S. Industrial Training Institute
4. R.V.S. Data Centre
5. R.V.S. Matriculation Hr. Sec. School

6. **R.V.S. College of Arts & Science**
   **(Degree Courses in Computer Science, Electronics, Catering Science & Hotel Management, Commerce, Management, Biochemistry, Microbiology and P.G. Degree in M.C.A, Food Science & Nutrition, M.B.A. & M.com.)**
7. R.V.S. Institute of Management Studies & Research
8. R.V.S. College of Pharmaceutical Science
9. R.V.S. College of Nursing
10. R.V.S. College of Physiotherapy
11. R.V.S. Industrial Training Institute
12. Bhaktavatsalam Vidyashram
13. Bhaktavatsalam Memorial College for Women

ஆகிய பதின்மூன்று கல்வி நிறுவனங்களிலும் ஏறத்தாழ 10,000 மாணவ மாணவியர் கல்விப் பயன்பெற்று வருகின்றார்கள். பெரும்பாலும் அரசின் உதவியை எதிர்நாடாமல் அங்கீகாரம் மட்டும் பெற்று - தான் அரும்பாடுபட்டு ஈட்டிய அவ்வளவு செல்வத்தையும் கல்விப் பணிகளுக்கே இவர் செலவிட்டு வருகிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது - இவர் கல்விப் பணியின் விஸ்வருபம் கொண்ட பெரும் இமய மலையாக - மாமனிதராக, செயற்கரிய செயலாற்றிய பெரியாராகக் காட்சி அளிக்கின்றார். இவ்வளவு பெரும் செயற்கரிய செயல்களையும் - தன்னம்பிக்கை, விடா முயற்சி, கடின உழைப்பு - அனைத்திற்கும் மேலாக ஆன்மீக இறைஉணர்வு ஆகியவற்றால் வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகின்றார்.

இவர் கல்வி நிறுவனங்கள் நடைபெற்று வரும் இடங்களில் வாழும் ஏழை எளிய மாணவ மாணவியர்கட்கெல்லாம் இவர் நிறுவனங்கள் அடைக்கலம் தந்து, இவர் புகழ் மணத்தைப் பரப்பிக் கொண்டு இருக்கின்றன.

KPV Textiles, Padma Textiles ஆகிய ஆலைகளை ஐந்து கோடி ருபாய் பொருட் செலவில் நிறுவி, எண்ணற்றோருக்கு வேலை வாய்ப்பு அளித்துப் பாதுகாத்து வருகின்றார்.

ஏறத்தாழ 800 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயத்தை நடத்தி வருவதோடு நவீன விஞ்ஞான அறிவியல் நுட்பத்தோடு விவசாயத் தொழிலை மேம்படுத்த இவர் பல வழி வகைகளை அமைத்துக் கொண்டு வருவது, நம் பாரதமே பெருமிதம் பெற வேண்டிய செய்தி ஆகும்.


எம்பெருமான் ஸ்ரீமந் நர்ராயணனின் அருள் பெற்ற சித்தர்களுள் மச்சேந்திர நாதர் வாய்முகூர்த்தத்தில் - ஒரு பெண் மணிக்குக் கிடைத்த அருள் ஆசியின் விளைவாகக் குப்பையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மகா சித்தர், கோரக்கர் ஆவார். கோரக்கரின் அருள் கனிந்த எண்ணற்ற சித்துக்களால் உலகம் பெரும் நன்மை களைப் பெற்றது. இத்தகைய குப்பையிலிருந்து எடுக்கப்பட்ட கோரக்கரின் பெயரைக் கொண்டுள்ள ஆன்மீகப் பெருங்கொடை வள்ளல். டாக்டர், சர்-கே.வி. குப்புசாமியால் மாணவ உலகம் மாபெரும் கல்விப் பயனைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இவர் ஆன்மீக பக்தி மார்க்கத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவராக - எதற்கெடுத்தாலும் தன் அனைத்து வெற்றிகளுக்கும் இறையருளே வழிகாட்டிக் கொண்டிருப்பதாக நம்புகின்றார்.

கோபி கோதை ஆண்டாள் நாச்சியார், தன் எட்டாவது திருமொழியுள் மேகங்களை எம்பெருமானிடம் தூதுவிட்ட திருமொழிக்குரிய திருவேங்கடமுடையானின் திருநாமத்தை "வேங்கடாசலம்" என்று இவர் தந்தையார் பெற்றிருந்த காரணத் தாலோ, என்னவோ - இவர் ஆண்டாளின் பிரபந்தப் பாசுரங்களில் அளவற்ற ஈடுபாடு கொண்டு திகழ்கின்றார்.

இத்தகைய வித்யா ஜோதி, ஆண்டாள் அருட்செல்வர், செவாலியர், சர். டாக்டர். கே.வி. குப்புசாமி Ph.d., (Edn-Hc) Kt. அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணாஞ்சலிக் காணிக்கை.

# சமர்ப்பணாஞ்சலி

## ஆண்டாள் அருட்ச் செல்வர், கவாலியர் - சர், செனட்டர் டாக்டர். பி.ஏ. துரைசாமி, M.B.B.S., F.A.G.E., M.I.P., Kt.



உலகிற்கு ஆதிமூலப்பரம் பொருள் ஒன்றாக இருந்தாலும் உலகத்தில் எந்த ஜீவராசியாக உருவெடுக்கும் உயிரினங்களின் வடிவங்கள் இவ்வுல கத்தில் வாழ வந்துசேரும்பொழுது- அவ்வுயிரின் கருப்பொருள்கள், தனித் தனியாக ஒவ்வொரு தாயின் வயிற்றில் இருந்துதான் வெளிவரவேண்டும் என்ற மாபெரும் பெண்மையின் தாய்மையின் சக்தியைக் கடவுளாக மதித்து வழிபடும் தெய்வ நிலையை - ஆத்மார்த்தமாகவும் அனுபவங்களின் வாயிலாகவும் உணர்ந்த மாபெரும் ஓம் சக்தித் தொண்டர் தான் - கவாலியர், சர். செனட்டர் டாக்டர் பி.ஏ.துரைசாமி அவர்கள்.

"எவராக இருந்தாலும் ஒரு தாயின் வயிற்றில் இருந்துதானே வெளி வரவேண்டும்? ஐயிரு மாதங்கள் தன்னைத்தன் அடி வயிற்றில் சுமந்து கொண்டு - மாபெரும் வேதனைகளுடன் உண்டும், உறங்கியும், நின்றும், நடந்தும் அர்ப்பணித்த தியாக வேள்விக்குள் எரிந்து கொண்டிருக்கும் உள்ளம் கொண்ட தாயைக் கடவுளாக ஒருவன் மதிக்கவில்லையென்றால், வேறு எந்தக் கடவுளை - வேறு எங்கே அவனால், தேடிக்கண்டு பிடித்து வழிபட முடியும்?" என்ற ஆன்மீக விஞ்ஞான அறிவியல் தத்து வார்த்த சாரம்மிக்க கேள்விகளை இவர் கேட்கும்பொழுது - தாயின் சக்திதான் கடவுள் என்பதை ஒவ்வொருவரும் ஒத்துக் கொண்டே தீரவேண்டும்! இதை ஒத்துக் கொள்ளாதவர்கள், தாயின் வயிற்றில் இருந்தே கண்டிப்பாகப் பிறந்திருக்கமாட்டார் கள் என்று எவரும் சத்தியம் செய்யலாம்! கடவுளே இல்லை என்று சாதிக்கும் நார்த்திகர்களில்கூடப் பெரும்பாலோர் - தாங்கள் பெற்ற தாயைக் கண் கண்ட தெய்வமாக, கடவுளின் நிலையில் வைத்துத்தான் போற்றி வணங்கி வழிபட்டு வருகின்றார்கள்.

ஆணாக இருந்தாலும் சரி - பெண்ணாக இருந்தாலும் சரி - அல்லது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களாக

இருந்தாலும் சரி - உலகத்தில் நடை பெற்றுவரும் ஒவ்வொரு அணுவின் அசைவும், உயிர்க்காற்று முதலிய அனைத்தும் - தாய்மையாகிய பெண்மையின் சக்தியே என்பது கவாலியர் - சர், செனட்டர், டாக்டர், பி.ஏ. துரைசாமியின் ஆழ்மனத்தில் மிக ஆழமாக வேரூன்றிப் பதிந்துகிடக்கும் எண்ணமாகும்.

கோவை மாவட்டம், புஞ்சைப் புளியம்பட்டியில் ஜமீன் பாரம்பரியத்தில் தோன்றியுள்ள இவர், மருத்துவக் கல்லூரியில் M.B.B.S. பட்டம் பெற்று தம் தந்தையாரின் பெயரால் டாக்டர் Arunachalam Memorial Modern Hospital என்ற மருத்துவ மனையை நடத்தி எண்ணற்ற மருத்துவப் பணிகளை ஆற்றுவதோடு - பல மருத்துவ முகாம்களை நடத்தி எண்ணற்றவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகளையும் செய்வதோடு, தன்னால் இயன்ற பொருள் உதவியையும் தொடர்ந்து செய்து வருகின்றார்.

பராசக்தி வழிபாட்டில் தன்னை அர்ப்பணித்து ஒரு தவ முனிவராக வாழ்ந்துவரும் இவர், பெண்கள் மகப்பேறு அறுவை சிகிச்சை மருத்துவத்தில் மிகச் சிறந்த வல்லுநராக விளங்கி வருகின்றார்! அறுவை சிகிச்சையில் முதுகலை மருத்துவப் பட்டம் ஆகிய M.S. பட்டம் பெற்ற பெண் மருத்துவர்களால் கூடக் கைவிடப்பட்ட எவ்வளவோ தாய்மார்களுக்கு இவர் மகப்பேறு அறுவை சிகிச்சையைப் பராசக்தியின் அருளால் நடத்தி, வெற்றி கண்டிருக்கின்றார். இதுவரையிலும் இவரை நாடி வந்த தாய்மார்களில் மகப்பேறு அறுவை சிகிச்சையில் எவரும் சோடை போனதில்லை! அதற்காக பெண்களின் தாய்க் குலம் இவருக்கு என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது. கவாலியர். சர். டாக்டர் துரைசாமி இவ்வுலகில் காணும் ஒவ்வொரு பெண்ணையும் பராசக்தியின் வடிவமாகவே மதித்து வருகின்றார் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவர் கல்விப் பணியிலும் ஆன்மீகப் பணியிலும்கூட, ஈடு இணையற்று விளங்கி வருகின்றார்.

### கல்விப்பணி:

1. புளியம்பட்டி அரசு மகளிர் மேநிலைப்பள்ளியில் கடந்த 16 வருடங்களாக பெற்றோர் ஆசிரியர் துணைத் தலைவராக இருந்து முன்நின்று கிட்டத்தட்ட பொது மக்களை அணுகி ரூ.5 லட்சம் செலவில் வகுப்பறைகள் கட்டியும் - உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்ற முயற்சி மேற் கொண்டு கணிப்பொறி மையம் துவக்க ஆவன செய்தும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

2. முதலிடம் பெறுகின்ற மாணவருக்கு 18 ஆண்டு காலமாக தன் சொந்த செலவில் தவறாமல் வெள்ளிப்பதக்கம் கொடுத்து ஊக்கப்படுத்தி வருகின்றார்.

## ஆன்மீகப்பணி

1980ம் வருடம் குமரன் குன்று என்ற இடத்தில் முருகப் பெருமானுக்கு குடமுழுக்கு முன்நின்று நடத்தினார். அங்கு சிவபெருமான் ஆலயம் அமைத்தும் இருக்கிறார். தொடர்ந்து அந்த ஆலயத்தில் அன்னதானக் கைங்கர்யக் குழுவில் ஆயுட்கால உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார்.

## பராசக்தி வழிபாடு

பஞ்ச பூதங்களுக்கு எவ்வாறு ஜாதிமத ஏற்றத்தாழ்வுகள் இல்லையோ, அதைப்போல ஒரு தாயின் வயிற்றில் வளர்ச்சி பெறும் எந்தக் குழந்தைக்கும் - மனித குலத்தில ஜாதி மத ஏற்றத் தாழ்வுகளை எவராலும் கற்பிக்க முடியாது. ஆத்மாக்களைப் பொருத்தமட்டிலும் ஜாதி மதம் மட்டும் அல்ல - ஆண் பெண் என்ற வேறுபாடும் இல்லை! அதனால் தான், உயிர்களை வயிற்றில் சுமந்து கொண்டு வாழும் தாய்மைக்கு மதிப்பளித்து - பராசக்தி வழிபாட்டில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

நாம் வாழ்ந்து வருகின்ற இந்த உலகத்தை, இம்மை என்று சொல்லுகின்றோம்; கண்ணால் காணாத மறு உலகத்தை, மறுமை என்று சொல்கின்றோம்.

ஆனால் - இம்மையில் வாழும் மனித வாழ்க்கையில் ஜாதி மதங்கள் தாண்டவம் ஆடுகின்றன! அதைப் போலவே மறுமையிலும் கூட - தேவர், நரகர், கந்தர்வர், அரக்கர் போன்ற ஜாதி வேறு பாடுகள் இருப்பதாகச் சொல்லப் படுகின்றன. ஆனால் இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஆத்மா அன்னையின் வயிற்றில் குடிகொண்டு இருக்கும் தாயின் வயிறு என்ற உலகத்தில் மட்டும் ஜாதிமத இன பேதங்கள் இல்லவே இல்லை! அதனால்தான் இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட உலகமாகப் பத்து மாதம் குடியிருந்த கோவிலாக விளங்கும் தாய்மையை அம்மை என்று அழைகின்றோம். 'அம்மா' என்ற சொல்லுக்குள் எந்த மதம் இருக்கின்றது? எந்த ஜாதி இருக்கின்றது? பகுத்தறிவற்ற, பேசத் தெரியாத ஆடு மாடுகள் கூட அழைக்கும் சொல் 'அம்மா' தானே? இத்தகைய சமுதாய சமரச சமத்துவ நெறிக்கு வித்திடும் தாய்மையைப் பராசக்தி ஆகிய தெய்வமாக - சுவாலியர், சர், டாக்டர் துரைசாமி

போற்றி வழிபடுவதில் வியப்பே இல்லை. இவர்தம் பராசக்தி வழிபாட்டில் ஜாதிமத பேதமற்ற சமரசம் தவழ்கின்றது.

## பராசக்தி வழிகபாட்டுப் பணிகள்

**ஆதிபராசக்தி** இயக்க வளர்ச்சிக்காக 1981ம் வருடம் 108 ஊர்களுக்கு வாரம் சுமார் 50 கிலோ மீட்டர் என்று பாதயாத்திரை பிரசாரம் மேற்கொண்டு மேல் மருவத்தூர் மகிமைகளைக் கிராமங்களில் எடுத்துச் சொல்லி ஜாதி மத வேறுபாடில்லாத சமுதாயம் உருவாகப் பாடுபட்டு - 24.6.1981ம் நாள் புளியம்பட்டியில் சக்திபீடம் அமைத்து 108 மாட்டு வண்டிகளில் ஆதிபராசக்தி படம் வைத்து ஊர்வலம் வரச்செய்து 108 ஹரிஜன மக்களுக்கு ஆடைதானம் செய்தார், இவர்! இவ்விழாவில் ஆயிரத்தெட்டு பெண்கள் பராசக்தி விளக்கு எடுத்து ஏந்தி பங்கு பெறச் செய்து மிகப் பெரிய ஆன்மீக எழுச்சி உண்டாக்கப் பட்டது - இவரால்!

சக்திபீடம் அமைய ரூ.15 லட்சம் பெறுமானம் உள்ள நிலம், தானமாக வழங்கப்பட்டது - இவரால்!

1980 முதல் சக்தி பீடத்தில் ஆண்டுக்கு இருமுறை ஆடை தானம், அன்னதானம், நலிந்தோருக்கு தொழிற்கருவிகள் வழங்குதல் என்று சமுதாய சேவையின் பற்பல பணிகள் - இவை, தனி!

1985ல் சக்தி பீடத்திற்கு ஆதிபராசக்தி சிலை வடிக்கப்பெற்று தமிழ்நாடு முழுவதும் சுமார் 12,000 கிலோ மீட்டர் சரியாக ஒரு வருடகாலம் - கரிக்கோலத் திரு உலா சென்று, பட்டி தொட்டி யெல்லாம் ஆதிபராசக்தி ஆன்மீக பிரசாரம் மேற்கொண்டவர் - இவர்!

பிறகு 9.2.1986ல் ஆதிபராசக்தி குடமுழுக்குப் பெருவிழா நடத்தப்பட்டது.

சரியாக 9 நாட்கள் தினமும் 3கால பூஜை என்று மொத்தம் 27கால பூஜை யாகம் நடத்தப்பட்டது. இதில் பெரிய சிறப்பு -9 யாக குண்டங்கள்! ஒவ்வொரு யாக குண்டத்திலும் 108 மக்கள் அமர - ஆக ஒரு யாகத்தில் 9 யாக குண்டம் சேர்த்து 1008 பேர் பொதுமக்கள் அமர்ந்து யாகம் செய்ய - தினசரிக் கணக்கில் 9 நாள் செய்யப் பொது மக்கள் 27,000 பேர் யாகம் செய்தது - **ஆன்மீகத்தில் ஒரு தனி சகாப்தம்!**

9ஆம் நாள் அருள்திரு அடிகளார் குடமுழுக்கில் கிறிஸ்தவர்கள், முகமதியர், இந்துக்கள், ஹரிஜனத் தோழர்கள்

அனைவரும் பங்கு பெற - குடமுழுக்கு சமரச ஆன்மீக நோக்கில் நடைபெற்றது.

இந்த சக்தி பீடத்தில் கடந்த 16 வருடமாக ஆண்டு தோறும் ஹரிஜனங்களுக்கு தைப்பூசத் திருநாளன்று இலவசத் திருமணம் நடத்தி வைத்து அவர்களுக்கு சீர்வரிசை கொடுத்து ஆதரவளிப்பது, தொடர்ந்து நடைபெற்றுவரும் நிகழ்ச்சி!

9 அனாதைக் குழந்தைகளை இந்த சக்தி பீடத்தில் தத்து எடுத்து ஆவன செய்யப்படுகின்றது! அத்துடன் -

தகுதியான ஏழை மாணவர்களைத் தேர்வு செய்து கல்வி பயில உதவி செய்தல் - இது தனி!

இவற்றைத் தவிர மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி இஸ்லாமிய விழாக்களில் பங்கு பெற்றும் - பள்ளி மாணவர்களைத் திரட்டி மனித சங்கிலி போன்ற நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தியும் வருதல் - இது தனி!

தற்பொழுது ஞான சூரியனாக எண்ணற்றோருக்கு வாழ வழிகாட்டி வரும் மாபெரும் இல்லற தவஞான அருட்சித்தர் - ஸ்ரீலஸ்ரீ டாக்டர் வேணு கோபால சுவாமிகள் நடத்தி வரும் தபோவனத்தின் கைங்கர்யப் பணிகளிலும் முழுப் பங்கேற்று தொண்டனுக்கும் தொண்டனாக, இரவென்றும் பகலென்றும் கருதாமல் பணி செய்து வருகின்றார்!

இங்ஙனம் மருத்துவம், கல்வி, ஆன்மீகம் ஆகிய பணிகளில் தன்னை அர்ப்பணித்துவரும் ஆண்டாள் அருட் செல்வர், சுவாலியர் - சர். செனட்டர். டாக்டர் பி.சு. துரைசாமி M.B.B.S., F.A.G.E., M.I.P., Kt. அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணாஞ்சலிக் காணிக்கை.


1

# சமர்ப்பணாஞ்சலி

**பாரத கலா ரத்னா, ராஜ மரியாதைக்குரிய லேடி,**

**டாக்டர் - திருமதி கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ், Ph.d., LDA - (Crown of Susiana)**





*புல்பூண்டு, மரம் செடி கொடி, விலங்கினங்கள் முதல் மனித குலம் பறவைகள் வரை - சகல ஜீவ ராசி களையும் மயக்கி தன் வயப்படுத்தும் ஆற்றல்மிக்கவைகளே, கலைகளாகும். இக்கலைக ளால், விருப்பு வெறுப்பற்ற இறைவனும் மயங்கி பரமாத்ம சுகம் பெறுகின்றான் என்பதும், உண்மை!*

*கலைஞர்கள் குருவிடம் உரிய பயிற்சிகளை முறையே பெற்று, முழுமையான நிலையில் உருவாகின்றார்கள் என்பது உண்மை யானாலும் கூட - கலைஞர்கள் பிறவியிலேயே கருவில் திருவுடைய வர்களாகப் பிறக்கின்றார்கள் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமே இல்லை. குருவால் எவர்க்கும் எந்தக் கலையையும் புதிதாகப் பயிற்றுவிக்க முடியாது. குருமார்களால் பூர்வ ஞானம் பெற்ற பிறவிக் கலைஞர்களை மட்டுமே பயிற்றுவித்து வளர்த்து ஆளாக்கி முழுமையாக்க முடியும்.*

*இத்தகைய கலைஞர்களின் பட்டியலில் புரந்தரதாசர், பக்த மீரா, தியாகப் பிரமம், நாயன்மார்கள், ஆழ்வாராதியர்கள் முதலியவர்க ளுக்கு - இசையின் பண்ணும் பரதமும், பாடலும், ராகமும், தாளமும் இறைவனை ஆராதிக்கப் பயன்பட்டன. வேறுபல கலைஞர்களுக்கு - இக்கலைகள் விளம்பரம் தேடவும், செல்வத்தைச் சேர்க்கவும்,*

மற்றவர்களை மயக்கவும் என்று பற்பல வழிகளில் பயன்பட்டன! பயன்பட்டும் வருகின்றன! கலைகளுக்கு விலை கூறவும், விலை கேட்கவும் ஆரம்பித்துவிட்டால் - கலையும் ஒரு வியாபாரப் பொருளாக - சந்தைச் சரக்காக ஆகி விடும்.

இத்தகைய கலை உலக வரலாற்றில் தனக்கென ஒரு தனி சகாப்தம் படைத்துக் கொண்டு விளம்பரம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றவர்தான் - பாரத கலா ரத்னா, லேடி - டாக்டர் திருமதி கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ் Ph.d. LDA!

லேடி டாக்டர் கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பக்கத்தில் - ஒழுக்கமும் கடமையுணர்வும் மிகுந்த **ஒப்பற்ற குடும்பத் தலைவியாக** விளங்குகின்றார்.

மற்றொரு பக்கத்தில் - தனக்குப் பிறவியிலேயே இயற்கையாக இறையருளால் கிடைக்கப்பெற்ற பரத நாட்டியக் கலையில் ஒப்பற்ற தேர்ச்சி பெற்று, 'நாட்டிய மயூரி' என்று உலகம் போற்றும் நிலையில் புகழப்பட்டாலும் - இப்புகழ்ச்சியிலும் தன் திறமையிலும் ஆத்ம திருப்தி அடைந்து விடாமல் - எண்ணற்ற நடன நிகழ்ச்சிகளை மிக அற்புதமாக ஆங்காங்கே நடத்திக்கொடுத்து - அதனால் கிடைக்கும் பொருள் வருவாயை எவ்வளவோ சேவைகளுக்கும் பெண் சமுதாய முன்னேற்ற வளர்ச்சிக்கும் பயன்படுமாறு வாரி வழங்கும் ஒரு **பெண்இன வள்ளலாகத்** திகழ்கின்றார்.

புலவராகவும் புரவலராகவும் விளங்கிய அக்கால கலை மாமன்னர்களைப் போல - லேடி டாக்டர் கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ் சிறந்த குடும்பத் தலைவியாகவும், தன் கலையின் வழியாக உலகிற்கு எண்ணற்ற உதவிகளைச் செய்யும் **பெண்குல வள்ளலாக**வும் விளங்கி வருகிறார்.

செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்த இவர் - தான் சிறுமியாக விளங்கிய ஆறாவது வயதிலிருந்தே நாட்டியக் கலையில் சிறந்த தேர்ச்சிபெறத் துவங்கி (Padmasri - Adayar K. Lakshmanan, Natya Chariar Aravinds போன்ற குருமார்களிடம் சிக்ஷைபெற்று) பரத நாட்டியத்திலும், மோகினி ஆட்டத்திலும் ஈடு இணையற்று விளங்கி வருவதோடு, இந்தியா முழுவதும் மட்டும் அல்ல - கடல் கடந்த ஐரோப்பிய நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும் எண்ணற்றக் கலை நிகழ்ச்சிகளை நடத்திக் கணக்கற்றப் பொது சமுதாயப் பணிகளுக்குத் தன்னை அர்ப்பணித்து வாரி வழங்கிவரும் மாதரசியாகத் திகழும் லேடி டாக்டர் கார்த்தியாயினி

ஸ்ரீனிவாஸ், பெண் சமுதாயத்திலேயே **ஒரு வித்யாசமான மாதர்குல மாணிக்கம் ஆவார்!**

சில ஆண்டுகளுக்கு முன்பு கோபி கோதை அவதரித்த ஸ்ரீவில்லி புத்தூரில் நடைபெற்ற ஆடித்திருவிழாவில் ஆண்டாளாகப் பரத நாட்டியம் ஆடியபொழுது - நாட்டியத்தைக் கண்டவர்களெல்லாம் ஆண்டாளையே கண்ட பக்திப் பரவச உணர்ச்சியைப் பெற்றார்கள் என்று சொன்னால் மிகை ஆகாது. எந்த பாரத நாட்டியக் கலைஞராலும் சாதிக்க முடியாத மாபெரும் சாதனையாக ஆண்டாளின் திருப்பாவைப் பாசுரத்தில் உள்ள **"தூமணி மாடத்து"** என்ற பிரபந்தத்தை இவர் மோகினி ஆட்டமாக நடனமாடிக் காட்டி - ஆட்டக்கலையுலகில் தனி வரலாறு படைத்து விட்டார்! இப்பிரபந்தத்தில் அமைதியாகக் கண்ணுறங்கும் நப்பின்னைக்கு இன்பமாகத் திருப்பள்ளி எழுச்சி பாடி எழுப்பும் அமைதியான ஒரு நாடக நடன சூழலை - எப்படித்தான் மோகினி ஆட்ட அமைப்பில் மாற்றிக் காட்டி சாதனை செய்தாரோ, தெரியவில்லை! இப்பா சுரத்தில் - மணிமாட விளக்கெரிய, தூபம் கமழ்ந்து மணம்பரப்ப, துயிலணையில் கண்ணடைத்துக்கண் வளரும் நப்பின்னையை - ஆண்டாள், கோபியர்களுடன் கூடித் துயிலெழுப்பும் அதி அற்புத மான பிரபந்தத்தின் மோகினி ஆட்டத்தில் - லேடி டாக்டர் கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ் - 'கைவழி நயனம் செல்லக் கண்வழி காண்போர் மனமும் செல்ல' பாவ, ராக, தாள, பண்ணிசைக்கு ஏற்ப ஆண்டாளாக ஆடிக் காட்டும் மோகினி ஆட்டம், சாதாரண ஆட்டம் அல்ல! **ஆண்டாளின், தெய்வ தரிசனம்!**

குறிப்பாகச் சென்னை தொலைக்காட்சி ஆண்டாள் அரங்கம், கல்கத்தாவில் நடைபெற்ற ஓணம் பண்டிகை, நாட்டியாஞ்சலி அறக்கட்டளையின் சித்திரை நாட்டியவிழா, நவராத்திரி நாட்டிய விழா, ஆந்திர மாநில நெல்லூரில் நடைபெற்ற நவராத்திரி விழா, அம்பலவாணன் கோவில் கொண்டுள்ள சிதம்பரத்தில் நாட்டி யாஞ்சலி விழாவில் நிகழ்ந்த பரத நாட்டியம், கண்ணகி நாடக நடனம், பத்மாசூர மோகினி ஐயப்பன் நாடக நடனம் போன்ற எண்ணற்ற நடன நிகழ்ச்சிகளை நடத்திப் பல **அறக்கட்டளைக ளுக்கு உதவி செய்ததோடு - உத்திரபிரதேச ஏழை மாணவ மாணவியர் கல்விக்காகவும் நடன நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்.**

காசுக்கோ, விளம்பரத்திற்கோ நடனமாடக் கூடியவரல்ல - டாக்டர் லேடி கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ்! கலை வளர்ச்சிக்கு உற்ற உறுதுணையாக அனைத்து உதவிகளையும் செய்து, தக்க பக்க பல மாக இவரை ஊக்குவித்து வரும் இவர் கணவர் திரு. ஸ்ரீனிவாஸ் உலகளா

விய ஒரு மாபெரும் தொழில் அதிபராக விளங்கி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கணவனின் தொழில்களை ஊக்குவிக்கும் ஒழுக்க முள்ள ஒரு நல்ல மனைவி, லேடி டாக்டர் கார்த்தியாயினி ஸ்ரீனி வாஸ்! தன் மனைவியின் கலைகளை ஊக்குவிக்கும் அற்புதமான ஒழுக்க மிக்க பண்பாடுகள் நிறைந்த ஒரு நல்ல கணவர் திரு. ஸ்ரீனிவாஸ்! இப்படிப்பட்ட தம்பதிகளை, எங்கெங்கும் காண இயலாது!

இத்தகைய பாரத கலா ரத்னா, நாட்டிய மயூரி, லேடி - டாக்டர், திருமதி கார்த்தியாயினி ஸ்ரீனிவாஸ் Ph.d., LDAக்கு இந்நூல் சமர்ப்பணாஞ்சலிக் காணிக்கை.

Justice **DR.P.R. GOKULAKRISHNAN**
(FORMER CHIEF JUSTICE OF TAMILNADU & GUJARAT HIGH COURTS)
தலைவர் தமிழிசைச் சங்கம் சென்னை
14, Anna Avenue
BAKTHAVATSALAM NAGAR EXTENSION
Adyar, Chennai - 600 020
Phone : 4901146

Dated : 17-12-1998



# அணிந்துரை

கோதையின் பக்திப்பாதை என்ற இந்நூல், ஆசிரியர் இராமாநுஜம் அவர்களின் ஒப்புயர்வற்ற வைணவப் பற்றைப் பறை சாற்றி நிற்கிறது. இவர் வடித்துத் தந்த ஏட்டுப் பிரதிகளைப் படித்து மகிழ்ந்த ஜீயர் சுவாமிகள் இவருக்கேப் பொருத்தமான **"கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்"** என்ற பட்டத்தை நல்கி பெருமைப்படுத்தியுள்ளார்.

வேதமனைத்திற்கும் வித்தாகும் கோதைத் தமிழ் என்ற பாராட்டைப் பெற்ற ஆண்டாளின் அற்புதமான பாசுரங்களைச் செவியளவு கேட்டு மகிழ்ந்தவர்கள் நாம்! ஆனால், அவை புலனளவு ஊடுருவி, பேரின்ப நிலையளவு நம்மை உணர்த்தும் தத்துவங்களின் பெட்டகம் என்பதை - இந்நூலைப் படித்தாலே எளிதில் தெளிவு பெறலாம்.

தமிழிலே பாண்டித்தியமும், தெய்வப் பணிகளிலே ஈடுபாடும், உள்ளத்தெளிவிலே உயர்வும் கொண்ட இராமாநுஜம் அவர்களின் கோதை அருளிச் செய்த பாக்களின் விளக்கம் - நம் தமிழ்ச் சமுதாயத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் நம் உள்ளங்களை ஆண்டு அறிவுரை பகன்ற ஆண்டாள் பிறந்து, தவழ்ந்து, பேரின்ப நிலையெய்த பாசுரங்களைப் பாடினாள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்விக்கிறது.

உயரிய தத்துவங்களைக் கலந்து கேட்கும்போதுதான் உள்ளத்தை உருக்கும் இசை இன்பத்தை மனித சமுதாயம் நுகர முடியும். அத்தகைய உயர்ந்த தத்துவங்களை இசையின் வாயிலாக நாம் பெற்றவர்கள். தாய்மொழியில் தருகின்ற இசைதான் இசையே தவிர - புரியாத மொழியில் ஓசையின்பம் மட்டும் தரும் இசையும், புரிந்த மொழியில் உளறல்களை இசையாக ஒலிக்கும் நாதமும் இசையாக முடியாது.

ஆண்டாள் வடித்துத் தந்த இசை இறைவனுக்கு இசைந்த இசை! அவைகளை வாயினால் பாடி மனதினால் சிந்திக்க முடியும். இந்தக் கருத்தை ஆசிரியர் இராமாநுஜம் அவர்கள் கோதை, தன் தந்தை வழியில் தமிழை - சங்கத்தமிழ், இன்பத்தமிழ், கோதைவாய்த் தமிழ், தூய தமிழ், கோதைத் தமிழ், செந்தமிழ் என்று குறிப்பிட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார்.

கோதையைப் பற்றி ஆசிரியர் "ஆண்டவனையே ஆண்டவளாகச் சூடிக் கொடுக்கும் வாடு மலர் மாலையுடன் வாடாப் பாசுர பாமாலையையும் அனுபவித்துச் சூட்டிய நாயகி சரணாகதித்துவ பரமபுருஷ பரமாத்ம பக்தி நிலைக்கு உரிய ஒரே பெண் ஆழ்வார் ஆண்டாள் மட்டுமே" என்று உணர்ச்சிப் பெருமிதத்துடன் எழுதியுள்ளது பாராட்டத்தக்கது.

பன்னிரு ஆழ்வார்களில் ஞான நிலையில் பிஞ்சிலே பழுத்த பழங்கள் நம்மாழ்வாரும், ஆண்டாளும் எனக்கூறி ஆண்டாள் மட்டுமே நாயகி நாயக பாவத்தின் முழுமையான சுகானுபவம் பெற்ற தனிச் சிறப்பைப் பெற்றவள் என்பதைப் பல படக்கூறி விளக்கி உள்ளார்.

நம்மாழ்வாரைப் பற்றி ஆசிரியர் பெருமைப்பட விளக்க மளித்து. நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் பாசுரங்கள் 1296 என்பதைக் கூறி, இருந்த இடத்தில் அமர்ந்து அகில புண்ணிய நகரங்களையும் வலம்வந்த விஷ்ணு அம்சம் என்பதைத் தெளிவுறக் கூறி உள்ளார். இறைவனையே திகைக்க வைக்கும் தத்துவம் நிறைந்த பாடல்கள், நம்மாழ்வார் அருளித் தந்த பாசுரங்கள்! இவர் கவிதையின் மேன்மையைக்கூற வந்த ஓர் புலவர்.

**வேதத்தின் முன் செல்க விரிஞ்சன் முதலோர்!**
**கோதற்ற ஞானக் கொழுந்தின் முன் செல்க – குணம் கடந்த**
**போதக்கடல்! எம்குருகூர் கவியின் ஒரு**
**பாதத்தின் முன் செல்லுமோ, தொல்லை மூலப் பழஞ்சுடரே**

என்று நம்மாழ்வார் பாசுரத்தின் பெருமையினைப் பறைசாற்றி உள்ளார். அந்தத் தத்துவத்திற்கு இணையானது கோதை தமிழ் என்று அலசி ஆராய்ந்து அத்துணைப் பாக்களையும் எடுத்துரைத்து - நம்மையெல்லாம் கோதைத் தமிழிலே மூழ்கடித்துள்ளார் இப்புத்தகத்தின் மூலம், இந்நூலாசிரியர்.

ஆண்டாள் - நாயக நாயகி பாவத்தின் முழுமையான சுகானுபவம் பெற்றமையை இப்புத்தகத்தில் விளக்கியுள்ள பான்மை போற்றுதற்குரியது.

மார்கழியில் திருமணம் போன்ற நற்காரியங்கள் செய்யார். இம்மாதத்தை நம்மில் பலர் ஒதுக்கி விடுவர் ஆனால் இம்மாதத்தின் சிறப்பினை ஆசிரியர் தெள்ளத் தெளிவாக விளக்கி உள்ளார்.

இம்மாதத்தில் எடுக்கப்படும் நோன்பிற்கும், வைகறையில் நீராடி ஆயிரம்வாய் ஆதிசேஷனெனும் தொல்லாழி துயில் வானைத் தூமலர் தூவித் தொழுவதில் கிடைக்கும் வரத்திற்கும், கோதையின் தமிழை இம்மார்கழியில் பாடும் பாங்கிற்கும் கிடைக்கும் பலன்கள் பலப்பலவென்று மாதங்களில் மார் கழியின் பெருமையைச் சிறப்புற ஆசிரியர் எடுத்து விளக்கி உள்ளார்.

மனித நேயத்தை ஆண்டாளின் பாசுரத்தில் காண்கிறார், ஆசிரியர்! பாசுரத்தின் வழியாக எம்பெருமான் திருவருளால் சகல ஜீவராசிகளும் இன்புற்று வாழவேண்டுமென்ற நோக்கமே திருப்பாவையின் சாரம் என்று விளக்கி - 'உலகம் முதலில் வாழ்ந்தால்தான் தன் நாடும் ஊரும் தன்னைச் சார்ந்தவர்களும் வாழ முடியும்! தன்னைச் சார்ந்தவர்களும் ஊரும் வாழ்ந்தால் தான், தான் வாழ முடியும்! தன் எண்ணங்கள் ஈடேற முடியும்!' என்ற மனித நேய பொதுநலத் தத்துவார்த்தம் பாசுரங்களில் அழுத்தமாகவும் அழகாகவும் வேரூன்றி உள்ளன என்பதனை ஆசிரியர் வெகு சிறப்பாக எடுத்து விளக்கி உள்ளார்.

**இந்நூல், ஓர் ஆராய்ச்சி நூல்!** கோதை அருளிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி போன்ற இன்னபிற கோதையின் பாசுரங்களை ஆழ்ந்து படித்து ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கம் அளித்துள்ளார், ஆசிரியர் டாக்டர். இராமாநுஜம் அவர்கள்.

கேசவன் என்றால் விரிசடை கொண்ட கேசத்தை உடைய சிவனையும், சௌரியாகிய முடியைக் கொண்ட எம்பெருமான் திருமாலையும் குறிக்கும் என்ற விளக்கத்தை அளித்து ஆழ்வார்களுள் - தான் அணிந்த பூமாலையைச் சூடிக் கொடுத்தவர் எவரும் இல்லை! அதைப் போலவே, பெருமாளின் தேவியருள் பாமாலையைப் பாடிக் கொடுத்தவரும் எவரும் இல்லை என்பதனை எடுத்தியம்பி உள்ளார்.

இன்றைய ஆர்பாட்டங்களையும் அரசியல் அநாகரீகத்தையும் சாடும் வகையில் பெரியாழ்வார் கூற்றான "கூழ் ஆட்பட்டு நின்றீர்களை, எங்கள் குழுவினுள் புகுதல் ஒட்டோம்" என்ற வாசகத்தைக் காட்டி ஆசிரியர் கூறுகிறார்:-

"சமுதாயத்தில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட்டுப் பட்டம் பதவிகளுக்காக ஏங்கும் சுயநலமிகள், எவர் வந்தாலும் வரட்டும் என்று கூட்டம் கூட்டி ஆர்ப்பரிக்கும் சமுதாய விரோதக் கூட்டத்தைக் கூட்டி - பக்தி என்ற நாடகத்தை நடத்து வதை வெறுத்தவர் பெரியாழ்வார்" - இந்தக் குறிப்பு ஆசிரியரின் சமுதாய நிலை நோக்கினை நமக்கு விளக்குகின்றது.

**ஆசிரியர், ஓர் வைணவ மாமுனி என்றால் மிகையாகாது.** அவர் எண்ணுவது, எழுதுவது எடுத்து இயம்புவது எல்லாம் வைஷ்ணவ தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதை அவர் கருத்தோவியங்கள் எடுத்துப் பறை சாற்றுகின்றன.

ஆண்டாள் பாடிய பாசுரங்களின் எண்ணிக்கையைக் காண்கிறார். 143 என்று கணக்கிட்டு அதன் கூட்டுத் தொகையான எட்டு (1+4+3) என அறிந்து அதனை எட்டெழுத்து மந்திரமான "ஓம் நமோ நாராயணாய" என்பதோடு ஒப்பிடும் பான்மை போற்றுதற்குரியது.

ஆசிரியரின் தத்துவ விளக்கத்தின் எல்லையை - குழலூதும் கண்ணன், குளத்திலே குளித்த பெண்களின் ஆடைகளை ஒளித்து அவர்களைக் கரைசேர அழைத்த நிகழ்ச்சியினை இந்நூலில் விளக்கி உள்ள நிலையினைக் கண்டு, நான் மிகவும் மகிழ்ந்தேன்.

இறைவனின் அருட் குணங்களில் ஒன்று - பக்தர்களைவிடப் பகைவர்களே எம்பெருமானால் ஆட்கொள்ளப்படுகிறார்கள் என்கிறார், ஆசிரியர். இந்த அருங்குணத்தை நாச்சியார் திருப்பாவை வரிகளிலே நன்கு அறியலாம். "வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி" என்றதனால் இறைவன் பகைவர்களை அழிப்பதைவிட பகைமை மட்டுமே ஒழிய தன் வேலைப்பயன் படுத்துகிறார் என்ற அரிய தத்துவத்தைக் காணலாம்.

ஆசிரியர் இருவகை பக்தியை விளக்குகிறார்; ஒன்று தாவிச் செல்லும் தாய்க்குரங்கை இறுகப் பிடித்துக் கொள்ளும் குட்டிக் குரங்கைப் போன்ற பக்தி! மற்றொன்று, பதுங்கிப் போகும் பூனை லாவகமாக குட்டிப் பூனையைத் தூக்கிச் செல்லும் பக்தி! இரண்டிலும் தாய்க் குரங்கையும் தாய்ப்பூனையையும் எம்பெருமானுக்கு உவமையாகக் காட்டி - ஆண்டாள் பக்தி. தாய்ப் பூனையானது தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைப் போன்ற பாசம் அமைந்த பக்தி என்கிறார். - "சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்து அருளுவது இனியே" என்ற நாயன்மார்கள் பக்தியைப்போல!

"எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்ற ஆண்டாளின் வரிகள் குட்டிக் குரங்கினைப்போல் இறுகப் பிடித்துக் கொள்ளும் பாங்கை, ஆண்டாளின் பக்தி என்று கொள்ளக் கூடாதா என்று எனக்குத் தோன்றுகிறது.

எப்படி நாம் விளக்க உரை அளித்தாலும் எல்லாம் எம்பெருமானுக்கே என்று வாழ்ந்தவர், ஆண்டாள்! பேராசிரியர் டாக்டர். சர். ஆர். இராமானுஜம் அவர்கள் **'அனைத்தும் கோதை திருவடிகளுக்கே'** என்று வாழ்பவர்! ஆசிரியரின் வைணவப்பற்று, இந்நூல் மூலம் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. இவர் தம் ஈடுபாட்டை உணர்ந்த ஜீயர் சுவாமிகள் இவருக்கு **கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்** என்ற பட்டமளித்துப் பெருமைப்படுத்தியுள்ளார். வைணவத்தின் மூலம் வையகத்தை விழிக்கச் செய்து வாழ வைக்கும் கோதைத் தமிழை இந்நாட்டிற்குத் தந்துள்ள ஆசிரியர் இராமானுஜம் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

**இச்சீரிய "கோதையின் பக்திப் பாதை" என்ற நூல்— பக்தர்கள் இல்லங்கள் அனைத்திலும், மனித குல உள்ளங்கள் தோறும் தவழ வேண்டிய நூல்!**

இச்சிறப்பு மிகு நூலை நமக்கும் நாட்டிற்கும் தந்துள்ள ஆசிரியர் இராமானுஜம் அவர்களின் தமிழ்த் தொண்டும், தெய்வப் பணியும் தொடரட்டும்! அவர் பணியால் தெவிட்டாத தமிழ் மொழியும், அம்மொழி தந்த ஈடு இணையற்ற ஆன்மிக உணர்வுகளும் வையகத்தில் வளரட்டும்! என மனதார எண்ணி "கோதையின் பக்திப்பாதை" என்ற இவ்வரிய நூலை எழுதிய ஆசிரியர் இராமானுஜம் அவர்களை உளமாரப் பாராட்டுகின்றேன்.


இங்ஙனம்

**DR. K. VENKATASUBRAMANIAN,** M.A., B.L., B.T., Ph.D.
Former Vice - Chancellor
Pondicherry Central University
Trustee Executive Vice President and Chief Editor
The Centenarian Trust

"Mira House" 5, Subramania Nagar
Cross St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.
Phone : 4844744

**Date** : 25 - 12 - 1998

# அணிந்துரை



என் இனிய நண்பர் "கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்", அறிஞர், ஆராய்ச்சியாளர், **வைணவ மாமுனி**, டாக்டர், திரு. இரா. இராமாநுஜம் அவர்கள் தலை சிறந்த எழுத்தாளர்! அவர் எழுது வது, **தெய்வத் தமிழ்!**

அவரது "108 ஸ்ரீ வைணவத் திவ்விய தேசங்கள்" என்னும் நூலைப் பார்வையிட்ட என் அமெரிக்க நண்பர், தமிழறிஞர் திரு. முனைவர் கார்டன் மெகன்ஸி என்ற பேராசிரியர், அப்படியே ஆசிரியர் இராமாநுஜம் அவர்கள் எழுத்தில் தன்னை இழந்தார்கள்! "இதுவல்லவோ தமிழ்! இதுவல்லவோ நூல்!" எனப் பெரிதும் பாராட்டி, என்னிட மிருந்த நான்கு பிரதிகளையும் எடுத்துச்சென்றார்.

பேராசிரியர் டாக்டர் இராமாநுஜம் அவர்களின் எழுத் தாற்றலுக்கு இது ஒரு சான்று! நான் அவரது நெடு நாளைய நண்பன்! அவரது ஆக்கம், ஊக்கம், அறிவின் முதிர்ச்சி இவை என்னைப் பெரிதும் என்றும் கவர்வன.

"கோதையின் பக்திப் பாதை" என்னும் அவரது புதிய நூலை நான் படித்து மகிழும் பெரு வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அற்புதமான கோதையாரின் அருட்பாதையை ஆசிரியர் சமைக்கும் விதமே அலாதி!

ஆண்டாள் வரலாறு, திருப்பாவை, கோபிகள், நாச்சியார் திருமொழிகளின் திவ்விய தத்துவார்த்த விளக்கங்களுடன் கூடிய **இந்நூல் – ஆண்டாள் நாச்சியார், எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்குக் கட்டிய நீலமாலையைப் போன்று மாறாத நறுமணம் வீசுகிறது.**

பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும்

ஆதிசிவமும், ஸ்ரீமந் நாராயணனும் ஒருவனே என்ற ஏகதெய்வ வழிபாட்டிற்கு - வைணவத்திற்கு வழி காட்டினர்.

தான் சொன்னபடி நடக்கும் தோழனாக நாராயணனை பக்தி மார்க்கம் மூலம், திருமழிசையார் அன்புத் தளையால் கட்டினார்.

தாயின் கருவிலிருந்து வெளி வந்த காலம் முதல் பரமாத்ம சுகத்தில் திளைத்து பரலோக பக்திமார்க்கத்தைக் காட்டியவர் நம்மாழ்வார்.

நம்மாழ்வாரின் சீடன் மதுரகவி, ஆழ்வாரையே கடவுளாகக் கண்டவர்.

தனது விழிக்குள் இராமபிரானைக் கண்டுசிறைவைத்த பக்தவெறியர், குலசேகரப் பெருமாள்.

நாயகி நாயக பக்திக்கு வீரவிளை நிலம், திருமங்கையாரின் சாதனை!

தொண்டரடிப் பொடியார் விப்ர நாராயணரோ, அடிமை அன்பு மார்க்கத்தின் ஆசிரியர்.

சாதிக்கும் இறைவனுக்கும் சம்பந்தமே இல்லை என்று நிரூபித்துக் காட்டிய பெருமை திருப்பாணாழ்வார் என்னும் பெருந்தகையைச் சாரும்.

கோதையாரோ, பேராசிரியர் இராமாநுஜம் அவர்கள் வாக்கின்படி, "ஆண்டவனையே ஆண்டவளாகச் சூடிக் கொடுக்கும் வாடுமலர் மாலையுடன், வாடாப் பாசுரப் பாமாலையை அனுபவித்துச் சூட்டிய நாயக நாயகி சரணா கதித்துவ பரமபுருஷ பரமாத்ம பக்தி நிலைக்கு உரிய ஒரே பெண் ஆழ்வார் ஆண்டாள் மட்டுமே!" என்ற பக்தி பொதிந்த இந்த வார்த்தைகளில் **ஆண்டாளின் விசுவரூபத்தை நமக்குக் காட்டுகிறார், பேராசிரியர் இராமாநுஜம்.**

அரங்கனின் மாமனாக விளங்கிய பெரியாழ்வார் பட்டர் பிரான் விஷ்ணுசித்தர் கோதையை வளர்த்த பாங்கு, அவளை ஆண்டவனுக்குத் துணையாக்கிய வரலாறு - இவற்றை ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் நேற்றும், இன்றும் நாளையும் பேசும். "கோதை சூடிய மலர்களே நமக்கு வேண்டும். நாம் இங்கு பள்ளி கொண்டிருப்பதே அந்தப் பூங்கோதையின் மாலைகட்காகத்தான்" என்று வட பத்திரசாயிமொழிய - பட்டர்பிரான், கோதையின் அவதார தத்துவத்தை உணர்கிறார்! உலகம், பக்தியின் சக்தியை அறிகிறது!

இந்திய கலாச்சாரத்தில் ஊறித் திளைத்த (Max Muller) மாக்ஸ்முல்லர் என்னும் ஜெர்மானியப் பேராசிரியர் நம் மதம் பற்றிக் கூறுகிறார். "A fascinating. Religion, where Gods become men

and men & women become Gods" - என்று வியந்து பாராட்டுகிறார், நம் மாபெரும் இந்து மதத்தை.

இந்த ஜெர்மானிய அறிஞரின் கூற்று, ஆண்டாள் நாச்சியாரின் வரலாற்றைச் சுற்றியே அமைந்துள்ளது என நான் கருதுவதுண்டு.

கோதையின் சத்திய விரதத்தை - உள்ளத்தையே நெய்யாக்கி இறைப்பணிக்கான விளக்காக மனத்தையே அர்ப்பணிக்கும் **மார்கழி நோன்பு பற்றிய ஆசிரியரின் ஆராய்ச்சி வரிகள் மனத்தைத் தொடுகின்றன.**

30 நாள் நோன்பு பற்றியும் வெகு விரிவாக ஆசிரியர் விளக்குகிறார். ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி ஞானப் பாதையை அமைக்கும் கோதையாரின் பக்தி நம்மையெல்லாம் பரவசப்படுத்துகிறது என்றால் -ஆசிரியர் டாக்டர் இராமாநுஜம் அவர்களின் சொல்லாக்கம் நம்மை உருக்குகிறது! உள்ளத்தை ஈர்க்கிறது! "குறையொன்றுமில்லாத கோவிந்தனின் புகழ்" புத்தகம் பூராவும் நின்று நிலைக்கிறது. பேராசிரியர் இராமாநுஜத்தின் துள்ளு நடையில், பக்திப் பரவசத்தில் நாமும் இணைந்து நோன்பு நோற்க ஆரம்பித்துவிடுகிறோம்.

ஆண்டாள் வரலாறு, திருப்பாவைச் சிறப்பு, நாச்சியார் திருமொழி விளக்கம் - இவற்றைப் பேராசிரியர் இராமாநுஜம் அவர்கள் தன்னை மறந்து கோதையின் பக்திப் பாதையில் நடந்து கொண்டே இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். **கடவுளின் பூரண அருள் பெற்றோரே இவ்வித ஆதர்ச நூல்களை எழுத முடியும்.**

ஆசிரியர் மாயனைப் பற்றி, வடமதுரை மைந்தன் பற்றி, தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன் பற்றி எழுதுகிறார்! அனுபவித்து எழுதுகிறார்! மெய் மறந்து வாசகர்களாகிய நாமோ, மெய் சிலிர்த்துப் பரவச நிலையை எய்திப் படிக்கிறோம்.

ஆசிரியர், வாசகர் - இருவருக்குமே மாமாயன் மாதவன் வைகுந்தன் ஆசி கிடைப்பது நிச்சயம்.

இந்த அருமையான, பெருமையான நூலை எழுதிய டாக்டர், இராமாநுஜம் நம் பாராட்டுக்குரியவர்! தமிழ் கூறும் நல்லுலகம் இந்த அரிய நூலை இருகை கூப்பி வரவேற்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**கி. வேங்கட சுப்பிரமணியன்**

டாக்டர், பூமா வேங்கட கிருஷ்ணன் M.A. B.Ed. Ph.D.
துணை ஆசிரியர், கீதா சார்யன்,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005

Guest Lecturer
Dept. of Vaishnavism,
University of Madras.

Date: 22.12.1998

# அணிந்துரை

'கோதையின் பக்திப் பாதை' என்ற தலைப்பில் பேராசிரியர் டாக்டர் ராமாநுஜம் அவர்கள் எழுதிய புத்தகத்தை ஆழ்ந்து படித்தபோது, தம்முடைய கருத்துக்கள் பலவற்றை அவர் தமக்கே உரிய பாணியில் விளக்கியுள்ளது பாராட்டிற்குரியது.

உதாரணமாக ருஷி கோபிகைகள், மைதில கோபிகைகள், கௌசல கோபிகைகள், அயோத்யா கோபிகைகள் என்று இந்த கோபிகைகளுக்கு அவர் கொடுத்துள்ள விளக்கங்கள் மிகவும் அற்புதமாகவும், பொருத்தமாகவும் உள்ளது. இந்த விளக்கத்திற்குப் பிறகு கண்ணனும் ஒரு இராமபிரான்தான் என்றும், ஒவ்வொரு கோபிகையும் சீதாப்பிராட்டிதான் என்றும் கூறியுள்ளது சுவையாக உள்ளது. இதிலிருந்து ஒருவனும் ஒருத்தியும் என்ற மனிதனின் ஒழுக்க நிலை, பக்தி மார்க்கத்தில் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுப் பேராசிரியர் எழுதியுள்ளது சிறப்பான அம்சமாகும்.

இவர்களைத் தவிர்த்து கண்ணனின் சக்திகளாக சோபா, பிரபா, சாந்தி, க்ஷேமா கோபிகைகளைப் பற்றி விளக்கிய பின்பு, ராதை என்ற கோபிகை கண்ணனுக்கு உகந்த கோபிகை ஆதலால், அவள் மற்ற நால்வரையும் வெளியே விரட்டி விட்டதாக எழுதியுள்ளார், பேராசிரியர்! ராதையின் கோபத்தால் விரட்டப்பட்ட சோபாவால் சந்திரன் ஒளி பெற்றான்! பிரபாவால், சூரியன் ஒளிபெற்றான்! சாந்தியால் கிருஷ்ணனே சாந்தி பெற்றான்! க்ஷேமாவால் பூமாதேவி பொறுமை பெற்றாள்! எனவே, ராதையின் கோபத்தின் விளைவாகக் கூடப் பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதைப் பேராசிரியர் குறிப்பாக விளக்கி இருப்பது பாராட்டத்தக்கது.

ஆண்டாள் அருளிச் செய்துள்ள "ஊடல் கூடல் – உணர்தல் புணர்தல்" என்ற சொற்களுக்கு விளக்கம் அளிக்கும்போது பேராசிரியர் காட்டியுள்ள பொருள் மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது. அதாவது தர்ம - அர்த்த - காம - மோக்ஷம் என்று சொல்லப்படும் அறம், பொருள்,

இன்பம், வீடு என்ற நான்கைக் குறிப்பிடுவதாகவும், ஊடல் கூடல் என்பது அறத்தையும், பொருளையும் குறிப்பதாகவும், இவை இரண்டும் இவ்வுலக வாழ்க்கைக்காக ஏற்பட்டது என்றும், உணர்தல் புணர்தல் என்பது இன்பத்தையும் வீட்டையும் (மோக்ஷம்), குறிப்பதாகவும், இவை இரண்டும் அவ்வுலக வாழ்க்கைக்காக ஏற்பட்டது என்பதையும் **மிகவும் பொருத்தமாகவும், மனத்தில் ஏற்கும்படியாகவும் பேராசிரியர் ஸ்ரீமான் ராமாநுஜம் எழுதியுள்ளார்.**

**இந்தப் புத்தகத்தில் பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. இதில், என்னை மிகவும் கவர்ந்த விஷயம் எது என்றால், ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய திவ்யப் பிரபந்தங்களில் உள்ள கருத்துக்களைச் சிறிதும் மாற்றாமல் பூர்வாசாரியர்கள் விளக்கியுள்ள அடிப்படையிலேயே காட்டியுள்ளதுதான் !** கோதையின் பக்திப் பாதையானது தாய்ப்பூனையானது தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைப் போன்ற பாசம் அமைந்தது என்று முடித்திருப்பதும் மிகவும் பொருத்தமான விஷயமே. பூனை விளக்கத்தைக் கொடுத்த பேராசிரியர் மற்றொரு விளக்கமான குரங்கு ந்யாயத்தையும் எடுத்து எழுதி **அனைவரும் இரண்டு ந்யாயங்களையும் அறியும்படி விளக்கியுள்ளது பாராட்டிற்குரிய விஷயமாகும்.**

டாக்டர் ராமானுஜம் மாத விலக்காக உள்ள காலத்திலும் மகளிர் மார்கழி நோன்பை நோற்கலாம் என்று தெரிவித்துள்ள கருத்து எனக்கு உடன்பாடானதன்று! ஆயினும், **அவர் எழுதியுள்ள ஆற்றொழுக்குப் போன்ற நடையும், அவர் தரும் விளக்கங்களும் அனைவரையுமே இப்புத்தகத்தைப் படிக்கத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.**

டாக்டர் ராமாநுஜம் அவர்கள் இதுபோல் மேலும் பல நூல்களை எழுதும் வகையில் அவருக்கு அருள் புரியுமாறு கீதா சார்யன் திருவடிகளில் வேண்டி நிற்கிறேன்.

**– பூமா வேங்கடகிருஷ்ணன்**

**திருமதி. லலிதா அண்ணாமலை பி.எஸ்.ஸி., பி.எட்.,**
*ஆசிரியை*
*ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் சாரதா வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, உஸ்மான் சாலை, சென்னை - 17*

# அணிந்துரை

**தமிழில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சியாரைப் பற்றிய தலை சிறந்த நூல், கோதையின் பக்திப்பாதை ஆகும்.** *பலர் வைணவத்திற்கு விளக்கங்களை மணிப்பிரவாள நடையில் விளக்கினர். அவை, என் மனதைத் தொடவில்லை. ஆனால் எளிய தமிழில் விளக்கங்களைப் பேராசிரியர் ராமாநுஜர் இந்நூலில் தந்துள்ளார். யாரையும் மேற்கோள் காட்டாமல் தன் சொந்தக் கருத்துக்களையே அள்ளித் தந்துள்ளார்.*

**இந்நூல் ஒரு வைணவக் கலைக் களஞ்சியம்;** *தகவல்கள் விளக்கமாகவும், விரிவாகவும் தரப்பட்டுள்ளதால் யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.*

*பல புதிய தகவல்களை நான் இந்நூல் மூலம் பெற்றேன்! மகிழ்ந்தேன்! சான்றுகள் சில தருகிறேன்.*

*"ஆதிமூலப்பரம்பொருள் பரமபுருஷ ஆதி நாயகனாகிய எம்பெருமானே, அனைத்தும் என்று எவ்விதப் பிரதி பலனும் கருதாமல் - தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் சரணாகதித்துவமே வைணவம்."*

*"ஜாதி பேதத்தை உடைத்து நொறுக்கித் தூள் தூளாக்கியவர் தான், திருவரங்கத்து எம்பெருமான்!"*

*"குழந்தை, தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும்போது, 'அம் அம்' என்று வாயை அசைப்பதால் அம்மம் என்று கூறினார். குழந்தையின் இத்தகையஅம் அம் என்ற அசைவே, குழந்தை பேசும் முதல் சொல்லாகிய 'அம்மா' என்று மாறுகிறது. இதே அம்மா என்று ஓசைான், பகுத்தறிவற்ற ஆடுமாடுகளின் வாயிலும் பிறக்கின்றது."*

*"மாபெரும் இராமகாதையை உருவாக்கிய கம்பரும் திருவில்லிபுத்தூருக்கு வந்து ஆண்டாளை வழிபட்டிருப்பதோடு, ஆண்டாளுக்குச் சூடகம் என்ற தலைப் பதக்கத்தையும் அணிவித்துள்ளார். ஆண்டாள்நாச்சியார் தன் திருமொழியுள் திருமாலிருஞ்சோலை மலை அழகருக்கு நூறுதடா அக்கார*

அடிசில் நிவேதனம் செய்வதாகப் பாசுரம்பாடி, செய்யாமல் விட்ட குறையை, உடையவர் இராமாநுஜர் அழகர் மலையில் நிறைவேற்றி விட்டு - இங்கு வந்து ஆண்டாள் சந்நிதியில், ஆண்டாளே, தன் திருவாய் மலர்ந்து தன்னை அண்ணன் என்று அழைக்கும் பேறு பெற்ற தலமும் இத்தலமாகும்."

"கேரள மாநிலத்தில் தனுர்மாதத் திருவாதிரையில் பெண்களால் மட்டும் மார்கழி நோன்பு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது."

"கேரள மகளிர், இந்நோன்பைக் காமன் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றார்கள்."

"மன்மதன், எம்பெருமான் மனதில் இருந்து பிறந்தவனாக இருந்த போதிலும் - காத்தியாயினி மாயை எம்பெருமானின் நாபிக் கொடியிலிருந்து பிரமதேவனுடன் பிறந்து ஜீவாத்மாக்களை மயக்கக்கூடிய பராசக்தியாக இருந்த போதிலும் - ஆண்டாள், தன் மார்கழி நோன்பியற்றிய திருப்பாவைப் பாசுரங்களுள் மன்மதனைப் பற்றியோ, அல்லது காத்தியாயினி மாமாயையைப் பற்றியோ எந்த விதமான பாசுரத்தையும் பாடவில்லை என்பது கவனிக்கத்தக்கது."

"மன்மதன், எரிந்த பொழுது, அவன் கையிலிருந்த மலரம்புகளையும், கரும்பு வில்லையும் ஏந்திய நிலையில் - கரிய நிறங்கொண்ட பராசக்தியே சிவந்த குங்கும நிறப்பேரழகுடைய அன்னையாக, சந்நியாசினிக் கோலத்தில் காமாட்சி வடிவில் தோன்றினார்! பெயரளவிற்கு மன்மதன் எரிக்கப்பட்டானே யன்றி - அவன் அழகும், அவன் உயிரினங்களின் நெஞ்சங்களில் மூட்டி வந்த காம சிற்றின்ப உணர்வுகளும், ஜீவ உற்பத்திகளும் அழிக்கப்படவில்லை.

மன்மதனுக்குரிய ஒரு பெருஞ்சிறப்பு - தன் மனைவி ரதியையன்றி வேறு எந்தப் பெண்ணையுமே விரும்பாத ஏகபத்தினி விரத ஒழுக்கம், மன்மதனிடம் இருந்தது!

மண்ணுலகில் மனித குலத்தில் அவதரித்த எம்பெருமான் இராமனைப் போல, விண்ணுலகில் உள்ள தேவாதி தேவர்களிலும், மன்மதனே ஏகபத்தினி ஒழுக்க சீலன்!

எவ்வளவோ கோடானுகோடி ஜீவாத்ம நெஞ்சங்களில் சிற்றின்பக் காம உணர்வுகளைத் தூண்டிவிடும் பேராற்றலைத் தனக்குரிய தொழிலாகக் கொண்டவனாக இருந்தும்கூட, தன் தொழிலைச் செய்வதில் பிரதிபலன் கருதாத கடமை உணர்வு

தவழ்ந்ததேயல்லாமல் - தன் பேரழகையும், மயக்கி வீழ்த்தும் வசியக் கவர்ச்சியையும் கொண்டு பெண்மை தவழும் எவரிடமும், தன் சித்து வித்தையைக் காட்டித் தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு, கற்பைச் சூறையாடி எவரிடமும் இந்திரனைப் போலவோ, சந்திரனைப் போலவோ, இராவணனைப் போலவே சாபம் பெறாத தனித்துவம் கொண்ட - தன் மனைவி ரதிக்கு மட்டுமே சொந்தமானவனாக விளங்கிய ஒழுக்கக்குன்று, மன்மதன்!"

"கோகுலத்தில் பிறந்த கோபிகைகள், பற்பல நிலைகளில் கண்ணனைத் தழுவி மகிழத்தவம் செய்து வந்து பிறந்தவர்கள்!

இக்கோபிகைகள் - சுருதி கோபிகைகள், ருஷி கோபிகைகள், மைதில கோபிகைகள், கௌசல கோபிகைககள், அயோத்யா கோபிகைகள் என்று பலவகைப்படுவார்கள்."

"கண்ணபிரான் ஏறி உட்கார்ந்திருந்த மரமோ, நீர் நிலையின் அருகிலுள்ள குருந்த மரம்! ஒரு குட்டையான மரம்!

இம்மரத்திலிருந்து கோபியர்களை நிர்வாண நிலையில் மிகமிக அருகில் பார்க்க இயலும்!

அப்படிக் கண்ணன் தங்களைப் பார்க்கும் பொழுதாவது - கோபியர்களுக்குப் பிறவியைக் கடந்த நிர்வாண ஆத்ம பரிநிர்வாண நிலையைப் பற்றிய ஆத்மார்த்தமான சிந்தனை ஏற்படவில்லையே?

குருந்த மரம், தெய்வாம்சம் பொருந்திய ஒரு மரம்!

ஞானம் உபதேசிக்கும் குருவின் அம்சம் கொண்ட மரம்!

பூத்துக் காய்ப்பது, இம்மரத்திற்குக் கிடையாது!

பூத்துக் காய்த்துக் கனிகள் தரும் மரங்களை, இல்லற அம்சமாக நினைத்தால் - குருந்த மரம் பூத்துக் காய்க்காத நிலையில் இருப்பதால், இதை சர்வ ஞானம் பெற்ற துறவறத்தின் அம்சமாகக் கருதலாம்!

இக்குருந்த மரத்தின் அடியில்தான், ஆதிசிவன் குருவாகத் தோன்றி திருவாதவூரராகிய மாணிக்கவாசகரை அடிமையாக ஆட்கொண்டு - சிவம் என்றால் என்ன? சிவஞானம் என்றால் என்ன? சிவஞானம் போதித்த சித்தாந்தங்கள் எவை? என்பவற்றை விளக்கச் சிவஞான போதனையைத் தந்ததாக உள்ள வரலாறு, இங்கு நினைவுபடுத்தத் தக்கது."

"ஆண்டாள் முதல் திருமொழியாகிய மன்மதனைத் தொழுதல் பற்றி வரும் பாசுரங்களில் 'என் தடமுலைகள் மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன், கண்டாய்!' என்றும் 'கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழப் பெறாவிடில், நான் அழுது அழுது அலமந்து அம்மா வழங்க ஆற்றவும் அது உனக்கு உறைக்கும், கண்டாய்' என்றும் எம்பெருமானை அடையப்பெறாத ஏக்கத்தால் மனம் கொதித்துக் குமுறிக் கோபித்துப் பேசிய மொழிகளே **'ஊடல்'** என்பதை விளக்கும்.

அதைப்போலவே - இரண்டாம் திருமொழியாகிய 'சிற்றில் சிதையேல்' என்ற அமைந்த பாசுரங்களில் கண்ணன் நேரில் வந்து கோபியரை மயங்க வைத்துக் கடைக்கண் பார்த்தல் - கண்ணனின் பேச்சும், செய்கையும், கோபியரை மயக்கும் மந்திர வித்தை கொண்ட முகமும் கொண்டு விளங்கியமையை - 'உன்தன் மேல் உள்ளமோடு உருகல் அல்லால் உரோடம் ஒன்றும் இலோம்' என்று கோபியர் கூறுவது போன்ற குறிப்புக்கள் எல்லாம் எம்பெருமான் கண்ணனோடு ஊடிய கோபியர் கூடினர் என்பதை விளக்கும் **'கூடல்'** ஆகும்.

மூன்றாம் திருமொழியில் கோபியரை நிர்வாணமாக்கி அவர்தம் ஆத்ம சங்கமம் பற்றிய நினைவைக் கண்ணன் ஏற்படுத்தியமை - ஜீவாத்ம சங்கம நிலையைப் பரமாத்மா ஆத்மார்த்தமாக உணர்த்திய **'உணர்தல்'** ஆகும்.

நான்காவது திருமொழியாகிய 'கூடல் இழைத்தல்' பகுதியில் கண்களை மூடிக் கொண்டு மணற்கோடுகள் வரைந்து கூடல் நிலையை எதிர்பார்த்தலாகிய பாசுர அமைப்புக்களே, ஜீவாத்மா - பரமாத்மாவோடு சங்கமம் ஆகிப் பேரின்ப சுகானுபவம் பெறும் **'புணர்தல்'** ஆகும்.

இவற்றையே 'ஊடல், கூடல், உணர்தல், புணர்தலை நீடுநின்ற நிறை புகழ் ஆய்ச்சியர் கூடலை' என்று ஆண்டாள் நாச்சியார் அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள்."

"அபயக் குரல் கொடுத்த கஜேந்திர யானைக்கு அபயம் தந்து யானையின் துன்பத்தைத் துடைத்த எம்பெருமான், கோதை ஆண்டாளின் துன்பத்தையும் துடைத்து நாயகியாக ஆட்கொள்ளக் கால்நடையாக நடந்து வருகின்றான்!

கஜேந்திர யானைக்கு அபயம் தந்த நன்றியை மறவாமல், ஆயிரக் கணக்கான யானைக் கூட்டங்கள் நாராயணனைச் சூழ்ந்து வெற்றி நடையிட்டு வேகமாக வருகின்றன!"

*"பாஞ்ச சன்னியத்தின் மூலக்கதையே சுவையானது.*

*விளைந்த ஆயிரம் முத்துச் சிப்பிகள் சூழ, ஓர் இடம்புரிச் சங்கு பிறக்கும்!*

*ஆயிரம் இடம்புரிச் சங்குகள் சூழ, ஓர் வலம்புரிச் சங்கு பிறக்கும்!*

*ஆயிரம் வலம்புரிச் சங்குகள் சூழ்ந்திருக்கும் நிலையில் ஒப்பற்ற பாஞ்ச சன்னியச் சங்கு பிறந்தது.!*

*முத்துக்கள், சங்குகள் அனைத்துமே கடலில் பிறந்தாலும் கூட, இவற்றிற்கு ஜீவனும் சக்தியும் தெய்வீக ராசி அம்சமும் உண்டு!"*

*ரிஷிமூலம், நதி மூலங்கள் புரிய முடியாதவை என்று சொல்வார்கள். ஆனால், பேராசிரியர் இராமாநுஜம் ஆன்மீக மூலம் அனைவருக்கும் புரியும்படியாக -* **திருவெம்பாவை** *பாடிய மாணிக்கவாசகர் வழியில் வந்த வடலூர் இராமலிங்க வள்ளல் இறைவனுடன் அருட்பெருஞ்ஜோதியாகக் கலந்த* **சைவ நெறியாகிய சுத்த சன்மார்க்க ஒழுக்கத்தையும், திருப்பாவை** *பாடிய கோதை ஆண்டாள் இறைவனுடன் நாயகியாக சங்கமம் ஆகிய* **வைணவ பக்திப்பாதையையும் ஒப்பிட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.**

*இந்நூலாசிரியர் வைணவத்தில் ஆழ்ந்திருந்தாலும், மற்ற மதங்களை இணையாக எண்ணி மதிப்பிட்டிருப்பது வியப்புக்குரியது. இது இவருடைய மனித நேயத்தைக் காட்டுகிறது. பொதுவாக எந்த மௌலியும், பாதிரியாரும், மற்ற மதத்தைப் பற்றி அறியமாட்டார்கள். புகழவும் மாட்டார்கள். ஆனால் பேராசிரியரோ - திருக்குர்ஆனையும், பைபிளையும் முழுமையாகப் படித்து ஆங்காங்கு அவற்றைப் பாராட்டுகிறார்! சான்றாக.*

*'இதே மார்கழி மாதத்தில்தான் - பாவிகளுக்காகச் சிலுவையில் அறையப்பட்ட ஏசு பெருமானும் கர்த்தரின் அம்சமாக அவதரித்ததாகக் கூறப்படுகின்றது.'*

*'தீரத்தெளிந்த சர்வமதஞான வேதங்களும் இதே அம்மம் என்ற ஓசையுடன்தான் 'ஓம்' என்றும் 'ஆமென்' என்றும், 'அமீன்' என்றும் ஆதிமூலப்பரம் பொருளை அழைக்கின்றன.'*

*பேராசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சி மிகப் பெரியது. அவர் உழைப்பு பாராட்டுக்குரியது. இதற்கு முன்பு இவர் 108 ஸ்ரீ*

வைஷ்ணவதிவ்விய தேசங்கள் - ஒரு தாசானுதாசனின் பக்திப் பயணம் (1முதல் நான்கு பகுதிகள்) என்ற ஒரு மாபெரும் படைப்பை வைணவ உலகத்திற்கு தந்துள்ளார். எனவே இவரை **வைணவத் தமிழ்மாமுனி** என்றும் **கோதைத் தமிழ்ப்பெருமா முகில்** என்றும் அழைத்திருப்பது சாலச் சிறந்தது ஆகும்.

இப்பேராசிரியர் உருவாக்கியுள்ள இவ்வரிய படைப்பை இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், உலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டால் - **தமிழச்சியாக** நம் தமிழ் நாட்டில் பிறந்த **ஆண்டாளின் பெருமையையும்**, இவர் **உலகம்** இம்மையிலும், மறுமையிலும் **தழைக்கப்** பாடிய பிரபந்தங் களால் நம் **தமிழ் மொழியின் சிறப்பையும், உலகத்திலேயே எங்கும் இல்லாத நிலையில் இறைவனோடு உயிரும் உடலுமாகக் கலந்த பக்திப் பாதையின் மகிமையையும்** உலகமே தெரிந்து கொள்ள ஒரு சிறந்த வழி பிறக்கும் என்பது என்னுடைய கருத்து.

ஆண்டாள், திருப்பாவைப் பாடல்களில் எடுத்துச் சொல்லும் **'வள்ளல் பெரும் பசுக்கள்'** என்பதற்கு எல்லோருமே இதுவரையிலும் வள்ளல் என்ற சொல்லுக்குக் கண்ணன் என்ற பொருளுடன், கண்ணனின் பசுக்கூட்டங்கள் என்றே பொருள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். பேராசிரியரின் நூலைப் படித்த பிறகுதான், எந்தப் பசுவாக இருந்தாலும் தன் கன்றிற்குச் சுரக்கும் பாலை மானிட ஜாதிக்கு வழங்கிக் கொண்டிருக்கும் வள்ளலாக விளங்குவது எனக்குப் புரிந்தது. பேராசிரியரின் இத்தகைய கண்ணோட்டத்தில் அவரிடம் குடி கொண்டுள்ள ஆன்மீக உணர்வுகள் வெறும் மூட நம்பிக்கை கொண்டவை அல்ல என்பதும், அறிவியல் ஆராய்ச்சி நிறைந்த ஆன்மீகம் என்பதும் புரிகின்றது.

பேராசிரியர் இராமானுஜம் வளமுடன் பல ஆண்டுகள் வாழ்ந்து இத்தகைய சாகாத ஆன்மீகத் தமிழ் இலக்கியங்களைப் படைக்க வேங்கடாசலபதியை வேண்டுகிறேன்.

**15.12.98**

**சென்னை** **லலிதா அண்ணாமலை**

# நூலாசிரியரின் துணைவியார் கூறுகிறார்



ஒரு பெண்ணாக ஜென்மம் எடுத்தவளுக்கு, அவளைத் திரு மணம் செய்து கொண்டு ஆளும் கணவனே, ஆண்டவன் ஆவான்!

இந்த முறையில் என்னை ஆண்டு வரும் என் கணவர் -அவரை ஆண்டு வரும் பெருமாளையே ஆண்ட ஆண்டாளைப் பற்றிய இந்தப் புத்தகத்தை எழுதி இருக்கின்றார். இந்த நூலை விமர்சனம் செய்யக் கூடிய சக்தி எனக்குக் கிடையாது. இருந்தாலும் என் மனதில் பட்ட சில வார்த்தைகளை மட்டும் சொல்லுகிறேன்.

மார்கழி மாதத்தில் திருப்பாவைப் பாடல்களைப் பாடி, விரதம் இருந்து வரும் பழக்கத்தைப் பற்றி, நான் கல்யாணம் செய்து கொள் வதற்கு முன்பு எனக்குத் தெரியாது.

நினைப்பதெல்லாம் நிறைவேற, என் கணவர் எனக்குச் சொல்லிக் கொடுத்த முறைகளின்படியே முப்பது வருஷங்களுக்கும் மேலாக நான் மார்கழி மாதத்தில் திருப் பாவையின் பாட்டுக்களை ஆண்டாள் படத்திற்கு முன்பு நின்று பாடிக் கொண்டு விரதம் இருந்து வருகின் றேன். என் குடும்பத்திலும் நான் நினைத்ததெல்லாம் மண மங்கள மாக இதுவரையிலும் எல்லாம் நடந்து வந்து கொண்டிருக்கின்றன.

என் கணவருக்கு என் மீதும், பிள்ளைகள் மீதும் இருந்துவரும் பாசத்தைவிட, அதிகமான பாசம் - அவருக்கு நாராயணன் மீதுதான்!

அவருக்கு இது வரையிலும் வழிகாட்டிக் கொண்டு வரும் பெருமாள்தான், என் குடும்பத்திற்கும் வழிகாட்டிக் கொண்டு கஷ்ட நஷ்டங்களில்லாமல் எங்கள் குடும்பத்தை நடத்திக் கொண்டு வருகின்றார்.

இந்தப் புத்தகம் இருக்கின்ற வரையிலும், என்னுடைய பெயரும் அவர் பெயரோடு சேர்ந்து இடம்பெறப் போகின்றது என்பதை நான் நினைத்துப் பார்க்கும்பொழுது, எனக்கு அளவு கடந்த பெருமையாக இருக்கின்றது.

இந்தப் புத்தகத்தைப் எழுத்து வடிவத்தில் நானாக எடுத்துப் படித்துப் பார்த்தபொழுது, என்னிடமும் சொல்லாத எவ்வளவோ விஷயங்களை எழுதி இருப்பது தெரிந்தது. எப்படி இவ்வளவையும் தன் மனதில் அடக்கி வைத்துக் கொண்டு இருந்திருக்கின்றார் என்பதே எனக்குப் புரிந்த கொள்ள முடியவில்லை. அதனால் - இந்தப் புத்தகத்தை நான் வாசித்தேன் என்று சொல்ல முடியவில்லை. இந்த புத்தகத்தைப் படித்துப் பார்க்கும் பொழுது, இதில் நான் வசித்தேன் என்றுதான் சொல்ல முடியும்.

இன்னொரு விஷயம்! என் கணவர், தைமாச முதலில் வரக்கூடிய பொங்கலை அவர் கொண்டாடுவதில்லை. மார்கழி மாச இருபத்திஏழாம் நாளிலேயே அவர் பொங்கலைக் கொண்டாடி முடித்து விடுகிறார். அத்துடன், விஷ்ணு பக்தர்கள் எப்பொழுதும் மிச்சத்தில்தான் கொண்டாடுவார்களாம்! ஆனால் இந்தப் பொங்கலை மட்டும், ஆண்டாள் கொண்டாடி முடித்த மிச்சத்தில்தான் உலகம் கொண்டாடிக் கொண்டிருக் கின்றது என்றும் என் கணவர் சொல்லிக் கொண்டிருப்பார்.

ஆண்டாளின் திருப்பாவையைப் பாடி மார்கழி விரதம் இருந்து வரும் என்னைப் போலவே, **எல்லாக் குடும்பங்களும் மார்கழி விரதம் இருந்து பெருமாளின் திருவருளைப் பெற வேண்டும் என்பது, என் ஆசை.**

**திருமதி. பாக்கியம் இராமாநுஜம்**

**தேதி 15.12.98**

*ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள் (ஸ்ரீபெரும்பூதூர் எதிராஜ ஜீயர் மடத்தின் எதிராஜ ஜீயர் பீடாதிபதி தர்ம கர்த்தா) அவர்களின் அணிந்துரையும், நூலாசிரியருக்குக்* **'கோதைத் தமிழ்ப் பெரு மா முகில்'** *பட்டம் வழங்கி அருளிய மங்களாசாசனமும்:-*



*ஸ்ரீமதே ராமானுஜாய நம:*
*"ஆழ்வார்களையும் அருளிச்*
*செயல்களையும்*
*தாழ்வாக நினைப்பவர்கள்தாம்*
*நரகில் வீழ்வார்க*
*ளென்று நினைத்து நெஞ்சே -*
*எப்பொழுதும் நீயவர்பால்*
*சென்றணுகக் கூசிதிரி!"*

*நமது சிந்தனைச் செல்வர், திவ்யதேசச் சுடரொளி,*
*பேராசிரியர் - இரா இராமாநுஜனின்*
*கோதையின் பக்திப்பாதை - நூலிற்கு*
**'கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்'** *என்ற பட்டம் வழங்கித் தந்த மங்களாசாசன அணிந்துரை*

*"அஞ்சுகுடிக்கோர் சந்ததியாய் - ஆழ்வார்கள்*
*தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்*
*பிஞ்சாய்ப்பழுத்தாளை ஆண்டாளை - பத்தியுடன்*
*நாளும் வழுத்தாய் மனமே மகிழ்ந்து!"*

*கங்கைக்கு ஊற்றுச்சுனை கங்கோத்ரி என்பவர்கள், நத்தி துர்கம் காவிரிக்கு சுனை ஊற்றென்பவர், வர்ஜா நதியின் ஊற்றுச் சுனை நீலவர்ணன் திருமாலின் திருவடி என்போர், ஸ்ரீசங்கர ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீமத்வர் பிறப்பிடம் முக்கடல் சூழ்ந்த தென்னகத்தில் காலடி ஸ்ரீபெரும்பூதூர் உடுப்பி என்போர் - பக்திக்கு ஊற்றுச் சுனை பாரதம், அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உலோபம் இல்லாது வையகம் போற்றும், ஆழ்வார்கள் முடிக்கு, ஒரு சந்ததியான திருமகள், தனதண்ணல் ஸ்ரீராமாஜனின் துணையுடன் கொண்ட பக்தி நெறியே என்பது வெள்ளிடைமலை.*

பழங்களில் மா பலா வாழை - என்பர், இலைகளில் துளசி, மாவிலை வாழை இலை என்பர். மதங்களில் அத்வைதம் த்வைதம் விசிஷ்டாத்வைதம் என்பர். ஆசாரியர்கள் மேற்படி மூவர் என்பர். இதனால் மற்ற பழங்களையோ இலைகளையோ மதங்களையோ ஆசாரியர்களையோ குறை கூறுவதாகாது. அம்மாதிரியாக ஞானம் பிறப்பதும் பக்தியிலேதான் என்பது கற்றறிந்த சான்றோர்களின் அமுத மொழியாகும். ஆகபத்தியுடன் ஞானம் பிறக்க, சாதிமத மொழி பேதங்கள் கிடையாது. ஒன்றுமே கற்றறியாத பக்தி கொண்டவன் எந்தமத மொழி ஜாதியினனாயினும், ப்ரபன்னன் என்று மோஷத்திற்கு அருகதையுடையோனாவான்.

நாம் ஆதிதிராவிட, அந்தண வேதிய மறையோன் பிராமண துறவி சந்நியாசி, மடாதிபதி சீயராக கடந்த பதினைந்து ஆண்டு கணிப்பில் பல கற்ற நற்ற உற்ற பொருள் கொண்டாடும் சில அடியவர்களில் அருள் கொண்டாடும் அடியவர்களைக் கண்டு நெருங்கிப் பழகிக் கூடிக் கலந்து அவர்களின் ஞானத்தின் மேன்மை கொண்டு நமது சிறிய நெஞ்சத்தில் அவர்கட்கு நிரந்தர மாக எந்தை எதிராஜன் எப்பொழுதும் எம்மிதயத்துளதால், அவரின் இதயத்துள்ளே வைத்துப் போற்றி வருகிறோம்.

அன்னவர்களில் ஏற்ற கலமாய் ஆண்டாளின் அடிப் பொடியாய் ஆழ்வார்கள் ஸ்ரீராமாநுஜன் உள்ளிட்ட ஆசார்யர் களின் இன்னவருடன் இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் என் தம்மோடு உற்றே நமதன்பிற்கு உட்பட்டவராய் **ஞானஒளி வீச பிரகாசிப்பவர் பேராசிரியர் இரா. இராமாநுஜன்** நடுநாயக மானவர் என்பதில் புகழ்ச்சிக்கோ, தன்னலத்திற்கோ நிலமில்லை.

நாம் நாத்திகர், ஆத்திகர், நாத்திக ஆத்திகர், ஆத்திக நாத்திகர் யாரைக் கண்டோம்? சமயம், சமுதாயம், சமநோக்கு, அன்பு, அறிவு, தமிழ்பால் கொண்ட காதலுடன் எழுத்தாற்றல், பேச்சாற்றல், தொகுப்பதில் ஆற்றல், ஊக்குவிக்கும் ஆற்றல் இவைகளுக்காகத் தன்னலம் கருதாது "நெடுங்கண்கள் ஊரார் உறங்கிலும் தானுறங்கா" என்றபடி உழைப்புதொண்டு என்றே தொண்டுபூண்டமுதமுண்ணும் திருமகன்களில் **பேராசிரியர் இரா. இராமாநுஜனே தலைவர்** என மூரி நிமிர்ந்து நாம் பெருமைப்படுவோம். பல பட்டங்கள் அவரை அலங்கரித்து பெருமைப்படுகின்றன. பல, தமிழ், சமூக, சமுதாயநலன், மத நல்லிணக்க நிறுவனங்கள் அவரைத் துணையாகக் கொண்டுள்ளது. பக்தி அன்பு நெறியில் உள்ள யாவரும் மெய்நாமனத்தவர்களே என நினைத்து அகம் மகிழ்வர். இதுவரையில் அல்லாது இனியும் இவ்வணிந்துரையில் மேலும் எழுத்துவடிவம் கொடுப்பது நூல்

ஆசிரியரின் உள்ளத்தினூடேயாம். அவரின் நூல் "கோதையின் பக்தி நெறி" என்பதால் நாம் அவர் தம்மின் உணர்வுகளை சிறிதேவிவரித்து அவரின் நூலிற்கு எமது அணிந்துரை இனத்துத்தியணிபணமாயிரங்காகும் எனத் தெரிவிக்கிறோம்.

108 திவ்ய தேசங்கள் பெருமை வியாக்கியானங்களின் சுவை மரபுக்கு உட்பட்டே உலகப் புகழ் பெற்ற திரு. ஜேசுதாஸர் மூலமாக வையகம் முழுவதும் இருவரிகளில் ஒலி நாடா மூலம் பரவவிட்டு நம்மால் **"திவ்ய தேசச்சுடரொளி"** என ஏற்கப்பட்டவர். கடந்த காலத்திலும் நிகழ் காலம் வருங் காலத்திலும் எவரும் கனவில் கூட சமைக்கமுடியாத 108 திவ்ய தேசங்களின் ஆழ்வார் பாசுரங்களின் ஆழ் பொருளைக் குன்றவிடாது Old new testament மற்றும் புனித குர்ஆன் தத்துவங்களும் ஆழ்வார் பாசுரங்களின் கருத்தினுடையதே என நூல் வெளியிட்டமை இவ்வாசிரியரின் இமாலயச்சாதனை! மண்ணும் மலையும் கடலுமுல கேழும் உள்ள வரை **எவரும் மறக்கமாட்டார்கள் என்பது முலாம் பூசாத உண்மை.**

ஆக மாதங்களில் மார்கழி, பூக்களில் இதமான மல்லிகை, பால் என்றால் பசும்பால் என்பது போல் **பரமபாகவ தோத்தமர்களில் நாம் மிமிக உகப்பது பேராசிரியர், நூல் ஆசிரியர் இரா, இராமானுஜனே** என்பது எந்தை எதிராஜனின் "நாமுகந்த பாகவதரின் அபிமானத்தில் ஒதுங்கி இருப்பது" என்ற அவரின் ஆறு வார்த்தைகளில் ஒன்றானதை அடியொற்றியே என்பது ஸ்த்யம் சபே, ஸஹ்யம் ஸஹ்யம் புந: ஸஹ்யம் என்பதாகும். இப்பெரியாரின்" நூலின் ஆழ்பொருள் உள் பொருள், நுகர் பொருள் எக்காலத்திற்கும் ஏற்ற கொஞ்சும் தமிழ் சலங்கைத் தமிழ்கள் தவழும் தமிழ்த் தென்றலுடன் அனுபவிப்போம்.

நூலாசிரியர் கோதையின் பக்திக்கு ஆதாரமெது, (ப்ரமாணம்), கட்டாயம் என்ன (ப்ரமேயம்) பாதை எது (ப்ரமாதா) என்ற வேதாந்த தத்துவங்களை அனாயாஸமாக எழில் தமிழில் உலகுய்ய மண்ணுய்ய மண்ணில் மநிசருய்ய விளக்கியிருக்கும் சுவை எழுத்தில் வடிக்க முடியாது. அதாவது **ஆதாரம் வேதமே** என்பதையும் வேதம் கேவலம் **மந்திரமில்லை.** வாழ்க்கையில் அன்பு, இறையுணர்வு, தொண்டு, தன்நலம் கருதாது சமாதானம் தழைத்தோங்கவும் இன்றைய விஞ்ஞானத்திற்கு திறவுகோல் என்பதை பாமரனும் அறிய தெளியவைத்திருக்கும் நூலாசிரியரின் பாங்கை நுண்ணுணர்வு கொண்டவர்கள் அறிவர்.

அங்ஙனமேயே ப்ரமேயம் என்கிற காரணம் **மோக்ஷம் என்கிற திருநாட்டை அடைவதே** என்பதை பெருமா மழைக் கூந்தல் பிழிந்து உதறினாள் விழுத்துப்பழுத்த முத்துத் துளிகளின் உணர்வு கொண்டு விவரித்திருக்கிறார். ஆம் ப்ரமாதா; என்கிற **வழி காட்டியார்** என்பதற்கு செழுமாமுகிலாய் ஆச்சார்யர்களாகிய நிதி சொரியும் தமிழ் மாமுகில்களே என்பதைப் பேர்க்கவும் பேராதபடி அறுதியிட்டு விளக்கியிருக்கும் பாங்கு வாசாம கோசரம் என்னத்தகும்.

ஆழ்வார்கள் ஜாதிமத மொழிக்கப்பாற்பட்டவர்கள், ருஷிகளுக்கும் மேற்பட்டவர்கள், மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்த பொய்கையார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் புகழ்மழிசைப்பிரான்முதல் வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன், எம்பெருமானுக்கே பல்லாண்டு பாடிய பட்டர் பிரான் பெரியாழ்வாரின் பெருமை, நண்ணிகுருகூர்த் தென் நம்பியென்றக்கால், அண்ணிக்கும் அமுதூறும் எந்நாவுக்கே என்ற மதுரகவிகளையும், தொண்டர் அடிப்பொடியென்றே பெருமை கொண்ட ஆழ்வாரையும், பெருமாள் திருமொழி பெரிய திருமொழி படைத்த குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், அமலானதிப்பிரான் பணித்த பாணனையும், நூலாசிரியர் மின்னுமா மழைதவழும் மேகவண்ணனாக தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையறிவரார் அருளிச் செயலறிவரார் என்ற கேள்விக்கு இடமில்லாத அவர்களின் நற்றமிழை, தாழ்வாக நினைப்பவர்கள் வீழ்வார்கள் நரகில் என்று நினத்து நீ யவர்பால் சென்று அணுகச் கூசிதிரி என்று தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி போல் வலம்புரிபோல் நின்றதிர்ந்து வெற்றி எட்டுத் திக்கும் எட்ட முழக்கமிடுவது; தமிழர்கள் மட்டுமல்லாத ஆழ்வார்களின் பக்திப் பாதையை விளக்கும் தொன்மையை அவரவர் சென்னிக்கு மலர்ந்த பூவாகும் என்று தேறும். ஆழ்வார்கள் பதின்மரில் கோதை நாச்சியார் தனியிடம் பெற்றவள் அல்லவா? ஆண்டாளின் பக்தியைக் காட்டும் கோதையை இவ்வாசிரியர் முழுமுதலாகக் கொண்ட பாங்கினை தனிச்சுவையாகச் சுவைப்போம்.

நூலாசிரியர் ஆழ்வார் திருமகள் ஆண்டாளின் "காலவழுவமைதி" என்ற உணர்விற்கு சேரத் தன்னையே கோபிகைகளில் ஒருத்தியாக பாவித்து பட்டர்பிரான் கோதையின் அடிப் பொடியாகவே கொண்டு உணர்ச்சியின் பொங்கும் நிலையில், **ஆண்டாளின் திருப்பாவையைத் தன் நூலின் இதயமாகவும், (30 பாட்டுக்கள்) 143 பாக்கள் கொண்ட நாச்சியார் திருமொழியை ஆழ்வார்களின் பாக்களின் நாயகக் கல்லாய்**

வைத்து அனுபவிக்கும் அழகு, திருமாலிருஞ்சோலையின் பூக்கள் இயல்பாகத் தரும் நறுமணத்தினை ஒக்கும். ஆம்! மற்ற ஆழ்வார்களின் பக்திகளை பெருநீர் என்றும் ஸ்ரீஆண்டாளின் பாக்களைத் தூய பெருநீராக விளக்கி, விளக்கில் கொளுத்திய தீவட்டிப் போல் கொண்டு கண்டேந ஸ்வர கதிகதேந உத்கீர்ண பாஷ்பாம்புநராக அனுபவிப்பது நூதனப் பாங்கு! குறிப்பாக இளைஞர் உள்ளங்களை பக்தி கொள்ள கிளர்ந்தெழும் தண்முகில்களாக்கும் எனத் தட்டில்லை. முதலில் ஆண்டாளை கேவலம் சாதாரண பக்தியில் கட்டுண்ணப்பட்ட பெண்ணாகக் கருதாமல் அவள் பெருமைகளை உணர்ச்சிப் பொங்கோதத்தில் சுவைத்து நன்புருகி ஞானச்சுடரென விவரிக்கும் அழகு கீழே விவரிக்கப்படுகிறது.

## திருப்பாவை

வேதமனைத்திற்கும் வித்தான கோதைத் தமிழே திருப்பாவை என்பர். ஆழ்வார்கள் சதுர்வேதங்களை ஆண்டு ப்ரமாணமாகக் கொண்டபடி அநுபவித்தனர். ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சியவள் ஆண்டாள்.

எம்பெருமான் ஜகத் காரணன் ஸர்வவ்யாபி நாமங்கள் ஆயிரம் கொண்டவன் என்று தசாவதாரங்களை யனுபவித்து ஆண்டு அன்பு, காதல், வேட்கை, அவா என்ற நான்கு பாங்கின் திருமந்த்ரம் த்வயம் சரணாகதி என்னும் ப்ரபத்தியை, நாயகி பாவத்துடன் ஆழ்வார்களின் நாயகி பாவம் மேட்டுமடை. ஆனால் பெண்களின் ப்ரதிநிதியான ஆண்டாளின் நாயகி பாவம் பள்ளமடை.

ஆதலால் முதல் பாட்டிலும் இறுதிப்பாட்டிலும் ஆண்டாள் "நாராயணனே நமக்கே பறை தருவான்... செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்" என அறுதியிட்டு மூதலிப்பது தந்தை வழியிலேயே, ஸ்ரீராமாநுஜரின் சரீர சரீரி பாவத்தின் கருவூலம், "நாராயணன் யாவருக்கும் சொந்தம், பக்தியில் ஜாதிமதமொழி பேதமில்லை என்பதையும், வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசந:" என்ற பொருள் சுவை அறிந்து ஆண்டாள் அனுபவித்திருப்பதை சுவை குன்றாது நூலாசிரியர் "வையத்து வாழ்வீர்காள்" என்றவரி மூலம் உணர்த்தியிருப்பது சாதூக்தி சமத்காரம் கொண்டதாகும்.

பரம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என்ற அறம் பொருள் இன்பம் வீடான சாமியமிட்டு சிற்றின்ப வாடையே

கொள்ள முடியாத பொருளுடையது திருப்பாவை **என்பதை ஆசிரியர் விளக்குகிறார்.** மேலும் பக்திக்கு ஒரு ஆசார்யர், சக்திக்கு ஒரு பிராட்டி, முக்திக்கு ஸ்ரீமந்நாராயணன் என்பதை அறிந்தவர்களே தொண்டர்கள் பாகவதர்கள் என்றபடி பகவத் பாகவதாசார்யாள் என்ற கிரமத்தை திருப்பாவையில் காட்டியிருப்பது கட்கூடு.

## ஆண்டாளின் தனிச்சிறப்பு

ஆழ்வார்கள் திருமகளாம் ஆண்டாள், பூமிப் பிராட்டியாவாள், ஆண்டாள். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள், மல்லிநாடாண்ட மடமயில். வேதமனைத்திற்கும் வித்தானது, திருப்பாவை. பெரிய ஆழ்வாரை தந்தையாகக் கொண்டவள் ஆண்டாள். தன் காதல் வசத்தால் சொல் திறனால் ஸ்ரீவில்லிபுத்தூரையே கோகுலமாகக் கொண்டு, அங்குள் ளோரை தன்னைப் போல் கோபிகைகளாகக் கொண்டு அவர்களைக் கொள்ள வைத்து தன்னிலை மறக்கச் செய்தவள் ஆண்டாள். தமிழுக்கு அகராதி ஏற்பட்டது ஆண்டாளின் திருப்பாவை யிலிருந்து தானோ எனப் பல தமிழ் வல்லுனர்களே வியக்கும்படி கோதைத் தமிழக்கு உரியவள் ஆண்டாள்.

ஆம்! பெரிய ஆழ்வாரை தந்தையாகிக் கொண்டபடி - பெரிய கோயில், பெரிய கோபுரம், பெரிய உடையார், பெரிய ஜீயர், பெரிய உடல் பெரிய தளிகை, பெரிய திருவந்தாதி, பெரியாழ்வார் திருமொழி, பெரிய திருமடல், பெரியவாச்சான் பிள்ளை என எல்லாமே பெரியதானவைகளையே கொண்ட பெரிய பெருமாள் திருவரங்கனையே க்ருஷ்ண சமச்லேஷம் என்ற பக்தி தடாகத்தில் உலகோர்களை அத்தடாகமதில் வாடாமலர் களான கோபிகைகளாகக் கண்டவள் ஆண்டாள்!

பல ஆயிரமாண்டுகட்குப் பிறகு அவதரித்த ஸ்ரீராமாநுஜரை "அப்பனுக்கு சங்காழி கொடுத்து வேங்கடவனுக்கே ஆசார்யர்" ஆனபடியும், திருக்குறுங்குடி நம்பீசனுக்கு ஆசாரிய ஸ்தானத்தில் திருமந்த்ரோபதேசம் செய்தவர். வரவரமுநி அவதாரம் கொண்டு அரங்கனுக்கே ஈடு முப்பத்தாறாயிரத்தால் அரங்கனுக்கே ஆசார்ய ஸ்தானம் வகித்தவர், படிகொண்ட கீர்த்தி ராமாயணமென்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட கோயில் என்றபடியும் பரம் வ்யூஹம் விபவம் அர்ச்சை தவிர **ஸ்ரீமந்நாராயணனுக்கு குறிப்பாக ராமகிருஷ்ணவதாரத்தில் ஸ்ரீலக்ஷ்மண பலராமனாக இருந்தபடியைக் கொண்டு மரபுகளே**

வழுவாது நினைவுபடுத்தும் நூலாசிரியரின் பாங்கு ஸ்வாதீனமானதாகும்!

பக்தியில் தன்னிலை மறந்து அவர்களின் பேச்சுக்கள் சம்பந்தா சம்பந்தமில்லாது இருக்கும் என்பது "விக்ரேது காமாகில போத கந்யா: முராரி பாதார்ப்பித சித்தவ்ருத்தி: தத்யாதிகம் மோஹவசாதி அவோசத் கோவிந்த தாமோதர மாதவேதி" அதாவது பால், மோர், தயிர், நெய் விற்கவேண்டி வீதிக்கு வந்த ஆயர் குல கன்னிப் பெண்கள் ஸதாகிருஷ்ண பக்தியில் இருப்பதின் காரணமாக பாலோ பால்! தயிரோ தயிர்! என்று கூவுதலுக்கு மாறாக கோவிந்தா! தாமோதரா! - என்று கூவுவார்களாம்! அந்த **தன்னிலை மறந்த பக்தியை நெஞ்சில் கொண்டுள்ளார் ஆசிரியர்.** கடலில் சிப்பிகளை எடுப்பதே கடினம், நேராக முத்து எடுப்பது மிகக் கடினம். நூலாசிரியரின் திருப்பாவைக் கடலில் நாம் ஒரு சில சிப்பிகளைக் கொண்டு ஓரிரு முத்துக்களையே பெற முடியும்.

நாச்சியார் திருமொழி 143 பாக்கள் (1+4+3=8) அஷ்டாக்ஷரமான திருமந்த்ரத்தில் கோதை நாச்சியார் பிறந்தமை திருமந்த்ரத்திலே என்பது **ஆசிரியரின் கனிந்த உள்ளத்தில் உளதென அறிந்தோம்.** ஆண்டாள் தன்னை பட்டர்பிரான் கோதை என்றே பல முறை பாடியிருக்கிறாள். அதாவது இதனாலேயே இந்த நூற்றாண்டிலும் பெரும்பாலோர் தங்கள் தந்தையாரின் பெயரின் முதலெழுத்தை முன்வைத்தே தங்கள் பெயரிடுவார்கள் போலும்.

ஆக நோன்பு நோற்ற கன்னிப் பெண்ணிற்கு திருமணமாக வேண்டாவா? **ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை** ஜீவாத்மஸம்பந்த காம்யார்த்த பாவத்தை நீக்கி பரமாத்மாவில் ஒன்று சேர்வதான ஆத்மார்த்தானுபவத்தையே **நூலாசிரியர் அறம் பொருள் இன்பம் வீடு என்ற தர்மார்த்த காம மோக்ஷத்தை கறந்த நற் பாலின் தயிரைக் கடைந்த வெண்ணையாக நினைத்து, நினைந்து குடைந்து நீராடிய புத்துணர்ச்சியுடன் வெளிப் படுத்துகிறார்.** ஆம் கனிந்த ஆறாத காதல் கொண்ட ஆண்டாள் "வீசும் சிறகால் பறத்தீர்" என்றும் சேர்ப்பாரை பக்ஷிகளாக்கி ஆசார்யர்களையும் அவர்களைச் சேர்ந்த பாகவதர்களையும் நேரிடையாக நாராயண நம்பியை கைப்பிடிக்க உதவவேண்டுவதை சமத்கார சாடுக்தியுடன் **நூலாசிரியர் விவரிக்கும் அழகு தனிச் சோபையுடன் மிளிர்வதாகும்.**

மணப்பெண் தன்னை அலங்கரித்துக் கொண்டு காமதேவனை வரவேற்க தன்வீட்டின் வாசலில் தை பிறக்க வழியுண்டே என "தையொரு திங்களும் தரை விளக்கி தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் ஐயநுண்மணற் கொண்டு தெருவணிந்து அழகினுக் கலங்கரித்த அனங்கதேவா" என்று விளிக்கிறார். காமனை ஜ்யேஷ்டப்ராதா பிது: ஸம:என்று ஆண்டாள் அனுபவிப்பது உட்பொருள் என்று மேலே செல்கிறார். அதேபோல் திருப்பாவையில் தன் அண்ணலும் திருப்பாவை சீயர் என்றே திருநாமம் கொண்ட இராமாநுஜரை "செல்வாபல தேவா" "ஆழிமழைக்கு அண்ணா", கலந்து பேசிடும் பேச்சான உபயவேதாந்தங்கள் தமிழும் வடமொழியும் கலந்து உபய வேதாந்த மெனும் பட்டம் கொடுத்தவரே" என்று பாலினுள் உள்ள நெய்யைப்போல் விளித்தபடி என்பது **நூலாசிரியர் அகக்கண் கொண்டும், அங்கணி இரண்டான ஜீவாத்மா பரமாத்மாநுபவங்களான இரண்டு கண்களால் ஆண்டாள் கண்ட விதத்தை அனுபவிப்பது** ஸந்தோஷ ஸம்மோஹ கோலாஹலமான வைகரிகளாகும்.

ஆம்! கலிபிறந்த 48ம் ஆண்டில் ஜநித்த பெரியாழ்வார் பெற்று எடுத்த பெண்பிள்ளை "மானிடவற்சென்று பேச்சுப்படில் வாழகில்லேன். வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே" என அறுதியிட்டுச் சொல்வதையும் கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணனே" என்றபடி, கள்ளார் பொழில் தென்னரங்கனை அந்தரி (பார்வதி) நாத்தனார் கோலம் செய்ய நாரண நம்பியைக் கைப் பிடிப்பதற்கு முன், என்மாலிருஞ்சோலை நம்பீ எனவும் பாடியிருந்தாலும் நாமமாயிரமேத்த நிற்போன் நாராயணனே, அரங்கன் திருவுள்ளம் கொண்டிருப்பதை **நூலாசிரியர் கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்குவதுபோல் பாஞ்சசந்நியம் போல் முழங்குகிறார்.** பங்குனி நாள் பாரித்தபடி தீமைகள் செய்பவனானாலும் எங்கள் சிற்றில் சிதையேலே என அன்புக் கட்டளை இடுவது ஸ்ரீ ஆண்டாளின் பக்திப்பாதையில் ஓடும் சிற்றோடைகள்.

தன் பக்திப் பாதையில் உடன்பங்கு கொள்ள கட்டாயப் படுத்தவில்லை, ஆண்டாள். "கொள்ளுமாகில் நீ கூடிடுகூடலே" என்கிறார். அழகனார் குழகனார் மதமொழுகு வாரணம் என்று **மாதவனைப் பேரிட்டு தன்னையும் குழற்கோதை என்றநுபவிப்பது ஆசிரியரின் உள்ளத்தில் பக்தியின் ஊற்றுக் கண் என்பது அவர் நூலிலிருந்து புலனாகும்.**

தொண்டர் அடிப்பொடி போல் ஆண்டாள் அடிப்பொடி என்றே தன்னைக் கொண்டு மெய் நா மனத்தினராய் ஆண்டாளின் பக்திச் சுனையில் குடைந்து நீராடுகிறார் நூலாசிரியர்.

## வாரணமாயிரத்தின் சுவை

இந்நூலாசிரியரின் கருத்தோவியமும் எழுத்துப் பாங்கும் தமிழனின் உள்ளத்தைத் தென்றலின் அலைகள் போல் தொடும். தமிழ் வாரணம் என்பர். முநிவேழம் என்பர் பெரும்பூதூர் மாமுநிவனை. எப்படி 143 கூட்டுத்தொகை 8 திருமந்த்ரத்தை நினைவுபடுத்துகிறதோ அங்ஙனமேயே வாரணம் ஆயிரம் என்ற 8 எழுத்துக்களின் கோர்வையை எட்டு பதமான த்வயார்த்தத்தை நினைவிற் கொண்ட ஆண்டாளின் பக்தியை நாளும் வழுத்துகிறார். விரிவிற்கு அஞ்சி எட்டு பதங்களின் சாம்யத்தை நினைவிற் கொண்டாலும் எழுத்து வடிவத்தில் சமைக்கவில்லை ஆசிரியர் என்பது அவர் திறன் அற்றவர் என்பது ஆகாது, கனவாயினும் நனவாகவே நாச்சியார் சுடர் சுட்டியாக அநுபவிப்பது காணப்பெறும். "ஆணொப்பார் இவன் நேரில்லை காண்" என்பது ஆண்டாளைப்போல் பெண் ஒப்பார் இவள் நேரில்லை காண் எனத் தகும்.

## பாகவத சேஷத்வம்

பகவதாசார்யர்களை அணுக பாகவதோத்தமர்களே நெறிகாட்டுபவர். அங்கனமேயே சொல்லாழி வெண் சங்கே, நற்சங்கே, கோலப்பெருஞ்சங்கே, வலம்புரியே, செல்வப் பெருஞ்சங்கே, விண்ணில் மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள், மாமுத்தம் நிதி சொரியும் மாமுகில்காள், அளியத்த மேகங்காள், மின்னாகத் தெழுகின்ற மேகங்காள் என்று மேகங்களையும் தூதுகொண்டு ஒருவனைப் பிடிக்க ஊரை வளைப்பாரைப் போல் கார் காலத்தெழுகின்ற மேகமாய், தன்னையுட்கொண்டு மதயானை போலெழுந்த மேகமான தனதண்ணல் ஆசார்யன் ஸ்ரீராமாநுஜரையும், "தொடர் சங்கிலி சலார் பிலாரென்னத் தூங்குபொன் மணியொலிப்ப படுமும் மதப்புனல் சோர வாரணம்" என்ற தந்தை விரித்தபடி பெரியாழ்வாரையும் கொண்டு பக்தியான மாதவிப்பந்தல் மேல் கூவும் குயிலினங்களின் தாஸியாய் நாச்சியார் திருமொழி பணிந்தபடியாகும் நூலாசிரியரின் அனுபவ பூர்வமான கருத்துக்கள், இங்ஙனமே "கார்க்கோடற் பூக்காள் தாமுவக்கும் கையில், மற்றிருந் 'தீர்கட்கறியலாகா, சிந்துரச் செம்பொடிப் போல் திருமாவிருஞ்

சோலை சுந்தரத்தோளுடையானை வேண்டும் ஆண்டாளின் பாங்கு புறநின்றழகு பேசாதே என்ற விளியினூடே ஆண்டாள் கண்ட விருந்தாவனத்தை வேதத்தி நுட்பொருள் நிற்கப்பாடி நெஞ்சுள்ளே நிறுத்தும் **வேதமோத வல்லார்கள் அறிவதை நூலாசிரியர் ஆண்டு அனுபவித்து நுண்பொருள் அறிந்த நுண் மதியாளராக அறிமுகமாகிறார் !** ஆண்டாளின் அடிக்கீழ் என்றும் பிரியாதிருப்பவராக ஆழ்வாராண்டாள் யாவரும் பக்தி எனும் வயலிலே ஜாதி மத மொழி பேதங்களுக்கு நிலமில்லாததை குடத்திலிட்ட விளக்காக்கினார்.

ஸ்ரீராமாநுஜரைப்பற்றிய விவேகாநந்தரின் கருத்து:- as darring is love and dauntles is war and a memacing metcor and dreadful dragon introduced many revolutionery social and religious reformes on the same line of the great Alwars, Rushis is etc. Thus he introduced SOCIO RELIGIOUS (REFORMINC) ORGANISATIONS including Vedas upanishadas that were the base for HIS SREEBASHYA especially with his sareera sareeri Bhava SRI Swamy Vivekananda roared in America in Religious Conference and quoted upanishadas and introduced Sri Ramanuja as the one who preached spirituality from Pariah to Brahmin.

மறைந்த பாரதிதாஸனாரும், "முக்தி என்பது ஒரு சாராருக்கென இருக்கையிலே தமிழ்நாடு தன் தவப் பயனாய் நம்ராமாநுஜனை ஈன்றதன்றோ" என்றார்! இன்றும் மேனாட்டவர்களும் அவர் நினைவில் ISCON என்ற புதிய மதத்தினரை தோற்றுவித்தனர். சிரியா நாட்டின் ஒரு குடிமகன் (யூதர்) நமது நேரிடை சிஷ்யராக முத்திரை பெற்று இராம இராமநுஜாசாரியர் எனப் பெயர் தாங்கி ஆஸ்ட்ரேலியாவில் ஸ்ரீ எதிராஜ ஜீயர் மடம் ஸ்தாபித்து பல நூற்றூக்கும் மேற்பட்ட மேனாட்டவர்களை வைணவராக்கி யிருக்கிறார்.

நூலாசிரியர் பெரும் பூதூர் மா முநிவன் திருநாமத்தைப் பெற்ற இராமாநுஜனாக நமதுள்ளம் புகுந்து தித்தித்திக்கும் அமுதமாய் கடந்த ஏழாண்டுகளாக, மத நல்லிணக்க மாநாடுகளில் நம்மை வெளியுலகிற்கு "உன்னை என்னுள் வைத்தாய் என்னை உன்னில் வைத்தாய்" என்றபடி அறிமுகப் படுத்தி பல கிருத்தவ முகமதியத் தலைவர்களையும் நம்மீது அன்பு காட்டும்படிச் செய்தவர். நமது அணிந்துரை எந்தை எதிராஜன் ஸ்ரீ ராமாநுஜரின் கழலிணைகளிலிருந்தேயாயினும், நூலாசிரியர் நமது நக்ஷத்ரம் சுவாதி (பெரியாழ்வாருடையது) என்பதையும், பல ஆண்டு விடப்பட்ட, நூறு தடா வெண்ணை - அக்கார அடிசில் திருமாலிருந்சோலையில் வருட விழாவாக நம்மால் தொடங்கப்பட்டது என்பதையும் ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீ ராமாநுஜன் பழமையான மடத்திற்கு கடந்த 15 ஆண்டுகளாக

பல அல்லல்களிலும் முடிந்தவரை தொண்டாற்றி வருவதையும் ஸ்ரீ பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னாள் என்று ஸ்ரீ ராமாநுஜனை அண்ணாவாகக் கொண்டு அவரைப் பெரியாழ்வாரின் மைந்தனாகவும் திருவரங்கனுக்கு மைத்துனனாக்கி சங்காழி கொடுத்து, வேங்கடவனுக்கு ஸ்ரீ ராமாநுஜர் ஆசார்யனான பெருமையையும் அறிந்து, மகிழ்ந்தபடி இவரின் கோதையின் பக்திப் பாதை நூலிற்கு அணிந்துரையை நாம் நாடு புகழும் பரிசாக, நமது சென்னிக்கு மலர்ந்த பூவாகக் கொண்டு இவர் தொண்டுகள் இனத்துத்தியணி பெருகி இளைஞர் சமுதாயத்திற்கு இவர் அனைத்தும் நந்தா விளக்காக ஒளிவீச, விளங்கிட (கலங்கரை விளக்கு) வேண்டி என்றும் சூடிக் கொடுத்தாள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் எதிராஜனின் இன்னருளுக்கு என்றும் இலக்காகி சதிராக வாழ, இவ்வணிந்துரையை வைகுண்டவாஸி பத்மஸ்ரீ காஞ்சிதந்த கல்விக்கடல் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் நினைவாக அளித்து **இந்நூலாசிரியர் ஆண்டாள் அடிப்பொடி இரா. இராமாநுஜனை "கோதைத் தமிழ்ப்பெருமா முகில்" என விருதிட்டு வாழ்த்தி மகிழ்கிறோம்.**

மங்களாசாஸனம்

ஸ்ரீவரதஎதிராஜஜீயர்,
மடாதிபதி, SASB கோயில் ஸ்ரீபெரும்புதூர்,
26, சன்னதி தெரு,
பின் கோட்:602 102.

ஸ்ரீ மத்யை விஷ்ணு சித்தார்ய மநோ
நந்தன ஹேதவே
நந்தநந்தன ஸுந்தர்யை கோதாயை நித்யமங்களம்
ஸ்ரீமந் மஹாபூதபுரே ஸ்ரீ மத் கேசவ யஜ்வந:
காந்திமத்யாம் ப்ரஸூதாய எதிராஜாய மங்களம்
நித்யஸ்ரீ:

# ஆக்கியோன் உரை

நான் சிறுவனாக இருந்து வந்த காலத்திலிருந்தே, என் தாயார் ஒவ்வோர் ஆண்டு மார்கழி மாதத்திலும் செய்து வந்த ஆண்டாளின் திருப்பாவை விரதத்தில் எடுபிடி குற்றேவல் பணிகளைச் செய்வதில் பங்கு கொண்டு வந்திருக்கின்றேன்.



அப்பொழுதெல்லாம், என் அன்னையார் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடி வரும் பொழுது பக்திப் பரவசப்பட்டு மெய் மறந்து கண்ணீர் சிந்தி நின்ற காட்சியைக் கண்டு, எதையும் புரிந்து கொள்ளாமல் - நான் திகைத்தது உண்டு!

என் அன்னையார், கோவிந்தனுக்குக் குறைவில்லாமல் மார்கழி விரதத்தை முழுமை செய்த காலங்களில் - என் பெற்றோர் துன்பமோ, வறுமையோ பட்டதில்லை. எதிர் பாராத விதமாக இம்மார்கழி விரதம் அரை குறையாக நின்று போன காலங்களில் எல்லாம், என் பெற்றோர்களுடன் சேர்ந்து பிள்ளைகளாகிய நாங்களும் எவ்வளவோ துன்பங்களைச் சந்தித்திருக்கின்றோம். இவ்வளவும், இளமைக் காலத்திலிருந்தே என் நெஞ்சில் அனுபவ சத்திய உண்மைகளாக என்னுள் ஆழத்தில் மார்கழி விரதத்தைப் பற்றிய எண்ணங்களாகப் பதிந்து கிடந்தன.

ஓரளவிற்கு வயதுவந்த வாலிபனாக நான் மாறிய பிறகு, என் அன்னையார், 'நீ, இந்த ஆண்டில் ஒழுங்காக மார்கழி விரதம் இருந்து திருப்பாவையின் முப்பது பாசுரங்களையும் பாடி வந்தால் - இந்த ஆண்டில் நீ நினைக்கக் கூடிய ஒவ்வொன்றும், அடுத்த ஆண்டிற்குள் நிறைவேறும்!' என்று எனக்கு வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் துன்பமில்லாமல் நடத்தக்கூடிய வழியாக உபதேசித்தார்கள். இந்த ஒன்றுதான் - என்னைத் தன் அடி வயிற்றில் ஐயிரு மாதங்கள் சுமந்து ஈன்றெடுத்த என் கண்கண்ட தெய்வமாகிய அன்னையார் எனக்குத் தந்த ஒப்பற்ற ஒரு பெரும் ஞானச் சொத்து!

தாயின் ஞானோபதேசத்தை, இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் குரு உபதேசமாக நான் என் அன்னையின் காலடிகளை வணங்கி ஏற்று - ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடி மார்கழி நோன்பைத் தவறாமல் செய்து வருகின்றேன்!

மார்கழி நோன்பியற்ற எனக்கு வழிகாட்டி ஞானோபதேசம் செய்த குருவின் உபதேச மொழிக்கு உரியவர், என்னைப் பெற்றெடுத்த தாயாகிய ஒரு பெண்! இம் மார்கழி நோன்பை நடத்துவதற்கு - உதவியாக - அடிப்படையான பாசுரங்களை உலகம் தழைக்கத் திருப்பாவை வடிவில் எப்பொழுதோ பாடி வைத்திருந்த ஆண்டாளாகிய பரமாத்ம சங்கமம் பெற்ற பக்திப் பாவையும் ஒரு பெண்! என்னைப் பெற்ற அன்னையும், பெற்றெடுக்காத திருப்பாவை பாடிய தாயும் பெண்களாக விளங்கி - மார்கழி நோன்பிற்குக் கலங்கரை ஞான விளக்காகக் கைகாட்டி, ஆணாகப் பிறந்த என் ஜீவாத்மாவையும் நாயகியின் நிலைக்குக் கொண்டு வந்து, எம்பெருமானாகிய பரமபுருஷ நாயகனுடன் சங்கமமாக வழி வகுத்தவர்கள்! ஏதோ ஒரு சிறு அற்ப ஞானம் எனக்கு ஏற்பட்டிருப்பதாக நீங்கள் என்னைப் பற்றி நம்பினால் - இந்நிலைக்கு என்னைப் பெற்றதாய் - நற்றாய்! வளர்த்த செவிலித்தாயோ - ஆண்டாள்!

இவ்வளவு ஆண்டுகளிலும் நான் மார்கழி விரதம் இருந்து, திருப்பாவைப் பாசுரங்களைப் பாடி வந்த காலங்களில் - ஆண்டிற்கு ஆண்டு ஏதோ சில புதுப்புதுக் கருத்துக்களும், தத்துவார்த்தங்களும் என்னை அறியாமலேயே என் ஜீவாத்மாவிற்குள் ஆண்டாள் அம்மாளின் திருவருளால் தவழ்ந்து கொண்டிருந்ததை எனக்குள்ளாக நான் உணர ஆரம்பித்தேன். எனக்குள்ளாக ஜீவாத்ம பரமாத்ம சுகமாக ஆண்டாள் அம்மாள் அடிக்கடிப் படிப்படியாக உணர்த்திவந்த தத்துவார்த்தங்களை - எப்படியும் ஒரு நூல் வடிவத்தில் கொண்டுவர வேண்டும் என்று தொடர்ந்து முயற்சித்தேன். ஆனால் -

ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக இக்கருத்துக்களை எழுத ஆரம்பிக்கும் பொழுதெல்லாம் - ஏதோ அடிக்கடி தடை ஏற்பட்டு, என் கருத்துக்களை நூல் வடிவில் முழுமை செய்ய இயலாமல் போய்விட்டது.

நான், ஒவ்வோர் ஆண்டும் என் பிறந்த நாளன்று அங்கப் பிரதக்ஷணம் செய்ய திருப்பதி - திருமலை சென்று வந்த காலத்திலெல்லாம் - கீழே உள்ள படி அளக்கும் கோவிந்

தராஜரின் ஆலயத்திற்குள் திருச்சந்நிதி கொண்டுள்ள ஆண்டாள் அம்மாளின் முன்பு சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து- "திருப்பாவை பாடித் தந்த என் ஞானத்தாயே! ஒவ்வொரு பாசுரத்தையும் நீ எம்பெருமான் மீது பாடும்பொழுது, எதை எதை எல்லாம் - என்ன என்னவெல்லாம் நினைத்துப் பாடினாய் என்பதை எனக்குள்ளாக நீ உணர்த்தமாட்டாயா, அம்மா? பெரும் ஞானப் படைப்பாற்றலைப் பிறவியிலேயே பெற்றுள்ள என் தாயே! உன் ஞானத்தின் ஒரே ஓர் அணுவை, எழுதக் கூடிய சத்தியின் ஒரு சிறு அசைவை - உன் மகனாகிய எனக்குப் பிச்சையாகப் போடமாட்டாயா, அம்மா? நீ பாசுரங்கள் பாடிய காலத்தில் நினைத்ததை எல்லாம், உன் மகனாகிய எனக்குச் சொல்லித்தர மாட்டாயா, தாயே?" என்று அழுது, கண்ணீர் வடித்துவிட்டு வந்திருக்கின்றேன்!

இறுதியில் இந்த ஆண்டில், என் ஞானத்தாய் ஆண்டாள் - தன் மகனாகிய எனக்கு நான் கேட்ட வரத்தைத் தந்துவிட்டாள்! தங்குதடை இல்லாமல் புரட்டாசியிலேயே துவங்கி, இந்நூலை எழுத ஆரம்பித்துவிட்டேன்!

'கோதையின் பக்திப்பாதை' என்ற இந்த நூலை - நான் எழுதவில்லை! எழுதியதே, என் அம்மா ஆண்டாள்தான்! என் தாய் என்னை ஒரு கருவியாகக் கொண்டு எழுதிவிட்டாள் என்பது, என் கருத்து.

இப்படைப்பில் - நான், ஆண்டாளை ஒரு பெண் ஆழ்வாராக மட்டும் காணவில்லை. நான்கு யுகங்களிலும் மூன்றாவது யுகமாகிய துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதார காலத்தில் பரமாத்ம பிரேமையின் அம்சமாகக் கோபி ராதை விளங்கினால் - இக்கலியுகத்தின் ஈடுஇணையற்ற கோபியாகக் கோதை ஆண்டாளைக் காண்கின்றேன். பக்தியிலும், பிரேமையிலும் ராதைக்குக் கோதை சளைத்தவள் அல்ல! ஆக - ஆண்டாள், ஒரு கோபி!

வடமொழி இலக்கியங்களில் காணப்படும் ராதை - வேதங் களிலோ, புராண இதிகாசங்களிலோ குறிப்பிடப்படாத, பிற்கால பக்தி மார்க்கக் கவிஞர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் படைப்பு! ஆனால் - கோபி கோதை ஆண்டாள் நாச்சியாரோ, நம் தமிழக வில்லிபுத்தூர் மண்ணில் நடமாடிய ஓர் உண்மையான மனிதகுலப் பெண் ஆழ்வார்! அதே நேரத்தில் - கோபி கோதை ஆண்டாள் முதல் ஆழ்வாராதியர்களால் குறிப்பிடப்படும்

நப்பின்னை என்ற கோபி, ஒரு கற்பனைப் படைப்பு! ராதை தான் நப்பின்னை என்ற கருத்து, தவறானது!

இதற்கு மேல் இந்நூலை நானே விமர்சித்துக் கொண்டிருப்பது, சரியல்ல. படிப்பவர்களே இந்நூலைப் படித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளட்டும்!

இந்நூலின் எழுத்துப்படிகளை நன்கு ஆழ்ந்து படித்துப் பார்த்து, ஓர் அதி அற்புதமான அணிந்துரையை வழங்கியதோடு - அடியேனுக்குக் **'கோதைத் தமிழ்ப் பெருமா முகில்'** என்ற பட்டத்தையும் மங்களாசாசனமாக வழங்கி அருளிய ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள் அவர்களைப் பற்றி நான் குறிப்பிட்டே தீரவேண்டும்.

ஏனென்றால் - ஜீயர் சுவாமிகளின் இதய கமலத்திற்குள் எம்பெருமான் திருவேங்கடமுடையானும், கீழைத்திருப்பதியில் சந்நிதி கொண்ட ஆண்டாள் அம்மாளும் நுழைந்து, ஜீயர் சுவாமிகளின் வழியாக இத்தகைய பேரருள் மழையை அடியேன் மீது பொழிந்தருளியிருப்பதாக நான் ஆத்மார்த்தமாக நம்புகின்றேன். அப்படிப்பட்ட சில அற்புத சம்பவங்கள் இந்நூலை எழுதி முடிப்பதற்குள் நடந்துமுடிந்துவிட்டன!

இந்நூலை நான் எழுதிக் கொண்டிருந்தபொழுது - எம்பெருமான் திருவேங்கடமுடையானின் திருவருட் செல்வத்தைப் பெற்றுத் திரும்பவேண்டும் என்று திருப்பதிக்குச் சென்றிருந்தேன்.

திருமலையில் எம்பெருமானின் திவ்விய தரிசன சேவைபெறச் சென்று கொண்டிருந்த வரிசையில் நானும் சென்று கொண்டிருந்தேன். திருமலைநாதன் குடிகொண்டுள்ள திவ்விய தேசத்தின் வெளிக் கோபுர வாயிலைக் கடக்கும் நேரத்தில் - வழக்கம்போல் சிறிதுநேரம் பக்தர்களின் வரிசை அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டது. அப்பொழுது -

என்ன அதிசயம்? மழை, மிகக்கடுமையாகப் பொழிய ஆரம்பித்துவிட்டது. பக்தர்களின் வரிசையில் எனக்கு முன் நின்று கொண்டிருந்தவரும், தன் மீது மழைத் துளி விழாமல் உள்ளே நுழைந்துவிட்டார். எனக்குப் பின் வந்துகொண்டிருந்த அடியாரும், தன் மீது மழை விழாமல் பாதுகாப்பான இடமாக நின்று கொண்டிருந்தார். என் மீது மட்டுமே ஒரே மழை! நான் அணிந்திருந்த ஆடைகள் கூடத் தொப்பென்று முழுமையாக நனைந்துவிட்டன! எனக்குள்ளாக ஒரே வேதனை!

"நாராயணா! ஏழுமலைவாசா! மகாப் பிரபு! பல ஆண்டு களாக எழுதி முடிக்காமல் இருந்த குறை நிறைவேறும் நிலையில், ஆண்டாளைப் பற்றி எழுதி முழுமைபெறச் செய்யக் கூடிய காலத்தில் - உன் அருளாசிகளைப் பெற நாடி ஓடோடி வந்த அடியேனை, இப்படிப் பெருமழையில் நனையவைத்து விட்டாயே?" என்றுகூட என் நெஞ்சிற்குள் வேதனையடைந்த நிலையிலேயே - பிறகு வரிசையோடு வரிசையாகச் சென்று திருவேங்கடமுடையானின் நின்றகோல அற்புத சேவையைப் பெற்றேன்!

அன்று வியாழக்கிழமை! திருமலையில் எம்பெருமானுக்குப் பராசக்தி வைணவியாகப் பூலங்கி சேவை! ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் திருவேங்கடமுடையான், துர்கையின் கோலம் கொண்டு - நீலப்பட்டுப் புடைவை அணிந்து, கழுத்தில் திருமங்கலநாணுடன் உடலெல்லாம் குங்குமக் குழம்புடன், புளியோதரையாகிய பிரசாதத்தால் இடுப்பில் பாவாடையுடன், நெற்றியில் சிறிய திரு மண் நாமத்துடன், தன் அருள் விழிகளின் பார்வையை அடியார்கள் அனைவரும் கண்டு களிக்கும் வண்ணம் சேவை தந்தருள் பாலித்து வருகின்றான் - எம்பெருமான்! கண்விழிப் பார்வையை மற்ற நாட்களில் காண இயலாத நிலையில், பெரிய நாமங்களைஇட்டு எம்பெருமானின் கண்களை மறைத்துவிடுவார்கள். வியாழக்கிழமைகளில் மட்டுமே ஏழுமலையானின் திருவிழிப்பார்வையை 'நேத்திர தரிசனம்' ஆக அடியார்கள் கண்டு ஆனந்திக்கலாம்!

அடியேனும் - ஏழுமலையானும், பராசக்தியும் இணைந்த திருக்கோலத்தைக் கண்டுகளித்து, **'அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல் – எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்!'** என்ற கோபி ஆண்டாள் நாச்சியின் பாசுர அடிகளை மனதிற்குள் தியானித்துக் கொண்டே ஏழுமலையானை வழிபட்டபின்பு, சென்னைக்குத் திரும்பி வந்தேன்.

சென்னைக்கு மீண்ட பின்பு, இந்நூலை எழுதி முடித்து, என் ஞான குருவாக விளங்கி வரும் ஸ்ரீபெரும்பூதூர் ஜீயர் சுவாமிகள் அவர்களின் பார்வைக்கு எழுத்துப் பிரதிகளாகவே அனுப்பி வைத்திருந்தேன். ஜீயர் சுவாமிகளைப் பற்றி, நான் தெரிந்திருந்த சில செய்திகள்!

அவர்கள், Air Forceல் லெப்டினென்ட் பதவி வகித்து ஓய்வு பெற்ற பின்பு, தன் குடும்ப வாழ்வைத் துறந்து ஸ்ரீபெரும்பூதூர்

ஜீயர் மடத்தின் சிம்மாசனாதிபதியாக - குடும்ப வாழ்வையும், ஜாதியையும் துறந்த நிலையில் பூணூலையும் கழற்றி வைத்து விட்டு ஜீயர் பொறுப்பை ஏற்றவர்கள்! தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம், இந்தி, உருது - முதலிய பல மொழிகளிலும் மிகச் சரளமாகப் பேசக் கூடியவர்கள்! Air Force Serviceல் இருந்த காலத்திலும் இராணுவ சீருடையுடன், துப்பாக்கியையும் தாங்கி இருந்தவர்! தற்பொழுது ஜீயர் ஆனபின்பும் ஜீயர் மடாதிபதிகளுக்குரிய காவி சீருடையுடன், கையில் திரிதண்டம் ஏந்தி வாழ்ந்து வருபவர்! தற்பொழுது இவருடைய வயது, எண்பத்தேழு! கோபி ஆண்டாளின் தந்தை பெரியாழ்வார் பட்டர்பிரான் அவதரித்த சுவாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்! ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்த மனித நேயப் பண்புகளின் மொத்த வடிவமாகத் திகழ்ந்து வருகின்றவர்! எவருக்கும் எந்தக் காலத்திலும் அஞ்சாத வீரம், இவர் பேச்சிலும் செயலிலும் எதிரொலிக்கும்!

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் மகான், எனக்குக் குருநாதராக அமைந்தது, என் பூர்வ ஜென்ம பலாபலனே! சர்வ மத இணைக்கக் கூட்டங்களுக்கு இவரைப் பங்கு கொள்ள அடியேன் அழைத்த பொழுதெல்லாம் எழுந்தருளி - கிறித்துவ, முகமதிய மத, மார்க்கத் தலைவர்களுடனெல்லாம் நெஞ்சம் கலந்து பழகி பெரு மதிப்பைப் பெற்றவர்! மேடையில் இவர் பேச ஆரம்பித்துவிட்டால் - சர்வமத ஆன்மீகப் பெருமழையே இடித்து மின்னிப் பொழியும்! இவர் சொற்பொழிவைக் கேட்பவர்களை எல்லாம், மெய்சிலிர்த்துத் தம்மை இழக்கச் செய்யும் சக்தி பெற்ற ஞானி, இவர்!

ஆயினும், சில ஆண்டுகளுக்கு முன்பு இதயக் கோளாறு ஏற்பட்டு, அறுவை மருத்துவ சிகிச்சையையும் பெற்றவர்! மருத்துவ ஆலோசனைகளையும் கடந்து, எப்பொழுதும் சீரிய சிங்கமாக வேரிமயிர் பொங்க ஆன்மீக முழக்கமிட்டுக்கொண்டு - வீர இராணுவ நடையில் ஜீயராக உலவிவருகின்றவர், இவர்! பார்க்கப் போனால் - உடையார் எம் பெருமானார் இராமாநுஜரே, இத்தகைய வடிவத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றாரோ என்று கூட நினைக்கத்தோன்றும்!

மேலை நாட்டிலுள்ள சிரியாவைச் சேர்ந்த ஒரு யூத அன்பர், ஜீயர் சுவாமிகளின் ஆன்மீக வழியில் கவரப்பட்டு, சுவாமிகளின் சிஷ்யராகி பஞ்ச சமஸ்காரம் பெற்று - அவர், தன் பெயரை இராம இராமாநுஜாசாரியர் என்று மாற்றிக் கொண்டு ஆஸ்திரேலியாவில் ஸ்ரீ எதிராஜ ஜீயர் மடம் ஒன்றையும்

ஏற்படுத்தி, நூற்றுக் கணக்கான மேலை நாட்டவர்களை வைணவர்களாக மாற்றி மடத்தை வெற்றிகரமாக நடத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் எழுத்துப் பிரதிகளை, ஜீயர் சுவாமிகளுக்கு நான் அனுப்பி வைத்திருந்த நேரத்தில் - உடல் நலிவுற்று, மீண்டும் இதய நிலையைப் பரிசோதனை செய்யப்படவேண்டிய சூழ்நிலையில் படுத்த படுக்கையாகக் கிடந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலையிலும், அடியேன் அனுப்பிவைத்திருந்த இந்நூலின் எழுத்துப் பிரதிகளை மிகமிக சிரமப்பட்டுப் படித்துப் பார்த்திருக்கின்றார்கள்.

மூன்று நாட்களுக்குப் பின்னர், இரவு 11 மணிக்கு என் தொலைபேசி மணி ஒலித்தது. ஜீயர் சுவாமிகளே, தொலைபேசியில் அடியேனுடன் பேசினார்கள்:-

'இராமானுஜம்! மிகமிக அற்புதமான விஷயங்களை உள்ளடக்கி நீ இந்த நூலை உருவாக்கி இருக்கின்றாய். என் மனதில் தோன்றும் கருத்துக்களை அணிந்துரையாக எழுதவும் ஆரம்பித்துவிட்டேன். இந்த அரிய நூலை உருவாக்கியதற்காக உனக்கு ஒரு பட்டம் தந்து மங்களாசாசனம் செய்ய விருப்பப்படுகின்றேன். நீ, எந்தப் பட்டத்தை விரும்புகின்றாய் என்று சொல்!'

அடியேன், உடனே மெய்சிலிர்த்துப் போய்ப் பதில் கூறினேன்!:-

" சுவாமிகளின் திருவடிகளுக்கு அடியேனின் திசை நோக்கிய கோடானுகோடி சாஷ்டாங்க நமஸ்காரங்கள்! நீங்கள் விருப்பப்பட்டால் - 'ஆண்டாள் அடிப்பொடி' என்ற பட்டத்தை மங்களாசாசனம் செய்து அனுப்பி அருளுங்கள்!"

ஜீயர் சுவாமிகள் சற்று மௌனமாகத் தனக்குள் சிந்தித்துப் பிறகு திருவாய் மலர்ந்து பேசினார்கள்:-

"நான், பெரியாழ்வார் அவதரித்த சுவாதியில் பிறந்தவன்! எனக்குள்ளாக வரும் உத்தரவை நானே சிந்தித்து முடிவு செய்து, நாளை உனக்குத் தெரியப்படுத்துவேன். 'ஆண்டாள் அடிப்பொடி' என்ற பட்டம் என் மனதில் உனக்கு உகந்ததாகப் படவில்லை!"

சுவாமிகள், பேசும்பொழுது மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கத் திணறித் திணறிப் பேசுவது எனக்குப் புரிந்தது. இதைப் பற்றி

நான் விசாரித்தபொழுது, தான் உடல் நலிவுற்று படுக்கையில் இருந்து வரும் நிலையைப் பற்றியும் - இன்னும் இரண்டு நாட்களுக்குள் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் நிலையில் இருப்பதைப் பற்றியும் கூறினார்கள்.

நான், என் குருநாதருக்குப் பெரும் தொந்தரவு தந்து விட்டதாக எனக்குள்ளாக உணர்ந்து மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டேன்.

'சுவாமி! தாங்கள் மருத்துவ மனைக்குச்சென்று திரும்பிய பிறகுகூட, இந்நூலைப் படித்து அணிந்துரையைத் தந்திருக்கலாமே? குருநாதாராகிய தங்கள் ஆசிகள், அடியேனுக்கு என்றும் இருந்தாலே, போதுமே! தாங்கள் இருந்துவரும் நிலையில் - அடியேன் தங்கள் சக்திக்கும் மீறிய சிரமத்தைத் தந்துவிட்டேன்!' என்றேன், நான்!

ஜீயர்சுவாமீகளோ, 'இராமாநுஜம்! என் சரீர நிலை எதுவும் சொல்வதற்கு இயலாத நிலையில் உள்ளது. அதனால்தான் இந்த அணிந்துரையை எழுதி, உனக்குகந்த ஒரு பட்டத்தை மங்களாசாசனம் செய்து அனுப்பிவிட்டு மருத்துவமனைக்குச் செல்லலாம் என்று தீர்மானித்துவிட்டேன்!' என்று மூச்சுத் திணறித்திணறிப் பேசினார்கள்.

'சுவாமி! தங்கள் ஆசிர்வாதங்கள் என்றும் அடியேனுக்கு இருந்தாலே போதும்! தாங்கள் நூறாண்டுகள் வாழவேண்டும் என்பதுதான், அடியேனின் பிரார்த்தனை!' என்றேன், நான்.

'என்றென்றும் என் ஆசிகள் உனக்கு உண்டு. பரமபதம் சென்றாலும் அங்கிருந்தும் உன்னை ஆசீர்வதித்துக் கொண்டு தான் இருப்பேன்!' என்ற பதில், ஜீயர் சுவாமிகளிடமிருந்து அடியேனுக்குக் கிடைத்தது.

சுவாமிகளின் பதிலைக் கேட்டதும், என் விழிகள் குளமாயின. இதற்கு மேலும் நான்பேசிக் கொண்டிருந்தால், சுவாமிகள் ஆன்மீக ஞான உணர்ச்சிவயப்பட்டுத் தன்னை மறந்து பேசிக் கொண்டுதான் இருப்பார்கள் என்று தெரிந்து - தொலை பேசியில் என் பேச்சைத் துண்டித்துக் கொண்டேன்.

மறுநாள் இரவு 10.00 மணி அளவில் மீண்டும் என் தொலைபேசி ஒலித்தது. ஜீயர் சுவாமிகளே பேசினார்கள்:-

'இராமாநுஜம்! என்னை எழுதக்கூடாது, படிக்கக் கூடாது, நன்கு ஓய்வு எடுக்கவேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை

கூறியதோடு, என்னைக் கண்காணித்து வருவதற்குக் காவலும் போட்டிருக்கின்றார்கள். நான், எல்லாவற்றையும் மீறி எவருக்கும் தெரியாமல் நானே என் கையெழுத்தில் அணிந்துரையையும் எழுதி முடித்து - ஓர் அன்பர் வழி உனக்கு அனுப்பி வைத்து விட்டேன். உனக்கு **'கோதைத் தமிழ்ப்பெரு மா முகில்'** என்ற பட்டம் தந்து மங்களாசாசனமும் செய்துள்ளேன்!'

சுவாமிகள் திருவாய் மலர்ந்து கூறிய சொற்களைக் கேட்டதும், நான் அழுதுவிட்டேன். என் கண்களிலிருந்து வெளிப்பட்ட கண்ணீர், என் சுயநலம் ஆட்சி பெற்ற ஆனந்தக் கண்ணீரா? அல்லது என் குருநாதருக்கு இவ்வளவு சிரமங்களைத் தந்து விட்டதை எண்ணிக் கரைந்து வடித்த துயரக் கண்ணீரா? இரண்டுமே - நான் வடித்த கண்ணீரில் சங்கமம் ஆகி இருந்தன!

ஜீயர் சுவாமிகளின் அணிந்துரையும், மங்களாசாசனமும் மிக விரைவு அஞ்சலில் எனக்குக் கிட்டியது. சுவாமிகளும் மருத்துவ மனைக்குச் சென்று எம்பெருமானின் கிருபாகடாக்ஷத்தால் தம் இதயப் பரிசோதனையை முடித்துக் கொண்டு மடத்திற்கும் திரும்பி வந்து விட்டார்கள்.

ஜீயர் சுவாமிகள் அடியேனுக்கு மங்களாசனம் செய்திருந்த **'கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்'** என்ற பட்டத்தைப் பற்றிய சிந்தனைகளில் மிக ஆழமாக அடியேன் ஈடுபட்டபொழுது - அடியேன் புரிந்து கொள்ள இயலாத நிலையிலேயே எனக்குள்ளும், வெளியிலும் - விண்ணிலும், மண்ணிலும் எம்பெருமான் மாயவன் அந்தர்யாமித்துவ நிலையில் நிகழ்த்தி இருந்த பல அற்புதங்கள் - என் ஜீவாத்ம உள்ளுணர்வில் விளங்க ஆரம்பித்தது.

இந்நூலை நான் எழுதத் துவங்கிய காலம், கார்காலமாகிய புரட்டாசி! இப்படைப்பை முடிப்பதற்கு முன்பே, திருவேங்கட முடையானின் அருளாசிகளைப் பெறுவதற்காக நான் திருப்பதிக்கு ஏழுமலையானை சேவிப்பதற்காகச் சென்று, திருமலையில் தரிசன வரிசையில் நான் வந்து கொண்டிருந்த பொழுது - திருவேங்கடமுடையானின் வெளிக் கோபுர வாயிலின் எல்லையில் என்மீது பொழிந்த மழைத் துளிகள் அவ்வளவுமே, திருவேங்கடத்தின் பெருமாமுகில்களாகிய **கார்கால மேகங்களே !** அதுவும் -

கோபி ஆண்டாள் நாச்சியார், தன்னை மணந்து கொள்ள வேண்டுமென்று தான் திருவாய் மலர்ந்து தன் பரமாத்ம சங்கமப்

பாச உணர்வை வெளிப்படுத்தித் தன் எட்டாவது திருமொழியுள் குளிர் அருவி வேங்கடத்துக் கோவிந்தனின் குணம்பாடி தன் ஆற்றாமையைப் புலப்படுத்தி மேகங்களைத் தூது விட்டதாகப் பாடியுள்ள பிரபந்தப் பாசுரங்களில் உள்ள மேகங்களே - அவை!

ஆம்! ஆண்டாளின் திருவாக்கின் வண்ணம் - தெண்ணீர் பாய் வேங்கடத்தில் விண் நீல மேலாப்பு விரித்தாற் போன்ற மேகங்கள், மாமுத்த நிதி சொரியும் முகில்கள், அளியத்த மேகங்கள், மின் ஆகத்து எழுகின்ற மேகங்கள், வான் கொண்டு கிளர்ந்து எழுந்த தண் முகில்கள், சங்கமா கடல் கடைந்தான் தண் முகில்கள், **கார் காலத்து எழுகின்ற கார் முகில்கள்,** மதயானை போல் எழுந்த மாமுகில்கள் தாம் - கோபி ஆண்டாள் நாச்சியின் பரிந்துரையின் வண்ணம் திருவேங்கடமுடையானின் ஏவலாணையை ஏற்று அடியேன் மீது திருவருள் மழையாகப் பெருநீர் மழை பொழிந்து கொட்டியிருக்கிறது!

திருவேங்கடத்துக் கார்கால மாமுகில்கள் அடியேன் மீது மழையாகப் பொழிந்த அன்றே - தன் திருக்கோவிலின் வெளி வாயிலில் அடியேனை நிற்க வைத்து ஏழு மலையானும், கோபி ஆண்டாள் நாச்சியும் கூடிநின்று - அடியேன் எழுதிக் கொண்டிருந்த இந்நூலைப் பாராட்டி, அடியேனுக்குக் 'கோதைத் தமிழ்ப் பெரு மாமுகில்' என்ற பட்டம் கட்டி மகுடாபிஷேகம் செய்து முடித்திருக்கின்றார்கள்!

எம்பெருமான் ஏழு மலையானின் இத்தகைய மாபெரும் கிருபாகடாக்ஷப் பெருமழை என் மீது பொழிந்தருள் செய்ததை- மிகமிகச் சிறிய அற்பப்பதரும் அறிவிலியுமாகிய நான் உணர்ந்து கொள்ளாமல் - மழை விழுந்ததற்காக வீணாக வருந்திய என் அறியாமைக்காகப் பெரிதும் வருந்துகின்றேன்.

இங்ஙனம், எம்பெருமான் வழங்கியருளிய 'கோதைத் தமிழ்ப் பெருமாமுகில்' என்ற மங்களாசாசன அருளாகி - ஜீயர் சுவாமிகளின் இதய கமலத்தில் ஊற்றெடுத்து அடியேனுக்கு வழங்கப்பட்டிருப்பதாக அடியேன் நம்புகின்றேன்.

அது மட்டுமல்ல - சுவாதியில் பிறந்த பெரியாழ்வார் பட்டர்பிரான், தன் மகள் கோதையின் பிரபந்தங்களைப் பற்றி எழுதியுள்ள கருத்துக்களை ஏற்று மகிழ்ந்து, தான்பிறந்த சுவாதியிலேயே பிறந்து - தானுகந்த திருமேனி நிலை பெற்றுள்ள உடையவரின் திரு அவதாரத்தலத்தில், ஜீயர் மடத்தின் சிம்மாசனாதிபதியாக அருளாட்சி நடத்தி வரும். ஸ்ரீலஸ்ரீ வாத

எதிராஜ ஜீயர் சுவாமிகளின் வழியாகப் பாராட்டி அணிந்துரை வழங்கியுள்ளதாகவும் நம்புகிறேன்.

கல்லால் கட்டப்படும் திருக்கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் நடந்தேறுவதைப் போல - **சொல்லால் கட்டிய இந்நூலிற்கு ஜீயர் சுவாமிகள் மங்களாசாசன கும்பாபிஷேகத்தை நடத்திவிட்டார் !**இவ்வைபவத்தில் மானசீகமாக ஏழுமலையானும், கோபி ஆண்டாளும் , பெரியாழ்வாரும் பங்கு கொண்டுள்ளார்கள்! - இது, ஆக்கியோனாகிய என் கணிப்பு!

ஜீயர் சுவாமிகளின் பேரருளிற்கு, அடியேன் இம்மையிலன்றி - மறுமையிலும் நன்றிக் கடப்பாடுடையேன். அடியேன் நடந்து 'வரும் என் வாழ்க்கைப் பாதையில் எனக்கு மனப்பூர்வமாக அருளாசிகளை வழங்கிய தவநெறியின் பழுத்த ஞானச் செல்வர்கள் மூவர்! ஒருவர் - காஞ்சி காமகோடி மடத்தின் பீடாதிபதியாக அருளாட்சி நடத்தி ஒரு நூற்றாண்டின் எல்லை வரையிலும், ஜாதி மத இன பேதமற்ற நிலையில் தன்னைத் தேடி வந்த அனைவரையுமே வாழ வைத்துக் கொண்டிருந்த காஞ்சித் தவமுனிவராகிய மகாப் பெரியவர் பரமாச்சாரிய சுவாமிகள்! மற்றொருவர், திருவரங்கத்தில் மிகப் பெரிய இராஜ கோபுரத்தைக் கட்டிக் காட்டி - ஞான பீடங்களின் வரலாற்றில் தனி சகாப்தம் படைத்த ஸ்ரீலஸ்ரீ அகோபில மட பீடாதிபதி, அழகிய சிங்க ஜீயர் சுவாமிகள்! மூன்றாவர், தற்பொழுது இந்நூலிற்கு அணிந்துரையையும், மங்களாசாசனமும் வழங்கி யருளியுள்ள ஸ்ரீபெரும்பூதூர் வரத எதிராஜ சுவாமிகள்! இம்மூவருள் - முன் இருவரும் இறைவனின் திருவடிகளில் சங்கமமாகி விட்டார்கள். இந்நூல் வெளிவரும் இந்நேரத்தில் அவ் இருவரையும், அவர்கள் அந்தக் காலத்தில் வழங்கியருளிய அருளாசிகளை மறவாமல் - நன்றி உணர்வுடன் அவர்களைத் தியானித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, அதி அற்புதமான அணிந்துரைகளை வழங்கி என் ஆன்மீகப் பணிகளைப் பாராட்டியுள்ள நீதியரசர் , டாக்டர். P.R. கோகுல கிருஷ்ணன் அவர்களும், முன்னாள் புதுவை மையப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பேராசிரியர், டாக்டர். K. வேங்கட சுப்பிரமணியன் அவர்களும் தங்கள் அணிந்துரைகளில் அடியேனை **'வைணவ மாமுனி'** என்று பாராட்டி ஒரு தவமுனிவரின் அந்தஸ்தை இந்நூலின் வழியாக எனக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

அடியேன் சென்று கொண்டிருக்கும் ஆன்மீக மனித நேயப் பாதையை எவ்வளவோ ஆண்டுகளாக மிக உன்னிப்பாகக்

கவனித்து வருவதோடு - அவ்வப்பொழுது என் பணிகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் நீதியரசர் ஐயா அவர்களுக்கும், எந்நாளும் துணை வேந்தராகத் தேனீயை விடச் சுறுசுறுப்பாகக் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் துணை வேந்தர் ஐயா அவர்களுக்கும் இதன் வழி என் பணிவார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பேரறிஞர்களும், பெருந்தகையாளர்களுமாகிய இருவரும் தங்கள் அணிந்துரைகளில் அடியேனைச் சுட்டி இருந்த **'வைணவ மா முனி'** என்ற சொல்லை சற்று சிந்தித்துப் பார்த்தேன். இல்லற நெறியில் ஈடுபட்டிருந்த நான் எப்படி தவமுனிவரின் அந்தஸ்தை அடைய முடியும்? இச்சிந்தனையின் விளைவாக என் மனக்கண்களில் விசுவாமித்திரரும், வசிட்டரும் தோன்றி - என் ஐயப்பாட்டை நீக்கினார்கள்.

முற்றும் துறந்து, பொறிகள் அடங்கிப் புலன்களும் ஒடுங்கிய முழுமையான துறவறம், சைவ நெறிக்கு உரியது. 'அனுபவித்துத் துற!' என்ற கோட்பாட்டுடன் இல்லறத்தைக் கடமை தவறாமல் நடத்திக் கொண்டே துறவிகளுக்குரிய வழிபாடுகளோடு தவநெறியில் வாழ்ந்து வரும் துறவறம், வைணவத்திற்கு உரியது.

வசிஷ்டர் போன்ற மகரிஷிகளெல்லாம், தங்கள் ரிஷி பத்தினியர்களோடு வாழ்ந்து கொண்டே தவநெறியை மேற்கொண்டிருந்தவர்கள்! ஆனால் - விசுவாமித்திரர் போன்ற மகரிஷிகளோ - முழுமையான துறவற நெறியில் நிற்பதன் வழித் தங்களைத் தாங்களே அடக்கி ஆண்டவர்கள்!

பதிவிரதா சிரோமணிகளாகிய பத்தினித்திலகங்களை மனைவியர்களாகக் கொண்டு வாழ்ந்த மகரிஷிகள், ஆண் மகனிற்குரிய கற்பு நெறியில் தவறுகள் செய்ததில்லை! ஆனால் முழுத்துறவற நெறியில் வாழ்ந்த விசுவாமித்திரர் போன்றவர்களே, மேனகை போன்றவர்களின் காம வலைகளில் தடம் புரண்டு விழுந்து - பெரும் துன்பங்களைச் சந்தித் திருக்கின்றார்கள்.

ஆம்! மேனகை, தன்னைக் கூடி சகுந்தலையைக் குழந்தையாகப் பெற்றெடுத்த பொழுது - தன் தனிப்பட்ட தவநெறிக்கு முதன்மை தந்து - தன்னோடு மனைவியின் ஸ்தானத்தில் கூடிக் களித்த மேனகையாகிய தாயையும், பேரெழில் செல்வத் திருமகளாகப் பிறந்த சேய் சகுந்தலையையும் கொஞ்சமும் மனித நேயமே இல்லாமல் புறக்கணித்திருக்கின்றார்- விசுவாமித்திரர்!

அதே நேரத்தில் - அறிந்தோ, அறியாமலோ தேவேந்திரனுடன் கூடிக் களித்த அகலிகைக்குக் கணவன் தரும் கடும் தண்டனையாகக் கல்லாகுமாறு சாபமிட்ட கௌதமர் - மனித நேயப் பண்புடன் தன் மனைவி அகலிகைக்குச் சாப விமோசனம் தந்ததோடு, தன் மனைவியின் சாப விமோசன காலம் வரும் வரையில் காத்திருந்து - பிறகு தன் மனைவியாக அவளை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்!

முழுத் துறவியாக வாழ்ந்த வேத வியாசரோ - திருதாசி என்ற அப்சரஸின் காம சுகத்தில் ஈடுபட்டுக் களித்து, கிளி வடிவம் கொண்ட ஞானபிரமமாகிய சுக மகரிஷியைப் பெற்றெடுத்தவர்! தன் தாயின் ஆணைகளை நிறைவேற்ற வேண்டி - காசி மன்னனின் விதவைப் பெண்கள் இருவரையும், காசி மன்னனின் ஆசை நாயகியையும் கூடிக் களித்து - திருதராட்டிரன், பாண்டு, விதுரன் ஆகிய மக்களைப் பெற்றவர்!

பெண்டிரைக் கூடிப் பிள்ளைகளைப் பெறக் காரண கர்த்தாவாக இருந்ததோடு வியாசரின் பொறுப்பு புராணக் கதைகளில் முடிவுற்று விடுகின்றதேயன்றி - மனைவி நிலையில் இருந்தவர்களையும், மக்களையும் இல்லற நெறியில் நின்று ஒரு தந்தையின் ஸ்தானத்தில் வழி நடத்தியதாக வரலாறே இல்லை!

ஆனால் - வைணவத் திருக்கோவில்களில் கூடத்தன் மனைவி குமுத வல்லி சமேதராக சேவை தரும் திருமங்கை ஆழ்வாரைப் போல - வசிஷ்டரின் தர்ம பத்தினியாக வாழ்ந்த பதி விரதாசிரோமணி அருந்ததி, இன்றளவும் வானத்தில் தோன்றும் சப்தரிஷி மண்டல விண்மீன்களின் கூட்டத்தில் வசிஷ்டரின் அருகிலேயே ஒரு விண்மீனாகக் காட்சி தந்து - மணக் கோலம் கொள்ளும் மங்கல நாயகியர்களுக்கெல்லாம், தங்கள் நாயகர்கள் தன்னைக் காட்டி நினைவு படுத்தும் கற்பின் செல்வியாகக் காட்சி தருகின்றாள்! துறவியின் கோலத்தில் காட்சி தரும் வள்ளுவப் பெருந்தகையும், வாசுகி என்ற மனைவியுடன் வாழ்க்கையை நடத்திக் கொண்டே 'உலகப் பொதுமறை' யாகிய திருக்குறளை உருவாக்கி இருக்கிறார்!

இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இல்லறத்தையே முற்றும் துறந்த சைவ நெறியில் வாழ்ந்த தவமுனிவர்களும் இருந்திருக்கின்றார்கள்! இல்லறத்தோடு கூடி வாழும் வைணவ அமைப்பில் வாழ்ந்த தவமுனிவர்களும் இருந்திருக்கின்றார்கள்!

தற்பொழுதுகூட - சைவ மடங்களின் பீடாதிபதிகள் முழுமை பெற்ற துறவிகளாகவும்- வைணவ மடங்களின் பீடாதிபதிகள் பெரும்பாலும் இல்லற நெறியில் வாழ்ந்து, பின் துறவிகளாக வந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள்!

ஆழமாக நன்கு ஆராய்ந்தால் - புராணங்களில் காணப்படும் வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் ஏற்பட்டிருந்த பகைமைக்கும், போராட்டங்களுக்கும் கூட அடிப்படையான காரணமாக - சைவ வைணவப் போராட்டமாக இருந்திருக் குமோ என்றுகூட நினைக்கின்றேன்.

எப்படி எது இருந்தாலும் - இல்லற நெறியில் ஈடுபட்ட அடியேனுக்கு **'வைணவ மாமுனி'** என்ற தவ நெறியின் அந்தஸ்தை வழங்கிய அறிவார்ந்த பெருமக்கள் இருவரும் அனைத்தும் தெரிந்தே என்னை ஊக்குவித்திருப்பதாகக் கருதி, மீண்டும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து - இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியுள்ள என் உடன்பிறவாத சகோதரி - **திருமதி. லலிதா அண்ணாமலை** அவர்களுக்கு நன்றி செலுத்தும் நிலையில், என் இனிய நண்பர் பெருந்தகை பேராசிரியர். டாக்டர். M.S. அண்ணாமலை அவர்களைப் பற்றிய சில வரிகளை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

நான், என் இருபத்து ஓராவது வயதில் படைப்பிலக்கியப் பணியில் சென்னையில் ஈடுபட்டவன்! அப்பொழுது என் வளர்ச்சியின் வழிகாட்டித் தந்தையாரின் நிலையில் மனித நேயப் பண்புகளே வடிவெடுத்த வில்லை வாணன் எனும் பச்சையப்பனார் என்ற பெரியவர் சென்னையில் இருந்தார். அவர் மைத்துனராக விளங்கிய பேரறிஞர் சுந்தரமூர்த்தி ஐயா அவர்களும் எனக்கு அவ்வப்பொழுது தக்க அறிவுரைகளை வழங்கி வருவார்கள். பெரியவர் சுந்தரமூர்த்தி ஐயா அவர்களின் அருமந்த குமாரர் பள்ளிப் படிப்பை முடித்து, மாநிலக் கல்லூரியில் கணிதவியல் பட்டப்படிப்பைப் படித்துக் கொண்டிருந்தார்; எனக்கும் ஏற்ற தோழராக அறிவுப் பசியுடன் என் எழுத்திலக்கியப் பணியை ஊக்குவித்துக் கொண்டிருப்பார். எனக்கும், அப்பொழுது மணமாகாத காலம்! நாங்கள் இருவரும் சுதந்திரச் சிட்டுக்களாகப் பறந்து திரிந்த காலம்! பண்பு நலமும், பாசமும் கனிந்த அந்த இளைஞர் நான் அப்பொழுது எழுதி வெளிவந்த பாழிப்புதையல், வடுவாளன், மனத்திரை போன்ற படைப்புக்களைப் படித்துப்

படித்து இன்புற்றதோடு - அவ்வப்பொழுது என் நூல் வெளி வருவதற்குரிய அச்சுப் படிகளையும் படித்துப் பார்த்து என்னைப் பெரிதும் ஊக்குவித்து வருவார். பல மணிகள் நாங்கள் நட்புறவுடன் பல செய்திகளைப் பேசிக் களித்து அளவளாவி மகிழ்ந்து பொழுது போக்குவோம்!

காலச் சக்கரத்தின் சுழற்சியில் நான் சென்னையை விட்டுச் சென்றபிறகு, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் நான், அந்த இளைஞருக்குக் காணமற் போய்விட்டேன்! அவரும், எனக்குக் காணாமற் போய்விட்டார்! காலமும் ஓடிக் கொண்டிருந்தது. அக்கால ஓட்டத்தில் 1998ம் ஆண்டில் தற்செயலாக, சைதை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றிருந்தபொழுது - நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு காணாமற் போயிருந்த அதே இளைஞர் - கல்லூரி முதல்வரின் இருக்கையில் - பேராசிரியர் - டாக்டர். M.S. அண்ணாமலை, M.Sc., (இரண்டு முதுகலைப் பட்டங்கள்) M. Phil, B.Ed., Phd என்ற தகுதிகளுடன் அமர்ந்திருந்தார்! கால முத்திரைகள் வயதிற்கேற்ற நிலையில் உடலில் குத்தப்பட்டு உருவ மாற்றம் ஏற்பட்டிருந்ததால், எனக்கு என் பழைய இனிய நண்பன் அண்ணாமலையை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், என் பழைய பாசம் கனிந்த இனிய பண்பார்ந்த பழைய அண்ணாமலை, என்னை அடையாளம் கண்டு கொண்டதோடு - பற்பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அதே பழைய இளைஞர் அண்ணாமலையாகப் பழைய பாச உணர்ச்சிகளை என் மீது அன்பு மழையாகப் பொழிந்து தள்ளிவிட்டார்!

**'பிரிந்தவர் கூடினால், பேசவும் வேண்டுமோ ?' –**

**'நட்டாரைக் கண்டு உவந்த நாளினும்'** என்று நான் படித்த இலக்கியச் சொற்களெல்லாம் அண்ணாமலையின் வழி உயிர் பெற்று, என் முன்பு உண்மையான நட்பின் சிறப்பை ஒரு நடனமாகவே ஆடிக் காட்டிவிட்டன!

இந்த நாற்பது ஆண்டுகளில் நான் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருப்பதைப்போல் - என் அண்ணாமலையும் வளர்ச்சி பெற்று **மனித நேய இமயமாக வளர்ந்து விட்டாரே? அது மட்டுமா ? 'இந்திய தேசிய ராணுவம் தமிழர் பங்கு' `(The Role of Tamils in Indian National Army')** என்ற ஓர் அதி அற்புதமான - இதுவரை எந்தத் தமிழ் மகனுமே உருவாக்கி இராத ஓர் ஒப்பற்ற படைப்பையும் வெளியிட்டு, ஈடு இணையற்ற படைப்பாளராக விசுவரூப வளர்ச்சி பெற்றிருக்கிறார்! வணிகவியல் துறையின் தலைவராகப் பணி ஆற்றினாலும் -வரலாற்றுத் துறையிலும்,

தமிழ் இலக்கிய ஆன்மீகத் துறைகளிலும் அவர் சளைத்தவர் அல்லர்! என்பதையும் நிரூபித்திருப்பதோடு மிகச் சிறந்த பேராசானாகவும் மாணவர்களை வழி நடத்திக் கொண்டு **ஸ்ரீ நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுச் செல்லும் சீரிய சிங்கமாக** நடமாடிக் கொண்டிருக்கின்றார்!

இத்தகைய என் நண்பர் பெருந்தகை, பேராசிரியர் - டாக்டர், M.S. அண்ணாமலை அவர்களின் இல்லற வாழ்வின் குடும்ப விளக்காக, வாழ்க்கைத் துணைவியாக அமைந்த என் உடன் பிறவா சகோதரி திருமதி. லலிதா அண்ணாமலை மிகச் சிறந்த நல்லாசிரியை! என் முந்தைய படைப்புக்களைப் படித்துச் சுவைத்து, படைப்புக்களில் காணப்படும் சில செய்திகளைப் பற்றித் தன் கணவரிடம் விமர்சித்து வருவதோடு - தொலைபேசி வழியாகவும் என் ஆன்மீகப் படைப்புக்களைப் பாராட்டி வரும் நல்லியல்புகள் கொண்டவர்.

சகோதரி - திருமதி லலிதா அண்ணாமலை, இந்நூலிற்கு அளித்துள்ள அணிந்துரை மிக அற்புதமாக அமைந்திருப்பது - கோபி ஆண்டாள், தான் பாடிய ஆறாவது நாச்சியார் திருமொழியுள், தான் கண்ட திருமணக் கனவைக் கூறும் பொழுது, எம்பெருமானின் சகோதரியாகிய பராசக்தியே நாத்தனார் ஸ்தானத்தில் இருந்து தனக்கு மணக் கோலம் செய்து மங்கல திருமணப் புடவையைக் கட்டிவிட்டு அலங்கரித்ததாக 'மந்திரக் கோடி உடுத்தி மணமாலை அந்தரி சூட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்'. என்று பாடிய பாசுரம் என் நினைவிற்கு வருகின்றது. ஆண்டாளைப் பற்றிய இந்நூலாகிய பாவைக்கு, எம்பெருமான் தங்கையாகிய பராசக்தியின் முழு அம்சமும் கொண்ட திருநாமத்தை லலிதா என்று கொண்டுள்ள திருமதி லலிதா அண்ணாமலை, அணிந்துரை என்ற பெயரால் மங்கல மணப்பட்டாடை கட்டி அலங்கரித்துள்ளார் என்றே நினைக்கின்றேன்.

அடுத்து, சென்னைப் பல்கலைக்கழகத்தின் வைணவத் துறையின் தலைமைப் பொறுப்பில் உள்ள பேராசிரியர், டாக்டர் M.A. வேங்கடகிருஷ்ணன் M.A., M.Phil, Ph.D அவர்களின் துணைவியார் திருமதி பூமா வேங்கடகிருஷ்ணன் M.A., B.Ed., Ph.D அவர்கள் இந்நூலை ஆழ்ந்து படித்து மிகச் சிறந்த அணிந்துரையை அதிஅற்புதமாக வழங்கியுள்ளார். இவர், தன் அணிந்துரையில் கோபியர்களைப் பற்றித் தான் உணர்ந்ததை மிகவும் பாராட்டி இருப்பதோடு, ஆண்டாளும் ஒரு கோபிகையே என்ற நிலையில்

தனக்குள் உணர்வதாக நினைக்கின்றேன். மிகச் சிறந்த கைங்கர்யப் பணிகளில் மேம்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ பாரம்பரியப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் பூங்கொடியாக வைணவ மணம் பரப்பிக் கொண்டிருக்கும் திருமதி. டாக்டர் பூமா வேங்கட கிருஷ்ணன், கோபி ஆண்டாளின் பூமாதேவியின் அம்சத்துடன் பூமா என்ற திருநாமத்தைத் தாங்கி, சென்னைப் பல்கலைக்கழக வைணவத் துறையின் பேராசிரியையாகவும், கீதாசார்யன் இதழின் துணை ஆசிரியராகவும் விளங்கி வருகின்றவர் ஆவார். இவர் தந்துள்ள அணிந்துரையை பெரும்பூதூர் மாமுனிக்கும் பின்னானாளாகிய கோபி ஆண்டாள் இந்நூலுக்குத் தந்த அணிந்துரையாகவே கருதுகின்றேன்.

ஆக - எம்பெருமான் நாராயணனின் சகோதரி பராசக்தி லலிதாம்பிகையும், உடையவர் இராமாநுஜரின் தங்கை கோபி ஆண்டாள் கோதை நாச்சியும் என் படைப்பைப் பாராட்டி அணிந்துரை வழங்கி இருப்பதாகக் கருதி இவ் இருவருக்கும் இதன்வழி என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவ் இருவரோடு மூன்றாமவராக, என் துணைவியும் தன் கருத்துக்களை இந்நூலில் வெளியிட்டுள்ளாள். நாயகி நாயக சரணாகதித்துவ சங்கமப் பாதையை வகுத்த கோபி ஆண்டாளைப் பற்றிய இந்நூலில் - படைப்பாளனாகிய என் இல்லற வாழ்வில் அமைந்துள்ள நாயகியும் தன் கருத்துக்களை வெளியிட்டிருப்பதும் பொருத்தமே! ஒளிவு மறைவு எதுவும் இல்லாமல், தான் நோற்று வந்த மார்கழி நோன்பைப் பற்றிய தன் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள என் மனைவிக்கும், படைப்பாளன் என்ற முறையில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறுதியாக, இந்நூலைப் பற்றிய முடிவான ஒரு கருத்தைக் கூறி என் சொற்களை முடித்துக் கொள்ளுகின்றேன்.

அத்வைத சைவ நெறியில் தோய்ந்த திருஅருட்பிரகாச வடலூர் வள்ளலார் - தன் வாழ்க்கையில் திருமணம் நடந்தேறியும், தன் சரீர சுகத்தைத் தன் நாயகியிடம் காட்டாமலும், தானும் தன் நாயகியின் சுகத்தை விரும்பாமலும் பேரின்ப சுகத்தை அளித்திடும் திருவாசகத்தின் வழி பேரின்ப உணர்வைத் தன் முதல் இரவு திருமண நிகழ்ச்சியில் முழுமையாக உணர்த்திவிட்டு, மனைவியை விட்டுப் பிரிந்து சென்றார்! வடலூர் வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்க ஒழுக்கத்தின்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வில் அவர் கண்ட ஞானவழி - **சாகாக் கல்வி !**

ஆனால் - கோபி கோதை ஆண்டாள் நாச்சியார், தன் சரீரத்தையும், தன் ஜீவனையும் எந்த மானிடரையும் தீண்ட விடாமல் கண்ட ஜீவாத்ம பரமாத்ம சங்கம சரணாகதித்துவ நாயகி நாயக ஞான மார்க்கம் - சரீரமும், ஆத்மாவும் ஒருங்கே அனுபவிக்கக் கூடிய **சாகாக் கலவி !**

**வடலூர் வள்ளலாரின் சாகாக் கல்வியிலும், கோபி கோதை ஆண்டாளின் சாகாக் கலவியிலும்** மனித சரீர சங்கமங்கள் இடம் பெறவில்லை! ஆயினும் ஆன்மீக ஆத்மார்த்த ஞானவழியில் - எந்த வேதங்களிலும் இல்லாத, எந்த ஞானியாலும் விளக்க முடியாத - ஆதி மூலப்பரம் பொருளின் **சுகானுபவங்கள்** இடம் பெற்றுள்ளன!

இச் சுகானுபவங்களுக்குள் - சுகத்துள், சோகமும் இல்லை! சோகத்துள், சுகமும் இல்லை! எல்லாமே, சுகத்துள் சுகம் தாம்! சுகங்களுக்கெல்லாம் சுகம், லோக க்ஷேமம்! லோக க்ஷேமம் முழுமை பெற்றால்தான் - இறையருளும் சகல ஜீவாத்மாக்களுக்கும் க்ஷேமமாக அமைய முடியும்! உயிரினங்கள் துன்பமின்றி இன்புற்று வாழ்ந்தால்தான் - உயிர்களால் இறைவனை வணங்க முடியும்! இறைவனாலும் உயிர்களுக்கு அருள் பாலிக்க முடியும்! நாயகி நாயகத்துவ ஜீவாத்ம பரமாத்ம உறவில் - நாயகி, நன்முறையில் வாழ்ந்தால்தான், அவளால் நாயகனுக்குச் சேவை செய்ய முடியும்! அதைப் போலவே, நாயகனின் அன்பு அரவணைப்பில்தான், நாயகி வாழ முடியும்! ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் உள்ள உறவும் இத்தகையதே! இத்தகைய நாயகி நாயகத்துவ உறவு உயிர்களுக்கும் இறைவனுக்கும் ஏற்பட வில்லையென்றால் - உயிர்களும் இல்லை! இறைவனும் இல்லை!

ஆத்ம நாயகியர்களின் நல்வினை தீவினைகளின் புண்ணிய பாவங்களின் பலாபலன்களுக்குத் தகுந்தபடி, அவரவர்கள் ஒவ்வொரு சரீரத்திற்குள் வினைகள் கழியும் காலம் முடியும் வரையிலும் - ஊழ் வினையால் சிறை வைக்கப்படுவதோடு - இன்ப துன்ப அனுபவங்கள் என்ற வாடகை வசூலிக்கப்படுகின்றன! ஆத்ம நாயகியரும் தங்களுக்கு அமைந்த சிறை வாழ்க்கையைத் தங்கள் புகுந்த வீடாக நம்பிக்கொண்டு, தாங்கள் வாழ்ந்து வரும் வாடகை வீடுகளுக்கு **ஊழ்வினையின்படி** வாடகை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்!


ஊழ் வினைப்பயன்களைக் கழித்து முடித்தபிறகு, நிரந்தரமாக உள்ள புகுந்த வீடாகிய பரம புருஷ நாயகனின் பாத கமலங்களில் சங்கமம் ஆகிப் பேரின்பப். பெருவாழ்வு அடைகின்றார்கள்!

நாயகி இல்லாத நாயகனை யார் வணங்குவார்கள்? நாயகன் இல்லாத நாயகியால்தான் - எந்த சுகத்தைக் காண முடியும்? ஜீவாத்ம நாயகி இல்லாத பரமாத்ம நாயகனுக்கு வேலையே இல்லை! பரமாத்ம நாயகன் இல்லாத ஜீவாத்ம நாயகியிடம் எதுவுமே இல்லை! நாயகியற்ற நாயகன் - வெறும் பொய்! நாயகனற்ற நாயகி - வெறும் சூன்யம்!

இத்தகைய ஆத்ம நாயகியரின் சரீர இயற்கை அமைப்பில் - நாயகி யரைக் காக்க வேண்டியவன், நாயகன்! நாயகனின் பாத கமல சங்கமத்திற்காக அசோகவன சீதையின் நிலையில் காத்துக்கிடக்க வேண்டிய கடமை, நாயகியைச் சேர்ந்தது! இதுவே - ஜீவாத்ம பரமாத்ம பக்திப்பாதை!

அடுத்து - அவசர அவசரமாகவும், மனோ வேகத்திற்கேற்ப கிறுக்கெழுத்தாகவும் பல அடையாளக் குறிகள் இட்டும் எழுதிக் கொண்டிருந்த இந்நூலைப் படி எடுத்து அச்சிடுவதற்கேற்ற நிலையில் அழகிய கையெழுத்தில் முறைப்படிப் பத்திகள் பிரித்து எழுதித் தந்தவர், என் உதவியாளர் திருமதி. லலிதா! இதற்கு முன் வெளியிடப்பட்ட பல படைப்புக்களையும் பல ஆயிரம் பக்கங்கள் சோர்வின்றி எழுதித் தந்து, நூல்களை வெளிவரத் துணை செய்தவரும், திருமதி லலிதா ஆவார். தற்பொழுது பத்து மாதங்களுக்கும் மேலாக வெளியூரில் தங்கியிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தும்கூட - இந்நூல் வெளிவரும் நிலை ஏற்பட்ட பொழுது இங்கு வந்து தங்கி இருந்து, இந்நூலின் படைப்புப் பணி விரைவில் முடியவேண்டுமென்று கோபி கோதை ஆண்டாளின் அருளை நாடி - இந்நூலைச் சிறந்த முறையில் படி எடுத்துத் தந்துவிட்டுச் சென்ற என் உதவியாளர், **திருமதி. லலிதாவிற்கும்** - தன் எழுபது வயதிற்கும் மேல் உடல் தளர்ச்சி பெற்றிருந்தும், மனச் சோர்வு படாமல் உடனுறை நிழலைப்போல் என்னுடனேயே பல மாதங்களாக என் பாசச் சிறைக்குள் அடைபட்டுக் கிடந்து, இந்நூலின் அச்சுப் படிகளைத் திருத்தித் தந்து உதவிய என் இனிய நண்பர், சகோதரர் பெருந்தகை திரு. பல்கலைச் செம்மல், ஆன்மீகச் சுடர், **டாக்டர், புலவர் சிதம்பர — வீரப்பனார் அவர்களுக்கும்** - இந்நூலின் அச்சுப் படிகளைத் திருத்தி உதவிய என் நண்பர், தமிழ்

தன்னுரிமை இயக்கப் பொதுச் செயலர், **திரு. அரங்க நாகரத்தினம் அவர்களுக்கும்** - இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அன்புத் தம்பி, **திரு. கிறிஸ்டோபர் (புஷ்பம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனர்) அவர்களுக்கும்** - இந்நூலை எழுதிக் கொண்டிருந்தபொழுது பாசக் கனிவுடன் ஓர் அன்னையின் நிலையில் எடுபிடி குற்றேவல் செய்து சோர்வடையாமல் எனக்கு ஊக்கம் தந்துதவி செய்த திருச்சேறை திவ்விய தேசத்தைச் சேர்ந்த **திருமதி. வேம்புவிற்கும்** இதன் வழியாக என் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



*சென்னை - 600 024*
*26.12.1998*





## கோபி கோதை ஆண்டாளின் திருப்பாவைப் பிரபந்தங்கள்

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணியசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண்கதிர்மதியம்போல்முகத்தான்
நாராயணனே நமக்கேபறைதருவான்
பாரோர் புகழப்பாடிந்தேலோரெம்பாவாய்.

வையத்துவாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள்கேளீரோ, பாற்கடலுள் -
பையத்துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம்பாலுண்ணோம்நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டுநாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைசென்றோதோம்
ஐயமும்பிச்சையுமாந்தனையும்கைகாட்டி
உய்யுமாறெண்ணியுகந்தேலோரெம்பாவாய்.

ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினால்
தீங்கின்றிநாடெல்லாம் திங்கள்மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ்செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்பத்
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி -
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்

ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீகைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம்போல்மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல்நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கமுதைத்தசரமழைபோல்
வாழவுலகினில்பெய்திடாய் நாங்களும் -
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

மாயனை மன்னுவடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினில்தோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல்விளக்கஞ்செய்த தாமோதரனைத்
தூயோமாய்வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால்பாடி மனத்தினால்சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவானின்றனவும்
தீயினில்தூசாகும் செப்பேலோரெம்பாவாய்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன்கோயில்
வெள்ளைவிளிசங்கின் பேரரவம்கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும்
மெள்ளஎழுந்தரியென்றபேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந் தேலோரெம்பாவாய். 6

கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன், கலந்து -
பேசினபேச்சரவம் கேட்டிலையோபேய்ப்பெண்ணே!
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து
வாசநறுங்குழலாய்ச்சியர், மத்தினால் -
ஓசைபடுத்த தயிரரவம்கேட்டிலையோ
நாயகப்பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும்நீ கேட்டேகிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய். 7

கீழ்வானம்வெள்ளென்றெருமைசிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போகின்றாரைப் போகாமல்காத்து, உன்னைக் -
கூவுவான்வந்துநின்றோம், கோதுகலமுடைய -
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால்
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய் 8

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரியத்
தூபம்கமழத் துயிலணைமேல்கண்வளரும்
மாமான்மகளே! மணிக்கதவம்தாள் திறவாய்
மாமீரவளையெழுப்பீரோ? உன்மகள்தான்-
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். 9

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல்திறவாதார்
நாற்றத்துழாய்முடி நாராயணன், நம்மால் -
போற்றப்பறைதரும் புண்ணியனால். பண்டொருநாள்-
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான்தந்தானோ
ஆற்றவனந்தலுடையாயருங்கலமே!
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். 10

*கற்றுக் கறவைக் கணங்கள்பலகறந்து*
*செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்*
*குற்றமொன்றில்லாத கோவலர் தம்பொற்கொடியே!*
*புற்றரவல்குல் புனமயிலே! போதராய்*
*சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து, நின் -*
*முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாடச்*
*சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி! நீ -*
*எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.* 11

*கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி*
*நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர*
*நனைத்தில்லம்சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!*
*பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றிச்*
*சினத்தினால் தென்னிலங்கைக்கோமானைச்செற்ற*
*மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய்*
*இனித்தானெழுந்திராய்ஈதென்னபேருறக்கம்*
*அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய்.* 12

*புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாவரக்கனைக்*
*கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்*
*பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்*
*வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்றுப்*
*புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!*
*குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே*
*பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்*
*கள்ளம் தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய்.* 13

*உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்*
*செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய்கூம்பினகாண்*
*செங்கல்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர்*
*தங்கள்திருக்கோயில் சங்கிடுவான்போதந்தார்*
*எங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசும்*
*நங்காயெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்*
*சங்கொடுசக்கரமேந்தும் தடக்கையன்*
*பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய்.*
*எல்லேயிளங்கிளியே! இன்னமுறங்குதியோ?* 14

*சில்லென்றழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்*
*வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்*
*வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக*
*ஒல்லைநீபோதாயுனக்கென்னவேறுடையை*
*எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள்*
*வல்லானைகொன்றானை மாற்றாரை மாற்றழிக்க -*
*வல்லானை, மாயனைப் பாடேலோரெம்பாவாய்.* 15

நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய -
கோயில்காப்பானே! கொடித்தோன்றும்தோரண -
வாயில்காப்பானே! மணிக்கதவம்தாள்திறவாய்
ஆயல்சிறுமியரோமுக்கு,. அறைபறை -
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோம் துயிலெழப்பாடுவான்
வாயால்முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். 16

அம்பரமேதண்ணீரே சோறேயறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தேகுலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கியுலகளந்த
உம்பர்கோமானே யுறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும்நீயுமுறங்கேலோரெம்பாவாய். 17

உந்துமதகளிற்றனோடாததோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம்கமழும்குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழிஅழைத்தனகாண், மாதவிப்
பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலியுன்மைத்துனன்பேர்பாடச்
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். 18

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால்கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலேறிக்
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய்! நீயுன்மணாளனை
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். 19

முப்பத்துமூவரமரர்க்குமுன்சென்று
கப்பம்தவிர்க்கும்கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு -
வெப்பம்கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னைநங்காய்! திருவே! துயலெழாய்
உக்கமும்தட்டொளியும் தந்துன்மணாளனை
இப்போதேயெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்றகலங்களெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதேபால்சொரியும் வள்ளற்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான்மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய். உலகினில் -
தோற்றமாய்நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றாருனக்கு வலிதொலைந்துன்வாசற்கண்
ஆற்றாதுவந்துன்னடிபணியுமாபோலே
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மாஞாலத்தரசர் அபிமான -
பங்கமாய்வந்துநின்பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல்வந்துதலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச்செய்ததாமரைப்பூப்போலே
செங்கண்சிறுச்சிறிதேயெம்மேல்விழியாவோ
திங்களுமாதித்தியனுமெழுந்தாற்போல்
அங்கணிரண்டும்கொண்டெங்கள்மேல்நோக்குதியேல்
எங்கள்மேல்சாபமிழிந்தேலோரெம்பாவாய். 22

மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்கமறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர்பொங்கவெப்பாடும்பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்துமுழங்கிப்புறப்பட்டுப்
போதருமாபோலேநீபூவைப்பூவண்ணா! உன் -
கோயில்நின்றிங்ஙனேபோந்தருளிக், கோப்புடைய -
சீரியசிங்காசனத்திருந்து யாம்வந்த -
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய். 23

அன்றிவ்வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்! திறல்போற்றி
பொன்றச்சகடமுதைத்தாய்! புகழ்போற்றி
கன்றுகுணிலாவெறிந்தாய்! கழல்போற்றி
குன்றுகுடையாவெடுத்தாய்! குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும்நின்கையில்வேல்போற்றி
என்றென்றுன்சேவகமேயேத்திப்பறைகொள்வான்
இன்றுயாம்வந்தோமிரங்கேலோரெம்பாவாய். 24

ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவில்
ஒருத்திமகனாயொளித்துவளரத்
தரிக்கிலானாகித்தான் தீங்குநினைந்த
கருத்தைப்பிழைப்பித்துக்கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்றநெடுமாலே! உன்னை -
அருத்தித்துவந்தோம்பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமும்சேவகமும்யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய் 25

மாலே! மணிவண்ணா! மார்கழிநீராடுவான்
மேலையார்செய்வனகள் வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியேவிதானமே
ஆலினிலையாயருளேலோரெம்பாவாய். 26

கூடாரைவெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம்
நாடுபுகழும்பரிசினால் நன்றாகச்
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம்
ஆடையுடுப்போமதன்பின்னேபாற்சோறு -
மூட, நெய்பெய்து முழங்கைவழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். 27

கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத வாய்க்குலத்து, உன்றன்னைப் -
பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா!, உன்றன்னோ -
டுறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது
அறியாதபிள்ளைகளோம், அன்பினாலுன்றன்னைச் -
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவாநீதாராய் பறையேலோரெம்பாவாய். 28

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து, உன் -
பொற்றாமரையடியே போற்றும்பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில்பிறந்த நீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா
எற்றைக்குமேழேழ்பிறவிக்கும். உன்தன்னோடு -
உற்றோமேயாவோமுனக்கேநாமாட்செய்வோம்
மற்றைநம்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். 29

வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனைத்
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப் -
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான்கோதை சொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பாரீரிரண்டுமால்வரைத்தோள்
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள்பெற்றின்புறுவரெம்பாவாய். 30

# கோதையின் பக்திப் பாதை

## (ஆண்டாள் வரலாறு, திருப்பாவை, கோபிகள், நாச்சியார் திருமொழிகளின் திவ்விய தத்துவார்த்த விளக்கத்துடன்)

ஆதிமூலப்பரம்பொருள் பரமபுருஷ ஆதி நாயகனாகிய எம்பெருமானே, அனைத்தும் என்று எவ்விதப் பிரதி பலனும் கருதாமல் - தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் சரணாகதித்துவமே வைணவம்.

சகல ஜீவாத்மாக்களும் ஸ்ரீமந்நாராயணனின் பாத கமலங்களில் கலக்கும் சங்கமநிலையில் ஒன்றே என்ற சமத்துவக் கொள்கை வைணவத்தில் மிக அழுத்தமாக வலியுறுத்தப் பட்டமையால் - வைணவத்தில் ஜாதி, மத, சமய, இனப்பாகு பாடுகள் தூக்கி வீசி எறியப்பட்டு - பரமாத்ம பக்தியும், மனித நேய சமாதான சகோதரத்துவ ஒருமைப்பாடும் தழைத்தோங்கின.

இதே அடிப்படையில்தான் - நம் பாரதத்தின் ஈடு இணையற்ற இதிகாசங்களாகிய உலக சகோதரத்துவ காப்பியமாகிய இராமாயணமும், உலக சமுதாய சமாதான வழிகாட்டிக் காப்பியமாகியப் பாரதமும் மலர்ந்தன.

வைணவ பரமாத்ம சரணாகதித்துவ பக்திப் பாதைக்குத் தென் பாரதத்தில் தீந்தமிழில் வழிகாட்டிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர்.

பன்னிரு ஆழ்வார்களுள்ளும் - பொய்கையார், பூதத்தார், பேயார், ஆண்டாள், பாணர் ஆகிய ஐவரும் தாயின் வயிற்றிலிருந்து பிறக்காதவர்கள் ஆவர். பொய்கையார், ஒரு பொய்கையில் பொற்றாமரை மலரிலும் - பூதத்தார் நீலோற்பல மலரிலும் - பேயார் செவ்வல்லி மலரிலும் - ஆண்டாள் துளசிச் செடியின் அடியிலும், பாணர் நெற்கதிரின் அடியிலும் அவதரித்தவர்கள் ஆவார்கள்.

திருமழிசையாரோ, ஒரு தேவகன்னிகையின் வயிற்றிலிருந்து வெறும் மாமிசப் பிண்டமாக அவதரித்தவர் ஆவார். இவருக்கும் எந்த ஜாதியையும் யாராலும்கூற முடியாது.

திருமங்கையார் மறவர் குலத்திலும், குலசேகரர் மன்னர் குடியிலும், நம்மாழ்வார் காரி என்பவருக்கும் பிறந்தவர்கள் ஆவர். பெரியாழ்வார், மதுரகவி, தொண்டரடிப்பொடி ஆகிய மூவரும் மட்டுமே முன் குடுமிச்சோழிய அந்தணர் குலத்தில் பிறந்தவர்கள். பாணர் மட்டும் தாழ்த்தப்பட்டவரால் வளர்க்கப் பட்டமையால், தாழ்த்தப்பட்டத் திருக்குலமாகக் கருதப்பட்டார். இப்பன்னிரண்டு ஆழ்வார்களின் இடையில் மனிதப் பிறப்பின் அடிப்படையில் - மனிதனால் வகுக்கப்பட்ட ஜாதி வேறு பாடுகளைக் கணக்கிட முடியாது.

இப்பன்னிரண்டு ஆழ்வார்களுள்ளும் பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார் ஆகிய நால்வரும் தமிழகத்தில் தொண்டை நாட்டு மண்ணிலும் - திருமங்கையார் - தொண்டரடிப் பொடி, திருப்பாணர் ஆகிய மூவரும் சோழ நாட்டிலும் - பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவி ஆகிய நால்வரும் பாண்டிய நாட்டிலும் - குலசேகரர் சேர நாட்டிலும் அவதரித்தவர்கள் ஆவர்.

எம்பெருமானின் பக்தி நெறியில் மிக ஆழமான ஈடுபாடும், அழுத்தமான வைராக்கியமும் கொண்டு, பாசுரங்களைப் பாடித் தொழும் தம்மையும் மறந்த நிலையில் ஸ்ரீமந்நாராயணனின் பரமாத்ம நிலைகளில் ஆழங்கால்பட்டு நின்றமையால் ஆழ்வார்கள் என்று அழைக்கப் பெற்றார்கள். இப்பன்னிரு ஆழ்வார்களும் பக்திப் பரவசத்தோடு பாடிய பாசுரங்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகும்.

தென் பாரதத்தின் பல பகுதிகளிலும் அவதரித்த ஆழ்வார்கள், சர்வ வியாபியாகிய எம்பெருமான் திருக்கோவில் கொண்ட திவ்ய தேசங்களைப் பாடி, மங்களாசாசனம் செய்யும் பொழுது - சோழ நாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், நடு நாட்டுத் திருப்பதிகள், பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் என்பவற்றோடு மட்டும் விட்டுவிடாமல் - மலையாள நாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றையும், வடநாட்டுத் திருப்பதிகள் பதினொன்றையும் சேர்த்து, பாரத நாட்டின் ஒருமைப்பாட்டு நிலையில் வைணவ பக்தி மார்க்கத்தைப் பரப்பினார்கள்!

இவை மட்டுமன்றி, ஜீவாத்மா மறுமையில் சென்று சேரும் திருப்பாற்கடல், பரமபதம் ஆகியவைகளையும் திவ்விய

தேசங்களாகப் பாடி மங்களாசாசனம் செய்து - ஆன்ம நேய பக்தி ஒருமைப்பாட்டை - மண்ணிலும் விண்ணிலும் இம்மையையும் மறுமையையும் நோக்கி வைணவ மார்க்கத்தில் ஏற்படுத்தினார்கள்.

ஆழ்வாராதியர்கள் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்கள் நூற்றெட்டாகும். 108 திவ்விய தேசங்களுள் பொய்கையார் 6 திவ்விய தேசங்களையும், பூதத்தார் 13 திவ்விய தேசங்களையும், பேயார் 15 திவ்விய தேசங்களையும், திருமழிசையார் 16 திவ்விய தேசங்களையும், திருமங்கையார் 86 திவ்விய தேசங்களையும், தொண்டரடிப் பொடியார் 4 திவ்விய தேசங்களையும், பெரியாழ்வார் 19 திவ்விய தேசங்களையும், ஆண்டாள் 11 திவ்விய தேசங்களையும், நம்மாழ்வார் 36 திவ்விய தேசங்களையும், குலசேகரர் 8 திவ்விய தேசங்களையும், திருப்பாணர் 3 திவ்விய தேசங்களையும், பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்தார்கள். மதுர கவியார் ஒருவர் மட்டும் நம்மாழ்வாரையே 108 திவ்விய தேசமாக - பாவித்து 10 பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்தார்.

அக்காலத்தில் ஜாதி வேறு பாட்டுணர்வு தலைதூக்கி நின்றமையால் - திருப்பாணர் வேறு எந்த திவ்விய தேசத்துள்ளும் நுழைய அனுமதி கிடைக்காத காரணத்தாலோ - அல்லது எங்கும் செல்லாமல் திருவரங்கப் பெருமானின் திவ்விய அழகிலேயே தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்டமையாலோ - திருவரங்கம், திருவேங்கடம், பரமபதம் ஆகிய 3 திவ்விய தேசங்களை மட்டுமே 10 பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

ஆனால் திருப்பாணரின் வாழ்வில் திருவரங்கத் திருக்கோவிலிற்குள் அனுமதிக்கப்படாமல் ஜாதியின் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டு, உலோக சாரங்கரால் கல்லெறியப்பட்டுக் காயப்படுத்தப்பட்டார் என்றும் - பின்பு திருவரங்கனின் ஆணையின் வண்ணம் உலோக சாரங்கர் திருப்பாணரைத் தன் தோளில் சுமந்து கொண்டு திருவரங்க மூலஸ்தானத்திற்குக் கொண்டு வந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.

ஜாதி பேதத்தை உடைத்து நொறுக்கித் தூள் தூளாக்கியவர் தான், திருவரங்கத்து எம்பெருமான்!

இப்பன்னிரு ஆழ்வார்களின் பக்தி மார்க்கம் சென்ற பாதை எம்பெருமானின் பாதாரவிந்தங்களாக இருந்த போதிலும் - ஒவ்வொருவரும் வழிபட்ட பக்தி நெறி ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாகும்.

பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்த மனித நேயபக்தியில் கிடந்தும், இருந்தும், நின்றும் பரபிரமமாகிய ஆதிசிவமும், பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணனும் ஒருவனே என்ற ஏகதெய்வ வழிபாட்டிற்கு வைணவத்திற்கு ஆதியில் வழி காட்டினார்கள்.

அம்மூவரும் நிலை நாட்டியக் கிடந்த, இருந்த, நின்ற கோலங்களைத் தாம், எம்பெருமானும் கொண்டிருந்தார்.

சொன்னதைச் சொன்னபடி நாராயணனையே நண்பனைப் போல் கேட்க வைத்த பக்தி மார்க்கத்தைத் திருமழிசையார் நிலை நாட்டினார்.

தாயின் கருவிலிருந்து வெளிவந்த காலம் முதல் உணவு, உறக்கம் இன்றி, பரமாத்ம சுகமாகிய அத்தைத்தின்று அங்கே கிடந்த சமாதி நிலையில், பரலோக பக்தியை நிலைநாட்டியவர், நம்மாழ்வார்.

நம்மாழ்வாரையே எம்பெருமானாகக் கண்டுணர்ந்த பக்தி, தாஸானுதாஸன் மதுரகவியின் பக்திநெறி.

கண்ணனுக்குள் இராமபிரானைக் கண்ட கனிந்த நட்புப் பக்தியின் இலக்கணம், குலசேகரர்.

அடங்காப்பிள்ளையாக - நாயக நாயகி பக்திக்குள் ஆண்மையை விதைத்த பக்தியின் வீரவிளைநிலம், திருமங்கையார்.

தொண்டனுக்குத் தொண்டன் என்ற அடிமைப்பக்தி மார்க்கத்திற்கு உரியவர், தொண்டரடிப்பொடி விப்ர நாராயணா.

ஜாதி கடந்த பக்தி மார்க்கத்திற்கு, எம்பெருமானையே சாட்சியாகக் காட்டியவர், திருப்பாணர்.

ஆண்டவனையே ஆண்டவளாகச் சூடிக்கொடுக்கும் வாடு மலர் மாலையுடன் வாடா பாசுரப்பாமாலையையும் அனுபவித்துச் சூட்டிய நாயக நாயகி சரணாகதித்துவ பரமபுருஷ பரமாத்ம பக்தி நிலைக்கு உரிய ஒரே பெண் ஆழ்வார் - ஆண்டாள் மட்டுமே!

எம்பெருமானைக் கண்ணனாக வைரமணித் தொட்டிலில் கிடத்தித் தாலேலோ பாடிய தாயாகவும் - தன் அரிய மகள்

கோதையை அரங்கனுக்குத் தாரை வார்க்காமலேயே தந்து, மாமனாகவும் விளங்கிய பக்தி நெறிக்குரியவர், பெரியாழ்வார் பட்டர்பிரான் விஷ்ணுசித்தர்.

இப்பன்னிருவரும் பாடிய நாலாயிரம் பாசுரங்களும், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்ற திராவிட வேதம் எனும் சிறப்பைப் பெற்றது. அத்துடன் தமிழ் மொழிக்குப் பிள்ளைத் தமிழ், மடல் ஆகிய சிற்றிலக்கியங்கள் தோன்றவும் வழி காட்டியது.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களுள் சிவந்த அக்னிமயமான சிவபெருமானை, பரபிரமம் என்று சைவ சமயம் வழிபட்டது. காற்றுமயமான பரமாத்மாவை வைணவம் நாரா யணனாக வழிபட்டது.

ஜீவாத்மாக்களை பிரமம் என்றும் - ஆதி சிவத்தை பரபிரமம் என்றும் வகுத்த சைவ நெறி - பிரமம் பரபிரமமாக மாறும் என்றும், இரண்டும் ஒன்றே என்றும் - ஏக ஆத்ம வாதமாக அத்வைதம் என்ற பெயரில் சைவ சமயத்திற்கு சிவத்தை இறைவனாகக் காட்டியது. அத்துடன் சித்தாந்தம் என்று கூறி, சித்து என்றால் முடிவு என்றும் அந்தம் என்றால் முடிவிற்கும் முடிவு என்றும்கூறி அழித்தற்குரிய செயலைச் சிவபெருமானுக்கு இன்றியமையாததாக்கியது.

நன்கு ஆராய்ந்தால் - சைவ வழிபாடு உருவமற்ற அருவ வழிபாடாகும். இக்காரணத்தாலேயே ஆதிசிவத்தை உணர்த்த, சிவலிங்க வடிவத்தைச் சைவம் அமைத்தது. அத்வைத கோட்பாட்டின் அடிப்படையில் சிவனுக்கு அதர்வணன் என்ற பெயரும் உண்டு.

இதே அருவ அமைப்பில்தான் - அருவ வழிபாடாகிய தொழுகையைக் கொண்டுள்ள இஸ்லாமும் நிலையான சுவனபதிகளுக்கு அதன் என்றும், மார்க்கக் கடமைகளைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றும் செயல்களை அதா என்றும், இறைவனால் அளிக்கப்படும் தண்டனையை அதாப் என்றும், தொழுகைக்கு அழைக்கும் பாங்கை அதான் என்றும், நரக வேதனையை அதாபுன்நார் என்றும் பெயரிட்டது.

சைவ சமயத்திற்கு உருவ வழிபாடு இல்லாத காரணத் தாலேயே, சிவன் அவதார வடிவங்களை எடுத்ததாகப் புராணங்களில் கூறப்படவில்லை. 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்' என்றார், சைவ சமயப்பெரியார்.

வைணவமோ - ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் பாதங்களில் சங்கமமாகின்றன என்றும் - ஜீவாத்மா பரமாத்ம சொரூபத்தோடு நித்திய சூரியாக, பரமபதத்தில் நிரந்தரமாக இன்புற்றிருக்கும் நிலையை எய்தினாலும், ஜீவாத்மா பரமாத்மாவாக ஆக முடியாது என்றும் - ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்ற நெறியை வகுத்து விசிஷ்டாத்வைதம் என்று பெயரிட்டது.

அத்துடன் பரமாத்மாவாகிய நாராயணனே ஆதிமூலம் என்றும், முதலுக்கும் முதலான ஆதிமூலப்பரம்பொருள் என்றும், முதலிற்கும் முதலான ஆதி மூலமாக விளங்குவதாலேயே - தன் வயிற்றிலிருந்து உதித்த பிரமனைக் கொண்டு படைத்தல் தொழிலைச் செய்யவைத்து, ஜீவராசிகளைக் காக்கும் தொழிலை எம்பெருமான் மேற்கொண்டான் என்றும் கூறியது. தர்ம நெறியைப் பாதுகாத்து அதர்மங்களை அழிக்க அவ்வப்பொழுது எம்பெருமான் பத்து அவதாரங்களையும் எடுத்தார் என்றும் வைணவம் வகுத்தது. அவதாரங்கள் - உருவ வடிவங்களாக அமைந்தமையால் வைணவத்தில் உருவ வழிபாடு வேரூன்றியது.

இந்து மதத்தில் சர்வ வியாபகக் காற்றாக சகல லோகங்களிலும் வியாபித்து நிற்கும் பரமாத்மாவாகிய - முதலிற்கும் முதலாகிய ஆதிக்கும் ஆதியான ஆதிமூலமாகிய, அநாதியான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை முழுமுதற் பரம்பொருளான இறைவனாக வைணவமும் - அக்னி மயமான சிவந்த நிலையில் முடிவிற்கும் முடிவாக, சர்வலோக யுக ஊழிகளின் சித்து அந்தமாக, ஞானப்பரபிரமமாக விளங்கும் ஆதி சிவத்தை, சக்தியோடு சமநிலையில் கலந்த ஞானப் பிழம்பான சிவபெருமானை - இறைவனாக சைவ சமயமும் வழிபட்டன.

ஆயினும் பரமாத்மாவும் பரபிரமமும் (அரியும், சிவனும்) கலந்த ஒன்றே, முழுமுதலாகிய இறைவன் என்பதையும் சமயச் சான்றோர்கள் ஒத்துக் கொண்டார்கள்.

காற்றினுள் அக்னியும், அக்னிக்குள் காற்றும் கலந்தே உலக இயக்கங்கள் பஞ்சபூத நிலையில் உலகிலும், மனித சரீரத்திலும் நடைபெற்று வருதல் கண்கூடு.

நிலத்தில் அக்னியும் உண்டு! காற்றும் உண்டு! ஹைடிரஜன், ஆக்ஸிஜன் ஆகிய காற்றுக் கலவையாகிய நீரில் அக்னியும் உண்டு! காற்றும் உண்டு!ஆகாய விண் வெளியிலும் அக்னியும் உண்டு! காற்றும் உண்டு!

அதைப்போலவே மனித சரீரமாகிய நிலத்தில் அக்னியும், காற்றும் உள்ளன; இரத்தம், சிறுநீர், வியர்வை முதலிய நிலைகளில் உள்ள நீரிலும் - அக்னியும் உண்டு; காற்றும் உண்டு! மனித சிந்தனைவெட்டவெளி, உயிர் ஆகிய நிலைகளில் உள்ள ஆகாயத்திலும் அக்னியும் உண்டு; காற்றும் உண்டு.

உலகையோ, மனித சரீரத்தையோ எதை எடுத்துக் கொண்டாலும், அக்னி, காற்று ஆகியவற்றுள் எது கூடினாலும், எது குறைந்தாலும், எது நின்று போனாலும் - அழிவுதான் நேரிட்டுவிடும்.

சைவ சமயத்தில் - ஆதியில், ஜீவாத்மா ஆரோக்கியமான சரீரத்தில் நிலை பெற்றிருந்தால்தான் ஞானத்தையே உணர முடியும் என்று - 'உடல் வளர்த்தேனே, உயிர் வளர்த்தேனே' என்ற கொள்கை நிலை பெற்றிருந்தாலும் - கால வளர்ச்சியில் முழுமையான துறவுநிலை மிக அழுத்தமாக வலியுறுத்தப்பட்டு, சரீர இன்ப சுகங்களை முற்றும் துறந்து, யோகப் பயிற்சியுடன் ஆத்ம சுத்தி பெற்று சிவஞானப் பேரின்பத்திற்கு வரவேண்டும் என்ற அறைகூவல் சைவத்தில் வளர்ந்தது.

மிகப்பெரும் தவ வலிமையுடன் தவநெறியில் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த வசிட்டர், கௌதமர் போன்ற பெரும் மகரிஷிகள் கூடத் தங்கள் பத்தினிகளுடன் வாழ்ந்தமையைப் பற்றியெல்லாம் சைவநெறி சிந்திக்கவில்லை.

வைணவத்திலோ - தற்காலிக சரீர இன்ப சுகங்களை அனுபவித்து முடித்துத் துறந்து, பரமாத்ம பேரின்ப சுகானுபவம் பெறுதல் சிறப்புடையது என்ற கொள்கை வேரூன்றியது.

பரமபுருஷனாகிய பரமாத்மா, மனித சரீரத்துடன் கண்ணனாக அவதரித்த யுகத்தில், மகரிஷிகளும் கோபியர்களாகப் பிறந்து, தங்கள் சரீரத்தில் கண்ணனை இம்மையில் அனுபவித்தார்கள் என்றே புராணங்களும் கூறின.

இன்ப சுகங்களை வெறும் மாயை என்ற சைவம், பராசக்தியின் மாயை அம்சத்தையே புறக்கணித்தது.

ஆனால் எம்பெருமான் நாராயணனையே யோகமாயை என்று கூறி, எம்பெருமான் சரீரத்தினின்றும் பிரிந்து சென்ற பராசக்தியை வைணவி என்று வைணவம் வழிபட்டது.

எம்பெருமான் சர்வ வியாபியாக விளங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஐவகை நிலைகளுள் முதலாவதாகிய

*வியூகமாகிய திருப்பாற்கடலில் அறிதுயிலுடன் பள்ளி கொண்ட கிடந்த கோலம் - ஓர் உருவ வழிபாடே!*

*இரண்டாவதாகிய பரத்துவத்தில் எம்பெருமான், பரம பதத்தில் தன் தேவியருடன் நித்திய சூரிகளுக்குப் பேரின்ப சுகம் தந்து கொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ள வீற்றிருந்த கோலமும், ஓர் உருவ வழிபாட்டு விளக்கமே!*

*மூன்றாவதாக - இவ்வுலக துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனத் திற்காக எம்பெருமான் விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வந்து தசாவதாரங்களை எடுத்ததாகக் கூறப்படும் விபவமும் - உருவ வழிபாட்டு விளக்கமே!*

*நான்காவதாக - இம்மையிலும், மறுமையிலும் ஜீவாத்மாக்கள் வழிபடும் பலவகைப்பட்ட வடிவங்களிலும், திருக்கோவில்களிலும் இருந்து அருள் செய்வதாகக் கூறப்படும் அர்ச்சாவதாரம் - முழுமை பெற்ற உருவ வழிபாடே.*

*ஐந்தாவதாக - சர்வ வியாபியாக இம்மையிலும், மறுமையிலும் சகல அணுக்களிலும் உள்ளும், புறமும் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்து நின்று அருள் புரிவதாகக் கூறப்படும் அந்தர்யாமித்துவம் மட்டும் ஆத்மாவால் மட்டுமே உணரப்படும் எம்பெருமானின் அருள் நிலையாகும்! அருவநிலையிலுள்ள அந்தர்யாமித்துவம், ஆத்மாவால் மட்டுமே உணரத்தக்கது.*

*ஸ்ரீமந்நாராயணனின் ஐவகை நிலைகளுள் நான்கு நிலைகளுள் விளக்கப்பட்ட உருவ வழிபாட்டில் பக்தி செலுத்திய ஆழ்வாராதியர்கள், தங்கள் பாசுரங்களில் எம்பெருமானை உருவ வழிபாட்டு நிலையிலேயே பாடித் திளைத்தார்கள்.*

*எம்பெருமானும் ஆழ்வார்களின் ஆத்மாவில் அந்தர்யாமித்து வமாக அருளை வாரி வழங்கி, பரமாத்ம சுகானுபவத்தை வழங்கியுள்ளார். உருவ வழிபாட்டின் வழி பக்தர்கள் அர்ப்பணிக்கும் தாஸானுதாஸ சரணாகதித்துவ நிஷ்காமிய பக்தியின் வழியில்தான்-எம்பெருமானின் அந்தர்யாமித்துவ சுகானுபவத்தைப் பெற இயலும்.*

***எனவே எம்பெருமானின் கிடந்த, நின்ற, வீற்றிருந்த சர்வ வியாபியாகி சகல லோகங்களையும் ரக்ஷித்து வரும் அர்ச்சா வதார உருவ வழிபாட்டில் மெய்மறந்து திளைத்து பக்திப் பரவசம் அடைந்து சுகானுபவ பேரின்பப் பெரு வெள்ளத்தில் ஆழங்கால்பட்டுப் பாசுரங்கள் பாடி ஆழ்வாராதியர்கள் பரமாத்மாவை வழிபட்டார்கள்.***

ஆழ்வாராதியர்கள் பன்னிருவருள்ளும் ஒரே பெண் ஆழ்வாராக ஒப்பற்று விளங்கிய கோதையின் பக்திப்பாதை, மிகமிக அற்புதமானது.

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாகத் துளசிச்செடியின் அருகில் அவதரித்து பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட செல்வத்திரு மகளாகக் கருதப்பட்டாலும் - ஏனைய ஆழ்வார்கள் பதின்மருக்கும் எவ்வித புத்திரியும் இருந்ததாக வரலாற்றில் காணப்படாத நிலையில் - ஆழ்வார்கள் பதினொருவருக்குமே பக்திப்பாவை கோதையையே ஏகபுத்திரியாகக் கூறலாம்.

இதே கோதை நாச்சியார் - தான் அவதரித்து வளர்ந்து, வாழ்ந்து எம்பெருமானுடன் பரமாத்ம ஐக்கியப்பட்ட காலத்திற்குப் பின்பு - இவ்வுலகில் வைணவம் தழைக்க அரும்பாடுபட்ட உடையவர் இராமாநுஜருக்கும் தங்கை முறையான பக்தி உறவை நிலை நாட்டியவள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, கோதையின் காலத்திற்கு முன்னும் பின்னும் இன்றும் நாளையும் என்றென்றும் - எம்பெருமானின் பக்திப் பாதையில் அழியாத இடம் பெற்றவள், கோதை ஆவாள்.

கோதையின் பக்திப் பாதையின் சிறப்பை மிக அழுத்தமான நிலையில் உணர வேண்டுமானால் - வைணவத்தின் அடிப் படையான தத்துவார்த்தத்தையும், பன்னிரு ஆழ்வார்களின் பக்திப்பாதைகளையும் மிக நுணுக்கமாக அறிதல் வேண்டும். ஜீவாத்மாக்களை நாயகியர்களாகவும் பரமாத்மாவாகிய எம்பெருமானைப் பரம புருஷனாகவும் கொண்டது, வைணவம்.

இந்நிலையில் ஜீவாத்மா சரீரத்தில் குடி கொண்ட காலத்தில், தற்காலிகமான சரீரத்தில் இருந்து கொண்டே, இந்த உலகத்திலுள்ள தற்காலிகமான நிலையற்ற அனைத்து இன்ப சுகங்களையும் அனுபவித்து முடித்துவிட்டு 'அனுபவித்துத்துற!' எனும் நிலையில் நிரந்தரமான பரமாத்மப் பேரின்ப சுகானுபவத்தைப் பெற எம்பெருமானின் சர்வ சகல சௌலப் பியங்களிலும் ஆழங்கால்பட்ட பக்தி நிலையில் திளைத்துப் பரமாத்மாவின் பாத கமலங்களில் சங்கமம் ஆகவேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டதே, வைணவம்.

**தாய்ப்பாலைக்கூடக் குடிக்கத் தெரியாத நிலையில் சுவை உணராமலேயே வளர்ந்த ஒருவனால், எப்படி அழுத்தமான முறுக்குகளைக் கடித்துத்தின்று ரசித்துச் சுவை காண முடியும்?**

அதைப் போலத்தான் தற்காலிக சரீரத்தில் கிடைக்கும் சிற்றின்பம் போன்ற சுகானுபவத்தை உணராதவனால், பேரின்ப பரமாத்ம சுகத்தையும் காண இயலாது என்ற கோட்பாடே, வைணவம்.

அனைத்தையும் பிரதிபலன் கருதாத நிஷ்காமியமாக அர்ப்பணித்த சரணாகதித்துவ பக்தியை மையமாகக் கொண்டதுதான், வைணவம்.

சரணாகதித்துவ சங்கமத்தில் சமத்துவநிலை குடி கொண்டிருப்பதால், ஜாதி வேறுபாடற்றநிலை தவழ்வதோடு, பக்திக்கு ஆட்பட்ட ஆண், பெண்கள் அனைவருமே தங்களை நாயகியர் நிலைக்கு மாற்றிக் கொண்டு - எம்பெருமானே எல்லாம்! உண்ணும் உணவு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை அனைத்துமே எம்பெருமான்! என்ற உணர்வுடன் கூடிய தாஸானுதாஸ பக்திப்பாதையே வைணவம்.

இத்தகைய வைணவத்தின் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களால் பரமாத்ம பரமபுருஷனைப் பல நிலைகளிலும் பாடி மங்களாசாசனம் செய்து அழியாத பெருமை பெற்ற ஆழ்வார்களின் இவ்வுலக இல்லற வாழ்க்கை அமைப்பை வரலாறுகளின் மூலமும், பாசுரங்களின் மூலமும், கர்ண பரம்பரைச் செய்திகளின் மூலமும் ஆராய்ந்தால் - பொய்கையார், பூதத்தார், பேயார், திருப்பாணர், குலசேகரர், மதுரகவி, பெரியாழ்வார் ஆகிய எழுவர்தம் குடும்ப வாழ்க்கையில் மனைவியுடனோ அல்லது எந்தப் பெண்ணுடனோ பெற்ற சிற்றின்ப நிலை பற்றியோ, இல்லறம் பற்றியோ எவ்வித ஆதாரமும் இல்லை. திருமழிசை ஆழ்வாரோ, ஒரு மாபெரும் தவ ஞான சித்து மயமான வாழ்க்கையைக் கொண்டவர்.

நம்மாழ்வாரோ - பரம பதத்தில் நித்திய சூரியாக விளங்கியதையும் விட்டு விட்டு, உலக நன்மைகளுக்காக இம்மண்ணுலகில் ஒரு தாயின் கருவில் உருவெடுத்து - ஆனால் கருவிலேயே பொறிகளின் புலன்களின் ஆசாபாசங்களுக்கு மூல காரணமாகிய சடம் என்ற பாசக்காற்றைக் கோபித்து விரட்டி அடித்து விட்டு, பிறந்த உடனேயே தாய்ப்பாலும் உண்ணாமல், தண்ணீரும் பருகாமல், உணவு உண்ணாமல், கண்திறவாமல், வாய் பேசாமல் ஜீவாத்மாவை சரீரத்திற்குள் சமாதி ஆக்கிக் கொண்டு, நித்திய சூரியாகப் பரமபதத்தில் அனுபவித்த பரமாத்ம சுகத்தை - இம்மையில் அனுபவித்துக் கொண்டு, ஒரு புளிய மரத்தடியில் சமாதி நிலையிலேயே அத்தைத்தின்று அங்கே

கிடந்ததோடு - தன் ஞானப் பார்வையால் அனைத்து திவ்விய தேசங்களையும் மங்களாசாசனம் செய்ததோடு, திவ்வியப்பிரபந்தத்தின் நாலாயிரம் பாசுரங்களுள் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களைப் பாடியருளியதோடு ஆச்சாரிய அந்தஸ்தையும், ஆழ்வாரின் அந்தஸ்தையும் பெற்றவர்!

தொண்டரடிப் பொடியோ - எம்பெருமானின் பரமாத்ம சுகத்தில் திளைத்த நிலையில் சிற்றின்பத்தையே உணராதவராக இருந்தாலும், இடைப்பட்ட காலத்தில் ஒரு விலைமகளிடம் சிற்றின்ப மயக்கம் கொண்டு, பிறகு எம்பெருமானின் திருவருளால் தெளிவு பெற்று ஆட்கொள்ளப்பட்டவர்.

திருமங்கையாழ்வாரோ, இவ்வுலக இன்பங்கள் முழுவதிலும் திளைத்து, குமுதவல்லியைத் தன் இணை பிரியாத மனைவியாக அடைந்து பரமாத்ம பக்தியில் முழுமை பெற்ற வீராதிவீர பக்த சிரோமணியாகி, எண்பத்தாறு திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்து - ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று பாசுரங்களைப் பாடியவர்.

அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமன்றி, இன்றும் திருக்கோவில்களில் தன் பத்தினியுடன் சேவை தருகின்றவர், திருமங்கையார். திருமங்கையாரின் காலடிச்சுவடுகள் படாத திவ்விய தேசமே இல்லை என்று சொல்லும் நிலையில் பாரதம் முழுவதும் பக்திவிஜயம் செய்த பெருமை திருமங்கையாரையே சார்ந்தது. 108 திவ்விய தேசங்களுள் நாற்பத்தெட்டு திவ்விய தேசங்கள், திருமங்கையாரால் மட்டும் மங்ககளாசாசனம் பெற்றவை. மொத்தத்தில் எண்பத்தாறு திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்தவர், திருமங்கையார்.

ஆனால் ஆண்டாளாகிய கோதையோ - பெண்ணாக அவதரித்து எம்பெருமானுடன் பரமாத்ம ஐக்கிய சங்கம நிலை பெறும் வரையிலும், கோபியாக வாழ்ந்த ஒரே நாயகி! பரமாத்ம பக்திப் பாதையில் பிரவேசித்த துளசியும், பக்த மீராவும், ராதையும் -

ஆண்டாள் நிலையில் வாழ முடியாத சூழ்நிலைக்கு ஆட்பட்டு மண வாழ்க்கை அமையப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

பன்னிரு ஆழ்வார்களிலும் ஞான நிலையில் பிஞ்சிலேயே பழுத்த பழங்கள் - நம்மாழ்வாரும், ஆண்டாளும் ஆவார்கள்.

இப்பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார் பாடிய நூறு பாசுரங்களிலும், பூதத்தாழ்வார் பாடிய நூறு பாசுரங்களிலும், மதுரகவியாழ்வார் பாடிய பதினொன்று பாசுரங்களிலும், தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய 55 பாசுரங்களிலும், திருப்பாணாழ்வார் பாடிய 10 பாசுரங்களிலும், திருமழிசையாழ்வார் பாடிய 216 பாசுரங்களிலும், பேயாழ்வார் பாடிய 100 பாசுரங்களிலும், எம்பெருமானைப்பற்றிக் கனிந்து உருகி நெகிழும் நேரடியான சரணாகதித்துவ நிலை காணப் படுகின்றதேயன்றி - நாயக நாயகி பக்திப் பரவசப் பாசுரங்கள் இடம் பெறவில்லை.

இவ்வெழுவரைத் தவிர்த்து அடுத்து வரும் குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார் ஆகிய இருவரும் பக்தி மார்க்கத்திற்குத் தங்களைப் பெண்மை சார்ந்த கற்பனையில் தங்களை மாற்றிக் கொண்டு - பக்திப் பரவச நிலையில் எம்பெருமானுடன் ஒன்றி சரணாகதித்துவ பக்திப் பாதைக்கு வழி கண்டார்களே அல்லாமல், நாயக நாயகி பக்திப் பாசுரங்களைப் பாடவில்லை.

ஆண்டாள் கோதை நாச்சியின் வளர்ப்புத் தந்தையாகிய மகாபாக்கியம் பெற்ற பெரியாழ்வார், எம்பெருமான் மீது கண்திருஷ்டி பட்டுவிடக்கூடாது என்பதற்காகத் திருப்பல்லாண்டு பாடிய பெருமைக்குரியவர்.

கோதை அவதரித்த பச்சிளம் குழந்தைப் பருவத்திலிருந்தே தாயாக விளங்கி - அவளை வளர்த்தத் தாய்மையின் அனுபவ சுகத்தை முழுமையாக உணர்ந்தவர், பெரியாழ்வார்.

இதே தாய்மைப் பண்பின் அனுபவ நிலையில் எம்பெருமானுக்கும் தாயாக விளங்கும் பேறு பெற வேண்டும் என்ற தாய், சேய் பாசத்துடன் கண்ணனை வளர்க்கும் தாயாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு.

கண்ணனை செங்கீரை ஆட வைத்தல், கைகொட்டி விளையாட வைத்தல், தளர்நடை நடக்கச் செய்தல், தன் முதுகை வந்து கட்டிக் கொள்ளுமாறு அழைத்தல், பூச்சி காட்டி விளையாடுதல், தாய்ப்பால் குடிக்க முலையுண்ண அழைத்தல், ஆகிய துறைகளில் பாசுரங்களை உருகிப் பாடினார்.

இத்தாய்மைப் பாசம் கனியும் பக்திப் பாசுரங்களுள் தாலாட்டுப் பாசுரங்களும்; கண்ணனை முலையுண்ண அழைக்கும் பாசுரங்களும் - பக்திச்சுவையும், தாய்மைப் பாசமும் நிரம்பியவை.

கண்ணனின் வளர்ப்புத்தாய் நிலையில் முலையுண்ண அழைத்த பெரியாழ்வார். கண்ணனை வளர்த்த யசோதை நிலையில் தன்னைப் பாவித்துக் கொண்டு - யசோதை கண்ணனை நீராட அழைத்தல், கண்ணனின் கூந்தலைக் கொண்டையிடக் காக்கையை அழைத்தல், காக்கையிடம் கோல் கொண்டு வருமாறு கூறுதல், கண்ணனைப் பூச்சூட அழைத்தல், கண்ணன் மீது கண் எச்சில் படாதவாறு அந்தி நேரக் காப்பிட அழைத்தல் ஆகிய பாசுரங்களையும் பாடித் தாய்மைப் பாசத்தில் எம்பெருமானை நினைத்து உருகினார்.

பிறகு கண்ணன் வெண்ணெய் திருடுதல், கோபியரிடம் செய்த குறும்புகளை அவர்கள் யசோதையிடம் கூறுதல் ஆகிய பாசுரங்களைப் பக்திப் பிரவாகத்துடன் பாடிய பெரியாழ்வார் - யசோதை கண்ணனின் குறும்புகளைக் கண்டு அச்சம் கொண்டு அவனுக்குத் தாய்ப்பால் கொடுக்க அஞ்சுவதாகவும் பாசுரங்களைத் தாய்மையின் அச்ச உணர்வுடன் பாடியவர் பெரியாழ்வார்! இப்பாசுரங்களில் தாய்ப்பால் தரும் செயலை முலையுண்ணுதல் என்று சொல்லாமல் அம்மம் தருதல் என்று மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை, தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் போது 'அம் அம்' என்று வாயை அசைப்பதால் அம்மம் என்று கூறினார். குழந்தையின் இத்தகைய அம் அம் என்ற அசைவே, குழந்தை பேசும் முதல் சொல்லாகிய 'அம்மா' என்று மாறுகிறது. இதே அம்மா என்ற ஓசைதான், பகுத்தறிவற்ற ஆடுமாடுகளின் வாயிலும் பிறக்கின்றது.

தீரத்தெளிந்த சர்வமதஞான வேதங்களும் இதே அம்மம் என்ற ஓசையுடன்தான் 'ஓம்' என்றும் 'ஆமென்' என்றும், 'அமீன்' என்றும் ஆதிமூலப்பரம்பொருளை அழைக்கின்றன.

இதே பெரியாழ்வார், பெண்மை கலந்த பக்தியோடு பாசுரங் களைப் பாடும்பொழுது, கோபியர்கள் எம்பெரு மானிடம் காமுற்று வருந்துவதாகவும், எம்பெருமானிடம் காமுற்ற நாயகிக்காக அவள்தாய் வருந்துவதாகவும் பாசுரங் களைப் பாடியுள்ளார்.

ஆக, பெரியாழ்வார் தன்னை நாயகி நாயக பாவத்தில் தன்னையே நேரடியாக - நாயகி நிலையில் ஐக்கியப்படுத்திக் கொண்டு பாசுரங்களைப் பாடவில்லை.

குலசேகர ஆழ்வாரோ, பெண்மை நிலையோடு ஒன்றிக் கலந்த உணர்வுடன் பாசுரங்களை நெஞ்சுருகிப் பாடும் பொழுது - ஐயிரு

மாதங்கள் எம்பெருமானைச் சுமந்து பெற்ற தாயின் நிலையில் தன்னை மாற்றிக் கொள்கின்றார்.

இராமனைப் பெற்றெடுத்த கோசலையின் நிலையிலிருந்து 'கண்ணே! கரு மணியே! தாலே! தாலேலோ!' என்று பாடியதோடு + கண்ணனைப் பெற்றெடுத்த தாய் தேவகியின் நிலையிலிருந்து, தான் பெற்ற பிள்ளையை, அவன் வளரும் பருவங்களை, கொஞ்சிப் பேசும் மழலையை, குறும்பு விளையாட்டுக்களை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத செயலற்ற நிலையை - 'பிள்ளைமை இன்பத்தை இழந்த பாவியேன்!' என்றும் - 'வஞ்ச நெஞ்சுடன் வந்த பேய் மகளின் நஞ்சு நிறைந்த முலையையும் சுவைத்து அருள் செய்த கண்ணா!' அதிலும் கடைப்பட்டவளாக வெறிதே முலை சுமந்தேன்!' என்றும் -

'பேசத் தெரியாத உன்னிடம் உன் தந்தை யார் என்று கோபியர்கள் விளையாட்டாகக் கேட்கும்பொழுது - நீயோ உன் தந்தையாகப் பிஞ்சு விரலாலும், கடைக் கண்ணாலும் காட்டுகின்ற நல்வினைகளை நந்தகோபன் பெற்றுவிட்டானே! உன் தந்தை வசுதேவன் அப்படிப்பட்ட புண்ணியத்தைப் பெற்றிலனே!' என்றும் - 'நான் தாயாரில் கடையான தாய் ஆனேன்!' என்றும் - 'திருவிலேன்! ஒன்றும் பெற்றிலேன்! எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே!' - என்றும் - 'பாலுண்ணும்போது உன் ஒரு கையால் ஒரு முலையை நெருடிக் கொண்டு உன் வாயில் மற்றொரு முலையிருக்க, தாய் முகம் நோக்கும் உன் அருள் விழிப்பார்வை தன்னையும் இழந்தேன்! எல்லாம் இழந்தேன்!' என்றும் - தாய்மை நிலையில் புலம்பும் பக்திப் பாசுரங்கள் நெஞ்சை நெகிழச் செய்பவையாகும்.

அத்துடன் எம்பெருமானின் வரவுநோக்கிக் கோபியர்கள் உருகும் நிலையையும் அற்புதமான பாசுரங்களாகப் பாடியதோடு - இராமாவதாரத்தில் இராமன் கானகத்திற்குச் சென்ற பிறகு, தந்தை தசரதனின் நிலையிலிருந்து உயிர் பிரியும் நிலையில் 'கானகமே மிக விரும்பி நீ துறந்த வளநகரைத் துறந்து நானும் வானகமே விரும்பிப் போகின்றேன்!' என்றும் - 'நின்னையே மகனாகப் பெற, பெறுவேன் ஏழ்பிறப்பும்!' என்றும் உள்ளம் உருகித் தாய், கோபியர், தந்தை ஆகிய பாவங்களில், ஆற்றாமையும் பிரிவும் ஆகிய சோகச்சுவை ததும்பப் பாடியவர் குலசேகரர்.

உலகத்தையே கண் விழித்துப் பார்க்காமல், உலகத்தவரோடு பேசாமல் ஞான சமாதியில் திருக்குருகூர் ஆதிநாதன்

திருக்கோவிலில் உள்ள உறங்காப் புளிய மரத்தடியில் இரவும் பகலும் உணராமல் எப்பொழுதும் பரமாத்மப்பேரின்ப சுகத்தோடு அத்தைத் தின்று அங்கே கிடந்த, நம்மாழ்வாரோ - சகல மொழிகளிலும், சாஸ்திரங்களிலும் ஞானம் பெற்றவராய் நான்கு வேதங்களின் சாரமாகப் பாடிய பாசுரங்களாக எம்பெருமான் மீது காதல் கொண்ட தலைவியின் விரகதாப மயக்க நிலையில் உருகிப்பாடும் பாசுரங்களில் தலைவிக்காகத் தாய் வருந்தும் பாசுரம் முதல், தோழியின் கூற்றாகப் பாடப்பட்ட பாசுரம் வரை - இலக்கண இலக்கிய அகப்பொருள் துறைகளின் மரபு குறையாமல் பக்திப் பாசுரங்கள் பாடியுள்ளதோடு, தலைவி மடலேறத் துணிந்ததாகவும் மிக அற்புதமாகப் பாடி நாயகி நாயக பாவத்தை விளக்கியுள்ளார்.

திருமங்கையாரோ, தாய்மை நிலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு - கண்ணனை முலையுண்ண அழைத்தல், கண்ணனைக் கைகொட்டி விளையாடுமாறு - அழைத்தல், போன்ற பல துறைகளில் பாசுரங்களை அமைத்திருப்பதோடு - ஆய்ச்சியர் யசோதையிடம் கண்ணனைப் பற்றி முறையிடும் நிலை, கோபியர் கண்ணனுடன் ஊடுதல் போன்ற நிலைகளிலும் நாயகி ஆற்றாது புலம்பும் நிலையையும், தோழியர் கூற்றுக்களையும், தாய் - தலைவிக்காக ஆற்றாது புலம்பும் நிலையையும், தலைவியின் ஆற்றாமைக்காகத் தாய் நாயகனை வேண்டி இரந்து நிற்கும் நிலையையும் போன்ற பலதுறைகளிலும் பரமாத்ம பக்திப் பாசுரங்களைப் பாடியிருப்பதோடு - நாயகி, நாயக பாவ அடிப்படையில் மடலேறுதலைப் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்ற ஒப்பற்ற இரு பகுதிகளாகப் பாசுரங்களைப் பாடியுள்ளார்.

ஆனால் ஆண்டாள் கோதை நாச்சியோ, நாயக, நாயகி சரணாகதித்துவ பக்திப் பாதையைத் தெளிவுபடுத்த - தானே ஒரு பெண்ணாக அவதரித்து - தன் சரீரமும், ஜீவாத்மாவும் எம்பெருமானுக்கே சொந்தம் என்ற நிலையில் வளர்ந்து வாழ்ந்து - எம்பெருமானே, தான் என்ற பேரின்ப ஐக்கிய பாவத்தில் வாடும் மலர்மாலைகளைச் சூடிக்கொடுத்தும், வாடாப் பாமாலை களைப் பாடிக் கொடுத்தும் தன் வாழ்வின் இறுதியில் தன் சரீரத்தோடு எம்பெருமானுடன் சங்கமமாகிய ஒப்பற்ற பரமாத்ம நாயகி ஆவாள்.

ஆகப்பன்னிரு ஆழ்வார்களிலும் நாயக நாயகி பாசுரங்களைத் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள் ஆகிய மூவரும் நாலாயிர திவ்வியப்பிரபந்த, திராவிட வேதத்தில் பாடிப்

பரமாத்ம பேரின்ப சுகத்தில் திளைத்திருந்தாலும் - ஆண்டாள் மட்டுமே நாயகிநாயக பாவத்தின் முழுமையான சுகானுபவம் பெற்ற தனிச் சிறப்புப் பெற்றவள் ஆவாள்.

ஆண்டாள் - பரமாத்மாவின் சரீரமே தான் என்றும், தன் ஜீவாத்மா பரமாத்மாவின் இதயத்தில் நிலை பெற்றுள்ளது என்றும், இந்தக் கலியுகத்திலும் எம்பெருமான் தன்னை எப்படியும் தன் சரீரத்துடனேயே மாலை சூட்டி ஆட்கொண்டு விடுவான் என்றும் - நினைவிலும், கனவிலும் வாழ்ந்தவள்!

கோதையின் பக்திப்பாதை, மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி விழும் பெரு வெள்ளத்தைப்போலப் 'பள்ள மடை'யாகப் பாய்ந்த பிரேமையின் மயமானது.

ஏனைய ஆழ்வார்கள் அனைவர்தம் பக்திப் பாதைகளும் ஒவ்வொரு நிலையில் நிஷ்காமிய சரணா கதித்துவமாக ஆழங்கால்பட்டிருந்தாலும், பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கிச் செல்லும் நீரூற்றாக எழுந்த பக்தி அலைகளைப் போன்ற 'மேட்டுமடைத்' தன்மை வாய்ந்தவை. இந்நிலையிலும் கோதை ஆண்டாளின் பக்திப்பாதை நிகரற்றது.

ஆழ்வார்களுள் முதல் ஆழ்வாராகிய பொய்கையாழ்வார் முதல் இறுதியில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் வரையிலுமுள்ள ஆழ்வார்களின் காலம் 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையாகும்.

8 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் நள ஆண்டு ஆடித் திங்கள் சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க் கிழமையும் கூடிய பூர நட்சத்திரத்தில் ஆண்டாள் அவதரித்தாள் என்று சொல்லப்படுகின்றது.

பாண்டியநாட்டிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் துளசி வனத்தில் அவரால் கண்டெடுக்கப்பட்ட - இவள், கோதையெனப், பெயர் சூட்டப்பட்டு வளர்க்கப்பட்டாள் என்றும் - பச்சிளம் பருவத்திலேயே பெரியாழ்வாரின் வழி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் ஒப்பற்ற பரமபுருஷ நிலையை அறிந்து கொண்டு - கோதை கனவிலும், நினைவிலும் பரமாத்ம பக்திப் பரவசத்தோடு வளர்ந்து வந்தாள் என்றும் - எம்பெருமான் வடபத்திரசாயிக்கு நாள்தோறும் பெரியாழ்வார் பூக்களைப் பறித்துச் சாத்துவதற்காக மாலையைத் தொடுத்து வந்த ஸ்ரீ காரியத்தைச் செய்து கொண்டிருந்தார் என்றும் - ஒரு நாள், கோதை எம்பெருமானுக்குரிய மாலையை அவனுக்குச்

சாத்துவதற்குக் கொண்டு செல்லும் முன்னர், தான் அதைத் தன் கழுத்தில் சூட்டிக் கொண்டு அழகு பார்த்தாள் என்றும் - இச்செயலை நேரில் கண்ட பெரியாழ்வார் தன் ஸ்ரீகாரியத்தில் குற்றம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதி கோதையைக் கண்டித்தார் என்றும் - எம்பெருமானோ, பெரியாழ்வாரின் கனவில் தோன்றிக் கோதை சூடிக் கொடுத்த மலர் மாலையே தனக்கு இன்பம் தருவதாகக் கூறி ஒவ்வொரு நாளும், கோதை சூடிக் கொடுத்த மாலையையே கொண்டுவர வேண்டும் என்று ஆழ்வாருக்கு ஆணையிட்டார் என்றும் - பெரியாழ்வார் தன் வளர்ப்பு மகள் கோதையை எம்பெருமானின் பிராட்டியாகவே பாவித்து, அவளைத்தொழும் அப்பனாக மாறி அவள் சூடிக் கொடுத்த மாலையையே எம்பெருமானுக்கு அணிவித்து வந்ததோடு, கோதை பரமாத்ம நாயகனையே ஆண்ட நாயகியாக விளங்கியதால் அவளுக்கு ஆண்டாள் என்று பெயர் சூட்டினார் என்றும், ஆண்டாளின் முற்பகுதி வரலாறு கூறப்படுகின்றது.

ஆண்டாளின் பிற்பகுதி வரலாறாக - ஆண்டாள் எம்பெருமான் மீது அளவுகடந்த பிரேமைக்கு ஆளாகித் திருவரங்கனையே மணந்து கொள்ள முடிவு எடுத்தாள் என்றும் - தன் பதினைந்தாவது வயதில் எம்பெருமானை நாயகனாகப் பெற தன் தோழியர்களோடு கூடி மார்கழி மாதத்தில் பௌர்ணமியில் திருப்பாவை நோன்பு நோற்றதோடு முப்பது திருப்பாவைப் பாசுரங்களையும் பாடி அருளினாள் என்றும் - திருப்பாவை நோன்பிற்குப் பிறகும் எம்பெருமான் தன்னை மணக்கவராத காரணத்தால் எம்பெருமான் மீது விரகதாபமுற்று நாச்சியார் திருமொழிப் பாசுரங்களாக 143 பாசுரங்களைப்பாடி ஊன் உருக, உள்ளம் நெகிழ, உயிர்மெலிய வாடினாள் என்றும் - திருவரங்கனே பெரியாழ்வாரின் கனவில் தோன்றிக் கூறிய ஆணையின் வண்ணம் திருவரங்கத்திற்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டு, பங்குனி உத்திரத் திருநாளில் திருவரங்கனுடன் சங்கமம் ஆனாள் என்றும் கூறப்படுகின்றது.

ஆண்டாள் கோதை நாச்சியின் அவதார வரலாறு முழுவதிலும் விளைந்த நிகழ்ச்சிகளின் ஒவ்வொரு அணுவிலும் பரமாத்மப் பேரின்ப சுகானுபவங்கள் தெய்வமணம் கமழ்கின்றன.

ஆண்டாள் அவதரித்த தலமாகிய ஸ்ரீ வில்லிபுத்தூர் - எம்பெருமான் வராக அவதாரம் எடுத்த காலத்தில் ஹிரண் யாட்சனை வதைத்த தலமாகப் பாவிக்கப்பட்டு, ஒரு வராக க்ஷேத்திரமாகக் கருதப்படும் தலமாகும்.

இதே ஸ்ரீவில்லிபுத்தூர் - முதலில் செண்பகக் காடாக விளங்கி, பிறகு மல்லி என்ற பெண்ணரசி ஆட்சி செய்து, காடு திரித்து நாடாக்கி, மல்லி நாடு என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது. மல்லியின் பெண்ணாட்சி நடந்த தலத்தில்தான் - ஆண்டாளும் அவதரித்து, ஆன்மீக நிலையில் நாயகனையும் ஆண்ட நாயகியின் ஆட்சியை நடத்திக் காட்டியிருக்கிறாள்.

அரசி மல்லியின் மைந்தன் வில்லி, எம்பெருமான் ஆணையின் வண்ணம் இத்தலத்தைப் புதுப்பித்து உருவாக்கியமையால் வில்லிபுத்தூர் என்ற பெயரை இத்தலம் பெற்றது.

திருவில்லிபுத்தூரில் பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ் வாரும், ஆண்டாளும் அவதரித்திருக்கின்றார்கள்.

இவர்கள் காலத்திற்குப் பின் அவதரித்த வில்லிபுத்தூரார் தான், வில்லி பாரதத்தைத் தமிழில் சொல்லமுதமாக வடித்து அழியாப் புகழ் பெற்றவர்.

அதுமட்டுமன்றி மாபெரும் இராமகாதையை உருவாக்கியக் கம்பரும் - இத்தலத்திற்கு வந்து இத்தலத்திருக்கோவிலில் ஆண்டாளை வழிபட்டிருப்பதோடு -

ஆண்டாளுக்குச் சூடகம் என்ற தலைப் பதக்கத்தையும் அணிவித்துள்ளார். ஆண்டாள் நாச்சியார் தன் திருமொழியுள் திருமாலிருஞ்சோலைமலை அழகருக்கு நூறுதடா அக்கார அடிசில் நிவேதனம் செய்வதாகப் பாசுரம்பாடி, செய்யாமல் விட்ட குறையை, உடையவர் இராமாநுஜர் அழகர் மலையில் நிறைவேற்றி விட்டு - இங்கு வந்து ஆண்டாள் சந்நிதியில், ஆண்டாளே, தன் திருவாய் மலர்ந்து தன்னை அண்ணன் என்று அழைக்கும் பேறு பெற்ற தலமும் - இத்தலமாகும்.

அண்மையில் அகோபில அழகிய சிங்க ஜீயரால் திருவரங் கத்தில் கட்டப்பட்ட மிகப்பெரிய இராஜ கோபுரம் எழுப்பப் படுவதற்கு முன்பு வரை அனைத்துத் திருக்கோவில்களிலும் மிகப்பெரிய ராஜகோபுரத்தைப் பெற்றிருந்த தலம், ஸ்ரீவில்லி புத்தூராகும்.

ஆண்டாளின் வளர்ப்புத் தந்தையாகிய பெரியாழ்வார், இளமைக் காலத்தில் விஷ்ணு சித்தன் என்ற பெயரோடு விளங்கியதோடு அனைத்து வேதங்களிலும், சகல சாஸ்திரங்களிலும் மிக அழுத்தமான புலமையைப் பெற்றிருந்தார்.

விஷ்ணுசித்தர் எம்பெருமானுக்குச் சேவை செய்வதையே தன் பிறவிப் பயனாகக் கொண்டு வில்லிபுத்தூரில் வட பெரும் கோவிலில் பள்ளி கொண்ட கோலத்தில் விளங்கும் வடபத்திரசாயி எம்பெருமானுக்குப் பூத்தொடுத்து மாலை கட்டி சாத்திவரும் பணியை நாள்தோறும் செய்து வந்தவர் ஆவார். அதற்காகவே ஒரு நந்தவனம் அமைத்து மலர்ச் செடிகளையும், துளசிச் செடிகளையும் பயிரிட்டு வளர்த்து வந்தார்.

அக்காலத்தில் மதுரையை ஆண்ட பாண்டியன் வல்லபதேவன், அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்ற புலமையாளனாக விளங்கி மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் நடத்தி வந்தான்.

அவனுக்குள்ளாக, யாகங்களைச் செய்யாமல் அந்தமில் இன்பத்து அழிவில் வீடு பேற்றைப் பெறும் வழி யாது? என்று சிந்தித்து - மெய்ப்பொருளை உணரும் வழிகாட்டும் சான்றோர் களைத் தேடினான்.

அப்பொழுது சர்வ வேத தத்துவங்களையும் தெளிந்து உணர்ந்த செல்வ நம்பி என்பவர் அவனிடம், "வேதமுடிவாகிய பரம்பொருளை, தகுந்த ஞானி ஒருவரின் வழியாக அறிந்து அவர் கூறும் வழியில் ஆதி அந்தமற்ற பரம்பொருளின் நிலையைத் தெரிந்து கொண்டு அப்பரம் பொருளின் வழியாக 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடு பேற்றை'ப் பெறலாம்!" என்று கூறிச் சென்றார்!

வல்லபதேவன், எவ்வளவோ முயற்சித்தும் - எவராலும் வேத முடிவாகிய பரம்பொருளின் தன்மையை உணர்த்த இயலவில்லை.

இறுதியில் ஒரு பெரும் கம்பத்தை நட்டு அதன் உச்சியில் பெரும் பொற்குவியலைப் பொற்கிழியாகக் கட்டி வைத்து 'மெய்ப்பொருளை எமக்குத் தெளிவாக உணர்த்தும் ஞானிக்கு இப்பொற்கிழி, தானாக அறுந்துவிழும்' என்று பறையறைந்து அறிவித்தான்.

அப்பொற்கிழியின் முன்னர் எண்ணற்ற வேத வித்தகர்களும், பண்டித சிரோமணிகளும் நின்று கொண்டு எவ்வளவோ தத்துவார்த்தங்களைச் சொல் மழையாகப் பொழிந்தும், பொற்கிழி அறுபடவில்லை.

ஆனால் எம்பெருமானின் ஆணையின் வண்ணம் மதுரைக்குச் சென்ற விஷ்ணுசித்தர், பொற்கிழி கட்டப்பட்டுள்ள கம்பத்தின்

முன்பு நின்று கொண்டு - வேத முடிவாக விளங்கும் ஆதிமூலப்பரம் பொருளின் தன்மையை மிக அற்புதமாக விளக்கினார்.

அப்பொழுது - பொற்கிழி கட்டப்பட்ட கம்பம், தானே வளைந்து பொற்கிழி விஷ்ணுசித்தரின் கையருகில் வந்து பணிவுடன் வளைந்து தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு சொல்வதைப்போல நின்றது. விஷ்ணுசித்தரும் பொற்கிழியைப் பெற்றார்.

பிறகு வல்லபதேவன் விஷ்ணு சித்தருக்குப் பட்டர்பிரான் என்ற பட்டத்தையும் வழங்கியதோடு அளவற்ற பரிசுகளையும் தந்து, அவரைப் பட்டத்து யானையின் மீது ஏற்றி வைத்துச் சகல ராஜ மரியாதைகளுடன் 'வேத முடிவை உணர்த்திப் பொற்கிழி பெற்ற பட்டர்பிரான் வந்தார்! பட்டர்பிரான் வந்தார்'! என்று கட்டியம் கூறவைத்து - மதுரை வீதிகளிலெல்லாம் உலாவரச் செய்து மாபெரும் விழாவையே கொண்டாடிவிட்டான்.

அப்பொழுது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், பட்டர் பிரானுக்கும், பாண்டியனுக்கும் வானத்திலிருந்து இறங்கிய நிலையில் பிரத்தியட்ச சேவையைத் தந்தருளினான்.

மாயவனின் பேரழகில் தன்னை மறந்து பக்திப் பரவச சுகானுப ஆனந்த மிகுதியை அனுபவித்த பட்டர்பிரான் - எம்பெருமான் மீது கண் அடிபட்டுவிடக்கூடாது என்று கவலையுற்று பல்லாண்டு பாசுரங்களைப் பன்னிரெண்டு பாடி திருஷ்டி கழித்தார்.

பிறகு பட்டர்பிரான் வில்லிபுத்தூர் திரும்பி, பொற்கிழி அறுத்துக் கொண்டு வந்த பொன்னைக் கொண்டு வடபெரும் கோவிலைப் புதுப்பித்து எம்பெருமானுக்குச் சேவை செய்து வந்தார்.

திரேதாயுகத்தில் மிதிலையில் யாகசாலை அமைப்பதற்காக ஜனக மன்னன் கலப்பையைக் கொண்டு பூமியை உழுது கொண்டிருந்தபொழுது திருமகளின் அம்சமாகிய சீதா பிராட்டி குழந்தையாய் அவதரித்து ஜனக புத்திரியான ஜானகியாக உருவெடுத்ததைப் போல - இக்கலியுகத்தில் பட்டர்பிரான் எம்பெருமான் வடபத்திரசாயிக்கு மாலை கட்டுவதற்காக, தான் அமைத்த நந்தவனத்திற்குச் சென்றபொழுது, துளசிச் செடியின் அடியில் பூதேவியின் அம்சமாக அவதரித்துக் கிடந்த குழந்தையைக் கண்டெடுத்தார். தன் வளர்ப்பு மகளாக வந்தவதரித்த குழந்தையை வாரி அணைத்துத் தூக்கி, அக்குழந்தையின் அழகையும், அம்சத்தையும் கண்டு பேரானந்தம் கொண்டார்.

குழந்தையின் மீது ஏதோ ஒரு ஞானஒளி வீசுவதையும், இயல்பான ஞானஒளியின் அழகுடன் கூடிய அக்குழந்தைக்குச் செயற்கை அலங்காரங்கள் செய்து அழகு பார்த்தால் எப்படி இருக்கும் என்பதையும் பட்டர்பிரான் சற்று சிந்தித்தார்.

உலகத்தில் உள்ள புறஒளிமுழுவதும் சூரியன் வழியாகவே பிறக்கின்றது. இவ்வொளி மனித உடலில் படும்பொழுது வெப்பத்தை விளைவித்துச் சுட்டெரிக்கும்.

ஆனால் பரமாத்ம பரம்பொருளின் திருவருளால் மனித ஆத்மாவில் ஞானஒளி தோன்றும்பொழுது, தகதகவென்று ஜெகஜோதியாக குளிர்ந்த நிலையில் சரீரத்தில் பிரகாசிப்பதோடு - பார்ப்பவர்களையும் வசீகரித்துக் குளிரச் செய்யும்.

பட்டர்பிரான் தான் கண்டெடுத்த குழந்தையிடம் இத்தகைய ஆத்ம ஞான ஒளி வீசுவதை உணர்ந்ததோடு, இவ்வொளி பரமாத்மபுருஷனிடமிருந்து வந்திருப்பதையும் ஞானத்தால் தெரிந்து கொண்டார்.

உடனே குழந்தைக்குக் கோதை என்று பெயர் சூட்டினார். **கோ** என்றால் ஜீவாத்ம ஞானக் கதிர், **ஒளி** என்பது பொருளாகும்; **தை** என்றால் பிரகாச மயமாகப் பிறந்த பெண்குழந்தைக்கு, பட்டர்பிரான் அணிசெய்து அழகு பார்க்க விரும்பிய **அலங்காரம்** என்பது பொருளாகும்.

பட்டர்பிரான் தன் வளர்ப்புமகள் கோதையைக் கண்ணின் கருமணியை இமைகாப்பதைப் போல் காத்து வளர்த்தார், கோதையும் ம்ழலை முதலிய குழந்தைப் பருவங்களைக் கடந்து சிறுமியானாள்.

கண்ணிற்குத் தெரியும் சரீர சம்பந்தப்பட்ட புற ஒளியும், உயிரினின்று எழும் ஆத்மாவின் அக ஒளியும் வெவ்வேறு நிலையில் அமைந்தவையாகும்! உடலில் உள்ள தேஜஸ் ஆகிய ஒளியும், ஆத்மாவில் உள்ள ஞான ஒளியும் இக்குழந்தையிடம் ஒருங்கே அமைந்திருந்தமையை பட்டர் பிரான் உணர்ந்தார். ஓர் ஆண் குழந்தையை வளர்க்கும் பேறு கிட்டவில்லையே என்ற ஒரு ஏக்கம் ஏற்பட்டது.

உடனே மாயவன் கண்ணனைத்தன் வளர்ப்பு மகனாகப் பாவித்துக் கொண்டு வளர்ப்புத்தாய் யசோதையின் நிலையிலிருந்து - கண்ணனைத் தாலாட்டுதல், கண்ணனோடு விளையாடச் சந்திரனை அழைத்தல், கண்ணனை செங்கீரையாடச் சொல்லிக் கொஞ்சுதல், உட்காரும் சப்பாணிப் பருவத்தில்

கைகொட்டி விளையாடச் சொல்லிக் கெஞ்சுதல், கண்ணன் தட்டுத் தடுமாறி தளர்நடை நடந்து நடக்கமாட்டானோ என்று உருகுதல், தளர்நடை நடந்துவரும் கண்ணனை அணைத்துக் கொள்ள அச்சோ அச்சோ என்று பாசத்தோடு அழைத்தல், கண்ணன் தன் முதுகின் பின்புறமாக வந்து கழுத்தைக் கட்டிக் கொள்ளும் இன்ப சுகத்தை அனுபவித்தல், கண்ணன் கண்மூடி கண் மூடி பூச்சிக் காட்டிப் பயமுறுத்தி விளையாடுவதை அப்பூச்சி காட்டுகின்றான் என்று அனுபவித்தல், கண்ணனைத் தாய்ப்பால் உண்ண அழைத்தல், எம்பெருமானின் 12 நாமங்களையும் கூறிக் காதுகுத்த அழைத்தல், கண்ணனை நீராட அழைத்தல், கண்ணனின் கூந்தலை வாரிவிடக் காக்கையை வருகவென அழைத்தல், கண்ணன் விளையாடக் கோல் கொண்டு வருமாறு காக்கைக்குக் கூறுதல், கண்ணன்மீது கண்திருஷ்டிபடாமல் அந்தி நேரத்தில் திருஷ்டிகாப்பிட அழைத்தல், கண்ணனின் தீராத விளையாட்டு லீலைகள், கோபியர்கள் யசோதையிடம் கண்ணனின் குறும்புகளைக் கூறி முறையிடுதல், குறும்புகளை உணர்ந்த யசோதை கண்ணனுக்குத் தாய்ப்பால் கொடுக்க அஞ்சுதல், கண்ணனைப் பசுங்கன்றுகளை மேய்க்க இடைச் சிறுவர்களுடன் அனுப்பிவிட்டு யசோதை வருந்துதல், கண்ணன் மாடுமேய்த்து விட்டுத் திரும்பி வருதலைக் கண்டு யசோதை மகிழ்தல் - போன்ற பாசுரங்களைத்தாய்ப் பாசத்துடன் எம் பெருமான் மீது பட்டர்பிரான் பாடி உருகினார்.

பச்சிளம் பருவத்திலேயே பட்டர்பிரானின் ஒவ்வொரு திருப்பணியிலும் பங்குகொண்டு எம்பெருமான் மீது தீராத காதல் கொண்டாள், கோதை.

அதுவும் பட்டர்பிரான் கண்ணனின் தீராத விளை யாட்டுக்களை - 'தாழியில் சேர்த்து வைத்த வெண்ணெய் முழுவதையும் திருடித் தின்று விழுங்கிவிட்டு, தாழியையும் கல்லில் போட்டு உடைத்துச் சிரித்து மகிழும் கண்ணனின் குறும்பு -

கோபி ஒருத்தி கறந்த பால் முழுவதையும் குடம் குடமாக மிடாவிலும், தடாவிலும் ஊற்றி அடுப்பில் ஏற்றி வைத்து, தன் மகளைக் காவலாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு அடுப்பு மூட்ட நெருப்பு வாங்கி வரப்பக்கத்து வீட்டிற்குச் சென்று திரும்புவதற்குள் கண்ணன் அவ்வளவு மிடாக்களி லிருந்தும், தடாக்களிலிருந்தும் பால் முழுவதையும் குடித்து விட்டு ஏதும் அறியாதவனைப்போல இருக்கும் குறும்புத்தனம் -

மற்றொரு கோபி - செந்நெல் அரிசி, சிறுபருப்பு, வெல்லப்பாகு, நறு நெய்பால் ஆகியவற்றைத் திரட்டி 12 திருவோண விழாக்கள் கொண்டாடுகின்ற அளவிற்குப் பலகாரங்கள் செய்து வைத்ததைத் தெரிந்து கொண்ட கண்ணன், எவரும் அறியாமல் எல்லாவற்றையும் எடுத்து விழுங்கி விட்டு ஒன்றும் தெரியாதவன் போல் இதே கோபியிடம் வந்து தின்பதற்கு பலகாரம் கேட்டுக் கொண்டு ஒன்றும் தெரியாதவனாக நிற்கும் கள்ள விளையாட்டு -

மற்றொரு கோபி - வெல்லப் பாகு கலந்த லட்டு, சீடை, எள்ளுருண்டை ஆகியவற்றைச் செய்து பல பாத்திரங்களில் நிறைத்து வைத்துவிட்டுத் தன் வீட்டில் யார் நுழைந்து விடப்போகிறார்கள் என்று காவல் வைக்காமல் வெளியே வந்த நேரம் பார்த்து, கண்ணன் யாரும் அறியாமல் உள்ளே நுழைந்து அவ்வளவையும் அள்ளித் தின்று விட்டு, அதுவும் போதாமல் வீட்டிலுள்ள உறியைப் பார்த்து வெண்ணெய் கிடைக்குமா? என்று ஆராய்ந்து கொண்டிருந்த மாயக் குறும்பு -

கண்ணன் மற்றொரு கோபியின் மகளை வெளியே இழுத்துக் கொண்டு போய் அவள் கை வளையலைக் கழற்றிக் கொண்டு சென்று நாவற்பழம் விற்கும் பெண்ணிடம் அதைக் கொடுத்து நாவற்பழங்களை வாங்கித் தின்று விட்டுத் தன்னிடமே வந்து, என் மகளின் கை வளையல் எங்கே என்று என்னையே கேட்டதோடு - என்னைப்போல் தனக்கும் ஒன்றும் தெரியாது என்று கள்ளச்சிரிப்புச் சிரித்து விட்டு நின்ற மாயவனின் கள்ளம் கபடமற்ற குறும்பு - ஆகியவற்றைக் கோதை கேட்டு ரசித்துத் தன்னை மறந்து சிரித்து ஆரவாரம் செய்ததுடன், கண்ணனிடம் தணியாத மோகமுற்றாள்.

பட்டர்பிரானுடன் கோதையும் நந்தவனம்சென்று பூக்களைப் பறித்தும், அவருடன் சேர்ந்து பூக்களைத் தொடுத்தும் கொடுத்தாள்.

வடபெரும் கோவிலிற்குத்தன் தந்தையுடன் சென்று மாலை சாத்தி அவளும் எம்பெருமானை வழிபட்டாள்.

பட்டர்பிரானும் கோதையின் பக்திப்பரவசத்தை உணர்ந்து அவள் ஆசானாகவும் மாறிக் கண்ணனைப் பற்றிய கதை களையும், வைணவ தத்துவங்களையும், எம்பெருமான் குடி கொண்ட 108 திவ்யதேச மகிமைகளையும், எம்பெருமான் மேற்கொண்ட தசாவதாரங்களையும், தாசானுதாச வழிபாட்டு முறைகளையும் - ஞான உபதேசம் செய்தார்.

கோதையும் ஞானப்பூங்கொடியாக வளர்ந்து, ஸ்ரீவில்லி புத்தூர் வாழ்வோர் அனைவரையும் தன் ஞானபக்திப் பரவசத்தாலும், பேசிய சொற்களாலும், செயல்களாலும் கவர்ந்து - அனைவராலும் போற்றப்பட்டாள்.

கோதையின் ஆழ்மனத்தில் எம்பெருமானே வியாபித்து நின்றமையால் - அம்மாயவனே தன் சரீரத்தையும் ஆத்மாவையும் அனுபவிக்கும் ஒரே நாயகன் என்ற வைராக்கியமான முடிவிற்கும் வந்துவிட்டாள்.

அவள் 108 எம்பெருமான்களிலும், தசாவதார எம்பெருமான்களிலும், தன் நினைவிலும் கனவிலும் உள்ளத்திலும் உடலிலும் நிறைந்து நிற்பவன் யார் என்பதை ஆராய்ந்தாள்.

வடமதுரையில் உள்ள கண்ணனின் லீலைகளைக் கேட்டு கோதை மெய் சிலிர்த்தாள்.

வடமதுரையில், மாயவன் எம்பெருமான் கண்ணன் ஆடிப்பாடிக் குழலூதிக் கோபியர்களுக்குச் சரீரசுகம் தந்தவன் ஆவான். எனவே வடமதுரை மாயவனைப் பற்றிக் கேட்டதும் கோதையும், தனக்குள் சரீரசுகம் பெற்று, மெய்சிலிர்த்திருக்கின்றாள்.

திருவேங்கடமுடையானைப் பற்றித் தெரிந்த பொழுது - கோதை முகமலர்ச்சி கொண்டாள்.

திருவேங்கடமுடையான் திருமலையில் தனித்து, திருமகளுக்குள் வாசம் செய்யும் ஸ்ரீநிவாசன் ஆவான். தன் இதயத்தில் திருமகள் இல்லாமல், ஆனால் திருமகளுக்குள் தான் இருந்துகொண்டு - அப்படியும் திருமலையில் தனிமையில் நின்ற கோலம் கொண்ட பாலாஜியைப் பற்றிக் கேள்விப்பட்டதும் கோதையின் இதயம் நகைப்புடன் மலர்ந்ததால், முகமும் மலரப் பெற்றாள்.

திருமாலிருஞ்சோலை அழகரைப்பற்றி அறிந்தபொழுது நெஞ்சில் மகிழ்ச்சி பொங்கினாள்;

கள்ளழக எம்பெருமான் அழகிய சுந்தரவல்லியுடன் நின்ற கோலசேவை தருபவர்! அழகரின் பேரழகைப் பற்றி அறிந்ததும் அழகரின் பேரழகில் கோதை, நெஞ்சம் பூரித்து மகிழ்ச்சி பொங்கி இருக்கிறாள்.

ஆனால் திருவரங்கத்துக், கிடந்த கோலம் கொண்ட அழகிய மணவாளனின் பெருமைகளைக் கேட்டதுமே - கோதை

மெய்சிலிர்த்தாள்! அகமும், முகமும் பொங்கிப் பூரித்தாள்! ஆத்மாவும், உடலும், அரங்கனையே கூடிக்கலந்த பரமாத்ம பேரின்ப சுகத்தை அடைந்து, திருவரங்கத்து அழகிய மணவாளனையே தன் மணவாளனாகத் தானே தனக்குள் நிச்சயித்துக் கொண்டாள்.

கோதை, திருவரங்கனைத்தன் மணவாளனாகத் தேர்ந்தெடுத் ததில் பல உள்ளார்த்தங்கள் அமைந்துள்ளன.

வட மதுரை கண்ணனோ, ஒரு குழந்தை! வேங்கடவனோ பத்மாவதி, இருந்தும் தனிமையில் உள்ளவன்! அழகரோ, அழகிய சுந்தரவல்லியின் மீது தணியாத காதல் கொண்டு மனையாளைப் பிரியாதவர்!

மூவரும் நின்ற கோலம் கொண்டவர்களாக ஓய்வுநேரம் இல்லாமல் நின்று கொண்டிருப்பதோடு, சூரியன் மறையும் மேற்குத்திசையை நோக்கி உள்ளவர்கள்.

ஆனால் - திருவரங்கனோ, தர்மதேவன் வாழும் தென்திசை நோக்கிய - கிடந்த கோலத்தில் மாப்பிள்ளையாக விளங்கும் அழகிய மணவாளன் ஆவான்.

தர்மதேவன் வாழும் தென்திசை நோக்கிய அழகிய மணவாள அரங்கன்தான், தனக்கு மனையாளாகும் தர்மபத்தினியை என்றென்றும் காப்பான் என்பது கோதையின் கருத்து.

மேலும் எம்பெருமானின் மூவகைக் கோலங்களுள் வீற்றிருந்த கோலம், விண்வெளியில் உள்ள பரமபதமாக விளங்கி மறுமைக்கு நித்திய சூரிகளுக்குப் பயன்படுவது!

ஏனைய இருவகைக் கோலங்களுள் நின்றகோலம், தன் அடியார்களுக்கு வரம் தருவது! கிடந்த கோலமோ, மண் ணுலகைக்கடந்த விண்ணுலகில் திருப்பாற்கடலில் அறிதுயில் கொண்ட க்ஷீராப்தி நாதனாக விளங்குவது!

(க்ஷீராப்தி-கடல்; க்ஷீராப்திதனயை- கடல் அரசனின் மகளாகிய திருமகள்; க்ஷீராப்திநாதன் - இலக்குமி மணாளனாகிய எம்பெருமான்) கிடந்த கோல க்ஷீராப்தி நாதன், யோக மாயையின் வடிவமானவன்.

எம்பெருமான், எடுத்த தசாவதாரங்கள் அனைத்துமே க்ஷீராப்திநாதனின் திருவுள்ளப்படியே நடைபெற்றவை. க்ஷீராப்தி நாதனின் முழுமையான யோக மாயையின் அவதாரமே - கண்ணனாக அவதரித்த ஸ்ரீகிருஷ்ணாவதாரம்!

ஓம் நமோ நாராயணாய எனும் அஷ்டாக்ஷர எட்டெழுத்துத்

திருமந்திர பிரணவத்துள் எம்பெருமான் விளங்குவதை உணர்த்தவே, க்ஷீராப்திநாதனின் திருப்பாற்கடல் விமானத்தை, அஷ்டாங்க விமானம் என்று கூறுவார்கள்.

108 திவ்ய தேசங்களுள் எம்பெருமான் கிடந்த கோலத்தில் 27 திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருந்தாலும் - கிடந்த கோலத்திலும் எட்டு வகைப்பட்ட கிடந்த கோலமாக உத்யோக சயனம், தர்ப்ப சயனம், தலசயனம், புஜங்கசயனம், போகசயனம், மாணிக்க சயனம், வடபத்திர சயனம், வீரசயனம் என்று சயனத்திருக்கோலம் கொண்டு அஷ்டாக்ஷர எட்டெழுத்திற்குள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பரமாத்ம பேரின்பத்தைத் தருகின்றார்.

108 திவ்ய தேசங்களுள்ளும் திருவரங்க எம்பெருமான் ஆதிகாலம் முதலாக சூரியகுல அரசர்களின் வம்ச வழிபாட்டிற்குரியவராக விளங்கிப் பிறகு ஸ்ரீராமாவதாரத்தில் இராமபிரான் தன் குலதனச்சொத்தாக விளங்கிய திருவரங்கனை விபீஷணனுக்கு அன்பளிப்பாகத் தரப்பெற்று - விபீஷணன் திருவரங்கனை இலங்கைக்கு எடுத்துச் செல்லும் வழியில், இலங்கைக்குச் செல்ல மனமில்லாமல் பாதி வழியிலேயே காவிரிக்குள் திருவரங்கன் நிலையாகப் பள்ளி கொண்டு விட்டான்.

108 திவ்ய தேசங்களிலும் 11 ஆழ்வார்களால் 247 மங்களா சாசனப் - பாசுரங்கள் பாடப்பட்ட சிறப்புடையன்வாக விளங்கு வதோடு மட்டுமல்லாமல், விண்ணில் உள்ள திருப்பாற்கடல் வைகுண்டத்தைப் போல மண்ணில் உள்ள பூலோக வைகுண்ட மாகிய திருவரங்கத்தில்தான். க்ஷீராப்தி நாதனின் யோகமாயை யின் கிடந்த கோலமாகத்தெற்கு நோக்கிப்பள்ளி கொண்டிருப் பதை உணர்த்தும் வகையில் - திருவரங்கத்தின் விமானமும் எட்டெழுத்துத் திருமந்திர பிரணவத்தின் பெயரை 'பிரண வாக்ருதி' என்று பெற்றுள்ளது.

மேற்கண்ட திருவரங்கனைப்பற்றிய முழுமையான சிந்தனைகளில் ஈடுபட்ட கோதை, திருவரங்கத்து அழகிய மண வாளன் இராமாவதார காலத்தில் மட்டும் அல்லாமல் - யோக மாயையின் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் நிலைபெற்ற கிருஷ்ண மங்கள திவ்ய தேசங்களோடும் தொடர்பு கொண்டுள்ளவன் என்பதையும் அறிந்து, திருவரங்கனே தன்னை மணப்பதற்குரிய நாயகன் என்பதைத் தனக்குள் முடிவு செய்து கொண்டாள்.

மேலும் தனக்கு நினைவு தெரிந்த காலம் முதல் தன் தந்தை

பட்டர்பிரானுடன் வட பெருங்கோவிலில் வழிபட்ட - கிடந்த கோல வடபத்திரசாயி வடபத்திர இலையாகிய ஆலிலைமீது பள்ளி கொண்ட கண்ணன் என்பதைத் தெரிந்து வைத்திருந்ததோடு - அக்கோவிலின் நின்ற கோல எம்பெருமான் திருவரங்கன் பெயரையும் தன்னோடு இணைத்துக் கொண்டு அரங்க மன்னார் என்ற பெயர் பெற்றிருப்பதையும், முன்பே கோதையின் இதயத்தில் பதிந்திருந்தமையால் திருவரங்கத்து அழகிய மணவாளனையே தன் மணாளனாக அவள் நிச்சயத்ததில் எந்த வியப்பும் இல்லை.

எம்பெருமான்தான், தனக்கு நாயகனாக வந்து மாலை யணிவித்து மணந்து கொள்ள வேண்டும் என்பதில் கோதை அசையாத நம்பிக்கையையும், வைராக்கியத்தையும் பெற்றிருந் தாலும் - இந்தக் கலியுகத்தில், எம்பெருமான் தன்னை வந்து மணந்து கொள்வது ஆகக் கூடிய காரியமா என்று, தனக்குள்ளாக அஞ்சினாள்.

சீதைக்காவது மிதிலையில் ஒரு வில் இருந்தது. வில்லைக் காரணமாக வைத்துச் சீதையைத் தேடி, எம்பெருமான் வந்தான்.

நப்பின்னைக்கு அடங்காக்காளை ஒன்றிருந்தது. அக் காளையை அடக்கும் சாக்கில், நப்பின்னையைத் தேடி எம்பெருமான் வந்தான்.

தன்னைத்தேடி எம்பெருமான் வருவதற்குத் தன்னிடம் எதுவுமில்லையே? - சீதையும், கோதையும் ஒருவராகி விட முடியுமா? நம்பின்னையும் தானும் ஒன்றாகிவிட முடியுமா? - என்றெல்லாம் கோதை, தனக்குள்ளாக நினைத்துப் பார்த்தாள்.

ஏன்? பிரேமை மட்டுமே கொண்டிருந்த ராதையையும், மீராவையும் எம்பெருமான் தனக்குள் சங்கமமாக்கிக் கொள்ள வில்லையா? அதைப்போலத் திருவரங்கனும் தன்னை மணந்து கொள்ளமாட்டானா என்றும் தன்னைத் தானே, தேற்றிக் கொண்டாள்.

கனவிலும், நினைவிலும் எம்பெருமானையே எண்ணிக் கொண்டு வளர்ந்து வந்த கோதை, ஒரு நாள் நிலைக் கண்ணாடியில் பூரித்துப் பொங்கிப் பொலிந்த தன் பேரழகைக் கண்டு நெஞ்சம் பூரித்தாள்!

தன் அழகு முழுவதும் அரங்கனுக்கே சொந்தம் என்று அப்பொழுதே நினைத்துக் கொண்டாள். உடனே தன்னை ஒரு கோபியாகக் கற்பனை செய்து கொண்டு தன் தலைமுடியை ஒரு

பக்கமாகச் சாய்த்து, கொண்டை போட்டுக் கொண்டாள்! மாயவனின் நீலநிறம் கொண்ட பட்டாடையை உடுத்திக் கொண்டாள்! தங்கத்தால்ஆன காறையைப் போன்ற அணிகலன்களைப் பூண்டாள்! கை நிரம்ப வளையல்களை அணிந்து கொண்டு, குலுக்கிக் குலுக்கி ஓசை எழுப்பிப் பார்த்தாள்! சிவந்த கொவ்வைக் கனி போன்ற தன் வாயழகை அப்படியும், இப்படியும் முறுவலித்து வாய் இதழ்களைத் திருத்தினாள். பிறகு நிலைக் கண்ணாடியின் முன் வளை குலுக்கி முறுவல் பூத்த முகத்துடன் மெல்ல நடை நடந்து பார்த்து தன் அழகைத் தானே ரசித்தாள், கோதை!

எல்லா அழகும் எம்பெருமானுக்கே என்று அவன் திருநாமங்களை ஆயிரம் ஆயிரமாகப் பிதற்றி மயங்கி நின்றாள். எம்பெருமானுக்கு ஏற்ற நாயகி தானே என்று அவள் தனக்குள்ளாக முடிவு செய்து தன் ஆன்மாவில் வியாபித்திருந்த தன் நாயகன் திருவரங்கன், தன் முன் மணமாலையுடன் நிற்பதாகவும், கோதை கற்பனை செய்து கொண்டாள்.

உடனே - வடபத்திர சாயிக்கு, சாத்துவதற்காகத் தானும் பட்டர்பிரானும் தொடுத்து வைத்திருந்த பூமாலைகளை எடுத்துத்தன் கழுத்தில் தானே அணிந்து கொண்டு, நிலைக் கண்ணாடியில் தன்னைத் தானே எம்பெருமானின் மங்கல மண நாயகியாகக் கற்பனை செய்து கொண்டு - நம்பிக்கேற்ற நாயகி நான்தான்! என்று தனக்குள்ளாகத் தானே சொல்லி மகிழ்ந்தாள்.

பிறகு - பட்டர்பிரான் வட பெருங்கோவிலுக்கு, பூமாலை சாத்தப் புறப்படும் நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்து - கோதை, தான் சூடியிருந்த பூமாலைகளைக் கழுத்திலிருந்து கழற்றி, முன்பிருந்த பழைய நிலையில் பூக்கூடையில் வைத்து விட்டாள்.

எம்பெருமானுக்குச் சூட்டப்பட வேண்டிய மாலைகளைத் தன் மகள் முன்னதாகவே சூட்டி அழகு பார்த்ததை அறியாத பட்டர்பிரான், வழக்கம் போல் அம்மாலைகளை எடுத்துச் சென்று வடபத்திரசாயிக்குச் சாத்திவிட்டுத் திரும்பினார்.

ஒவ்வொரு நாளும் - பட்டர்பிரான் எம்பெருமானுக்கு மாலைகளைப் பூக்கூடையில் வைத்துவிட்டுச் சென்றபின் தவறாமல் கோதையும் அம்மாலைகளைச் சூடி அழகு பார்த்துப் பிறகு பூக்கூடையில் மாலைகளை எடுத்து வைத்துவிடும் பழக்கம் பல நாட்களாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் - பட்டர்பிரான், தற்செயலாக வடபத்திர சாயிக்கு அணிவிப்பதற்காகத் தொடுத்து வைத்திருந்த பூமாலைகளைக் கோதை தன் கழுத்தில் அணிந்து கொண்டு நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்துப் பதைபதைத்துத் துடிதுடித்துவிட்டார்.

நந்தவனத்தில் வண்டுகள் தீண்டி எச்சில் படுவதற்கு முன்பு புனிதமான தன்மையில் வடபெருங் கோவிலுடையானுக்குக் கொய்து வந்த மலர்களை, பயபக்தியுடன் மாலைகளாகத் தொடுத்து எம்பெருமானுக்கு அணிவிக்க எடுத்துச் செல்லும் கடைசி நேரத்தில் - தன் மகள் கோதை, அம்மாலைகளைத் தன் கழுத்தில் அணிந்து களங்கப்படுத்தி விட்டதாக நெஞ்சம் குமுறி நின்றதோடு, கோதையையும் கடுமையாகக் கண்டித்தார்.

பிறகு - அவர், அவசரஅவசரமாக நந்தவனம் சென்று கிடைத்த மலர்களைக் கொண்டு மாலை தொடுத்து எம்பெருமானுக்குச் சூட்டியதோடு, தன் மகள் கோதை செய்த அபசாரச் செயலுக்குப் பொறுத்தருளுமாறு பிரார்த்தித்துக் கொண்டு, தாங்க முடியாத துயரத்துடன் தன் வீடு திரும்பினார்.

கோதையின் அபசார செயலுக்காக இரவெல்லாம் தூங்காமல் வருத்தத்துடன் படுத்துக் கிடந்த பட்டர்பிரான், சற்றுக் கண் அயர்ந்து உறங்கினார்.

அப்பொழுது அவர் கனவில் வட பத்திரசாயி காட்சி தந்து 'விஷ்ணுசித்தா! நாம் இங்கு பள்ளி கொண்டிருப்பதே கோதை சூடிக் கொடுத்த மாலைகளுக்கு ஆசைப்பட்டுத் தான்! நமக்காகப் பூத்திருக்கும் கற்பக நறுமலர் தான் கோதை! நாளை முதல் கோதை சூடிக் கொடுத்த மாலைகளையே கொண்டு வந்து நமக்குச் சூட்டு!' என்று கூறி மறைந்தார்.

கனவு கலைந்து விழித்தெழுந்த பட்டர்பிரான், தனக்குள்ளாக கோதையை மகளாகப் பெற்ற மாபெரும் பாக்கியத்தை நினைத்து நினைத்து மகிழ்ச்சி பொங்கக் கோதையிடம் சென்று, 'நான் பெற்ற பெருஞ் செல்வம் என் அருமை மகள் கோதையே! நீ என்னைமட்டும் ஆட்கொள்ளவில்லை! உலகம் முழுவதும் ஆண்டருளும் வடபத்திரசாயிஆன எம்பெருமான் அரங்க மன்னாரையே ஆண்டுவிட்டாய்! ஆண்டவனையே ஆண்ட நீ, இன்று முதல் ஆண்டாள் என்று அழைக்கப்படுவாய்! நீ சூடிக் கொடுக்கும் மாலைகளையே எம்பெருமான் தன் மனதிற்கேற்ற மணமிக்கவைகளாகக் கருதுகின்றான்!' என்று தன் மகளை - 'தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும்' அப்பனாக வணங்கினார்.

கோதையும் எம்பெருமான் பேரருள் கலந்த ஒப்பற்ற ஆளை தனக்கு மட்டுமே கிடைத்திருப்பதை எண்ணிப் பூரித்து, நாயகன் சொல் கேட்ட நாயகியாக நாணமுற்றுப் பேரானந்தம் அடைந்தாள்.

இந்நிகழ்ச்சியை அவ்வூரில் உள்ள அனைவரும் அறிந்து - தாங்கள் வாழும் பதி, கோதை பிறந்தவூர், கோவிந்தன் வாழும் ஊர் என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கோதையை ஆண்டாள் என்றும், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி என்றும் அழைக்க ஆரம்பித்தார்கள்.

எம்பெருமானும், தன் மகள் கோதை சூடிக்கொடுத்த மாலைகளின் மீது ஆசை வைத்துவிட்டான்! ஆனால் தன் மகள் கோதையோ, மாயவனே தனக்கு நாயகனாக வந்து தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்பதில் வைராக்கியம் கொண்டவளாக உள்ளாள்! கோதை, ஆண்டாளாக மாறினாலும், அவள் எண்ணம் ஈடேறுமோ? ஈடேறாதோ? என்று பட்டர்பிரான் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

பட்டர்பிரான் திருமகள் கோதை, பூமாலைகளைச் சூடிக்கொடுத்த ஆண்டாள் நாச்சியாராக மாறியதோடு - பட்டர்பிரானிடம் பெற்றிருந்த ஞானப்புலமையைக் கொண்டு எம்பெருமான் மீது பாமாலைகளைப் பாசுரங்களாகப் பாடிக் கொடுக்கும் பாவையாகவும், பாவை பாடிக் கொடுக்கும் பசுங்கிளியாகவும் மாறிவிட்டாள்.

உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் சரணாகதித்துவத்தின் முழுமை பெற்ற நாயக நாயகியத்துவ நிலைக்கு, மாபெரும் ஒரே உதாரணமாகத் திகழ்ந்தவளே ஆண்டாள்.

ஏனைய ஆழ்வார்களோ அல்லது எப்படிப்பட்ட தாஸானு தாஸர்களோ - அவர்கள் ஆண்களாகப் பிறந்த நிலையில் கற்பனையாகத்தான், தங்கள் சரீரங்களை ஆத்ம நாயகியர் நிலைக்கு மாற்றிக்கொண்டு பக்தி செலுத்த முடியும்!

ஆத்மாவோ - ஆணும், பெண்ணும் அற்ற நிலையில் உள்ளது. அப்படி இருக்கும் பொழுது அவர்கள் தங்கள் ஜீவாத்மாவை ஆத்ம நாயகியாக மாற்றிக் கொண்டு பாசுரம் பாடுவது, வலிந்த கற்பனை கலந்த பக்திப் பரவச நிலையே. இத்தகைய ஜீவாத்ம நாயகியர் தம் சரணாகதித்துவத்தில் - ஆன்ம ஒருமைப்பாட்டுப் பக்திப் பரவசம் மட்டும் முதன்மை பெற்று மிஞ்சுமேயன்றி,

இயற்கையான பெண்மைமிக்க சரீரத்துடன் பரம புருஷனுடன் சங்கமமாகும் முழுமைபெற்ற நாயகியின் அம்சம் அமையாது!

எனவே பெண்ணாகவே அவதரித்து, எம்பெருமானையன்றி வேறு எந்த நினைவுமே ஏற்படாத சூழ்நிலையில் வளர்ந்து, நாயகி நாயக பாவத்தில் பூக்களைச் சூடியும், பாக்களைப் பாடியும் கொடுத்த ஒரு பெண் ஆழ்வாராகிய ஆண்டாளின் நிலை ஒப்பற்றதாக இயற்கையில் அமைந்து விட்டது. அதனால்தான், எம்பெருமானே அவள் சூடிக் கொடுத்த மாலைக்காகக் காத்துக் கிடந்திருக்கின்றான்!

ஆண்டாள், தன் பிறவிப் பயனாக ஆதிமூலப்பரமபுருஷன் தனக்கு மணவாளனாகக் கிட்டுதற்குரிய வழி ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள்.

அதுதான் அவள், மார்கழி மாதத்தில் நடத்திய திருப்பாவை நோன்பு! பெண்கள் மார்கழி மாதத்தில் நோன்பு நோற்பது என்பது ஆதிகாலம் முதலே, வழிவழியாக வந்து கொண்டிருக்கும் சிறப்புடையது.

ஒவ்வொரு ஆண்டிலும், எம்பெருமான் ஓங்கி உலகளந்த உத்தமனாக அவதரித்த வாமனன் பிறந்த புரட்டாசி மாதத்திலும் - எம்பெருமான் மாயக்கண்ணன் தானே வடிவமாக நிற்கும் மார்கழி மாதத்திலும் அனைவரும் தூய்மையாக விளங்கி, நோன்புகளை நோற்பார்கள்.

புரட்டாசி மாதத்தில் எம்பெருமானை வழிபட்டு விரதம் இருந்தால் அம்மாதத்தில், அவன் படியளப்பான் என்பது ஐதீகம்.

ஓங்கி உலகளந்து உலக ஜீவராசிகளுக்கு எம்பெருமான் படியளந்து காக்கின்ற நிலையை நினைவுபடுத்தவே, இம்மாதத்தில் திருமண்காப்பிட்டு, கோவிந்தா! கோவிந்தா! என்று வரும் தாசர்களுக்கு, கோவிந்தா என்று சொல்லி அரிசி இடும்மரபு ஏற்பட்டுள்ளது.

புரட்டாசியில் கோவிந்தனே திருமண் காப்பிட்டுக் கொண்டு தன்னைக் கும்பிடுவோரைத்தேடி, கோவிந்தா! கோவிந்தா என்று குரல் கொடுத்து வருவதாகவும் - அவர்களுக்குத் திருமண் அணிந்தவர்கள் அரிசியை அளந்துபோடும் பொழுது, கோவிந்தனே படியளப்பதாகவும் ஓர் ஐதீகம்.

வாமனனின் அவதாரம், மிகவும் சக்தி பொருந்திய ஓர் அவதாரமாகும்.

எம்பெருமான் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், ராமன், பலராமன், கண்ணன், கல்கி ஆகிய பத்து அவதாரங்களை எடுத்தார்.

இத்தசாவதாரங்களைத் தவிர்த்து, தென்திசைக் கடவுளாகிய தக்ஷிணா மூர்த்தியிடம் மௌன ஞானோபதேசம் பெற்ற ஜனக, ஜனாதன, சனந்தன, சனத் குமாரர்களாகிய நால்வர், பத்ரிநாத்திலுள்ள நர நாராயணன், கபிலமுனிவர், இடபன், நாரதர், அயக்ரீவர், தத்தாத்ரேயர், மோகினி, யஜ்ஞபதி, வியாசர், தன்வந்திரி, புத்தர் ஆகிய பதினைவரையும்கூட எம்பெருமான் அவ்வப்பொழுது எடுத்த அவதாரங்களாகச் சொல்வார்கள்.

தசாவதாரத்துள் மீனாக, ஆமையாக, பன்றியாக, நரசிங்கமாக நான்கு அவதாரங்களை எடுத்தபின்பு - மனித வடிவில் எடுத்த ஐந்தாவது அவதாரமே, வாமனாவதாரம் ஆகும்.

சர்வநாசம் செய்து போரிட்டு எவ்வளவோ அழிவுகளை ஏற்படுத்தி மூன்று உலகங்களையும் கைப்பற்றாமல் -மிகக்குறுகிய வாமன வடிவத்தில் மிகவும் தந்திரமாக, இரந்து நிற்கும் கோலத்தில் மூவுலகங்களையும் வெற்றி கொண்டு, பாதுகாக்க எடுத்த அவதாரமே வாமனாவதாரம்!

காசியபருக்கும், அதிதிக்கும் மகனாக அவதரித்த வாமனாவதாரத்திற்குச் சகல சக்திகளும் ஏற்படவேண்டும் என்று சூரிய பகவான், சாவித்திரி மந்திரத்தையும் - தேவகுரு பிரகஸ்பதி பிரம சூத்திரத்தையும் உபதேசித்தனர். காசியபர் தர்ப்பைப் புல்லையும், தாய் அதிதி கௌபீனத்தையும் கொடுத்தனர். பூமாதேவி, அமரும் கறுப்பு மான்தோலையும், சந்திரன் தண்டத்தையும் தந்தனர்; பிரமதேவன் கமண்டலத்தையும், குபேரன் பிச்சை எடுக்கும் பாத்திரத்தையும் தந்தனர்; பரத்துவாசரோ, வேதங்களைப் புகட்டினார். பராசக்தி பார்வதியே முதலில் பிச்சையிட்டாள்.

இத்தகைய வாமனர், மாவலியின் யாக சாலைக்குச் சென்று அவனிடம் மூன்றடி மண் வேண்டி இரந்துபெற்று - பிறகு திரிவிக்கிரமனாகப் பெருவடிவம் கொண்டு மூவுலகங்களையும் இரண்டே அடியில் அளந்து, மூன்றாவது அடியை மாவலியின் தலைமீது வைத்துப் பாதாளத்தில் அழுத்தி, பாதல சுகங்களை அனுபவிக்கச் செய்து மூவுலகங்களையும் ஆட்கொண்டவர்!

வாமனருக்காகவே உலகெங்கும் திரு ஓணம் பண்டிகை இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தகைய ஓங்கி உலகளந்த உத்தமனாகிய வாமனரை வழி பட்டால்தான், உலகில் மழை பொழிந்து செழிப்படையும் என்பதையும் நன்குணர்ந்தவளே, ஆண்டாள்.

எம்பெருமான் படியளக்கும் மாதமாகப் புரட்டாசி விளங்குவதைப் போன்று - நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறி வரம் தரும் மாதம், மார்கழியாகும்.

மார்கழி மாத நோன்பு, பழங்காலத்திலிருந்தே நம் பாரத நாட்டில் மிகவும் சிறப்பு வாய்ந்த நோன்பாகும்.

ஆதியில் சமண சமயத்தவர்களே தங்கள் சமயத்தைச் சார்ந்த பாவை என்ற பிரபந்தத்தைப் பாராயணம் செய்து, மார்கழி நோன்பைக் கொண்டாடி இருக்கின்றார்கள்.

தனுர் ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் மார்கழியில் விடியற் காலத்தில் எவனொருவன் எழுந்து காலைக் கடன்களை முடித்து நீராடி ஸ்ரீமந்நாராயணனை வழிபாடு செய்கின்றானோ, அவன் ஆயிரம் ஆண்டுகள் இறைவழிபாடு செய்த பலாபலன்களை - தனுர்மாத ஒருநாள் வழிபாட்டில் பெறுகின்றான் என்றும்-

எல்லா யாகங்களையும் செய்வதை விடவும் - அனைத்துத் தீர்த்தங்களில் நீராடுவதைவிடவும் மிகுதியான புண்ணிய பலாபலனை மார்கழி மாதத்தில் ஒரு நாளில் செய்யும் வழிபாட்டில் பெறலாம் என்றும் -

எட்டு மாதங்களில் செய்த இறைவழிபாடுகளின் பலன்களை விட மிகுதியாக, மார்கழி மாதத்தின் ஒரே மாத வழிபாட்டால் பெறலாம் என்றும் -

மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து எவனொருவன் நீராடித் தன் கடமைகளைச் செய்கின்றானோ, அவனுக்கு இறைவன் தன்னையே அர்ப்பணிப்பான் என்றும்-

'கோகுலத்தில் இருந்த ஆயிரக்கணக்கான கோபியர்கள் எம்பெருமான் மீது காதல் கொண்டிருந்தார்கள் என்றும்- அவர் களிடம் மார்கழியில் அதிகாலையில் நீராடுமாறு எம்பெருமான் கூறியதாகவும், கோபியர்களும் அதைப் போலவே மார்கழியில் அதிகாலையில் நீராடினார்கள் என்றும் - வட மொழியில் பல இடங்களில் மார்கழி நோன்பின் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆவணி மாத கோகுலாஷ்டமியில் கண்ணன் அவதரித் திருந்தாலும், தான் மார்கழி மாதத்தில் முழுமையாக விளங்கு வதாகக் கீதையில் உபதேசித்துள்ளான்.

சைவ சமயத்தவர்களும் மார்கழியில் காலையில் நீராடித் திருவெம்பாவைப் பாக்களைத்தவறாமல் ஓதி, ஆதிசிவத்தின் பேரருளை நாடுகின்றார்கள்.

இதே மார்கழி மாதத்தில்தான் - பாவிகளுக்காகச் சிலுவையில் அறையப்பட்ட ஏசு பெருமானும் கர்த்தரின் அம்சமாக அவதரித்ததாகக் கூறப்படுகின்றது.

தமிழிலக்கியங்களிலும் மார்கழியின் தொடர்பு கொண்ட நிலையில் - தைந்நீராடல் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானின் ஆருத்திரா தரிசனம் வரும் மார்கழி நாள் திருவாதிரைக்குரிய சிறப்பு மிக்க விரதமாகவும் - மார்கழி மாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்கழி முதல் தை மாதம் வரையிலும் உள்ள நோன்பை விரதமாக நடத்துபவர்கள் சிறுமியர்களாக, விளங்கினர்.

சிறுமியர்கள் இந்நோன்பை நடத்தும்பொழுது, சிறுமியர்களின் தாய்மார்களும், தேவி அன்னை பராசக்தியின் நிலையில் உடன் இருப்பார்கள் என்றும் - இக்காரணத்தால் 'அம்பா ஆடல்' என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவார்கள்.

அம்பா என்றால் தேவி பராசக்தி என்பது பொருளாகும். மணமாகாத கன்னியர்கள், தாங்கள் விரும்பும் கணவரைப் பெறுவதற்கும் - மணமான மகளிரைத் தங்கள் கணவர் பிரியாது வாழ்வதற்கும் இம்மார்கழியில் பராசக்தியை வழிபடும் 'காத்தியாயினி' நோன்பைக் கொண்டாடி வந்துள்ளார்கள்.

பாகவதத்திலும் - மார்கழி முதல் தை மாதத்திற்குள் பௌர்ணமிக்கு முன்னும் பின்னுமாக அமைந்த ஹேமந்தருதுவின் முற்பகுதியாகிய மார்கழியின் அதிகாலையில் - பெண்கள் எழுந்து யமுனையில் நீராடி மணலை அலங்கரித்து, காத்தியாயினியாகப் பாவித்துத் தூப தீபங்கள் காட்டி - அரிசியையும், பச்சைப் பருப்பையும் கலந்து கஞ்சி வடிக்காமல் செய்த பொங்கலை நிவேதனம் செய்து - 'ஏ காத்தியாயினி'! மகா மாயையே! எல்லா உலகிற்கும் ஆதாரமானவளே! தேவி! பராசக்தியே! எங்களுக்கு நந்தகோபனின் மகன் கண்ணனைக் கணவனாகப்பெற அருள் செய்க!' என்று வழிபட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மணிவாசகர் அருளிய திருவெம்பாவையிலும் - திருவெம்பாவை நோன்பும் காத்தியாயினியின் சக்தி விரதம் என்ற குறிப்புடன்

'சக்தியை வியந்தது' என்ற திருவெம்பாவைத்தலைக் குறிப்புக் காணப்படுகின்றது.

கேரள மாநிலத்தில் தனுர்மாதத் திருவாதிரையில் பெண்களால் மட்டும் மார்கழி நோன்பு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கேரள மகளிர், இந்நோன்பைக் காமன் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

அதிகாலை நான்கு மணிக்கே துயில் எழுந்த கேரள நாட்டின் பெண்கள் குளங்களில் மன்மதனைப் பற்றிப் பாடிக் கொண்டு - கைகளால் தண்ணீரில் ஓசையை எழுப்பிய நிலையில் சூரியோதய காலம் வரையிலும் தண்ணீரைத் தட்டும் ஓசையிலேயே சுருதி தாளங்களை எழுப்பிக் கொண்டு, குதூகலத்துடன் நீராடி விட்டுப் பிறகு தண்ணீரை விட்டு வெளியில் வந்து தங்களை அலங்கரித்துக்கொண்டு ஊஞ்சலாடி இந்நோன்பைக் கொண்டாடுகின்றார்கள்.

இந்நோன்பை முடித்த பின்பு பெரிய விருந்துகளையும் வைத்துக் கதிரவன் மறையும் நேரம் வரும் வரையிலும் விழாவாகப் பெண்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள். மணமான பெண்களின் கணவர்கள் இவ்விழாவின் மாலை நிகழ்ச்சியில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் - இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத கணவர்கள், தங்கள் மனைவியரை விட்டுப் பிரிந்து சென்று விடுவார்கள் என்றும் கேரள மகளிர் கருதுகின்றார்கள்.

மார்கழி நோன்பு, பராசக்தி காத்தியாயினியை வரம் கேட்கும் நோன்பாகவும் - மன்மதனிடம் தங்கள் கணவரையோ, விரும்பியவரையோ கணவராக வந்து வாய்க்குமாறு வேண்டும் நோன்பாகவும் பல இடங்களில், பல நிலைகளில் கொண்டாடப்பட்டு வந்தாலும், பெண்கள் தேங்கி நிற்கும் குளங்களிலும், பெரிய தடாகங்களிலும்தான் - இம்மார்கழி நோன்பைக் கொண்டாடி இருக்கின்றார்கள்.

இம்மார்கழி நோன்பிற்கு வேதவிதிகள் எதுவும் இல்லை. மகளிர் தம் நெஞ்சில் எழுந்த நினைவுகளும் ஏக்கங்களும் - ஆங்காங்கே அவரவர் வழிவழி வந்த பழக்க வழக்கங்களுமே மூலமாக இருந்து வந்திருக்கின்றது.

மார்கழி நோன்பிற்கும், மன்மதனை வேண்டுதலுக்கும் ஒரு பெரும் தொடர்பு உள்ளது.

ஆதி சிவம் ஆழ்ந்த தவயோக நிலையில் தன்னை மறந்து ஆழ்ந்து நின்று - பராசக்தி பார்வதியை விட்டுப் பிரிந்திருந்த சூழ்நிலையில் - சிவனையும், சக்தியையும் சேர்த்து வைக்க வேண்டிய மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மன்மதன் - ரதியின் துணையுடன் சென்று ஆதிசிவத்தின் ஆழ்ந்த தவத்தையே கலைத்து, மலரம்புகளைக் காம பாணங்களாக வீசி எறிந்து போர் செய்தான். தன் தவம் நிலை குலைந்ததால் சினம் கொண்ட சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் கொடிய தீப்பொறிகளில், உலக அழகே உருவெடுத்த மன்மதன் எரிந்து சாம்பலானான்.

தன் மகள் ரதியின் கணவனாகிய மருமகன் மன்மதன், சிவபெருமானின் சீற்றத்திற்கு ஆட்பட்டு எரிந்து சாம்பலாக மாறினாலும், அதே நேரத்தில் ஆதிசிவத்தின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட அருள் கனிந்த தீப்பொறிகளி லிருந்து அழகே உருவெடுத்த முருகப்பெருமான் ஆறுமுகங்க ளோடு, அருமைத் திருக்குமாரனாக அவதரித்தான்.

மருமகன் மன்மதனை அழித்த அதே நெற்றிக்கண்ணின் தீப்பொறிகள்தாம், மகன் குமரக் கடவுளைப் படைத்தன.

பிறகு சாம்பலாகக் கருகிப்போன மன்மதன், மகள் ரதிக்கு மட்டும் உருவுடையவனாக, மற்றவர்களுக்குக் கண்ணில் புலப்படாத அருவமான உணர்வு மயமானவனாக - உருவாகவும் அருவாகவும், உயிர்ப்பிக்கப் பெற்றான்.

மன்மதனின் தன்மை விளக்கப்படும்பொழுது - அவன், எம்பெருமான் நாராயணனின் மனதிலிருந்து பிறந்தவன். இவன் மனைவி ரதி, எம்பெருமான் பள்ளி கொண்ட திருப்பாற்கடலில் பிறந்து - எப்பொழுதுமே இன்பத்துடன் இருக்க வேண்டு மென்று மன்மதனை மணந்து கொண்டவள்.

ரதி இல்லாத இடத்தில் இன்பம் இல்லாத காரணத்தால், இவளுக்கு ரதி என்ற பெயர் ஏற்பட்டதோடு; சிவபெருமானுக்கு மகளாகும் உரிமையையும் பெற்றாள்.

மன்மதனும் ரதியும் கூடி உயிரினங்களுக்குக் காம உணர்வை ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டவர்கள். மன்மதனின் வில், கரும்பு; அவன் ஏவும் மன்மத பாணங்கள் தாமரைமலர், அசோக மலர், மாம்பூ, முல்லை மலர், நீலமலர் எனும் ஐந்து மலர்கள்; இவன் வில்லில் கட்டப்படும் நாண், வண்டு! இவன் கொடி, மீன்; இவன் தேர், தென்றல்; இவன் தேரில் பூட்டும் குதிரை, கிளி; இவன்குடை; சந்திரன், இவன் படைகளோ, பெண்கள்!

படைகளின் துன்பத்தைப் போக்க வேண்டியது, மன்னனின் கடமை அல்லவா? அதனால் தான் - விரும்பிய கணவனை நாடிய கன்னியர்களும், கணவரைப் பிரிந்த மனைவியரும் காமதேவனை வேண்டி நோன்பு நோற்றிருக்கின்றார்கள்.

மேலும் - கோபமும், அக்னியும் வடிவெடுத்துச் சிவந்த திருமேனியை உடைய ஆதி சிவன் பராசக்தியை விட்டுப் பிரிந்திருந்த தவயோக காலத்தில் தன் பிராணனை தியாகம் செய்தாவது சிவத்தைச் சக்தியுடன் சேர்த்து வைத்த மன்மதன் - தாங்கள் விரும்பும் கணவரை, தங்களை விட்டுப் பிரிந்த கணவரைத் தங்களுடன் சேர்த்து வைக்க அரூபியாகவே இருந்து துணை செய்யமாட்டானா என்பதும் - மன்மதனை நோன்பு நோற்றதன் அடிப்படைக் காரணமாகவும் இருந்திருக்கின்றது.

தமிழிலக்கியங்களில் சிந்தாமணியில் சுரமஞ்சரி சீவகனை விரும்பிக் காமனுக்கு நோன்பு நோற்றதாகவும் - பெருங்கதையில் பதுமாவதி உதயணனுக்காகக் காமனுக்கு நோன்பு நோற்றதாகவும் - சிலப்பதிகாரத்தில் கோவலனைப் பிரிந்து வாழ்ந்த கண்ணகி, மீண்டும் தன் கணவனை அடையக் காம வேளின் கோட்டத்திற்கு வழிபாட்டிற்குத் தேவந்தி என்ற பார்ப்பனி, கண்ணகியை அழைத்ததாகவும் காணப்படும் குறிப்புக்களும் - மன்மதன் வழிபாட்டிற்குரிய அடிப்படையான காரணங்களை விளக்குபவை ஆகும்.

பக்திப் பரவசத்துடன் மணிவாசகர் தன்னைப் பெண்ணாகக் கற்பனை செய்து கொண்டு மார்கழி நோன்பாகத் திருவெம் பாவைப் பாசுரங்களைப் பாடும்பொழுது - சிவனடியார்களையே கன்னியர்கள் மணந்து கொண்டு தம் கணவரோடுகூடி, சிவனை வழிபட்டு வாழ விரும்புவதாக ஒரு பாவனை உணர்வுடன் -

**உன் அடியார் தாள் பணிவோம்!**
**ஆங்கவர்க்கே பாங்காவோம்!**
**அன்னவரே எம் கணவராவார்!**
**அவருகந்து சொன்ன பரிசே**
**தொழும்பாய்ப் பணி செய்வோம்!** என்றும்
**எம் கொங்கை நின்னன்பர்**
**அல்லார் தோள் சேரற்க!**
**எம்மை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க!**

என்றும் பாடி இருப்பதைப் பார்க்கும் பொழுது - பெண்கள், தாம் விரும்பும் கணவரை அடைய மார்கழி நோன்பு நோற்றுள்ளனர் என்பது புலப்படுகின்றது.

தான் சூடிக் கொடுத்த மாலைகளின் மீது நாட்டம் கொண்ட மாயவனையே - தன் ஜீவாத்மாவிற்கும், சரீரத்திற்கும் நாயகனாக வந்து வாய்க்க வேண்டும் என்ற ஒரே உறுதி கொண்ட நிலையில் ஆண்டாள் நோற்ற மார்கழி நோன்பும், பாடிய திருப்பாவைப் பாசுரங்களும் மிகமிக அற்புதமானவை!

மானிட ஜென்மத்தில், மனித சரீரத்துடன் மண்ணுலகத் திலிருந்து விண்ணுலகத்திற்குச் சென்று சேர்வது என்பது - அவ்வளவு சர்வ சாதாரணமான நிலையில் நடைபெறக் கூடிய ஒரு காரியம் அல்ல! கோதை ஆண்டாள்- மண்ணையும் விண்ணையும் கடந்த பரம புருஷ நாயகனோடு தன் சரீரத்துடனும், ஜீவாத்மாவுடனும் நாயகியின் அந்தஸ்தில் சங்கமமாகிக் கலக்க நினைத்த எண்ணம் - எப்படி ஈடேற முடியும்? உதாரணமாக -

ஏகபத்தினி ஒழுக்க சீலனாக இராமபிரான் அவதரித்த சூரிய குலத்தில், சத்திய தர்மத்திற்கே சாட்சியாகக் காட்டப்படும் அரிச்சந்திரனின் தந்தை, திரிசங்கு - தன் சரீரத்துடன் சுவர்க்கத்திற்குச் செல்லும் விபரீதமான பேராசைக்கு அடிமையாகி, அவன் சந்தித்த மாபெரும் சோதனைகள் முழுவதையுமே அறியாதவளா, ஆண்டாள்?

ஈனத்தனமான தன் சரீர சுகபோகங்களைத் தேவலோகத்திலும் சென்று, தன் கேவலமான மனித சரீரத்தில் அனுபவித்து மகிழவேண்டும் என்ற வக்கிரம் கொண்ட விபரீதமான பேராசையைத் தன் குலகுரு வசிஷ்டரிடம் வெளியிட்ட திரிசங்கு, தன் குலகுரு தன் விபரீதமான பேராசைக்கு இடம் தராததால் - குருவிடமே கோபம் கொண்டு, குருவின் கோபத்தையும் மூட்டிவிட்டு - வசிஷ்டரால், ஈனத்தனமான இழிந்த சண்டாள சரீரத்தில் வாழும் நிலையில் சபிக்கப்பட்டு விட்டான்.

பிறகு, வசிஷ்டரோடு தவ வலிமைகளில் போட்டியிட்டுத் தவம் செய்து வந்த விசுவாமித்திரரின் தவ வலிமையால், சண்டாள வடிவத்துடனேயே திரிசங்கு தேவலோகத்தை அடைந்தான்.

தேவலோகத்தில் சண்டாள வடிவம் கொண்டு சபிக்கப்பட்ட மனித சரீரத்துடன் திரிசங்கு வருவதைக் கண்ட தேவர்கள் மிகவும் கோபம் கொண்டு அவனைத் தலை கீழாக மீண்டும் மண்ணுலகை நோக்கித் தள்ளிவிட்டு விட்டார்கள்!

அந்தரத்தில் தலை கீழாகத் தொங்கிய நிலையில் விழுந்து கொண்டிருந்த திரிசங்கை - விசுவாமித்திரர், அப்படியே வானத்தில் தன் தவ வலிமையால் நிற்கச் செய்து, தனிப்பட்ட ஒரு

திரிசங்கு சுவர்கத்தையே படைத்துத் தந்தார். இத்தகைய அரும்பாட்டைத் திரிசங்கே பட்டிருக்கும் பொழுது, ஆண்டாள் தன் சரீரத்தோடு பரம புருஷ நாயகனோடு சங்கமம் ஆகமுடியுமா?

சுயநலம் கொண்ட வக்கிரம் கொண்ட விபரீதமான போக்கால்தான், திரிசங்கு படாத பாடுபட்டுப் பற்பல தொல்லைகளையும், சாபங்களையும் சந்திக்க வேண்டி ஆகிவிட்டது. ஆனால் -

கேவலமான ஒன்றாகத் தன் சரீரம் இருந்தாலும், ஆண்டாளின் இறைவனுக்கேக் காணிக்கை ஆக்கும் சரணாகதித்துவ மனோ பக்தியால் - பரமபுருஷ நாயகனின் நெஞ்சத்தில் சரீரத்துடன் இடம் பெற்ற தனிப்பெரும் தேவியாக, ஆக முடிந்தது!

திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட க்ஷீராப்தி நாத எம்பெருமானுக்குச் சேவை செய்யும் மகாபாக்கியம் பெற்ற கடல் மகள் நாச்சியார் பெரிய பிராட்டியாருக்குப் பிறந்த வீடும், புகுந்த வீடும் ஒன்றாகிய திருப்பாற் கடலாக அமையவில்லையா? என்று சிந்தித்தாள், ஆண்டாள். உடனே - தான் பிறந்த வில்லிபுத்தூரைக் கண்ணன் வளர்ந்த ஆயர் பாடியாகவும், தன் தோழியர்களை ஆயர் பாடியின் கோபியராகவும், வடபெருங்கோவிலுடையான் திருக்கோவிலை நந்தகோபனின் திருமாளிகையாகவும், எம்பெருமான் ஆலிலைமேல் பள்ளி கொண்ட வடபத்திரசாயியைக் கண்ணனாகவும் தனக்குள்ளாகக் கற்பனை செய்து கொண்டு - திருவரங்கத்து அழகிய மணவாளனை நாயகனாகத்தான் பெற வேண்டுமென்று மார்கழி நோன்பை நோற்கத் துவங்கியதோடு - மார்கழி மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் அனுபவித்த நாயகி நாயக சுகானுபவத்தைத் திருப்பாவைப் பாசுரமாகவும் பாடத் தொடங்கினாள்.

மன்மதன், எம்பெருமான் மனதில் இருந்து பிறந்தவனாக இருந்த போதிலும் - காத்தியாயினி மாயை எம்பெருமானின் நாபிக்கொடியிலிருந்து பிரமதேவனுடன் பிறந்து ஜீவாத்மாக்களை மயக்கக்கூடிய பராசக்தியாக இருந்த போதிலும் - ஆண்டாள், தன் மார்கழி நோன்பியற்றிய திருப்பாவைப் பாசுரங்களுள் மன்மதனைப் பற்றியோ, அல்லது காத்தியாயினி மாமாயையைப் பற்றியோ எந்த விதமான பாசுரத்தையும் பாடவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

ஆண்டாள் காலத்திற்கு முன்போ, பின்போ அல்லது இன்று வரை பெண்ணாகப் பிறவி எடுத்த எவரும் இறைவனையே தன்

நாயகனாகத் தன் கன்னி கழியாத சரீரத்துடன் மணப்பேன் என்ற வைராக்கியத் துடன் வாழ்ந்து பூக்களைச் சூடியும் பாக்களைத்தானே பாடியும் நோன்பு நோற்றதாக எவ்வித வரலாறுமே கிடையாது.

அது மட்டுமல்ல - மாயவனே ஆண்டாளின் உள்ளத்திலும் உடலிலும் எங்கெங்கும் வியாபித்து நின்று - அவன் நினைவு கலந்த ஏக்கத்துடன் ஆண்டாள் திருப்பாவையைப் பாடி மார்கழி நோன்பை நோற்றாலும் - இந்நோன்பில் பங்கு கொள்ளப் பல கன்னியர்களும் கோபியர் நிலையில் கலந்து கொள்வதால், அவர்களின் மனநிலை பாதிக்கப்படும் நிலையில் எந்தப் பாசுரத்திலும் தன்விரகதாபத்தைக் குறிப்பிட்டுப் பாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கண்ணபிரானைப் பற்றிய ஐதீக கர்ணபரம்பரைக் கதைகளுள் கோபியர்களுக்கும் மார்கழி நோன்பிற்கும் தொடர்புடைய ஒரு கதையும் உண்டு.

தீராத குறும்புகளையும், கள்ளத்தனங்களையும், தொல்லை களாகத் தந்து வந்த கண்ணனின் விளையாட்டுச் செயல்களைச் சகித்துக் கொள்ள முடியாத கோபியர்களின் தாய்மார்கள், யசோதையிடம் கண்ணனைப் பற்றிய புகார்களைச் சொல்லி முறையிடுவதே முழு வேலையாக ஆகிவிட்டது!

யசோதையால், கண்ணனையும் அடக்க முடியவில்லை! தாய்மார்களால் தங்கள் கோபியர் குல இளம் பெண்களையும் கண்ணனோடு சேரவிடாமல் தடுக்க முடியவில்லை! என்ன செய்வது?

இறுதியில் யசோதை, கண்ணனை வெளியே போகவிடாமல் உரலில் கயிற்றால் கட்டிப் போட்டு விட்டாள்! கோபியர்குல மகளிரை, அவர்களின் தாய்மார்கள் - கண்ணனைப் பார்க்கக் கூடாது என்று ஒரு பாதாள அறைக்குள் தள்ளிச் சிறை வைத்து விட்டார்கள்!

கண்ணனைக் காணாத கோபியர் கண்கலங்கி நெஞ்சில் நிறையழிந்து, வயிறெரிந்து, செயலற்றுத் தவித்தார்கள்.

கண்ணன் வராததால் கன்றுகளோடு பசுக் கூட்டங்கள் முதல் பச்சைப்புல் வெளியில் உள்ள பயிர்கள் வரையிலும் வாடி வதங்கின! மழையும் வரண்டது! பயிர்களும் வயல்களில் காய்ந்து தீய்ந்தன! எங்கெங்கும் கோகுலத்தில் பஞ்சம் தாண்டவமாடத் தொடங்கியது! மாயவனின் அருமையை உணர்ந்த கோகுல மக்கள், கோபியர் கன்னியரை விடுதலை செய்தனர்.

கோபியர்களும் கண்ணனை - மழை வரம் வேண்டி மார்கழி நோன்பு நோற்றார்கள். பிறகே மழை பொழிந்து கோகுலமும் தழைத்தது. இப்படி ஒரு கதையும் மார்கழி நோன்பின் மையத்தில் விளங்குவதையும் - ஆண்டாள் உணர்ந்தாள்.

மானிடப் பிறவியில் இம்மை இன்ப சுகங்களை மனித உடலிலும், மறுமையில் பேரின்ப சுகத்தை ஆத்மாவும் பெறுகின்றன.

இந்நிலையில் - சரீர சுகமும் நாராயணனுக்கே என்று தன்னால் நோற்கப்பட்ட மார்கழி நோன்பிற்குத் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிய ஆண்டாள் - நோன்பு முழுவதையும் சரீரமே செய்து, எண்ணியதை எண்ணியபடியே இவ்வுடல் பெற்று மகிழ்வதாக, திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிய ஆண்டாள் - நோன்பு முழுவதையும் சரீரமே செய்து, எண்ணியதை எண்ணியபடியே இவ்உடல் பெற்று மகிழ்வதால், திருப்பாவைப் பாசுரங்களுள் ஒரு பாசுரத்தில்கூட மறுமை இன்பம் பற்றியத் தத்துவார்த்த விளக்கம் எதுவும் பாடப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தான்பெற்ற சரீரம், மாயவனுக்கே உரிமையாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் - இம்மையில் செய்யக் கூடியவைகளையும், இம்மையில் இந்த உலகம் மாயவனின் திருவருளால் பெறக்கூடிய பலன்களையும் தன் திருப்பாவைப் பாசுரங்களில் பாடி வைத்தாள்.

மார்கழி நோன்பு நோற்க ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாசுரங்களில் உள்ள நோன்பு நோற்ற அமைப்பு முறையை விளக்கும் ஒவ்வொரு சொல்லும், அச்சொற்களில் அமைந்த ஒவ்வொரு எழுத்தும் அக்ஷரம்லக்ஷம் பெறும் ஜீவனுள்ளவை ஆகும்.

சூடிக் கொடுத்த கோதை, மார்கழி நோன்பிற்குத் திருப் பாவையைப் பாடிக் கொடுத்த ஆண்டாளாகி - மார்கழி மாதத்தில் முழுமையான சந்திரன் ஒளி வீசும் பௌர்ணமியில் மார்கழி நோன்பை ஆரம்பித்து - தேய்பிறையாகச் சென்று அமாவாசையாகி - பிறகு வளர்பிறை துவங்கி பௌர்ணமி முழுமதி நிறைவு கொள்ளும் நாளில் மார்கழி நோன்பையும், திருப்பாவைப் பாசுரங்களையும் முழுமையாக்கி இருக்கிறாள்.

பௌர்ணமியில் தொடங்கிய திருப்பாவை, பௌர்ணமி யிலேயே முடிவு பெற்றிருக்கின்றது.

ஆண்டாள் தான் விரும்பிய மாயவனை மணக்க மார்கழி

நோன்பை நோற்றாலும், உலகமும் நன்மைகளைப் பெற்று வாழ வேண்டும் என்ற மனித நேய ஆன்மீக ஒருமைப்பாட்டு நிலையில் -

1. உலகம் செழிக்க மாதம் மும்மாரி மழை பொழிந்து நீங்காத செல்வங்கள் நிறைந்து வளம் கொழிக்க வேண்டும்!
2. இறைவா! நாங்கள் மார்கழி நீராட, நீ மகிழ்ந்து உலகம் செழிப்படைய மழை பொழிய அருள் செய்!
3. இறைவா! உன்னை வழிபட - நாங்கள் செய்த பிழைகளும், இனி ஏற்படப்போகும் குற்றங்களும் தீயில் கருகும் தூசாக எரிந்து ஒழியட்டும்!
4. இறைவா உன் அருள்வழிப் பார்வையின் மகிமையால், நாங்கள் பெற்ற சாபங்கள் எல்லாம், எங்களை விட்டு விலகட்டும்!
5. இறைவா! எங்கள் எண்ணங்களை நீ ஆராய்ந்து, அவை ஈடேற அருள் செய்வாய்!
6. இறைவா! அனைவரும் கூடி இருந்து மகிழந்துண்ண, ஆடை உடுக்க, அணிகள் புனைய அருள் செய்வாய்!
7. இறைவா! அறிவற்ற நாங்கள் அன்பின் உரிமையுடன் உன் சத்திய வழிக்குப் புறம்பாகச் செய்த செயல்களுக்காகச் சீற்றம் கொள்ளாமல் மன்னித்து அருள் செய்வாய்!
8. இறைவா! என்றென்றும் உன் அடிமைப்பணி பூண்ட எங்களிடமுள்ள வேண்டாத எண்ணங்களை மாற்றி அருள் செய்வாய்!
9. இறைவா! உன் திருவருளால் எங்கெங்கும் உன் கிருபா கடாக்ஷம் நிறைந்து, அனைத்து ஜீவ ராசிகளும் இன்புற்று வாழட்டும்! - என்ற விண்ணப்பங்களையும் எம்பெருமானிடம் திருப்பாவைப் பாசுரங்களில் சமர்ப்பித்துள்ளாள்.

ஆண்டாள், திருப்பாவைப் பாசுரங்களில் முதல் ஐந்து பாசுரங்களை ஒரு வகையில் பாடினாள்.

பிறகு, ஆறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் வரையிலும் மார்கழி நீராட்டு நோன்புக்காகக் கோபியர்களை எழுப்பும் நிலையில் பாடியுள்ளாள்.

இவற்றுள்ளும், பௌர்ணமி முதல் பதினைந்தாவது நாளில் அமாவாசை வருவதால் பதினைந்தாவது பாசுரத்தை நாடக அமைப்புப் பாசுரமாக ஆண்டாள் அமைத்துள்ளாள்.

பழங்காலத்தில், இருள் நிறைந்த அமாவாசை நாட்களில் நாடகங்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பதினாறாவது பாசுரத்தில் நந்தகோபன் மாளிகையின் வாயிற் காவலனைக் கதவைத் திறக்குமாறு எழுப்பும் நிலையிலும் -

பதினேழாவது பாசுரத்தில் நந்தகோபன். யசோதை, கண்ணன், பலராமன் ஆகிய நால்வரையும் எழுப்பும் நிலையிலும் -

பதினெட்டாவது பாசுரத்தில் நப்பின்னைப் பிராட்டியைக் கதவைத் திறக்குமாறு சொல்லும் நிலையிலும் - துயில் எழுப்பும் நிலையில் பாசுரங்களை இரண்டாவது பகுதியாக ஆண்டாள் பாடியுள்ளாள்.

பத்தொன்பதாவது பாசுரத்தில் கண்ணனைத் தன் வசமிருந்து விடுவிக்குமாறு நப்பினையை வேண்டுவதாகவும்-

இருபதாவது பாசுரத்தில் நப்பின்னையிடம் கோபியர் கண்ணனைத் தங்களோடு இணைத்து வைக்கும்படியாகவும், இருபத்தொன்றாவது பாசுரத்தில் கண்ணனைத் துயில் கலைந்து எழுந்து வருமாறும், தாங்கள் செயலற்று வந்து கண்ணனை சேவித்து அவன் அடி தொழுது போற்றி வணங்கக் காத்திருப்பதாகவும் -

இருபத்திரண்டாம் பாசுரத்தில் பள்ளிக் கட்டிலில் கண்ணன் கிடந்த கோலத்தில் இருக்கும்பொழுது கோபியர்கள் அவனைச் சூழக்கூடி நிற்பதாகவும், கண்களிரண்டையும் சிறிது விழித்து அருட்பார்வை தங்கள்மீது படச்சிறிது பார்க்க வேண்டு மென்றும், அப்படிப் பார்க்கும் கண்ணனின் கனிந்த பார்வை ஒளியில் கோபியர்கள் பெற்ற சாபங்கள் எல்லாம் அவர்களை விட்டு இறங்கி ஓடிப்போய்விடும் என்றும் -

இருபத்தி மூன்றாவது பாசுரத்தில் கண்ணனை, சிங்கம் தன் குகையிலிருந்து புறப்பட்டு வெளிப்படுவதைப்போலப் புறப்பட்டு வந்து கோபியர் கண்ணனுக்காக அலங்கரித்து வைத்துள்ள சிங்காசனத்தில் வீற்றிருந்து, கோபியர்கள் கண்ணனிடம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் காரியங்களை ஆராய்ந்து அருளுமாறு வேண்டுவதாகவும் மூன்றாவது பகுதியாகப் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

இருபத்தி நான்காம் பாசுரத்தில் கோபியர்கள் அனைவரும் கண்ணனின் திருவடிகளை ஆறு முறைகள் போற்றி வழிபட்டுத் தாங்கள் அவனுக்கு அடிமைச் சேவகம் செய்து வரம்பெற

வந்திருப்பதாகவும், தங்கள் மீது கண்ணன் இரக்கப்பட்டருள் செய்ய வேண்டுமென்றும் -

இருபத்து ஐந்தாம் பாசுரத்தில் கோபியர் கண்ணனை வழிப்பட்டுக் கொண்டே வந்ததாகவும், கண்ணன் வரம் தந்தால் அவன் தந்த செல்வத்தையும், அச்செல்வம் பெறக் காரணமாக இருந்த தங்கள் அடிமைச் சேவைப் பணியையும் பாடி வருத்தம் தீர்ந்து மகிழ்வோம் என்றும், ஆண்டாள் பாசுரங்களை நான்காவது பகுதியாக அமைத்துள்ளாள்.

ஐந்தாவது இறுதிப் பகுதியாக ஆண்டாள் அமைத்துள்ள ஐந்து பாசுரங்களில் - மார்கழி நோன்பையும், திருப்பாவையையும் முழுமை செய்ததோடு - முழு நிறை பௌர்ணமியில் துவங்கிய கோபியர், தம் திருப்பாவை மார்கழி நோன்பு முடிவதற்குள்ளாகவே பொங்கல் பண்டிகையையும் வளர் பிறையிலேயே கொண்டாடி, முழுநிறை பௌர்ணமியில் மார்கழி நோன்பையும், திருப்பாவைப் பாசுரங்களையும் அதி அற்புதமாக நிறைவு செய்திருக்கின்றாள்.

இருபத்து ஆறாம் பாசுரத்தில், கண்ணனிடம் மார்கழி நோன்பை முடிப்பவர்களுக்குத் தரப்படும் பொருள்களை எல்லாம் கூறி, இவற்றைக் கண்ணனிடம் கோபியர் தந்தருளுமாறு கேட்பதாகவும் -

இருபத்து ஏழாம் பாசுரத்தில் கோவிந்தனாகிய கண்ணனையும் வைத்துக் கொண்டு கோபியர்கள் அணி மணிகள் அணிந்து, ஆடை உடுத்திக் கொண்டு அனைவரும் ஒன்றுகூடி நெய்யும், பாலும் கலந்த பொங்கலிட்டுக் கூடி உண்டு நெஞ்சம் குளிர்வதாகவும் கூறிப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடியதாகவும் -

இருபத்தெட்டாம் பாசுரத்தில் பொங்கலுக்கு அடுத்தநாள் வரும் மாட்டுப் பொங்கலை நினைவுபடுத்துவதைப் போல, கோபியர்கள் மாடுகள் மேய்க்கும் இடையர் குடியில் பிறந்த கண்ணனோடு பிறவி எடுத்த புண்ணியவதிகளென்றும், குறை வில்லாத கோவிந்தனின் உறவு எந்தக் காலத்திலும் ஒழிக்க முடியாத பாசப் பிணைப்பு மிக்க உறவு என்றும், உறவு முறையில் அறியாமையால் அன்புரிமையோடு பெயர்கூறிக் கண்ணனை அழைத்ததற்காகச் சீற்றம் கொள்ளாமல் வரம் தந்தருள் செய்ய வேண்டுமென்றும் கோபியர் கேட்பதாகவும்.

இருபத்தொன்பதாம் பாசுரத்தில் மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளில் வரும் காணும் பொங்கல் எனும் காமன் பொங்கல்

விழாவை நினைவுபடுத்துவதைப்போல. கோபியர்கள் சிற்றஞ் சிறு காலைப் பொழுதில் கண்ணனின் கழலடிகளைச் சேவித்துக் கேட்கும் வரங்களாக -

முதலாவதாக, ஆயர் குடியில் கண்ணனோடு பிறந்த தங்களை அடிமைகளாகச் சேவை செய்ய ஆட்கொள்ள வேண்டுமென்றும், இரண்டாவதாகக் கண்ணனிடம் கோபியர்கள் ஏழேழ் பிறவியிலும் கண்ணனுக்கே உற்றவர்களாக உறவுகொண்டு அடிமை செய்ய வேண்டும் என்றும் -

மூன்றாவதாக - நெஞ்சங்களில் வேண்டாத விருப்பங்களும் பேராசைகளும் இருந்தால் அவற்றை மாற்றி ஆத்மசுத்தியைத் தந்தருள் செய்ய வேண்டும் என்றும் மூன்று வரங்களைக் கேட்பதாகவும்-

முப்பதாவதாக - மார்கழி நோன்பின் இறுதிப்பாசுரமாக அமைந்த திருப்பாவையின் நிறைவாகப் பட்டர்பிரான் மகளாகிய தான் பாடிய இம்முப்பது பாசுரங்களையும் பாடி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவருள் பெற்று எங்கெங்கும் எல்லா ஜீவராசிகளும் இன்புற்று வாழவேண்டும் என்றும் அற்புதமாக அமைத்துள்ளாள்.

மார்கழி நோன்பு நோற்பவர்கள் மூவகைப்பட்ட மன நிலைகளில் இருந்து வழிபட வேண்டுமென்று ஆண்டாள் வலியுறுத்தியுள்ளாள்.

முதலாவதாக - எம்பெருமான் திருவரங்கத்து அழகிய மணவாளன் தன்னை மாலையிட்டு மணந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் ஆண்டாள் மார்கழி நோன்பை நோற்கத் துவங்கியதைப் போல - நோன்பில் பங்கு கொள்ளும் கோபியர் நிலையில் இருந்த ஒவ்வொரு கன்னியரும் தனிப்பட்ட நிலையில் ஒவ்வொரு எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு அவை நிறைவேற இந்நோன்பை நோற்கத் தொடங்கியிருக் கலாம். இத்தகைய தனிப்பட்ட ஆழ்மனதில் தேங்கிக் கிடக்கும் எண்ணங்களை - ஆண்டாள் உட்பட அனைவருமே இதயத்தின் ஆழத்தில் வைத்துக் கொண்டு, மார்கழி நோன்பைச் செய்ய வேண்டுமேயன்றி - எதையும் வாயால் சொல்லிவிடக் கூடாது!

இரண்டாவதாக - தாங்கள் பிறந்து வாழும் மண்ணில் மழைபொழியவும் - தங்களைச் சேர்ந்தவர்கள் தம் பிழைகளும், குற்றங்களும், சாபங்களும் ஒழிந்து வளமுடன் வாழப் பொதுநல நோக்குடன் எம்பெருமானை வழிபட வேண்டும்!

*மூன்றாவதாக - தாங்கள் நோன்பு நோற்றதன் பயன், உலகத்திலுள்ள அனைத்து ஜீவாத்மாக்களும் திருவருள் பெற்று இன்புற்று வாழவேண்டும் என்று லோக க்ஷேமத்திற்காக பிரார்த்தனை செய்வது!*

*அதாவது தனிப்பட்ட சொந்த விஷயமாகத் தான் எதிர் பார்க்கும் சுயநலம் கொண்ட பிரார்த்தனையை உள்ளுக்குள் அடக்கிக் கொண்டு, தன்னைச் சார்ந்தவர்கள் வளம் பெற்று வாழும் பொது நலப்பிரார்த்தனையின் மனோ பக்குவ நிலையில் நிஷ்காமியமாகவும், உள் மனதில் எதிர் பார்க்கும் காமியமாகவும் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.*

*உலகம் முதலில் வாழ்ந்தால்தான் - தன்நாடும், ஊரும், தன்னைச் சார்ந்தவர்களும் வாழ முடியும்! தன்னைச் சார்ந்தவர் களும் , ஊரும் வாழ்ந்தால்தான், தான் வாழ முடியும்! தன் எண்ணங்கள் ஈடேற முடியும்! என்ற மனிதநேய பொதுநலத் தத்துவார்த்தம் பாசுரங்களில் அழுத்தமாகவும், ஆழமாகவும் வேரூன்றி உள்ளன.*

*எம்பெருமானின் பத்து அவதாரங்களுள் - மச்சம், கூர்மம், பரசுராமன், பலராமன், கல்கி ஆகிய ஐந்து அவதாரங்களும் வழி பாட்டு நிலையைப் பெறவில்லை. வராகம், நரசிம்மம், வாமன திரிவிக்கிரமன், இராமன், கண்ணன் ஆகிய ஐந்து அவதாரங்களும் பக்தர்களால் வழிபடும் நிலையைப் பெற்றவை ஆகும்.*

*இவற்றுள் ஆண்டாள் வராகாவதாரத்தைத் தவிர்த்து - ஏனைய நான்கு அவதாரங்களையும், சிறப்பாக நரசிம்மாவதாரத்தை ஒரு பாசுரத்தில் குறிப்பிட்டும் பாடியுள்ளாள்.*

*பூமிதேவியின் அம்சமாகப் பிறந்த ஆண்டாள், தான் பூமி தேவியாக விளங்கிய பொழுது தன்னைப் பாயாகச் சுருட்டி இரண்யாக்ஷன் என்ற அரக்கன் பாதலத்திற்கு எடுத்துச் சென்று மறைத்துவிட்டான்.*

*பிறகு எம்பெருமான், வராக அவதாரம் எடுத்து இரண்யாக்ஷனை அழித்துத் தன்னை மீட்டுக் கொண்டு வந்தார்.*

*பிறகு வராகாவதார எம்பெருமானைக் கூடி, நரகாசுரனை மகனாகப் பெற்று, அவன் எம்பெருமான் கண்ணனாக அவதரிக்கும் காலம் வரையிலும் - உலகத் தீமைகளை விளைவித்துக் கண்ணனால் அழிக்கப்பட்டான்.*

*நரகாசுரன் பிறப்பதற்குக் காரணமாக விளங்கிய வராகா வதார எம்பெருமான் ஞான பிரமமாக விளங்கினாலும், இவர்*

வழியாக அராஜகங்களைச் செய்த ஒரு குமாரன் தன்னிடம் பிறந்ததற்காக வருந்தி, திருப்பாவைப் பாசுரங்களுள் வராகாவதார எம்பெருமானைக் குறிப்பிட்டுப் பாடவில்லை.

பழங்காலம் முதலாகவே வழி வழி மார்கழி நோன்பு நோற்பவர்கள், பராசக்தி, காத்தியாயினியை மணலால் பாவை வடிவில் செய்து வைத்து வழிபட்டு வந்த மரபு பிறழாத வண்ணம், ஆண்டாளும் தன் பாசுரங்கள் முப்பதின் முடிவிலும் 'எம்பாவாய்' என்றே குறிப்பிட்டுள்ளதோடு - எம்பாவைப் பாசுர அமைப்பின் பொதுவான தலைப்பையும் 'திருப்பாவை' என்ற பெயரில் அமைத்துள்ளாள்.

திருப்பாவை நோன்பு நோற்கும் கன்னியர்கள் எம்பெருமானிடம் 'பறை' கேட்பதாகவும் - எம்பெருமான் பறை தந்தருள்வதாகவும் குறிப்பிட்டு இருப்பதில் - பறை என்பதற்கு வரம் என்றும், கண்ணனிடம் மாறாத பக்திமை என்றும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி - எதை எம்பெருமானிடம் வேண்டிப் பெற்றாலும் அப்படிப் பெற்ற நிலையைப் பறை என்ற பொருளிலும் கொள்ள வேண்டும்.

இனி, திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்களையும் பார்ப்போம்.

நோன்பு துவங்கிய நாள், பௌர்ணமியின் பரிபூர்ண நிலவு முழுமை பெற்ற முதல் நாளாக அமைந்துள்ளதால், முதல் பாசுரத்தில் ஒரே ஒரு செய்தி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டாள் மார்கழி மாத முழுமதி நன்னாளில் தன் தோழியர்களை மார்கழி நோன்பைத் துவங்குவதற்கு நீராட அழைப்பதாக, **"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்! நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்!"** என்று அமைந்துள்ளது.

மதி நிறைந்த பௌர்ணமி விளங்கிப் பொலிவதோ, இரவு நேரம்! நீராடப் புறப்படும் நேரமோ பகல் நேரம்! பகலில் எப்படிப் பௌர்ணமி நிலவைப் பார்க்க முடியும்?

அதனால்தான் - பௌர்ணமியின் முழுநிலவு மறைந்து விடுவதற்கு முன்பாக மிக அதிகாலையில் நீராடப் புறப்படுமாறு தன் தோழியரை அழைத்திருக்கின்றாள்.

அதுமட்டுமல்ல - தன் தோழியர்களை அழைக்கும் பொழுது, இழைகளாகிய ஆபரணங்களை அணிந்தவர்களே என்ற கருத்தில் 'நேரிழையீர்!' என்றும் அழைத்தாள்.

இந்த முதல்நாள் நீராடும் பொழுதுதான் தன் தோழியர்கள் அணிகலன்களை அணிந்துவர முடியும். அடுத்த நாள் முதல் அனைவரும் அணி மணி அணியாமல், மை தீட்டாமல், மலர் சூட்டாமல், பால் நெய் உண்ணாமல் - நீராட வரப் போகின்றார்கள்!

இப்படி ஒரு கட்டுப்பாட்டோடுதான், மார்கழி நோன்பை நோற்கவேண்டும் என்பது முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த வழி வழி வந்து கொண்டிருக்கும் பழக்கம்.

அதனால்தான் - **முதல் பாசுரத்தில் மட்டும் 'நேரிழையீர்'** என்று தோழியர்களை அழைத்துள்ளாளேயன்றி, ஆண்டாள் தொடர்ந்து பாடும் அடுத்து வரும் பாசுரங்களுள் இதே தோழியர்கள் எந்த அணிகலன்களையும் அணிந்திருப்பதாகக் குறிப்பிட்டுப் பாடவில்லை.

ஆண்டாள் - ஸ்ரீ வில்லிபுத்தூரைக் கோகுலமாகக் கருதியதால், மார்கழி நோன்பு நோற்க வரும் தோழியர்களைக் கோகுலத்தி லுள்ள செல்வச் செழிப்புடைய கோபியர்களாகக் கருதினாள். எந்தக் காரியம் செய்தாலும், செய்வதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அக்காரியத்தைச் செய்த பிறகு ஒரு பலா பலன் கிடைக்க வேண்டும்.

இத்தகைய காரண காரியப் பலா பலன்களின் தொடர்ச்சியை மனதில் கொண்ட ஆண்டாள், கோபியர்களை மார்கழி நோன்பின் நீராடுதலுக்கு அழைக்கும் பொழுது 'நாம் நீராடி மார்கழி நோன்பு நோற்றால் - கோகுலத்தின் மன்னனாக விளங்கும் நந்தகோபனின் குமாரனும், யசோதையின் மகனும் ஆகிய இளஞ்சிங்கக்குட்டி போன்றவனும் ஆகிய கரிய திருமேனியுடன் சிவந்த கண்களோடு சூரிய சந்திர ஒளியுடன் விளங்கும் முகத்தைக் கொண்ட கண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், நாமெல்லாம் கேட்கும் வரமாகிய பறையைத் தந்தருள் செய்வான்!

ஆதலால் - நாம் செய்யும் மார்கழி நோன்பையும், கண்ணன் தரப் போகும் பறையையும் உலகமெல்லாம் புகழும் நிலையில் நீரில் படிந்து நீராடிப் பாவை நோன்பை நோற்போம். கோபியர்களே! வாரீர்!' என்று முதல் பாசுரத்தில் கோபியர்களை , மார்கழி நோன்பு நோற்க ஆண்டாள் அறை கூவி அழைக்கும் ஒரே ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது.

ஆண்டாள், தன் வளர்ப்புத் தந்தை பட்டர் பிரானிடம்

வளர்ந்தவள்; எனவே, கண்ணனின் வளர்ப்புத் தந்தை நந்த கோபனுக்கும், வளர்த்த தாய் யசோதைக்கும் முக்கியத்துவம் தந்து பாசுரம் பாடத் துவங்கினாள்.

பெற்ற தாய் தந்தையர்களாகிய தேவகி, வசுதேவரை ஆண்டாள் எங்கும் குறிப்பிட்டுப் பாடவில்லை.

கண்ணன் - கருத்தரித்த காலத்தில் தாய்க்கும், தந்தைக்கும் இன்ப சுகம்! தாய் வாசுகி, கருவைச் சுமந்த காலத்தில் இருவருக்குமே சிறைத் துன்பம்! பிள்ளை பிறக்கும் நேரத்தில், தாய்க்கு மட்டுமே துன்பம்! இத்தகைய இன்ப துன்பங்களோடு கண்ணனைப் பெற்றமைகூடப் பெரிதல்ல! பிறந்த பிள்ளையைப் பாலூட்டித் தாலாட்டி ஆளாக்கி வளர்க்கும் பொறுப்பில்தான் - மாபெரும் துன்பம்! இப்பெரும் துன்பத்திற்கு ஆட்பட்ட யசோதைக்கும், நந்தகோபனுக்குமே ஆண்டாள் முதன்மை தந்து, முதல் பாசுரத்தில் பாடினாள்!

**இக்கருத்தை —**
**சீர் மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!**
**கூர்வேற் கொடுந் தொழிலன் நந்த கோபன் குமரன்**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்**
**நாராயணனே நமக்கே பறை தருவான்!**
**பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்!**
என்று பௌர்ணமி முதல் நாளில் ஒரே செய்தியைப் பாடியுள்ளாள்.

**இரண்டாம் நாள்** பாவை நோன்பு நோன்பதற்குப் பாடியுள்ள **பாசுரத்தில் இரண்டு செய்திகள்** குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆதி காலம் முதல் காத்தியாயினி நோன்பாகப் பாவை நோன்பு நோற்றவர்களுக்காகச் சில கட்டுப்பாட்டு விதிகளை ஏற்படுத்தியுள்ளார்கள். ஏனென்றால் - பொதுவாக, பெண்கள் நீராடிய பின்பு, உடனடியாக - ஆடையை உடுத்திக் கொண்டு ஒப்பனைகள் செய்து, மலர் சூடிக் கொள்வார்கள்; பால் நெய் கலந்த உணவை உண்டு மகிழ்வார்கள்; பேசக் கூடாதவற்றையெல்லாம் பேசியும், செய்யக் கூடாதவற்றையெல்லாம் செய்தும் வீண் பொழுதைக் கழிப்பார்கள்!

இக்கன்னியர்களின் விளையாட்டுப் பேச்சும், வீண் சண்டைகளும் நடைபெறுமேயன்றி - தங்கள் வீடுகளுக்கு வரும் பெரியவர்களையும் மதிக்கமாட்டார்கள்! தங்கள் வீட்டு வாசலில்

பசிக்கு உணவு கேட்டு வரும் துறவிகளையும், இரவலர்களையும்கூடக் கவனிக்க மாட்டார்கள்!

அறியாமையும், விளையாட்டுத் தனமும் நிறைந்த நிலையில் கன்னியர்கள் விளங்குவதால் - பிறவியின் பயனாகிய வாழ்க்கைக் குறிக்கோளைச் சிறிதுகூட நினைக்காமல், வீண்பொழுது போக்கிக் கொண்டு, தங்கள் வாழ்நாளைப் பாழாக்கிக் கொண்டிருப்பார்கள். இது உலகத்தில் சிறுமியர்களாக விளங்கும் கன்னியர்களின் வாழ்வில் நடைபெற்றுவரும் அன்றாட நிகழ்ச்சிகள்!

சத்திய விரதமாக நடத்தப்படும் மார்கழி நோன்பில் இத்தகைய நிலையில் உள்ள கன்னியர்கள், பங்கு கொள்ளக் கூடாது என்பதற்காகவே -

முன்னோர்கள், இறைவன் புகழைப்பாடிக் கொண்டே சென்று மார்கழி நோன்பு நோற்கும் கன்னியர்களின் சிந்தனைகள், பால் நெய் கலந்த உணவின் மீது செல்லக் கூடாது! கண்ணிற்கு மைதீட்டி அழகு பார்க்கும் ஒப்பனைகளை நினைக்கக் கூடாது! மலர் சூடிக் கூந்தலை முடித்து, செய்யக் கூடாத பயனற்ற செயல்களில் ஈடுபடக் கூடாது! ஒருவரைப் பற்றி மற்றொருவர் பொய், புளுகு, புறம் கூறித் திரிதல், இகழ்தல், கடுஞ்சொல் பேசுதல் - ஆகியவற்றைப் பேசக் கூடாது! அதிதிகளுக்கு உணவு படைத்த பின்பே உண்ண வேண்டும்! வாசலில் நின்று இரப்பவர்களுக்கு உணவு படைக்க வேண்டும்! மார்கழி நோன்பு நோற்பவர்களின் நெஞ்சமெல்லாம் இறைவன்! வாயால் பாடும் பாடல்களில் இறைவன்! செய்யும் செயல்களிலும் இறைவன்! அதிதியாக வீட்டின் அகத்தே உண்பவரும் இறைவன்! இரவலராக வீட்டின் வெளியே நின்று இரந்து உணவு வாங்கி உண்பவரும் இறைவன்! எல்லாமே இறைவன்! - என்ற ஆத்ம ஞான பக்குவத்துடன் இந்நோன்பைச் செய்ய வேண்டும் - என்று மன, வார்த்தை, செயல்களில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதற்காக மார்கழி நோன்பு நோற்கும் பெண்கள் பொட்டு வைக்கக் கூடாது! பூ சூட்டிக் கொள்ளக் கூடாது! கண்ணிற்கு மை தீட்டக் கூடாது!

நெய் ஊற்றிக் கொள்ளக் கூடாது! பால் குடிக்கக் கூடாது! என்றெல்லாம் தவறாகப் பொருள் கொள்ளக் கூடாது!

ஏனென்றால் - மை இட்டு எழுதாமல், மலரிட்டு முடியாமல், கலகலப்பாகப் பேசி மகிழாமல் கவர்ச்சியின்றித் தொழுவதைக் கண்ணன் விரும்பக் கூடியவனா? நெய்யையும், பாலையும் வெறுத்து ஒதுக்கிய நிலையில் - பாலும், நெய்யும் கலந்த

பொங்கலை எப்படிக் கண்ணனுக்கு வைத்து நிவேதனம் செய்வது? நிவேதனம் முடிந்தபின்பு, கண்ணன் விருப்பப்பட்டு ஏற்றுக் கொண்டதாகக் கற்பனை செய்து கொண்டு - நெய்பால் கலந்த நிவேதனப் பிரசாதத்தை யார் உண்பது?

முப்பது நாள் நோன்பிற்கும் கன்னியர்களின் இயற்கை அமைப்பில் - மூன்று நாட்கள் விலக்கு வருமல்லவா? அவர்களை விலக்கிவிட வேண்டும் என்பதும் பொருளல்ல! இல்லத்தில் அவர்கள் - அம்மூன்று நாளிலும் தூய்மையாக இருந்து கொண்டே, நோன்பைத் தொடரலாம்!

துரியோதனாதியர் அவையில் துகில் உரியப்படும் அவமானத்திற்கு ஆளான திரௌபதி, மாத விலக்கான நிலையில்தான் இருந்தாள். அவளுக்கு மாயவன் கண்ணன் - தன் அருள் மழையை, ஆடை மாரியாகப் பொழியவில்லையா? பக்திக்கு, ஆத்ம சுத்திதான் முக்கியமானது!

இரண்டாவது நாளில் பாசுரம் பாடத்தொடங்கிய ஆண்டாளின் ஆழ்ந்த உள்ளுணர்வில் - திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட க்ஷீராப்தி நாதன் தோன்றி மறைந்தான்.

அம்மாயவனை நினைத்துக் கொண்டே, மார்கழி நோன்பிற்காக நீராட வரும் கோபியர் நிலையிலுள்ள தோழியர்களுக்கு நோன்பு நோற்கும்பொழுது - எந்த நிலையில் மனம், வார்த்தை, செயல்கள் அமைந்திருக்க வேண்டுமென்ற விதிகளை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதைச் சொல்லும் நிலையில் உலகத்திற்கே மார்கழி நோன்பு நோற்கும் விதிகளை விளக்கிப் பாசுரத்தில் பாடிய செய்தி ஒரு செய்தியாகும். அதை

**வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்கு**
**செய்யும் கிரியைகள் கேளீரோ? பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம்! பாலுண்ணோம்! நாட்காலேநீராடி**
**மையிட்டெழுதோம்! மலரிட்டு நாம் முடியோம்!**
**செய்யாதன செய்யோம்! தீக்குறளைச் சென்றோதோம்!**
என்று ஆண்டாள் குறிப்பிட்டாள்.

இப்பாசுரத்தில் ஆண்டாள் குறிப்பிட்டுள்ள இரண்டாவது செய்தியாவது, நாம் மட்டும் மன, மொழி, செயல்களில் தூய்மையுடையவர்களாக மார்கழி நோன்பை நோற்பதால் மட்டும் திருப்தி அடைந்துவிடக் கூடாது.

*நோன்பு முடிந்து நாம் உணவு உண்ணும் முன்பு, அதிதிகளாக வரும் ஞானிகளுக்கு அமுது படைக்க வேண்டும். உணவு உண்ட பின்பு வரும் இரவலர்கட்கெல்லாம் பிச்சையிட வேண்டும். இச்செயல்களில் வாழ்வின் பயனைப் பெற்று மகிழ்வோம்! வாரீர்! - என்றாள் இச்செய்தியை -*

**ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி**
**உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!** *என்று குறிப்பிட்டாள். நீராடிய ஈரத்துணியுடன் -கன்னியர்கள் ஆத்ம சுத்தியும், பக்தியும் கொண்டவர்களாக நோன்பு நோற்க வேண்டும் என்பதே இப்பாசுரத்தின் சாரம்!*

**மூன்றாம் நாளில்** *பாவை நோன்பு நோற்பதற்குப் பாடியுள்ள* **பாசுரத்தில் மூன்று செய்திகள்** *குறிப்பிடப்பட்டுள்ளன.*

*கோகுலத்தில் சிறைப்பட்டுக் கிடந்த கோபியர்கள், விடுதலை பெற்றபின்பு மார்கழி நோன்பு நோற்ற பின்பே, மழை பொழிந்து செல்வங்கள் கொழித்ததை நினைத்துப் பார்த்தவள் - அத்துடன் சர்வ வியாபியாகிய எம்பெருமான் வாமனாவதாரத்தில் தான் திரிவிக்கிரமனாக மாபெரும் விஸ்வரூபம் கொண்டு, மூவுலகெங்கும் வியாபித்துத் தன் திருவருள் எங்கெங்கும் சர்வ வியாபகமாக நிலை நிற்க - வழி காட்டினான்.*

*இந்த உலகத்தில் எந்த இடத்தை எடுத்து கொண்டாலும் அந்த இடமே உலகளந்தானின் சந்நிதானம் ஆகும்.*

*உலகளந்த அவதாரத்தை ஆண்டாள். நினைத்தவுடனேயே, அவள் மனக் கண்ணில் நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுள் சீர்காழியில் தாடாளனாகவும், திருக்கோவலூரில் திரிவிக்கிரமனாகவும், திருஊரகத்தில் உலகளந்த பெருமாளாகவும், திருநீர் மலையில் நடந்தான் ஆகிய திரிவிக்கிரமனாகவும் உலகளந்த சேவை தந்து கொண்டிருக்கும் அற்புதக் காட்சிகள், வரிசையாகத் தோன்றி மறைந்தன.*

*உடனே ஓங்கி உலகளந்த அந்த வாமனாவதார உத்தமனின் திருநாமத்தைப் பாடிக் கொண்டு நீராட வேண்டும் என்று, கோதை பாட ஆரம்பித்தாள்.*

*ஓங்கி உலகளந்த நாயகனை வணங்கிக் கொண்டே மார்கழி நீராட வேண்டும் என்ற செய்தியே முதல் செய்தி! மூன்றாம் நாளில் நீராடுவதை நினைத்தவுடனேயே எம்பெருமான் திரிவிக்கிரமனாகி மூன்றே அடிகளில் உலகளந்த மூன்று என்ற*

எண் ஒற்றுமை பொருத்தமுடையதாக, ஆண்டாளுக்குப் புலப்பட்டது.

உலகளந்தானின் திருவருளால்தான் - மாதம் மும்மாரி மழை பொழியும்! உலகில் தீங்குகள் ஒழியும்!

தீய அராஜகச் செயல்கள் உலகில் ஏற்படுவதால்தான் - தெய்வ தண்டனையாக உலகில் மழை பொழிவதில்லை. எனவே தீங்குகள் ஒழிய - மழை தானாகவே பொழியும் என்ற செய்தியே ஆண்டாள் குறிப்பிட்டுள்ள இரண்டாவது செய்தியாகும்.

எம்பெருமானால் மட்டும்தான் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்து - தீங்குகளை ஒழித்து மழை பொழிய வைக்க முடியும் என்பது ஆண்டாளின் கருத்து.

மழை பொழிவதால் வயல்களில் கயல்மீன்கள் துள்ளும் நிலையில் நீர்பாய்ந்து நெற்பயிர்கள், ஓங்கி உயர்ந்து வளர்ந்து கதிர் மணிகள் ஈனும்! எங்கெங்கும் நீர் நிலைகளில் நீர் நிறைந்து, பசுமை மிகுந்து குவளை மலர்களில் வண்டுகள் கண்படுத்து உறங்கும்! பசுக்களெல்லாம் மடி நிரம்பப்பால் நிறைந்து, கறக்கும் பாற் குடங்கள் நிரம்பி வழியும் நிலையில் வற்றாத பால் மடிகள் கொண்ட வள்ளல்களாகப் பசுக்கள் விளங்கும்.

இந்நிலையில் நிலவளம், நீர்வளம், செடி கொடி மரங்கள் மிகுந்த காட்டு வளம், பயிர் வளம், பால் நிறைந்த பசுவளம் அனைத்தும் நிறைந்து, நீங்காத செல்வம் நிலை பெற்று உலகம் வாழட்டும் என்ற செய்தியே இப்பாசுரத்தில் கூறும் மூன்றாவது செய்தியாகும். இம்மூன்று செய்திகளையும் தன் மூன்றாவது பாசுரத்தில்

**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்,**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து,**
**ஓங்கு பெரும் செந்நெலூடு கயலுகள,**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர்! எம்பாவாய்!** - என்று பாடினாள், ஆண்டாள்!

இப்பாசுரத்தில் ஆண்டாள் அற்புதமான நிலையில் இரண்டு சொற்களைப் புகுத்தியுள்ளாள்.

பசுக்களைப் பற்றிச் சொல்லும்பொழுது - 'வள்ளல்' என்ற பட்டத்தைப் பசுக்களுக்குத் தந்துள்ளாள். தனக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் வாரி வாரி வழங்குபவர்களே, வள்ளல்கள்! அதைப் போலவே, பசுக்களும் தங்கள் கன்றுகளுக்காகச் சுரந்து வரும் பாலமுதத்தை - மனித குலத்திற்கும் தந்து மனித இனத்தைப் பாதுகாப்பதால் பசுக்கூட்டங்கள் எல்லாம், ஆண்டாள் திருவாக்கில் மனித ஜாதிக்கு வள்ளல்களாக மாறிவிட்டன.

இறைவன் படைப்பில் - ஏனைய பால் கொடுக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் (மனித இனம் உட்பட) அவற்றின் குட்டிகளுக்கு மட்டுமே பால் சுரக்கும் அமைப்பு உள்ளது.

ஆனால் பசுக்கள் இனம் மட்டும்தான் - தங்கள் கன்றுகளுக்கும், மனித குலக்கன்றுகளுக்கும் பால் கொடுத்துக் காக்கும் நிலையில், இறைவனால் படைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்குப் பால்தரும் பசுக்கள் வள்ளல்களானால், இவ்வள்ளல் தன்மையைப் பசுக்களுக்குப் படைத்த இறைவன், வள்ளலுக்கும் மேலான மாபெரும் வள்ளல் ஆவான்!

'வள்ளல்' என்ற சொல்லை அடுத்து - 'நீங்காத செல்வம்' என்ற சொல் அதி அற்புதமானது.

ஒருவரிடமும் தங்காமல் செல்வோம், செல்வோம் என்று சென்று கொண்டிருப்பதால்தான் - செல்வத்திற்கே, செல்வம் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்தச் செல்லக்கூடிய செல்வமும், எங்கும் செல்லாமல் விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில் - ஆண்டாள் 'நீங்காத செல்வம்' என்று குறிப்பிட்டுள்ளாள்.

மூன்றாவது பாசுரத்தைப் பாடும் பொழுது நீங்காத செல்வம் நிறைந்து என்பதோடு நிறுத்தி விட்டால்தான், செல்வம் தங்களை விட்டு விலகிச் செல்லாது என்றும் - நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்! என்று முழுமையாகப் பாசுரத்தைப் பாடி முடித்துவிடக் கூடாது என்றும் பலர் ஐதீகமாகக் கருது கின்றார்கள்.

**நான்காம் நாளில்** பாவை நோன்பு நோற்பதற்கு ஆண்டாள் பாடியுள்ள **பாசுரத்துள்,** நான்கு செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மூன்றாவது பாசுரத்தில் மழை பெய்து, உலகம் செழித்துச் செல்வம் கொழிக்க, ஓங்கி உலகளந்த உத்தமனை வணங்கி நீராடி மார்கழி நோன்பு நோற்ற கன்னியர்கள் - நான்காவது பாசுரத்தில்

சர்வ வியாபியாகிய எம்பெருமானே வானத்தில் மழை மேகமாகவும், மேகம் தவழும் வானமாகவும், வானத்திலிருந்து வந்து பொழியும் மழையாகவும் விளங்குவதைப் புலப்படுத்தி - மார்கழி நீராடத் தோழியர்களுடன் செல்கின்றாள்.

நான்காவது பாசுரத்தைப் பாடத் தொடங்கிய ஆண்டாளின் மனதில் 108 திவ்ய தேசங்களுள், மூவடிக்குள் மூவுலகங்களையும் அளந்து - நாடு, கண்டம், கடல், மலை என்றெல்லாம் இருந்த இவ்வுலகை, ஒரு சிறு ஊராக்கித்தன் காலடிக்குள் அடக்கிக் கொண்டு, உரகனாகிய ஆதிசேஷனுக்கும் தரிசனம் தந்த நிலையில் சேவை தந்தருளும் ஊரகத் திவ்விய தேசம் தோன்றியது.

அதே திவ்ய தேசத்திருக்கோவிலிற்குள் உலகத்தை வாழ்விக்க வேண்டி மழை நீர் முதல் அனைத்து நீரும் நானே! என்று சொல்வதைப் போலக் கிழக்கு நோக்கி நீரகராக நிலமங்கை சமேத ஜகதீஸ்வரராக சேவைதரும் நீரகம் எனும் திவ்வியதேசமும் - மழை பொழிவதற்குக் காரணமான கார்மேகமும் நானே! என்று சொல்வதைப் போலத் தெற்கு நோக்கிக் காரகராக பத்மாமணி நாச்சியார் சமேத கருணாகரப் பெருமாளாக சேவைதரும் காரகம் எனும் திவ்விய தேசமும்- கண்ணால்காண முடியாத நிலையில் மழை மேகம் தவழும் கார்வானமும் நானே! என்று சொல்வதைப் போல மேற்கு நோக்கிய கார் வானகராகக் கமல வல்லி சமேத கள்வராக சேவை தரும் கார்வானம் எனும் திவ்விய தேசமும் ஆகிய - மழையும், மழை மேகமும், மழை மேகம் தவழும் வானமும் ஆகிய அனைத்து நிலைகளிலும் திருவருள் சுரந்து, எம்பெருமான் உலக ஜீவராசிகளைக் காத்து ரக்ஷித்து வருவது ஆண்டாளின் நினைவில் சிந்தனைகளாகத் தவழ்ந்தன. பிறகு -

காத்தலை மட்டுமா எம்பெருமான் செய்து வருகின்றான்? உலகின் படைத்தல் தொழிலைச் செய்து வருவது யார்? உலகின் தீமைகளை அழித்து ஜீவாத்மாக்களைத் தனக்குள் சங்கமமாக்கிக் கொண்டு பரம பதப் பேரின்ப சுக வாழ்வை நிரந்தரமாகத் தந்து அருள் பாலிப்பது யார்? இப்படிப்பட்ட ஒரு கேள்வியையும் தனக்குள்ளாக எழுப்பிப் பார்த்தாள் ஆண்டாள்!

உடனே அவள் மனக்கண்ணில் திருவனந்தபுர திவ்விய தேசத்தில் கிழக்கு நோக்கிய புஜங்க சயனமாகப் பள்ளி கொண்ட நிலையில் பெரிய வடிவத்தில் ஸ்ரீ ஹரிலக்ஷ்மி சமேதராக சேவைதரும் அனந்த பத்மநாபன் காட்சி தந்தான்.

திருவனந்தபுர எம்பெருமான் அநந்தபத்மநாபனின் மிகப் பெரிய கிடந்த கோலமூல கர்ப்பக்கிரகத்தில், எம்பெருமானை சேவிக்க மூன்று வாயில்கள்! திருமுகத் தாமரையை சேவிக்க ஒரு வாசல்! திரு உந்திக் கமலத்தை சேவிக்க ஒரு வாசல்! திருவடித் தாமரைகளைச் சேவிக்க மற்றொரு தனிவாசல்! அநந்த பத்ம நாபனை, முழுமையாக சேவிக்க வேண்டுமென்றால், மூன்று வாசல்களிலும் தனித் தனியாகச் சென்று சேவிக்க வேண்டும்.

எதற்காக இப்படி மூன்று வாசல்கள்? உலகைப் படைப்பவனும் எம்பெருமானே! என்று விளக்குவதற்காக ஒரு வாசல்! அதாவது - தன் உந்திக் கமலத்திலிருந்து பிரமனைப் பெற்றெடுத்து, அவன் வழியாகச் சகலத்தையும் எம்பெருமான் படைக்கின்றான். உலகைப் படைக்கும் கருவிதான் பிரமதேவன்! உலகைப் படைக்கும் கர்த்தா எம்பெருமான்! எம்பெருமானால் படைக்கப்பட்ட காரியம் தான் உலகம்! அதனால்தான் திரு உந்திக் கமலத்திற்கு ஒரு வாசல்!

அதைப் போலவே, எம்பெருமான் தன் திரு முகத்திலுள்ள அருள் விழிப் பார்வையால் உலகைக் காக்கின்றான். எனவே திருமுகத் தாமரையை சேவிக்க ஒரு தனி வாசல்!

அனைத்தையும் அழித்துத்தன் பாத கமலங்களில் சங்கம மாகும் பாதத்தாமரைகளைச் சேவிக்க ஒரு தனி வாசல்!

ஆக - ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில் களையும் செய்பவன் நானே! என்ற தத்துவத்தை உணர்த்திக் கொண்டிருப்பவன்தான் - திருவனந்தபுர ஸ்ரீஹரிலக்ஷ்மி சமேத கிடந்த கோலபத்மநாப எம்பெருமான் என்ற உள்ளுணர்வு ஆண்டாளின் ஆத்ம ஞானத்தில் புரிந்தது.

அதுமட்டுமல்ல - நீரைப் பெய்து சகல வளங்களையும். கொடுப்பதும் மழைதான்! பெய்யாத நிலையில் வளங் கெட்டழிந்து வறுமை வாட்ட உலகைக் கெடுப்பதும் மழைதான்! எம்பெருமானின் கருணை விழி சுரந்தால் மழை பொழியும்! அவன், கரங்களால் தடுத்தால் மழைமேகம் வானத்தில் தோன்றவே தோன்றாது! உடனே ஆண்டாளின் நெஞ்சில் கவித்துவக் கற்பனைகள் பின்வருமாறு ஊற்றெடுத்துச் சுரந்தன.

கடல்நீர், மழைநீராவதற்குக் காரணமானவன் எம்பெருமான்! அவன் மழைநீர் பெய்யாமல் தடுத்துவிடக் கூடாது. அவனே கடலுக்குள் புகுந்து - கடல் நீரை முகந்து கொண்டு ஆர்ப்பாட்டத்துடன் வானத்தை நோக்கி ஏறி வரவேண்டும்!

*கார் வானமாக விளங்கும் தன்னை நோக்கித் தானே நீருடன் வந்து மேகமாகப் படர்ந்து பரவ வேண்டும்!*

*பிறகு, தன்னுடைய கரிய நிறத்தில் மேகங்கள் கறுத்து, மழை மேகமாக உருப்பெற்றுக் கார் வானமாகிய தன்னிடத்தில் கார்மேகமாகிய காரகமாகத் தானே தவழ வேண்டும்?*

*கிடந்த கோல எம்பெருமானாகிய பத்மநாபனாகிய தன் வலக்கையில் உள்ள சக்கராயுதம் போல் கார் மேகங்கள் வானத்தில் மின்னல்களை எழுப்ப வேண்டும்! வானத்து மின்னலெல்லாம், எம்பெருமானின் சக்கராயுதத்தின் ஒளிதான்!*

*பிறகு தன் இடக்கையில் உள்ள வலம்புரிச் சங்கின் முழக்கம் போல் - கார்மேகங்கள் இடிகள் இடித்து முழங்க, உலகமே அதிர வேண்டும்!*

*வானத்தின் இடி முழக்கமெல்லாம், எம்பெருமானின் வலம்புரிச் சங்கின் முழக்கமே!*

*எம்பெருமானின் கையிலுள்ள வில்லிலிருந்து புறப்பட்டுக் கிளம்பும் அம்புகளைப் போல, வேக வேகமாக மழை அம்புகள் உலகத்தில் விழுந்து, உலகம் செழித்து வாழ வேண்டும்!*

*அப்படிப் பெய்த வளம்மிக்க மழை பெய்தால்தான், மழைநீர் நிறைந்த நீர் நிலைகளில் நாங்களும் மார்கழி நோன்பு நோற்று நீராடி மகிழ்ந்து, பாவை நோன்பு நோற்போம்!*

*நான்காவது பாசுரத்தில் - எம்பெருமானே மழை மேகமாகிய கார்மேகம் என்பது முதல் செய்தி! எம்பெருமானே மழைமேகம் தவழும் கார்வானம் என்பது இரண்டாவது செய்தி! மண்ணிலுள்ள கடல்நீர், விண்ணிலுள்ள மழை நீராகிய எல்லா நீரும் எம்பெருமானாகிய நீரகமே என்பது மூன்றாவது செய்தி! ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்பவனும் எம்பெருமானே என்பது நான்காவது செய்தி!*

*இந்நான்கு செய்திகளையும் ஆண்டாள் தன் பாசுரத்தில் உள்ளடக்கி*

**ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீகைகரவேல்!**
**ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி,**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து,**
**பாழியந் தோளுடைய பத்மநாபன் கையில்**
**ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,**
**தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**

**வாழ உலகினில் பெய்திடாய்! நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!** என்று அற்புதமாகப் பாசுரத்தைப் படைத்து, சர்வ வியாபியாகிய எம்பெருமானே எல்லாம் என்பதை வலியுறுத்தியுள்ளாள்.

**ஐந்தாம் நாளில்** பாவை நோன்பு நோற்பதற்குப் பாடியுள்ள **பாசுரத்துள்** ஐந்து செய்திகளை எம்பெருமானைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதோடு - இத்தகைய எம்பெருமானை வழிபட்டு மார்கழி நோன்பு நோற்றால் முன்பு செய்த பாவங்களும், அறியாமையால் இனிச் செய்யப்படும் பாவங்களும் தீயில் பஞ்சு எரிவதைப் போல ஒழியும் என்று - ஐந்தாம் நாள் மார்கழி நீராட்டின் பலா பலன்களைக் குறிப்பிட்டுள்ளாள்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை வழிபடுமாறு அழைக்கும் ஆண்டாள் - எம்பெருமானின் ஐந்துவகைப்பட்ட நிலைகளையும் கண்ணனின் அவதார நிலையில் உள்ளடக்கிப் பாசுரத்தை அமைத்துள்ளாள்.

'எம்பெருமானைப் பற்றிச் சொல்லும்பொழுது -முதலாவதாக, 'மாயன்' என்கிறாள் - ஆண்டாள்! இது எம்பெருமான் கண் களுக்குப் புலனாகாமல் எங்கெங்கும் சர்வ வியாபியாக மாயமாக மறைந்து நிற்கும் அந்தர்யாமித்துவ நிலையாகும். இது முதலாவது செய்தி.

'வடமதுரை மைந்தன்' என்று இரண்டாவதாக எம்பெரு மானைப் பற்றிச் சொல்கிறாள். தேவகி பெற்ற மைந்தனாகவோ, யசோதையின் வளர்ப்பு மகனாகவோ எம்பெருமானை இங்குக் குறிப்பிடவில்லை.

வடமதுரையின் மண்ணின் மைந்தன் என்றால் - வடமதுரையில் வளர்ந்து ஆளாகவும் இல்லை! வடமதுரை மண்ணில் சிறைச்சாலைக்குள் தேவகியின் வயிற்றிலிருந்து பிறந்து கீழே படுத்துக் கிடந்த ஒரே உரிமையால் தான் - எம்பெருமான், வடமதுரை மைந்தன் என்ற உரிமை பெற்றிருக்கிறான்.

இது, திருப்பாற்கடலில் எம்பெருமான் க்ஷீராப்தி நாதனாகப் பள்ளி கொண்டு அறிதுயிலில் உள்ள வியூக நிலை ஆகும்.

அறிதுயிலில் பள்ளி கொண்ட கிடந்த கோலத்தைத் தெளிவு படுத்துவதைப்போலக் கண்ணனும் சிறைச்சாலையில் பிறந்தவுடன், மற்றக் குழந்தைகளைப்போல அழுது, தான் பிறந்துவிட்டதை வெளிப்படுத்திக் கொள்ளவும் இல்லாமல் இருந்துள்ளான். இது இரண்டாவது செய்தியாகும்.

'தூயபெருநீர் யமுனைத்துறைவன்' என்று மூன்றாவதாக எம்பெருமானைக் குறிப்பிடுகின்றாள்' ஆண்டாள்.

இது, ஆற்றில் நீர் பெருகி ஓடும் பொழுது ஆற்றின் நீரை அனுபவித்து மகிழ்பவர்களைப்போல - தன் அவதார காலங்களில் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்து - தன்னை வழிபடும் சத்திய வழிவாழும் ஜீவாத்மாக்களுக்குப் பேருளை வழங்கும் எம்பெருமானின் விபவநிலை ஆகும்.

விபவம் என்பது, விண்ணிலிருந்து அவதாரம் எடுக்க மண்ணிற்கு இறங்கி வரும் நிலையாகும்.

யமுனை ஆற்றில் நீராடும் பொழுது, மேலிருந்து கீழறங்கித்தான் நீராடி மகிழ வேண்டும். இத்தகைய விபவ நிலையின் பொருத்தங்கள் அமைந்திருப்பதால் 'தூய பெருநீர் யமுனைத் துறைவன்' என்பது, எம்பெருமானின் விபவம் ஆகும். இது, மூன்றாவது செய்தியாகும்.

'ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கு' என்று நான்காவதாக எம்பெருமானைக் குறிப்பிடுகின்றாள். ஆண்டாள்.

இருளின் நடுவில் அசையாது ஒளி வீசும் விளக்கொளி, சூழ்ந்துள்ள அனைவருக்கும் பேரொளியை வழங்குவதைப் போல-எம்பெருமான், பரமபதமாகிய வைகுண்டத்தில் வீற்றிருந்த கோலத்திலிருந்து தன்னைச் சூழ உள்ள நித்திய சூரிகளுக்குப் பேரின்ப சுகத்தை வாரி வழங்கிக் கொண்டுள்ள எம்பெருமானின் பரத்துவ நிலையாகும். இது நான்காவது செய்தியாகும்.

'தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரன்' என்று ஐந்தாவதாக, எம்பெருமானைப் பற்றி விளக்குகின்றாள்.

கண்ணன் பிறப்பதற்கு முன்பு, தாயின் கருப்பையில் கட்டப்பட்டிருந்தான். பிறந்து வளரும் காலத்தில் குறும்புகள் செய்த காரணத்தால், வளர்ப்புத் தாயால் தாம்புக் கயிற்றால் கட்டப்பட்டுத் தாமோதரன் என்ற பெயர் பெற்றான்.

இந்நிலை, அடியார்களின் பக்திக் கயிற்றால் கட்டப்பட்டு, அவர்கள் வழிபடும் அனைத்து வடிவங்களிலும், உருவங்களிலும், சிலைகளிலும் எம்பெருமான் வியாபித்து நின்று, அருள் பாலிக்கும் அர்ச்சாவதார நிலையாகும். இது ஐந்தாவது செய்தியாகும்.

எம்பெருமான் சர்வ வியாபியாக வியாபித்துள்ள இத்தகைய ஐவகை நிலைகளையும் - உள்மனதின் அடிப்படைக் கருத்தாகக்

கொண்டு, ஐவகை நிலைகளையும் கண்ணனின் அவதாரத்தோடு பொருத்திக் காட்டி அமைத்து, ஐந்தாவது மார்கழி நோன்பு நாளிற்காகப் பாடப்பட்ட ஐந்தாவது பாசுரத்தில் -

**'மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை,**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை,**
**ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,**
**தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை'** என்று மிக அற்புதமாகக் குறிப்பிட்டுப்பாட ஆரம்பித்தாள், ஆண்டாள்.

எம்பெருமான் கண்ணனின் அவதார நிலையில் குறிப்பிட்டுள்ள இதே ஐவகைப்பட்ட அற்புதமான சர்வ வியாபக நிலைகளை நாம் ஆழ்ந்து ஆராய்ந்தால் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களாகவும் எம்பெருமான் விளங்குகின்றான் என்பதும் தெளிவாகும்.

மாயன் என்பது - கண்ணிற்குப் புலனாகாத வெட்ட வெளியான ஆகாயம்! 'மன்னு வடமதுரை மைந்தன்' என்பதில் ஊரின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதால், இது - நிலம்!

தூயபெருநீர் யமுனைத் துறைவன் என்பதில் நதியின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதால், இது - நீர்! ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு என்பதில் 'விளக்கு' என்று குறிப்பிடப் பட்டிருப்பதால் இது - தீ!

தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரன் என்பதில் குடல் விளக்கம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் கருப்பைக்குள் மூச்சுக் காற்று இயங்கும் தன்மையில், குறிப்பாக உணர்த்தப் பட்டிருப்பது - காற்று!

ஆக, பஞ்ச பூத வடிவங்களிலும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் விளங்குவதைப் பல கோணங்களிலும், பற்பல சிந்தனைகளிலும் அழகுபடப் பாசுரம் பாடப் பட்டுள்ளது.

இப்பாசுரத்தைத் தொடரும் ஆண்டாள், இறைவனை வழிபடும் முறையை, மிக அருமையாக விளக்கியுள்ளாள்.

மனம், வார்த்தை, செயல் - ஆகிய மூன்றில் நாம் வாழ்வியலில் முதலில் மனதில் நினைக்கின்றோம்; பிறகு நினைத்ததை வாயால் வார்த்தையாகப் பேசுகிறோம்; பிறகு பேசியதைச் செயலில் செய்கின்றோம்.

ஆனால், இறைவனை வழிபடும்பொழுது, முதலில் உடலைத்

தூய்மை செய்தல், இறைவனை மலர் முதலியவற்றால் அலங்கரித்தல் ஆகிய செயல்களும் - பிறகு வணங்கிப் பிரார்த்தித்தல் ஆகிய சொல்லும் - பிறகு இறைவனைத் தனக்குள்ளாக நெஞ்சில் நினைத்து, மனதிற்குள்ளேயே தியானித்தல் என்று - செயல், வார்த்தை, மனம் என்ற முறையில் அமைகின்றன.

இந்நிலையில் எம்பெருமானை வழிபட்டால் - நாம் முன்பு செய்த பிழைகளும் இனி அறியாமையால் செய்யப்போகும் பிழைகளும் தீயில் எரியும் பஞ்சாக ஒழியும்! என்ற கருத்தில் பாசுரத்தைத் தொடர்கின்றாள்.

**தூயோமாய் வந்து, தூமலர் தூவித் தொழுது,**
**வாயினால்பாடி, மனத்தினால் சிந்திக்க –**
**போயபிழையும், புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசு ஆகும்! செப்பேலோர் எம்பாவாய்!** என்று ஐந்தாவது பாசுரம் முடிகின்றது.

மார்கழி நோன்பை முழு மதி நிறைந்த பௌர்ணமியில் தொடங்கி, கிருஷ்ண பக்ஷ தேய்பிறையில் வரிசையாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாசுரம் பாடினாலும், தனக்குள்ளாக வளர்பிறையாகக் கற்பனை செய்து கொண்டு - முதல் நாளில் ஒரு செய்தி, இரண்டாம் நாளாகிய இரண்டாம் பிறையில் இரண்டு செய்திகள். மூன்றாம் பிறையில் மூன்று செய்திகள். நான்காம் பிறையில் நான்கு செய்திகள், ஐந்தாம் பிறையில் ஐந்து செய்திகள் என்ற அமைப்பின் அடிப்படையிலேயே - முதல் ஐந்து பாசுரங்களையும் பாடியுள்ளாள்,ஆண்டாள்! பிறகு -

கோகுலத்தில் வாழ்ந்த கோபியராகிய இடைச் சிறுமியர்களைப் போல் தன் கூந்தலை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டையாக முடித்துக் கொண்டு - தன் தோழியர்களை இடைக்குலக்கன்னியர்களாகிய கோபியராகக் கற்பனை செய்து கொண்டு, மார்கழி நோன்பை நோற்றுவந்தாள்.

ஆறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் வரையிலும் இடைச் சிறுமியர்களை மார்கழி நோன்பு நோற்கக் கூவி எழுப்பும் நிலையில் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

இப்பாசுரங்களில், ஆண்டாள் இடைக்குலப் பெண்கள் தங்கள் நடைமுறை வழக்கில் பேசும் வார்த்தைகளையும் பயன்படுத்தியுள்ளாள்.

'ஏ புள்ளே!' என்பதைப் பிள்ளாய் என்றும் - பகல்லே பேயாய்த் தூங்குற பெண்ணே! என்பதைப் பேய்ப்பெண்ணே என்றும் - அடி என் மாமன் மவளே! என்பதை, மாமன் மகளே! என்றும் - ஊமச்சியா? செவிடியா? குருடியா? என்று இகழ்வதை, ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? என்றும் - வெள்ளென என்று விடிகின்ற நேரத்தைக் குறிப்பிடுவதை, வெள்ளென்று என்றும் - அடி செல்லப் பொண்டாட்டி! என்பதைச் செல்வப் பெண்டாட்டி என்றும் - வாய் வீரம் பேசின நங்கையாளிடம் பேசின பேச்சுப்படி நடக்காத நாக்கு வேறு இருக்குதே, கொஞ்சம்கூட வெட்கமில்லே, எழுந்திரடி! என்பதை, வாய் பேசும் நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்! என்றும் - சும்மா சில்லுண்ணு கூப்பிடுறியே! என்பதை, சில்லென்று அழையேன்மின்! என்றும் - 'ஏலே! எங்கிளியே! என்பதை, எல்லே இளங்கிளியே! என்றும் - நீங்களே கெட்டிக் காரிகளாக இருங்கடி! நானும் அப்படியே ஆகுறேண்டி! என்பதை, வல்லீர்கள் நீங்களே! நானே தான் ஆயிடுக! என்றும் - நீராட அழைக்கும் இடைக்குலக் கன்னியர்களை எழுப்பும் பாசுர அமைப்பு முறை, அற்புதமான வட்டார வழக்குச் சொல்லாட்சி ஆகும்.

தன் **ஆறாவது பாசுரத்தில்,** தோழியரைத் துயிலெழுப்பும் பொழுது -

'ஏ பெண்ணே! பறவைகள்கூடத் துயில் நீங்கிக் கலகலவென்று ஓசை எழுப்புகின்றன! பறவைகளின் அரசன் கருடன் குடி கொண்டுள்ள, எம்பெருமான் ஆலயத்திலும் சங்கு முழங்கும் பேரொலி கேட்கவில்லையா? எழுந்து நீராடப் புறப்படு!

நஞ்சு ஊட்டிக் கொலை செய்ய வந்த பூதனையின் முலைப் பாலைப் பருகியவனும், சக்கரவடிவில் வந்த சகடாசுரனைக் காலால் வீசிச் சுழற்றி எறிந்து அழித்தவனும், பாற்கடலில் பாம்பணை மீது அறிதுயிலாகப் பள்ளி கொண்ட ஆதி மூலவிதையாகிய எம்பெருமானை - முனிவர்களும், யோகிகளும் எழுந்து நின்று 'அரி! அரி!' என்று வழிபடும் பெரும் ஓசை எங்கள் நெஞ்சம் குளிரப் பாய்கின்றது! எழுக! என்ற' கருத்துடன்

**'புள்ளும் சிலம்பினகாண்! புள் அரையன் கோயில்**
**வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?**
**பிள்ளாய்! எழுந்திராய் ! பேய் முலை நஞ்சுண்டு**
**கள்ளச் சகடம் கலக்கழியக் கால் ஓச்சி**
**வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்த வித்தினை,**

**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!** என்று பாசுரம் பாடியுள்ளாள்.

இப்பாசுரத்துள் - உலகத்தில் தாய்மைப் பண்பு நிறைந்த பெண்மை, ஒப்பபுயர்வற்ற பெரும் சக்தி வாய்ந்தது! தாய்மையில் தவழும் பெண்மை, தலைவணங்கிப் பணியும் தெய்வநிலைக்கு உரியது ஆனால் - அதே பெண்மை, பேய்மைநிறைந்த வஞ்சனைக்கு ஆட்பட்டுக் கொலை செய்யவும் துணியும் கொடிய நிலைக்கு ஆளாகும் பொழுது, பெண் என்று கூட இரக்கப்படாமல் - எம்பெருமான் அழித்துவிடுவான்! என்ற கருத்தும்,

அதைப் போலவே, சக்கரப்படை எம்பெருமானுக்கு உரியதாக இருந்தாலும் - அதே சக்கர அம்சத்தோடு வஞ்சக சூது அழிவுப்பாதையை நோக்கிச் சுழல ஆரம்பித்தால் - அந்த சக்கரத்தையும் எம்பெருமான் அழித்துவிடக்கூடியவன் என்ற கருத்தும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

அடுத்து ஆண்டாள் கையாண்டுள்ள 'வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்துவித்து' என்ற சொற்றொடர் மிக - மிக அற்புதமானது!

எம்பெருமான் பள்ளி கொண்ட நிலையிலேயே, வீற்றிருந்தும் அருள் செய்கின்றான் என்று கிடந்த - அமர்ந்த கோலங்களை ஒருங்கே இணைத்துத் **துயில் அமர்ந்த** என்கிறாள்.

உலக ஜீவ விதைகளுக்கெல்லாம் காரணமான ஆதிமூலப் பெரும் விதையாகப் பரமாத்மா விளங்குவதாலேயே எம்பெரு மானை 'வித்து' என்றும் குறிப்பிட்டாள்.

இந்த ஆதிமூலவித்து, தானே தோன்றிய அழிவற்ற நிலையான ஒன்றாகும்! துயில் அமர்ந்த வித்து என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் - ஆண்டாளின் நெஞ்சில் உலக அழிவிற்குப் பின்பு ஜீவராசிகளைப் படைப்பதற்காகப் பிரமதேவன் ஜீவ உற்பத்தி விதைகளை எடுத்துச் சென்று திருச்சேறை மண்ணில் புதைத்து வைத்த செய்தி வெளிப்படுவதோடு - திருச்சேறை திவ்விய தேசமும் ஆண்டாளின் நெஞ்சில் இடம் பெற்றிருந்தமை, புலனாகின்றது.

'முனிவர்களும் யோகிகளும்' என்று குறிப்பிட்டிருப்பதில் - முனிவர்கள் என்பவர்கள் ஊருக்கு வெளியே ரிஷி பத்தினிகளுடன் தங்கித் தவநெறியில் உள்ள மகரிஷிகளும், வானப்பிரஸ்த நிலையில் துணைவியரோடு துறவறம்

காப்பவர்களும் - சுகமகரிஷியைப்போலப் பிறந்த உடனேயே பிறவி அமைப்பிலேயே ஞான உணர்வுடன் விளங்கும் முழுமையான துறவிகளும் ஆவர்.

இதைப்போல யோகிகள் என்பவர்கள், இல்லறநெறியில் பிரதிபலன் கருதாத கடமைகளைச் செய்துகொண்டு கர்மயோகிகளாகவும், ஞானயோகிகளாகவும் உள்ள பக்தி யோக நெறியில் உள்ளவர்கள் ஆவர்.

உலக அழிவிற்குப் பின்பு உலகை உற்பத்தி செய்யப் பிரமதேவன், ஜீவ உற்பத்தி விதைகளை மண் பாண்டத்தில் அடைத்துத் திருச்சேறை திவ்விய தேசத்தில் வைத்த தன்மையைப் போல் - கிறித்துவ சமயத்திலும் உலக அழிவிற்குப் பின் பல ஜீவராசிகளைப் பாதுகாத்த 'நோவாவின் பேழை' என்ற பகுதியிலிருந்து, உலகில் ஜீவராசிகள் அழியாமல் இறையருளால் பாதுகாக்கப்பட்ட வரலாறு தெரிய வருகின்றது.

**ஏழாவது பாசுரத்தில்** - 'பேய்த் தூக்கம் தூங்கிக் கொண்டிருப்பவளே! குருவிகள் துயில் எழுந்து கீச்சுக் கீச்சு என்று பேசிக் கொண்டிருக்கும் ஓசைகள் உனக்குக் கேட்கவில்லையா? வாசநறுங்கூந்தலைக் கொண்ட இடைச்சியர்கள், தங்கள் கழுத்திலுள்ள அச்சுத்தாலி, முளைத்தாலிகள் கலகலவென்று சப்திக்கும் நிலையில், மத்தினால் தயிர்கடையும் ஓசையும் உனக்குக் கேட்கவில்லையா?

நாயகியாகும் நிலையைக் கொண்ட பெண்ணே! நாராயணன், மூர்த்தி, கேசவன் ஆகிய கண்ணனை நாங்கள் பாடுவதைக் கேட்டும் - படுக்கையில் படுத்துக்கிடக்கலாமா? ஒளி நிறைந்தவளாக எழுந்து வந்து கதவைத் திறப்பாய்!' என்ற கருத்துடன்

**கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து**
**பேசின பேச்சரவம் கேட்டிலையோ ? பேய்ப்பெண்ணே!**
**காசும் பிறப்பும் கலகலப்பக்கை பேர்த்து**
**வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?**
**நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?**
**தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய்!** என்று பாடியுள்ளாள், ஆண்டாள்!.

இப்பாசுரத்துள் பல திவ்ய தேசங்களில் எம்பெருமான் பெற்றுள்ள திருநாமமாகிய நாராயணன், சாளக்கிராம திவ்ய தேச எம்பெருமானின் பெயராகிய மூர்த்தி, திருவாட்டாறு

அஷ்டபுயகரம் ஆகிய திவ்விய தேசங்களின் எம்பெருமானாகிய கேசவன் - ஆகியவை ஆண்டாளால் குறிப்பிடப்பட்டுப் பாடப்பட்டுள்ளது.

தன் **எட்டாவது பாசுரத்தில்** மார்கழி நீராடத் தன் தோழியை அழைக்கும்பொழுது - 'குதூகலக் களிப்பு மிக்கவளே! அதிகாலையில் கீழ்வானம் வெளுத்துவிட்டது! கறப்பதற்கு முன்பு எருமைமாடுகள் மேய்ச்சலில் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

நீராடச் செல்லும் நாங்கள், உன்னை விட்டு விட்டுப்போய் விடக் கூடாது என்பதற்காக உன் வீட்டு வாசலில் உன்னைக் கூவி அழைத்துக் கொண்டு நிற்கின்றோம். உடனே எழுந்து வா!

குதிரை வடிவமாகத் தன்னை அழிக்க வந்த அரக்கனின் வாயைப் பிளந்தவனும், மல்லர்களோடு மோதி அழித்தவனும் ஆகிய தேவாதி தேவனாகிய எம்பெருமானின் பெருமைகளை நாம் பாடிக் கொண்டு மார்கழி நீராடி, வேண்டிய வரங்களைப் பறையாக நாம் கேட்டு அவனைச் சேவித்தால் -கண்ணன் ஆ! இதுவா? ஆ! இதுவா? என்று ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அருள் செய்வான்! நீராட வருக! என்ற பொருள்பட

**கீழ்வானம் வெள்ளென்று எருமைசிறுவீடு**
**மேய்வான் பரந்தனகாண்! மிக்குள்ள பிள்ளைகளும்**
**போவான் போகின்றாரைப் போகாமல் காத்து – உன்னைக்**
**கூவுவான் வந்து நின்றோம்! கோதுகலம் உடைய**
**பாவாய்! எழுந்திராய்! பாடிப் பறை கொண்டு**
**மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய**
**தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் –**
**ஆ!ஆ! என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்!** என்று பாடியுள்ளாள் ஆண்டாள்!

தன் **ஒன்பதாவது பாசுரத்துள்** - 'அடி என் மாமன் மகளே! நீ உறங்கிக் கொண்டிருக்கும் மணி மாடத்தைச் சுற்றிலும் அதிகாலையில் ஏற்றி வைத்த விளக்குகள் எரிய, அகில் புகை கமகமவென்று மணம் வீசிக் கமழ்ந்து கொண்டிருக்கிறது.

நீ மட்டும் இப்படி உறங்கிக் கொண்டிருக்கிறாயே? எழுந்து வந்து கதவைத்திற! மாமீ! உங்கள் மகளை எழுப்பி விடுங்கள்! நாங்கள் வந்து அழைத்தும் குரலுக்கு பதில் குரல் கொடுத்துப் பதில் சொல்லாத உங்கள் மகள் ஊமச்சியா? அல்லது காது கேட்காத செவிடியா? அல்லது கண் தெரியாத குருடியா? பெருந்தூக்கம் கொண்ட இவள், காவலில் இருக்கிறாளா?

அல்லது யாராவது மந்திரம் செய்து கண் விழிக்காமல் கட்டி விட்டார்களா? மாயவா! மாதவா! வைகுந்தா! என்று எம்பெருமானின் எவ்வளவோ திரு நாமங்களை, நாங்கள் வாய் நிரம்பச் சொல்லிக் கொண்டு நிற்கிறோமே?' என்று ஆழ்ந்து உறங்கும் தன் தோழியை எழுப்பும் நிலையில் -

**தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரிய**
**தூபம் கமழ, துயில் அணைமேல் கண் வளரும்**
**மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்!**
**மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்**
**ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?**
**ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?**
**மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று என்று**
**நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்!**
என்று பாசுரத்தைப் பாடியுள்ளாள் ஆண்டாள்!

ஆண்டாள், இப்பாசுரத்துள் எம்பெருமானின் நாமம் பலவும் என்று குறிப்பிட்டிருப்பதால், மார்கழி நீராட வரும் கன்னியர்கள், எம்பெருமானின் பன்னிரெண்டு திருநாம வழி பாடாகிய - ஓம் ஸ்ரீகேசவாயநம! ஓம் ஸ்ரீ நாராயணாய நம! ஓம் ஸ்ரீ மாதவாய நம! ஓம் ஸ்ரீ கோவிந்தாய நம! ஓம் ஸ்ரீ விஷ்ணுவாய நம! ஓம் ஸ்ரீ மதுசூதனாய நம! ஓம் ஸ்ரீதிரி விக்கிரமாய நம! ஓம் ஸ்ரீ வாமனாய நம! ஓம் ஸ்ரீ ஸ்ரீதராய நம! ஓம் ஸ்ரீ ரிஷி கேஸாய நம! ஓம் ஸ்ரீ பத்ம நாபாய நம! ஓம் ஸ்ரீ தாமோதராய நம! ஆகிய திருநாமங்களையும், எம்பெருமானின் திருநாமங்களாகிய சகஸ்ர நாமங்களையும் தெருவில் உச்சரித்து வணங்கிக் கொண்டே வந்துள்ளார்கள் என்பது தெரிகின்றது. இந்த எட்டாவது நாளில், இத்தகைய திருநாமங்களையும் சேர்த்துக்கூறி வழிபடுவது சிறப்பாகும்.

ஆண்டாள், தன் **பத்தாவது பாசுரத்துள்** - 'மார்கழி நோன்பை நோற்று நினைத்த இன்பங்களைப் பெறும் அம்மா, என் தோழியே! நாங்கள் உன்னை நீராட அழைக்கும் பொழுது, நீ வாயிற் கதவையும் திறக்காமல் இருப்பதோடு - பதில் எதையும் சொல்லமாட்டாயா?

நறுமணத்துளப மாலையை முடியில் அணிந்த நாராயணன் - நாமெல்லாம் போற்றிப் புகழ்ந்து வணங்கத்தக்க புண்ணியங்களின் வடிவமானவன்!

முன் ஒரு காலத்தில் பெரும் தூக்கம் கொண்ட வரத்தைப் பெற்றுத் தூங்கிக் கொண்டே கிடந்த கும்பகர்ணன், தான்

*மரணமடையும் பொழுது - தன் தூக்கம் முழுவதையும் உன்னிடம் தந்து விட்டானா?*

*எங்கள் கூட்டத்தை அலங்கரிக்கும் அணியாக விளங்கு பவளே! படுக்கையில் கிடந்த அலங்கோல நிலையோடு வராமல், தெளிந்த முகத்துடன் வந்து கதவைத் திறப்பாயாக!' என்று தன் தோழியை எழுப்பும் நிலையில்*

**நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!**
**மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்?**
**நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால்! பண்டு ஒரு நாள்**
**கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்**
**தோற்றும் உனக்கே பெரும் துயில்தான் தந்தானோ?**
**ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!**
**தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்!** *என்று பாடியுள்ளாள்.*

*ஆண்டாள் சுவர்க்கம் புகுகின்ற என்ற சொற்களைப் பயன்படுத்தி இருப்பதால் - இப்பாசுரம் பாடப்பட்ட நாளிலேயே - பரமபத சுவர்க்க வாசல் நுழைகின்ற வைகுண்ட ஏகாதசி, அந்த மார்கழி மாத பத்தாம் நாளில் அமைந்திருந்தமை தெளிவாகின்றது.*

*தன்* **பதினொன்றாவது பாசுரத்துள்** *- 'தோழியே! கோகுலத்தில் வாழும் ஆயர்கள், அதிகாலையில் கன்றுகளுக்குப் பசுவின் பாலை ஊட்டச் செய்து, பின் கூட்டம் கூட்டமாகக் கொண்டுபோய் பால் கறந்து விட்டார்கள்! பகைவர், கோகுலத்தில் தீங்குகளைச் செய்யாதபடி போர் செய்து, குற்றமில்லாமல் கோகுலத்தைக் காக்கின்றார்கள்.*

*இத்தகைய ஆயர் தம் மகளாகிய நீயும் நாமும் மார்கழி நீராடி, மழைபெய்யச் செய்ய வேண்டாமா? மயில் போன்றவளே! வருக!' என்று மார்கழி நோன்பில் பங்கு கொள்ளாமல் தூங்கிக் கொண்டிருக்கும் தோழியைக் கேட்பதைப்போல -*

**கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து**
**செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்**
**குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!**
**புற்றரவு அல்குல் புன மயிலே! போதராய்!**
*என்று பாடியுள்ளாள், ஆண்டாள்!*

*பிறகு பாசுரத்தைத் தொடரும் பொழுது - 'உன் வீட்டு வாசல் முற்றத்தில் உன் உறவினர்களாக விளங்கும் தோழியர்களுடன்*

வந்து நின்றுகொண்டு - சியாமள மேக வண்ணனாகிய எம்பெருமானின் திருநாமத்தைப் பாடிக் கொண்டிருக்கின்றோம்.

நீயோ - படுக்கையிலிருந்து அசையாமலும் - பேசாமலும் எதற்காக இப்படி உறங்கிக் கொண்டு கிடக்கின்றாய்? நீ தூங்குவதன் பொருள் என்ன? எங்கள் செல்லப் பெண்டாட்டியே! துயில் எழு!' என்ற கருத்துடன் -

**சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்**
**முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,**
**சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ**
**எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்!**

என்று பாசுரத்தை முடித்துள்ளாள்.

தன் **பன்னிரெண்டாவது பாசுரத்துள்** - 'கன்றுகளை ஈன்ற எருமை மாடுகளிடமிருந்து எவரும் இன்னும் பால் கறக்காத காரணத்தால் - எருமைகளின் மடியின் பால் சுமைதாங்க முடியாமல் கதறித் தங்கள் கன்றுகளுக்கும் பால் ஊட்டுவதாக நினைத்துக் கொண்டு, பால் மடிகளின் காம்புகள் வழியாகத் தானே பெருகி ஓடும் பால் வெள்ளம் - வீட்டையெல்லாம் நனைத்துப் பால் மயமான சேறாக ஆக்கிவிட்டது!

இத்தகைய செல்வம் செழித்தவனின் தங்கையாகப் பிறந்த தோழியே! அதிகாலையில் பனி கீழே இறங்க ஆரம்பித்து விட்டது! தென்னிலங்கையை ஆண்ட இராவணனைச் சினந்து அழித்துத் தன் மனைவியைச் சிறைமீட்ட ஏகபத்தினி விரதனாகிய இராமபிரானின் புகழைப் பாடிக் கொண்டு நாங்களெல்லாம். உன் வீட்டின் வெளி வாசலில் நின்று கொண்டு உன்னை எழுப்பியும், நீ வாய் திறக்காமல் படுத்துக் கிடக்கின்றாயே. ஏனடீ? இந்தப் பெரும் தூக்கம் உனக்கு? நாங்கள் உனக்காகக் காத்திருப்பதை எல்லா வீட்டினரும் வேடிக்கை பார்க்கின்றார்கள். துயில் எழுந்துவா!' என்று ஒரு தோழியை எழுப்புவதைப்போல -

**கனைத்து இளங்கற்று எருமை கன்றுக்கு இரங்கி**
**நினைத்து முலைவழியே நின்று பால் சோர,**
**நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!**
**பனித்தலைவீழ, நின் வாசற்கடை பற்றி**
**சினத்தினால் தென் இலங்கை கோமானைச் செற்ற**
**மனத்துக் கினியானைப் பாடவும், நீ வாய்திறவாய்!**
**இனித்தான் எழுந்திராய்! ஈதென்ன பேர் உறக்கம்?**
**அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்!**

என்று பாசுரத்தைப் பாடியுள்ளாள்.

*ஆண்டாள், தன்* **பதின்மூன்றாவது பாசுரத்துள்** *'செவ்வரி படர்ந்த கண்களையுடைய தோழியே! இந்த அதிகாலை வருவதற்குள் வானத்தில் குரு என்று சொல்லப்படும் வியாழன் கிரகம் மறைந்து - உலகத்தை வாழ்விக்கும் சுக்கிரனாகிய வெள்ளிக் கிரகம் விடி வெள்ளியாக விண்ணில் முளைத்து விட்டது! பறவைகளும் உறக்கம் நீங்கி எழுந்து, கலகலவென்று சிலம்பொலி செய்ய ஆரம்பித்துவிட்டன!*

*பறவை வடிவத்தில் தன்னை அழிக்க வந்த பகாசுரனின் வாயைப் பிளந்த கண்ணபிரானின் பெருமைகளையும், கொடிய இராவணனின் ஆணவம் கொண்ட தலைகளைக் கிள்ளி எறிந்து அழித்த இராமபிரானின் புகழையும் இணைத்து - இராம கிருஷ்ண நாம சங்கீர்த்தனத்தையும் - எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எடுத்த அவதாரங்களையும் பாடிக் கொண்டு, மார்கழி நோன்பு நோற்கும் கன்னியர்கள் அனைவரும் பாவை செய்து வழிபடும் பாவைக் களத்தை அடைந்து விட்டார்கள்.*

*நீயும், பாவை நோன்பு நோற்க வேண்டிய பாவையல்லவா? இந்நல்ல நாளில் எங்களோடு கூடிக்குள்ளக் குளிருமாறு தண்ணீரில் குடைந்து நீராடி பாவை நோன்பில் பங்கு கொள்ளாமல், படுக்கையில் விழுந்து கிடக்கலாமா? வஞ்சனையில்லாமல், எங்களோடு வந்து கலந்து கொள்ள வருக!' என்று ஒரு தோழியை எழுப்புவதைப்போல -*

**புள்ளின் வாய் கீண்டானை, பொல்லா அரக்கனை**
**கிள்ளிக் களைந்தானை, கீர்த்திமை பாடிப்போய்**
**பிள்ளைகளெல்லாம் பாவைக்களம் புக்கார்!**
**வெள்ளி எழுந்து – வியாழம் உறங்கிற்று!**
**புள்ளும் சிலம்பின காண்! போதரிக் கண்ணினாய்!**
**குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே –**
**பள்ளி கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளாய்!**
**கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்!** *என்று பாடியுள்ளாள், ஆண்டாள்!*

*அதர்மம் அழிந்து தர்மம் தலைதூக்க எம்பெருமான் எடுத்த அவதாரங்களுள் - இராமாவதார காலத்தில் இராமபிரானுக்கு நல்ல தம்பியாக இலக்குவன் விளங்கியதைப் போல - இராவணனுக்குக் கும்பகர்ணன் நல்ல தம்பியாக விளங்கினான்.*

*இவர்களுள் உறக்கமின்றி இராமபிரானைப் பாதுகாத்த தம்பி, இலக்குவன்! உறக்கத்தையே வரமாகப் பெற்று - இராவணனை உரிய காலத்தில் உரிய நிலையில் உரிய அறிவுரைகள் வழங்கித்*

தன் அண்ணனைக் காக்கத் தவறியதோடு - தானும் தன் தமையனோடு அழிந்தவன், கும்பகர்ணன்!

இத்தகைய உள்ளுணர்வுடன் உறக்கத்தின் தீமையைத் தன் தோழிக்கு உணர்த்தவே, இப்பாசுரத்தில் கும்பகர்ணனைக் குறிப்பிட்டிருக்கிறாள், நாச்சியார்!

பத்து, பன்னிரண்டு, பதின்மூன்று ஆகிய பாசுரங்களில் எம்பெருமானின் இராமாவதாரத்தையும் இணைத்தே அதி அற்புதமாகப் பாடியுள்ளாள், ஆண்டாள்! இருபத்து நான்காவது பாசுரத்துள் எம்பெருமானைப் போற்றி வணங்கும் பொழுதும் இராமாவதாரத்தை, அவள் குறிப்பிட்டிருக்கின்றாள்!

விடிவெள்ளி என்பவன், அரக்க குரு - சுக்கிரன்! அவனே, உலகம் வாழ வைகறையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பொழுது - நீ மட்டும் உறங்கிக் கிடந்து, நாங்கள் மார்கழி நோன்பு நோற்று மழையைத் தரும் இறைவனின் பேரருளைத் தடுக்கலாமா? என்று கேட்கும் பாவனையில் - 'வெள்ளி எழுந்து' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறாள்.

இப்பாசுரத்துள் 'குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே' என்று அனுபவரீதியாகப் பயன்படுத்தியுள்ள சொற்களின் அமைப்பில், ஆண்டாளின் வாயில் மலர்ந்த ஒவ்வொரு அக்ஷரமும் லக்ஷம் பெறுகின்றன!

ஆண்டாள், தன் **பதினான்காவது பாசுரத்துள்** - 'தோழியே! உங்கள் வீட்டின் பின் புறத்திலுள்ள குளத்தில், செந்தாமரை மலர்கள் அருணோதயத்தை எதிர் நோக்கி வாழ - நெகிழ்ந்து மலரவும் - அல்லி மலர்கள் சந்திரன் மறையும் நேரம் தெரிந்து முகம் வாடி, வாய் மூடத்தொடங்கிவிட்டன!

காவி உடையணிந்த வெண்பற்களைக் கொண்ட துறவிகள், திருக்கோவிலிற்குள் சங்கநாதம் முழங்கச் சென்று விட்டார்கள்!

எங்களுக்கு முன்பே எழுந்து எங்களை எழுப்புவதற்கு வருவதாக வீரவார்த்தை பேசிய பெண்ணே! வெட்கமில்லையா? எழுந்துவா!

சங்கு சக்கரங்களை ஏந்திய தடக்கைகளையும், தாமரை விழிகளையும் கொண்ட எம்பெருமானைப் பாடி - மார்கழி நோன்பு நோற்போம்! வருக!' என்றுதன் தோழியை எழுப்பி அழைப்பதைப்போல -

**உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து, ஆம்பல்வாய் கூம்பினகாண்!**
**செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்**
**தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்!**
**எங்களை முன்னம் எழுப்புவான், வாய் பேசும்**
**நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்!**
**சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்!**

*என்று பாடியுள்ளாள்.*

*ஆண்டாள், தன்* **பதினைந்தாவது பாசுரத்தைப்** *பாடிய நாளில், அமாவாசை வந்துவிட்டது!*

*பௌர்ணமி முழுமதி நாளை முதல்நாளாகக் கொண்டு, மார்கழி நோன்பாகத் திருப்பாவை நோன்பை நோற்றுக் கொண்டு வந்த வரிசையில் - பதினைந்தாவது நாளில் முழு அமாவாசை வருவது இயற்கை தானே?*

*அந்தக் காலத்தில் முழு அமாவாசை நாளில் உள்ளக் கும்மிருட்டில்தான் தீப்பந்தங்கள் ஒளிவீச, தெருக்கூத்து, பரதநாட்டியம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.*

*இதை நினைவில் கொண்ட ஆண்டாள் பாசுரத்தை ஒரு நாடகக் காட்சி அமைப்பில் அமைத்துப் பாசுரத்தைப் பாடி விட்டாள்!*

*இப்பாசுரத்துள் - ஓர் அமளியில் ஒரு கோபி, அரை குறையான தூக்கத்தில் விழித்தும் விழியாமலும் படுத்துக் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அனைத்துக் கன்னியரும் அவள் உறக்கத்தைக் கலைத்து எழுப்புகின்றனர்.*

*உறங்குபவளும், ஏதோ பதில் சொல்லிக் கொண்டு - எழுந்து வந்து எல்லோருடனும் சேர்ந்து கொண்டு, அனைவரும் நோன்பு நோற்கச் செல்கிறார்கள். இதுதான் நாடகக் காட்சி அமைப்பு!*

*எழுப்பும் கன்னியர் - 'ஏலே, இளம் கிளிக்குஞ்சே! இன்னுமுமா தூங்கிக் கொண்டு கிடக்கிறாய்?*

*தூங்குபவள் : சும்மா இந்தக் குளிர்லே சில்லுன்னு சத்தம் போட்டுக் கத்தாதீங்க! இருங்கடி, இதோ வந்துடறேன்!*

*எழுப்பும் கன்னியர் : போதுண்டீ போதும்! நீ வார்த்தையிலே எவ்வளவு சாமார்த்தியக்காரி என்பது எங்களுக்கு முன்னமே உன் வாயைப் பற்றித் தெரியுமடி!*

தூங்குபவள் : போங்கடீ, போங்க! நீங்க்ளே வாய் சமத்தாக இருங்கடீ! நான் சாமார்த்தியமில்லாமலேயே போகிறேன்! நானும் வந்து சேர்ந்து கொண்டு உங்களோடு சமர்த்தாக ஆயிடுறேன்!

எழுப்பும் கன்னியர் : இல்லையடி, நீ வரவே மாட்டே! பேச்சுத் தாண்டீ பேசுவெ! உனக்கு இப்பொழுது என்னடீ ஆச்சு?

தூங்குபவள்: எல்லோருமே வந்து சேர்ந்துட்டாங்களாடீ? அதை முதல்லே சொல்லுங்கடீ!

எழுப்பும் கன்னியர்! : ஆமாண்டீ, உன்னைத் தவிர எல்லோருமே வந்து விட்டாங்கடீ! வேண்டுமானால் எழுந்து வந்து, ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்துவிடடீ! நீதானடி பாக்கி!'

உடனே உறங்கிக் கொண்டிருந்தவளும் எழுந்து வந்து, எல்லோருடனும் சேர்ந்து கொண்டு, நோன்புக்குப் புறப்படுகின்றார்கள்.

அனைவரும் - 'தன்னை மிதித்துக் கொல்லவந்த யானையைக் கொன்றழித்தவனும், பகைவர் எவராயினும் பகைமைகளை ஒழிக்க வல்லவனும் ஆகிய மாயவனாகிய எம்பெருமானைப் பாடி நீராடுவோம்!' என்று நோன்பை நோற்றார்கள்.

இத்தகைய ஓர் நாடக அமைப்பில் -

**'எல்லே' இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ?**
**சில் என்று அழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்!**
**வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்!**
**வல்லீர்கள் நீங்களே! நானேதான் ஆயிடுக!**
**ஒல்லை நீ போதாய்! உனக்கு என்ன வேறுடையை?**
**எல்லோரும் போந்தாரோ? போந்தார்! போந்து எண்ணிக் கொள்!**
**வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க**
**வல்லானை, மாயனைப் பாடேலோர் எம்பாவாய்!** என்று அற்புதமாக நாடகக் காட்சியாகப் பாடிவிட்டாள் ஆண்டாள்! ஆக, ஆறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் முடிய உள்ள பத்துத் திருப்பாவைப் பாசுரங்களும், ஒரு தனி அமைப்பில் - உலகம் வாழும் தத்துவார்த்த சாரங்களோடு - ஆண்டாள், தன் தோழியரை நோன்பில் பங்கு கொள்ள எழுப்பும் நிலையிலேயே பாடியுள்ளாள்.

பதினாறாவது பாசுரம் முதல் இருபத்தோராவது பாசுரம் வரையிலுள்ள ஆறு பாசுரங்களும் துயில் எழுப்பும் நிலையில் பாடியிருந்தாலும் - இவ்வாறு பாசுரங்களில், கண்ணனைக் கண்டு பிடித்துத் துயில் எழுப்பிக்கொண்டு, தன் தோழியரோடு மார்கழி

நோன்பு நோற்கும் பாவைக் களத்திற்குக் கண்ணனையும் அழைக்கும் பாவனையில் மிக அற்புதமாக அமைத்துள்ளாள், ஆண்டாள்!

கண்ணனை எப்படிக் கண்டுபிடிப்பது? கண்ணன் ஒருவனா? ஒரு கோடி வடிவமுள்ள கண்ணபிரான்களாக ஒரே நேரத்தில் சர்வ வியாபகமாகத் தரிசனம் தரும் யோக மாயையின் முழு அம்சமல்லவா. கண்ணன்?

நந்த கோபனும், யசோதையும் படுத்துறங்கும் பெற்றோரின் அருகில் - பிள்ளையாகப் படுத்துக் கிடக்கிறான், கண்ணன்!

அதே நேரத்தில் - தன் தமையன் பலராமனின் பக்கத்திலும் தம்பியாகப் படுத்துக் கிடக்கிறான் கண்ணன்!

அதே நேரத்தில் - தன்னைக் காதலித்துக் காத்துக் கிடக்கும் நப்பின்னையின் படுக்கையிலும், அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு தூங்குகிறான் கண்ணன்!

நப்பின்னையும், கண்ணன் தன்னைத் தனியே விட்டு விட்டுப் பிரிந்து சென்றுவிடக் கூடாது என்று அவனை அணைத்துக் கொண்டு கிடக்கிறாள்! இவை மட்டுமா?

கோகுலத்தில் கண்ணனின் மயக்கத்தில் தங்கள் ஜீவனை சரீரத்திற்குள் தாங்கிக் கொண்டு விரக தாபத்தோடு வாழ்ந்து வரும் ஒவ்வொரு கோபியையும் ஒவ்வொரு கண்ணன், தனித் தனியே சந்தித்துக் கொஞ்சி மகிழ்ந்து உறவாடியதோடு - ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் ஊடுருவிப் பாய்ந்து, உள்ளே ஆழ் மனதில் பதிந்துள்ள எண்ணங்களை ஆராய்ந்து - அவரவர்களுக்குத் தகுந்தபடி, கேட்ட கேட்ட வரங்களை எல்லாம், தனித்தனியாகத் தருவதாக வாக்களித்திருக்கின்றான்!

ஒரே நேரத்தில் இவ்வளவையும் தன் லீலைகளாக நடத்திக் கொண்டிருக்கும் மாயவன் கண்ணனை எழுப்பித் தங்கள் நோன்பு நோற்கும் பாவைக் களத்திற்குக் கொண்டு வருவது சாதாரணமான காரியமா, என்ன? மாயவனல்லவா - கண்ணன்?

கண்ணிற்கும், மண்ணிற்கும், விண்ணிற்கும், பாட்டிசைக்கும், பண்ணிற்கும் எட்டாத பரந்தாமனை - ஆனால், கண்ணனைத் தேடும் கண்ணிலும், கண்ணனைத் தேடி அலைபாயும் ஒவ்வொரு கோபியின் நெஞ்சிலும் இருந்துகொண்டே - கோபியர் கண்ணனைத் தேடி அலையும் பொழுது, கண்ணனும் சேர்ந்து கொண்டு கண்ணனே கண்ணனைத் தேடும் காயாம்பூ வண்ணன் சியாமளனை - எப்படியோ, ஆண்டாள் தன் பக்திப் பரவசத்தால்

கட்டி இழுத்துப் பாவைக் களத்திற்குப் பின் வரும் ஆறு பாசுரங்களாலும் கொண்டு வந்து விடுகின்றாளே?

ஆண்டாள், ஆண்டவனையே ஆண்டவளல்லவா? தன் **பதினாறாவது பாசுரத்துள்** - உறங்கிக் கொண்டிருக்கும் நந்த கோபனின் மாளிகையில், மாளிகையின் கதவைத் திறக்குமாறு காவல் காப்பவனிடம் சொல்லும் நிலையில்- 'கோகுலத்தின் தலைவனாக விளங்கும் நந்தகோபனின் மாளிகை வாயிலைக் காப்பவனே! கொடிகள் அசையும் தோரண வாயிலைக் காப்பவனே!

நேற்று, இங்கு வந்துள்ள இடைக்குலக் கன்னியர் ஒவ்வொருவரிடமும் - இன்று கேட்கப்போவதையெல்லாம் தருவதாகக் கண்ணன் நேற்றே வாக்குறுதி தந்திருக்கிறான்!

அதனால்தான், நாங்களனைவரும் மிகத்தூய்மையான நிலையில் கண்ணனைத் துயிலெழுப்பும் திருப்பள்ளி எழுச்சியைப் பாடுவதற்காக நாங்கள் வந்திருக்கின்றோம். அதனால் நீ, உன் வாயால் மறுத்துப் பேசாமல் வாசலின் நிலைக் கதவை நீக்கித் தாளைத் திறந்துவிடு!' என்று கேட்பதாக

**நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய**
**கோயில் காப்பானே! கொடித் தோன்றும் தோரண**
**வாயில் காப்பானே! மணிக்கதவம்தாள் திறவாய்!**
**ஆயர் சிறுமியரோமுக்கு, அறைபறை**
**மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்!**
**தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்**
**வாயால் முன்னம் முன்னம் மாற்றாதேயம்மா! நீ**
**நேய நிலைக்கதவம் நீக்கேலோர் எம்பாவாய்!** என்று பாசுரம் பாடியுள்ளாள்.

கண்ணனுக்குப் பூதனை, பகாசுரன் போன்றவர்களால் பெரும் துன்பங்கள் ஏற்பட்டிருந்ததை உணர்ந்த நந்தகோபன், வெளி வாசலில் மிகக் கடுமையான காவலை வைத்திருந்தான் என்பதை ஆண்டாள் குறிப்பாகக் காட்டுவதற்காகவே - கண்ணனை எழுப்புவதற்கு முன்பாக வாயிற் காவலனிடம், தாங்கள் வந்த காரணத்தைக் கூறித் தங்களுக்குக் கண்ணனோடு இருந்த தொடர்பையும் பாசுரத்துள் வெளிப்படுத்தி இருக்கின்றாள்.

தன் **பதினேழாவது பாசுரத்துள்** - நந்த கோபனையும், யசோதையையும் முதலில் எழுப்பி விட்டுப் பிறகு பலராமனையும், கண்ணனையும் எழுப்பிவிடும் அமைப்பில் - 'மானத்தைக் காக்கும் ஆடையையும், தாகத்தைப் போக்கும் தண்ணீரையும், பசியை

*நீக்கும் உணவையும் வாரி வாரி வழங்கும் எங்கள் பெருமானாக விளங்கும் நந்தகோபா! உறக்கம் கலைந்து எழுந்து, உன் மகன் எங்களுக்குத் தந்துள்ள வாக்குறுதிகளைக் காப்பாற்றுமாறு செ ால்!*

*பெண்கள் குலக் கொழுந்தாகவும், எங்கள் குடியின் விளக்காகவும், எங்கள் பெருமாட்டியாகவும் விளங்கும் யசோதையே! நீயும் எழுந்து உன் மகனிடம் தன் வாக்கைக் காப்பாற்றச் சொல்! வாமன திரிவிக்கிரமனாக மண்ணை அளந்து, விண்ணை அறுத்துக் கொண்டு ஓங்கி வளர்ந்து உயர்ந்து உலகங்களையெல்லாம் அளந்து படிஅளந்த தேவாதி தேவனே! எங்கள் எண்ணங்களை உணர்ந்தும், படி அளக்காமல் உறங்கு கின்றாயே! உறங்காது எழுந்திடுக!*

*வீரப் பொற்கழலைக் காலில் அணிந்த செல்வன் பலராமனே! நீயும், உன் தம்பி கண்ணனும் உறங்கிக் கொண்டிருக்காமல் எங்களுக்காகத் துயில் நீங்கி எழுங்கள்!' என்று சொல்லும் நிலையில் -*

**அம்பரமே, தண்ணீரே, சோறே – அறம் செய்யும்**
**எம்பெருமான்! நந்த கோபாலா! எழுந்திராய்!**
**கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!**
**எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்!**
**அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த**
**உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்!**
**செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!**
**உம்பியும், நீயும் உறங்கேலோர் எம்பாவாய்!**
*என்று பாடியுள்ளாள்.*

*பௌர்ணமியில் மார்கழி நோன்பை ஆரம்பித்த ஆண்டாள், மூன்றாம் நாள் நோன்பில் நீங்காத செல்வம் நிறைவதற்கு மழை பொழிய ஓங்கி உலகளந்த உத்தமனை வேண்டிப் பாசுரம் பாடினாள். அதைப் போலவே, அமாவாசையை அடுத்த மூன்றாம் பிறையாக வளர்பிறை தோன்றும் இப்பாசுரத்திலும் உலகளந்த எம்பெருமானை மறந்து விடாமல், ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே! என்று பாடி இருக்கின்றாள்.*

*அடுத்துத் தன் **பதினெட்டாம் நாளில் பாடிய பாசுரம்**, அதி அற்புத ஜீவகளையைக் கொண்டது.*

*இப்பாசுரத்தில் - கோபியர் கன்னியர், கண்ணனின் புகழ் பாடிச் சென்று நப்பின்னையை எழுப்பி, அவள் வீட்டின் வாயிற் கதவைத் திறக்கும்படிச் சொல்வதாக அமைந்துள்ளது.*

வைணவ பக்தி சாகரத்துள் உடையவர் இராமாநுஜரையே பக்திப் பாரவசத்தில் ஆழ்த்திய தனி சகாப்தம் படைத்த பாசுரம், இதுவாகும்.

உடையவர், மார்கழி மாதத்தில் திருவரங்க வீதியில் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிக் கொண்டு சென்றபொழுது - தன் குரு பெரிய நம்பிகளின் வீட்டு வாயிலின் முன் வந்தபொழுது, தன்னை மறந்து இப்பாசுரத்தைப் பாடிக் கொண்டிருந்தார்.

இவர், இப்பாசுரத்தை முடிக்கும் நிலையில், பெரிய நம்பிகளின் மகள் அத்துழாய் கதவைத் திறந்தாள்.

உடனே, இராமாநுஜர் - நப்பின்னைப் பிராட்டியே வந்து, கதவைத் திறந்ததாகப் பக்திப் பரவசப்பட்டு, மெய் மறந்து மண்ணில் மயங்கி விழுந்தார்.

இப்பாசுரத்தை அளவு கடந்த பக்திப் பரவசத்தோடு அனுபவித்துத் தன்னை இழந்த நிலைக்கு ஆளான காரணத்தால், இராமாநுஜருக்குத் 'திருப்பாவை 'ஜீயர்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டதாக ஐதீகம்.

இப்பாசுரத்தில் - 'மதயானை போன்ற தோள் வலிமிக்க நந்தகோபனின் மருமகளே! நப்பின்னையே!

எல்லாத் திசைகளிலும் கோழி கூவி - தூக்கம் கலைந்து அனைவரையும் துயில் எழுப்புமாறு அழைக்க ஆரம்பித்து விட்டன! மாதவிக் கொடி படர்ந்த பந்தலின்மேல் பலமுறை குயில்கள் கூவிக் கொண்டிருக்கின்றன!

மணம் கமழும் கூந்தலை உடையவளே! வாசலைத்திற! பந்தாட்டத்தில் சிறந்தவளே! உன் மைத்துனன் கண்ணனின் புகழை நாங்கள் பாடிக் கொண்டு வந்துள்ளோம்!

உன் செந்தாமரைக் கையால், கை வளை குலுங்குமாறு வந்து, மகிழ்ச்சி பொங்க வாசல் கதவைத் திறந்து விடு!' என்ற கருத்துடன் கண்ணன் நப்பின்னையின் வீட்டில் படுத்துக் கிடப்பதாகக் கற்பனை செய்து கொண்டு -

**உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்**
**நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!**
**கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்!**
**வந்து எங்கும் கோழி அழைத்தன காண்! மாதவிப்**
**பந்தர்மேல் பல்கால் குயில் இனங்கள் கூவினகாண்!**

**பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாடச்**
**செந்தாமரைக் கையால், சீரார் வளை ஒலிப்ப**
**வந்து திறவாய்! மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!**
*என்று பாடியுள்ளாள் ஆண்டாள்!*

*தங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, நப்பின்னை தன் வீட்டு வாயிற் கதவைத் திறந்து விட்டு விட்டுப் படுக்கையில் மீண்டும் போய்க் கண்ணனுடன் படுத்துக் கொண்டதாகக் கற்பனை செய்து கொண்ட ஆண்டாள், தன்* **பத்தொன்பதாவது பாசுரத்துள்** *- தூங்கிக் கொண்டிருக்கும் கண்ணனையும், கண்ணனைத் தூக்கம் கலைந்து எழும்ப விடாமல் அணைத்துக் கொண்டு படுத்துக் கிடக்கும் நப்பின்னையையும் எழுந்து வருமாறு அழைக்கும் கற்பனையோடு - 'பொழுது புலரத்துவங்கியும் அணைக்கப்படாமல் - ஏற்றிவைத்த குத்துவிளக்குகள், எங்கெங்கும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன!*

*யானைத் தந்தத்தால் செய்த கால்களைக் கொண்ட கட்டிலின் மீது மெத்தென்று சுகம்தரும் பஞ்சசயனப் படுக்கையில் - கொத்துக் கொத்தாக மலர் அணிந்த பூங்குழலாள் நப்பின்னையின் கூந்தலி லிருந்து கமகமவென்று வெளிப்படும் நறுமணத்தை அனுபவித்துக் கொண்டு, நப்பின்னையின் கொங்கைகளின் மீது தலைவைத்துப் படுத்துக் கிடக்கும் மலர் மார்பனாகிய கண்ணா! வாய்திறந்து பேசய்யா!*

*மைதீட்டிய தடங் கண்களைக் கொண்ட நப்பின்னையே! நீயோ, உன் மணவாளன் கண்ணனுக்குத் தந்து கொண்டிருக்கும் பிரேமை சுகத்தால், அவனைத் தூக்கம் கலைந்து எழுந்து வராமல் தடுத்துக் கொண்டிருக்கிறாய்!*

*இமைப்பொழுதுகூட, நீ கண்ணனின் பிரிவைத் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவளாக ஆகிவிட்டாய்! இப்படி உன்னிடமே கண்ணனை வைத்துக் கொண்டிருப்பது - கூடி அனுபவிக்க வேண்டிய பரமபுருஷ கிருஷ்ண பக்தியை, நீ மட்டும் அனுபவித்துக் கொண்டிருப்பது, உன் பண்புடைய தகுதிக்கு ஏற்ற செயலல்ல!' என்ற பொருள் படுமாறு -*

**குத்து விளக்கு எரிய, கோட்டுக்கால் கட்டில் மேல்**
**மெத்தென்ற பஞ்ச சயத்தின் மேல் ஏறி,**
**கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்**
**வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய்!**
**மைத்தடங் கண்ணினாய்! நீ, உன் மணாளனை**
**எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்!**

**எத்தனையேனும் பிரிவு ஆற்றகில்லாயால்!**
**தத்துவம் அன்று! தகவேலோர் எம்பாவாய்!** - என்று பாடியுள்ளாள்.

*இப்பாசுரத்துள், கண்ணன் நப்பின்னை முலைகளின் மீது தலையை வைத்துக் கொண்டு சுகானுபவத்துடன் படுத்துக் கிடப்பதாக - அதுவும், கண்ணன் ஆழ்ந்த தூக்கத்தில் உள்ளானா? அல்லது கண் மூடிய நிலையில் நப்பின்னை தரும் சுகத்தில் மெய் மறந்து கிடக்கின்றானா? என்பதே புரிந்து கொள்ள முடியாத ஒரு பாவனையில் - ஆண்டாள், கண்ணனைப் பற்றி அனுபவித்துப் பாசுரம் பாடியுள்ளாள்.*

*கண்ணன் படுத்திருந்த கட்டில் யானைத் தந்தங்களால் ஆன கால்களைக் கொண்டவை!*

*அவன், நப்பின்னையுடன் படுத்திருந்த படுக்கையோ, மெத்தென்ற மென்மை கொண்ட பஞ்ச சயனப் படுக்கை!*

*பஞ்ச சயனப் படுக்கை என்பது - இலவம் பஞ்சு, மலர்கள், மென்மையான நாணல் கோரை, மென்மையான மயிர், அன்னப் பறவையின் இறகு ஆகிய ஐந்து பொருள்களால் அமைக்கப்பட்டு - அழகு, குளிர்ந்த தன்மை, மென்மை, நறுமணம், வெண்மை என்ற ஐவகைத் தன்மையில் விளங்குவதாகும்.*

*இத்தகைய பஞ்சசயனப் படுக்கையிலும் இல்லாத இன்பசுகம், கண்ணனுக்கு நப்பின்னையின் முலைகளில் காணப்பட்டதால் அக்கொங்கைகளைத் தலையணைகளாக வைத்துப் படுத்துக் கிடந்தானாம்!*

*மெய் மறந்த நிலையில் கண்ணன் வாய் மூடிக் கண் மூடிக் கிடந்ததைக் கற்பனையில் கண்ட ஆண்டாள் - கண்ணனை எழுப்பும் நிலையில், 'வாய் திறவாய்!' என்று கூறியதோடு - நப்பின்னையின் கொங்கைகளைத் தழுவும் பரந்து விரிந்து மலர்ந்த மார்பை உடையவன் என்பதையும் கற்பனையில் கண்டு 'மலர் மார்பா' என்றும் குறிப்பிட்டுள்ளாள்.*

*ஆண்டாள், தன் மனக்கண்ணில் கண்ணனைக் கண்டு அனுபவித்த கற்பனை நிறைந்த அனுபவம் - எவருக்காவது வருமா?*

*அதைப்போலவே, ஜீவாத்மாக்கள் அனுபவிக்கும் பரமாத்ம பக்தி சுகத்தை ஒரு பரம புருஷதத்துவ சாரமாகக் கொண்ட ஆண்டாள், இப்பாசுரத்துள் நப்பின்னையிடம் 'தத்துவம் அன்று' என்று அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள்.*

சரீர இன்ப சுகத்தையும், ஆத்ம இன்ப சுகத்தையும் இப்பாசுரத்துள் குறிப்பாகக் காட்டியுள்ளாள், ஆண்டாள்!

தன் இருபதாவது பாசுரத்தைப்பாட ஆண்டாள் தொடங்கிய பொழுது - கண்ணனும், நப்பின்னையும் இன்னும் துயிலெழாமல் படுத்துக் கிடப்பதைத் தன் மனக் கண்களால் கண்டாள்.

உடனே இருவரையும் எழுப்பியதோடு - நப்பின்னையிடத் திலேயே, கண்ணனைத் தங்களோடு இணைத்து வைக்கும் பொறுப்பையும் ஒப்படைத்துப் பாசுரம் பாடினாள்.

இப்பாசுரத்துள் - 'முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் துன்பங்கள் வருவதற்கு முன்பு - தேவர்களுக்குத் துன்பம் தரக்கூடிய கொடிய அரக்கர்களை நீயே வலியச் சென்று அழித்து - தேவர்கள் அரக்கர்களுக்குப் பயந்து, கப்பம் செலுத்தும் நிலையை மாற்றித் தேவர்களின் துயரங்களைப் போக்கும் வல்லமை மிக்கவன், நீ!

தேவர்களின் துன்பங்களை முன்பே அறிந்து போக்கு வதைப்போல, எங்கள் மனக்குறைகளைப் போக்குவதற்குத் தூக்கம் கலைந்து எழுந்து வருக!

பகைவர்களுக்கு வெப்பத்தை விளைவிக்கும் விமலனே! வாய்மை தவறாத நேர்மையானவனே! கண்ணா! எழுந்து வருக!

பொற்கலசங்களைப் போன்ற மென் முலைகளையும், சிவந்த வாயையும், சிறிய இடையையும் கொண்டுள்ள நப்பின்னை நங்கையே! திருமகளே! நீயும் எழுந்துவா!

நீ - துயில் நீங்கி எழுந்து, நாங்கள் மார்கழி நோன்பு நீராடுவதற்கு ஆலவட்டமாகிய விசிறி, உலோகக் கண்ணாடிகளைத் தந்து உதவுவதோடு - உன் மணவாளனாகிய கண்ணனையும், இப்பொழுது எங்களோடு இணைத்து, மார்கழி நோன்பிற்கு அனுப்பி வைப்பாய்!' என்று பொருள் படும் நிலையில் -

**முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று**
**கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்!**
**செப்பம் உடையாய்! திறல் உடையாய்! செற்றார்க்கு**
**வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்!**
**செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்**
**நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்!**
**உக்கமும், தட்டொளியும் தந்து – உன் மணாளனை**
**இப்போதே எம்மை நீர் ஆட்டேலோர் எம்பாவாய்!**- என்று பாடியுள்ளாள்.

ஆண்டாள், நப்பின்னையிடம் தன்னை நோன்பு நோற்பவர்களுடன் இணைத்து வைக்குமாறு வேண்டிக் கொண்டதைக் கேட்ட கண்ணன், நெஞ்சம் நெகிழ்ந்து துயில் நீங்கி எழுந்துவிட்டான்!

எம்பெருமான், எப்பொழுதும் மற்ற ஜீவாத்மாக்களுக்குத் தன்னைவிட மிகவும் மதிப்பளித்து நடப்பவன்!

எம்பெருமான், தன்னை வணங்குபவர்களுக்குக்கூட அவ்வளவு சாதாரணமாகக் கட்டுப்படமாட்டான்! ஆனால் - தன்னை உணர்த்திய குருவை வணங்கும் பொழுது, எம்பெருமான், தானே கட்டுப்படுவான்!

இதை உணர்ந்த கபீர்தாசர் - 'கோவிந்தனா? குருவா? என்று கேட்டால், குருவைத்தான் மதிப்பேன்! ஏன் என்றால், கோவிந்தனை வணங்காவிட்டாலும் கோபித்துக் கொள்ள மாட்டான், அவன்! ஆனால் குருவை வணங்காவிட்டால், கோவிந்தன் எந்த வணக்கத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டான்!' என்று கூறியுள்ளார்.

எம்பெருமான், நேராகத் தன் திருவருளை வழங்குவதை விட - தாயார் பெரியபிராட்டியார், தன் பக்தர்களுக்காகப் பரிந்துரை செய்யும் பொழுது, விரைவில் அவர்களுக்குத் தன் திருவருளை வழங்குபவன்!

இதே அடிப்படையில் - ஆண்டாள், நப்பின்னையிடம் கண்ணனைத் தன்னிடம் இணைத்து வைக்குமாறு வேண்டிய பொழுது - நப்பின்னைக்காகக் கண்ணன் மனம் கனிந்து, துயில் நீங்கி எழுந்து விட்டான்.

மற்ற உயிர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற மனித நேயம், எம்பெருமானை வழிபடும் ஆன்மீகத்திலும் தலை எடுத்து நிற்கின்றது.

ஆண்டாள், உடனே தன் **இருபத்து ஒன்றாவது பாசுரத்துள்** - 'பால் கறக்க ஏந்திச் செல்லும் குடங்கள் எல்லாம் பொங்கிப் பொங்கி வழியுமாறு பால் வளத்தைச் சுரக்கும் வள்ளல் தன்மை மிக்க பெரும் பசுக்களைக் கொண்ட நந்தகோபனின் மகனே! துயில் கலைந்து எழுந்துவா!

வலிமை மிக்க ஞானத்தில் உயர்ந்த பெரியோனே! உலகம் ஒளிபெற எழும் சுடர் விளக்கே! தூக்கம் கலைந்து எழுந்துவா!

பகைவர்கள் தங்கள் வலிமையை இழந்து உன் வாசலில் வந்து செயலற்று, உன் திருவடிகளைப் பணிந்து நிற்பதைப் போல -

உன்னைப் போற்றிப் புகழ்ந்து பாட, நாங்களெல்லாம் வந்துள்ளோம்!' என்ற கருத்துப்பட -

**ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீது அளிப்ப,**
**மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**ஆற்றப் படைத்தான், மகனே! அறிவுறாய்!**
**ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்**
**தோற்றமாய் நின்ற சுடரே! துயில் எழாய்!**
**மாற்றார் உனக்கு வலி தொலைந்து, உன் வாசற்கண்**
**ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே**
**போற்றி யாம் வந்தோம்! புகழ்ந்தேலோர் எம்பாவாய்!** என்று பாடியுள்ளாள்.

தான் முன்பு மூன்றாவது பாசுரத்துள் பசுக்களைப் பற்றிக் குறிப்பிட்ட 'வள்ளல் பெரும் பசுக்கள்' என்ற அதே அடைமொழியோடு இங்கும் பசுக்களைக் குறிப்பிட்டுள்ளாள், கோதை!

மேலும் கண்ணனிடம், உன் தந்தை நந்த கோபனிடம் உள்ள பசுக்களே வள்ளல்கள் என்றால் - நந்த கோபன் எவ்வளவு பெரும் வள்ளலாக இருக்க வேண்டும்? அவன் மகனாகிய நீயும், எங்கள் மனக்குறைகளைப் போக்கும் வள்ளலாக இருக்க வேண்டாமா? என்பதைப் போலவும் பாசுரத்துள் குறிப்பாகக் கேட்கிறாள், ஆண்டாள்!

மேலும், 'கண்ணா! உன் பகைவர்கள், உன்னிடம் தோற்று, வலி இழந்து உன் வாசலில் உன் திருவடிகளைச் செயலற்று வணங்கும் பொழுது - பகைவன் என்றுகூடப் பாராமல் ஏற்றுக் கொள்கிறாயே? பகைவருக்கே அருள்காட்டும் நீ, உன்னைப் புகழ்ந்து போற்றி வணங்கும் எங்களுக்கு இரங்கி அருள் செய்ய மாட்டாயா?' என்று கேட்பதைப் போலவும் பாசுரத்தை அமைத்துள்ளாள், ஆண்டாள்!

ஆண்டாளின் இருபத்தோராவது பாசுரத்தைக் கேட்ட கண்ணன், துயில் கலைந்து எழுந்து வந்து தங்கள் முன்னிலையில் நிற்பதாகக் கற்பனை செய்தாள், ஆண்டாள்!

உடனே - தன் **இருபத்திரண்டாவது பாசுரத்தில்**, 'கண்ணா! உன் அருள் விழிப் பார்வையைக் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் மீது செலுத்து! உன் அருள் விழிப்பார்வை எங்கள் மீது பட்டால் - நாங்கள் எவ்வளவோ பிறவிகளிலும், இப்பிறவியிலும் அறியாது பிழை செய்து பெற்ற சாபங்கள் எல்லாம், எங்களை விட்டு ஓடி விடும்!' என்று கேட்கும் மனோபாவத்துடன் -

'கண்ணா! இந்த உலகத்திலுள்ள ராஜாதி ராஜாக்கள் எல்லாம் தங்களுடையவை எவையுமே இல்லை என்ற பணிவுடன் சூழ்ந்து வந்து, நீ பள்ளி கொண்டுள்ள கட்டிலின் கீழேக் கூடி இருப்பதைப் போல - நாங்களும் எங்களுக்கு உன்னைத் தவிர வேறு எவருமே இல்லை என்ற எண்ணத்துடன் உன்னிடம் வந்து சேர்ந்து விட்டோம்!

கிண்கிணிமணியின் வாய்ப்புறத்தைப் போன்ற சிறிய அளவில் துவங்கி, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மலரும் தாமரை மலரைப் போல - நீயும், உன் சிவந்த விழிகளின் திருவருட்பார்வையைக் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் மீது தவழவிடமாட்டாயா?

சூரிய, சந்திரர்கள் ஒருங்கே உதித்ததைப் போல, உன் அழகு விழிகள் இரண்டாலும் எங்களை நீ பார்த்து அருள் செய்வாயானால் - நாங்கள் பெற்ற சாபங்கள் முழுவதும், எங்களை விட்டுப் பறந்தோடி விடும்.

கண்ணா! உன் திருவருள் விழிகளின் பார்வைக்காகக் காத்திருக்கின்றோம்!' என்று சொல்வதாக -

**அங்கண் மாஞாலத்து அரசர், அபிமான**
**பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற்கீழ்**
**சங்கம் இருப்பார்போல் வந்து, தலைப் பெய்தோம்!**
**கிண்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே**
**செங்கண் சிறுச்சிறுதே எம்மேல் விழியாவோ?**
**திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்**
**அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்,**
**எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்!** என்று பாடினாள்.

எம்பெருமானின் புகழ் பாடிக் கொண்டு மார்கழி நோன்பு நோற்றால் மழை பெய்து நீங்காத செல்வம் நிறையும் என்று மூன்றாவது பாசுரத்திலும், எம்பெருமானை மன, மொழி, மெய்களால் வழிபடும்பொழுது - செய்த பிழைகளும், செய்யப் போகும் பிழைகளும் தீயில் பஞ்சாக எரிந்துவிடும் என்று ஐந்தாவது பாசுரத்திலும் உலக நன்மைகளைத் திருப்பாவையில் உணர்த்திய ஆண்டாள் -

மேற்கண்ட இருபத்திரண்டாம் பாசுரத்தில் - நம்மை விட்டுச் சாபங்கள், எம்பெருமானின் திருவருட் பார்வையால், விலகி ஓடிப்போகும் என்று பாடியுள்ளாள்.

மூன்றாவது, ஐந்தாவது பாசுரங்கள், நோன்பு நோற்பவர்கள்

செய்ய வேண்டியவை! இருபத்திரண்டாம் பாசுரம். நோன்பு நோற்றவர்களுக்கு, எம்பெருமான் செய்ய வேண்டியது!

தற்பொழுதும் திருப்பதி - திருமலை திவ்விய தேசத்தில் திருமலை மீது நின்ற கோலம் கொண்ட எம்பெருமான் திருவேங்கடமுடையான், ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் பராசக்தியின் அம்சமாகக் கோலம் கொண்டு, சிறு நாமங்களைத் தரித்துக் கொண்டு - தன் அருள் விழிப்பார்வையாகிய நேத்திர தரிசனம் என்ற சேவையைத் தன்னிடம் வந்து வழிபடும் அடியார்களுக்கு வழங்கி அருள் செய்து வருகின்றான் என்பது குறிப்பிடத் தகுந்தது.

மேலும் ஆண்டாள், இப்பாசுரம் பாடிய நாளில் அஷ்டமி - நாள் வருகின்றது! ஆண்டாளுக்குக் கண்ணன் பிறந்த கோகுலாஷ்டமி நினைவிற்கு வந்தது.

கண்ணனின் அவதாரத்தால் பற்பலரின் சாபங்களும் தீர்ந்துள்ளன! இதையும் நினைவில் கொண்டே ஆண்டாள், சாபம் ஒழியும் நாளாக இப்பாசுரத்தைப் பாடியுள்ளாள்!

ஆண்டாள் **இருபத்து மூன்றாவது திருப்பாவையின் பாசுரத்தைப்** பாடத் தொடங்கும்பொழுது - மார்கழி நோன்பு நோற்கும் அனைவரும் பாவைக்களத்தில் கூடிநின்று, கண்ணன் அமர்வதற்காக ஒரு சிங்காசனம் அமைத்து வைத்திருப்பதாகவும், கண்ணன் தங்களை நோக்கி அங்கு வந்து அச்சிங்காசனத்தில் அமர்ந்து கொண்டு, அனைவருக்கும் வேண்டியவற்றைப் பறையாகத் தந்தருள் செய்யப் போகின்றான் என்றும் தனக்குள்ளாகக் கற்பனை செய்து கொண்டு, பாசுரத்தைப் பாடத் தொடங்கினாள்.

கோபியர்களாக விளங்கும் கன்னியர்கள், மார்கழி நோன்பில் கண்ணனுக்காக அமைத்த சிங்காசனத்தில் அமர்ந்து, தங்கள் காரியங்களை எல்லாம் ஆராய்ந்து அருள் செய்வதற்குக் கண்ணன் எப்படித்தன் இருப்பிடத்தை விட்டு எந்த நிலையில் வருவான்?

கூர்மாவதாரமாக, ஆமைபோல் மெள்ளமெள்ள ஊர்ந்து வருவானா?

வராகாவதாரமாக, பன்றி போல் தரையைப்பார்த்து உருமிக் கொண்டு அசைந்து அசைந்து வருவானா?

நரசிம்மாவதாரமாக சிங்க கர்ஜனையுடன் அனைவரும் நடுநடுங்க, ஆர்ப்பாட்டமாக வருவானா?

வாமனாவதாரமாக, குள்ள வடிவில் குடையைப்பிடித்துக் கொண்டு கையில் கமண்டலத்துடன் வருவானா?

பரசுராமாவதாரமாகத் திக்கெட்டும் சூறைக்காற்றும் புழுதியும்கிளம்பப்புகை வேகத்துடன் வருவானா?

அல்லது இராமனாக வடிவு கொண்டோ, பலராமனாக வடிவுகொண்டோ, கண்ணனாகவோ - எப்படி வருவான்? - என்றெல்லாம் தனக்குள்ளாகக் கற்பனை செய்து பார்த்தாள், ஆண்டாள்.

கண்ணன், எல்லாமாகவும் வருவான்! எப்படி வேண்டுமானாலும், எந்தக் கோலத்திலும் வருவான் என்பதும் ஆண்டாளுக்கு நன்கு தெரியும்! யமுனையில் மீனாகவும் நீந்தி வருவான்!

ஆமைபோல் கள்ளத் தனமாக அசைவது தெரியாமல் ஊர்ந்தும் வருவான்! ஞான பிரமமூர்த்தி வராகரைப்போல் கீழே பார்த்துக் கொண்டு அசைந்து அசைந்தும் வருவான்!

தூணை வெடித்துக் கொண்டு வெளிப்பட்ட நரசிங்கமாகவும் பகைவர்களை அழித்துத் தனக்குப் பிரியமானவர்களைக் காக்கவும், திடீரென வெளிப்பட்டு வந்தாலும் வருவான்!

மிகக்குள்ளமான வாமனக் குழந்தையாகவும் சிறு நடை நடந்தும் வருவான்! பரசுராமன் கோலத்தில் கோடரி சுமந்த நிலையிலும் வருவான்! இராமனாகக் கோதண்டம் ஏந்திய கோலத்திலும் வருவான்! பலராமனாகக் கலப்பையும் கையுமாக வந்தாலும் வருவான்!

கண்ணன் எந்த நிலையில் வந்தால் கோபியராக மார்கழி நோன்பு நோற்கும் தங்களுக்கெல்லாம், பறைதந்து அருள் பாலிப்பான்?

யானையாகிய கஜேந்திரனுக்கும், திரௌபதிக்கும், அபயக் குரல் கேட்டவுடனேயே உதவி செய்ய எம்பெருமான் ஓடோடி வர வில்லையா? இப்படிப்பட்ட சிந்தனைகளில் ஆழ்ந்த ஆண்டாளின் நெஞ்சில் - கண்ணன் நரசிம்மமாகத் தோன்றி மறைந்தான்.

ஆண்டாள் முதல் பாசுரம் பாடியபொழுதே கண்ணனைப் பற்றிப் பாடியபொழுது 'ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம், கார் மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான், நாராயணனே நமக்கே பறைதருவான்' என்று சிங்கக்குட்டியாக அவள் வாயில் வார்த்தைகளின் வடிவில் நடமாடியவன் அல்லவா, கண்ணன்?

இப்பாசுரத்தைப் பாடக் கண்ணன் காட்டிய நரசிம்மாவதார தரிசனத்தை மனதில் பதித்துக் கொண்டு, பாசுரம் பாடத் தொடங்கினாள்.

காலமோ, குளிர்ந்த மழைக்காலம்! மலைக்குகையில் உறங்கிக் கொண்டிருக்கின்றது, ஒப்பற்ற ஓர் ஆண்சிங்கம்! சிங்கமானாலும் விலங்குகளைப்போல ஐந்தறிவு கொண்டதுதானே?

இச்சிங்கத்திற்கோ - மனிதனுக்குரிய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் வந்துவிட்டது! தோற்றத்தில்தான் - மிருக இனமாகிய சிங்கம்! பண்பிலும் பகுத்துணரும் மதி நுட்பத்தின் அறிவிலும், இது நரசிங்கம்!

அறிவுடைய இச்சிங்கத்தின் உறக்கம் கலைந்தது! தீச்சுடர்களைப்போல் கண்களை விழித்தது! பிடரிமயிர் சிலிர்க்க எழுந்து எல்லாத் திசைகளையும் முன்னும் பின்னுமாகச் சிங்கப்பார்வை பார்த்துக் கொண்டு - தன் உடலை நீட்டிக் குறுக்கிக் கொண்டும், சோம்பல் முறித்துக் கொண்டும். தன் தலையை உயர்த்திக் கொண்டு நிமிர்ந்து நின்றது!

பிறகு, இச்சிங்கம், கர்ஜனை முழக்கத்தை முழங்கிக் கொண்டுப் புறப்பட்டு - ஆண்டாள், தன் தோழியருடன் நோன்பு நோற்கும் பாவைக் களத்திற்கு வந்து, இவர்கள் அழகு செய்து வைத்திருந்த ஒப்பற்ற சிங்காசனத்தில் ராஜ அம்சத்தோடு அமர்ந்து - இச்சிங்கம், கண்ணனாக மாறித் தரிசனம் தந்தது.

இப்படிப்பட்ட ஒரு கற்பனையைத் தனக்குள்ளாக ஏற்படுத்திக் கொண்ட ஆண்டாள், தான் பாடிய திருப்பாவையின் **இருபத்து மூன்றாவது பாசுரத்துள்**, தங்களை நோக்கி, வந்து சேர்ந்த கண்ணனிடம் அனைவரும் பறைகேட்பதாக -

'கண்ணா! காயாம்பூ வண்ணா! மழைக் காலத்தில் மலைக் குகைக்குள் படுத்து உறங்கிக் கொண்டிருந்த ஒப்பற்ற சிங்கம், அறிவு பெற்று தீயைப்போல் விழித்துக் கொண்டு , பிடரி மயிர் சிலிர்த்த நிலையில் புறப்பட்டு. உதறிக்கொண்டு நிமிர்ந்து எழுந்து சிங்க கர்ஜனையைச் செய்து கொண்டு புறப்பட்டு வந்ததைப் போல - உன் திருக்கோவிலினின்றும் புறப்பட்டு எங்களிடம் வந்து அருள் செய்துவிட்டாய்!

இனி, உனக்காக நாங்கள் சிறப்புடன் அமைத்து வைத்துள்ள சிங்காசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டு, நாங்கள் அனைவரும் நினைத்து வந்துள்ள காரியங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து அருள் பாலிக்க வேண்டும்!' என்ற பொருள் புலப்படும் நிலையில் -

**'மாரி மலை முழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து,
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி,
மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே – நீ, பூவைப்பூவண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி கோப்புஉடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து, அருளேலோர் எம்பாவாய்!** என்று *அற்புதமாகப் பாடியுள்ளாள்.*

*பெரும் துன்பங்களுக்கு ஆட்பட்ட பிரகலாதன் என்ற பரமாத்ம பக்திக் குழந்தைக்காக மிக விரைவில் தூணை வெடித்துக்கொண்டு வெளிப்பட்டுப் பிரகலாதனைக் காப்பாற்றிய அவதாரம்தான், நரசிம்மாவதாரம்.*

*அதைப் போலக் கண்ணனை எண்ணித் துதித்து, தங்களுக்காகவும் உலகத்திற்காகவும் கன்னியர்களின் நிலையில் இருந்தவர்களின் எண்ணங்களை ஈடேற்றிப் பறைதருவதற்காக, நரசிங்கத்தின் வேகத்தில் கண்ணன் விரைவில் வந்து அருள் பாலிப்பான் என்பது, ஆண்டாளின் அசையாத நம்பிக்கை.*

*தன்* ***இருபத்து நான்காவது பாசுரத்துள்*** *- சீரிய சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கண்ணனை நோக்கி அவளும், அவள் தோழியரும் போற்றி வணங்கிப் பறை வேண்டி அனைவரும் நிற்பதாகவும், எம்பெருமான் கண்ணன் இரக்கம் காட்டி அருள்செய்ய வேண்டும் என்றும் கேட்கும் பாவனையில் -*

*'அக்காலத்தில் இவ்வுலகத்தை அளந்த திரிவிக்கிரம வாமனனே! உன் திருவடிகளைப் போற்றுகின்றோம்!*

*தென்னிலங்கைக்குச் சென்று, தீயவர்களை அழித்த இராமனே! உன் தோள் வலிமையைப் போற்றுகின்றோம்!*

*சக்கர வடிவில் உன்னைஅழிக்க வந்த சகடாசுரனைச் சக்கரத்தை உருட்டி உதைத்து வதைத்த கண்ணா! உன் புகழைப் போற்றுகின்றோம்!*

*பசுங்கன்றுகளின் வடிவில் வந்து அழிக்க வந்த அரக்கர்களைச் சுழற்றி எறிந்து அழித்த கண்ணா! உன் வீரக் கழலடிகளைப் போற்றுகின்றோம்!*

*கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து-கோகுலத்தில் உள்ளவர்களையும், ஏனைய ஜீவராசிகளையும் காப்பாற்றிய கோவிந்தனே! கண்ணா! உன் குணநலன்களைப் போற்றுகின்றோம்!*

*பகைவர்களை அழித்து வெற்றி கொள்ளும் உன்கையில் உள்ள வேலைப் போற்றுகின்றோம்!*

*இங்ஙனம் உன் வீரத்தைப் புகழ்ந்து கொண்டு, உன்னிடம் பறைகொள்ள நாங்கள் வந்திருக்கின்றோம்! எங்கள் மீது இரக்கம் காட்டுக!' என்னும் பொருள்பட -*

**அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி!**
**சென்று அங்குத் தென் இலங்கை செற்றாய்! திறல் போற்றி!**
**பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி!**
**கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி!**
**குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி!**
**வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல்போற்றி!**
**என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்**
**இன்றுயாம் வந்தோம்! இரங்கேலோர் எம்பாவாய்!** *என்று பாசுரம் பாடியுள்ளாள், ஆண்டாள்.*

*இப்பாசுரத்துள், ஆண்டாளும் அவள் தோழியர்களும் கண்ணனை நோக்கிப் போற்றி வணங்குவதாக - வாமன திரிவிக்கிரம அவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.*

*மழை வளம் பெறுவதற்குக் காரணமான ஓங்கி உலகளந்த உத்தமன் போற்றப்பட்டான்.*

*எதிர் காலத்தில் மணக்கப்போகும் தென்னரங்கத்துத் திருவரங்க அழகிய மணவாளனைத் தன் குலதனச் சொத்தாக நினைக்காமல், வீபிடணன் வழி அனுப்பி வைத்து, தென்னரங் கத்தில் அழகிய மணவாளனாகப் பள்ளி கொண்டு கிடப்பதற்கு ஆதிகாரண கர்த்தாவாக விளங்கிய இராமபிரான் போற்றப் பட்டான்! ஏனைய போற்றுதல்கள் அனைத்தும், கண்ணனுக்கே உரியவை!*

*தன்* **இருபத்து ஐந்தாவது பாசுரத்துள்** *- 'ஒரே இரவுப் பொழுதிற்குள் ஒருத்திக்குப் பெற்ற மகனாகப் பிறந்தாய்! அதே இரவுப் பொழுதிலேயே மற்றொருத்தியாகிய யசோதையின் பெற்றெடுத்த மகனாகி, ஒளிந்து கொண்டு, வளர்ந்து வந்தாய்!*

*இச்செயலைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் உனக்குத் தீங்குகள் செய்து அழிக்க நினைத்த கம்சனின் தீய எண்ணங்களை அழித்து, அவன் வயிற்றில் நெருப்பாக நின்று, கொன்றாய்! இத்தகைய நெடுமாலவனே!*

*உன்னை வழிபட்டு வணங்கி, உன்னிடம் நாங்கள் வந்து நிற்கின்றோம்!*

*கண்ணா! நாங்கள் கேட்கவேண்டுமென்று நினைத்து வந்த பறைகளை - நீ, தந்து அருள் செய்தால், திருமகளோடு சேர்ந்து வாழும் உன்னையும், உன்னை வணங்கும் பக்தி ஞானச் செல்வங்களையும், உன் வீரத்தையும் பாடி மகிழ்ந்து வருத்தங்களைப் போக்கிக் கொள்வோம் என்ற பொருள்படுமாறு -*

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்**
**ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் –**
**தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த**
**கருத்தைப் பிழைப்பித்து, கஞ்சன் வயிற்றில்**
**நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை**
**அருத்தித்து வந்தோம்! பறை தருதியாகில்,**
**திருத்தக்க செல்வமும், சேவகமும் யாம்பாடி**
**வருத்தமும் தீர்ந்து, மகிழ்ந்தேலோர் எம்பாவாய்** *என்று பாசுரம் பாடியுள்ளாள், ஆண்டாள்.*

*இருளை ஓட்டி ஒளிதரும் விளக்கும் நெருப்புதான்! ஜ்வாலை விட்டு எரிந்து அழிப்பதும் நெருப்புதான்!*

*இக்கருத்தை விளக்குவதைப் போல, ஐந்தாவது பாசுரத்தில் 'ஆயர் குலம் விளங்க வந்த குடி விளக்கானவன் கண்ணன் எனும் பொருள்பட - 'ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கே! என்று பாசுரம் பாடிய ஆண்டாள் - இப்பாசுரத்தில் கொடியவனாகிய கம்சனின் அழிவைக் குறிப்பிடும் பொழுது 'கம்சனின் வயிற்றில் தீ எரிவதைப் போல நின்று அழித்தான் கண்ணன் எனும் பொருள்பட - 'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே!' என்று பாசுரம் பாடியுள்ளாள், ஆண்டாள்!*

*ஜீரணித்துக் கொள்ள முடியாத பொறாமை ஏற்படும் பொழுது - ஒருவனுக்கு நெஞ்சம் நெருப்பாகப் புகையும்! ஆனால் - தாங்கமுடியாத வேதனைகள் ஏற்படும்பொழுது, அவன் வயிற்றில்தான் துன்பங்கள் அனல்விட்டு நெருப்பாக எரியும்! கம்சனை அழிக்கும்பொழுது, அவனுக்குக் கண்ணன் தந்தது, வயிற்றெரிச்சலாகிய துடிதுடிக்கும் வேதனை!*

*மேலும் பெற்றதாய் கண்ணனைப் பெற்றெடுத்த தேவகியின் திருவயிறு, வளர்த்த தாய் யசோதை, கண்ணனைக் குழந்தையாக வயிற்றோடு அணைத்துக் கொண்டு வளர்த்த திருவயிறு - கொடிய கம்சனின் தீய எண்ணங்கள், பொறாமையாக உருவாகிப் பற்றி எரிந்து கொண்டிருந்த வயிறு - என்ற முறையில் பெற்*

றெடுத்தத் தாய், வளர்ப்புத்தாய், பகைவன் - ஆகியவர்களின் மூன்று வயிறுகளுள், பெற்றெடுத்த, வளர்த்த வயிறுகளைப் பாசுரத்தில் பாடாமல் உள்ளடக்கி - வஞ்சகம் அனலாகப் பற்றி எரிந்து கொண்டிருந்த கம்சனின் வயிற்றை மட்டும் பாசுரத்தில் வெளிப்படுத்திப் பாடியுள்ளாள், ஆண்டாள்!

'எம்பெருமானே! கண்ணா! உன்னால் அழிக்கப்பட்ட கும்பகர்ணனிடம் தூக்கம், ஒரு நோயாகவும் - இராவணனிடம் ஆணவமும், பெரும் கோபமும் நோயாகவும், கம்சனிடம் பொறுத்துக் கொள்ள முடியாத வயிற்றெரிச்சலாகிய பொறாமை ஒரு நோயாகவும் விளங்கின. நாங்கள் இவைகளில்லாமல் உன் நினைவுடனேயே வழிபடுகின்றோம்!' - அருள் செய்! என்று குறிப்பிட்டுள்ளாள், அவள்!

மார்கழிப் பௌர்ணமியில் தொடங்கி - திருப்பாவை நோன்பைத் தோழியர்கள் சூழத்துவங்கிய ஆண்டாள், இருபத்து ஏழாம் நாளில், நோன்பு முழுமைபெறும் கோலம் பெற்று எம்பெருமானுக்குப் பொங்கலிட்டுப் படைக்க விரும்பினாள்.

மார்கழி இருபத்தெட்டாம் நாளில் கோகுலத்தைச் செழிக்க வைக்கும் வள்ளல்களாகக் குடம் குடமாக மடிகள் நிரம்பப் பால் கறக்கும் பசுக் கூட்டங்களை இலக்குமியாகக் கருதிப் பொங்லிட்டுப் படைத்து மாட்டுப் பொங்கலைக் கொண்டாடி, எம்பெருமானை வழிபடவும் - இருபத்தொன்பதாம் நாளில் காமன் பண்டிகை விழாவாகவும், எம்பெருமானைக் காணும் பொங்கலாகவும் கொண்டாடி நோன்பின் இறுதி விண்ணப்பங்களை விண்ணப் பிக்கவும், ஆண்டாள் விருப்பப்பட்டாள்.

மார்கழி முடிவு பெறும் முப்பதாம் நாளைக்கு முதல் நாளாகிய இருபத்தொன்பதாம் நாளில் பௌர்ணமி நிறைவுநாள் அமைந்தமையால் - பௌர்ணமியில் துவங்கிய நோன்பைப் பௌர்ணமியிலேயே நிறைவு செய்ய, ஆண்டாள் முடிவெடுத்தாள்.

மாதத்திற்கு நாள் முப்பது என்ற கணக்கில் முடிவுபெறும் மார்கழி முப்பதாவது நாளில், ஆண்டாள் குறைவில்லாத கோவிந்தனை நினைத்துச் செய்த நோன்பிற்காகப் பாடிய பாசுரங்களும் குறைவின்றி முப்பதாகத் திருப்பாவை முடிவு பெறட்டும் என்று நினைத்து ஆண்டாள், மார்கழி முப்பதாம் நாளில் பாடிய பாசுரத்தில் - தான் பாடிய முப்பது பாசுரங்களை ஓதி வருவதன் பயனைத் தானே விளக்கித் திருப்பாவையை நிறைவு செய்தாள்!

உழவர் திருநாளாகிய பொங்கல் பெருவிழா, சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியப் பயணத்தை மேற் கொள்ளும் தைமாதம் முதல் நாளில் சூரியனை நோக்கிச் செய்யும் விழாவாகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருவதோடு, தை மாத இரண்டாம் நாளில் மாட்டுப் பொங்கலும், தை மாத மூன்றாம் நாளில் காமன் விழாவாகவும் காணும் பொங்கலாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

ஆனால் மாதங்களில் நான் மார்கழியாக விளங்குகின்றேன்! என்று எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியமையால் - ஆண்டாளும், திருப்பாவை நோன்பை முடிக்கும் மார்கழி மாதத்திற்குள்ளேயே - பொங்கல், மாட்டுப் பொங்கல், காமன் விழாவாகக் கொண்டாடப்படும் காணும் பொங்கல் - அனைத்தையும் கொண்டாடி முடித்து விட்டாள்!

ஆண்டாள் பாடிய திருப்பாவையுள், இருபத்து இரண்டாம் பாசுரம் முதல் இருபத்தாறாம் பாசுரம் வரையிலும் உள்ள ஐந்து பாசுரங்களும் - மார்கழி நோன்பை நோற்றவர்கள் கண்ணனிடம் விண்ணப்பிக்கும் பாசுரங்களாகும்.

இருபத்தேழு முதல் இருபத்தொன்பதாவது பாசுரம் முடிய உள்ள மூன்று திருப்பாவைப் பாசுரங்களும், ஆண்டாள் தன் தோழியர்களுடன் மார்கழியிலேயே பொங்கல் படைத்த பாசுரங்களாகும்.

இறுதியில் பாடிய முப்பதாவது பாசுரம் - திருப்பாவை ஓதும் பயனை விளக்கும் பாசுரமாகும்.

ஆண்டாள் **இருபத்தாறாவது பாசுரத்தில்** பழங்காலம் முதல், மார்கழி நீராடுகின்றவர்கள் நோன்பு முடிக்கும் பொழுது எவை எனவ தேவைப்படும் என்பதைக் கண்ணனிடம் எடுத்துச் சொல்லி, அவற்றையெல்லாம் தங்களுக்குத் தருமாறு கேட்டுள்ளாள்.

இப்பாசுரத்துள் - 'மாலவனே! மணிவண்ணனே! முற்காலம் முதலாக மார்கழி நோன்பை முடிப்பவர்களுக்கு நோன்பு முடிக்கும் பொழுது செய்யப்படும் செயல்களுக்குத் தேவைப் பட்டவற்றைக் கூறுகின்றோம்! கேட்பாயாக!

உலகங்களெல்லாம் நடுநடுங்க முழக்கமிடும் உன்கையில் உள்ள பால்வண்ணம் கொண்ட பாஞ்ச சன்னியத்தைப் போல் பெருமுழுக்கம் செய்யும் சங்குகள் வேண்டும்! முழக்கமிடும் பெரும் பறைக் கருவிகள் வேண்டும்! இம்முழக்கங்களை எழுப்பி

நாங்கள் நோன்பை முடிப்பதை உலகிற்கு அறிவிக்க வேண்டுமல்லவா?

நோன்பு நோற்ற எங்கள் மீது கண்ணடிபடாமல் காப்பாற்றப் பல்லாண்டு பல்லாண்டு பாசுரங்களைப் பாடுவோர் வேண்டும்! மங்கல விளக்குகள் வேண்டும்! நோன்பு முடிப்பதைக் கொண்டாடத் திரைச்சீலைக் கொடிகளும், மேலே கட்டும் விதானங்களும் வேண்டும்! ஆலிலை மேல் பள்ளிகொண்ட கண்ணா! இவற்றை யெல்லாம் தந்து அருள்செய்!' என்று கண்ணனைக் கேட்பதைப்போல -

**மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்**
**மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்!**
**ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன**
**பாலன்னவண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே**
**போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே!**
**சாலப்பெரும் பறையே! பல்லாண்டிசைப்பாரே!**
**கோல விளக்கே! கொடியே! விதானமே!**
**ஆலினிலையாய்! அருளேலோர் எம்பாவாய்!** - என்று பாடியுள்ளாள்.

இப்பாசுரத்தில் ஆண்டாள் - ஆலின் இலையாய்! என்று கண்ணனை நோக்கிச் சொல்வது மிக அற்புதம்!

எம்பெருமானுடன் தொடர்பு கொண்ட மரங்கள் ஆலமரமும், அரசமரமும் ஆகும்!

மரங்களில் நான் அரசமரம் என்று கண்ணன் கூறியுள்ளான் அதே மாயவன், உலகம் அழியும் ஊழிக் காலத்தில் சகல உலகங்களையும் தன் மணி வயிற்றிற்குள் ஒடுக்கிக் கொண்டு - பாலகனாய் ஊழிக்காலப் பெரு வெள்ளத்தின் மீது ஆலிலை மீது பள்ளிகொண்டு, தன் கால் விரலைத் தன் வாயில் சப்பிக் கொண்டு உலகை மயக்கும் முறுவல் பூத்த முகத்துடன் கிடப்பான்!

மரத்தின் அடிவேர் இற்றுப்போனாலும், விழுதுகளைக் கொண்டு பரவிப் படர்ந்து அழிவில்லாமல் தழைத்துக் கொண்டிருக்கும் மரம், ஆலமரம்!

அதைப் போலவே - உலகங்கள் அவ்வளவும் அழிந்து போனாலும், தன்னால் மீண்டும் ஜீவராசிகளை உற்பத்தி செய்து உலகத்தைக் காக்க முடியும் என்ற தத்துவசாரத்தை உணர்த்தவே - ஆலிலையின்மீது குழந்தை வடிவில் பள்ளி கொண்டு விளக்கியுள்ளான், எம்பெருமான்!

ஆண்டாள் தன் நினைவு தெரிந்த காலம்முதலே-வடபெருங்கோவிலில் வழிபட்ட எம்பெருமானின் திருவுருவம், ஆலிலைமீது பள்ளிகொண்ட வடபத்திர சாயி ஆகும்!

வடபத்திர சாயியின் கோலத்தில் பெரும் ஈடுபாடு கொண்டு செலுத்திய பக்திப்பரவச நிலைதான், இத்தகைய பக்தியின் பரிணாம வளர்ச்சியின் விளைவுதான் - ஆண்டாள் தென்னரங் கத்துத் திருவரங்க எம்பெருமான் அழகிய மணவாள ஸ்ரீரப்தி நாதனைத் தன் நாயகனாகத் தேர்ந்தெடுக்க வழிகாட்டியது!

இதை, உணர்த்தவே - இப்பாசுரத்துள், ஆலின் இலையாய்! என்ற அற்புதமான சொல்லைச் சந்தர்ப்பம் பார்த்துப் புகுத்தியுள்ளாள், ஆண்டாள்!

அடுத்து - மார்கழி நோன்பு தங்கு தடையின்றி முழுமை பெறும் நேரத்தில், நோன்பு நோற்றகன்னியர் மீது ஊரவர் தம் கண் திருஷ்டிபட்டுவிடக்கூடாது என்று கவலைப்பட்டாள், ஆண்டாள்!

அதனால்தான் - எம்பெருமான் மீதே கண்அடிபடாமல், இருப்பதாகத் தன் தந்தை பட்டர்பிரான் பாடிய திருப் பல்லாண்டுப் பாசுரங்களைப் பாடக் கூடியவர்களையும், தங்களுக்குத்தர வேண்டும் என்று ஆண்டாள், பல்லாண்டு இசைப்பவர்களையும் கேட்டிருக்கின்றாள்!

மார்கழி நோன்பு நோற்க ஆரம்பித்த காலத்தில் அனைவராலும் வழிபடப் பட்டவன், பாற் கடலுள் பையத்துயின்ற பரமனாகிய ஸ்ரீரப்தி நாதன் தான்!

நோன்பு முடியும் நிலையில் அருள் செய்ய வேண்டப் படுபவனும், ஆலின் இலையானாகிய ஸ்ரீரப்தி நாதன் தான்!

மேலும் பொங்கலுக்கு முதல் நாளில் துன்பங்கள் போய்விட்டன! போகியல் ஆகிவிட்டன! என்று - ஊரவர் பறை கொட்டிக் கொண்டாடும் போகிப் பண்டிகையையும் இப்பாசுரத்தில் குறிப்பாகக் காட்டியுள்ளாள், ஆண்டாள்!

**இருபத்தேழாவது பாசுரத்தைப்** பாடியபொழுது - ஆண்டாளும், அவள் தோழியர்களும் நோன்பை முடித்துப் பாலும் நெய்யும் கலந்த பொங்கலிட்டுப் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றார்கள்!

நோன்பை ஆரம்பித்தபொழுது - நெய்யுண்ணோம்! பாலுண்ணோம்! மையிட்டு எழுதோம்! மலரிட்டு முடிய மாட்டோம்! செய்யாதன செய்யமாட்டோம்! தீய மொழிகளைப்

பேசமாட்டோம்! என்று தங்களுக்குள் செயலாலும், சொல்லாலும், மனத்தாலும் கட்டுப்பாட்டு முறைகளை விதித்துக் கொண்டவர்கள் - மார்கழி இருபத்தேழாம் நாளில் கூடிப் பொங்கலிட்டுப் பெருவிழாக் கொண்டாடும் பொழுது, கோவிந்தா! கோவிந்தா! என்று வாய் நிரம்பப்பாடிக்கொண்டே, கண்ணன் அவரவர்கள் நினைவில் வேண்டிக் கொண்ட வரங்களை யெல்லாம் மார்கழி நோன்பின் வெகுமதிகளாகத் தந்துவிட்டான் என்றே நினைக்கின்றார்கள்!

கண்ணனிடம் பறைகொண்ட கன்னியர் - பின்பு கைவளை, தோள்வளைகளை உடுத்திக் கொண்டு காதிற்குத் தோடு, பாடகத்தால் அணி - முதலிய அனைத்து அணிகலன்களையும் அணிந்து கொண்டு, தங்களைச் சர்வ அலங்கார ஒப்பனை வகைகளைச் செய்து கொள்கின்றார்கள்!

பிறகு நெய்யும், பாலும் கலந்த பொங்கலை இட்டுக் கோவிந்தனை வணங்கி நிவேதனம் செய்கின்றார்கள்!

பிறகு - அனைவரும் கூட்டமாகக்கூடித் தங்களுக்குள் கண்ணனும் சேர்ந்து உணவு உட்கொள்ள வந்திருப்பதாகக் கற்பனை செய்து கொண்ட பாவனை உணர்ச்சி பொங்க - அமர்ந்து கொண்டு கமகமவென்று மணம் மிக்க புத்துருக்கு செய் ஊட்டிச் சமைத்த பொங்கலை உண்ணும்பொழுது-முழங்கையில் நெய் வழியவழியப் பொங்கல் உண்டு மனம் குளிர்ந்து மார்கழிப் பொங்கலை முடிக்கின்றார்கள்! இத்தகைய அற்புத அபூர்வக் காட்சியை -

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன் தன்னைப்**
**பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்!**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,**
**பாடகமே — என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்!**
**ஆடை உடுப்போம்! அதன் பின்னே, பாற்சோறு**
**மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்**
**கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!** என்று ஆண்டாள் அற்புதமாகப் பாசுரம் பாடிப் 'பொது நலத்துடன் கூடி உண்டு, உடுத்தி, அணிந்து மகிழுங்கள்! தனித்துச் சுயநலமாக - உண்டு, உடுத்தி, அணிந்து பெறும் மகிழ்ச்சியை நாடாதீர்கள்!' என்று ஆணித்தரமாகச் சொல்கிறாள்!

ஏனென்றால் - தனித்து ஒருவர் உண்ணும்பொழுது, உணவு கிடைக்காதவர் பசியால் துடிதுடிப்பர்! தனித்து ஒருவர்

ஆடம்பரமாக ஆடை உடுத்தினால், இதைப் பார்க்கும் மற்றவர்களின் மனதில் உடுத்திக் கொண்டிருப்பவரைப் பார்த்துப் பொறாமை கொந்தளிக்கும்! தனித்து ஆடம்பர அணிகளை ஒருவர் அணிந்தால், அணிமணிகள் இல்லாத வசதி வாய்ப்பற்றவர்கள், தம் வறுமையை நினைத்துக் கூனிக் குறுகித் தம் விதியை நினைத்து நொந்தழிவார்! எனவே கூடி இருந்து, என்று கூறிய மனித நேயப் பொதுவுடைமை நெறியே - கோதையின் பக்திப் பாதையாகும்.

இப்பாசுரத்தில் ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய - 'மூடநெய் பெய்து முழங்கை வழிவார' என்ற அர்த்த அனுபவ புஷ்டியோடு அமைந்த வார்த்தைகளில் உள்ள அஷரங்கள் கோடானுகோடிபெறக் கூடியவையாகும்!

தன்னுடன் பரமாத்ம சங்கமமாகக் கூடி மகிழாமல் உள்ளவர்களைக்கூடத் தன் மாயையால் கூடுமாறு அவர்களின் ஜீவாத்மாக்களை வெற்றி கொள்வான் எம்பெருமான் என்ற பொருளையும் - கூடிச் சேர்ந்து பணியாத பகைவர்களையும் வெற்றி கொள்பவன் எம்பெருமான் என்ற கருத்தையும் உள்ளடக்கியே, 'கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா!' என்று பாடினாள், ஆண்டாள்!

மார்கழி இருபத்தெட்டாம் நாளில், வற்றாத பால்மடி கொண்ட வள்ளல்களாகக் கோகுலத்தைச் செழிக்க வைக்கும் பசுக்கூட்டங்களுக்காகவே - ஆண்டாளும் தோழியரும் மாட்டுப் பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

இதற்காக ஆண்டாள் பாடிய **இருபத்தெட்டாவது பாசுரத்தில்** - 'எந்த விதமான குறையும் இல்லாத கோவிந்தா! பால்கறக்கும் மாடுகளைக் காட்டிற்கு ஓட்டிவிட்டு அவற்றின் பின்னே சென்று, காட்டில் கிடைத்தவைகளைச் சேர்ந்து உண்டு உடலை வளர்த்துத் திரியும் வாழ்க்கையைக் கொண்ட இடையர்கள், நாங்கள்!

அறிவு, ஞானம், கல்விகளைப்பெறும் வாய்ப்பில்லாத இத்தகைய எங்கள் குலத்தில், நீ வந்து பிறந்ததால் மட்டுமே - உன்னை அடைந்த பெரும் புண்ணியங்களைச் செய்தவர்களாக ஆகிவிட்டோம்!

உன்னோடு, எங்களுக்கு உள்ள உறவை - உன்னைவிட்டு எங்களையும், எங்களைவிட்டு உன்னையும் யாராலும் பிரித்து விடமுடியாது.

அறிவற்ற பிள்ளைகளாகிய நாங்கள், உன் மீது கொண்டுள்ள பேரன்பின் காரணமாக உன்னைப் பெயர் சொல்லி அழைத்து வருகின்றோம்.

கணவனை மனைவி பெயர் சொல்லி அழைத்தாலும், தந்தையையும் தாயையும் பிள்ளைகள் பெயர் சொல்லி அழைத்தாலும், மாபெரும் ஞானிகளை நேருக்கு நேராகப் பெயர் சொல்லி அழைத்தாலும் - தமையனை, மூத்த மாமனை, பாட்டனை, ஆசானை, தந்தை முறை கொண்ட பெரியவரை - இப்படியெல்லாம் உள்ளவர்களைப் பெயர் சொல்லி அழைத்தாலும் - மன்னவனை, மதி அமைச்சனை, படைத் தளபதியைப் பெயர் சொல்லி அழைத்தாலும், மாபெரும் குற்றமல்லவா?

அப்படி இருக்கும்பொழுது - பரமாத்ம பரம புருஷனாகிய உன்னை, நாங்கள் அன்புரிமையுடன் - அடே, கண்ணா! டேய், கிருஷ்ணா! என்றெல்லாம் மரியாதை இல்லாத நிலையில் -பெயர் சொல்லி அழைத்து வருகின்றோமே? அறிந்தறிந்தும் எவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்து கொண்டு வருகின்றோம்?

அப்படி உன்னைப் பெயரிட்டு நாங்கள் அழைப்பதற்குச் சீற்றம் கொண்டுவிடாமல் - இறைவனே! பேசுவதற்கு வாயற்ற பசுக்கள் - எங்களையும் உன்னையும் எப்படி அழைக்க முடியும்? அப்படித்தான் மாடுமேய்க்கும் நாங்கள் - பேசுவதற்கு வாயிருந்தும்கூட, பாச நட்பின் அன்புறவு, எங்கள் பகுத்தறிவுக் கண்களை மறைக்க வேறு வழி இல்லாமல் உன்னைப் பெயரிட்டு அழைத்து வருகின்றோம்!

அப்படி உன்னைப் பெயரிட்டு நாங்கள் அழைப்பதற்குச் சீற்றம் கொண்டுவிடாமல் - இறைவனே! நீ எங்களுக்குப் பறை தருவாய்!' என்று பொருள் படுமாறு -

**கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்து உண்போம்!**
**அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்**
**பிறவிப் பெறும்தனைப் புண்ணியம் யாம் உடையோம்!**
**குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! உன் தன்னோடு**
**உறவேல், நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!**
**அறியாத பிள்ளைகளோம், அன்பினால் உன்தன்னைச்**
**சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே —**
**இறைவா! நீ தாராய்! பறையேலோர் எம்பாவாய்!** என்று பாடியுள்ளாள்.

ஆண்டாள், தான் பாடிய முப்பது திருப்பாவைப் பாசுரங்களுள் எம்பெருமானின் திருநாமத்தைக் கோவிந்தன்

என்று இருபத்தேழு, இருபத்தெட்டு, இருபத்தொன்பது ஆகிய மூன்று பாசுரங்களில் - 'கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா!' என்றும், 'குறைவொன்றும் இல்லாத கோவிந்தா!' என்றும், 'அன்று காண்! கோவிந்தா!' என்றும் குறிப்பிட்டுள்ளாள்.

கோவிந்தன் என்பது, கண்ணனின் திரு நாமமாகும். கோகுலத்தில் இடையர்களின் துன்பங்களைத் துடைக்கக் கண்ணன் கோவர்த்தனமலையைக் குடையாகப்பிடித்துக் காத்த பொழுது 'கோவிந்தன் என்ற பெயர் பெற்றான்!

இடையர்கள் தங்கள் குல வழக்கப்படி, இந்திர வழி பாட்டிற்காக உணவு சமைக்கத்துவங்கிய பொழுது - கண்ணன் அதைத் தடுத்துக் கோவர்த்தன மலைக்கு வழிபாடு செய்யுமாறு கூறினான்.

மலைவளம் மிகுந்து, மழைவளம் சிறந்தால்தான், கோகுலமும் செழிப்பாக இருக்கும் என்று அறிவுரை கூறிய கண்ணன் - இடையர்கள் செய்த கோவர்த்தனகிரி வழிபாட்டில், தானே எல்லாமுமாக விளங்கி அருள் செய்தான்!

வழிபாட்டிற்கு இடையர்கள் உணவு சமைத்தபொழுது- தானும் ஓர் இடையனாக உணவு சமைத்தவனும், கண்ணன்!

மலை வழிபாட்டை இடையர்கள் செய்த பொழுது - இடையனோடு இடையனாகத் தானும் மலை வழிபாட்டைச் செய்ததோடு, மலையின் தேவதையாக வந்து வழிபாட்டு அமுதை உண்டவனும் கண்ணன்!

தனக்கு வழிபாடு செய்யாமல் மலை வழிபாடு நடத்துவதை அறிந்து சினம் கொண்ட இந்திரன், மலையின் மீது ஏழு நாட்கள் வரையிலும் கல் மழை பொழிய ஏவினான்.

அப்பொழுது - கோவர்த்தன கிரியாக மாறியவனும், கண்ணன்!

மலையைக் குடையாகத் தூக்கித்தன் ஆயர் கூட்டத்தின் மீது கல்மழை விழாமல் தடுத்தவனும், கண்ணன்!

ஏழு நாட்களாக மழையாக விழுந்து கொண்டிருந்த அவ்வளவு கற்களையும் தன் மீது தாங்கிக் கொண்ட கோவர்த்தன கிரியும் - கண்ணன்!

பிறகு - தான் செய்த குற்றத்திற்காக வருந்தி ஓடோடி வந்து இந்திரன் தன்னை வழிபட்டுவணங்கிய காலத்தில் - அவ்வழிபாட்டை ஏற்றுக் கொண்டவனும், கண்ணன்!

இங்ஙனம் இம்மையில் கண்ணன், சர்வ வியாபக நிலையை உணர்த்திய கோவிந்தனாகிய அம்சத்தில் ஈடுபாடு கொண்ட ஆண்டாள் - கோகுலத்தில் நடைபெற்ற விழாவாகவே மார்கழி நோன்பைக் கற்பனை செய்து கொண்டு - இப்பொங்கல் விழாப்பாசுரங்கள் மூன்றிலும், கோவிந்தன் திருநாமத்தை இணைத்திருக்கின்றாள்.

'குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா!' என்ற வார்த்தைகள் அதி அற்புதமானவை.

கோவிந்தன் குறை இன்றி இருந்தால்தான் - கோவிந்தனை வழிபடும் பக்தர்களும் குறைவின்றி வாழ்வார்கள் என்பது ஆண்டாளின் கருத்து.

மார்கழி **இருபத்தொன்பதாவது** நாளில் வந்த பௌர்ணமியில் - திருப்பாவை நோன்பின் **பாசுரத்தை** நிறைவு செய்யும் ஆண்டாள் -

'சிற்றஞ்சிறு காலைப்பொழுதில் நாங்களெல்லாம் வந்து உன்னை எழுப்பி அமரச்செய்து, பொங்கலிட்டு நிவேதனம் செய்து முடித்து, உன் பொற்றாமரை மலர் அடிகளைப் போற்றி வணங்கிக் கேட்கும் பொருளை, நீ அறிவாயாக!

பசுக்களை மேய்த்துப் பாதுகாத்து உணவு உண்ணும் வாழ்க்கையைக் கொண்டுள்ள எங்கள் குலத்தில் பிறந்துவிட்டு - நாங்கள் உனக்கு அடிமைகளாகச் செய்து வரும் பணிகளை ஏற்றுக் கொள்ளாமல் நீ, மறுத்துவிடமுடியாது.

கோவிந்தா! உன்னிடம் பறை கேட்டு வரம் பெற்றுப் பயன்பெறும் நோக்கத்தோடு - நாங்கள் வரவில்லை! நீயும், உன்மீது கொண்டுள்ள எங்கள் கண்ணனின் பரம புருஷ பக்தியும் எங்களை விட்டு விலகிவிடக் கூடாது என்பதற்காகவே தான் வந்துள்ளோம். என்றென்றும், ஏழேழ் பிறவிகளாகக் காலங்கள் உள்ள அளவும், உன்னோடு உறவு கொண்டு வாழ்வோம்! உனக்கே நாங்கள் அடிமைச் சேவை செய்து கொண்டிருப்போம்! இதைத் தவிர்த்து, வேறு வேண்டாத விருப்பங்கள் எதுவும் ஏற்பட்டுவிடாமல் - உன் திருவருள், எங்கள் மீது என்றென்றும் இருக்க வேண்டும்!' என்ற கருத்துடன்

**சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து – உன்**
**பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்!**
**பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து – நீ**
**குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது!**

**இற்றைப்பறை கொள்வான் அன்று – காண், கோவிந்தா!**
**எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு –**
**உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!**
**மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்** - *என்று பாடியுள்ளாள்.*

*இப்பாசுரத்தை ஒவ்வொரு நாளும் ஓதி, எம்பெருமானை வழிபட்டு வந்தால் - ஒவ்வொரு நாளும் முப்பது திருப்பாவைப் பாசுரங்களையும் பாடி வணங்கியதற்குச் சமமாகும்.*

*எம்பெருமானிடம் ஏதோ பறை வேண்டி மார்கழி நோன்பு நோற்று, எம்பெருமானிடம் கன்னியர்கள் அனைவரும் கேட்ட பறையாகிய வரமே - நாங்கள் எந்த வரமும் கேட்டு வரவில்லை என்பதும், உன்மீது கொண்டுள்ள எங்கள் - பக்தியும் கைங்கர்ய சேவைகளும் எங்களை விட்டு விலகாத பக்திதான், நாங்கள் கேட்கும் பறையாகியவரம் என்பதும் ஆகும். இது மிக அற்புதமான பக்தி மார்க்கம்! அதுவும் பயன் கருதாத நிஷ்காமிய பக்திநெறி! பூர்வ புண்ணியமும், பழவினைப் பயன்களும் இருந்தால்தான், எம்பெருமான் மீது பக்தி ஏற்படுமேயன்றி - மற்றவர்களுக்கு எல்லாம், எம்பெருமானைப் பற்றிய நினைவே ஏற்படாது என்பது தான் உண்மை!*

*ஆயர் குலத்து உதித்த அணிவிளக்காகக் கோபியர்கள் கண்ணன் மீது உரிமை பாராட்டிக் கண்ணனின் பிரேமைக் கடலில் நீந்தி மகிழ்ந்தாலும் - அவன், அவ்வப்பொழுது எல்லாக் குலமுமாகவே விளங்கும் கர்மயோகி! ஞானயோகி!*

*வேத உபநிஷத்துக்களை உணர்ந்து, மனித சமுதாய அமைப்பை அறிவியலுடன் அணுகிக் கீதையை உபதேசித்த பொழுது, கண்ணன் ஓர் அந்தணன்! ஆசான்!*

*துவாரகாபுரியின் மன்னனாக ஆண்டபொழுது, கண்ணன் ஓர் அரசன்!*

*ராஜதந்திரத்துடன் பதிலுக்குப் பதில் என்று கபடமாகப் பேரம் நடத்தி, லாபமடையும்பொழுது - கண்ணன் ஒரு வைசியன்!*

*மாடு மேய்ப்பதோடு, பலராமனுடன் கலப்பை கட்டி ஏர் உழுது, பயிர்களை விளைவிக்கும்பொழுது - கண்ணன் ஒரு வேளாளன்!*

*கோபியர்களுக்குக் கண்ணன் ஒரு மன்மதன்! வேதாந்திகளுக்குக் கண்ணன் ஒரு மகரிஷி!*

குசேலனைப் போன்ற பக்தனுக்குப் பணிவிடை செய்வதில் - கண்ணன் , ஒரு தாஸானுதாஸன்! ஆபாத் பாந்தவன்!

அர்ப்பணிக்கும் அபயக் குரலுக்கு ஓடோடி வந்து காப்பதில், கண்ணன் ஓர் ஆத்மரக்ஷகன்! அநாத ரக்ஷகன்!

கண்ணன், மனிதருக்குள் மாமனிதன்! தேவருக்குள் தேவாதி தேவன்! இத்தகைய கண்ணனின் யோக மாயா அம்சத்தில், ஆண்டாள் ஈடுபட்டதில் - வியப்பில்லை.

இறுதியாக - மார்கழி முப்பதாவது நாளில் பாடிய **முப்பதாவது பாசுரத்தில்** 'திருவில்லிபுத்தூர் பட்டர்பிரான் மகளாகிய தாமரை மலர் மாலைகளை எம் பெருமானுக்குச் சூடிக் கொடுத்த கோதையும் - முழுமதியைப் போன்ற முகத்தைக் கொண்ட கோபியர்களும், முழுமதி நிறைந்த பௌர்ணமியில் துவங்கி, பௌர்ணமியில் முடிவுற்ற மார்கழியில் நீராட்டு நோன்பை நோற்று, திருப்பாற்கடலைக் கடைந்த மாதவனும் கேசவனுமாகிய எம்பெருமானைப் போற்றி வணங்கிக் கூடிச் சென்று பறை கொண்ட நிலையில் அமைந்த பாவைப் பாக்களைப் பாடிக் கொடுத்தவளும் ஆகிய ஆண்டாள், அருளிய சங்கத்தமிழ் மாலையில் உள்ள முப்பது பாசுரங்களையும் தவறாமல் ஓதி வழிபட்டு வருகின்றவர்கள் - மலை போன்ற தோள்களையும் சிவந்த கண்களையும் கொண்ட முகத்தை உடைய செல்வம் மிக்க எம்பெருமான் திருமாலால் எங்கெங்கும் திருவருள் பெற்று இன்பமடைவார்கள்' என்ற பொருள்படுமாறு

**'வங்கக் கடல் கடைந்த மாதவனை, கேசவனை**
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி**
**அங்கப் பறை கொண்ட ஆற்றை, அணிபுதுவைப்**
**பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன**
**சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே,**
**இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்,**

**எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்!'** என்று - ஆண்டாள் திருப்பாவையின் முப்பது பாசுரங்களையும் பாடி நிறைவு செய்துள்ளாள்.

இம்முப்பதாவது பாசுரத்தின் வழியாக எம்பெருமான் திருவருளால், **சகல ஜீவராசிகளும் இன்புற்று வாழ வேண்டும் என்ற நோக்கமே, திருப்பாவையின் சாரம் !**

இப்பாசுரத்துள் எம்பெருமானைப் பற்றிச் சொல்லும்

பொழுது 'ஒருவனே இறைவன்!' 0என்ற ஆன்ம நேய ஒருமைப் பாட்டு நிலையைக் கூறியுள்ளாள்.

வங்கக்கடல் கடைந்த மாதவன் என்று குறிப்பிடும் பொழுது- திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் 'எம்பெருமானே திருப்பாற் கடலில் தவயோக அறிதுயிலில் பள்ளி கொண்டு கிடந்தான்! அதே நேரத்தில் மத்தாகக் கடையப்பட்ட மலையை அசையாமல் தாங்கும் கூர்மமாகிய ஆமையாகவும் கிடந்தான்! அதே நேரத்தில் திருப்பாற்கடலைக் கடையும் தேவர்களுடன், தானும் சேர்ந்து கடலைக் கடைந்தான்!

அம்மாயவனே, மோகினி அம்சம் கொண்டு, தேவாமிர்தத்தைத் தேவர்களுக்கு மட்டும் பங்கிட்டும் கொடுத்தான்!

அதே மாயவனே , தன் தங்கை பராசக்தியின் வழியாக ஆலகால நஞ்சை உண்ட ஆதி சிவனின் கழுத்தில் நஞ்சையும் நிறுத்தினான்! என்று - சர்வ வியாபக ஆதிமூலப் பரம் பொருளாக விளங்குபவன், இறைவன் ஒருவனே என்பதைக்குறிப்பாகக் காட்டியுள்ளாள், ஆண்டாள்!

அத்துடன் 'கேசவன்' என்று குறிப்பிடும்பொழுது - கேசவன் என்றால் விரிசடை கொண்ட கேசத்தையுடைய சிவனையும், சௌரியாகிய முடியைக் கொண்ட எம்பெருமான் திருமாலையும் குறிக்கும் பொதுவான சொல்லாகும்.

கேசவார்த்தம் என்றால், திருமால் தவம் செய்து சிவனோடு கலந்த அம்சமாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே - அரியும், அரனும் ஒருவனே என்ற கொள்கையிலும் பிடிப்புள்ளவளாக இருந்திருக்கின்றாள், ஆண்டாள்!

முதல் மூன்று ஆழ்வார்கள் சந்தித்த காலத்தில் பேயாழ்வார் எம்பெருமானைப் பற்றிப்பாடிய பொழுது, சிவ அம்சமாகிய சடையையும், மழுவாயுதத்தையும் திருவேங்கட நாதனுக்கு ஏற்றித் **'தாழ் சடையும் நீள்முடியும் ஒள்மழுவும், சக்கரமும், ஆழ் அரவும், பொன்நாணும் தோன்றுமால்'** என்று குறிப்பிடும் பொழுதுதான், எம்பெருமான் சேவை தந்தார் என்பதையும் ஆண்டாள் நன்கு அறிவாள்.

எனவே சிவனையும், விஷ்ணுவையும் குறிப்பிடும் பொதுவான கேசவன் என்ற சொல்லைக் கொண்டு - எம்பெருமானை இறுதியில் ஆண்டாள் குறிப்பிட்டுள்ளாள்.

ஆண்டாளின் முப்பது நாள் மார்கழி நோன்புடன் - நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றி உலகை வாழ வைக்கும்

திருப்பாவை என்ற ஒப்பற்ற பக்திப் பெரும் புதையல் உலகிற்குக் கிடைக்கப் பெற்றது.

மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமி - மார்கழி முதலில் ஆரம்பித்தாலும், அல்லது இடையில் துவங்கினாலும், அல்லது அடுத்துவரும் மறு பௌர்ணமி நிறைமதிநாள் - தை மாதத்தை ஒட்டி முன்னும் பின்னும் இடையிலும் வருவதும் உண்டு.

எனவே மார்கழி நீராடிநோன்பு செய்யும் மரபு, தைமாதத்தில் பெரும்பாலும் நிறைவு பெற்று வந்த காரணத்தால் - சைவ, வைணவங்களுக்கும் பொதுவான மாதமும் மார்கழி! மார்கழி நிறைவுநாள் என்ற பாவனையில் தையிலும் நீராடிப் பொங்கலிட்டுக் கொண்டாடி வருவதை - 'தைந்நீராடல்' என்று கூறினார்கள்.

இந்நோன்பு முடிவதற்குள் இடையில் திருவாதிரையும் வந்துவிடும்!

மார்கழி நோன்பு நோற்றவர்கள், நீர் நிலைகளாக உள்ள குளங்களில் தான், குள்ளக் குளிரக் குடைந்து நீராடி நோன்பு நோற்றுள்ளார்கள். அலைகடல், நதி, அருவி, ஆகிய நீர்ப் பகுதிகளில் இந்நோன்பு நோற்கப்படவில்லை.

மார்கழி மாதத்தைப் பீடை மாதம் என்பார்கள்! குளிர் அதிகமாக இம்மாதத்தில் இருப்பதால், உறக்கம் நீங்கி எழாமல் கிடக்கும் சோம்பலாகத் தவழும் உறக்கப் பிணியாகிய பீடையை ஓட்டி அடிக்கவேண்டிய மாதம் என்றும் - பீடு ஆகிய பெருமைமிக்க மாதம் என்றும், மார்கழியைக் கருதலாம்!

துளசிச் செடியின் அடியில் எம்பெருமானின் பரமாத்மப் பேரொளி ஜொலிக்க அவதரித்து, பட்டர்பிரானால் கோதை என்ற திருநாமத்துடன் நாராயணனைப் பற்றிய நினைவுடன் பக்திப்பாவையாக வளர்ந்து, எம்பெருமானுக்குத்தான் அணிந்த மாலைகளைச் சூடிக்கொடுத்து - சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாக ஆண்டாள் எனும் திருநாமத்தைப் பெற்று - பின்பு எம்பெருமானையே தன் மணவாளனாக அடைய வேண்டும் என்று மார்கழி நோன்பு நோற்றுத்திருப்பாவைப் பிரபந்தப் பாசுரங்கள் முப்பதையும் பாடி - எம்பெருமானின் தேவியாகும் தகுதி பெற்ற நாச்சியார் என்ற அந்தஸ்திற்கும் ஆளான ஒரே மனிதகுலப் பெண்மணி, கோதையே ஆவாள்! நாச்சி என்றால், நாயகி என்பது பொருளாகும்.

எம்பெருமானின் தேவியர்களுக்கு, நாச்சிமார் என்ற பெயரும் உண்டு. எம்பெருமானின் அம்சமாகிய ஆதி பராசக்தியின்

அம்சங்களாக விளங்கும் அபிராமி, இந்திராணி, கௌமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வராகி ஆகிய ஏழு சத்தமாதர்களும்கூட - நாச்சிமார் என்ற சிறப்புப் பெயர் அமைந்தவர்கள் ஆவர்.

ஆண்டாள் நாச்சியார் - ஆழ்வார் என்ற அந்தஸ்திலும், எம்பெருமானின் தேவி என்ற தகுதியிலும் ஈடு இணையற்றவள் ஆவாள்.

ஆழ்வார்களுள், தான் அணிந்த பூமாலையைச் சூடிக் கொடுத்தவர் எவரும் இல்லை! அதைப் போலவே - எம்பெருமானின் தேவியருள், பாமாலையைப் பாடிக் கொடுத்தவளும் எவளும் இல்லை!

ஆழ்வார்களுள், தன் மகளை எம்பெருமானுக்குத் தேவியாக மணம் செய்து தந்து மாயவனின் மாமனாராகும் அந்தஸ்துக்கு உயர்ந்த விஷ்ணு சித்தர் பட்டர்பிரான் -ஆழ்வார்களுள் மிகப்பெரும் மரியாதை பெறுதற்குரிய பெரியாழ்வாராக மாறியவர்!

தம் வயிற்றைக் கழுவி ஈனத்தனமான சரீரத்தைத் தம் சுக போகங்கள் அனுபவிப்பதற்காக இறைவனின் திருநாமத்தைக் கூறிக் கொண்டு நாடகமாடும் போலி ஆஷாட பூதி கபட பக்தர்களைத் தன்னைப் போன்றவர்களோடு சேர்த்துக் கொள்வதில்லை என்று -

**'கூழ் ஆட்பட்டு நின்றீர்களை, எங்கள் குழுவினுள் புகுதல் ஓட்டோம்!'** என்று அழுத்தமாக உரைத்தவர், பெரியாழ்வார்.

சமுதாயத்தில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட்டுப் பட்டம் பதவிகளுக்காக ஏங்கும் சுயநலமிகள், எவர் வந்தாலும் வரட்டும் என்று கூட்டம் கூட்டி ஆர்ப்பரிக்கும் சமுதாய விரோதக் கூட்டத்தைக் கூட்டி, பக்தி என்ற நாடகம் நடத்துவதை வெறுத்தவர் - பெரியாழ்வார்.

பிரதிபலன் கருதாத பக்திமைத் தொண்டடிமை பூண்ட பக்திநிலைக்கு முதன்மைதந்து - தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் எம்பெருமானின் திருவடித்தாமரைகளில் அர்ப்பணித்துக் கொண்ட சரணாகதித்துவ வாழ்க்கையை நடத்திய பக்தி ஞானவித்தே, பெரியாழ்வார்!

சரீர சுகங்களில் விருப்பம் உடையவர்கள், சராசரியான சாதாரண மனிதர்கள்! இவர்களை விடத் தங்களிடம் உள்ள ஜீவாத்மாவின் உள் வடிவத்தை உணர்ந்த ஞானிகளாகிய முனிவர்கள், மிகமிகப் பல மடங்கு உயர்ந்தவர்கள்!

முனிவர்களைவிட, ஆழ்வார்கள் மிக உயர்ந்தவர்கள்! ஆழ்வார்களுள், பெரியவர் பெரியாழ்வார்!

இவர்,பெருமைமிகும் ஆண்டாளைப் பெற்ற பிரானாகி, தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும் அப்பனாகவும் ஆனார்! எனவே பெரியாழ்வாரும் தொழுது வணங்கும் நிலைக்கு ஆளானவள், கோதை!

திருப்பாவையின் முப்பது அற்புதப் பாசுரங்களையும் பாடி முடிப்பதற்குள், திருவரங்கத்து அழகிய மணவாளன் தன்னை வந்து மணம் செய்து கொள்வான் என்று நினைத்த ஆண்டாள், மார்கழி முடிந்து தைமாதம் பிறந்தும் தன் நாயகன் தன்னைத் தேடி வரவில்லையே என்று தனக்குள்ளாக ஏங்கினாள். மார்கழி நோன்பு நிறைவுற்றதேயன்றி, ஆண்டாளின் நெஞ்சம் நிறைவு பெறவில்லை!

தன் நெஞ்சிற்குள்ளாக ஏங்கித்தவித்து வாடிவதங்கிக் கண்ணீரில் கரைந்து, உருகிக்கருகும் எண்ணங்களைப் பரமனை நாடும் பாமாலைகளாகப் பாடிக் கொண்டு, தைமாதம் முதல் பங்குனி மாதம் வரையிலும் - ஆடிப்பாடி, அழுது, தொழுது, அரற்றிப் பிதற்றிப் பேய் பிடித்த நிலையில் பித்தாகி, செயலிழந்த சித்தாகி, சிந்தையெலாம் ஜென்ம விடுதலை தேடும் திருவரங்கனின் நினைவில், தேய்ந்து செயலற்றாள் - ஆண்டாள்!

இத்தகைய மனநிலையில் ஆண்டாள் நாச்சியார், பதினான்கு துறைப் பிரிவுப் பிரபந்தப் பாசுரங்களாக நூற்று நாற்பத்து மூன்றைப் பாடினாள்.

அவள், தன் அலை பாய்ந்து தடுமாறிய எம்பெருமான் நினைவுகளைப் பதினான்கு என்ற எண்ணின் அடிப்படையில் பிரித்ததிலும், ஓர் அடிப்படை அமைப்பு உள்ளது.

அதாவது, பதினான்கு என்ற எண்ணின் கூட்டுத்தொகை ஐந்து (1+4=5) ஆகும். சர்வ வியாபியாகிய எம்பெருமான், ஐவகைப்பட்ட நிலைகளிலேயே வியாபித்துள்ளார்.

அதைப் போலவே, பாடிய பாசுரங்களின் மொத்த எண்ணிக்கையை நூற்று நாற்பத்து மூன்று என்று அமைத்துக் கொண்டதிலும், ஓர் அடிப்படையான தத்துவார்த்தம் உள்ளது.

அதாவது - நூற்று நாற்பத்து மூன்று என்ற எண்ணின் கூட்டுத் தொகை எட்டு (1+4+3=8) ஆகும். எம்பெருமான் திருமந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்பதும் எட்டெழுத்தாகும்.

மேலும், திவ்விய தேசங்களுக்குள் எம்பெருமான் கொண்டுள்ள கிடந்த கோல நிலைகளும் எட்டு! இங்ஙனம் - ஆண்டாள் திருவாய் மலர்ந்து பாடியருளிய பிரபந்தப் பாசுரங்கள் நூற்று நாற்பத்து மூன்றும் 'நாச்சியார் திருமொழி' என்ற பெயர் பெற்றது.

நாச்சியார் திருமொழியுள், முதலாவது திருமொழியாக முதலில் பத்துப் பாசுரங்களுள் மன்மதனைத் தொழுதாள்.

பிறகு, கோபியராகிய தாங்கள் கட்டிய மணல் வீட்டைக் காலால் எட்டி உதைத்துச் சிதைக்க வேண்டாம், என்று கண்ணனிடம் பத்துப் பாசுரங்களில் வேண்டி நின்றாள்! இது இரண்டாம் திருமொழி.

பிறகு மூன்றாவது திருமொழியாகக் கோபியர்கள் நீராடிக்கொண்டிருந்த பொழுது, அவர்களின் ஆடைகளைக் கவர்ந்து கொண்ட கண்ணனிடம், தங்கள் ஆடைகளைத் திரும்பத் தருமாறு கோபியர்கள் கேட்கும் நிலையில் பத்துப் பாசுரங்களில் - ஆண்டாள், ஜென்ம விமோசன தத்துவார்த்துவ உணர்வுடன் கெஞ்சிப் பாடினாள்!

பிறகு, ஆண்டாள் - நான்காவது திருமொழியாக - மணலில் - எம்பெருமானை எண்ணிய நிலையில் கண்ணை மூடிக் கொண்டு - - மணலில் கோடுகளை வட்ட வட்டமாக விரலால் எழுதிக் கூடலமையுமாறு மணற்கோடுகளிடம் குறிபார்த்துப் பதினொன்று பாசுரங்களைப் பாடி வேண்டினாள்!

ஐந்தாவது திருமொழியாகக் குயிலிடம் எம்பெருமானைக் கூவி அழைக்குமாறு, பதினொன்று பாசுரங்களில் குயில்களிடம் - சாம, தான, பேத, தண்ட உத்தியுடன் பேசினாள்.

பிறகு ஆறாவது திருமொழியாக, எம்பெருமான் கோவிந்தன் தன் கனவில் வந்து உரிய சடங்குகளுடன் தன்னை மணந்து கொண்டதாக, மங்கல மணவினைக் காட்சிகளைத் தன் தோழியிடம் கூறுவதாகப் பதினொன்று பாசுரங்களில் மங்கல மண முழக்கமிட்டு, தன் திருமணம் முடிந்துவிட்டதாகவே கற்பனை அருவியில் களிப்புடன் நீராடி - வாடா இன்ப மலர்களாகக் கவி மணம் பரப்பும் பிரபந்தப் பாசுரங்களைப் பாடினாள், ஆண்டாள்!

பிறகு ஏழாவது திருமொழியாக, எம்பெருமான் இடக் கரத்திலுள்ள பாஞ்ச சன்னிய சங்கிடம் தன் மனத்துயரங்கள் வெளிப்படுமாறு வஞ்சப் புகழ்ச்சியாகப் புகழ்ந்தும், இகழ்ந்தும்

வினாக்கள் கேட்டும், பலபடப் பேசியும் பத்துப் பாசுரங்களில் சங்கு அழுவதைப்போல அழுதாள்!

பிறகு, ஆண்டாள் - எட்டாவது திருமொழியாக - எம்பெருமானிடம் தன் மனநிலையை விளக்கும் மேகத்தைத் தூதுவிடும் பாசுரங்கள் பத்தைப் பாடி, மேகத்தின் வழியாகத் தன் பரமாத்ம மோகத்தைக் காட்டினாள்!

பிறகு, ஆண்டாள் ஒன்பதாவது திருமொழியாக, திருமாலிருஞ்சோலை எம்பெருமானிடம் தன் செயலற்ற நிலையை விளக்கி வழிபடுவதாகப் பத்துப் பாசுரங்களில் புலம்பினாள்.

பிறகு பத்தாம் திருமொழியாக - எம்பெருமான் நினைவாக எழும் மனதிலுள்ள துயரங்களைக் கறுத்த காந்தள் மலர்களிடமும், கார்த்திகை மலர்களிடமும், கோவைக் கொடியிடமும், முல்லைக் கொடியிடமும், குயிலிடமும், மயிலிடமும், மழையிடமும், கடலிடமும், தன் விரகதாபத்தைக் கூறிப்பத்துப் பாசுரங்களில் அரற்றினாள்.

பிறகு ஆண்டாள், பதினொன்றாம் திருமொழியாகப் பாடிய பத்துப் பாசுரங்களில் - திருவரங்கத்துச் செல்வனிடம் தான் கொண்டுள்ள தணியாத காம நிலையைப் பிதற்றினாள்.

பன்னிரெண்டாம் திருமொழியாகத் தான் பாடிய பத்துப் பாசுரங்களில் - தன்னைக் கண்ணனிடம் கொண்டு சேர்ப்பிக்குமாறு, தன் உற்றார்களிடம் வேண்டிக் கெஞ்சி மன்றாடினாள்.

பிறகு ஆண்டாள், பதின்மூன்றாவது திருமொழியாகத் தான் பாடிய பத்துப் பாசுரங்களில் - கண்ணனின் தொடர்புடைய பொருள்களைக் கொண்டு வந்து, தன் விரகதாபத்தைப் போக்க வேண்டும் என்று - தன் உற்றாரிடம், புலம்பி அழுதாள்.

பிறகு, துளசிச் செடியின் அடியில் அவதரித்த பிறவியைக் கொண்டிருந்த ஆண்டாள் நாச்சியார் - பதினான்காவது திருமொழியாகப் பாடிய பத்துப் பாசுரங்களிலும், துளசிச் செடியின் அடியில் பிறந்தவளின் வாழ்க்கை, துளசி வனத்திலேயே எம்பெருமானுடன் சங்கமமாகி முடிவடைந்து விடவேண்டும் என்ற நோக்கத்துடன் - தன் ஜீவாத்மப் பேரொளியின் வழியாக பரமாத்ம எம்பெருமான் கண்ணனைப் பிருந்தாவனத்தில் கண்டதாகப் பாடி, நாச்சியார் திருமொழிகள் பதினான்கையும் முடித்துத் தனக்குள்ளாக ஆத்ம அமைதி பெற்றாள்.

*நாச்சியார் திருமொழியுள் உள்ள நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்களும், ஜீவாத்ம பரமாத்ம சரணாகதித்துவ சங்கம நிலையாகிய நாயக நாயகியத்துவம் கொண்ட உணர்ச்சிகள் கொப்புளிக்கும் அதி அற்புதமான பிரபந்தப் பாசுரங்களாகும்.*

*இவற்றுள் முதலாவது நாச்சியார் திருமொழியாக -ஆண்டாள், தை மாதத்தில் மன்மதனைத் தொழுது, எம்பெருமானைத் தன்னுடன் சேர்த்துவைக்க வேண்டும் என்று வேண்டினாள்.*

*பிரிந்திருக்கும் கணவனை, மனைவியுடன் சேர்த்து வைக்கும் ஆற்றல் பெற்றவன், மன்மதன்!*

*இணையற்ற அழகே வடிவான எம்பெருமானின் மனதில் மானசீகமாகத் தோன்றியவனே, மன்மதன்!*

*சக்தியோடு சிவனையே சேர்த்து வைத்தவன் இவன்! தனக்குரிய கடமையை மன்மதன் செய்தபொழுது - சிவபெருமானின் நெற்றிக் கண்களால் எரிக்கப்பட்டுச் சாம்பலானவன்!*

*அழகே அம்சமான மன்மதன் அழிந்த காலத்திலும்கூட - எங்கெங்கும் அவன் அழகு சிதறிப் பற்பல நிலைகளிலும் பல்வேறு அம்சங்கள் உருவெடுத்தன!*

*மன்மதனை எரித்த சிவனின் நெற்றிக் கண்ணின் தீப்பொறிகளிலிருந்து, அழகே உருவான முருகன் அவதரித்தான்!*

*மன்மதனின் எரிந்த சாம்பலைப் பராசக்தி உற்றுப்பார்த்த பொழுது - பண்டகன் என்ற அரக்கன் சுக்கிரனால் உயிர்பெற்றுச் சகல சக்திகளுடன் உலகங்களை நாசம் செய்து வந்தான்.*

*பிறகு, பராசக்தியே பேரெழில் மிக்க லலிதாம்பிகையாகத் தோன்றி, காமேஸ்வரனாகிய சிவனை மணந்து கொண்டு - முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல, பெண்களைப் படையாகக் கொண்ட மன்மதனின் எரிந்த சாம்பலில் உருவான பண்டகாசுரனை அழிக்கப் பெண்களாகிய படைகளைத் திரட்டிக் கொண்டு சென்று, அவனை வதம் செய்தாள்.*

*அது மட்டுமல்ல - மன்மதன் எரிந்த பொழுது, அவன் கையிலிருந்த மலரம்புகளையும், கரும்பு வில்லையும் ஏந்திய நிலையில் - கரிய நிறங்கொண்ட பராசக்தியே சிவந்த குங்கும நிறப்பேரழகுடைய அன்னையாக, சந்நியாசினிக் கோலத்தில் காமாட்சி வடிவில் தோன்றினாள்! பெயரளவிற்கு மன்மதன் எரிக்கப்பட்டானேயன்றி - அவன் அழகும், அவன் உயிரினங்களின்*

நெஞ்சங்களில் மூட்டி வந்த காம சிற்றின்ப உணர்வுகளும், ஜீவ உற்பத்திகளும் அழிக்கப்படவில்லை.

மன்மதனுக்குரிய ஒரு பெருஞ்சிறப்பு - தன் மனைவி ரதியையன்றி வேறு எந்தப் பெண்ணையுமே விரும்பாத ஏகபத்தினி விரத ஒழுக்கம் மன்மதனிடம் இருந்தது!

மண்ணுலகில் மனித குலத்தில் அவதரித்த எம்பெருமான் இராமனைப் போல, விண்ணுலகில் உள்ள தேவாதி தேவர்களிலும், மன்மதனே - ஏக பத்தினி ஒழுக்க சீலன்!

எவ்வளவோ கோடானுகோடி ஜீவாத்ம நெஞ்சங்களில் சிற்றின்பக்காம உணர்வுகளைத் தூண்டிவிடும் பேராற்றலைத் தனக்குரிய தொழிலாகக் கொண்டவனாக இருந்தும்கூட, தன் தொழிலைச் செய்வதில் பிரதிபலன் கருதாத கடமை உணர்வு தவழ்ந்ததேயல்லாமல் - தன் பேரழகையும், மயக்கி வீழ்த்தும் வசியக் கவர்ச்சியையும் கொண்டு பெண்மை தவழும் எவரிடமும், தன் சித்து வித்தையைக் காட்டித் தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு, சுற்பைச் சூறையாடி - எவரிடமும் இந்திரனைப் போலவோ, சந்திரனைப் போலவோ, இராவணனைப் போலவோ சாபம் பெறாத தனித்துவம் கொண்ட - தன் மனைவி ரதிக்கு மட்டுமே சொந்தமானவனாக விளங்கிய ஒழுக்கக்குன்று, மன்மதன்!

இத்தகைய ஒழுக்க நெறியாலும், ரதியின் மாங்கல்ய பாக்கியத்தாலும்தான், எவராலும் மன்மதனை அழிக்க முடியவில்லை.

எனவே ஆண்டாள் - மன்மதனைத் தன் உடன் பிறவாத உயிருக்குயிரான ஒரு சகோதரனாகவே எண்ணி - அவனிடம், எம்பெருமானைத் தன்னுடன் சேர்த்து வைக்க வேண்டுமென்று தன் **முதல் திருமொழியில்** தொழுது வேண்டிப் பாசுரங்களைப் பாடி இருக்கின்றாள்.

மன்மதனை வழிபடுவதற்காகத் தை மாதம் முழுவதும் - ஆண்டாள் தரையைப் பெருக்கித் தூய்மை செய்து, நீர் தெளித்துக் கோலமிட்டுப் புது மணல் பரப்பித் தெருவை அழகு செய்து அலங்கரித்தாள்.

பிறகு, சங்கு சக்கர மேந்திய எம்பெருமான் திரு வேங்கட முடையான்தான், மனையாளாக வாழ்க்கைப்படுவதற்கு வகை செய்து தரவேண்டுமென்று - 'காமதேவனே! உன்னையும், உன் தம்பியாகிய சாமனையும் கைகூப்பித் தொழுகிறேன்' என்று முதல்

திருமொழியின் முதல் பாசுரத்தைப் பாடும் பொழுது 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்!' என்று மன்மதனையும் அவன் தம்பியையும் ஆண்டாள் கை கூப்பித் தொழுதாள்.

ஒரு பெண், தான் மணந்துகொள்ள விருப்பப்படும் ஒருவனைப்பற்றி வெட்கமில்லாமல் தன் தந்தையிடமோ, அல்லது தாயிடமோ மனம் விட்டுப் பேசிவிட முடியுமா?

அல்லது அக்கம் பக்கம் உள்ள அயலவர்களிடமோ, தன் உறவினர்களிடமோ - தன் இச்சையைச் சொல்ல முடியுமா? முடியாது!

அப்படியானால், அவள் யாரிடம்தான் நம்பிச்சொல்ல முடியும்?

ஒரு பெண்ணின் மனதை நன்கு புரிந்து கொண்டு, அவள் நலம் நாடுபவராக, அவள் எண்ணங்கள் ஈடேற மனப் பூர்வமாக உதவக் கூடியவர்கள் இருவர் மட்டுமே இருக்க முடியும்! ஒருவர், உடன் பழகிக் கொண்டிருக்கும் உயிர்த் தோழி! மற்றொருவர், தன் இரத்தத்தின் இரத்தமாகத் தன்னைப் பெற்ற தாயின் வயிற்றில் தன் உடன்பிறந்த, ஆருயிர்ச் சகோதரன்!

இதே நிலையில்தான் ஏக பத்தினி ஒழுக்க சீலனாகிய மன்மதனையும், அவன் தம்பி சாமனையும் தன் சகோதரர்களாகக் கருதித் தன் நெஞ்சம் நிறைந்த நாயகனைப் பற்றித் தெரிவித்திருக் கின்றாள் - ஆண்டாள்!

அதனால்தான், மன்மதனையும் ரதியையும் இணைத்து அழைத்துப் பாசுரத்தை அமைக்காமல் - தன் இரு சகோதரர் களாகக் கருதும் காமனையும், சாமனையும் இணைத்துப் பாசுரம் பாடிவிட்டாள் - ஆண்டாள்!

தங்கை, தன் அந்தரங்கமான வேண்டுகோளை அண்ணனிடம் சொல்லலாம்! இத்தகைய செய்தியெல்லாம் அண்ணனின் மனைவியாகிய அண்ணிரதிக்குத் தெரிந்து விடலாமா? கூடவே கூடாது! அதனால்தான் காமனோடு இரதியைப் பாசுரத்தில் இணைக்காமல் விட்டுவிட்டாள்!

தங்கையின் நலம் நாடுபவன், தமையனாகத்தான் இருக்க முடியும்! தமையனின் மனைவியிடம், இத்தகைய நலம் நாடும் மனப்பான்மையை - எப்படித் தங்கையால் எதிர்பார்க்க முடியும்?

பிறகு ஆண்டாள், வெள்ளை நுண்மணலால் வீதியை அழகு செய்தாள். கீழ்வானம் வெளுக்கும் முன்பு, நீர்த்துறையில் படிந்து நீராடினாள்!

முள்ளில்லாத சுள்ளி விறகுகளைக் கொண்டுவந்து தீ மூட்டி எரியவிட்டு, மன்மதனைக் கை தொழுது நின்றாள்!

பூக்களால் மலரம்புகளைச் செய்து ஒரு வில்லில் தொடுத்து 'கடல் வண்ணன்' என்ற பெயரைப் பூங்கணைகளால் எழுதினாள்!

'காமதேவனே! பறவையின் வடிவில் வந்த பகாசுரனின் வாயைப் பிளந்து அழித்த புனிதனை, என் மணவாளனாகப் பெறும் வாய்ப்பை எனக்குக் கூட்டிவை' என்று வேண்டி நின்றாள்.

பிறகு, ஆண்டாள் - மலர் அம்புகளால் பூங்கணைகள் செய்து கோவிந்தன் என்ற பெயர்களை எங்கெங்கும் எழுதி வைத்தாள்!

'காம தேவனே! ஊமத்த மலர்களாலும், முருக்க மலர்களாலும் மூன்று வேளைப் பொழுதிலும் உன் அடிகளை வணங்கியும், உரிய பயனை நான் பெறவில்லை என்றால் - என் நெஞ்சம் கொதித்து உன்னைப் பொய்யானவன் என்று நான் உன்னைத் திட்டிவைது விடாத நிலையில் - வித்தகனாகியத் திருவேங் கடவன் என்ற விளக்கில், நான் சென்று கலந்து சங்கமம் ஆக என்னை எம்பெருமானுடன் இணைத்து வைத்துவிடு!' என்று வேண்டினாள்.

பிறகு, ஆண்டாள், 'காமதேவா! சுவரெல்லாம் உன்னுடைய பெயரையும், உன் மீன் கொடிகளையும், உன் கிளிகளாகிய குதிரைகளையும், சாமரம் வீசும் பெண்களாகிய படைகளையும், கரும்பு வில்லையும் ஓவியக் காட்சிகளாக எழுதி வைத்து உன்னைத் தொழுகின்றேன்.

மன்மதனே! விண்ணுலகில் வாழும் தேவர்களை வேண்டி வேதியர்கள் யாகம் செய்து படைத்த புனித பிரசாதத்தைக் காட்டில் திரியும் நரி ஒன்று அப்புனித பிரசாதத்தை முகர்ந்து சுவைப்பதைப் போல - ஆழியும் சங்குமுடைய உத்தமனாகிய எம்பெருமானுக்காகவே என் மார்பில் முளைத்தெழுந்த பருத்த முலைகள், மானிடர்களுக்குத்தான் என்ற பேச்சு தோன்றும் சூழ்நிலை ஏற்பட்டால் - நான் உயிர் வாழ மாட்டேன்!' என்று தன் நிலை மறந்து அழுது கொண்டே, மன்மதனை வணங்கினாள்!

**'அவரைப் பிராயம் தொடங்கி என்றும்**
**ஆதரித்து எழுந்த என் தட முலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுது வைத்தேன்! ஒல்லை விதிக்கிற்றியே?'** —என்பது,

*நாச்சியார் திருமொழி!*

**'வானிடை வாழும் அவ்வானவர்க்கு**
**மறையவர் கேள்வியில் வகுத்த அவி**
**கானிடைத் திரிவது ஓர் நரி புகுந்து**
**கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப,**
**ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று**
**உன்னித்து எழுந்த என் தடமுலைகள்**
**மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்**
**வாழகில்லேன்! கண்டாய்! மன்மதனே!'** *என்பதும் நாச்சியாரின் முதல் திருமொழியில். ஆண்டாள் அருளிச் செய்தவை.*

*மேலும் ஆண்டாள் தை மாதத்தில் தொடங்கிய மன்மதன் வழிபாட்டைப் பங்குனி மாதம் வரையிலும் நோன்பாக நோற்றுள்ளாள் என்பதை,* **'வைகல் தெருவிடை எதிர்கொண்டு பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன், காமதேவா!'** *என்ற பாசுர வரிகளிலும் குறிப்பிட்டிருப்பதோடு - 'கார் முகில் வண்ணனும், காயாவண்ணனும், கருவிளை மலர் வண்ணனும் ஆகிய எம்பெருமானின் கமல வண்ணத் திருமுக விழிப்பார்வையைத் தன் மீது பொழிய, அருள் செய்ய வைப்பாய்!' என்றும் குறிப்பிட்டுள்ளாள்.*

*மேலும் - மன்மதனுக்கு நெல், கரும்பு, கட்டி அரிசி, அவல் ஆகியவற்றைப் படைத்து மறைவேத மந்திரங்களைக் கூறி வழிபட்டு, அவனிடம் உலகளந்த திரிவிக்கிரம எம்பெருமான் மாயவன் - தன்னைத் தீண்டித் தன் வயிற்றையும் தட முலைகளையும் அனுபவிக்கச் செய்து தருவதன் வழியாக, நிலைத்த புகழைத்/ அவள் அடைய வழி செய்வாய்! என்றும் வேண்டினாள்!*

*மேலும் 'மன்மதனே! அழுக்கான உடலுடன், முடியாமல் விரித்த தலைமுடியுடன் உதடுவெளுத்த நிலையில், ஒரே வேளை மட்டும் உணவை உண்டு - நான் உனக்காக நோன்பு நோற்று வருவதை நினைவில்கொள்!*

*இப்போது பேசும் ஒரு சொல்லை மட்டும் கேள்! என் பெண்மையில் மென்மை தலைமைச் சிறப்புடன் விளங்க வேண்டுமானால் - நான் மட்டுமே கேசவநம்பி எம்பெருமானின் காலைப் பிடிக்கக் கூடியவள் என்று சொல்லப்படும் பெறும் பேறு, எனக்குக் கிட்ட அருள் செய்!' என்றும் கூறினாள்.*

மன்மதனை நோக்கி - மூன்று பொழுதும் மனம் உருகித் தொழுதாள். அவன் காலடிகளில் தூய மலர்களைத் தூவித் தொழுதுப் போற்றி வணங்கினாள்.

'மன்மதா! பாற்கடல் வண்ணனுக்குப் பழுதில்லாமல் பணி செய்யும் வாழ்க்கையை நான் பெற்று வாழாமல் - நான் அழுது அழுது தடுமாறியபடி, ஐயோ, அம்மா! என்று அரற்றிய நிலையில் திரியும் நிலை எனக்கு ஏற்பட்டால் - இக்குறை உன்னைத்தான் சேரும்!

இந்நிலை - உழக்கூடிய ஓர் எருதிடம் முழுவேலைகளையும் வாங்கிக் கொண்டு, நுகத்தடியைக்கூட அவிழ்த்துவிடாமல் அப்படியே தள்ளிவிட்டுத் தீனியும் போடாமல் பசியோடு விட்டு விட்டுச் செல்லும் மகாபாதகமான செயலாகத்தான் என் குறை உன்னைச் சேரும்!' என்று மன்மத வழிபாடு செய்து, எம்பெரு மானுடன் தன்னை இணைத்துவைக்க வேண்டிப் பாசுரங்கள் பாடினாள் - ஆண்டாள்!

காமதேவனைத் தொழுதலை முதல் திருமொழியாகப் பாடிய ஆண்டாள், இரண்டாவது திருமொழிப் பாசுரங்களைச் சிற்றில் சிதையேல் என்ற அமைப்பில் பாடியுள்ளாள்.

ஆண்டாள் மார்கழி நோன்பியற்றிய திருப்பாவைப் பாசுரங்கள் பாடிய காலம், முன்பனிக்காலம் ஆகும்.

மார்கழியும், தையும் முன்பனிக் காலமாகும். மாசியும், பங்குனியும் பின்பனிக் காலங்களாகும்.

பின்பனிக்காலம் முடிந்த பிறகே, மன்மதனுக்குரிய வசந்த காலம் கொண்ட வேனிற்காலம் - சித்திரை, வைகாசி மாதங்களில் வருகின்றது.

எனவே, தன்னை எம்பெருமானுடன் இணைத்து வைக்கும் மன்மதனின் வருகையை எதிர்நோக்கி - தை, மாசி, பங்குனி மாதங்களில் முதலில் மன்மதனை வழிபட்டு - தொடர்ந்து ஆண்டாள் ஏனைய பதின்மூன்று திருமொழிகளையும் பிரபந்தப் பாசுரங்களாகப் பாடி இருக்கின்றாள்.

திருப்பாவை மார்கழி நோன்பின்பொழுது, மணலில் பாவை செய்து நோன்பு நோற்ற ஆண்டாள் - **இரண்டாவது திருமொழியுள்** கன்னியர்கள் மணலில் சிறிய வீடுகள் கட்டி விளையாடுவதாகவும், இவர்கள் கட்டி விளையாடும் சிறு மணல் வீடுகளைக் கண்ணன் வந்து காலால் உதைத்து அழித்து விடுவதாகப் பயமுறுத்துவதாகவும் - இவர்கள் கண்ணனிடம்,

சிற்றில்களைச் சிதைத்து விடாதே! என்று கெஞ்சுவதாகவும் - 'சிற்றில் சிதையேல்' என்ற பகுதியைப் பாடியுள்ளாள்.

இத்திருமொழி, பங்குனி மாதத்தில் பாடப்பட்டுள்ளது. இப்பாசுரங்களில் - கன்னியர்கள் தங்களைக் கண்ணனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும்பொழுது, 'உன்னைக் கண்டு மயங்கியவர்கள்' என்ற பொருளில் ' உன்னைக் கண்டு மால் உறுவோங்களை' என்றும், 'ஏதும் அறியாத சிறுமியர்' என்ற பொருளில் 'நொய்யர் பிள்ளைகள்' என்றும் - மற்றும் 'முற்றிலாத பிள்ளைகளோம்', முலை போந்திலாதோம்' என்றும், 'யாதும் ஒன்றும் அறியாத பிள்ளைகளோம்' என்றும், 'வீதிவாய் விளையாடும் ஆயர்ச் சிறுமியர்' என்றும், 'இஷ்டப்படி விளை யாடுபவர்கள்' என்ற பொருளில் 'இட்டமா விளையாடுவோங்கள்' என்றும் சொல்லிக் கொள்வதாகவும் -

சிற்றில் சிதைக்க வந்த எம்பெருமான் கண்ணனை அழைக்கும்பொழுது - நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா! என்றும், தீமை செய்யும் சிரீதரா! என்றும், அன்று பாலகன் ஆகி ஆலிலைமேல் துயின்ற எம் ஆதியாய்! என்றும், கஜேந்திர யானையின் துன்பத்தைப் போக்கிய செயலைக் குறிப்பிட்டு - குண்டு நீர் உறை கோளரீ! மதயானை கோள் விடுத்தாய்! என்றும், தெண்திரைக்கடல் பள்ளியாய்! என்றும், பெய்ய மாமுகில் போல் வண்ணா! என்றும், செய்ய தாமரைக் கண்ணினாய்! என்றும் - கள்ள மாதவா! கேசவா! என்றும் - இராமாவதாரத்தில் இலங்கையை அழித்த செய்தியைக் குறிப்பிட்டுக் கடலை அடைத்து அரக்கர் குலங்களை முற்றவும் செற்று இலங்கையைப் பூசல் ஆக்கிய சேவகா! என்றும் - ஓத மா கடல் வண்ணா! என்றும், சேது பந்தம் திருத்தினாய்! என்றும், சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்! என்றும் - கடல் வண்ணனே! என்றும், ஓங்கி உலகளந்தமையைக் குறிப்பிட்டு - கோவிந்தா! முற்ற மண்ணிடம் தாவி விண்ணுற நீண்டு அளந்து கொண்டாய்! என்றும் - சீதை வாயமுதம் உண்டாய்! என்றும் வழிபட்டதாகவும், ஆண்டாள் குறிப்பிடுகின்றாள்.

மேலும், ஆண்டாள் கண்ணனிடம் சிற்றில் சிதையேல் என்று இரந்து வேண்டும்பொழுது - 'எங்கள் சிற்றில் வந்து சிதையேலே! என்றும், தொட்டு உதைத்து நலியேல்! என்றும்- நீ எங்கள் மீது இரக்கப்படாமல் இருப்பது, எங்கள் பாவம் என்ற கருத்தில், 'என்றும் உன்தனக்கு எங்கள் மேல் இரக்கம் எழாதது, எம்பாவமே!' என்றும் - உன்னைக் கண்டு மயங்கும் எங்களைக் கடைக் கண்களால் நோக்கி வருத்தாதே என்ற கருத்தில்,

உன்னைக் கண்டு மால் உறுவோங்களைக் கடைக் கண்களால் இட்டு வாதியேல்! என்றும் - பேச்சாலும், செய்கைகளாலும் கண்ணன் மயக்குவதை, உன்தன் பேச்சும் செய்கையும் எங்களை மையல் ஏற்றி மயக்க, உன்முகம் மாயமந்திரம்தான் கொலோ என்றும் - சிற்றில்களை நீ சிதைத்தாலும், உன் செயலுக்காக நாங்கள் உருகும் நிலை ஏற்பட்டாலும்கூட, உன்னை வெறுக்கமாட்டோம்! காரணம் உன் முகத்தில் இருப்பவை அருள் விழிகள் அல்லவா' என்றும் ஆண்டாள் குறிப்பிட்டுள்ளாள்.

**வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில்**
**விசித்திரப்பட வீதி வாய்த்**
**தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்**
**அழித்தி யாகிலும் உன்தன் மேல்**
**உள்ளம் ஓடி உருகலல்லால்**
**உரோடம் ஒன்றும் இலோம்! கண்டாய்!**
**கள்ள மாதவா! கேசவா! உன்**
**முகத்தன கண்கள் அல்லவே!** என்றும் அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள், ஆண்டாள்!

மேலும், ஆண்டாள் கண்ணனிடம் இத்திருமொழியுள் - 'கண்ணா! நீ சிற்றிலைச் சிதைத்து உன் மீதும் கொட்டிக் கொள்கிறாய். அத்துடன் சிறிது மணலையும் வாயில் இட்டு உண்கிறாய். உன் செயல்களில் உள்ள தத்துவ நிலையை எங்களால் தெரிந்து கொள்ளக் கூடிய ஞானம் எங்களுக்கு இல்லை என்ற பொருள் படுமாறு - 'நாள்தொறும் சிற்றில் மேல் இட்டுக் கொண்டு நீ சிறிது உண்டு திண்ணெண நாம் அது கற்றிலோம்!' என்றும், 'எம்மை வாதியேல்!' - எங்களை வதைக்காதே! என்றும் - சேதுபந்தன் அணையை இராமாவதாரத்தில் கட்டிய நீ, எங்கள் சிற்றில்களைச் சிதைக்காதே! இதை உன் தேவியர்கள் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம்! என்ற பொருள்படுமாறு, 'உன் மணவாட்டி மாரொடு சூழறும்! சேதுபந்தம் திருத்தினாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே!' என்றும் குறிப்பிட்டாள்.

மேலும், ஆண்டாள் - எங்கள் நெஞ்சம் உன்னிடம் கசந்துவிட்டால், கரும்புக் கட்டியும் இனிக்காது என்ற பொருளில் - 'கட்டியும் கைத்தால் இன்னாமை அறிதியே!' என்றும் - முகத்தில் புன்முறுவல்காட்டி எங்களை ஏமாற்றி விட்டு, சிற்றிலோடு எங்கள் சிந்தனைகளையும் சிதைத்து விட்டாயே? எங்களோடு இப்படி வம்புச் சண்டை செய்தால்

பக்கத்தில் நிற்பவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்? என்ற பொருள் படுமாறு 'நின்முகம் காட்டிப் புன்முறுவல் செய்து சிற்றிலொடு எங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ?' என்றெல்லாம் கூறுவதோடு - 'எம்மைப் பற்றி மெய்ப் பிணக்கு இட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்?' என்றும் இத்திருமொழியுள் குறிப்பிட்டிருக்கின்றாள்.

இத்திருமொழியில் ஏகபத்தினி ஒழுக்க அவதாரமாகிய இராமனைப் பற்றியும், அவன் ஏக நாயகியாகிய சீதா தேவியிடம் பெற்ற இன்ப நிலையையும் 'சீதை வாயமுதம் உண்டாய்'! என்றும் கூறும் ஆண்டாள் - ஏகபத்தினி ஒழுக்க எம்பெருமான் இராமாவதார அம்சத்தையும் - பரமபத நாதன், தன் நாயகியர்களோடு இணைந்து கூடி வீற்றிருக்கும் நிலையையும், பரம புருஷ நாயக நாயகி தத்துவார்த்த நிலையில் ஒப்பிட்டுக் கொண்டு - உன் மணாட்டியரொடு சூழ் - என்று பாசுரம் பாடியுள்ளமை, நாயகிநாயக நிலையில் குறிப்பிடத்தக்கது.

நாயக நாயகி சரணாகதித்துவ நிலையில், பெரிய பிராட்டிக்கு உள்ள நாயகி நிலை, ஏனைய நாயகியர்களுக்குரிய நிலைகள், ஜீவாத்ம நாயகியர்களுக்குரிய நிலைகள் ஆகியவற்றைத் தனக்குள்ளாக இத்திருமொழிக்குள் ஆண்டாள் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னுடைய நாயகியத்துவ நிலை எத்தகைய தன்மையில் எம்பெருமானுடன் சங்கமமாகும் என்பதையும் தனக்குள்ளாக ஆராய்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

நாச்சியார் எம்பெருமானைத் தன் மணவாளனாகப் பெறவேண்டி- காமனைத் தொழுது, காமன் - தென்றல் தவழத் தேர்ஏறிவரும் வேனிற்காலம் வரும் வரையிலும் நோன்பு நோற்ற காலத்தில் - மூன்றாம் திருமொழிப்பிரபந்தப் பாசுரங்களைப் பாட முற்பட்டபொழுது, அவள் நெஞ்சில் கோபியர்கள் நிறைந்து நின்றார்கள்!

மார்கழித் திருப்பாவை நோன்பு நோற்ற காலத்தில், ஆண்டாளின் தோழியர்கள் - கோகுலத்தின் கோபியர் நிலையில் தான், மார்கழி நீராட்டுதலில் பங்கேற்றார்கள்.

நாச்சியார் திருமொழி முதலிலும், ஆண்டாள் எம்பெருமானை மணக்கக் காமதேவனை வழிபட்டுப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடிய பொழுதும் - உடன் பங்கு கொண்ட தோழியர்கள், கோபியர் நிலையிலேயே இருந்தார்கள்!

பிறகு, இரண்டாவது திருமொழியில் கண்ணனிடம் 'சிற்றில் சிதையேல்' என்று மணல் வீடுகள் கட்டி விளையாடிய

பாசுரங்களிலும் - ஆண்டாளின் நெஞ்சில் கோபியர் சிறுமியரே இடம் பெற்றிருந்தனர்.

எனவே, கிருஷ்ணாவதார காலத்தில் - கோகுலத்தில் கண்ணனோடு ஆடிப்பாடி ஊடிக்கூடிக் கலந்து இனித்து, வாடி வதங்கித் தழைத்துக் கருகி, அடித்து அணைத்துக் களிப்புற்றிருந்த கோபியர்களின் சரீர, ஆத்ம சுகானுபவங்கள் ஆண்டாளின் நெஞ்சில் தென்றலாகத் தவழ்ந்து - அவள் கற்பனைக் கவித்துவச் சிறகுகளை ஈரேழு உலகங்களிலும் பறக்க விட்டன!

கண்ணனோடு களித்துக் கலந்து திரிந்த கோபிகைகளை நினைத்த ஆண்டாளின் நெஞ்சில், இராமாவதாரத்தின் சிந்தனைகளும் தோன்றின.

மார்கழி நோன்பு நோற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இராமபிரானின் நினைவுகள் தவழ்ந்து, திருப்பாவைப் பாசுரங்களில் இராமபிரானையும் வழிபட்ட ஆண்டாள் - தன் இரண்டாவது திருமொழியிலும் இராமபிரானையும் குறிப் பிட்டுப் பாசுரம் பாடியிருக்கின்றாள்!

கண்ணன், தவழ்ந்து, நடை பயின்று, மழலை பேசி, குறும்பிழைத்துக் குரவைக் கூத்தாடிக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து, காளிங்கன் தலை மீது நடமாடிய காலத்திலெல்லாம் - அம்மாயவனுடன் சரீரத்தின் சகல சுகானுபவங்களையும் பெற்ற கோபிகையர் யார்? யார்?



இக்கோபிகைகள், இம்மகா பாக்கியம் பெற்ற ஆதிகாரணங்கள் எவை, எவை? - சிந்தனைகளை ஓட விட்டாள். ஆண்டாள்!

கோகுலத்தில் பிறந்த கோபிகை கள், பற்பல நிலைகளில் கண்ணனைத் தழுவி மகிழத்தவம் செய்து வந்து பிறந்தவர்கள்!

இக்கோபிகைகள் - சுருதி கோபிகை கள், ருஷி கோபிகைகள், மைதில கோபிகைகள், கௌசல கோபிகை கள், அயோத்யா கோபிகைகள் என்று பலவகைப்படுவார்கள்.

மேற்கண்ட கோபிகளில் சேராமல் - பொதுவாகக் கோபிகைகள் என்று கூறப்படுகின்றவர்கள், பதினாறாயிரத்து



ஒரு நூற்றுவர்களாக விளங்கிய கந்தர்வ மகளிர் ஆவார்கள்!

தாருகாவனத்து மகரிஷிகளை மயக்கிக் கொண்டு, எம்பெருமான் மோகினி வடிவமெடுத்து வந்த பொழுது, இக்கந்தர்வப் பெண்களும் மோகினியின் பேரழகில் மயங்கி - எம் பெருமான் நாராயணனை வழி பட்டு, எம்பெருமானை அனுபவிக்க வேண்டு மென்று வரம்பெற்று - கோபிகை களாகப் பிறவி பெற்று, துவாரகையில் கண்ணனை அனுபவித்தவர்கள்!

கண்ணனுக்கும், சாம்பவதிக்கும் பிறந்தவன், சாம்பன் என்பவன்!

ஒரு முறை சாம்பன், தற்செயலாகக் கண்ணன் தனிமையில் கோபிகையர்களுடன் தண்ணீரில் ஜலக்கிரீடை செய்து விளையாடிக் கொண்டிருந்த பொழுது - இக்காட்சியை அவன் அங்கு சென்று பார்த்துவிட்டான்!

சாம்பனைக் கண்ட கோபிகைகள், சாம்பனின் அழகைக் கண்டு மயங்கி விட்டார்கள்!

இதை உணர்ந்து கொண்ட கண்ணன் - சாம்பவனுக்குக் குட்ட நோய் பீடிக்குமாறு சாபம் தந்தான்!

அத்துடன் சாம்பனிடம் மயங்கிய கோபிகையர்களுக்கு. 'நீங்கள், என் கண்ணெதிரிலேயே சாம்பனைக் கண்டு மயங்கி, சித்தம் கலங்கிய நிலையை அடைந்ததால் - இறுதியில் திருடர்களால் கைப்பற்றப்பட்டுத் துன்பப்படக்கடவீர்கள்!' என்ற சாபத்தையும் தந்துவிட்டான்.

கண்ணன் தந்த சாபத்தின்படியே, கிருஷ்ணாவதாரம் முடிவுற்ற பிறகு - இக்கோபிகைகளைக் கள்வர்கள் கைப்பற்றிச் சென்று அடிமைப்படுத்திக் கொண்டார்கள்!

இறுதியில், நாரதர் அனந்த சயன விரதம் இருந்து வருமாறு இவர்களிடம் கூறினார்.

அதன்படியே அனந்த சயன விரதத்தைக் கோபிகைகள் கடைப்பிடித்து, விடுதலை பெற்றிருக்கின்றார்கள்!

வேத மந்திரங்களே, சுருதி கோபிகைகள் ஆகும்

திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட எம்பெருமானை வழிபட்ட வேத மந்திரங்கள் - நாராயணனின் உண்மையான வடிவத்தைச் சேவிக்க விருப்பப்பட்டன!

உடனே திருப்பாற் கடலில் பள்ளி கொண்ட எம்பெருமான், பேரழகுடன் ராதை உட்பட எல்லா கோபிகைகளுடனும் தரிசனம் தந்தார்!

உடனே, வேதங்களும் - நாங்கள் இப்பேரெழில் மிக்கத் தங்களிடம் சரீர இன்பம் பெறவேண்டும் என்று வேண்டிக் கொண்டன!

அப்பொழுது எம்பெருமான் தந்த வரத்தின்படியே, வேதங்கள் - கண்ணன் ஆட்சி செய்த துவாரகையில் கோபிகைகளாகப் பிறந்து கண்ணன் தரும் சுகங்களையும், இன்பங்களையும் அனுபவித்தவர்கள் ஆவார்கள்!

இராமபிரானின் அவதார காலத்தில் - இராமன் முடிசூடாமல் நாடு துறந்து இலக்குவனுடனும், சீதையுடனும் வனத்தில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்த பொழுது - காட்டில் வாழ்ந்து வந்த தவமுனிவர்கள், இராமனைக் கண்டபொழுது, அவர்கள் நெஞ்சில் மானசீகமாக இடம் பெற்றிருந்த எம்பெருமானின் வடிவம் மறைந்து - இராமபிரானின் வடிவமே முனிவர்களின் நெஞ்சில் நிறைந்து காணப்பட்டது.

உடனே, தவமுனிவர்கள் இராமனிடம் - சீதையைப் போலத் தாங்களும் எம்பெருமானுக்குத் தேவியராகி இன்ப சுகம் காணவேண்டும் என்ற வரத்தைக் கேட்டார்கள்.

அதன்படிக் கேட்டுப் பெற்ற வரத்தின்படியே முனிவர்கள், வங்க நாட்டில் வாழ்ந்த மங்களன் என்ற இடையனுக்குப் பெண்களாகப் பிறந்தார்கள்.

இக்கோபிகைகள் பிறந்தவுடன், மங்களனுக்குச் செல்வம் குறைந்தது. எனவே, மங்களன் இக்கோபிகைகளைச் சயன் என்ற மன்னன் வழியாகக் கோகுலத்தில் இருந்த நந்தகோபனிடம் அனுப்பி வைத்து விட்டான்.

இக்கோபிகைகள், கண்ணன் மேய்த்து வந்த மாடுகளின் சாணத்தைக் கொண்டுபோய், நதிக் கரையில் வழிபடும் பிண்டமாக வைத்து, யமுனையில் உள்ள பெரிய மடுவில் சாபக் கேட்டால் வலம்புரிச் சங்கின் வடிவத்தில் தவம் செய்து வந்த

காளிந்தியை நோக்கி இடைவிடாமல் தியானம் செய்து வழிபட்டு வந்தார்கள்!

இத்தகைய காலத்தில், கண்ணனே நேரில் வந்தபொழுது, இக்கோபிகைகள் கண்ணனைக் கூடி இன்ப சுகம் பெற்றார்கள். இவர்கள் **ருஷிகோபிகைகள்** ஆவார்கள்.

இராமாவதாரத்தில், இராமபிரான் மிதிலையில் விஷ்ணுதனுசை முறித்துச் சீதையை மணந்து கொள்ளச் சென்ற பொழுது - மிதிலையில் வாழ்ந்த பெண்கள், இராமனின் பேரழகில் மோகம் கொண்டு, தங்கள் விரகதாப நிலையை இராமனிடம் கூறினார்கள்.

அப்பொழுது இராமன், துவாபரயுகத்தில் உங்கள் எண்ணங்களை ஈடேற்றுவேன் என்று அவர்களுக்கு வரம் தந்தான்.

அதன்படியே, அப்பெண்கள் நவநந்தனர் ஒன்பதின்மர் வீட்டிலும் பிறந்து கோபிகைகளாக வளர்ந்து - யமுனை நதியின் கரையில், மார்கழி மாதத்தில் காத்தியாயினி நோன்பு நோற்றார்கள்.

அப்பொழுது கண்ணன், அவர்கள் ஆடையைக் கவர்ந்து மறைத்தான். பின்பு, இவர்கள் கண்ணனுடன் கலந்தனர். இவர்கள் **மைதில கோபிகைகள்** ஆவார்கள்.

இராமபிரான், கோசல நாட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்த பொழுது, இராமனின் பேரழகில் மயங்கி தங்கள் மனத்திற்குள்ளாகவே மோகம் கொண்ட பெண்கள், **கௌசல கோபிகள்** ஆவார்கள்.

மனதால் மட்டுமே இப்பெண்கள் தன்னை மோகித்திருப்பதைத் தனக்குள் உணர்ந்த இராமன், தன் கிருஷ்ணா வதாரத்தில் தானும் அவர்களைத் தன் மனதால் கூடி இன்பம் தருவதாக வரம் தந்தான்.

அதன்படியே கோசல நாட்டுப் பெண்களும் கோகுலத்தில் உபநந்தனர் வீட்டில் பிறந்து வளர்ந்து, கண்ணனையே நினைத்துக் கொண்டு இருந்தார்கள்.

இவர்களை, இவர்களின் பெற்றோர்கள் இடையர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

ஆனாலும் இக்கோபியர்கள் - தங்கள் மனதிலேயே கண்ணனை நினைத்தபடியே, நினைத்த நேரத்திலெல்லாம், கண்ணனைக் கலந்து விளையாடி மகிழ்ச்சி பெற்று வந்தார்கள்.

கண்ணனும், சரீரத்தையும் கடந்து - அளவற்ற லீலைகளை இக்கோபிகைகளின் நெஞ்சில், நடத்தி மகிழ்ச்சி பொங்க ஆத்ம சுகம் தந்து வந்தான்!

இராமன், சீதாபிராட்டியை மணந்து கொண்டு அயோத்திக்குத் திரும்பி வரும்பொழுது - கல்யாண ராமனின் கட்டழகில், அங்கிருந்த பெண்கள் மோகம் கொண்டு மயங்கினார்கள்!

இப்பெண்களின் விரக தாப மயக்க நிலையை உணர்ந்த இராமன், அசரீரியின் வழியாகத் தான், இவர்கள் மோகத்தால் பரிதவிப்பதை உணர்வதாகவும், தன் கிருஷ்ணாவதாரத்தில் இவர்களைக் கூடி இன்பம் தருவதாகவும் தெரிவித்தான்.

அதன்படியே, இப்பெண்களும் சிந்து நாட்டில் சம்பகா நகரத்தில் விமலன் என்ற மன்னனின் புத்திரிகளாகப் பிறந்து வளர்ந்து, கண்ணனைக்கூடி மகிழ்ந்தார்கள். இப்பெண்களே **அயோத்யா கோபிகைகள்** ஆவர்.

கந்தர்வப் பெண்கள், காமமோகத்தால் கோபிகைகளாகி கண்ணனைக் கலந்தார்கள். கண்ணனிடம் சாபமும் பெற்றார்கள்!

வார்த்தைகளால் மட்டுமே சக்தியுடன் உச்சரிக்கப்படும் வேத சுருதிகளும், கோபிகைகளாகி - முடிவற்ற ஞான நிலையின் பரிபூர்ண இன்ப நிலையின் முடிவைக் கண்ணனோடு கலந்து, அனுபவ வாயிலாகச் சுகம் கண்டன!

பத்தினிகளுடன் தவவாழ்வில் இருந்த முனிவர்களும், சரீரத்தில் பெண்மை கொண்ட கோபிகைகளாகி - தாங்கள் முன்பு செய்து வந்த தியான வழியிலேயே, ஆத்மார்த்தமாகவும், சரீர வழியிலும் கண்ணனைக் கலந்து இன்ப சுகம் பெற்றார்கள்.

இராமனுக்காக விஷ்ணு தனுசுடன் காத்திருந்த சீதை பெற்ற இன்பத்தை விரும்பிய மிதிலையின் பெண்களும், கோபிகைகளாகி மார்கழி நோன்பு நோற்றுச் சீதையைப் போல் காத்திருந்து, கண்ணனைக் கலந்து மகிழ்ந்தார்கள்!

கோசல நாட்டின் பெண்கள், தங்கள் மனத்தளவில் கொண்டிருந்த மோகத்தோடு - கோபிகைகளாகி, கண்ணனோடு மனத்தளவில், ஆத்ம நிலையில் - அளவற்ற லீலைகளைச் செய்து ஆத்ம சுகப் பேரின்பத்தில் திளைத்தார்கள்!

சரீர சுகத்தில் மோகம் கொண்ட அயோத்தி நாட்டின் பெண்களோ, அவர்களும் கோபிகைகளாகிக் கண்ணனின் - வழியாகச் சரீர சுகானுபவ இன்ப முடிவைக் கண்டார்கள்!

*காம இன்பமே கருத்தாகக் கொண்ட கந்தர்வ கோபியருக்குக் கண்ணன், காமத்தையும் தந்தான்! காம மோக அழிவை உணர்த்தி, சாபத்தையும் தந்தான்!*

*எழுதாக் கிளவியாக, கர்ண பரம்பரையில் வழி வழி கோஷகானமாக, வேத வித்துக்களின் நாவில் பிறந்து முழங்கிக் கொண்டிருக்கும் வேத நாத ஜீவக் காற்றாக விளங்கும் வேத சுருதிகள் - தாங்களும் வெறும் காற்றாக முழங்கிக் கொண்டிருப் பதோடு மட்டும் திருப்தி அடையாத நிலையில், தாங்களும் மனித சரீரத்தைப் பெற்று கோபியராகி, எம்பெருமானைக் கூடி சரீர இன்ப சுகானுபவம் பெற விரும்பின. சரீரமற்ற ஜீவ நிலையில் உள்ள காற்றாகிய வேத சுருதிகளுக்கு சரீரத்தைத் தந்து, சுருதி கோபியராக்கிய கண்ணன், வேத சுருதிகளின் சரீர ஆசையையும் தீர்த்தான். சரீர இச்சையின் சுகானுபவம் பெற்ற வேத சுருதிகள், தங்கள் இச்சை நிறைவேறியதும் - மீண்டும் வேத கோஷக் காற்றாகக் கலந்து மறைந்தன!*

*ஆத்மார்த்த நிலையில் மானசீகமாக எம்பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்த தவ முனிவர்கள், ஏகபத்தினி விரத அவதார எம்பெருமானிடம் - அவன் சீதைக்குத் தரும் இன்ப சுகத்தைத் தாங்களும் பெண் வடிவம் கொண்டு அனுபவித்து மகிழ ஆசைப்பபட்டார்கள். அவர்களை ருஷி கோபியராக்கி, அவர்களின் தவவழியிலேயே யமுனையின் கரையில், ஆசார அனுஷ்டானங்களோடு - ஆனால், சீதையைப் போலக் காக்க வைத்து - தவநெறியில் இருந்த நிலையிலேயே, அவர்களுக்கும் அவர்கள் விரும்பிய சீதைபெற்ற சுகானுபவ இன்பத்தை - அனுபவ ரீதியில் தந்தான், கண்ணன்!*

*ஏக நாயகி சீதையின் நிலையில் பெறக் கூடிய இன்ப சுகானுபவத்தை விரும்பிய மிதிலையின் பெண்களை மைதில கோபியராக்கி - ஏக நாயகியின் இன்பத்தை, தனித் தனிக் கண்ணனாகித் தனித்தனியே தனித்தனி கோபியர் ஒவ்வொரு வருக்கும் தந்தான், கண்ணன்!*

*இராமனின் தாய் கோசலையின் நாட்டில் உள்ள பெண்கள், கோசலையின் நிலையிலேயே தாய்மைப் பாசத்துடன் ஆத்மார்த்த சுகானுபவத்தை எம்பெருமானிடம் பெற விருப்பப் பட்டதால் - அவர்களைக் கோசல கோபியர்களாக்கி ஆத்ம சுகானுபவத்தை மட்டுமே தந்தான், கண்ணன்!*

கல்யாண ராமனை அயோத்தியில் கண்ட பெண்கள், விரக தாபத்தோடு பரிதவித்ததால் - அவர்களை அயோத்யா கோபியராக்கி, அவர்களின் விரக தாபத்தை அவர்களின் வழியிலேயே தீர்த்தான், கண்ணன்!

ஆக, கண்ணன் கோபியரின் லீலா வினோத தத்துவ சாரமே எம்பெருமான், வேண்டுகின்றவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய நிலையிலேயே - எந்த வகையிலாவது தரக்கூடியவன் என்பதுதான்!

சரீர சுகானுபவ பாசத்திற்கும் - ஆத்மார்த்தமான காதலுறவு கொள்ளும் நெஞ்சங்கள் மட்டும் கலந்து சரீர இன்ப சுகம் பெறாத சுகானுபவத்திற்கும் வேறுபாடுகள் உண்டு.

சரீர சுகத்தை அனுபவித்து முடித்த பின்பு - ஆத்மாவிற்குள் பாசம் வளர்வதும் உண்டு! தேய்வதும் உண்டு!

ஆனால், ஆத்மார்த்தமான நெஞ்சங்கள் கொண்ட இருவரின் பாச உணர்வுகள் என்றும் குறைவதில்லை!

வாழ்வியலில் ஒருவரை ஒருவர் மணந்து கொள்வதாக விரும்பியவர்கள் - ஏதோ சூழ்நிலையில் வேறு ஒருவரை மணந்து கொண்டு தனித்தனியே வாழ்ந்து வந்தாலும், எவ்வளவு வயது முதிர்ந்தாலும் இருவர் தம் பழைய பாச உணர்வுகள் என்றும் குறைவதே இல்லை!

ஒருவரோடு ஒருவர் ஏதோ சூழ்நிலையில் சரீர சுகம் பெற்றுப் பிறகு பெற இயலாத நிலையில் வெவ்வேறு வகைப்பட்ட வாழ்க்கை நிலைகள் அமைந்துவிட்டாலும் - பழைய சரீர சுக ஏக்கத்தால் - ருசி கண்ட பூனை உரியை மீண்டும் மீண்டும் தாவுவதைப் போல, அவ்வப்பொழுது இத்தகைய பழைய சரீர உணர்ச்சிகள் தலை தூக்குவதால், ஒருவர் மற்றவரைத் தேடி அலைந்து காலம் கருதிக் காத்திருந்து, ஒழுக்கக் கேடான செயல்களில் திருட்டுத் தனமாக ஈடுபடுவதும் உண்டு!

ஆனால் ஆத்மார்த்த பாசங்கள் - என்றென்றும் அழிவதில்லை!

சகோதர சகோதரியர், பெற்றோர், தோழமை கொண்டோர் ஆகியோரிடம் சரீர சம்பந்தமில்லாமல் ஏற்படும் பாச உணர்வுகளும், ஒரு வகையில் - சரீர சம்பந்தமற்ற ஆத்மார்த்த பாச உணர்வுகளே!

இவற்றையெல்லாம் கௌசல கோபிகைகளும், அயோத்யா கோபிகைகளும் - கண்ணனோடு கலந்த சுகானுபவ நிலைகளில் கரைகண்டு தெளிந்தவர்கள் ஆவார்கள்.

*கோபிகைகள் கண்ணனின் லீலைகளில் முற்பிறவியில் இராமனிடம் வரம் பெற்றுப் பிறவி பெற்றமையால் - ஒவ்வொரு கோபியும் ஒவ்வொரு சீதையாகவே கண்ணனைக் கலந்து இன்ப சுகானுபவம் பெற்றுள்ளாள்!*

*பொருள் வருவாய் கருதியோ, ஏதோ ஒரு கட்டாயத்தாலோ ஒரு பெண், ஒருவனைக் கூடினால் அது விபச்சாரம்! ஒருவனும் ஒருத்தியும் ஆத்மார்த்தமாக சங்கமித்தால்தான் - அது கற்பு!*

*தன் விருப்பமின்றி ஒருத்தியும் ஒருவனும் ஆகிய சரீர ஒழுக்கத்துடன் தன் கணவனுடனேயே தன் வாழ் நாளெல்லாம் கூடிக் கலந்து கொண்டிருந்தாலும்கூட, அது கற்பு நெறி ஆகாது!*

*அப்படிப் பார்த்தால், ஆத்மார்த்தமாகக் கண்ணனைக் கலந்த அனைத்துக் கோபியர்களுமே, கற்பு நெறி தவறாதவர்கள்!*

*அதைப்போலவே - இராமபிரான் தந்த வரத்தை நிறைவேற்றக் கண்ணனும், ஒவ்வொரு கோபியுடனும் தனித்தனியாகப் பல்லாயிர வடிவங்கள் கொண்ட கண்ணனின் உருவத்தில் எம்பெருமான் - ஏகபத்தினி விரத இராமபிரானாகவே மாறி, ஒவ்வொரு கோபிக்கும் சுகானுபவ இன்பத்தைத் தந்துள்ளான்!*

*கண்ணன், ஒழுக்கம் கெட்டுப் பல பெண்களைக் கூடிய காமுகன் அல்லன்!*

*ஒவ்வொரு கோபியும் ஒவ்வொரு சீதை! ஒவ்வொரு கண்ணனும், தனித்தனியே சீதைக்கேற்ற கண்ணன்!*

*ஆக, கண்ணன் கோபியர் லீலைகளில் ஏகபத்தினி ஒழுக்கமாகிய ஒருவனும் ஒருத்தியும் என்ற மனித ஒழுக்க நிலை. வாழ்வியலின் உள்ளார்த்தமாகப் பக்தி மார்க்கத்தில் இடம் பெற்றுள்ளது.*

*இவர்களைத் தவிர்த்து - நான்கு கோபிகைகள், கிருஷ்ண பகவானின் சக்திகளாகவும் கூறப்படுகின்றார்கள்.*

*தேவலோகத்திலிருந்து சோபை என்ற ஒளியைச் சந்திரனுக்குக் கொண்டு செல்பவள்,* **சோபா கோபிகை!**

*பசுக்களின் தர்ம லோகமாகிய கோலோகத்திலிருந்து பிரபை என்ற உலகைக் காக்கும் சர்வ வல்லமை கொண்ட சக்தி ஒளியைச் சூரியனுக்குக் கொண்டு செல்பவள்,* **பிரபா கோபிகை!**

*பிரபையைப் பெற்றுக் கொண்ட சூரியன், உலகிற்கு அனுப்பும் தன் கிரணக் கதிர்களில் ஒன்றாக வந்து, கண்ணனின் பிரேமையில் கலந்தவள்தான்* **ராதை** *என்ற கண்ணனுக்கு மிகவும் உகந்த*

கோபிகை! கிருஷ்ணனின் உடலிலிருந்து லீலைகளை நடத்தி ஜீவாத்ம நாயகியர்களுக்கு சாந்தியைத் தரும் கோபிகைதான், **சாந்தி கோபிகை!**

தர்மலோகமாகிய கோலோகத்திலிருந்து, தர்மத்தைக் காக்க இப்பூவுலகத்திற்கு வந்த கோபிகைதான், **க்ஷேமா கோபிகை!**

ஆக இவ்வுலகத்தின் சகல விதமான ஜீவாத்மாக்களின் இன்ப சுகங்களுக்கும் ஆதி நாயகன் - எம்பெருமான், கண்ணன்!

சந்திர ஒளியைத் தருபவனும், கண்ணன்! சூரிய ஒளியைத் தருபவனும் கண்ணன்!

ஒவ்வொருவரும் அடையும் இன்பங்களின் ஆதிநாயகனும், கண்ணன்! உலக க்ஷேமங்களுக்குக் காரணகர்த்தாவும், கண்ணனே!

கண்ணனின் உடலில் இந்நான்கு கோபிகளும் குடி கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்ட ராதை - சினம் கொண்டு, இந்நால்வரையும் கண்ணனின் உடலிலிருந்து வெளியே விரட்டி அடித்து விட்டதாகவும் ஒரு வரலாறு உண்டு!

இத்தகைய தத்துவ விளக்க சாரமாகவே, கோபிகைகளின் சரித்திரங்கள் அமைந்திருப்பதை ஆண்டாள் நாச்சியார் தனக்குள்ளாக நினைத்துப் பார்த்தாள்.

கோபிகையாக வந்த ஒவ்வொரு ஜீவாத்மாவின் தனித்தனி இச்சைகளை எப்படி எப்படியெல்லாம் நாயக நாயகி நிலையில் பரமபுருஷனாகிய எம்பெருமான் கண்ணன், ஆசைதீரத் தணித்துள்ளான் என்பதை, ஆண்டாள் நினைத்துப் பார்த்தாள்.

பரமபுருஷனாகிய எம்பெருமான் - தன் நாயகியருள் பெரிய பிராட்டிக்குத் தனியிடம்! ஏனைய பிராட்டியார்களுக்குத் தனித் தனி நிலைகள்! கோபியர்களுக்குத் தனித்தனி நாயகி நிலைகள்! ராதை என்ற கோபிக்கு மட்டும் ஒப்பற்ற தனித்துவம் பொருந்திய நாயகி நிலை!

ஜீவாத்ம நாயகியர்களுக்குத் தனி நிலைகள் என்று தந்திருப்பதைப் போலத் தன்னைப் பொருத்த மட்டிலும், எப்படிப்பட்ட நாயகியின் அம்சத்தை அவன் தரப்போகிறான் என்பதைத் தெரியாமலும், புரியாமலும் - ஆண்டாள் தவித்தாள்!

மனிதனுக்குரிய கடமைகளில் சற்றும் குறை ஏற்படாமல் வாழ்ந்து காட்டிய இராமாவதாரத்தின் ஏகபத்தினி ஒழுக்கத்தின் இடையில் - பரமபுருஷ தத்துவார்த்தமும் மறைந்து கிடந்ததை **ஆண்டாள் உணர்ந்தாள்.**

அதனால்தான், தன் பிரபந்தப் பாசுரங்களில் இராமாவதாரத்தையும் குறிப்பிட்டு வழிபட்டுப் பாடியுள்ளாள்.

**மூன்றாம் திருமொழிப் பாசுரங்களைப்** பாடநினைத்த அவள் நெஞ்சத்தில் - கோபியரோடு கண்ணன் நடத்திக் காட்டிய லீலைகள் ஒவ்வொன்றும், வரிசை வரிசையாக அவள் மனத்திரையில் காட்சியாக அரங்கேற்றமாயின.

கண்ணன் செய்த லீலைகளுள் - அவன் யமுனை நதியில் நீராடிக் கொண்டிருந்த கோபியர்களின் ஆடைகளைக் கவர்ந்து கொண்டு, குருந்த மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருந்த காட்சி மட்டும் மூன்றாம் திருமொழிப் பாசுரங்களின் வடிவில் - மிகப் பெரும் தத்துவார்த்த நிலையில் வெளிப்பட்டன.

துரியோதனாதியர்களின் சபையில் திரௌபதி துகில் உரியப்படும் அவமானச் சூழ்நிலை ஏற்பட்ட பொழுது - மாத விலக்கானவள் நிற்கும் இடம் என்று கூடப் பார்க்காமல் மாயவனாக மறைந்து நின்று - கோடானு கோடி ஆடைகளை மந்திர ஜால வித்தையைப்போல, அள்ளி அள்ளி வீசி எறிந்து அவள் மானத்தைக் காத்த கண்ணபிரான் - தன் மீது தணியாத பிரேமை கொண்டிருக்க கோபியர்களைத் தண்ணீரிற்குள் நிர்வாண நிலையில் தவிக்க விட்டு விட்டு, அவர்கள் ஆடைகளைத் திருடிக் கொண்டு செல்லலாமா?

ஆடையில்லாமல் நீராடக் கூடாது என்ற நீதியைக் கோபியர்கட்கு உணர்த்துவதற்காக இருக்குமோ?

நீதியை உணர்த்துவதற்காகப் பெண்களை நீரில் நிர்வாணமாகத் தவிக்கவிடுவது மட்டும் நீதியாகிவிட முடியுமா? தர்மமாகிவிட முடியுமா?

கோபியர்களின் ஆடைகளை எதற்காகக் கண்ணன் கவர்ந்தான்?

ஜீவாத்மாக்கள், தங்கள் கர்ம பலா பலன்களின் வண்ணம், பற்பல பிறவிகளை எடுக்கின்றார்கள்.

புண்ணிய, பாவ பலா பலன்களை அனுபவித்து முடித்த பிறகே, ஆத்ம விடுதலைக்கு ஆளாகி, எம்பெருமானின் பாத கமலங்களில் ஜீவாத்மாக்கள் சங்கமமாகின்றன.

விதியாலும், வினைகளாலும் உடலிற்குள் குடிகொண்டு வாழும் உயிர் விடுதலை பெற்ற பின்பு - இறைவனடியைச் சென்று

சேர்ந்து விடும் என்ற தத்துவத்தோடுதான் பிறவிகள் தொடங்குகின்றன! தொடர்கின்றன! முடிகின்றன!

பிறவி என்பது - ஜீவாத்மாவிற்கு, அவ்வப் பொழுது - களைந்து வீசி எறியும் ஆடையாகிய சரீரத்தைக் கொண்டது.

இத்தகைய ஆத்ம சரீரங்களின் இயற்கை நியதிகளையும், ஆண்டாள் தனக்குள்ளாக நினைத்துக் கொண்டாள்.

தங்கள் பழம் பிறவிகளில் - பலவகைப்பட்ட கோபியர்களும், எம்பெருமானின் திருஉருவ அழகில் மயங்கி இன்ப சுகத்தை உடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும் அடைய ஆசைப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய பிறவிப் பயனைப் பெறவே, கோபியாகப் பிறவி எடுத்து, எம்பெருமானின் அம்சமாகிய கண்ணனிடம், விரும்பிய நிலையிலெல்லாம் - சுகங்களை அனுபவித்திருக்கின்றார்கள்!

ஏங்கித் தவித்து ஈடேறாத ஆசைகளையும். விரகதாபமோக உணர்வுகளையும் - கோபியர்கள், கண்ணபிரானிடம் அனுபவித்து முடித்த பிறகு, அவர்கள் தங்கள் உடல்களாகிய ஆடைகளை உதறித் தள்ளிவிட்டுக் கண்ணனின் காலடியில் சங்கமமாகிவிட வேண்டுமல்லவா?

ஏன்? - இக்கோபியர்கள் இன்னும் தன் பாத தாமரைகளில் வந்து சங்கமம் ஆகாமல் தாமதித்துக் கொண்டு, வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிக் கொண்டிருக்கின்றார்கள்?

மீண்டும் பிறவி எடுப்பதென்றாலும் - கண்ணனையே தழுவிக் கலந்து மகிழ்ந்து சுகானுபவம் பெற்ற ஜீவாத்மாவிற்கு, மறுபிறவி என்று ஒன்று, வேறு தனியாக இருக்க முடியுமா?

இத்தகைய ஞான உணர்வு, ஏன் கோபியர்களின் ஆத்மாக்களில் இன்னும் ஏற்படாமல், அவர்களின் நெஞ்சங்களில் ஞான உணர்வு சூன்யப்பட்டு - அஞ்ஞான இருள் சூழ்ந்து கொண்டிருக்கின்றது?

வேத சுருதிகளாக விளங்கிப் பிறகு வரம் பெற்று வந்து பிறந்த சுருதி கோபிகைகளுக்குக்கூட, இந்த அறிவு ஏற்படவில்லையே?

சகல சாஸ்திர வேதங்களிலும், தவநெறியிலும் மேம்பட்ட முனிவர்களாக வாழ்ந்து - பிறகு வரம் பெற்றுப் பிறந்த ருஷி கோபிகைகளுக்கும் - அனைத்துப் பிறவிகளிலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் மெய்ஞ்ஞான உணர்வுகள், சிற்றின்ப மோகத்தில் மறந்து. மறைந்து கரைந்து, விட்டனவே?

இராமாவதாரப் பேரழகில் லயித்து மோகம் கொண்டு - அத்திருமகனின் அழகுணர்ச்சிகளை உடலாலும், உள்ளத்தாலும் அள்ளிப் பருகித் தங்கள் பிறவிப் பயனை முடித்துக் கொண்டுவிட வேண்டும் என்று வரம் பெற்றுப் பிறந்த மைதில கோபிகைகள், கௌசல கோபிகைகள், அயோத்யா கோபிகைகள் ஆகியவர்களுக்குக்கூடத் தங்கள் பழம் பிறவிகளின் நினைவுகள் - காற்றோடு காற்றாகப் பறந்து போய்விட்டனவே?

இவற்றையெல்லாம் கோபியருக்கு நினைவுபடுத்தத்தான் - கோபியர் வைகறையில் நீராடச் சென்ற இருள் மிகுந்த நேரத்தில் கண்ணபிரான் மறைந்து மறைந்து பின் தொடர்ந்து சென்று - அவர்கள் ஆடை அணி மணிகளைக் கழற்றி வைத்துவிட்டு, நீராடிக் கொண்டிருக்கும் பொழுது - ஆடை அணிமணிகளைத் தெரியாமல் திருடிக் கொண்டு, குருந்த மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டான்.

நிர்வாண நிலையிலிருந்த கோபியர்களின் கண்களில் தங்களின் மானத்தை மறைக்கக் கூடிய ஆடைகள் இல்லாத ஒன்றுதான் தெரிந்ததேயல்லாமல் - ஆடை என்ற அமைப்பின் உள்ளார்த்தமாக ஒளிந்து கொண்டிருந்த பிறவி என்ற பொருள் அவர்கள் நெஞ்சிற்குப் புரியவில்லை!

கண்ணபிரான் ஏறி உட்கார்ந்திருந்த மரமோ, நீர் நிலையின் அருகிலுள்ள குருந்த மரம்! ஒரு குட்டையான மரம்!

இம்மரத்திலிருந்து கோபியர்களை நிர்வாண நிலையில் மிகமிக அருகில் பார்க்க இயலும்!

அப்படிக் கண்ணன் தங்களைப் பார்க்கும் பொழுதாவது - கோபியர்களுக்குப் பிறவியைக் கடந்த நிர்வாணஆத்ம பரிநிர்வாண நிலையைப் பற்றிய அழுத்தமான சிந்தனை ஏற்படவில்லையே?

குருந்த மரம், தெய்வாம்சம் பொருந்திய ஒரு மரம்!
ஞானம் உபதேசிக்கும் குருவின் அம்சம் கொண்ட மரம்!
பூத்துக் காய்ப்பது, இம்மரத்திற்குக் கிடையாது!

பூத்துக் காய்த்துக் கனிகள் தரும் மரங்களை, இல்லற அம்சமாக நினைத்தால் - குருந்த மரம் பூத்துக் காய்க்காத நிலையில் இருப்பதால், இதை சர்வ ஞானம் பெற்ற துறவறத்தின் அம்சமாகக் கருதலாம்!

இக்குருந்த மரத்தின் அடியில்தான், ஆதிசிவன் குருவாகத் தோன்றி திருவாதவூரராகிய மாணிக்கவாசகரை அடிமையாக

ஆட்கொண்டு - சிவம் என்றால் என்ன? சிவஞானம் என்றால் என்ன? சிவஞானம் போதித்த சித்தாந்தங்கள் எவை? என்பவற்றை விளக்கிச் சிவஞான போதத்தீக்ஷையை தந்ததாக உள்ள வரலாறு, இங்கு நினைவுபடுத்தத்தக்கது.

இக்குருந்த மரத்தைப் பார்த்த பிறகாவது, அஞ்ஞான அறியாமை என்ற ஆசா பாசங்களில் மூழ்கிக்கிடப்பதைப் போல், நீரில் மூழ்கிக் கிடந்த கோபியர்களுக்குப் பிறவி பற்றிய குரு உபதேசம் நினைவிற்கு வரவில்லையே? ஏன்?

கண்ணபிரான், கோபியர்களின் ஆடை அணிமணிகளைத் திருடிக் கொண்டு குருந்த மரக்கிளையில் உட்கார்ந்திருந்த லீலையின் தத்துவார்த்தம் - ஆண்டாளின் நெஞ்சில் தெளிவாகப் புலப்பட்டது!

உடனே, ஆண்டாள் நாச்சியார் - தம் மூன்றாவது திருமொழியில், கண்ணனிடம் நிர்வாண கோபியர்கள், நீருக்குள் நின்று கொண்டு, தங்கள் ஆடை அணிமணிகளைக் கெஞ்சி வேண்டுவதாகப் பத்துப் பாசுரங்களை மிக அற்புதமாகப் பாடியதோடு - தன்னுடைய பிறவியின் பயனையும் விரைவில் தந்து, எம்பெருமான் தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்ற குறிப்பையும் மிக அருமையாக வெளியிட்டுள்ளாள்!

யமுனை நதிக்கரையில் நீராடிக் கொண்டிருந்த கோபியரின் ஆடை அணிமணிகளைக் கண்ணன் களவாடியதாகப் புராண அமைப்பில் கூறப்பட்டிருந்தாலும் - ஆண்டாள், பொய்கைக்குள் குள்ளக் குளிரக்குடைந்து நீராடிய மார்கழி நோன்பைத் தன் மனதில் கொண்டவளாகக் கோபியர்கள், குளத்தில் நீராடுவதாகவே - தன் திருமொழிப் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளாள்.

ஆண்டாள் நாச்சியார் இத்திருமொழியில் - எம்பெருமான் கண்ணனைக் கோபியர்கள் தங்கள் ஆடைகளைக் கேட்டுக் கெஞ்சும் பொழுது - 'மதுவின் துழாய் முடிமாலே! மாயவனே! எங்கள் அமுதே! வித்தகப் பிள்ளாய்! குதிகொண்டு அரவில் நடித்தாய்! கோலம் கரியபிரானே! குடத்தை எடுத்து ஏற விட்டுக் கூத்தாடவல்ல எம்கோவே! ஊழி எல்லாம் உணர்வானே! தொல்லை இராத்துயில்வானே' கோமள ஆயர் கொழுந்தே! வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட மசிமையிலீ! என்றெல்லாம் அழைப்பதாகக் கூறியதோடு - கோபியர் முன்பு தாங்கள் கண்ணனிடம் பெற்ற சாபம் தீர- அனந்த சயன நோன்பு நோற்றதையும் மனதில் வைத்துக் கொண்டு - முதல் பாசுரத்திலேயே, அரவணை மேற்பள்ளி கொண்டாய்! என்று

எம்பெருமானின் அனந்த சயனக்கிடந்த திருக்கோலத்தையும் குறிப்பிட்டுள்ளாள்.

அத்துடன், கோபியர் முற்பிறவியில் இராமபிரானிடம் பெற்ற வரத்தையும் நினைவு படுத்துவதற்காகவே, வில்லால் இலங்கை அழித்தாய்! இலங்கை அழித்த பிரானே! என்ற இராமாவதாரச் சொற்களையும் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளாள் - ஆண்டாள்!

இத்திரு மொழியுள் கோபியர் கண்ணனிடம் தங்கள் ஆடைகளைக் கேட்டுக் கெஞ்சும் பொழுது 'கண்ணா! கோழி கூவுவதற்கு முன்பே - இருளோடு இருளாக இங்கு நீராட வந்துவிட்டோம்.

இதோ, சூரியனும் தன் கதிர்களைப் பரப்ப எழுந்து விட்டான்! பகற்பொழுதும் வந்துவிட்டது!

நாங்கள் தற்பொழுது மானத்தை மறைத்துத் துணிகளைக் கட்டிக் கொள்வதற்கு ஆடைகளும் இல்லாத ஏழைகளாக, செயலற்ற நிலையில் நிர்வாணமாக நீரில் நின்று கொண்டு தவிக்கின்றோம்!

இனி, எந்தக் காலத்திலும் இந்தப் பொய்கையின் பக்கமே வரமாட்டோம்!

தோழிகளும் நானும், மார்பைக்கூட மறைத்துக் கொள்ளாமல், வெட்கமின்றி எங்கள் கைகளைத் தலை மீது தூக்கிக் கைகூப்பி வணங்குகின்றோம். எங்கள் ஆடைகளைக் கொடுத்துவிடு!' என்றும்.

'கண்ணா! தற்பொழுது நாங்கள் நீராடிக் கொண்டிருக்கும் பொழுது நடந்ததென்ன? எப்படி இப்படி ஒருநிலை ஏற்பட்டது? இந்தக் குளத்திற்கு நாங்கள் வருவதை முன்பே தெரிந்து கொண்டு - எங்களுக்குத் தெரியாமல் எங்களைப்பின் தொடர்ந்து எந்த வழியில் எப்படி வந்து சேர்ந்தாய்?

எங்கள் வழி சரியாக அமையாத காரணத்தால் - உன்னோடு தற்பொழுது உள்ள நிர்வாண நிலையில் - சேர்ந்து விளையாட முடியாத நிலைக்கு ஆளாகிவிட்டோம்!

குருந்த மரத்தில் விரைவாக மேலே ஏறிப் போய்விடாதே! எங்கள் ஆடைகளைக் கொடுத்துவிடு!' என்றும் -

'கண்ணா! எலே! இது என்ன சிறுபிள்ளை விளையாட்டு? தற்பொழுதுள்ள நிர்வாண நிலையில் நாங்கள் தவிப்பதை எங்கள்

தாய்மார்கள் பார்த்துவிட்டால் - எங்களை வீட்டின் உள்ளே, எங்களையே நுழையவிட மாட்டார்கள்!

எங்களை மிகவும் கேவலமாக எல்லோரும் பழிச் சொல் பேசி இகழக்கூடிய பொல்லாத செயலென்று கூடத் தெரிந்து கொள்ளாமல் - இருக்கின்றாயே?

நீ, எதைக் கேட்டாலும், கேட்டதையெல்லாம் தரக் காத்திருக்கிறோம். நீ எங்கள் ஆடைகளை திரும்பக் கொடுத்து விட்டால், எவருக்கும் இந்த அவல நிலை எங்களுக்கு ஏற்பட்டதைத் தெரிந்து கொள்ளாத நிலையில் போய்விடுவோம். எங்கள் ஆடைகளைக் கொடு! என்றும்,

'கண்ணா! பலர் குடைந்து நீராடக்கூடிய இந்நீர் நிலையில் - நான்கு புறமும் எவராவது எங்களை இந்த நிர்வாணக் கோலத்தில் பார்த்துவிடப் போகின்றார்களோ என்று பயந்து பரக்கப் பரக்க விழித்துக் கொண்டு, அடக்கிக் கொள்ள முடியாமல் பொலபொல வென்று வெளிப்படும் கண்ணீர் தளும்ப, நாங்கள் தவிப்பதைப் பார்!

கொஞ்சமும் இரக்கமில்லாதவனே! நீ, மரம் ஏறித் தாவிப் பாய்ந்து ஓடுவதில் குரங்குகளுக்கே அரசனாக இருக்கக் கூடியவன் என்பதும் எங்களுக்குத் தெரியும். எங்கள் ஆடையைத் தராமல் தூக்கிக் கொண்டு மேலும் மரம் ஏறித் தாவி ஓடவிடாமல், குருந்த மரக்கிளையில் வைத்துள்ள எங்கள் ஆடைகளைக்கொடு' என்றும்,

'கண்ணா! நீருக்குள் நின்று கொண்டிருக்கும் எங்கள் கால்களை இக்குளத்திலுள்ள கயல்மீன், வாளை மீன்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு கடிக்கின்றன.

இத்தகைய நிர்வாணக் கோலத்தில் நாங்கள் படும் பாட்டைக் கேள்விப்பட்டு, எங்கள் உடன்பிறந்தவர்கள் கையில் வில்லோடு வந்து உன்னைத் துரத்திக் கொண்டு ஓடோடி வந்தால், பிறகு உன் விளையாட்டு வினையாகி, எதில் போய் முடியும் - தெரியுமா?

எங்கள் சிற்றாடைகளை வைத்துக் கொண்டு மரத்திலேயே உட்கார்ந்து கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டு விளையாடாமல், எங்கள் ஆடைகளைக் கொடு!' என்றும் -

'கண்ணா! இத்தாமரைத் தடாகத்தில் நிர்வாணமாக நின்று கொண்டிருக்கும் எங்கள் கால்களில் தாமரைத் தண்டுகள் சிக்கிச் சுற்றிக் கொண்டு, தேள் கொட்டியதைப் போல ஏற்படும்

வேதனைகளைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோம்! நீ செய்யும் குறும்புகளை எல்லாம் விட்டு விட்டு, எங்கள் ஆடைகளைக் கொடு! என்றும்,

'கண்ணா! நீருக்குள் நிர்வாணமாகத் துன்புற்று வருந்திக் கொண்டிருக்கின்றோம். நீயோ, நீதியற்ற செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றாய். ஊருக்குள் சென்று உன் கொடுமைகளை எல்லோரிடமும் முறையிடலாமென்றாலும் - ஆயர் பாடியும், வீடுகளும் தொலை தூரத்தில் உள்ளன.

நீ, இந்த அளவிற்கு எங்களைத் துன்புறுத்தினாலும், உன்னிடம் பேரன்புடையவர்கள், நாங்கள்! - இருந்தாலும் - நீ, தற்பொழுது எங்கள் தன்மானத்தோடும், பெண்மையுடனும் விளையாடிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் கொடுமையை எங்கள் தாய்மார்கள் கண்டால் - தாங்கிக் கொள்ளவே மாட்டார்கள். குருந்த மரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்காமல், எங்கள் ஆடைகளைக் கொடுத்து, எங்களைப் போக விடு!' என்றும்.

'கண்ணா! இங்கு நீரில் நிர்வாணக் கோலத்தில் மானம் அழியும் மனநிலையில், கண்ணீர் ததும்ப நின்று கொண்டிருப்பவர்கள் அனைவருமே உனக்கு, நீ மணந்து கொள்ளும் மாமிமக்களின் முறை கொண்டவர்கள் மட்டுமல்ல! தாய்முறை கொண்டவர்கள்! மாமி முறை கொண்டவர்கள்! சகோதரி முறை கொண்டவர்கள்! எல்லோருமாகத்தான், நீ விளையாட்டாகத் தந்த கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு நிற்கிறோம்!

நீ செய்யும் இத்தீங்கு, மிகவும் முறை கெட்டவை! விவஸ்தை இல்லாதவை! கனகச்சிதமாக 'சிக் கென்று உன் நெஞ்சில் உறைக்குமாறு நாங்கள் உண்மையைச் சொல்லிக்கொண்டு நிற்கிறோம்! எங்கள் ஆடைகளைக் கொடு! என்றும்,

'கண்ணா! கம்சன், நீ பிறந்த இரவு நேரத்தில் உன்னை அழித்துவிட நினைத்த பொழுது - அந்த இருளில் தப்பிப் பிழைத்து இங்கு வந்து சேர்ந்த காரணமே இளம் பெண்களாகிய எங்களை நீரிற்குள் நிர்வாணமாக்கி நெஞ்சு நடு நடுங்கும் துன்பத்தை ஏறபடுத்துவதற்காகத்தானோ?

பேய் மகளின் விஷப்பாலை அமுதமாகக் குடித்த வெட்கம் இல்லாதவனே!' யசோதை, உன்னை உன் இஷ்டப்படி இப்படி வளர்த்து விட்டுவிட்டு மகிழ்ச்சியோடிருக்கிறாள்! அவள் உன்னை அதட்டி மிரட்டிப் பயமுறுத்தி வளர்க்கவில்லை! எங்கள்

ஆடைகளைத்தா!' என்றும் - கெஞ்சி அழுது தொழுது வேண்டிக் கொள்ளும் நிலையில் மூன்றாம் திருமொழியை, மிக உயர்ந்த சரணாகதித்துவ சங்கம தத்துவார்த்தங்களை உள்ளடக்கிய நிலையில் - கோபி, ஆண்டாள் நாச்சியார், பிரபந்தப் பாசுரங்களாகப் பாடியுள்ளாள். இத்திருமொழியுள்

**மாமிமார் மக்களே அல்லோம்!**
**மற்றும் இங்கு எல்லோரும் போந்தார்!**
**தூமலர்க் கண்கள் வளரத்**
**தொல்லை இராத் துயில் வானே!**
**சேமமேல் அன்று, இது சால**
**சிக்கென நாம் இது சொன்னோம்!**
**கோமள ஆயர் கொழுந்தே!**
**குருந்திடைக் கூறை பணியாய்!** என்ற பாசுரத்துள் கோபியர்கள் திருமணம் செய்து கொள்ளும் முறைமையற்ற தாய் நிலையிலும், மாமி, சகோதரி முறை கொண்டவர்களும் நிர்வாண நிலையில் நீரில் நின்று கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றாள், ஆண்டாள்!

தாய், தங்கை, தமக்கை, மாமி முறை கொண்ட பெண்களையும் நிர்வாணப்படுத்தி நீரிற்குள் பரிதவிக்க வைத்துவிட்டு - கண்ணன் அவர்கள் ஆடைகளையும், கொஞ்சமும் விவஸ்தை இல்லாமல் களவாடிச் சென்றது - சரியான தர்மம் ஆகுமா?

அக்காள், தங்கை, அன்னை, அத்தை மாமி, மைத்துனி ஆகிய உறவு முறைகள் எல்லாமுமே - ஜீவாத்மாக்களின் சரீரத்தைத்தான் சார்ந்தவை!

எத்தகைய ஜீவாத்மாவாக இருந்தாலும், அனைத்து ஜீவாத்மாக்களும் நாயகியர் நிலையை அடையும் பக்திப் பாதையில், ஒரே பரம புருஷ ஏக நாயகனாக விளங்குகின்றவன் - பரமாத்மாவாக விளங்கும் எம்பெருமான் ஒருவனே!

இத்தகைய நாயகி நாயக தத்துவார்த்தத்தைத்தான் இப்பாசுரத்தில் ஆண்டாள், புலப்படுத்தியுள்ளாள்.

இந்நிலையில் ஆண்டாளுக்கும் எம்பெருமானே, பரம புருஷ நாயகன்! அவள் தந்தை பட்டர்பிரான் பெரியாழ்வாருக்கும், அதே எம்பெருமான்தான் - பரமபுருஷ நாயகன்!

ஆண்டாள் நாச்சியார், எம்பெருமான் பரமாத்மப் பரம புருஷ நாயகனுடன் உள்ளத்தெழும் உணர்ச்சிகளாலும், உடலில் பொங்கிப் பூரித்திடும் விரகதாபப் பெண்மை உணர்வாலும்,

ஆத்மார்த்த நிலையாலும் என, அனைத்து நிலைகளிலும் பக்தி என்ற பாத்திய உரிமையுடன் நாயகி நிலையை அடைந்து, சங்கமம் ஆகிய சகல சுகானுபவங்களையும் கரை கண்ட ஒரு வகைப்பட்ட கோபி!

சூடிக் கொடுத்த மாலையால், ஆண்டவனையும் ஆண்டவளாக மாறியதோடு - ஆண்டவனின் நாயகியாகவும் விளங்கி ஜீவாத்மாக்களின் எண்ணங்கள் ஈடேற, ஆதி நாயகனிடம் பரிந்துரை செய்யும் தேவியின் தெய்வ நிலையையும் கொண்ட அம்சத்திற்கு இலக்கணமாக அமைந்த கோபிதான் - இந்த ஆண்டாள்!

தன் நாயகனை அடைந்தே தீர்வது என்ற வைராக்கியத்துடன் உள்ளமும், உடலும் கரைந்துருகித் தை மாதம் முதல் பங்குனிக்குள் - தான், அணு அணுவாய் நெகிழ்ந்து நெஞ்சம் குமுறப் பாடிய நாச்சியார் திருமொழிப் பிரபந்தப் பாசுரங்களுள் 'சிற்றில் சிதையேல்' என்ற இரண்டாவது திருமொழியின் பத்துப் பாசுரங்களிலும், கோபியர் கண்ணனிடம் தன் ஆடைகளைக் கெஞ்சிய மூன்றாம் திருமொழியின் பத்துப் பாசுரங்களிலும் - இறுதியில் கண்ணனைப் பிருந்தாவனத்தில் கண்டதாகப்பாடி நாச்சியார் திருமொழியை நிறைவு செய்த பதினான்காவது திருமொழியின் பத்துப் பாசுரங்களிலும் என்ற நிலையில் - மூன்று திருமொழிகளில் மட்டுமே, தன் தோழியர்களைச் சேர்த்துக் கொண்டு பாடுவதாகப் பாசுரங்களை அமைத்துள்ளாள், ஆண்டாள்.

ஏனைய பதினொன்று நாச்சியார் திருமொழிகளிலும், தானே தன் எண்ணங்களை நேர்முகமாக, நேருக்கு நேராக - வெளிப்படுத்தும் நிலையிலேயே ஆண்டாள் பாசுரங்களைப் பாடி உருகியுள்ளாள்.

நாச்சியார் திருமொழிகளில் நான்கு, ஐந்து, ஆறாவது என்ற மூன்று திருமொழிகளும் மிகவும் முதன்மையான தன்மையில் அமைந்தவை ஆகும்.

நான்காம் திருமொழியாகிய 'கூடலிழைத்தலில்' ஆண்டாளின் நெஞ்சில் பரமபுருஷ மணவாளனை அடையும் எண்ணத்தைத் தூண்டிவிட்ட திருமாலிருஞ்சோலை அழகரும், திருமலையின் திருவேங்கட நாதனும் இடம் பெற்றனர்.

எம்பெருமானைக் கூவி அழைக்கும்படிக் குயிலை நோக்கிப் பாடிய ஐந்தாவது திருமொழியில் - திருவேங்கடமுடையான், கோபியராகப் பிறக்கவரம் தந்த இராமன், கோபியர் அனந்தசயன

நோன்பு நோற்றுச் சாபம் தீர்ந்த அனந்தசயனப் பள்ளி கொண்ட எம்பெருமான், திருப்பாவை நோன்பில் மழை வாய்ப்பாடிய உலகளந்த எம்பெருமான், மாலைகளைச் சூடிக் கொடுத்த வடபத்திரசாயி - ஆகியோர் இடம் பெற்றனர்.

ஆறாவது திருமொழியாகிய எம்பெருமான் தன்னை மணம் செய்து கொள்வதாகக் கனாக் கண்ட பாசுரங்களில், ஆண்டாள் - தன்னை மணந்து கொள்ளும் அழகிய மணவாளனின் பெயரை 'மனைவியாக வருகின்றவள், கணவனின் பெயரைச் சொல்லக்கூடாது! என்ற மரபைப் பின்பற்றுவதைப் போலத் திருவரங்கனின் பெயரைக் குறிப்பிடாமல், பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

4,5,6 - ஆகிய மூன்று திருமொழிகளும் இன்றியமையாதவை என்ற கருத்துப் புலப்படுமாறு, ஆண்டாள் இம்மூன்று திருமொழிகளிலும் ஒவ்வொரு பாசுரத்தைச் சேர்த்துப் பதினொன்றாகப் பாடியுள்ளாள்.

ஆண்டாள் நாச்சியார், முதல் நான்கு திருமொழிகளுள் - எம்பெருமானுடன் சரீரத்தால் பெறும் சுகானுபவ நிலையை முதல் இரண்டு திருமொழிகளிலும், ஆத்மார்த்தமாக உயிரோடு பேருயிர் என்று, பரமாத்மாவுடன் ஜீவாத்மா ஒன்றோடு ஒன்று சங்கமமாகிப் பெறும் சுகானுபவ நிலையை மூன்றாவது, நான்காவது திருமொழிகளில் குறிப்பாக விளக்கி இருக்கும் தத்துவார்த்த நிலையைத் தெள்ளத் தெளிவாக - நான்காம் திருமொழியாகிய கூடலிழைத்தல் பற்றிய பாசுரங்களின் இறுதிப் பாசுரத்தில் **'ஊடல் கூடல்', 'உணர்தல் புணர்தல்'** என்று அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள்.

திருமொழியின் அமைப்பே 'கூடல் இழைத்தல்' ஆகும். 'கூடல்' என்றாலே, இரண்டு ஒன்றாக இணையும் சங்கம இன்ப நிலையாகும்.

'ஊடல் கூடல்' என்பது ஆண் பெண்களின் மனித சரீரங்கள் தங்களுக்குள் பெறும் சிற்றின்ப நிலையின் முழுமை பெற்ற உச்சக் கட்டமாகும்.

காரணமில்லாமல், நாயகி நாயகனுடன் கொள்ளும் கோபமே, ஊடல் ஆகும். நாயகியின் ஊடலை நீக்கி நாயகன் நாயகியைக் கூடி இன்ப சுகம் தருவது, கூடல் ஆகும்.

ஊடலைத் தொடர்ந்து வரும் கூடலாகிய புணர்ச்சியே, சிறப்புடைய சிற்றின்ப சுகம் ஆகும்.

சரீரத்தோடு சரீரம் பெறும் இச்சிற்றின்ப சுகானுபவத்தைக் கண்ணனிடம் கோபியர் பெற்ற தன்மையை 'ஊடல் கூடல்' என்று ஆண்டாள் குறிப்பிட்டாள்.

அவள் குறிப்பிட்டுள்ளதற்குப் பொருத்தமாக முதல் திருமொழியாகிய மன்மதனைத் தொழுதல் பற்றி வரும் பாசுரங்களில் ஆண்டாள் - 'என் தடமுலைகள் மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன், கண்டாய்!' என்றும், 'கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழப் பெறாவிடில், நான் அழுது அழுது அலமந்து அம்மா வழங்க ஆற்றவும் அது உனக்கு உறைக்கும், கண்டாய்!' என்று எம்பெருமானை அடையப் பெறாத ஏக்கத்தால் மனம் கொதித்துக் குமுறிக் கோபித்துப் பேசிய மொழிகளே **'ஊடல்'** என்பதை விளக்கும்.

அதைப் போலவே - இரண்டாம் திருமொழியாகிய 'சிற்றில் சிதையேல்' என்று அமைந்த பாசுரங்களில் கண்ணன் நேரில் வந்து கோபியரை மயங்க வைத்துக் கடைக்கண் பார்த்தல் - கண்ணனின் பேச்சும், செய்கையும், கோபியரை மயக்கும் மந்திர வித்தை கொண்ட முகமும் கொண்டு விளங்கியமையை - 'உன்தன் மேல் உள்ளமோடு உருகி அல்லால் உரோடம் ஒன்றும் இலோம்' என்று கோபியர் கூறுவது போன்ற குறிப்புக்கள் எல்லாம் - எம்பெருமான் கண்ணனோடு ஊடிய கோபியர் கூடினர் என்பதை விளக்கும் **கூடல்** ஆகும்.

மூன்றாம் திருமொழியில் கோபியரை நிர்வாணமாக்கி அவர்தம் ஆத்ம சங்கமம் பற்றிய நினைவைக் கண்ணன் ஏற்படுத்தியமை - ஜீவாத்ம சங்கம நிலையைப் பரமாத்மா ஆத்மார்த்தமாக உணர்த்திய **'உணர்தல்'** ஆகும்.

நான்காவது திருமொழியாகிய 'கூடல் இழைத்தல்' பகுதியில் கண்களை மூடிக் கொண்டு மணற்கோடுகள் வரைந்து கூடல் நிலையை எதிர் பார்த்தலாகிய பாசுர அமைப்புக்களே', ஜீவாத்மா - பரமாத்மாவோடு சங்கமம் ஆகிப் பேரின்ப சுகானுபவம் பெறும் **'புணர்தல்'** ஆகும்.

**இவற்றையே 'ஊடல் கூடல்' உணர்தல் புணர்தலை நீடு நின்ற புகழ் ஆய்ச்சியர் கூடலை** என்று ஆண்டாள் நாச்சியார் அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள்.

மேலும், நான்காம் திருமொழியாகிய 'கூடல் இழைத்தல்' எனப் பாடப்பட்டுள்ள பாசுரங்கள் - ஜீவாத்மா பரமாத்மாவோடு சங்கமமாகும் வீடுபேற்று நிலையை, உணர்த்துவதைத் தெளிவு

படுத்தவே, 'கூடலைக் குழற் கோதை முன் கூறிய பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே!' என்று அழகுபடப் பாசுர நிறைவு செய்துள்ளாள்.

பாவம் இல்லை என்றால், புண்ணியமும் இல்லை என்பதுதான் பொருளாகும்.

அதாவது - நல்வினை தீவினைகளால் ஏற்படும் புண்ணிய பாவங்களை ஜீவாத்மா கடந்த நிலையில்தான், ஜீவாத்மாவிற்கு வீடுபேறு கிடைக்க முடியும். ஆக, பாவ புண்ணியம் கடந்த பரமாத்ம சங்கமப் புணர்ச்சியை ஆண்டாள் நாச்சியார் நான்காவது திருமொழியில் குறிப்பாகக் கூறி முடித்துள்ளாள்.

கண்களை மூடிக் கொண்டு மணலில் வட்டமிட்டு, அதனுள் பல கோடுகளையும் வட்டங்களையும் வரைந்து வைத்து - இறுதியில் எண்ணிப் பார்த்து, தான் நினைத்த எண்ணம் ஈடேறுமா ஈடேறாதா என்று ஆருடக்குறி பார்க்கும் இத்திருமொழியாகிய 'கூடலிழைத்தலில்' -

திருப்பாவைக்குள் கண்ணனைப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி ஆளாக்கிக் குறும்புகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு வளர்த்த யசோதையையும், நந்தகோபனையும் தன் மாமி மாமனாகக் குறிப்பிட்ட ஆண்டாள் - இத்திருமொழிக்குள், தன்னை உரிமையுடன் மங்கல மணக் கோலத்தில் தண்ணீர் விட்டுத் தாரை ஏற்று மருமகளாக்கிக் கொள்ளும் உரிமை பெற்ற கண்ணனைப் பெற்றெடுத்த பெற்றோர்களை 'தேவகி மாமகன், மிகுசீர் வசுதேவர் தம் கோமகன்' என்று குறிப்பிட்டுள்ளாள்.

பக்தர்களைவிடப் பகைவர்களே எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டும் ஜீவாத்ம பரமாத்ம சங்கமப் புணர்ச்சிக்கு ஆளாகின்றார்கள் என்று தத்துவார்த்தத்தை விளக்கிடும் நிலையில் - கண்ணனின் பகைவர்களாக விளங்கி எம்பெருமானுடன் கலந்த சிசுபாலனையும், கம்சனையும் குறிப்பிட்டிருப்பதோடு - மருத மரவடிவத்திலும், எருதின் வடிவத்திலும், புள்ளின் வடிவத்திலும், காளிங்கன் என்ற பாம்பின் வடிவத்திலும், மதயானை வடிவத்திலும் வந்த பகைவர்களையும் அழித்துத் தன்னோடு சங்கமம் செய்து கொண்டு பரமாத்மப் பேரின்பம் தந்தமையையும் 'காளியன் மேல் நடமாடிய கூத்தனார்' என்றும், 'ஓடை மாமதயானை உதைத்தவன்' என்றும், 'கஞ்சனை வஞ்சனையிற் கொன்றவன்' என்றும், 'இன்னாதன செய் சிசு பாலனும், நின்ற நீள் மருதும், எருதும், புள்ளும், வென்றி வேல் விறல் கஞ்சனும் வீழ முன்

கொன்றவன்' என்றும் குறிப்பிட்டு - இத்திருமொழியில், ஜீவாத்மா பரமாத்மாவுடன் புணரும் பேரின்ப சுகானுபவத்தைக் குறிப்பதாகக் காட்டியிருக்கின்றாள், ஆண்டாள்.

அதைப் போலவே, எம்பெருமான் மாவலியிடம் மூவடி இரந்து தானமாகப் பெற்று, அவன் தலைமீது தன் திருவடியைப் பதித்துப் பாதல ஆட்சியைத் தந்தருளினான் என்பதையும் 'குறள் உருவாய்ச் சென்று, பண்டு மாவலிதன் பெருவேள்வியில் அண்டமும் நிலனும் அடி ஒன்றினால் கொண்டவன்'என்று குறிப்பிட்டுள்ளாள், அவள்!

இவை மட்டுமன்றி, ஆதிமூலமே என்று அபயக் குரலில் பிளிறிய கஜேந்திர யானைக்கும் அருள் செய்த பேரருளாளன் என்பதையும் குறிப்பிடுவதோடு - தன்னை நினைக்கும் கோபியர் நெஞ்சங்களிலும் கண்ணன் ஓடோடி வந்து நிறைந்து நிற்பான் என்பதையும் ஒருசேரக் குறிப்பிட்டு -

**'பழகு நான் மறையின் பொருளாய் மதம்**
**ஒழுகு வாரணம் உய்ய வளித்த எம்**
**அழகனார் அணி ஆய்ச்சியர் சிந்தையுள்**
**குழகனார் வரில், கூடிடு, கூடலே!'** - எனக் கூடலிழைத்தும் திருமொழிப் பாசுரங்களைப் பாடியுள்ளாள், ஆண்டாள்!

கூடலிழைத்தலில் இறுதியில் எழுதிய கோடுகளை எண்ணிப் பார்க்கும் பொழுது, மொத்த எண்ணிக்கை இரட்டைப் படையாக அமைந்தால், நினைத்த காரியம் கைகூடும் என்றும், ஒற்றைப் படை நிலையில் அமைந்தால் நினைத்த காரியம் கைகூடாது என்றும் கூறுவர்.

இரண்டு ஒன்றுகள், ஒன்றோடு ஒன்று கூடுவதுதான் சங்கமநிலை! தனியான ஒன்று, தனக்குள்தானே கூடிக் கொள்ள முடியாது!

அதனால்தான் இரட்டைப் படையில் கோடுகளின் எண்ணிக்கை முடிய வேண்டும் என்று 'கூடிடு கூடலே!' என ஜீவாத்மா பரமாத்மா ஆகியவற்றை இரண்டு தனிக் கோடுகளாக்கிச் சங்கமம் ஆகும் நிலையை உணர்த்தும் தத்துவார்த்த சிந்தனையுடன் - இத்திருமொழிப் பாசுரங்களின் இறுதியில் அமைத்துள்ளாள்.

பிரமம், பரப்பிரமம் - ஆகிய இரண்டும் ஒன்றே என்ற ஏகான்மவாத அத்வைத வேதாந்த நெறியும் - ஜீவாத்மா, பரமாத்மா ஆகிய இரண்டும் வெவ்வேறானவை என்றும் -

ஜீவாத்மா, பரமாத்மாவோடு சரணாகதித்துவ சங்கமம் அடையும் என்றும், பரம புருஷனோடு கலக்கும் நாயகியின் நிலை ஒவ்வொன்றும் தனித்துவம் கொண்டவை என்றும் கூறும் விசிஷ்டாத்வைத சித்தாந்தமும் - கூடலிழைத்தக் கோடுகளின் அமைப்பு முறையின் பின்னணியில், ஆன்மீக சிந்தனைகளைத் தூண்டக் கூடியவை!

அத்துடன் இரு கோடுகளும் தனித்தனியே எழுதப்பட்டிருந்தாலும், அவை கூடல் நிலையை எய்தியவுடன், கூடல் பெற்ற ஒரே கோட்டில் எந்தெந்த கோடு எங்கெங்கே உள்ளது என்பதை உணர இயலாத தன்மை அமைந்துவிடுதலும் ஆகிய கூடல் அமைப்பு - ஆன்மீக சிந்தனைகளைத் தூண்டிவிடக் கூடியது!

ஆக, வேதாந்த சித்தாந்த ஆன்மீகப் பேரின்ப நிலைக்குரிய வாதங்களை உள்ளடக்கியே, நாச்சியார் சிற்றின்ப நிலையில் எம்பெருமானை எண்ணிக் கூடலிழைத்தலில் அற்புதமாகக் குறிப்பிட்டுள்ளாள்.

நாச்சியார் திருமொழிகள் முதல் நான்கில் - மன்மதனைத் தொழுதல் (ஊடல்), சிற்றில் சிதையேல் (கூடல்) - என்ற இரண்டும் சிற்றின்ப சுகானுபவ நிலையாகும்.!

கண்ணன் ஆடை கவர்ந்தமைக்குக் கோபியர் வருந்துதல் (உணர்தல்), கூடலிழைத்தல் (புணர்தல்) ஆகிய இரண்டும் பேரின்ப சுகானுபவ நிலையாகும்!

தற்காலிக சரீர சுகானுபவத்தால் தோன்றும் ஊடல், அடிக்கடி நாயக நாயகியருக்குள் தோன்றிக் கொண்டே இருப்பது! ஆனால் நிரந்தர பேரின்ப சுகானுபவத்தில் தோன்றும் உணர்தல் என்ற நாயகியின் பரமாத்மாவைப் புரிந்து கொண்ட ஆத்மார்த்த உணர்ச்சி ஒரே முறைதான் ஏற்பட்டு - பிறகு, நிரந்தரமாக ஆன்மாவுடன் ஒன்றிக் கலந்து விடுவது!

அதைப் போலவே சிற்றின்ப சுகானுபவத்தில் தோன்றும் கூடலாகிய சரீரப் புணர்ச்சி - அடிக்கடி நாயக நாயகியரை, அவர்தம் சரீரங்களை வேறு வேறாகப் பிரித்துக் கொண்டு - முழு திருப்திப்படாமல் விளங்குவது! ஆனால் - நிரந்தரப் பேரின்ப சுகானுபவத்தில் தோன்றும் 'புணர்தல்' என்ற ஆத்ம பரமாத்ம சங்கம நிலை ஒரே முறை நிரந்தரமாகப் பிரிவே இல்லாமல், முழு திருப்தி கொண்ட பேரானந்தமயமாக விளங்குவது!

கோபி ஆண்டாள், **'ஊடல் கூடல் – உணர்தல் புணர்தல்'** என்று குறிப்பிட்டுள்ள சொற்களில், வேறு ஒரு தத்துவார்த்த

சாரமும் மறைந்துள்ளது. அதாவது - மனிதப் பிறவியின் பயன்களாக, தர்ம - அர்த்த - காம - மோக்ஷம் என்று சொல்லப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை மிக நுணுக்கமாக ஆராய்ந்தால், அறமும், பொருளும் இந்த உலகத்தில் வாழும் சரீர சுகங்களுக்கு உரியவை ஆகும்!

அறம் என்று வகுக்கப்பட்டவை முழுவதுமே இம்மையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சரீர வாழ்க்கைக்குத்தான்! அதைப் போலவே, பொருளும் இந்த உலகத்தில் வாழும் சரீர வாழ்க்கைக்குத்தான்!

இல்லறமாகிய கணவன் மனைவியரின் கருத்தொருமித்த காதலும், காம உணர்வுகளும் கொண்ட குடும்பத்தின் தர்ம நெறி, அறத்தையே சேர்ந்தது. இத்தகைய இல்லறத்தில்தான், கணவன் மனைவியரிடையே அடிக்கடி சரீரத் தொடர்புடைய ஊடலும் கூடலும் நடை பெற்று வருகின்றன. அதைப் போலவே - பொருள் என்று வகுக்கப்பட்ட அவ்வளவுமே இல்லற வாழ்க்கையை இம்மையில் நடத்திக் கொண்டிருக்கும் சரீர வாழ்க்கைக்காகவே!

இத்தகைய அறமும், பொருளும் நிரந்தரமானவை அல்ல! தற்காலிகமானவைகளே! இல்லறத்தில் நிகழும் கூடலுக்கு வித்திடும் ஊடலும் தற்காலிகமே! சிற்றின்ப சுகம், பொருட் செல்வம், மக்கட் செல்வம், பாத்தியப்பட்ட சொத்துக்கள் முதலிய பொருள் அவ்வளவுமாகக் கூடி வந்த கூடலாகிய அனைத்துப் பொருளுமே - தற்காலிகமே!

மொத்தத்தில் - அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கிலும் முதல் இரண்டாகக் கூறப்பட்ட அறமும் பொருளும் (ஊடலும், கூடலும்) தற்காலிகத்தன்மை உடையவை!

அடுத்து வகுக்கப்பட்டுள்ள இன்பம், வீடு ஆகிய இரண்டும் (உணர்தலும், புணர்தலும்) ஜீவாத்மாவிற்கு உரிய நிரந்தரமானவை!

சரீரத்தை விட்டு விலகிச் சென்று ஆத்மா அனுபவிக்கும் பேரின்பமாகிய சுகானுபவமே - ஆண்டாளால் குறிப்பிடப் பட்டுள்ள **'உணர்தல்'** என்பதாகும்!

பேரின்ப நிலையையும் கடந்த ஜீவாத்மா முழு விடுதலை பெற்று வீடு பேற்றை அடைந்து பரமாத்மாவைப் புணர்ந்து நிலையாகும். தங்கி விடும் நித்திய சூரிகளின் நிரந்தரமான

தன்மைதான் - ஆண்டாளால் '**புணர்தல்**' என்று அற்புதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக - அறமும், பொருளும் ஜீவாத்மா சென்று சேரும் மறுமைக்குத் தேவை இல்லாதவை! இம்மையில் சரீரம் அனுபவிக்கும் ஊடல் கூடலாகிய அறம் பொருளிற்குள் - நிரந்தரமான இன்ப நிலையின் பிரிவில்லாத தன்மையும் - பசி, நோய், மூதுமை, மரணங்களைக் கடந்த முழு விடுதலையின் முழுமை நிலையும் இல்லை! **தற்காலிக அறமும், பொருளுமே – ஊடலும், கூடலும்! நிரந்தரமான இன்பமும், வீடுமே – உணர்தலும், புணர்தலும்!**

இத்தகைய தத்துவார்த்த சாரத்தையே - '**ஊடல் கூடல் – உணர்தல் புணர்தல்**' ஆகிய சொற்களுக்குள் அதி அற்புதமாகப் பிழிந்து வைத்துள்ளாள், கோபி ஆண்டாள்!

எம்பெருமானைக் கூவி அழைக்குமாறு குயிலிடம் கூறுவதாக, **ஐந்தாம் திருமொழியுள்** ஆண்டாள் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

புல்வகையைச் சார்ந்த நாணலிலிருந்து புல்லாங்குழல் உருவாக்கப்பட்டு, உதட்டால் எழுப்பும் குழலோசை பிறக்கின்றது!

விலங்குகளின் தோலிலிருந்து மத்தளம் போன்ற தோல் கருவிகள் உருவாக்கப்பட்டு, கை விரல்களால் - கொட்டும் இசை முழக்கமிடுகிறது!

உடும்பு போன்றவற்றின் நரம்பிலிருந்து நரம்பிசைக் கருவிகள் உருவாக்கப்பட்டு, விரலசைவால் யாழிசை முதலியன கை விரலால் மீட்டப்பட்டு, இன்னிசை வெள்ளமாகச் செவிகளில் பாய்கின்றது! இவை முழுவதும் செயற்கையாக எழுப்பும் இசை வகைகள்!

ஆனால், இயற்கையாக இன்பம் தரும் இனிய ஓசையைத் தரக்கூடியவை கிளியும், குயிலும்!

கிளியோ, சொன்னதைத்தான் திரும்பச் சொல்லும்; தானாகச் சொல்லும் திறனற்றது, கிளி!

ஆனால், குயிலோ - இடைவிடாது கூவி இசைபாடிக் கொண்டிருக்கும் இயற்கை அமைப்புடையது.

எம்பெருமானைத் தன்னோடு இணைத்து வைக்குமாறு முதல் திருமொழியில் ஆண்டாள் தொழுது வணங்கிய மன்மதனுக்குக்

கிளி, குதிரையாக மட்டுமே உள்ளது! ஆனால், குயிலோ மன்மதன் வருகையை அறிவிக்கும் எக்காளம் என்ற இசைக் கருவியாக அமைந்துள்ளது!

எம்பெருமானை அழைத்துக் கொண்டு மன்மதன் வரநேரிட்டால், மன்மதன் எம்பெருமானுடன் வருதலை வாத்தியமாக முழங்கி முன்னதாக அறிவித்துக் கொண்டே வரக்கூடியது, குயில் மட்டுமேயாகும்!

எனவே, ஆண்டாள், மன்மதன் எம்பெருமானைத் தேடிச் செல்லும் பொழுது - மன்மதனுக்கு முன்பாகவே முந்திக் கொண்டு, எம்பெருமானைக் கூவி அழைக்குமாறு, குயிலிடம் கூறுவதாக ஐந்தாம் திருமொழியில் பாசுரங்களைப் பாடினாள், ஆண்டாள்!

குயிலிடம் ஆண்டாள் கூறுவதாக அமைந்த ஐந்தாம் நாச்சியார் திருமொழியின் தத்துவசாரமே, எட்டெழுத்துத் திருமந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்பதாகும்!

எம்பெருமானைக் குயில் கூவி அழைக்கும் போதெல்லாம் - நாராயணா! நாராயணா! என்றுதானேக் கூவி அழைக்க வேண்டும்?

நாராயணன் வருவதைக் குயில் ஆண்டாளிடம் தெரிவிப்ப தானாலும், நாராயணா! நாராயணா! என்று தானேக் கூவித் தெரிவித்தாக வேண்டும்?

இத்தத்துவ சாரத்தைக் குறிப்பிடவே - இத்திருமொழியின் இறுதிப் பாசுரத்தில், ஐந்தாவது திருமொழியை ஓதுகின்ற வர்கள் 'ஓம் நமோ நாராயணா' என்று கூறுவார்கள்! என்ற பொருள்படுமாறு -

**பட்டர் பிரான் கோதை சொன்ன**
**நண் உறு வாசக மாலை வல்லார், நமோ**
**நாராயணா என்பாரே!** - என்று அற்புதமாக விளக்கி யுள்ளாள், ஆண்டாள்!

இத்திருமொழியில் எம்பெருமானைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'மன்னு பெரும் புகழ் மாதவன், மாமணி வண்ணன் மணிமுடிமைந்தன், என்பவள வாயன்' என்றும் 'வெள்ளி விளி' சங்கு இடங்கையில் கொண்ட விமலன், 'என் வேங்கடவன்' என்றும், 'இராவணன் மேல் சரமாரி தாய்தலை அற்று அற்று வீழத் தொடுத்த தலைவன்' - 'என் கருமாணிக்கம்' என்றும், 'வைகுந்தன்',

'பொன் புரை மேனிக் கருளக் கொடி உடைப்புண்ணியனை' என்றும், 'வில்லிபுத்தூர் உறைவான்' - உலகளந்தான் என்றும், 'எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும் இருடீகேசன்' - 'என் தத்துவனை' என்றும், 'பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வான்' - 'ஆழியும் சங்கும் ஒண்தண்டும் தங்கிய கையவனை' என்றும் - 'சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச் சதுரன் பொருத்தம் உடையன்' - 'திருமாலை' என்றும், 'பைங்கிளி வண்ணன் சிரீதரன்' - 'சங்கொடு சக்கரத்தான்' என்றும், 'அன்று உலகம் அளந்தானை' - 'நாராயணனை' என்றும், 'விண் உற நீண்டு அடி தாவிய மைந்தனை' - 'கண்ணுற என் கடல் வண்ணனை' - 'நமோ நாராயணாய' என்றும் - ஆண்டாள் நெஞ்சுருகிப் பாசுரங்களில் பாடுகின்றாள்.

ஆண்டாள், இத்திருமொழியில் எம்பெருமானை எதிர் நோக்கித் தான்படும் துயரங்களைக் குயிலிடம் கூறும்பொழுது - எம்பெருமானை விரும்பி அவனைக் காணாமல், நான் உடல் இளைத்ததால், என் கைவளையல்கள் கழன்று விழுந்து விட்டன! இது, என்ன சரியான முறையாகுமா?' என்ற பொருளில் - 'உகந்தது காரணமாக என் சங்கு இழக்கும் வழக்கு உண்டோ?' என்றும் -

எம்பெருமான் தன்னை என்னிடம் காட்டாமல், என் நெஞ்சில் நுழைந்து என்னை நைந்து போகுமாறு செய்து, ஒவ்வொரு நாளும் என்னை உயிரோடு வைத்து வதைத்து உயிரும் உடலும் கூத்தாடி நடுங்கும் நடுக்கத்தைக் கண்டு களிக்கின்றானே? என்ற பொருளில் - எனக்கு உருக்காட்டான்! உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும் உயிர் பெய்து, கூத்தாட்டுக் காணும்! என்றும் -

எம்பெருமான், இன்னும் வராமல் இருக்கின்றானே! என்ற பொருளில் 'வர எங்கும் காணேன்!' என்றும் -

எம்பெருமானை நான் நினைத்து நினைத்து எலும்புகள் உருகிவிட்டன! என் நெடிய விழிகள், இமை மூடாமல் தவிக்கின்றேன்! நெடுங்காலமாகப் பிரிந்து வாழும் துன்பக் கடலில் மூழ்கி, இத்துன்பத்திலிருந்து மீண்டு எழுந்து வருவதற்கு - வைகுந்தன் என்ற தோணி கிடைக்காமல் தடுமாறி உழல்கின்றேனே! காதலரைப் பிரிந்து துன்ப நோயின் தன்மையை நீயும் அறிவாய் அல்லவா?' என்ற பொருளில் -

'என்பு உருகி இனவேல நெடுங்கண்கள் இமை பொருந்தா! பல நாளும் துன்பக் கடல் புக்கு, வைகுந்தன் என்பது ஓர் தோணி பெறாது உழல்கின்றேன்! அன்புடையாரைப் பிரிவு உறுநோயது நீயும் அறிதி!' என்றும் -

எம்பெருமானின் பொன் அடிகளைக் காணும் ஆசையினால் என் கயல் விழிகள் உறங்காமல் தவிக்கின்றன! என்ற பொருளில் - 'பொன்னடி காண்பது ஓர் ஆசையினால் என் பொரு கயற் கண் இணை துஞ்சா!' என்றும் -

முத்துப் போல் வெண்நகை காட்டும் என் சிவந்த வாயிதழ்களும், முலைகளும் தம் அழகை இழக்கும் நிலையில் எம்பெருமான் எனக்குத் துன்பம் தந்துவிட்டான்!' என்ற பொருளில் - 'முத்து அன்ன வெண்முறுவல் செய்ய வாயும், முலையும் அழகு அழிந்தேன் நான்!' என்றும் -

'எம்பெருமானைப் புணரும் ஆசையால் என் கொங்கைகள் விம்மிப் பெருத்துக் குதூகலம் கொண்டு, என் உயிரை உருக்கிவிட்டன!' என்ற பொருளில், 'புணர்வது ஓர் ஆசையினால் என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ஆவியை ஆகுலம் செய்யும்!' என்றும் -

'எங்கள் வீட்டில் இருந்து கொண்டு, நானும் எம்பெருமானும் எங்களுக்குள்ளாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை, நானும் அவனும் தான் அறிவோம்!' என்ற பொருளில் - 'நாங்கள் எம் இலிருந்து ஒட்டிய கச்சங்கம் நானும் அவனும் அறிதும்!' என்றும் -

எம்பெருமானின் பாசவலையில் நான் அகப்பட்டுக் கிடக்கின்றேன் என்ற பொருளில் - 'பாசத்து அகப் பட்டிருந்தேன்!' என்றும் -

'எம்பெருமானை விரும்பித் துன்பப்படும் இவ்வேளையில் தென்றலும், நிலவும் என்னைப் பிளந்து கொண்டு என் நெஞ்சை அறுத்துத் துன்புறுத்தும் நீதியற்ற செயலை நான் அறியேனே? நீயும் இச்சோலையில் இருந்து என்னைத் துன்புறுத்தாதே, குயிலே!' என்ற பொருளில் - 'தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை நலியும் முறைமை அறியேன்' என்றும், இக்காவில் இருந்திருந்து, என்னைத் தகைத்தாதே! - என்றும் -

எம்பெருமான் மீது தான் கொண்டுள்ள தணியாத, தீராத ஆசை உணர்ச்சிகளை, காதல் வேட்கை கரை கடந்து பொங்கி அலை கடலாய் ஆர்ப்பரிக்கும் நிலையில் - பாசுரப் பிரபந்தங் களாகப் பாடியுள்ளாள், ஆண்டாள்!

இத்திருமொழியில் திருவேங்கடவன், சக்கரவர்த்தித் திருமகன் இராமன், பரமபதவைகுந்தன், வில்லிபுத்தூர் வடபத்திரசாயி, திருப்பாற்கடல் க்ஷீராப்திநாதன், உலகளந்தான், நாராயணன் முதலிய திவ்யதேச எம்பெருமான்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

மேலும் ஆண்டாள் நாச்சியார் குயிலிடம் எம்பெருமானைக்கூவி அழைக்கும் பொழுது பலவகைப் பட்ட மனோதத்துவ ரீதியில் குயிலிடம் பேசினாள்!

முதலில் குயிலைப் புகழ்ந்தாள்!

பிறகு 'மழலை மொழிகளைப் பேசி, அழைத்துவா!' என்றாள்! பிறகு 'என் துன்பம் தெரிந்த குயிலே! அவன் வருமாறு கூவு' என்றாள்; பிறகு 'நீ எம்பெருமானை வருமாறு கூவினால், என் வளர்ப்புக் கிளியை உனக்குத் தோழமை கொள்ள வைப்பேன்' என்று கெஞ்சினாள்!

பிறகு 'நீ கூவி, எம்பெருமான் வந்துவிட்டால் அதற்கு நன்றிக் கடனாக உன் காலடியில் வணங்கிக் கிடப்பேன்!' என்று மிகமிகக் கெஞ்சினாள்.

பிறகு, 'நீ, அவன் வருமாறு கூவினால், எனக்கு நீ தர்மம் செய்த நிலை அடைவாய்!' என்று தானமாகக் கேட்டுக் கெஞ்சினாள்.

பிறகு, 'அவன் இங்கு வந்த பிறகு உன் கண் முன்பு, நான் அவனைப் படுத்தும் பாட்டை, நீயே பார்!' என்று சொல்வதைப் போல தன் பேதநிலையை மிரட்டிக்காட்டினாள்! குயில் எம்பெருமானை அழைத்து வராவிட்டால் தான் குயிலைத் துன்புறுத்தப் போவதைக் குறிப்பாகப் பேதம் காட்டியும் பேசினாள்.

பிறகு ஒரே கருத்தை இரண்டு வகையாக 'ஒன்று நீ அவனை இங்கு வருமாறு செய்ய வேண்டும்! அல்லது கழன்று விழுந்த என் வளையல்கள் என் கையில் பொருந்துமாறு செய்ய வேண்டும்!' என்று சுற்றி வளைத்தும் பேதம் காட்டிக் குயிலிடம் ஆணையிட்டாள்!

பிறகு இறுதியாக 'நீ, அவன் வருமாறு கூவாமற் போனால், உன்னைச் சோலையிலிருந்தே விரட்டி அடித்துத் துரத்தி விடுவேன்!' என்று தண்டனை தருவதாகக் கூறினாள்.

இங்ஙனம், ஆண்டாள் - சாம, தான, பேத, தண்ட உபாயங்களோடு கூறியிருப்பதை -

'பூமலர் கோதிக் களித்திசை பாடும் குயிலே!' - 'உன் காதலியோடு உடன் வாழ்குயிலே!' என்றும் - 'என் கோலக் கிளியை உன்னோடு தோழமை கொள்ளுவன் குயிலே!' என்றும் - 'என் தத்துவனை வரக் கூகிற்றியாகில், தலையல்லால் கைம்மாறிலனே!' என்றும் - ' நீ சாலத் தருமம் பெறுதி!' என்றும்

- 'அவனை நான் செய்வனகாணே!' என்றும் - 'இன்று நாராயணனை வரக் கூவாயேல், இங்குத்தை நின்றும் துரப்பன்!' என்றும் பாடியுள்ள நாச்சியாரின் திருமொழிப் பிரபந்தப் பாசுரவரிகள், உணர்ச்சி மயமானவை! மனோதத்துவ தர்க்க ரீதியானவை!

தத்துவசாரம் பொதிந்த ஐந்தாவது நாச்சியார் திருமொழியில், ஆண்டாளால் குறிப்பிடப்பட்டுள்ள குயிலின் சிறப்பை நன்கு உணர்ந்த ஆழ் மனதில் விளைந்த தாக்கத்தாலேயே, - மகாகவி பாரதியும் அண்மைக் காலத்தில் 'குயில் பாட்டு' என்ற தத்துவப் படைப்பை உருவாக்கி இருத்தல் வேண்டும்.

ஐந்தாம் திருமொழியில் எம்பெருமானை அழைத்து வருமாறு குயிலிடம் கூவச் சொன்ன ஆண்டாள், 'எப்பொழுது எம்பெருமான் தன்னை மணம் செய்து கொள்ள வருவானோ?' என்ற சிந்தனையில் ஆழ்ந்து ஈடுபட்டாள்.

எம்பெருமான் தன்னைத் தேடி வராமைக்குரிய காரணம், தன்னிடம் ஏதேனும் இருக்குமோ என்றுகூடச் சிந்தித்தாள்!

உலகியலில் - ஒத்த நாயகியை, அவளுக்குகந்த நாயகன் மணந்து கொள்ளும் நிலையையும், ஆண்டாள் தனக்குள்ளாக நினைத்துப் பார்த்தாள்.

ஒரு நாயகி, பருவமடைந்ததுமே தனக்கேற்ற நாயகன் எவ்வாறு அமைய வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டிருப்பாள்!

அத்தகைய நாயகன், தன்னைப் பெண் கேட்டு வரும்பொழுது, அவன் நாயகியின் பேரழகில் முதலில் ஈடுபடுவான்! பிறகு அவள் இதயத்திலுள்ள எண்ணங்களையும் ஆராய்வான்!

பிறகு, தன் ஒப்புதலைத் தெரிவித்து, மணநாளை முடிவு செய்துவிட்டுப் போய் விடுவான்!

நாயகனுக்கு நாயகி பிடித்துப் போய்விட்டாலும் - நாயகிக்கு நாயகனை மணந்து கொள்ளும் சம்மதம், ஆழ்மனதில் ஏற்பட வேண்டாமா?

அதற்காகத்தான், நாயகன் மணவிழாவிற்கு வரும்பொழுது - நாயகிதான், முதன்முதலில் நாயகனுக்கு மாலையிட்டு வரவேற்றுத் தன் உடன்பாட்டை அனைவரும் அறியுமாறு தெரிவித்துவிட வேண்டும்!

பிறகுதான், திருமணச் சடங்குகள் நடைபெற - நாயகன் நாயகிக்குத் திருப்பூட்டித் தன் மனைவியாக அவன் ஏற்றுக் கொள்வான்! இதுதானே, உலகியல் முறைமை மரபு?

இம்மரபு அணுவளவும் பிறழாமல் ஆண்டாள், கோதையாக விளங்கிய, சின்னஞ்சிறு பருவத்திலேயே எம்பெருமானிடம் தன் மனதைப் பறி கொடுத்தாள்!

எம்பெருமானே தனக்கு நாயகன் என்பதையும் முடிவு செய்தாள்!

எம்பெருமானும், கோதையின் உள்மனதில் வளர்த்து வந்த தன்னைப் பற்றிய நாயக நினைவுகளை உணர்ந்தான்!

கோதை, தன் நாயகனை மணந்து கொள்ள முடிவெடுத்து விட்டமையைத் தெரிவிக்கும் எண்ணத்திலேயே, எம்பெருமானுக்குச் சூட்டுவதற்காகத் தொடுக்கப்பட்ட பூமாலைகளைத் தன் கழுத்தில் அணிந்து அழகு பார்த்துப் பிறகு தன் தந்தை பட்டர்பிரான் வழியாக ஆலிலைமேல் பள்ளி கொண்ட எம்பெருமானின் கழுத்திலும் அணிவித்து, சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாக, 'நாயகன் சொல்லை அப்படியே கேட்டு அதையே திரும்பத் திரும்பச் சொல்லி வாழும் சூடிக் கொடுத்த கிளியாக' மாறிவிட்டாள்!

கோதை, ஆண்டாளாகவும் மாறிய பிறகு - தான் நினைத்தனவெல்லாம் ஈடேற, எம்பெருமானே வடிவமான மார்கழி மாதத்தில் - மார்கழி நீராடும் நோன்பையும் நோற்று - திருப்பாவைப் பாசுரங்களையும் பாடிக் கொடுத்த பாவையாகவும் மாறி விட்டாள்!

மார்கழி நோன்பு முடிந்ததும், தன் நாயகன் தன்னைத் தேடி வராமையால், தன்னையும் தன் நாயகனையும் இணைத்து வைக்குமாறு - தை மாதத்தில் மன்மதனைத் தொழுது நோன்பு நோற்று முதல் திருமொழியில், தன் சரீரம் எம்பெருமானுக்கே!- என்று பாசுரம் பாடினாள்!

பிறகு, கண்ணனே தன்னைத் தேடி வந்து தான் கட்டிய சிற்றிலைச் சிதைத்து, ஆண்டாளின் நெஞ்சில் ஊடலை விளைவித்துத் தன்னைக் கூடிச் சென்று மறைந்துவிட்டதாகச் 'சிற்றில் சிதையேல்' என்ற திருமொழிப் பாசுரங்களைப் பாடி உருகினாள்!

பிறகு தன் பிறவிப் பயனை ஆத்மார்த்தமாக எம்பெருமான் தனக்கு உணர்த்திய நிலையில் - கண்ணன் கோபியரின்

ஆடைகளைக் கவர்ந்த லீலையை மூன்றாம் திருமொழிப் பாசுரங்களாகப் பாடித் தன் நாயகியின் உள்ளத்தில் நாயகனின் உள்ளத்தை உணர்ந்து கொண்டதைக் தெரிவித்துவிட்டாள்!

பிறகு கூடலிழைத்துப் பார்த்து, ஜீவாத்மா பரமாத்மாவுடன் சங்கம நிலையில் புணர்ச்சி எய்திவிட்ட தன்மையை விளக்கி, நான்காவது திருமொழியாகக் கூடலிழைத்தல் பாசுரங்களைப் பாடிவிட்டாள்!

நாயக நாயகியர்தம் உடலோடு உடல் கூடிக் கலந்து சிற்றின்ப நிலைகளையும் முடித்துக் கொண்டு - ஆத்மாவும் பரமாத்மாவோடு சங்கமப் புணர்ச்சி அடைந்துவிட்ட பேரின்ப சுகானுபவத்தையும், ஆண்டாள் - தனக்குள்ளாக அடைந்து விட்டாள்!

நான்காம் திருமொழிப் பாசுரங்கள் வரையிலும், தன்னை மறந்து எம்பெருமானிடம் லயித்திருந்த ஆண்டாள் - சரீர சுகானுபவமாகிய ஊடலும் .கூடலும், ஆத்மபரமாத்ம சங்கமப் பேரின்ப சுகானுபவமாகிய உணர்தலும் புணர்தலும் ஆகிய நான்குமே தனக்குள்ளாக ஏற்பட்ட கற்பனைகளாக உணர்ந்து வருந்தினாள்! ஏன் இன்னும் தன் நாயகன், தன்னைத் தேடி மாலை சூட்டி மணந்து கொள்ள வரவில்லை?

உடனே வேனிலில் தன் நாயகனை அழைத்து வரப்போகும் மன்மதனின் அறிவிப்புக் கருவியாகக் கூவிக் கொண்டிருக்கும் குயிலின் வழியாக - எட்டெழுத்துத் திருமந்திரமாகிய நாராயணா என்று கூவிக் கூவித் தன் மணவாளனை அழைத்து வருமாறு சாம, தான, பேத, தண்ட உத்திகளால் ஆண்டாள் ஐந்தாம் திருமொழிப் பாசுரங்களைப் பாடிப் புலம்பினாள்!

ஏன்? இன்னும் தன் நாயகன், தன்னைத் தேடி வரவில்லை?

சூடிக் கொடுத்த நாச்சியார், எம்பெருமான் இன்னும் வரப்பெறாத ஏக்கத்தால் உணவை மறந்தாள்! உறக்கத்தை இழந்தாள்! பகலும், இரவும் ஒன்றாகிவிட்டன! நினைவும், கனவும் ஒன்றாகிவிட்டன!

இத்தகைய மன நிலையில் தன் மெய் மறந்து ஏங்கித் தவித்துப் புலம்பி அரற்றும் செயலற்ற ஆண்டாள் நாச்சியாரின் கனவில், எம்பெருமான் திருவரங்கத்து அழகிய மணவாளன் அவளைத் தேடி வந்து முறைப்படி மணம் செய்து கொள்வதாகக் கனவு கண்டாள்!

தான் கனவில் கண்டு அனுபவித்த திருமண சுகானுபவங்களை, **ஆறாவது திருமொழிப்** பிரபந்தப் பாசுரங்களாகப் பாடித் தன் திருமண சுகானுபவக் காட்சிகளை - நாமும் மனக் கண்ணில் கண்டு சுகானுபவம் பெறும் நிலையில், அதி அற்புதமான கவித்துவ ஓவியக் காட்சிகளாக, மாறாத இளமை குன்றாத மங்கல மணவிழாவைக் காட்டிவிட்டாள், நாச்சியார்!

மனிதப் பிறவி எடுத்த கோதை நாச்சியார், பஞ்சபூத சரீர நிலையில் ஜீவாத்மாவோடு, தன்னை எம்பெருமான் அழகிய மணவாளன் மணந்து கொள்ளும் மங்கலச் சடங்குகள் நிறைந்த மணவிழாக் காட்சிகளை, நாமெல்லாம் - நம் ஊனக் கண்களால் கண்டு களிப்படைய முடியுமா?

ஆண்டாள் திருமணக் காட்சிகளைக் காண நமக்கெல்லாம் ஆயிரமாயிரம் கண்கள் வேண்டும்! வாயார வாழ்த்த, நமக்கெல்லாம் பத்தாயிரக் கணக்கில் வாய் வேண்டும்!

நாயகன் பரம புருஷன் மீதும், ஆண்டாள் நாச்சியின் மீதும் மங்கல அக்ஷதை தூவப் பல கோடி, கைகள் வேண்டும்! நம்மையெல்லாம் பிரம தேவன் இந்நிலையிலா - படைத்திருக்கின்றான்? இல்லையே!

அதற்காகவே - ஆண்டாள் நாச்சியார், ஆறாவது திருமொழிப் பாசுரங்களைப் பாடினாளோ, என்னவோ?

நாமெல்லாம் ஆண்டாளின் மங்கல மணவிழாக் காட்சிப் பாசுரங்களை இதயத்தோடு சுவைத்ததற்கும் ஒரு பயன் வேண்டுமல்லவா?

அதையும்கூட - 'நன்மக்களைப் பெற்று மகிழ்வாரே!' என்று நல்ல மக்கட் செல்வத்தை நாம் பெறுவோம் என்பதையும் - இத்திருமொழியின் இறுதிப் பாசுரத்தின் முடிவில் கூறிவிட்டாள்!

ஆண்டாள் கல்யாண விழாவை, பாசுரங்களுக்குள் கண்டு மகிழ்ச்சி பொங்கிப் பூரிக்கும் நமக்கெல்லாம் - மங்கல மணவிழா நாயக நாயகியர் அன்புடன் தந்து அனுப்பிவைக்கும் திருமண நினைவுப் பரிசுதான் - நன் மக்களைப் பெற்று மகிழும் பரமாத்ம நாயக நாயகியரின் வரம்!

உலகியலில் திருமணக் கனவு கண்டால் அமங்கலம் நேரிடும் என்றுதான் சொல்வார்கள்!

ஆனால், ஆண்டாள் கண்ட கனவோ, மங்கலமாக முடிந்தமை - கனவு சாத்திரத்திற்கே ஒரு சவால்! கனவில் மணமங்கலக்

காட்சியைப் பார்த்துவிட்டு, பிறகு நினைவில் பிணக்கோல அமங்கலங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் அனுபவ உண்மைகளுக்கே - ஆண்டாள் கண்ட மங்கல மண விழாக் கனவு - ஒரு புரியாத புதிர்!

ஆண்டாள், தனக்கு மங்கல மணவிழா நடப்பதாகக் கண்ட கனவு - கனவு நூல்கள் கூறுவதைப் போல அமங்கலமாக முடிவுறாமல், மங்கல மணக் கோலத்தையே எம்பெருமானுடன் இணைத்துத் தந்து முடிந்துள்ளதே, மற்றவர்கள் காணும் திருமணக் கனவுகள் மட்டும் ஏன் மரணம் போன்ற அமங்கலத்தை உணர்த்தும் அறிகுறியாக முடிந்துவிடுகின்றன, இது எப்படி?

ஆண்டாளும், நாமும் - ஒரு தன்மையராகிவிட முடியுமா?

அது மட்டுமல்ல - ஆண்டாள் பிறந்த நாள்முதல், வளர்ந்த நாள்முதல், பருவமடைந்த நாள்வரை - அவள் கொண்டிருந்த பரமாத்ம பரம புருஷ எம்பெருமானுடன் சங்கமமாகும் ஒரே குறிக்கோளில்தான் அவள் நினைவுகள் தவழ்ந்தன! கனவுகளும் தோன்றின! கனவும், நினைவும் ஒன்றான பிறவி அல்லவா, ஆண்டாள்?

ஆண்டாளின் நிலையில், நாமும் - பரமாத்ம நாயகி பக்தி உணர்வுடன் வளர்ந்து, வாழ்ந்து வந்தால் - நமக்கும்கூட திருமணக் கனவுகள், மங்கல நிகழ்ச்சிகளாகத் தானாகவே முடிவடையக் கூடும்!

நாச்சியார், கோவிந்தனை மணப்பதாக ஆறாம் திருமொழியில் பாடியுள்ள பிரபந்தப் பாசுரங்கள் - நாச்சியார் திருமொழிக ளிலேயே நாயகமாகத் திகழ்பவை!

கோபியெனக் கொண்டையிட்ட நாச்சி, கண்ட கனவில், தான்கண்ட தன் கனவுக் காட்சிகளைத் தன் தோழிக்கு எடுத்துரைக்கும் பாங்கில் பாசுரங்கள் அமைந்துள்ளன.

அனைத்துப் பாசுரங்களின் முடிவிலும், தன்னைப் பட்டர்பிரான் கோதை என்று பெரியாழ்வாரைத் தன் தந்தையாராகக் குறிப்பிட்டுப் பிரபந்தம் பாடும் ஆண்டாள் - மங்கல மணவிழா நடைபெறும் காட்சிகளில் மட்டும், தன் தந்தையார் பட்டர்பிரான், தன் மகள் கோதையை எம்பெருமானிடம் தண்ணீர் விட்டுத் தாரை வார்த்துத் தந்ததாக எங்கும் குறிப்பிடவில்லையே, ஏன்?

கோதை, தானே பிறந்தவள்! தன் விருப்பப்படி வளர்ந்தவள்! தன் நாயகனைத் தானே தனக்குள் தேர்ந்தெடுத்தவள்!

சற்றும் அச்சப்படாமல், எம்பெருமானுக்குரிய பூமாலைகளைத்தானே சூடிக் கொடுத்து எம்பெருமானுக்குச் சூட்டச் செய்த பாசத் துணிச்சலைப் பக்தியாகவும், நாயகி அந்தஸ்தாகவும் கருதியவள்! சுயமாகப் பிறந்து, சுயமாக வளர்ந்து, சுயமாக முடிவெடுத்து, சுயமாக மணக்கோலம் கொள்ளும் கோபி ஆண்டாளை - பட்டர்பிரானால் வளர்க்கப்பட்ட தந்தை பாசம், அதே தந்தை ஞானம் தந்தபோது தவழ்ந்த ஆசானின் பாசம், தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும் அவளுக்கு அப்பனாக மாறி நின்ற ஞானப் பாசம் - எல்லா வற்றையும் தன் இதயத்திலிருந்து தூர எடுத்தெறிந்து வீசிவிட்டு, மனம் ஒப்பி - எப்படி இந்த அருமை மகளைத் தனக்கு எந்தவிதத் தொடர்புமே இல்லை என்று அக்னியின் முன்பு சத்தியம் செய்து, அவள் மணவாளனின் கையில் தன் கையில் தண்ணீர்விட்டுக் கழுவித் தாரை வார்த்துத் தரமுடியும்?

அதனால்தான், ஆண்டாள் தன் தந்தை தாரை வார்த்துத் தந்துவிட்டுப் பின் மனம் கலங்கிக் குமுறி அழும் காட்சியை - இத்திருமொழியில் காட்டவில்லை!

ஆனாலும், இத்திருமொழியின் இறுதியில் தன்னை யாரென்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் பொழுது - தந்தையிடம் கொண்ட பாசத்தையும், வளர்த்து ஆளாக்கிய நன்றியையும் மறந்து விடாமல் - 'வேயர் புகழ் வில்லிபுத்தூர் கோன் கோதை' என்று குறிப்பிடுகின்றாள், ஆண்டாள்.

ஆண்டாளிடம் பரமபுருஷ நாயகனின் பரமாத்மப்பாச உணர்ச்சி மேலோங்கி இருந்தாலும் - அனைத்துப் பாசுர முடிவிலும் தான்பிறந்த வில்லிபுத்தூர் மண்ணை மறக்கவில்லை! வளர்த்த தந்தை, பட்டர்பிரானையும் மறக்கவில்லை!

பெற்ற தந்தையின் பெயரையோ அல்லது கொண்ட கணவனின் பெயரையோ - பெண்கள் தங்கள் பெயருக்கு முன்பாக அமைத்துக் கொள்ளும் அறிமுக விலாச நிலையையே, தன் பாசுரப் படைப்புள் தானே உதாரண நாயகியாகத் திகழ்ந்து அறிமுகம் செய்தவள் அல்லவா, பட்டர்பிரான் கோதை?

எப்பேர்ப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய பெண் பிறவியை எடுத்து, எப்படிப்பட்ட மகாபரம புருஷனை நாயகனாகப் பெறும் மகா பாக்கியம் பெற்றிருந்தாலும், எந்தப் பெண்ணாலும் - தான் பிறந்த மண்ணையும், வளர்த்து பாசம் காட்டிய பெற்றோரையும் எந்தக் காலத்திலும் மறந்துவிட முடியாது என்ற பெண்மையின் பெருந்தன்மைப் பண்பை, பக்தி மார்க்கத்திலும் - ஆண்டாள் நிலை நாட்டிவிட்டாள்!

இதோ, ஆண்டாள் கண்ட கனவின் மங்கல மணவிழாக் காட்சிகள் பிரபந்தப் பாசுரத் திருமொழிகளின் வடிவத்தில் ஆரம்பமாகி விட்டன!

'ஆயிரம் யானைகள் தன்னைச் சூழ்ந்துவர, நம்பி நாராயணன் என்னை மணந்து கொள்வதற்காக வலப்புறமாக நடந்து வருகின்றான்!

அவன் வரும் வழியெல்லாம் பொன்னால் ஆன பூரண கும்பங்களை வைத்து வரவேற்பதோடு, அனைவரும் ஊரெங்கும் தோரணங்கள் கட்டி வைத்துள்ளனர்!' இப்படி, முதல் கனவு.

அபயக் குரல் கொடுத்த கஜேந்திர யானைக்கு அபயம் தந்து யானையின் துன்பத்தைத் துடைத்த, எம்பெருமான், கோதை ஆண்டாளின் துன்பத்தையும் துடைத்து நாயகியாக ஆட்கொள்ளக் கால்நடையாக நடந்து வருகின்றான்!

கஜேந்திர யானைக்கு அபயம் தந்த நன்றியை மறவாமல், ஆயிரக் கணக்கான யானைக் கூட்டங்கள் நாராயணனைச் சூழ்ந்து வெற்றி நடையிட்டு வேகமாக வருகின்றன!

'நாளை தனக்கு மணநாள் என்று செய்த ஒப்பந்த உறுதியின்படியே, இன்று பாக்கு மரங்கள் நடப்பட்ட பந்தரின் கீழே - நரசிம்மன் என்றும் மாதவனென்றும் கோவிந்தன் என்றும் பெயர் கொண்ட காளை ஒருவன் உள்ளே நுழைவதை நான் காண்கிறேன்!' - இது, கனவின் இரண்டாவது காட்சி.

'தேவலோகத்திலிருந்து தேவேந்திரன் உட்பட எல்லாத் தேவர்களும் இத்திருமணத்திற்கு வந்து, அவர்களுக்குள் சம்பந்திகள் முறைகளை நியமித்துக் கொண்டு - என்னை மணப்பெண்ணாக முடிவு செய்து சம்பந்தம் செய்து கொண்டார்கள்!

பிறகு அவர்கள், மங்கல மந்திரம் முழங்கினார்கள்! என் நாயகனின் உடன் பிறந்தவளும், என் நாத்தனாருமாகிய துர்க்கை - எனக்குத் திருமணக் கோடிப் புடவையை உடுத்திவிட்டுவிட்டு, மணமாலைகளையும் சூட்டி விடுவதையும் நான் காண்கிறேன்! இவ்வளவையும், எனக்குள் உணர்கிறேன்!' இது, கனவின் மூன்றாவது காட்சி.

'சிற்றேவலும் குற்றேவலும் செய்யும் பார்ப்பன ஒழுக்கச் சீலர்கள், நான்கு திசைகளினின்றும் தீர்த்த நீரைக் கொண்டு வந்து எங்கெங்கும் தெளித்து, மந்திரமங்கலச் சொற்களால் வாழ்த்தி

எங்கெங்கும் தெளித்து, மந்திரமங்கலச் சொற்களால் வாழ்த்தி மங்களாசாசனம் செய்து, பரம புண்ணியனாகிய நாயகனோடு, என்னை ஒன்றாகச் சேர்த்துக் கையில் கங்கணம் கட்டுவதையும் - நான் காண்கிறேன்!' இது, நான்காவது காட்சி.

'கதிரொளி மிக்க தீபங்களையும், கலசங்களையும் ஏந்தியவராய் இள மங்கையர் எங்கள் இருவரையும் எதிர்கொண்டு வரவேற்க - வடமதுரை மன்னவனாம் என் நாயகன் காலில் பாதுகைகளை அணிந்து கொண்டு, நிலமெல்லாம் அதிர அதிர மங்கல மணமேடைக்குள் நுழைகின்றான்! இதையும் நான் காண்கிறேன்!' இது ஐந்தாவது காட்சி.

மத்தளங்கள் கொட்டி முழங்குகின்றன! வலம்புரிச் சங்குகள், நின்று நின்று, விட்டு விட்டு ஊதுகின்றன! முத்து மாலைகள் நிரம்பித் தொங்கிக் கொண்டிருக்கும் பந்தலின் கீழ் என் மைத்துனன் நம்பி மதுசூதன நாயகன் வந்து, என் கைத்தலம் பற்றியவனாய் நின்று கொண்டிருப்பதையும் நான் காண்கிறேன்!' இது - ஆறாவது காட்சி.

**மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றுஊத,**
**முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ் –**
**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்! தோழீ நான்!** – இது ஆறாவது நாச்சியார் திருமொழியில் - ஆறாவது பிரபந்தப் பாசுரம்!

'மறைவேதம் ஓதும் வாய்மையாளர்கள் மந்திர வேதம் முழங்குகின்றார்கள்!

பின் மந்திர முறைப்படி தர்ப்பைப் புல்லாகிய நாணலைச் சதுரமாக அமைத்து ஹோமப் பொருள்களாகிய சமித்துக்களை இடுகின்றார்கள்.

ஹோமத்தீ எரிகின்றது! அப்பொழுது களிறன்ன என் நாயகன், என் கையைப் பற்றிக் கொண்டு தீயைச் சுற்றிக் கொண்டு வலப்புறமாக வருவதையும், நான் காண்கின்றேன்! இது ஏழாவது காட்சி.

'இம்மையிலும், ஏழேழ் பிறவிகளிலும் எனக்குப் பற்றுக் கோடாக இருப்பவனும், நம்மை தனக்குள் உடையவனும் ஆகிய என் நாயகன் நாராயணன் நம்பி, சிவந்த தன் இடது கையால் என் வலது காலைப் பிடித்துப் பாதத்தை அம்மியின் மீது எடுத்து வைப்பதையும் நான் காண்கிறேன்!' இது எட்டாவது காட்சி.

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!' என்று மார்கழி இருபத்தொன்பதாம் பௌர்ணமி நாளில் திருப்பாவைப் பாசுரம், பாடியவள் ஆண்டாள்! அவள் திருவாய் மொழிந்த நிலையிலேயே, சகல ஜீவாத்மாக்களும் எம்பெருமானின் பாத தாமரைகளில் இறுதியில் சங்கமம் ஆகின்றன!

அப்படிப்பட்டவன், தன் நாயகன் ஆகின்றான் என்பதை மறக்காத நிலையில் - சகல ஜீவாத்மாக்களும் சங்கமம் ஆகும். பாதகமலங்களைக் கொண்ட தன் நாயகன், இம்மங்கல மணவிழாவில் - தன்னுடைய பாதத்தைத் தன் கையில் பற்றி எடுத்து - அம்மி மிதிக்கச் செய்தான்!' என்று அதி அற்புதமாக-

**'இம்மைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் பற்று ஆவான்**
**நம்மை உடையவன் நாராயணன் நம்பி**
**செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன்! தோழீ, நான்!** என்று பாசுரம் பாடியுள்ளாள்.

'என் சகோதரர்கள் வந்து ஹோமத்தீயை நன்கு கொழுந்து விட்டு எரியச் செய்தார்கள்! பிறகு, அத்தீயின் முன்பு என்னை நிற்க வைத்து, அச்சுதனாகிய என் நாயகனின் கைமீது என் கையை வைத்துப் பொரிகளை அள்ளிப் பரிமாறிய காட்சி யையும் நான் காண்கிறேன்!' இது ஒன்பதாவது காட்சி.

நாயகனின் கைதான் எப்பொழுதும் உயர்ந்திருக்கும்! ஏனைய அனைவர் தம் கைகளும், நாயகனின் கையிலிருந்து வெளிப்படும் அருளை எதிர் நோக்கி, இரந்து தாழ்ந்திருக்கும்!

ஆனால், இம்மங்கல மண விழாவில் - என்றும் தாழாத நாயகனின் கை மீது, தன் கை வைக்கப்பட்டு உயர்ந்திருப்பதை அற்புதமாகக் காட்டியுள்ளாள், ஆண்டாள்.

'குங்குமக் குழம்பையும், அதன் மீது சந்தனத்தையும் வாரி அள்ளிப் பூசிக் கொண்டு யானையின் மீது தன் நாயகனோடு அமரச் செய்து திருமண ஊர்வலம் நடைபெறுகின்றது!

'மங்கல வீதிகளிலெல்லாம் ஊர்வலம் வந்து முடிந்தபின்பு - எங்கள் இருவரையும் திருமஞ்சன நீராடச் செய்கின்றார்கள்! இதையும் நான் காண்கின்றேன்!' இது பத்தாவது காட்சி.

ஆண்டாள் நாச்சியார் கண்ட திருமணக் கனவுக் காட்சிகளாக உள்ளம் உருகிப் பாடிய ஆறாவது திருமொழியில் -

நாயகன் நாயகிக்குத் திருப்பூட்டும் காட்சியோ, அல்லது - நாயகியின் தந்தை, தன் மகளை நாயகனுக்குத் தாரை வார்த்துத் தரும் காட்சியோ, அல்லது - நாயக நாயகியர் மாலைகளை மாற்றிக் கொள்ளும் காட்சியோ, அல்லது - மணவிழாவிற்கு வந்திருப்போர் அக்ஷதையும் பூவும் சொரிந்து வாழ்த்தும் காட்சியோ, அல்லது அம்மி மிதித்த பின்பு அருந்ததி காட்டப்படும் காட்சியோ - எதுவுமே, இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது! காரணம் -

ஆண்டாள், சூடிக் கொடுத்த காலத்திலேயே எம்பெருமானைத் தன் இதயத்தில் பூட்டி வைத்து விட்டாள். அவளுக்கு நாயக விலாச அறிகுறிச் சின்னமாக, ஒரு திருப்பூட்டும் சடங்கு, தேவையா?

பரம புருஷனுக்குத் தண்ணீர் விட்டுத் தாரை வார்க்கப்படும் பெண், தாரை வார்த்த பின்பே நாயகனுக்குச் சொந்தமாக வேண்டும்! எப்பொழுதோ, தேவியின் அந்தஸ்தைப் பெற்று விட்ட ஆண்டாளை, யாரால் தாரை வார்த்துத்தர முடியும்? அவள், தன்னைத் தானே - தன் நாயகனுக்கு எந்தக் காலத்திலேயே தாரை வார்த்து அர்ப்பணமாகத் தந்துவிட்டாளே?

கோதையாக இருந்த காலத்திலேயே மாலைகளைச் சூடிக் கொடுத்துவிட்டாள் ஆண்டாள்! நாயகன் அணிந்திருந்த மாலைகளையும் சூட்டிக் கொண்டு விட்டாள். பிறகு எதற்காக நாயகனும், நாயகியும் ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொள்ள வேண்டும்? அதனால்தான் - நாயக நாயகியர், தங்களுக்குள் மாலையை மாற்றிக் கொள்ள வில்லை!

எம்பெருமானுக்கும், ஆண்டாளுக்கும் மணக்கோலத்தில் அக்ஷதையும் மலரும் இட்டு ஆசீர்வதிக்கும் தகுதி எவருக்கும் இல்லையே? அதனால்தான் அக்ஷதை இடும் காட்சியும் இடம் பெறவில்லை!

அருந்ததிக்கும் மேலான கற்பு நெறி மிக்க ஆண்டாளுக்கு, அருந்ததியைக் காட்டி, நாயகன் சடங்கு செய்யலாமா? அதனால் தான், அருந்ததி காட்டும் நிகழ்ச்சியும் இத்திருமணக்காட்சியுள் இடம் பெறவில்லை!

கோதைக்கும் கோவிந்தனுக்கும் நடைபெற்ற மணவிழாவின் மங்கலக் கனவுகள் கலைந்து - துயில் நீங்கிய ஆண்டாள், எழுந்து மணம் முடித்த புதுமணப்பெண் ஆன உணர்வுகளுடன் - அழகுக்கு , அழகூட்டிய முகப்பொலிவுடன் அமர்ந்தாள்!

*பிறகுதான், தனக்கு நடைபெற்ற அவ்வளவு திருமணச் சடங்குகளும் வெறும் கனவுகள் - என்பதை உணர்ந்து முகவாட்டம் கொண்டாள்!*

*எம்பெருமான் வருகையை, எதிர்நோக்கிக் கண்மூடி மௌனியாக, நாராயண ஸ்மரணையுடன் தன்னை மறந்தாள்!*

*அவள் மனக் கண்ணில், எம்பெருமான் நின்ற கோலக் காட்சியைத் தந்தான்!*

*நின்ற கோல நாராயணன், எட்டுக் கரங்களைக் கொண்ட அஷ்டபுயகரன்! தன் வலப்புறமுள்ள நான்கு கைகளில் சக்கரம், வாள், மலர், அம்பு ஆகியவைகளும், இடப்புறமுள்ள நான்கு கரங்களில் சங்கு, வில், கேடயம், கதை ஆகியவற்றையும் கொண்டிருந்தான்!*

*ஆண்டாள் கண்ட கல்யாணக் கனவின் முதல் காட்சியில் நாராயணனைச் சூழவந்த ஆயிரம் யானைகளைப் போன்ற ஒரு கஜேந்திர யானைக்கு, அபயம் தந்து துன்பத்தை ஒழித்தவன் தான், இந்த அஷ்டபுயகர எம்பெருமான்!*

*அஷ்டபுயகர எம்பெருமானின் பேரழகில் தன்னை மறந்தாள்! எம்பெருமானைப் பாதாதி கேசமாக, கேசாதி பாதமாக ஏறஇறங்கப் பார்த்து - எம்பெருமானின் அழகைப் பருகி ஆனந்தித்தாள், ஆண்டாள்!*

*நாராயணனின் மெய்யழகில் ஈடுபட்டவள், அவன் இருபுறமும் தாங்கியுள்ள கரங்களில் உள்ள ஒவ்வொன்றையும் மிகக் கூர்ந்து நோக்கினாள். நாராயணனின் எட்டுக் கரங்களிலும் விளங்கியவற்றுள், அவன் இடப்புறமேல் கரத்தில் தவழ்ந்து ஆனந்தமாகப் பள்ளி கொண்டு கிடந்த பாஞ்ச சன்னியச் சங்கு ஆண்டாளின் நெஞ்சை உறுத்தியது! உலுக்கியது!*

*ஆண்டாளின் நெஞ்சத்தில் பலகாலமாகவே ஒரு சந்தேகம்! ஜீவாத்மாக்கள் எல்லாமே, சரீரங்களை உதறித் தள்ளிப் பிறவிகளைக் கடந்த நிலையில்தானே, எம்பெருமானின் பாத கமலங்களில் சங்கமம் ஆகின்றன?*

*அப்படி இருக்கும் பொழுது, தான் மட்டும் எப்படித் தன் சரீரத்துடன் தன் நாயகனாகிய அழகிய மணவாளனுடன் சங்கமம் ஆக முடியும்?*

*ஆண்டாளின் இதயத்தில் ஒளிந்து கிடந்த இந்த ஐயப்பாட்டிற்குக் கிடைத்த விடைதான் - எம்பெருமானின் இடது கையில் தவழ்ந்து கொண்டிருந்த பாஞ்ச சன்னியச் சங்கு!*

*எம்பெருமானின் எட்டுக் கரங்களிலும் ஏந்தியுள்ள எட்டு ஆயுதங்களுள் ஜீவனுள்ள ஒரே ஒன்றுதான், பாஞ்ச சன்னியம்!*

*இச்சங்கில் ஜீவனும் உண்டு! சங்கு வடிவமான சரீரமும் உண்டு!*

*சரீரமும், ஜீவனும் கொண்டுள்ள பாஞ்ச சன்னியச் சங்கு, எம்பெருமானின் கையில் வாழும்பொழுது, தான் மட்டும் ஏன் - தன் சரீரத்துடனும், ஜீவனுடனும் எம்பெருமானின் தேவியாக சங்கமமாகிவிட முடியாது?*

*எம்பெருமானுடன் உள்ளவற்றுள், இச்சங்கின் பெரு முழக்கம்தான் ஜீவாத்மாக்களுக்குப் பரமபதப் பேரின்ப வாழ்வை அளிக்கக் கூடியது!*

*சக்கரம் போன்றவை எல்லாமே, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தில் அழிக்கவே பயன்பட்டு வருபவை!*

*பாஞ்ச சன்னியச் சங்கு,துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனப் போர்க்களத்திலும் முழங்கும்! ஜீவாத்மாக்களைப் பரமபதத்திற்கு அழைக்கும் நிலையிலும் அழைக்கும் பரமபத அழைப்புக் குரலாகவும் முழங்கும்!*

*இச்சங்கு, அவதார காலத்திலும்கூட எம்பெருமானை விட்டுப் பிரியாவரம் பெற்றிருக்கிறதே!*

*கண்ணன் பாரதப் போரில் பார்த்த சாரதியாகத் தேரோட்டிய காலத்திலும், அத்தேரோட்டியின் கையில் தவழ்ந்ததோடு - மகாபாரதக் காவியம் முழுவதும் பல இடங்களிலும், பலப்பல முறைகள் முழக்கமிட்டுப் பற்பல நிலைகளில் தர்மஸ் தாபிதத்திற்குத் தனி சகாப்தம் படைத்துக் காட்டி இருக்கிறதே?*

*எம்பெருமானின் - நின்ற, இருந்த, கிடந்த ஆகிய மூன்று கோலங்களிலும் எம்பெருமானின் இடக்கையில் இச்சங்கு தவழ்ந்தாலும் - நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும் தான் அழிவு நிகழப் போவதை, அபாயக் குரலாக முழக்கமிட்டிருக்கிறது!*

*ஆனால் எம்பெருமானின் கிடந்த கோலத்தில் மட்டுமே, ஜீவாத்மாக்களுக்குப் பரமபத நல் வாழ்வளிக்கும் அபயக் குரலாகத்தான் முழங்கியுள்ளது!*

*உடனே ஆண்டாள், திருப்பாற்கடலில் க்ஷீராப்தி நாதனாகப் பள்ளி கொண்டானைத் தனக்குள் எண்ணிப் பார்த்தாள்!*

விண்வெளி கடந்த திவ்விய தேசத்திருப்பாற் கடலில் இச்சங்கு - பிறந்த வீடு, புகுந்த வீடு இரண்டையும் ஒன்றாகக் கொண்டு திகழும் பெரிய பிராட்டியாரைப் போலவே - பிராட்டியாருக்குச் சமமாகத் தன்பிறந்த வீடும், புகுந்த வீடும் ஒன்றாக அமைந்த நிலையிலல்லவா, பள்ளி கொண்டானின் கரத்தில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது?

மண்ணுலகத் திவ்ய தேசங்களுள் திருவனந்தபுரப் பத்மநாபப்பள்ளிகொண்ட எம்பெருமானின் கிடந்த கோலத்தில் ஆழ்ந்து ஈடுபட்டவள், ஆண்டாள்!

அதனால்தான் - தன் மார்கழி நோன்பு நோற்ற நான்காவது திருப்பாவைப் பிரபந்தத்தில் உலகம் செழிக்க மழைவர வேண்டிப்பாடும்பொழுதே 'பற்பநாபன் கையில் ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து' என்று பாடிவைத்தாள்!

அதுமட்டுமன்றி - மார்கழி நோன்பு நிறைவுபெறும் பொழுது, பாஞ்ச சன்னியத்தைப் போல உலகை வாழ்விக்கும் சங்குகள் பல வேண்டும் என்று 'பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே' - என்று எம்பெருமானிடம் அருள் கேட்டுத் திருப்பாவை இருபத்துஆறாம் பாசுரத்திலும் குறிப்பிட்டுள்ளாள்.

பாஞ்ச சன்னியத்தின் மூலக்கதையே சுவையானது.

விளைந்த ஆயிரம் முத்துச் சிப்பிகள் சூழ, ஓர் இடம்புரிச் சங்கு பிறக்கும்!

ஆயிரம் இடம்புரிச் சங்குகள் சூழ, ஓர் வலம்புரிச் சங்கு பிறக்கும்!

ஆயிரம் வலம்புரிச் சங்குகள் சூழ்ந்திருக்கும் நிலையில் ஒப்பற்ற பாஞ்ச சன்னியச் சங்கு பிறந்தது!

முத்துக்கள், சங்குகள் அனைத்துமே கடலில் பிறந்தாலும் கூட, இவற்றிற்கு ஜீவனும் சக்தியும் தெய்வீக ராசி அம்சமும் உண்டு!

பாஞ்ச சன்னியம் பிறந்த காலத்தில், பஞ்சகன் என்ற அரக்கன் - இதைத் தன் உடலாகக் கொண்டு பிரபாக தீர்த்தம் அடைந்து, கண்ணனுக்கும் பலராமனுக்கும் வித்தைகளையும் சாத்திரங் களையும் கற்பித்து வந்து ஆசான் சாந்தீபரின் மகனைக் கொன்றுவிட்டுக் கடலில் மறைந்து விட்டான்!

பிறகு - கண்ணன் கடலில் நுழைந்து, பஞ்சக அரக்கனைக் கொன்று, பாஞ்ச சன்னியத்தைப் பெற்றுள்ளார்!

ஆக, கடலில் பிறந்து, கடலில் வளர்ந்து, கடலில் பள்ளி கொண்டானின் இடக் கரத்தில் வாழும் அற்புத வாழ்வைக் கொண்டதே, பாஞ்ச சன்னியம்!

நின்றகோல நாராயணனின் கரத்திலுள்ள சங்கு, இம் மண்ணுலகில் திருவனந்தபுரத்திவ்விய தேசத்தில் பள்ளி கொண்ட நெடும் பெரும் கோலத்தில் - உலகைப் படைத்தும், காத்தும், அழித்தும் வரும் பத்மநாபன் எம்பெருமானின் கரத்தில் தவழ்ந்து, உலகைக் காப்பதோடு - தன்னையும் காத்துத் தன் நாயகனுடன் இணைத்து வைக்க வேண்டும் என்று ஆண்டாள் கருதினாள்!

உடனே, பாஞ்ச சன்னிய சங்கைப் பத்மநாப எம்பெரு மானுடன் சுற்றமாக்கி இணைக்க விரும்பி, **ஏழாந்திருமொழிப்** பிரபந்தப் பாசுரங்களைப் பாடத் தொடங்கினாள்.

நின்றகோல, இருந்த கோல எம்பெருமான்களிடம் மட்டுமே பாஞ்ச சன்னியச்சங்கு முழு உறவையும் கொண்டு விட்டால் - அது, தன்னை எம்பெருமானுடன் இணைக்க முற்படாது! கிடந்த கோலத்தில் காத்தல் அம்சம் பெற்ற பத்ம நாப எம்பெரு மானுடன் நிலையான உறவை ஏற்படுத்திக் கொண்டு விட்டால் தான் - பாஞ்ச சன்னியத்தால், தன்னைக் கிடந்த கோலத் திருவரங் கனுடன் இணைக்க முடியும் என்பது - ஆண்டாளின் கருத்து!

பழிப்பதைப் போலப் புகழ்வதையும், புகழ்வதைப் போலப் பழிப்பதையும் வஞ்சப் புகழ்ச்சி என்று சொல்வார்கள்.

ஆனால் ஆண்டாள் நாச்சியார், தன் ஏழாவது திருமொழியில் பாஞ்ச சன்னியத்தைப் புகழ விரும்பினாலும், பாஞ்ச சன்னியத்தின் மீது பெண்மைக்குரிய பொறாமை உணர்வும் - தானே பொங்கி எழுந்தது.

தன்னிடம் தவழ்ந்த பொறாமை உணர்வுகளையும் புகழுரைகளையும் கலந்த நிலையில் மிக அற்புதமாகப் பாஞ்ச சன்னியத்தின் வழியே, எம்பெருமானின் சுகானுபவத்தையும் ஆங்காங்கே அனுபவித்துக் கொண்டு - ஏழாம் திருமொழிப் பாசுரப் பிரபந்தங்களைப் பாடியுள்ளாள், ஆண்டாள்!

பாஞ்ச சன்னியத்தைப் பத்மநாப எம்பெருமானுடன் சுற்றமாக்குவதற்காகத் தான் பாடிய ஏழாந்திருமொழியின் பத்துப் பாசுரங்களையும் நன்கு ஆராய்ந்து வணங்கக்

கூடியவர்கள், பாஞ்ச சன்னியத்தைப் போலவே எம்பெருமானை விட்டுப் பிரியாத நெருக்கமான நிலையை அடைவார்கள்!' என்ற தன் கருத்தை -

**'பாஞ்ச சன்னியத்தைப் பற்பநாபனோடும்**
**வாய்ந்த பெரும் சுற்றமாக்கிய வண்புதுவை**
**ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான் கோதை தமிழ் ஈரைந்தும்**
**ஆய்ந்து ஏத்த வல்லார் அவரும் அணுக்கரே'** - என்று மிகத் தெளிவாகத் தன் பொறாமை உணர்வு கலந்த புகழுரையாகப் பாஞ்ச சன்னியத்தை நோக்கிப் பாடிய திருமொழிப் பாசுரங்களில் விளக்கியுள்ளாள்.

முதலில் 'ஆழி வெண் சங்கே! எம்பெருமான் - உன் மீது வாய் வைத்து ஊதுவதால், அவன் வாயமுதத்தை நீ அனுபவித்திருக்கிறாய்!

அவன் வாயின் மணம், கற்பூரமாக மணக்குமா? கமல மலராக மணம் வீசுமா? திருப்பவள வாயின் இன்பச் சுவை தித்தித்துக் கொண்டு, இனிப்பாகவே, எப்பொழுதுமே இருக்குமா? ஆசையோடு கேட்கின்றேன்! உன் இன்ப சுகானுபவத்தை எனக்குச் சொல்!' - என்ற பொருளில்

**கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
**திருப்பவளச் செவ்வாய் தான், தித்தித்து இருக்குமோ?**
**மருப்பு ஓசித்த மாதவன் தன் வாய்ச் சுவையும், நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன், சொல் – ஆழி வெண் சங்கே!**

என்று சங்கின் சுகானுபவத்தைத் தான் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதாகப் பாடியுள்ளாள், ஆண்டாள் நாச்சியார்.

மேலும் 'நற்சங்கே'! நீ பிறந்தது கடலில்! வளர்ந்ததோ - பஞ்சகன் என்ற அரக்கனின் உடலில்! ஆனால் பிறந்த இடத்தையும், புகுந்த இடத்தையும் மறந்துவிட்டு, எம்பெருமானின் கைத்தலத்தில் நிலையாகக் குடிகொண்டு விட்டாய்! கொடிய அரக்கர்கள் துன்புறும் நிலையில் முழக்கமிடும் தோற்றத்தையும் கொண்டுவிட்டாய்!' என்றும்.

'கோலப்பெரும் சங்கே! வேனிற்கால முழுநிலவு, மலை மீது எழுவதைப்போல வடமதுரை மாமன்னன் வாசுதேவனின் கையில் குடியேறி வீற்றிருந்துவிட்டாய்!' என்றும்,

'வலம்புரியே! தாமோதரனின் கையில் பிரியாது வாழ்ந்து வருவதோடு, நீ - அவன் காதில் ஏதோ மந்திர ரகசியம் பேசுகிறாயே! இப்படிப்பட்ட பிரியாச் செல்வபாக்கியம் பெற்ற

உனக்கு இணையாக, இந்திரனும் செல்வத்தால் இணையாக மாட்டான்!' என்றும் -

'பாஞ்ச சன்னியமே! ஒரே கடலில் உன்னோடு பிறந்து கடலிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னைப்போன்ற வேறு ஜீவராசிகளைப் பற்றி - இவை இவை இத்தகையவை என்று, எவருமே எண்ணிப் பார்ப்பதே கிடையாது! ஆனால் பல காலமாக மதுசூதனின் வாயமுதத்தைப் பருகி உண்ணும் பாக்கியத்தை நீ பெற்றுள்ளாய்!' என்றும் -

'வலம்புரியே! தீர்த்த நீராடத் தொலை தூரம் சென்று துன்பப்படாமல், மருதம் சாய்த்த மாதவனின் கைத்தலத்தில் ஏறி அமர்ந்து குடிகொண்டிருப்பதோடு - செங்கண்மாலின் வாயாகிய நீர்த்துறையில் பாய்ந்து, படிந்து, நீராடி மகிழும் மகா பாக்கியத்தை நீ பெற்றுள்ளாய்!' என்றும் -

'சங்குகளுள் அரையர் சேவை செய்யும் வலம்புரியே! செங்கண் கரு மேனி வாசுதேவனின் கைத்தலத்தில் ஏறி வசிக்கும் நீ, பெற்றுள்ள செல்வமே மிகப்பெரிது!' என்றும் -

'பாஞ்ச சன்னியமே! நீ உண்ணும் உணவைப் பற்றிச் சொன்னால் - உலகளந்த நாயகனின் திருவாயிலுள்ள அமுதம்! கண்ணடைத்து உறங்குவதோ, கடல்வண்ண நாயகனின் கைத்தலம்!

அநியாயமாக நீயே முழு உரிமையையும் பெற்று வாழ்ந்து வருகின்ற உன் செயல்களைப் பெண்களாகப் பிறந்தவர்கள் - பெரும் அநீதியாகக்கூறி உனக்கு எதிராகப் பெண் படைகளாகத் திரண்டு, கலகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!' என்றும் -

'செல்வப் பெருஞ்சங்கே! பதினாறாயிரம் தேவிமார்கள், மாதவனின் வாயமுதத்தை எதிர்பார்த்திருக்கும் பொழுது - நீ மட்டுமே கண்ணனின் வாயமுதத்தை மதுவைக்குடிப்பதைப் போல உனக்கு ஆசை ஏற்படும் பொழுதெல்லாம் - குடித்துக் கொண்டிருந்தால், பொதுவாக அனைத்து நாயகியரும் உன்னோடு மாறுபட்டு, உன்னிடம் பகைமை கொள்ள மாட்டார்களா?' என்றும் - நாச்சியார் அற்புதமாக ஏழாம் திருமொழிப் பாசுரங் களைப் பாடிப் பாஞ்ச சன்னியத்தைப் போலவே - சரீரமும், ஜீவனும் இணைந்த சுகானுபவ இன்பங்களைத் தன் நாயகனிடம் பெற விரும்பினாள்!

ஆண்டாள் நாச்சியின் மனக் கண்களில் சேவை தந்த பாஞ்ச சன்னியம், எம்பெருமானுடன் மறைந்தது.

ஆண்டாள், எம்பெருமானின் நினைவுகளில் மீண்டும் மூழ்கினாள்.

சிறுமிப் பருவத்தில், தன் தந்தை பட்டர் பிரான் - திவ்வியதேச எம்பெருமான்களைப் பற்றிக் கூறியன வெல்லாம், அவள் நினைவில் நிழலாடின.

வடமதுரை மாயவன் கண்ணன், திருவேங்கடமுடையான், திருமாலிருஞ்சோலைமலைஅழகர் - ஆகியோரைப் பற்றிக் கூறும் பொழுதெல்லாம் படிப்படியாகத் தனக்குள் உணர்ச்சிகள் பொங்கி எழுந்து - இறுதியில் திருவரங்கத்துப் பள்ளி கொண்ட அழகிய மணவாளனைப் பற்றிக் கூறியபொழுது மட்டுமே - உள்ளமும், உடலும், உடலில் குடி கொண்டு வாழும் ஜீவனும் எம்பெருமானைக் கலந்த சுகானுபவங்களுக்கு ஆட்பட்டு, அரங்கனையே தன் நாயகனாகக் கலந்த சுகானுபவங்களுக்கு ஆட்பட்டு, அரங்கனையே தன் நாயகனாகத் தேர்ந்தெடுத் ததையும் தன் நினைவிற்குக் கொண்டு வந்தாள், ஆண்டாள்!

தன் நெஞ்சில் உணர்ச்சி அலைகள் திருவேங்கடவனைப் பற்றிக் கூறிய பொழுது மழைவருமுன்பு மேகம் தவழ்ந்து மழை மேகக் குளிர் காற்று வீசுவதைப் போன்று மகிழ்ச்சி ஏற்பட்டதை - ஆண்டாள் சிறிது நினைத்துப் பார்த்தாள்.

திருவேங்கடவனிடம், திருவரங்கனிடம் அமைந்திருந்த இயல்புகள் பொருந்தி இருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தாள்!

மற்ற திவ்வியதேசங்களெல்லாம், ஆங்காங்கே ஊருக்குள் திருக்கோவில்களாக விளங்கும் பொழுது - இவ்விரு திவ்ய தேசங்களும் கோவிலுக்குள் ஊர் அமைய - கோவிலே ஊராக அமைந்துள்ள ஒற்றுமை அவளுக்குப் புலப்பட்டது.

ஆழ்வார்களிலும் பெரும்பாலோர் முதலில் திருவரங் கத்தையும், பிறகு திருவேங்கடத்தையும் தான், தான் அறிந்த அளவில் அதிகமாகப் பாசுரங்களைப் பாடி - மங்களாசாசனம் செய்திருப்பதும் அவளுக்குப் புரிந்தது.

மேலும் ஆதிசேடன் மீது பள்ளி கொண்ட திருவரங்கனைப் போல, நின்ற கோல நிலையில் திருவேங்கடவனும் ஆதிசேடனே நெடு மலையாகக் கிடக்கும் திருமலையில் நின்ற கோலத்தில் சேவை தருவதையும் - திருவரங்கனும், திருவேங்கடவனும் பிராட்டியார் இல்லாத நிலையில் தனிச் சந்நிதானம் கொண்டு சேவை சாதிப்பதையும் தனக்குள்ளாக அவள் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

உடனே, மேகமாக உணர்ச்சிகள் தவழ்ந்து, தன் உணர்ச்சிகளைச் சிலிர்க்க வைத்துக் கிளு கிளுக்க வைத்தத்

திருவேங்கடவனையே, திருவரங்கனாக எண்ணி மேகங்களைத் தூதுவிட்டு, தன் **எட்டாவது திருமொழியைப்** பாடத் தொடங்கினாள்.

அரவணை மேல் பள்ளி கொண்ட திருவரங்கனாக, அரவணையாக விளங்கும் திருமலைமீது நின்ற கோலம் கொண்ட திருவேங்கடவனை ஆண்டாள் நினைத்தே எட்டாவது திருமொழிப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடி இருக்கிறாள் என்பதை - அவளே இத்திருமொழியின் இறுதிப் பாசுரத்தில், 'நாகத்தின் அணையானை நன்னுதலாள் நயந்து உரை செய்மேகத்தை, வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்' என்ற பாசுரச் சொற்களால் தன் நினைவுக் குறிப்பைக் காட்டிவிட்டாள்!

மேகங்களே! தெளிந்தநீர் பாயும் வேங்கடத்தின் என் திருமாலும், உங்களுடன் வந்திருக்கின்றானா? அவனை எண்ணி உருகி வடிக்கும் கண்ணீர், என் முலைகளின் நுனியை நனைக்கும் நிலையில் சோர்ந்து கிடக்கும் என் பெண்மையின் பெருமையைச் சீரழிக்கின்றானே? இச்செயல், அவனுக்கு ஒரு பெருமையா?

மாமுகில்களே! வேங்கடத்தின் தாடாளன் ஏதேனும் கூறி அனுப்பிய சொற்கள், உங்களிடம் உள்ளனவா? காமத்தீ, என் உள் புகுந்து என்னை முழுமையாகக் கவ்விக் கொண்டு விட்டது! இந்நிலையில், நள்ளிரவில் தென்றலும் என்னை வதைக்க, இனி - நான் வாழ்ந்திருப்பேனா?

மேகங்களே! என் ஒளி வண்ணமும், வளையல்களும், சிந்தனைகளும், உறக்கமும் எல்லாமே மிக எளிய நிலையில் என்னை நலனழிய வைத்துவிட்டு ஓடிப் போய்விட்டன! இந்நிலையிலும், குளிர் அருவிகொண்ட வேங்கடத்திலுள்ள என் கோவிந்தனின் குணங்களைப் பாடிக் கொண்டு, என் உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றேன்!

மேகங்களே! வேங்கடத்தில் தன் திருமார்பில் திருமகளைக் கொண்டுள்ளவனிடம், என் நெஞ்சிலுள்ள இளமுலைகளை ஒவ்வொரு நாளும் அவன் விருப்பத்துடன் தன் பொன் மார்பில் தழுவிக் கொள்ள வேண்டுமென்று நான் ஆசைப்படுவதாகச் சொல்லுங்கள்!

வானில் கிளர்ந்தெழுந்து மழைபொழியும் மாமுகில்களே! இரணியனின் உடலைக் கிழித்து அவன் இரத்தத்தை உருஞ்சியவன் - என்னிடம் கொள்ளையடித்துச் சென்ற வளையல்களை மீண்டும் அவற்றை அணியும் நிலையில்

*என்னைப் பழைய நிலையில் இருக்குமாறு - ஆக்கித் தருவானா? தரமாட்டானா? இரணியனின் உடலை, மீண்டும் அவன் எங்கே தந்தான்? அதைப்போலல்லாமல், என் வளையலை மீண்டும் தருவானானால், என்னிடம் வந்து சொல்லுங்கள்!*

*நீருடன் கிளர்ந்தெழும் முகில்களே! மூவடி நிலம் கொண்டவனின் வேங்கடத்தில் ஏறி, மழை பொழிகின்றவர்களே! புழுக்கள் உண்டு முடித்து ஓடாக விளங்கும் விளாம் பழத்தைப்போல - நாராயணன், என் உள்ளே புகுந்து என் நலன்களையெல்லாம் அவன் நினைவுகளால் அழித்து மெலிய வைத்துவிட்டான். அவன் வஞ்சனையால் நான் பெற்றுள்ள காதல் நோயை அவனிடம், சென்று கூறுங்கள்!*

*'சங்குடைய பெருங்கடல் கடைந்தானின் தண் முகில்களே! வேங்கடத்துச் செங்கண் மாலவனின் திருவடிகளில் அடியாள் வீழ்ந்து கூறும் ஒரு விண்ணப்பம்! என் கொங்கைகளின் மீது நான் பூசியுள்ள குங்குமக்குழம்பு அழிந்து போகும் நிலையில், ஒரு நாள் அவன் இங்கே வந்து என்னை அணைத்துக் கொண்டு என் மீது தங்கி இருந்தானானால் - நான் உயிர் பிழைப்பேன் என்பதை மட்டுமாவது - அவனிடம் சொல்லுங்கள்!*

**சங்கமா கடல் கடைந்தான் தண்முகில்காள்! வேங்கடத்துச்**
**செங்கண்மால் சேவடிக் கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்!**
**கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பு அழியப் புகுந்து ஒரு நாள்**
**தங்குமேல் – என் ஆவி தங்கும் என்று உரையீரே!** *என்பது ஆண்டாள் கோபியின், எட்டாம் திருமொழியின் ஏழாவது பாசுரம்.*

*'கார் காலத்து எழும் கார்முகில்களே! போரிட்டு வெற்றி பெறும் வேங்கடவன் திருநாமத்தைப் பாடிப் பாடி, நீர் அற்ற காலத்தில் இற்று இற்று நைந்து பழுத்துக் கீழே விழும் எருக்கின் இலைபோல, நைந்து நலிந்து வருகின்றேன்! ஒரு நாளாவது, எம்பெருமான் என்னோடு வந்து தங்கியிருந்து, என்னுடன் பேசமாட்டானா?*

*மதயானையைப்போல எழும் மாமுகில்களே! வேங்கடத்தைப் பதியாகக் கொண்டு வாழும் மேகங்களே! பாம்பணை மீது பள்ளி கொண்டவன், என்னதான் சொல்கிறான்? எனக்கு என்றும் கதியாக இருப்பவன் என்றும் சிறிதும் தன்னை நினைக்காமல், ஒரு பெண் கொடியாகிய என்னை வதைத்துவிட்டான்! - என்ற பழிச்சொல், இவனுக்கு ஏற்பட்டால் - இவனை யாரும் மதிக்க மாட்டார்களே?*

இத்தகைய பொருள்படுமாறு. எட்டாம் திருமொழிப் பாசுரங்களைப் பாடிய கோபி ஆண்டாள், இறுதியில் இத்திரு மொழிப் பாசுரங்களைப் பரமாத்ம பக்தியுடன் ஓதுகின்றவர்கள் எம்பெருமானின் அடியார்களாக ஆவார்கள்! என்ற பொருளுடன், திருமொழியை முடித்துள்ளாள்.

திருவரங்கத்து அழகிய மணவாளனாகத் திருவேங்கட முடையானைக் கற்பனை செய்து கொண்டு மேகங்களைத் தூது விடுப்பதன் வழியாகத்தன் விரகதாப வேட்கையை எட்டாம் திருமொழியாக்கிப் பாசுரங்களைப் பாடியும், எட்டெழுத்துத் திருமந்திரத்துள் வாழும் தன் நாயகன் - இன்னும் தன்னைத் தேடி வரவில்லையே என்று, கோபி ஆண்டாள் தனக்குள்ளாக உருகினாள்!

பிறகு, தன் நெஞ்சில் பரமாத்மக் காதல் உணர்வை ஏற்படுத்திய திருமாலிருஞ்சோலை எம்பெருமான் அழகரை வழிபடுவதாகத் தன் **ஒன்பதாவது திருமொழிப்** பாசுரங்களைப் பாட ஆரம்பித்தாள்!

தான் பிறந்து வாழும் வில்லிபுத்தூரின் அருகில் உள்ளதும், வேங்கட மலையைப் போலச் சோலைகள் நிரம்பியதும், அழகருக்கெல்லாம் அழகரான பேரழகுடன் அழகர் நின்ற கோலத்தில் தனிமையில் சேவை தரும் திவ்ய தேசமாக இருப்பதாலும் - தென்மாடக் கூடல் மதுரையம்பதியில் அங்கயற் கண்ணி மீனாட்சியை, அழகிய சொக்க நாதருக்கு, நாயகியின் தமையன் என்ற முறையில் தாரை வார்த்துத் தந்து மங்கல மணவிழாவை நடத்தி வைத்து, நாயகியோடு உரிய நாயகனை இணைத்துக் கொடுத்தவராக அழகர் விளங்குவதாலும் - திருமாலிருஞ்சோலை மலை அழகர் எம்பெரு மானையே திருவரங்கத்து அழகிய மணவாளனாகத் தனக்குள் கற்பனை செய்து கொண்டாள், ஆண்டாள்!

மேலும் - அழகர் எம்பெருமான், தருமதேவதைக்கே பிரத்தியட்சமாகித் தரிசன சேவை தந்த, தர்மத்திற்கும் மேலான தர்ம நாயகன்!

இத்தகைய அழகர் தன்னை அழகிய மணவாளனோடு இணைத்து வைக்கும் தர்ம நீதியையும் நன்றாக உணர்ந்து - ஆவன செய்வார் என்பதும், ஆண்டாளின் எண்ணம்!

இத்திருமொழியில் ஆண்டாள், தான் வழிபடும் திருமாலிருஞ்சோலை எம்பெருமானுக்கு அக்கார அடிசில்

வைத்துப் படைப்பதாகப் பாசுரம் பாடியிருப்பது, தனித்துவம் வாய்ந்த சுவையான அதி அற்புதமான பிரபந்தப் படைப்பு!

இத்திருமொழியில், 'திருமாலிருஞ்சோலை மலை எங்கும் சிந்தூரப்பொடி சிதறிக் கிடப்பதைப்போலத் தம்பலப் பூச்சிகள் செம்பவள வாயாக எழுந்து பரவியுள்ளன! மந்தர மலையால் கடல் கடைந்து, மதுரக் கொழுஞ்சாறாகிய திருமகளை மணந்த சுந்தரத் தோளனின் காதல் வஞ்சக வலையிலிருந்து நான் தப்புவேனா?' என்றும் -

'மாலிருஞ் சோலையில் மலரும் கொடி முல்லைகள், அழகரின் ஒளிச் சிரிப்பைக் காட்டுகின்றனவே! பிடாக் கொடிகள் சிரிக்கின்றனவே! இவற்றையெல்லாம், நான் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றேன். அவன் தோளிலுள்ள மாலை, என்னைப் படுத்தும் பாட்டை, நான் யாரிடம் சொல்லி முறையிடுவேன்?' என்றும் -

'கருவிளை மலர்களே! காயா மலர்களே! திருமாலவனின் உருவ ஒளியையல்லவா எனக்குக் காட்டுகின்றீர்கள்! நான் தப்பிப் பிழைக்கும் வழியை எனக்குச் சொல்லுங்கள்! திருமகள் விளையாடும் திண்தோள் திருமாலிருஞ்சோலை நம்பி, என் வீட்டில் புகுந்து என் வளையல்களைத் திருடிக் கொண்டு சென்றது - நான் உங்களிடம் கூறும் முறையீடு இதுதான்!' என்றும் -

'பைம் பொழிலில் வாழும் குயில்களே! மயில்களே! கரு விளை மலர்களே! களாம் பழங்களே! காயா மலர்களே! நீங்கள் ஐவரும் எம்பெருமானின் நிறத்தைப் பெற்று, உங்களைக் காட்டுவதன் மூலம் அவனை மேலும் எனக்கு நினைவுபடுத்தி - ஐம்பெரும் பாதகர்களாகி என்னைத் துன்புறுத்துகின்றீர்களே, எம்பெரு மானின் நிறம் உங்களுக்கெல்லாம் எதற்காக? நிறத்தைக் காட்டிடும் உங்களால், எம்பெருமானை எனக்குக் காட்டிட முடியுமா?' என்றும் -

'மாலிருஞ்சோலை மலையில் நின்ற கோலத்தில் கார்மேகத்தின் திருவுருவத்தைப் போல, மலர்களில் தங்கி வாழும் வண்டுகளே! நீர்ச்சுனைகளே! சுனைகளிலுள்ள செந்தாமரைகளே! எம்பெருமானை நினைவுபடுத்தும் நீங்கள், நான் சரணாகதியடைய ஒரு வழியையும் சொல்லுங்கள்!' என்றும் ஐந்து பாசுரங்களில் பாடினாள், ஆண்டாள்!

அடுத்து வரும் இரண்டு திருமொழிப் பாசுரங்களிலும் மாலிருஞ்சோலை அழகருக்கு நூறு தடாப் பானைகளில்

வெண்ணெயும், நூறு தடாக்களில் அக்கார அடிசிலாகிய சர்க்கரைப் பொங்கலையும் படைப்பதாகவும் -

தன் வழிபாட்டையும், படையல் நைவேதனங்களையும் எம்பெருமான் ஏற்றுக் கொண்டு தன் நெஞ்சில் வந்து குடி கொள்வானானால் - ஒரு தடாப் பானை அளவிற்குப் பதிலாக நூறு ஆயிரம் தடாப்பானைகளில் அக்கார அடிசிலைத் தன் நிவேதனக் காணிக்கையாகச் செலுத்துவதாகவும் பாசுரங்களைப் பாடும்பொழுது -

**'நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு – நான்**
**நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன்!**
**நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்!**
**ஏறுதிருவுடையான், இன்று வந்து இவை கொள்ளுங் கொலோ?'** என்று திருமொழியின் ஆறாவது பாசுரத்தையும்-
**இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில், நான்**
**ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வேன்!**
**தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்**
**நின்றபிரான், அடியேன் மனத்தே வந்து நேர்படிலே!** என்று திருமொழியின் ஏழாவது பாசுரத்தையும் பாடித் திருமாலிருஞ் சோலை எம்பெருமானை வழிபட்டாள்.

இப்பாசுரப் பிரபந்தங்களைப் பாடி முடித்து ஆண்டாள் திருவரங்கத்து அழகிய மணவாளனுடன் சங்கமமாகி எவ்வளவோ காலத்திற்குப் பின், வைணவம் தழைக்க வந்துதித்த உடையவர் இராமாநுஜர் - தாம் வாழ்ந்த காலத்தில், திருமா லிருஞ்சோலை மலை திவ்ய தேசத்திற்கு வந்திருந்தார்.

அப்பொழுது இத்திவ்விய தேச எம்பெருமானை வழிபட்ட நாச்சியார் திருமொழிப் பாசுரங்களை ஓதித் தன்னை மறந்து ஆழ்ந்து சிந்தித்தார் உடையவர்!

கோதை நாச்சியார், இப்பாசுரங்களில் இத்தல எம்பெருமானுக்கு நூறு தடா வெண்ணெயை நிவேதனம் செய்து வைத்து வணங்குவதாகவும், நூறு தடா அக்கார அடிசில் படைப்பதாகவும் உடன்பட்டுப் பாசுரம் பாடி இருப்பதாக இருக்கின்றதே? - என்று மீண்டும் சிந்தித்தார் அவர்!

கோபி இடைச்சியின் நிலையில் கொண்டையுடன் திகழும் ஆண்டாள், நூறு தடா வெண்ணெய் வைத்து வணங்கியதாகக் குறிப்பிட்டிருப்பதுகூடப் பக்தி கலந்த நாயகியின் கற்பனையாகக் கொள்ளலாம்!

*ஆனால், நூறுதடா அக்கார அடிசில் நிவேதனம் செய்து படைக்கப் போவதாக உறுதியிட்டுக் கூறிப் பாசுரம் பாடிவிட்டாளே, ஆண்டாள்?*

*ஆண்டாளின் திருமொழிகள் பொய்யாகப் போய் விடலாமா? என்று தனக்குள்ளாக மிகவும் கவலைப்பட்டார், இராமாநுஜர்.*

*பிறகு, அவரே பல முயற்சிகள் செய்து, இறையிலி நிவந்தமாகப் பல நிலங்களைத் தானமாகப் பெற்றுவந்து, அவற்றைக் கொண்டு நூறுதடா அக்கார அடிசில் நிவேதனம் செய்து, எம்பெருமான் அழகருக்குப் படைத்து வணங்கினார்.*

*அப்பொழுது - 'திருமாலிருஞ்சோலை எம்பெருமானே! என் தங்கை ஆண்டாள், உனக்கு நிவேதனம் செய்வதாகக் கூறிய நூறுதடா அக்கார அடிசிலை உனக்குக் காணிக்கை நிவேதனம் செய்து தன் நேர்த்திக் கடனை முடிக்காமல் திருவரங்கனுடன் சங்கமமாகிவிட்டாள்.*

*என் தங்கை செய்யப் போவதாக வாய் நேர்ந்த நேர்த்திக் கடனை, அவள் சார்பில் நான் செலுத்தி - ஆண்டாளின் சத்திய வாய்மொழியைக் காப்பாற்றி விட்டேன்!' என்று வழிபட்டார்.*

*அத்துடன் திருவரங்கனைத் தன் மனதிற்குள் தியானித்துக் கொண்டு, 'திருவரங்கத்துச் செல்வா!' அழகிய மணவாளா! எவ்விதமான சீதனமும் பெற்றுக் கொள்ளாமல் கட்டிய ஆடையுடனும், சரீரத்துடனும் என் தங்கையை உன் தேவியாக உனக்குள் சங்கமம் செய்து கொண்டாய்!*

*என் தங்கை ஆண்டாள், இங்குள்ள திருமாலிருஞ்சோலை அழகருக்கு, நூறுதடா அக்கார அடிசில் நிவேதனம் செய்யப் போவதாகக் கொடுத்த வாக்குறுதியை அவள் தவறிவிட்டாளே என்று, ஆண்டாளாகிய உன் தேவியிடம் எந்தக் காலமும் நீ வெறுப்பைக் காட்டிவிடாதே!' என்று தனக்குள்ளாக வணங்கி, மாலிருஞ்சோலை மாயவன் அழகனுக்குக் கோதைபட்ட கடனை, ஆண்டாளின் அண்ணனின் நிலையில் நின்று, இராமாநுஜர் தீர்த்தார்!*

*அதன்பிறகு, உடையவர் வில்லிபுத்தூர் திவ்விய தேசத்திற்கு எம்பெருமானை வழிபடச் சென்றபொழுது, சந்நிதானம் கொண்டிருந்த ஆண்டாள் நாச்சியார், 'தன் சிலாதல வடிவத்தி லிருந்து வெளிப்பட்டு நடந்து வந்து, உடையவரைக் கட்டித் தழுவி 'என் கோவில் அண்ணனே!' என்று பாசம் பொங்கக் கூறினாள்!*

இக்காரணத்தாலேயே, இராமாநுஜருக்குக் கோவில் அண்ணன் என்ற சிறப்புப் பட்டப் பெயர் கிடைத்தது.

கோபி ஆண்டாள், தன் ஒன்பதாவது திருமொழிப் - பாசுரங்களைத் தொடர்ந்து பாடும்பொழுது - 'கரிக்குருவிக் கூட்டங்கள் காலையில் எழுந்து மாலிருஞ்சோலை மன்னவன் வருகையை, துவாரகாபதி எம்பெருமான் வருகையை, ஆலிலையில் பள்ளி கொண்ட எம்பெருமான் வருகையைக் கூறுகின்றனவே, இம்மொழிகள் மெய்யாகக் கூடாதா?' என்றும் -

'மாலிருஞ்சோலை மலையில் கொன்றைமாலை தொடுக்கப் பட்ட பொன்பூ மாலைகளோடு சேர்ந்து நானும் பயன்படாமல் வீணாகக் கிடந்து தூங்கிக் கொண்டிருக்கின்றேன்!

எம்பெருமான் பவளவாய் வைத்து ஊதும் சங்கொலியும், சாரங்கவில்லின் நாணோசையும் என்னை நெருங்கி வரும் நாள், எந்நாளோ?' என்றும், நாச்சியார் திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வழிபட்டு ஒன்பதாம் திருமொழியைப் பாடியுள்ளாள்.

கோபி ஆண்டாள் நாச்சியார், தன் பத்தாவது திருமொழியில் நாயகனைப் பெறாமல் நாயகி மனம் நொந்துத் தன்னை வெறுத்துத் தன் அவல நிலையைப் பூவோடும், கொடியோடும், குயிலோடும், மயிலோடும், மழையோடும், கடலோடும், தன் தோழியோடும் புலம்பும் நிலையில் பிரபந்தப் பாசுரங்களைப் பாடியுள்ளாள்!

'கரிய காந்தள் மலர்களே! தன் கரு நிறத்தை உங்கள் வழியில் என் மீது போர் செய்ய உங்களை அனுப்பிய கார்க்கடல் வண்ணன் எங்கே இருக்கிறான்? அவன் செய்த இக்கொடுமையை, நான் யாரிடம் சொல்லிச் சண்டை போடுவது? அந்தோ! எம்பெருமான் அணிந்த துழப மாலையின் பின்பு ஓடிக் கொண்டிருக்கும் என் நெஞ்சத்தை, எப்படி நான் மீண்டும் பெறப்போகின்றேன்?

'மேல் நோக்கி மலரும் செங்காந்தள் மலர்களே! விண்ணிலுள்ள மேல் உலகங்களையெல்லாம் கடந்து சென்று வேத முதல்வனாகிய மாயவனின் வலக்கையில் ஜோதி மயமாக விளங்கும் சக்கராயுதத்தின் வெப்பமான சுடர் ஒளியைப்போல என்னைச் சுட்டெரித்துத் துன்புறுத்தாமல் - துன்பமில்லாமல் வாழ்கின்ற நாயகியர்களின் கூட்டத்தில் -என்னைச் சேர்த்துவிட மாட்டீர்களா?

'கோவைக் கொடியாகிய நாயகியே! உன் சிவந்த கொவ்வைக் கனியைக் காட்டி, மாயவனின் செவ்வாயிதழை நினைவுபடுத்தி என் உயிரைப் போக்காதே! செவ்வாய் அழகனை நினைத்து அஞ்சி நடுங்கும் பாவியாக நான் இருக்கின்றேன்.

'வார்த்தை எப்பொழுதும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்! ஆனால் பாம்பணை மேல் பள்ளி கொண்டவனுக்கோ - தான் பாயல் கொண்டுள்ள ஆதிசேடனுக்கு இருப்பதைப் போன்ற இரட்டை நாக்குகளும், இரண்டு வகைப்பட்ட வார்த்தைகளும் உள்ளனவே? நாணம் இல்லாத என்னை ஏமாற்றவே இவன் இரட்டை நாக்குடன் இருக்கின்றான்!

'முல்லைக் கொடியே! சக்கரம் போன்ற ஒளிமிக்க நங்கையே! உன் முறுவலைக் காட்டி எம்பெருமானை நினைவூட்டுவதன் வாயிலாக, என்னை அல்லல் படுத்தி அலைக்கழிக்காதே!

'உன் அடைக்கலம் என்று வஞ்சகமாக வந்த அரக்கி சூர்ப்பணகையின் மூக்கை அறுத்த இளைய பெருமாள், சீதையிடம் இராமனுக்குத் துன்பம் வராது என்று சத்தியத்தைச் சொன்ன சொற்கள் பொய்யாகுமானால் - நானும், என் நாயகனுக்காகப் பிறந்ததும் பொய்யாகும்!

'பாடும் குயில்களே! ஈது என்ன வீணாகப்பாடிக் கொண்டிருக்கின்றீர்கள்?

நல்வேங்கடவன், எனக்கு ஒரு வாழ்வைத் தருவான்னானால், அப்பொழுது இங்கு வந்து பாடுங்கள்! கருடக் கொடியை யுடையவன், என்னை வந்து கூடி மகிழ்வானானால் அப்பொழுது வந்து கூவுங்கள்! உங்கள் குயிலோசைப் பாட்டுக்களை, அப்பொழுது - நான் கேட்கிறேன்!

'கூட்டமாக ஆடும் மயில்களே! கண்ணபிரானைப் போன்ற பச்சை நிறக்கோலம் கொண்டு, அணிமா நடனமும் அவனிடம் பயின்று ஆடுகின்றீர்கள்! உங்கள் காலடிகளில் நான் விழுந்து வணங்குகின்றேன்!

பல காலமும் பாம்பணை மீது பள்ளி கொண்டுள்ள என் மணவாளனின் செய்கை, என்னை உங்கள் காலடிகளில் வந்து விழவைத்துவிட்டது என்பதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்!

தோகை விரித்து நடமாடும் மாமயில்களே! உங்கள் நடன ஆட்டங்களைப் பார்த்து ரசித்துப் பரிசுகள் வழங்க, கைம் முதல் எதுவும் இல்லாத பாவியாக இருக்கின்றேன்!

குடமாடு கூத்தனாகிய கோவிந்தன், வஞ்சனை செய்து என் உடைமைகளையெல்லாம் கொண்டு போய்விட்டான்! உங்களுக்கு இது ஒன்று போதாதா, என் அவல நிலையை உணர்ந்து கொள்ள! ஏன் இப்படிக் கூத்தாடி வருத்தம் தருகின்றீர்கள்?

'ஓ மழையே, மழையே! மண்ணைப் பூசி அதன் மீது மெழுகை உருக்கி ஊற்றினால் எப்படி இருக்குமோ, அதைப் போல - வேங்கடத்துள் நின்ற அழகிய எம்பெருமானை, நான் என் நெஞ்சிலே அகப்படுத்திக்கொண்டு ஆசை தீரத் தழுவி நெருக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த நேரம் பார்த்து- எங்கள் மீது மழை நீரை ஊற்ற மாட்டீர்களா?

'ஓ கடலே! கடலே! உன்னை மலையால் கடைந்து உன்னைக் கலக்கி உன் உடலின் பசையையே போக்கிவிட்டு அமுதத்தை எடுத்தவனிடம், நான் படும் துன்பத் துயரங்களை எல்லாம் அவன் பள்ளி கொண்டிருக்கும் பாம்பணை அருகில் சென்று கூறுங்கள்!' என்றும் -

இத்திருமொழியில் ஒன்பது பிரபந்தப் பாசுரங்களை உள்ளம் உருகிப் பாடியதோடு, இறுதியில் - தன் தோழியை நோக்கி - 'நல்ல என் தோழியே! பாம்பணையில் பள்ளி கொண்ட நம் பரமன், பெருஞ்செல்வன்! மிகப் பெரியவன்! அற்ப மானிடராகிய நம்மால், அவனை இனி என்ன செய்ய முடியும்? என் தந்தை வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தர், தான் வழிபடும் தேவாதி தேவனை வருவிப்பாராகில் - அப்பொழுது, நாம் நம் நாயகனைக் கண்டு மகிழ்வோம்!'என்ற பொருளில் -

**'நல்ல என் தோழி! நாக அணைமிசை நம்பரர்**
**செல்வர்! பெரியர்! சிறு மானிடவர் நாம் செய்வதென்?**
**வில்லி புதுவை விட்டு சித்தர், தங்கள் தேவரை**
**வல்ல பரிசு வருவிப்பரேல், அது காண்டுமே!'** என்று பாசுரம் பாடிப் பத்தாம் திருமொழியை நிறைவு செய்துள்ளாள்.

வில்லிபுத்தூர் விஷ்ணு சித்தர், மதுரையில் பொற்கிழி பெற்றுப் பட்டர்பிரானாகிப் பட்டத்து யானை மீது ஊர்வலம் வந்த காலத்தில் - எம்பெருமானே வலிய எழுந்தருளித் தன் அற்புத சேவையைத் தந்தருள் செய்தான்.

அப்பொழுது எம்பெருமான் மீது கண்ணடிபடாமல் 'பல்லாண்டு பல்லாண்டு' பாடிய பெருஞ்சிறப்புடையவர், பட்டர்பிரான்!

எனவே, தன் தந்தை விஷ்ணுசித்தரால், எம்பெருமானை வருவித்துக் காட்ட முடியும் என்று மனப்பூர்வமாக நம்பி, இப்பாசுரத்தைப் பாடியுள்ளாள், ஆண்டாள்.

பத்தாம் திருமொழியைக் கோபி ஆண்டாள், பாடி முடித்து உருகியும் - இன்னும் திருவரங்கத்து அழகிய மணவாளன் தன்னைத் தேடி வந்து மணந்து கொள்ளவில்லையே என்று ஏங்கினாள், ஆண்டாள்!

உடனே **பதினொன்றாம் திருமொழி**யாகத் தன் ஏக்க உணர்வுகளைப் பிரபந்தப் பாசுரங்களாகப் பாடத் துவங்கினாள், ஆண்டாள்!

'பெண்களே! நான் விரும்பி அணிந்துள்ள சங்க வளையல்கள், எம்பெருமான் விரும்பித் தன் கையில் ஏந்தியுள்ள சங்கைப்போல் இல்லையா? நாகஅணை மீது பள்ளி கொண்ட திருவரங்கர் - ஐயோ! என் முகத்தைப் பாராமல் இருக்கின்றாரே! அம்மா, அம்மா!' என்றும் -

'எழில் மிக்க அன்னையர்களே! என்னுடைய திருஅரங்கத்தின் இன் அமுதர், கூந்தலிலும் குழல் அழகர், வாயிலும் வாயழகர், கண்ணிலும் கண் அழகர். உந்திக் கமலத்திலும் ஏழு கமலங்கள் பூத்த பூவழகர்! என் நாயகனாகிய அழகிய மணவாளர் - இவ்வளவு பேரழகராக விளங்கியும், செயற்கையாக வலிந்து கழற்றக்கூடிய என் கை வளையல்கள் தாமே, இயற்கையாகக் கழன்று விழும் கைவளையல்களாக மாறிவிடும் நிலையில் - என்னை இளைத்து மெலிந்து ஏங்க வைத்து, என்கையின் சுழல் வளையைத் தானே கழல்வளையாக என்னை ஆக்கிவிட்டாரே!' என்றும் பாடும் பொழுது -

**'எழிலுடைய அம்மனையீர்! என் அரங்கத்தின் இன் அமுதர்!**
**குழலழகர்! வாயழகர்! கண்ணழகர்! கொப்பூழில்**
**எழு கமலப் பூவழகர்! – எம்மானார் என்னுடைய**
**கழல்வளையை, தாமும் சுழல்வளையே ஆக்கினரே!'** என்று அரங்க மன்னவனின் பேரழகில் தன்னைப் பறி கொடுத்துப் பாசுரம் அமைத்துள்ளாள்.

மேலும் 'கடலோசை முழங்கும் மண்ணுலகையும், விண்ணுலகையும் சோர்வடையாமல் செங்கோலாட்சி செய்யும் எம்பெருமான் திருவரங்கத்துச் செல்வனார், என் கைவளையல்களைக் கழலச் செய்த செய்கையால் - தன் அவ்வளவு குறைகளையும் தனக்குள் தீர்த்துக் கொண்டு; நிறைவு பெற்று விட்டாரா?' என்றும் -

'மணி மாடமதிள் அரங்கர், முன்பு வாமனராகித் தாரை வார்த்த நீருடன் பிச்சை எடுத்த செயல் குறையுள்ள செயலல்லவா? அப்படியானால், - என் கைவளையல்களைப் பிச்சை எடுத்தாவது பெறும் இச்சை கொண்டவராக இருப்பாரானால், நான் வாழும் இத்தெருவில் - அவர், பிச்சைக்காவது வரமாட்டாரா?' என்றும் -

'பொல்லாத குள்ளமான வாமன வடிவத்தில் வந்து தன் பொற்கையை ஏந்தி இரந்து நீர் ஏற்று எல்லா உலகங்களையும் அளந்து கொண்ட எம்பெருமான் - தற்பொழுது நல்லவர்கள் வாழும் நாக அணை மீது பள்ளி கொண்ட அரங்கனாகி, ஏதும் இல்லாதவர்களாகிய எங்கள் கையில் உள்ள பொருள்களை யெல்லாம் பெற்ற நிலையில், ஆகிவிட்டாரே?' - என்றும்

'காவிரி கரை புரண்டு ஓடும் திருவரங்கத்துச் செல்வனார், முன்பே என்கைப் பொருள்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டுவிட்டார்!

எப்பொருளிலும் இருந்து நின்று, எவருக்கும் அகப்படாமல் நான் மறையின் சொற்பொருளாக விளங்கும் என் நாயகன் திருவரங்கர், என் உடலாகிய மெய்யையும் - மெய்யில் உள்ள ஒவ்வொன்றையும் - கைப்பற்றிக் கொண்டாரே?' என்றும் -

'சீதை என்ற பெண்ணின் மீது ஆசைப்பட்டு - உண்ணாமலும், உறங்காமலும் ஒலி கடலில் அணைகட்டித் தான்பட்ட துயரங் களை எல்லாம் மறந்துவிட்டார்!- திருவரங்கத்துச் செல்வனார்! பிரிவாற்றாமையால் தான் எய்திய துயரக் குறைகளை எல்லாம், அறவே மறந்துவிட்டு, தான் பெற்றுள்ள நிறைகளாகிய நன்மைகளை மட்டுமே நினைத்துக் கொண்டு இருக்கின்றாரே?' என்றும் -

'பாசி படர்ந்து கிடக்கும் நிலமாகிய பூமா தேவிக்காக, முன்னொரு காலத்தில் அழுக்கேறிய உடலில் தண்ணீர் சொட்டச் சொட்ட வெட்கமில்லாமல் பன்றியின் வடிவ மெடுத்துக் கொண்டுபோன இத்திருவரங்கத்துச் செல்வனார் - உடலில் இருந்த அழுக்கைப் போலவே - வார்த்தையிலும் அழுக்கோடு, என்னிடம் பேசியுள்ள பேச்சுக்களைப் பெயர்த்து எடுக்கப் பார்த்தாலும், பெயர்க்க முடியாதவைகளாக உள்ளனவே!' என்றும் -

'கல்யாணம் செய்து கன்னியைக் கைப்பிடிக்க உறுதியுடன் காத்திருந்த சிசுபாலன் அவமானப்படும் நிலையில், அவன் மணக்க இருந்த ருக்மணியைக் கைப்பிடித்தப் பெண்ணாளனாகிய மாயவன்

*விரும்பி வாழும் ஊரின் பெயர், திருவரங்கமே!' என்றும் பாடியே திருமொழிப் பாசுரங்களில், தன் நாயகன் திருவரங்கனின் நினைவுகளைப் பாடியுள்ளாள்.*

*இத்திருமொழியின் நிறைவுப் பாசுரம் மிக அதி அற்புதமானது!*

*இப்பாசுரத்தில் ஆண்டாள், தன் தந்தை பட்டர் பிரானையும் இணைத்துப் பாடும் நிலையில் - 'திருவரங்கத்து அழகிய மணவாளன் ஆணையிட்டிருந்தால், என் தந்தை விஷ்ணுசித்தர் கண்டிப்பாகக் கேட்டிருப்பார்!*

*தான் சூடிக் கொடுத்த மாலையை எம்பெருமான் அங்கீகரித்துக் கொண்டதையே, தன் தந்தையின் வழியாகத் தானே, கோதையாக இருந்த ஆண்டாள், தெரிந்து கொண்டாள்?*

*எனவே அவருக்கு என்னைப் பற்றியும், என் எண்ணங்களைப் பற்றியும் நன்றாகவே தெரியும்!*

*எம்பெருமானைப் பற்றிச் சொல்லும்பொழுது, 'தம்மை விரும்புவாரைத் தானும் விரும்பக்கூடியவன், என் நாயகன்!' என்று என் தந்தை, குறிப்பாகக் கூறியிருக்கின்றார்.*

*ஆனால் என் தந்தையாரின் சொற்படி, என் நாயகன் அழகிய மணவாளன் இதற்குள் என்னைத் தேடி வந்திருக்க வேண்டுமே?*

*தன்னை விரும்பும் என்னை, அவன் ஏன் இன்னும் விரும்பாமல் இருந்து வருகின்றான்?*

*என் தந்தை, பொய்யாமொழிப் புலமை கொண்ட ஞான பக்தியின் வித்து! அப்படிப்பட்ட விஷ்ணுசித்தரின் சொல் பொய்யாகுமானால், இனி எதைத்தான் யார் எந்தச் சொல்லைச் சொல்லி, மெய்யென்று சாதிக்க முடியும்?' என்ற கருத்துப்பட*

**'செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த**
**மெய்ம்மைப் பெருவார்த்தை, விட்டு சித்தர் கேட்டிருப்பர்!**
**தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும் சொல் –**
**நம்மிடையே பொய்யானால், சாதிப்பார் ஆர் இனியே?'**

*என்று பாடி பதினொன்றாம் திருமொழியை நிறைவு செய்துள்ளாள் - நாச்சியார்!*

*இதுவரையிலும் தன் நாயகன், தன்னைத் தேடி வராததால் - ஆண்டாள் அழகிய மணவாளனின் மீது கடுமையான கோபம் கொண்டாள்!*

சில சமயங்களில், நாயகி மிக்க கோபத்துடன் நாயகனை மிகக் கேவலமாகத் தாழ்வாகவும் பேசுவது உண்டு!

இதே நிலையில் கோபி ஆண்டாளும். தன் நாயகனை நோக்கி, 'நீ பிச்சை ஏற்றவன் தானே? உனக்குப் பிச்சை வேண்டுமானால் நான் வாழும் என் தெருவிற்கு வா!' என்ற குறிப்புடன் வாமனாவதார நிகழ்ச்சியை நினைவூட்டினாள்!

நீ, ஒரே அழுக்கான அசிங்கமான வடிவுடன் திரிந்தவன் தானே? என்பதைப் போல - வராகாவதாரக் குறிப்பைக் காட்டினாள்!

'பெண்ணிற்காகப் பித்தனாகித் திரிந்தவன் தானே, நீ?' என்பதைப் போல, உண்ணாது உறங்காது அணைகட்டி இராமன் இலங்கை நோக்கிச் சென்றதைக் குறிப்பிட்டாள்!

மற்றவன் மணக்க இருந்தவளைக் கடத்திக் கொண்டு போனவன் தானே நீ?' என்பதைப்போல, சிசுபாலனை ஏமாற்றி ருக்மணியை மணந்த நிகழ்ச்சியையும், ஆண்டாள் - சுட்டிக் காட்டினாள்!

இப்படியெல்லாம் அழகிய மணவாளனுடன் இப்பதினொன்றாம் திருமொழிப் பாசுரங்களுள் தன் கடுமையான கோப உணர்ச்சியை - ஆண்டாள், குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளாள்!

பதினொன்றாம் திருமொழிப் பாசுரங்களில் எவ்வளவோ உருகி நைந்து நலிந்து வருந்தி அழுது தொழுதுக் கெஞ்சிப் பாடிக் கரைந்தும் - இன்னும் எம்பெருமான் தன்னை வந்து மணந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கத்தால் - கோபி ஆண்டாள், தன்னை - எம்பெருமான் கண்ணன் பிறந்த, வளர்ந்த, வாழ்ந்த புனித மண்ணிலேயே கொண்டு போய்விட்டு விடுங்கள்! என்று தன்னைச் சேர்ந்தவர்களை நோக்கி அழுது கொண்டே, **பன்னிரெண்டாவது திருமொழிப்** பாசுரங்களைப் பாடிக் கெஞ்ச ஆரம்பித்தாள்!

'நானோ, என்றும் என் நினைவெல்லாம் மாதவன் என்று அன்பு மயமாக இருக்கின்றேன்! நீங்களோ, என் நிலையை உணராத மாறுபட்ட நிலையில் இருக்கின்றீர்கள்!

உங்களோடு நான் பேசுவது - ஊமையோடு, செவிடர்கள் பேசுவதைப் போன்றது! ஊமைக்குப் பேசமுடியாது; செவிடர்களுக்குப் பேசுவது கேட்காது. இந்நிலைதான், தற்பொழுது நான் உங்களிடம் பேசிக் கொண்டிருக்கும் நிலை!

*பெற்றதாய் தேவகியை விட்டுவிட்டுப் பெயர்ந்து சென்று, மற்றொரு தாய் யசோதையிடம் வளர்ந்த நம்பியாகிய கண்ணன் 'மல்லர்கள் மோதும் போர்க்களத்திற்கு மல்லர்களுக்கு முன்பு சென்று சேர்ந்த வடமதுரையின் வெளியிலாவது என்னைக் கொண்டு போய்விட்டு விடுங்களேன்!' என்றும்*

*'நான் நாணமுற்று, இனி எந்தப் பயனுமே இல்லை! என் நிலையை அயலவர்கள் அனைவருமே தெரிந்து கொண்டு விட்டார்கள்!*

*வீணாகத் தாமதிக்காமல், செய்ய வேண்டியதைச் செய்து எனக்கு மருந்து தந்து என்னைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தால் - எம்பெருமானைப் பிரிந்துள்ள என் காதல் நோய் பல மடங்காகிவிடும்!*

*எனவே, மாயவனைக் கண்டால்தான் என் மனநோய் மறையும்! உடலின் நோயைத்தான், மருந்தால் போக்க முடியும்! மனநோயைப் போக்க - மருந்தே இல்லை!*

*எனவே நீங்கள் என்னைக் காப்பாற்ற விரும்பினால், ஆயர் பாடியில் கொண்டுபோய் என்னை விட்டு விடுங்கள்! இதை ஆணை யிட்டுக் கூறுகின்றேன்!' என்றும் -*

*'மாயவன் என் மனக் கண்ணில் வந்து நின்று, தன் உருவத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றான்!*

*நானே புறப்பட்டு என் வழியில் தனியாகப் போய் விட்டால் - தந்தை, தாய், உற்றார்கள் இருக்கும்பொழுது - இவள் எல்லோரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தனி வழியில் ஓடிப்போய் விட்டாள் என்ற பழிச்சொல் ஏற்பட்டு, உங்களால் அப்பழிச் சொல்லைத் தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடும்!*

*எனவே, துன்புறுத்திக் குறும்புகள் செய்து விளையாடும் ஓர் மகனைப் பெற்ற நந்தகோபனின் மாளிகை வெளிவாசலில் - நள்ளிரவிலாவது என்னைக் கொண்டு போய்விட்டு விடுங்கள்!' என்றும் இரண்டு பாசுரங்களைப் பாடிய ஆண்டாள் - மூன்றாவது பாசுரத்தில் -*

*'கையில் சக்கரத்தை ஏந்திய கண்ணனின் முகத்தைத் தவிர்த்து வேறு எவர் முகத்திலும் விழிக்கமாட்டேன் என்று செங்கச்சுக்குள் கண்களை மூடிக் கொண்டு வெட்கப்பட்ட நிலையில் வீங்கிக் கிடக்கும் என் கொங்கைகளை, நீங்களே உற்று நோக்கி, என விரகதாபத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!*

கோவிந்தனுக்கல்லாமல் வேறு எவர் வீட்டு வாயிலையும்- என் கொங்கைகளின் முகக் கண்கள் தலை உயர்த்திப் பார்க்க மாட்டா!

எனவே, நான் இங்கு வாழ்வதை விட்டு விலகிச் செல்லுமாறு, என்னைக் கொண்டு போய் யமுனைக் கரையில் சேர்த்து விடுங்கள்!' என்ற பொருள் படுமாறு -

**'அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்**
**அவன் முகத்து அன்றி விழியேன் என்று**
**செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச்**
**சிறு மானிடவரைக் காணில் – நாணும்**
**கொங்கைத்தலம், இவை நோக்கிக் காணீர்!**
**கோவிந்தனுக்கு அல்லால், வாயில் போகா!**
**இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்**
**யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின்!'** என்று பாடினாள்.

மேலும், 'அன்னைமார்களே! ஆர்ப்பாட்டம் செய்யும் என் நோயை எவராலும் அறிந்து கொள்ள முடியாது!

கார்க்கடல் வண்ணன் என்ற ஒருவனின் கை, என் மீது தடவினால்தான் அந்த நோய் தீரும்!

நீர்க்கரையில் கடம்ப மரத்தில் ஏறி காளிங்கன் என்ற நாகப் படத்தின் உச்சியில் கண்ணன் நடனமாடிப் போர்க்களமாக்கிக் கூத்தாடிய பொய்கைக் கரையிலாவது, என்னைக் கொண்டு போய்விட்டு விடுங்கள்!' என்றும் -

'குளிர்ந்த கார்முகிலும், கருவிளை மலரும், காயாம் பூவும், கமல மலரும் என் எதிர் வந்து நின்று, தங்கள் நிறத்தில் கண்ணனைக் காட்டி - என்னைக் கண்ணனிடம் போவாயாக! என்று தள்ளுகின்றன.

பசு மேய்த்து வேர்த்துப் பசி எடுத்து வருந்தித் தளர்ந்து, வேண்டிய உணவை உண்பதற்காக இடைச் சிறுவர்கள் - முனிவர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த பக்த விலோசனம் என்ற இடத்திலாவது, என்னைக் கொண்டு போய்விட்டு விடுங்கள்!' என்றும் -

'என் மேனியின் நிறம் மாறுதலும், மனத்தளர்ச்சியும், மானம் இல்லாத நிலையும், வாய்வெளுப்பும், உண்ண முடியாமல் தவித்தலும், உள் அறிவு மெலிந்துபோன நிலையும் ஆகிய இவை

முழுவதும் - கடல் நீர் வண்ணன் என்ற ஒருவனின் கழுத்தில் அணிந்த திருத்துழாய் மாலையை என் மீது சூட்டினாலே தணிந்து விடும்! எனவே -

பலராமன் பிலம்பாசுரனுடன் போரிட்டுக் கொன்ற இடமாகிய பாண்டிவடம் என்ற ஆலமரத்தினடியிலாவது, என்னைக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்!' என்றும் -

'கண்ணன் பசுங்கன்றுகளை மேய்த்தாலும் மேய்க்கும் தொழிலைச் செய்தான்! அவன், காட்டில் தங்கி வாழும் இடையர் சாதியாகவும் ஆகப்பெற்றான்! வெண்ணெய் திருடியதால் - பிடிபட்டு உரலில் கட்டுண்டும் கிடந்தான்! என்றெல்லாம் எம்பெருமானை ஏசும் பாவிகளே!

கற்றவற்றை எல்லாம் என்னிடம் பேசி, என்னிடம் வசவு வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொள்ளாமல் - பசுக் கூட்டம் வாழக் கல்மழையைத் தடுத்து குடையாகக் கண்ணன் தூக்கிய கோவர்த்தன மலை அருகிலாவது, என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்!' என்றும் -

'கிளி கூண்டில் இருக்கும்பொழுது 'கோவிந்தா! கோவிந்தா!' என்று அழைக்கும்! ஆனால் கூண்டுக் கிளிக்கு ஊட்டி உணவு கொடுக்க மறுத்து வெறுத்தால், 'உலகளந்தானே!' உலகளந் தானே!, என்று உரக்கக் கூவிக் கூவி, கேவி அழும்!

அதைப்போல அழுது கொணடிருக்கும் என் எண்ணங்களில் நீங்கள் வீணாகத் தலையிட்டு, உங்கள் நன்மைகளை எல்லாம் இழந்து, நாட்டில் பழி பாவங்களுக்கு ஆளாகாமல், உயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் துவாரகாபதியிலாவது - என்னைக் கொண்டுபோய் விட்டு விடுங்கள்!' என்றும் -

தன்நிலை மறந்து அழுது புலம்பிக் கொண்டே பாசுரங்களைப் பாடி வந்த ஆண்டாள் - பன்னிரண்டாம் திருமொழியின் நிறைவுப் பாசுரத்தில், 'கண்ணனின் ஜென்ம பூமியாகிய வடமதுரை முதல் அரசாண்டு ஆட்சி செய்த துவாரகாபதி வரையிலும் தன்னைக் கொண்டு போய்விட்டு விடுமாறு வேண்டி, ஒரே பிடிவாதமாகத் துணிச்சலுடன் பாசுரங்கள் பாடிய - விஷ்ணு சித்தரின் மகள் கோதை இன்னிசையோடு பாடிய செஞ்சொல் மாலையைப் பாடி வழிபடுகின்றவர்கள் வைகுந்தத்தை அடைவார்கள்!' என்று குறிப்பிட்டுப் பன்னிரண்டாம் நாச்சியார் திருமொழிப் பாசுரம் ஓதும் பயனைக் குறிப்பிட்டுள்ளாள்.

பன்னிரண்டாம் திருமொழிப் பாசுரங்களைப் பாடிப் புலம்பிய ஆண்டாள், இன்னும் எம்பெருமான் தன்னைத் தேடி வராததைத் தெரிந்து பெரிதும் வாடி வதங்கினாள்! மனம் நொந்து மருகினாள்!, கண்ணனையன்றிக் காண்பவரை யெல்லாம் வெறுத்துத் தன் ஆற்றாமையைப் புலப்படுத்தி அழுதாள்! வருகை தராத தன் நாயகன் மீது கோபமுற்றுக் கொதித்தாள்! கேவிக்கேவித் தன் நாயகனின் நினைவுகளைக் கூவி அழும் தணியாத தன் வேட்கையை மிகமிகத் தெளிவான நிலையில் - **பதின்மூன்றாவது திருமொழி**யாகப் பாசுரங்கள் பாடினாள்.

'பெண்களே! கண்ணன் என்ற கரும் தெய்வ தரிசனக் காட்சியில் பழகிப் போனவள் நான்! புண்ணில் புளியைக் கரைத்து ஊற்றியதைப் போல, என்னோடு வேறுபட்டு நின்று புறம் பேசிப் பழிக்காதீர்கள்!

ஒரு பெண்ணின் வருத்தத்தை இன்னும் தெரிந்து கொள்ளாத பெருமானின், இடுப்பில் அணிந்துள்ள வண்ண மயமான பொன்னாடையைக் கொண்டு வந்து - என் மீது மூடியாவது, என் வாட்டத்தைத் தீர்க்க மாட்டீர்களா? தீருங்களேன்!' எனவும் -

'பால ஆலிலையில் பள்ளி கொண்ட பரமனின் பாச வலையில் அகப்பட்டுக் கிடப்பவள், நான்! என்னை வேலால் துளைப் பதைப்போல வேண்டியதையெல்லாம் நீங்கள் அவரவருக்குத் தோன்றியபடிப் பேசாதீர்கள்!

ஆநிரை மேய்த்துக் குடக் கூத்தாடிய கண்ணன் அணிந்த துளப மாலையைக் கொண்டு வந்தாவது, என் கூந்தலில் சூட்டமாட்டீர்களா? சூட்டுங்கள்!' எனவும் -

'கண்ணனின் கடைவிழிப் பார்வை அம்புகள் பாய, நிலை தளர்ந்து நைந்து நலிந்துவிட்டேன்! என்னிடம் 'அஞ்சாதே!' என்றுகூட ஒருசொல் கூறாத மாயவனின் மார்பில் அணிந்து கொண்டிருக்கும் வன மாலையையாவது வஞ்சனையில் லாமல் தருவானானால் - அதையாவது கொண்டு வந்து, என் மார்பின் மீது என் காமம் அடங்குமாறு - புரட்டிப் புரட்டி எடுங்கள்!' எனவும் -

'ஆயர் பாடியில் கவர்ந்துண்பவனாகிய காளை கண்ணனின் காதல் - என்னை மிகவும் உழக்கியதால், தளர்ந்து முறிந்து கிடக்கின்றேன்!

என்னை இந்த உலகத்தில் தேற்றக் கூடியவர்கள், எவர் இருக்கிறார்கள்? ஆரா அமுதம் போன்றவனின் அமுதவாயில்

ஊறிய எச்சில் நீரைக் கொண்டுவந்தாவது, என் வாயில் பருகச் செய்து, என் இளைப்பைப் போக்குங்கள்!' எனவும் -

'கண்ணன் - நான் அழுதாலும், தொழுதாலும் தன் உருவத்தைக் காட்டமாட்டான்! அஞ்சேல் என்றும் சொல்லமாட்டான்!

ஆனால் அப்பெருந்தகையாளன், என்னைச் சுற்றிச் சுழன்று, என் உள்ளத்தையும் உடலையும் நெருக்கித் தழுவிக் கொண்டு போய்விடாமலும் இருக்கின்றானே?

அவன் ஊதும் புல்லாங்குழலின் துளைகளில் உண்டாகும் இன்பமயமான இசைநீரைக் கொண்டுவந்தாவது, என் முகம் குளிரக் குளிரத் தடவி விடுங்கள்!' எனவும் -

'இவ்வுலகில் நந்தகோபனின் மகன் என்ற இரக்கமற்ற கொடிய திருமாலவனால், நான் துன்புறுத்தப்பட்டு அசையவும் முடியாத நிலையில் சக்தியில்லாதவளாகி விட்டேன்!

அக்கண்ணன் மிதித்த அடிச்சுவட்டிலுள்ள திருவடிகளின் மண் தூசித் தூளிகளைக் கொண்டுவந்தாவது, உயிர் போகாமல் காத்து நிற்கும் என் உடம்பின் மீது நன்றாகப் பூசுங்கள்!' எனவும் -

'எம்பெருமான் ஆணையின்படியே இயங்கும் இந்த உலகத்தில், கண்ணனைப் பெற்றதாய் தேவகி வெற்றே வெறிதாகி ஏங்கித் தவிக்க - வளர்த்த தாய் யசோதையோ, வேப்பங்காயைப் போன்ற கசப்பான செயல்களைச் செய்யும் நிலையில் இவனை வளர்த்து விட்டுவிட்டாள்!

அக்குமரன் கோலப்பனைக் கொண்டுவந்து, அவன் தோளோடு தோளாக, அனைத்துக் குற்றங்களும் துன்பங்களும் எனக்குத் தீரும் நிலையில் - என்னோடு அணைத்து அமுக்கிக் கட்டி வையுங்கள்!' எனவும் ஏழு பாசுரங்களில் தன் காமம் மிக்க துன்பநிலைச் சொற்களைக் கூறி வந்தவள், எட்டாவது பாசுரத்தில் -

'நான் உள்ளுக்குள்ளாக உருகி நைகின்றேன்!

இவள் இருக்கின்றாளா இல்லையா? என்றுகூட நினைக்காத வனாக, எதையும் கேட்காதவனாக, என்னை முழுவதும் கொள்ளை கொண்டவனாகக் குறும்புகள் செய்பவனாக - இக்கண்ணன் இருந்து வருகின்றான்!

இக்கோவர்த்தனன் மட்டும், என் கண்களில் படட்டும்! அப்படி அவனைப் பார்ப்பேன் ஆனால் - பிறவியில் கொள்ளும்

*பயன் ஒன்றும் இல்லாமல் என் மார்பில் உள்ள கொங்கைகளைக் கிழங்கோடும் வேரோடும் அள்ளிப் பறித்துப் பிடுங்கி, அவன் மார்பின் மீது வீசி எறிந்து என் காமத்தீயையும் கோபத்தீயின் கொதிப்பையும் தணித்துக் கொள்வேன்!' என்ற பொருள் படுமாறு -*

**'உள்ளே உருகி நைவேனை, உளளோ இலனோ என்னாத**
**கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்கோவர்த்தனனைக் கண்டக்கால்**
**கொள்ளும் பயன் ஒன்று இல்லாதகொங்கை தன்னைக் கிழங்கோடும்**
**அள்ளிப் பறித்திட்டு, அவன் மார்வில்எறிந்து என் அழலைத் தீர்வேனே!'**

*என்று தன் முழு விரகதாப நிலையைப் பாடினாள், ஆண்டாள்!*

*பிறகு ஓரளவிற்குத் தன்னைத் தானே தனக்குள் தேற்றிக் கொண்டு - 'கொழுத்த என் முலைகள் தங்கள் துன்பம் தீருமாறு கோவிந்தனுக்குக் குற்றேவல் செய்வதை இந்தப் பிறவியில் செய்யாமல், இனிப்போய் என்ன தவம் செய்யப்போகின்றது?*

*அத்தவத்தால்தான், என்ன பயன்? எம்பெருமான், தன்னுடைய திருமார்பில் என்னைச் சேர்த்துக் கொண்டானானால், நல்லது!*

*அல்லது ஏதாவது ஒரு நாளில் என்னைத் தேடி வந்து - என் முகத்தைப் பார்த்து என்னை வேண்டாமென்று விடை தந்து அனுப்பி விட்டாலும், மிக நல்லது!' என்ற பொருள்படுமாறு -*

**'கொம்மை முலைகள் இடர்தீரக்கோவிந்தற்கு ஓர் குற்றேவல்**
**இம்மைப் பிறவி செய்யாதே, இனிப்போய்ச் செய்யும் தவம்தான் என்?**
**செம்மையுடைய திருமார்வில்சேர்த்தானேனும் — ஒருஞான்று**
**மெய்ம்மை சொல்லி, முகம் நோக்கிவிடைதான் தருமேல், மிக நன்றே!'**

*என ஒன்பதாவது பாசுரத்தைப் பாடியுள்ளாள்.*

*பதின்மூன்றாவது திருமொழியின் நிறைவுப் பாசுரத்தில் நாச்சியார், தான் பாடியுள்ள இப்பாசுரமொழிகளை உணர்ந்து வழிபடுகின்றவர்கள், இவ்வுலகில் துன்பக் கடலில் துவண்டு வருந்தமாட்டார்கள் என்ற கருத்தில் முடித்துள்ளாள்!*

*பதின்மூன்றாவது திருமொழிப் பாசுரங்களில் ஒரு வழியாகத்*

தன் மனதைத் தனக்குள்ளாக தேற்றிக் கொண்ட நாச்சியார், மிக அமைதியாக அறிவார்ந்த நிலையில் - உணர்ச்சிவயப்படாமல் சிந்திக்க ஆரம்பித்தாள்!

கடலில் பிறந்த கடல் மாமகள் பெரியபிராட்டி, பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒன்றாகும் நிலையில் - எம்பெருமானுடன் சங்கமித்தாள் அல்லவா?

அதைப்போலக் கடலில் பிறந்த பாஞ்ச சன்னியச் சங்கும், பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒன்றாகும் நிலையில் எம்பெருமானின் இடக்கரத்தில் சங்கமித்தது அல்லவா?

இவை இரண்டும், தாமாகவே சங்கமநிலைக்கு ஆட்பட வில்லையே? எம்பெருமான், தானே விரும்பியல்லவா - இரண்டையும் தனக்குள் சங்கமித்துக் கொள்ள வைத்தான்?

மேலும் இவற்றுள், விண்ணுலகத்திலேயே பெரிய பிராட்டியையும் - மண்ணுலகில் கிருஷ்ணாவதாரயுகத்தில் கண்ணனாக அவதரித்தபொழுது பாஞ்ச சன்னியத்தையும், தனக்குள் தானே விரும்பி சங்கமமாக்கிக் கொண்டுவிட்டான்!

ஆனால் இந்தக் கலியுகத்தில் மனித சரீரம் கொண்டு பிறந்த தன்னை நாயகியாக அவன் சங்கமித்துக் கொள்ள வேண்டுமென்றால் - எம்பெருமானாகவே இருந்தாலும், மனித சரீரத்துடன் தானே - வந்தாக வேண்டும்?

நாராயணன், மனித சரீரத்துடன் தன்னைத்தேடி வந்து மணந்து கொள்வது என்பது நடக்கக் கூடிய காரியமா? இல்லையே!

இப்படியெல்லாம் தனக்குள்ளாக ஆழ்ந்து சிந்தித்த ஆண்டாள் நாச்சியார், தன் பரமபுருஷநாயகனோடு சரீரத்துடன் சங்கமித்துக் கொள்ள ஓர் உபாய வழியைத் தனக்குள்ளாகத் தேர்ந்தெடுத்தாள்!

தனக்கும் - பிறந்த வீடும், புகுந்த வீடும் ஒன்றாக வேண்டு மென்றால், என்ன செய்வது? எதை, எப்படிச் செய்வது?

தான் குழந்தை வடிவில் கோதையாகப் பிறந்த இடம், பட்டர்பிரான் அமைத்திருந்த துளசிச் செடி மண்டிய நந்தவனத்தில் உள்ள ஒரு துளசியின் பக்கம்! அப்படியானால்-

துளசி வனத்தில்தான் சங்கமமாகித் தீரவேண்டும்! அப்பொழுதுதான், ஆண்டாளுக்குக்கூடப் பிறந்த வீடும், புகுந்தவீடும் ஒன்றாக அமையும்!

மிகவும் எம்பெருமானுக்குப் பிடித்தமான புனிதத் துளசியும் கூட, தன் முற்பிறவியில் கண்ணனுடன் சரீர சம்போகத்தில் ஆழ்ந்த ஒரு கோபிதானே?

அக்கோபியின் ஜீவன் கண்டகி நதியாகப் பாய்ந்தோடி, சாளக்கிராம எம்பெருமான்களைக் கற்களின் வடிவத்தில் தன்னகத்தே கொண்டது?

அதே கோபியின் சரீரம் - தானே துளசிச் செடியாகி, துளசி இலைகளாகி - மண்ணுலகிலும், விண்ணுலகிலும் எம்பெருமானின் மார்பில் இடம் பெற்றது!

அதைப் போலவே, தானும் தன் இறுதி முடிவைத் தேடி -தான் பிறந்த துளசிகள் மண்டிய தூய துளசி வனங்களைத் தன் மனதிற்குள் தேடி ஆராய்ந்தாள்!

கண்ணனைக் கோபியர்கள் கூடிக் களித்து மகிழ்ந்த பிருந்தாவனம், ஆண்டாளின் நினைவில் நன்கு பதிந்தது!

உடனே - தன் **பதினான்காவது திருமொழிப்** பாசுரங்களாகத் தான் பிருந்தாவனத்தை அடைந்து, எம்பெருமானை அங்குள்ள ஒவ்வொருவரிடமும் - கண்ணனைக் கண்டீரோ? கண்டீரோ? என்று கேட்கும் நிலையிலும் - எவரும் இக்கலியுகத்தில் காணமுடியாத கண்ணனைத் தான் கண்டதாகவும் பிரபந்தப் பாசுரங்களைப் பாடித் தன் மனத்துயரம் நீங்கும் மருந்தைக் கண்டு பிடித்துத் தன் விரகதாப நோய் தீரப்பெற்றதைப் போன்ற நிலைக்கு ஆளானாள்!

இத்துடன், தான் நெஞ்சுருகப் பாடிய நாச்சியார் திருமொழிப் பாசுரங்களையும் நிறைவு செய்து விட்டாள், ஆண்டாள் என்ற கோபி!

இப்பதினான்காவது திருமொழிப் பாசுரங்கள், எம்பெருமானைப் பிரியாதிருக்கும் மருந்தாகத் தான் கண்டு பிடித்திருப்பதோடு - எம்பெருமானைப் பிரியாது அவன் அடிக்கீழ் வாழ்கின்றவர்களுக்கும் மருந்தாக அமையட்டும் என்ற பக்தி ஞானப் பொது நோக்கத்தோடு இத்திரு மொழியின் நிறைவுப் பாசுரத்தில் -

**'பருந்தாள் களிற்றுக்கு அருள்செய்தபரமன்தன்னைப் பாரின்மேல்**
**விருந்தா வனத்தே கண்டமை,விட்டுசித்தன் கோதை சொல்**
**மருந்தாம் என்று தம் மனத்தேவைத்துக் கொண்டு வாழ்வார்கள்**

**பெருந்தாள் உடையபிரான் அடிக்கீழ்ப்பிரியாது என்றும்
இருப்பாரே!'**

என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளாள்.

இத்திருமொழியில் 'பலதேவனின் தம்பியாகிய கண்ணனென்ற காளை, எவ்விதமான காவலுமில்லாமல் விருப்பப்படி மேய்வதோடு, விருப்பப்படி விளையாடிக் கொண்டு இங்கே வருவதைப் பார்த்தீர்களா?' - இது, ஆண்டாளே கேட்கும் கேள்வி!

'இஷ்டப்பட்ட பசுக்களை இனிமையாக மேய்த்துக் கொண்டு, அவற்றிற்கு நீர் ஊட்டிவிட்டுக் கொண்டு, கண்ணன் பிருந்தாவனத்தில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டோமே!' - இது ஆண்டாளே சொல்லும் பதில்!

'வருந்துமாறு என்னைவிட்டுப் பிரிந்து, ஆயர் பாடியில் வெண்ணெயைக் கவர்ந்து உண்ணும் வாயுடன், இளங் காளையான கோவர்த்தனனைக் கண்டீர்களா?' - இது கேள்வி!

'கூட்டமாக மின்னலும் மேகமும் கலந்ததைப்போல வன மாலைகள் தவழ, தன் தோழர்களோடு விளையாடும் கண்ணனைப் பிருந்தாவனத்தில் கண்டோமே!' - இது ஆண்டாளின் பதில்!

'மாலாகப் பிறந்த நம்பியை, மயக்கும் மாலே செய்யும் மணவாளனை, பொருந்தாத பொய்கள் உரைப்பானை - இங்கே வரக் கண்டீர்களா?' - இது கேள்வி!

'மேலே பரவும் சூரியனின் வெயிலிலிருந்து தான் தப்பித்துக் கொள்வதற்காகக் கருடனின் சிறகின் கீழே வந்து நிற்கும் கண்ணனைப் பிருந்தாவனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

'தண் கமல விழிகள் என்ற நெடுங்கயிற்றால் என் நெஞ்சைக்கட்டி இழுத்துக் கொண்டு விளையாடும் ஈசனைக் கண்டீர்களா?' - இது, கேள்வி!

'முத்தாடை அணிந்து, யானைக் கன்றைப் போல் வியர்க்க வியர்க்க விளையாடுகின்றவனைப் பிருந்தாவனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

'வலையிலிருந்து தப்பிச் சென்ற பன்றியைப்போல, என் மணியினை எந்த அளவிலும் திருப்பித் தராத மாதவனாக விளங்கும் ஈசனைக் கண்டீர்களா?' - இது, கேள்வி!

'பீதாம்பர ஆடை தழையத் தாழ்ந்து தொங்க, பெருங்கார் மேகக் கன்றைப் போலத் திருவீதியில் பளிச்சென்று தெருவே

நிறைந்து தெரியுமாறு வந்து கொண்டிருப்பவனைப் பிருந்தாவனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

தர்ம நீதி தெரியாது குறும்புகள் செய்பவனை. தன் கை வில்லைப் போன்ற புருவ அழகு மிக்கவனை, தன் அழகைப் பொருத்தமானவர்களுக்குத் தரத் தெரியாதவனைக் கண்டீர்களா? - இது, கேள்வி!

கரிய உருவமும் சிவந்த முகமும் கொண்டு, காலை எழும் இளஞ்சூரியனைப்போல் இருக்கக் கூடியவனைப் பிருந்தா வனத்தில் கண்டோமே! - இது, பதில்!

'பொருத்தமுடைய நம்பியை, உடலைப்போல உள்ளமும் கருத்தவனை, என் கருத்துக்களைப் பிழைபடச் செய்து நிற்கும் கருமாமுகில் போன்றவனைக் கண்டீர்களா?' - இது, கேள்வி!

'விண்மீன்கள் சூழ நிறைந்து காணப்படும் வானத்தைப் போல, தன் தோழர்களின் கூட்டம் நிரம்ப வருகின்றவனைப் பிருந்தா வனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

'வெண் சங்கு ஒன்றை உடையவனை, பீதாம்பர ஆடை உடையவனை, அருள் நிறைந்த திருமாலை - சக்கரப் படையானைக் கண்டீர்களா?' - இது, கேள்வி!

'மணம் கமழும் கூந்தல் தன் பெருந்தோளில் விழுந்து விளையாடும் அழகனைப் பிருந்தாவனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

'உலகைப் படைப்பாய்!' என்று பிரமன் முதலானவர்களைப் படைத்த மலர் உந்தி என்ற வீட்டைத் தன் உடலில் செய்து வைத்துக் கொண்டு விளையாடும், விமலனைக் கண்டீர்களா?' - இது, கேள்வி!

'தேனுகாசுரன், யானை, பகாசுரன் ஆகியவர்கள் மடிந்து ஒழியுமாறு வேட்டை ஆடி வருகின்றவனைப் பிருந்தா வனத்தில் கண்டோமே!' - இது, பதில்!

இங்ஙனம், பதினான்காவது நாச்சியார் திருமொழியின் அமைப்பு முறையில் - ஆண்டாள், தானே வினாவை எழுப்பித் தானே விடை தருவதாக உள்ளது!

சிற்றின்பத்தையும், பேரின்பத்தையும் அனுபவிக்க விரும்பும் ஆசை என்ற நோய்க்குச் சிற்றின்ப பேரின்ப சுகானுபவங்களே - 'தான் செய்நோய்க்குத் தான் மருந்தாக' அமைந்து ஆசையைப் போக்கும் என்பது ஆண்டாள் நாச்சியார் திருமொழியின் தத்துவசாரம்!

மாயவன் எம்பெருமானால் ஏற்பட்ட நோய்க்கு, எம்பெருமானே மருந்தாவான்!

திருவரங்கத்து அழகிய மணவாளனைத் தன் நாயகனாகப் பெறவேண்டும் என்ற பக்தி வைராக்கிய நாயகியின் நிலையில்- நாச்சியார் கோபியாகக் கொண்டையிட்டதோடு, தான் சூடிக் கொடுத்த மாலை எப்பொழுதும் தன் மீது தவழும் வகையில் மார்கழி நோன்பு நோற்றுத் திருப்பாவையின் முப்பது பாசுரங்களையும் பாடி முடித்து, மார்கழியிலேயே எம்பெரு மானுக்குப் பொங்கலிட்டுத் தன் நோன்பை முடித்தாள்!

பிறகு தை மாதம் முதல் பங்குனி வரையிலும் திருவரங்கனை எண்ணி ஏங்கிக் கரைந்து உருகி, பதினான்கு நாச்சியார் திருமொழிப் பாசுர வகைகளாக நூற்று நாற்பத்து மூன்று பிரபந்தங்களையும் பாடி முடித்து விட்டாள்!

ஈசன், எம்பெருமான், மாதவன். கேசவன், பரமன், அமலன், விமலன் - முதலிய சொற்கள் - சிவனுக்கும், நாராயணனுக்கும் பொதுவானவை ஆகும். ஆண்டாள் இப்பதினான்காவது திருமொழியில் - ஈசன், விமலன், பரமன் - ஆகிய சொற்களை எடுத்துப்பாடி இருப்பதன் வழியாகவும், ஏனைய பாசுரங்களுள் எம்பெருமான், மாதவன், கேசவன் முதலிய சொற்களால் நாராயணனைக் குறிப்பிட்டுத் தன் சைவ வைணவப் பொது நிலையில் விளங்கும் ஒரே இறைவனை வழிபட்டுள்ளாள்.

நாச்சியார் திருவாய் மலர்ந்த திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் - திருவரங்கம், திருஆய்ப்பாடி, திருக்கண்ண புரம், திருக்குடந்தை, திருத்துவாரகை, திருப்பரம பதம், திருப்பாற் கடல், திருமாலிருஞ்சோலை, திருவட மதுரை, திருவில்லிபுத்தூர், திருவேங்கடம் ஆகிய பதினொன்று திவ்விய தேசங்களும் மங்களாசாசனம் பெற்றிருப்பதோடு - எவ்வளவோ திவ்விய தேசங்கள் அவள் பாடிய பாசுரக் குறிப்பிலும், உள்ளார்ந்த வகையிலும் - இலை மறை காயாக மங்களாசாசனம் பெற்றன.

பூமாலையைச் சூடியும், பாமாலையைப் பாடியும் கொடுத்த சுடர்க்கொடி கோதை, பங்குனியில் தன் பாமலைகளைப் பாடி முடித்த பின்பும் - திருவரங்கநாயகன் தன்னைத் தேடி வந்து மணந்து கொள்ளவில்லையே என்ற பேரதிர்ச்சிக்கு ஆளானாள்!

அவள், தன் ஆத்மாவிலும், சரீரத்திலும் அனைத்து உணர்வு களும் தன்னிலிருந்து இழந்துவிட்ட நிலைக்கு ஆட்பட்டாள்; உணவை மறந்தாள்; உறக்கத்தை இழந்தாள்; உடை மாற்றி

வேற்றுடை உடுக்கவும் இயலாமல் அசைவின்றிச் செயலற்று, பித்தேறிய நிலையில் மௌனியாகிக் கிடந்து உருண்டு புலம்பி அழுதுத் தேம்பி- அரங்கா! அரங்கா! என்று அரற்றிக் கூவித் துடிக்கவும் ஆரம்பித்து விட்டாள்!

ஆண்டாளின் நிலை கண்டு - ஆழ்வார் பட்டர்பிரான் மிகவும் பதறித் துடி துடித்து - நாராயணஸ்மரணையில் தன் ஆத்மாவை எம்பெருமானின் திருவடிகளில் அவன் பாத தாமரைகளில் உடலோடு சரணடைந்து, உருகி அழுதுத் தன் மகளைக் காப்பாற்றுமாறு வேண்டினார்!

திருவரங்கத்து அழகிய மணவாளனும் பட்டர்பிரானின் கனவில் தன் சேவையைத் தந்து - பங்குனி உத்திர நாளில் கோதையை அழைத்துக் கொண்டு வந்தால், தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறினான்.

அரங்கனின் ஆணையை ஆண்டாளிடம் கூறிய பட்டர் பிரான், கோபியாகவே வாழ்ந்த தன் மகளை அழைத்துக் கொண்டு, பாண்டியன் வல்லபன் முதல் எம்பெருமானிடம் பக்தி கொண்ட தாஸானுதாஸர்கள் சூழ்ந்து வரத் திருவரங்கத்தை நோக்கி நடந்தார்.

பல்லக்கினுள் ஆண்டாளை அமர்த்திச் சுமந்து கொண்டு, அனைவரும் பங்குனி உத்திரத்தில் திருவரங்கம் சென்று திருவரங்கனின் ஆலயத்திற்குள் நுழைந்தார்கள்.

அப்பொழுது - சூடிக் கொடுத்தாள் வந்தாள்! சுரும் பார்குழற் கோதை வந்தாள்! ஆண்டாள் வந்தாள்! ஆழ்வார் பட்டர்பிரான் திருமகளார் வந்தாள்! வேயர் குல விளக்கு வந்தாள்! தென்னரங்கம் தொழும் தேசி வந்தாள்! திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்! - என்று அனைவரும் முழக்கமிட்டனர்.

ஆண்டாள், நாச்சியார் திருமொழியில், தான் கண்டதாகப் பாடியுள்ள தன் திருமணக் கனவில் - தன்னை மணந்து கொள்வதற்காகத் தன் நாயகன், தன்னைத் தேடி வந்தபொழுது - கருடனின் மீதோ, புஷ்பக விமானத்தாலோ, அலங்காரத் தேரின் மீதோ, பல்லக்கின் மீதோ, யானை அல்லது குதிரை மீது ஏறியோ ஆடம்பரமான நிலையில் வந்ததாக அவள் குறிப்பிடவில்லை!

சகல செல்வங்களின் வடிவமாக அமைந்த திருமகளையே தன் வலது மார்பில் இடம் கொண்டவனாகிய எம்பெருமானாகிய தன் நாயகன், வெறும் காலாலேயே நடந்துதான் வந்து - தன் நாயகி ஆண்டாளின் கைத்தலம் பற்றி மணம் செய்து

கொள்ளப்போகின்றான் என்பதை - அவளே, தன் திருமொழியில் 'நாரண நம்பி நடக்கின்றான்!' என்று குறிப்பிட்டுள்ளாள்.

நாயகன் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், தானே விரும்பித் தன் நாயகியைத் தேடிக்கொண்டு மணந்து கொள்ள வரும்பொழுது - தன்னை மிகவும் தாழ்த்திக்கொண்டு, மிகமிக எளிய நிலையில் காலால்தான் நடந்து வரவேண்டும்!

இவ்வளவு எளிய நிலையில் தன்னைத் தேடி நடந்து வரும் நாயகனிடம்தான் - தன் நாயகன் எப்படி அமைவானோ என்று எதிர் பார்த்துக் கவலையுடன் தன்னையே அவனிடம் அர்ப்பணிக்கக் காத்திருக்கும் ஒரு பெண்ணிற்கும் - பாசமும், காதலும் ஏற்பட முடியும்!

இத்தகைய எளிமையின் வடிவமானவனைத்தான், எந்தப் பெண்ணும், பெண்மையைப் போற்றித் தன்னைப் பாதுகாக்கும் நாயகனாக நினைக்க முடியும்!

இப்படிப்பட்ட பெண்மையின் மனோதத்துவ ரீதியில்தான் - ஆண்டாளும், 'நாரண நம்பி நடக்கின்றான்!' என்று பாடி வைத்தாள்!

அதைப் போலவே, ஆண்டாளை அவள் நாயகனிடம் சேர்ப்பிக்கும் நிலை ஏற்பட்டபொழுது - அவளை, எவரிடமுமே சொல்லிக் கொள்ளாமல், தானே தேர்ந்தெடுத்து வைத்துள்ள நாயகனைத் தானே தேடி ஓடிப்போகும் கேவலமான நிலையை ஏற்படுத்த- பட்டர்பிரான், விருப்பப்படவில்லை!

இவ்வளவிற்கும் - ஆண்டாளின் நாயகனை, அவள் தந்தை தேர்ந்தெடுக்கவில்லை! அவளாகத் தான் - 'இந் நாயகன் தன்னை மணந்துகொள்வானா? மாட்டானா?' என்று கூட நினைக்காமல், அவளே, அவள் நாயகனைத் தேர்ந்தெடுத்து, அவனைத்தான் மணந்து கொள்வது என்ற முடிவுடன் வைராக்கியமாகத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றாள்!

இத்தகைய சூழ்நிலை மனநிலைகளில் - நமக்கென்ன? என்று பட்டர்பிரான் ஒதுங்கி இருக்கலாம்! ஆனால் - அவர், எப்படியோ ஆகட்டும்! என்று ஒதுங்கிக் கொண்டாரா? இல்லை! மிகமிக மரியாதையாக ஆண்டாளை நடக்க வைத்துத் திருவரங்கத்திற்குக் கூட்டிச் செல்லாமல் - ஆண்டாளைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு, உற்றாரும் உறவினரும் சுற்றமும் சூழப் பெண்மையின் காதலுணர்விற்குப் பெரும் மதிப்பளித்து - அழைத்து வந்திருக்கின்றார்!

இதுதான் - உண்மையான ஒரு தந்தையின் பாசம்! பெண்மை உணர்ச்சிக்குத் தந்த பெறும் ஏற்றம்!

அதைப் போலவே - நாயகியை மணந்து கொள்ளச் செல்லும் நாயகன், தன் நடக்கப் போகும் மங்கல மணவிழாவில் நல்லெண்ணத்தோடும், பாசத்தோடும் பங்கு கொள்ளும் நண்பர்களைத்தான் - தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும்! அதனால்தான் -

ஆதி மூலமே! என்று அபயக் குரல் கொடுத்தபொழுது ஓடோடி வந்து காப்பாற்றிய கஜேந்திர யானையின் சார்பில் - ஆயிரம் யானைகள் தன் தோழர்களாகச் சூழ்ந்து வருமாறு, நல்லெண்ணங்களும் பாசமும் நன்றியுணர்வும் கொண்ட நிலையில் உள்ள நண்பர்களைத் தன் திருமண விழாவிற்கு எம்பெருமான் அழைத்து வருவதாக - ஆண்டாள், தன் திருமணக் கனவுத் திருமொழிப் பாசுரத்தில் எடுத்த எடுப்பிலேயே, 'வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து நாராண நம்பி நடக்கின்றான்!' என்று அதி அற்புதமாகப் பாடி வைத்தாள்.

ஆனால் - தற்பொழுதைய சமுதாயச் சடங்குகளின் அமைப்புக்கள் இப்படிப்பட்ட நிலையிலேயா, நடைபெற்று வருகின்றன?

ஏதோ விலைமாட்டைப் பணத்திற்கு வாங்கி அடிமைப் படுத்திக் கொள்ள ஒரு செல்வந்தன், தன் கூட்டத்தோடு வருவதைப் போல - காரிலோ, யானையிலோ, குதிரையிலோ, அலங்காரத் தேரிலோ ஏறிக் கொண்டு ஏகப்பட்ட ஆர்ப்பாட்ட ஆடம்பரத்துடன் மாப்பிள்ளை வரவேற்புச் சடங்கு, மங்கல மண விழாக்களில் நடத்தப்படுகின்றன!

இச்சடங்கால் - திருமணமாவதற்கு முன்பே மனைவியாகப் போகும் நாயகியின் பெண்மையின் மென்மைக்குள்ளும், பாச உணர்விற்குள்ளும் பயம் என்ற விதைகள் விதைக்கப்பட்டு விடுகின்றன!

அதைப் போலவே - ஆடம்பரமான திருமண ஊர்வலத்தால், மனித நேய சமத்துவ அமைப்பு புறக்கணிக்கப்பட்டு - ஏழை பணக்காரர் என்று கொடுமைகள் சீதனக் கொடுமைகளோடு சேர்த்து கூத்தாடிக் கொண்டிருக்கின்றன!

அதைப் போலவே - கபட மனமுள்ள தோழர்கள் மணமகனுடன் சேர்ந்து வருவதால், திருமணச் சடங்கு சம்பிரதாயங்களில் ஏதேனும் பூசல்கள் ஏற்படும்பொழுது, மணமகனுடன் தோழனாக வந்தவனேகூட - சில சூழ்நிலைகளில் மணமகனாகவும் மாறி,

மணநாயகிக்குத் திருப்பூட்டி மனைவியாக்கிக் கொண்டு விடுகின்றான்!

கோபி கோதை ஆண்டாளின் திருப்பாவை முப்பதும் - இம்மை இன்பத்தை நோக்கியவை! நாச்சியார் திருமொழி பதி நான்கும் - இம்மை இன்பத்தோடு, மறுமை இன்பத்தையும் நோக்கியவை!

கோபி ஆண்டாள், திருவரங்கனின் சந்நிதியில் தன் காலடிவைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் - நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய சமுதாய அமைப்பின் தத்து வார்த்தங்களையும், இன்றைய கால சூழ்நிலைகளோடு சிந்தித்து ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

பிறகு - அழகிய மணவாளன் பள்ளி கொண்ட மூலக் கருவறை மண்டபத்திற்குள் சென்று, பல்லக்கிலிருந்து கோதை கீழே இறங்கினாள்!

எம்பெருமான் திருவரங்கன், பள்ளி கொண்ட நிலையிலிருந்து எழுந்து வந்து ஆண்டாளுக்கு மாலை சூட்டி மணந்து கொள்வான் என்று மணக்கோலம் காணும் ஆனந்த நிலையில் அனைவரும் நின்று கொண்டிருந்தார்கள்!

ஆண்டாளோ, தன் விழிகளிலிருந்து பேரொளி ஒன்று ஜோதி மயமாக எழும்ப, தன் கையின் சீரார் வளைகள் ஒலிப்ப, காலின் சிலம்புகள் ஆர்ப்பரித்து முழக்கமிட, அன்னமென நடந்து சென்று - அணி அரங்க அழகிய மணவாள நாயகனின் பேரழகைத் தன் விழிகளால் அள்ளிப் பருகி ஆனந்தம் கொண்டாள்!

பிறகு, அனைவரும் நினைத்துப் பார்ப்பதற்கு முன்பாகவே- மூலக் கருவறைக்குள் நுழைந்த ஆண்டாள், தன் கேசவ நம்பியைக் கால் பிடித்து நாயகியாய் சேவை செய்பவளைப் போல, அவன் பள்ளி கொண்ட நாக அணையின் மீதேறி, அவன் திருவடியின் அருகில் அமர்ந்தாள்!

என்ன அதிசயம்? யாருமே எதிர்பாராத நிலையில் - ஆண்டாள் தன் சரீரத்துடன் பெருஞ்ஜோதி மயமாகித் திருவரங்க நாயகனின் பாத கமலங்களில் மறைந்து சங்கமமாகி விட்டாள்!

பட்டர்பிரானோ, மூலக் கருவறைக்குள் நுழைந்த தன் மகளைக் காணாமல் பரிதவித்துத் துடி துடித்து அழுதார்!

அவர் காதில் மட்டும் கேட்கும் நிலையில் - திருவரங்கன், 'விஷ்ணுசித்தா! சீதையின் தந்தை ஜனகரின் நிலையிலும், திருமகளைத் தந்த கடலரசன் நிலையிலும், இக்கோதையைத் தந்து - நீயும் எனக்கு மாமன் ஆனாய்!' என்று கூறினான்.

மதுரையில் பொற்கிழி பெற்றுப் பட்டத்து யானை மீது ஊர்வலம் வந்தபொழுது, திருப்பல்லாண்டு பாடும் நிலையில் தன் திவ்விய தரிசனம் தந்த எம்பெருமான், அப்பொழுதுகூடத் தன் பல்லாண்டு பாடிய பாசுரங்களுக்காகத் தன் திருவாய் மலர்ந்து பேசவில்லை!

தற்பொழுதோ - தன் மகள் கோதை ஆண்டாளை, அவன் நாயகியாக ஏற்றுக் கொண்ட நிலையில், தன்னிடம் அவன் பேசிவிட்டான்.

அன்று முதல் - விஷ்ணுசித்தர், எம்பெருமானின் மாமனார் அந்தஸ்தை அடைந்ததால், ஆழ்வார்களுள் பெரியவராக - பெரியாழ்வார் என்று சிறப்பிக்கப் பெற்றார்!

திருவரங்கன், பட்டர்பிரானுக்குத் தரப்போகும் மாமனார் உறவாகிய அந்தஸ்தை, கோபி ஆண்டாள் தனக்குள்ளாக எப்பொழுதோ, எந்தக் காலத்திலேயே தனக்குள்ளாகத் தெரிந்து வைத்திருந்தவள்! அதனால்தான் -

'நானோ, நாயகியின் நிலையில் இருந்து கொண்டு, என் நாயகனுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றேன்! நான் அழுது, தொழுது எப்படி அழைத்து ஏங்கிக்கிடந்தாலும் - என்னைத் தேடி வந்து சேராத என் நாயகன், மிகப்பெரும் செல்வந்தன்! மிகப் பெரியவன்! அப்படி அவன் இருந்தாலும் கூட -

தன் மாமனாரும், என் தந்தையுமாகிய விஷ்ணு சித்தர் பட்டர்பிரானிடம் அளவற்ற மதிப்பும், மரியாதையும் கொண்ட ஒரு நல்ல மருமகன் - என் நாயகன்!

நான் எப்படி அழைத்தாலும் என்னிடம் வந்து சேராத என் நாயகன், தன் மாமனாராகிய என் தந்தை அழைத்தால் போதும்! உடனே, அவன் எப்படியும் வந்து சேர்ந்து விடுவான்! பாசமுள்ள மாமன் அழைக்கும்பொழுது - பண்புமிக்க மருமகன் உடனே வராமல் இருப்பானா, என்ன? அவனைக் கொண்டு வந்து சேர்ப்பிக்கும் சக்தி, என்னைவிட அவன் மாமனுக்குத்தான் அதிகம்!

அதனால், என் தந்தை என் நாயகனை இங்கு அழைத்துக் கொண்டு வரும் நேரத்தில் அவனை நாம் பார்த்துக்

*கொள்வோம்!' என்ற குறிப்புடன் தான் உள்ளம் உருகிப் பாடிய பத்தாம் திருமொழியின் பத்தாவது பாசுரத்தில் -*

**'நல்ல என் தோழி! நாக அணைமிசை நம்பரர்**
**செல்வர்! பெரியர்! சிறு மானிடவர், நாம் செய்வதென்?**
**வில்லி புதுவை விட்டு சித்தர், தங்கள் தேவரை**
**வல்ல பரிசு வருவிப்பரேல் – அது காண்டுமே!'** *என்று எப்பொழுதோ கோபி ஆண்டாள் அதி அற்புதமாகப் பாடி வைத்து விட்டாள். பின் நடக்கப்போகும் ஒவ்வொன்றையுமே - முன் கூட்டியே தெரிந்து வைத்திருந்தவள்தான், கோபி கோதை ஆண்டாள் நாச்சி!*

*எம்பெருமானுக்கே தான் மாமனாராக மாறிய பெரும் அந்தஸ்தே கிடைத்தாலும் - பெரியாழ்வாரால், தான் தன் உயிருக்கும் மேலாகக் கண்ணை இமை காப்பதைப்போலப் பாசத்துடன் வளர்த்த மகள் கோதையின் பாசம், அவரை மிகவும் வாட்டி வதைத்தது.*

*பல காவிய கர்த்தாக்களின், படைப்பாளிகளின் வாழ்க்கை அத்தியாயங்களில் - அவர்கள் படைத்த கற்பனை எண்ணங்களே - உண்மையாகிப் பலவிதமாகிப் பற்பல கோணங்களில் - வாழ்க்கை முத்திரைகளை மிக அழுத்தமாகக் குத்தி, அவர்களைத் தடுமாற வைத்துத் திணற அடித்து விடுகின்றன!*

*அதைப் போலவே தான் - பெரியாழ்வார் எம்பெருமானின் மீது கொண்ட பக்தி நிலையில் கற்பனையாக எப்பொழுதோ பாடி வைத்த பெரிய திருமொழியின் பாசுரங்கள் - மகள் கோதையின் வழியாகத் துயர முத்திரைகளைக் குத்திப் பெரியாழ்வார் தன் மகளை நினைத்து தான் பாடிய திருமொழிப் பாசுரத்தைத் தானேப் படித்து படித்துத் தேம்பித் தேம்பி அழவைத்து விட்டன!*

*அவற்றுள் 'என் மகளுக்குக் கல்யாணம் செய்து மகிழ நான் ஒன்று நினைத்தால் - பேசவும் தெரியாத இப்பேதைப் பெண், வேறொன்றைத் தன் மனதில் நினைத்து விட்டாளே?' என்ற கருத்தில்*

**'பேசவும் தெரியாத பெண்மையின்**
**பேதை, என் பேதை இவள்!**
**பெரும் பெருத்த கண்ணாலங்கள் செய்து**
**பேணி நம் இல்லத்துள்ளே**
**இருத்துவான் எண்ணி, நாமிருக்க –**

**இவளும் ஒன்று எண்ணுகின்றாள்!**, என்ற திருமொழியில் - பெரியாழ்வார் வீட்டோடு மணமகனைத் தேடுவதாகக் கூறிப் பாடினார்! ஆனால் -

திருவரங்கனோ, உலகத்திற்குப் படி அளப்பதையும் விட்டு விட்டுத் தன்னுடைய வீட்டு மாப்பிள்ளையாக வரக் கூடியவனா அவன்?

அப்படியிருக்க - 'என் அருமை மகளைத் திருமகளாக வளர்த்தேன்! அவளை, ஒருவன் கொண்டுபோய் விட்டானே? என் மகளும் ஊருக்குத் தெரிந்த மணமகளாகச் செல்லாமல், திருட்டுத்தனமாக வந்த மணமகளாகத் தானே, தன் கணவனின் வீட்டில் நுழைவாள்? என் மகளை, அவள் மாமியார் எப்படி நடத்துவாளோ?' என்ற கருத்தில் -

**'ஒரு மகள் தன்னை உடையேன்!**
**உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன்!**
**செங்கண்மால்தான் கொண்டு போனான்!**
**பெருமகளாய்க் குடி வாழ்ந்து**
**பெரும் பிள்ளை பெற்ற அசோதை**
**மருமகளைக் கண்டு உகந்து**
**மணாட்டுப் புறம் செய்யும் கொலோ?'**என்ற திருமொழியில்- பெரியாழ்வார் பாடி வைத்த வார்த்தைகள், அவர் வாழ்க்கையில் அப்படியே பலிதம் ஆகிவிட்டனவே!

தன் பெண், முன்பின் தெரியாத ஒருவனைத் தன் கணவனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் அவனோடு ஓடிப்போய் தானே மணந்து கொண்டு வாழும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டால் - எந்தத் தகப்பனும் தன் மகளைப் பற்றிக் குறை எதையும் சொல்லவேமாட்டான்!

தன்னுடைய மகள் நல்லவள் என்றும், அவளை எவனோ ஒருவன் மயக்கித் திருட்டுத் தனமாக இழுத்துக் கொண்டு ஓடிப்போய் விட்டான் என்றுதான், குறைக்கூறி கொண்டு திரிவான்!

இத்தகைய உலக வழக்குப் படியே - பெரியாழ்வாரும், தன் மகள் கோதையைத் திருவரங்கனிடம் கூட்டிச் சென்று தானே விட்டு விட்டு - தன் மகள் மீது குறை சொல்லாமல், எம்பெருமான் திருடிச் சென்றதாக வருந்தி அழுவது அற்புதமாக உள்ளது!

ருக்மணியை ஏமாற்றி, மயக்கிக் கண்ணன் கடத்திக் கொண்டு

போய்த் தன் மனைவியாக்கிக் கொண்ட நிலையிலா, திருவரங்கத்து அழகிய மணவாளன் கோதையை வில்லி புத்தூரிலிருந்து திருடிக் கொண்டு போனான்? இல்லையே?

அப்படி இருக்கும்போது - இப்படி ஒரு பாசுரத்தை அமைத்துவிட்டு அழுது புலம்புவதுதான் - ஒரு தகப்பனின் உண்மையான மனநிலை!

அதைப் போலவே, தன் மகள் தான் நினைத்தவனைத் தனக்குத் தெரியாமல் மணமுடித்துக் கொண்டு ஓடிவிட்ட பிறகு, அவள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீடு வெறிச் சோடிக் கிடந்து பெற்றவர்கட்குத் துன்ப நினைவுகளைத் தருவதை -

**'நல்லதோர் தாமரைப் பொய்கை**
**நாள் மலர்மேல் பனி சோர**
**அல்லியும் தாது முதிர்ந்திட்டு**
**அழகு அழிந்தால் ஒத்ததாலோ?**
**இல்லம் வெறி ஓடிற்றாலோ?**
**என் மகளை எங்கும் காணேன்!**
**மல்லரை அட்டவன் பின்போய்**
**மதுரைப் புறம் புக்காள் கொல்லோ!'** என்று பாடிய பாசுரம் பெரியாழ்வாரைக் கலக்கிக் கண்ணீர் சிந்த வைத்து விட்டது!

எந்தவிதமான திருமணச் செலவுகளும், சீதனங்களும் கொடுத்து வைத்துத் தன் செல்வத்தைச் சீரழித்து விடாமல் - தன் மகள், தானே ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஓடிப்போய் விட்டாலும், எந்தத் தகப்பனும் தனக்குச் செல்வம் மிச்சமானதைப் பற்றிப் பேசாமல் - தன் மகள் போய் விட்ட தால்,தன் குடும்பம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கொள்வதுதான் உலக வழக்கு!

இதே மனநிலையில்தான், பெரியாழ்வாரும் பாசுரத்தை முன்பே அமைத்துவிட்டார்!

பெரியாழ்வார் கோதையைக் கண்டெடுத்து வளர்ப்பதற்கு முன்பு பாடி வைத்த பெரிய திருமொழியின் கற்பனைப் பாசுரங்கள், தற்பொழுது உண்மையாகி - அவர் இதயத்தில் - மகள் என்ற பாசஉணர்ச்சிச் சாட்டை, சரியான முறையில் அடித்து நொறுக்கி விளாசித் துன்புறுத்தி விட்டது!

பிறகு, பெரியாழ்வார் தன் மகள் வளர்ந்த வில்லி புத்தூருக்குச் செல்லாமல் - திருமாலிருஞ்சோலையை அடைந்து வாழ்ந்து எண்பத்தைந்தாவது வயதில் பரமபதம் அடைந்தார் என்றும் -

வில்லிபுத்தூருக்கே சென்று வாழ்வைக் கடத்திப் பரமபதம் அடைந்தார் என்றும் இரு வகைப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

திருமணச் சடங்குகள் எதுவும் நடைபெறாமல் - ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொண்டு, கணவன் மனைவியராக சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழக்கு மரபு, ஆண்டாளைப் பின்பற்றி ஆண்டாளின் காலத்திற்குப் பிறகு தோன்றியதாகும்.

ஆண்டாள், பெரியபெருமாள் திருவரங்கனின் பாத கமலங்களில் சங்கமமாகிய திருவரங்க திவ்விய தேசத்தில் தான் - பெரிய நம்பிகள், பட்டர், வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியார் ஆகியோர் தோன்றியிருக்கின்றார்கள்.

அதைப் போலவே - குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், உடையவர், துலுக்க நாச்சியார், திருப் பாணாழ்வார், ஆளவந்தார் ஆகியோர் திருவரங்கத்தில் தான் பரமபதம் அடைந்தார்கள்.

இதே திவ்விய தேசத்தில்தான், கவிச்சக்கரவர்த்தி கம்பர் - தான் படைத்த கம்பராமாயணத்தை அரங்கேற்றியுள்ளார்.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ராக தாளங்களுடன் அரையர் சேவையாக பாடும் முறையை - ஆண்டாள் சங்கமமாகிய இத்தலத்தில் தான் - நாத முனிகள் ஏற்படுத்தியுள்ளார்.

திருவரங்க திவ்ய தேசத்தின் அடைய வளைந்தான் வீதியின் தென் மேற்கு முலையில் அமைந்துள்ள ஆண்டாள் சந்நிதியின் பெயர், வெளி ஆண்டாள் சந்நிதியாகும்.

திருவரங்கத்திற்கு பெரியாழ்வாருடன் ஆண்டாள் வந்த பொழுது, இங்குள்ள இதே இடத்தில் இருவரும் காவிரியில் நீராடினார்கள் என்றும், அதன் நினைவாக பெரியாழ்வாரின் சீடன் வல்லபதேவன் - இவ்விடத்தில் ஆண்டாளுக்கும் பெரியாழ்வாருக்கும் சந்நிதிகளை அமைத்திருக்கிறான்.

ஆடிப் பதினெட்டாம் நாளில் திருவரங்கன் காவிரியைத் திருமணம் செய்து கொண்டு திரும்பும்பொழுதும், பங்குனி உத்திரத் திருவிழாவில் உறையூரில் உள்ள சோழர்குல வல்லி கமல வல்லியை மணந்து கொண்டு திரும்பும் பொழுதும் -இங்கு சந்நிதானம் பெற்றுள்ள வெளி ஆண்டாளுடன் மாலை மாற்றிக் கொண்டு செல்வது மரபாக இருந்து வருகின்றது.

இத்திருவரங்க திவ்விய தேசத்தில், திருவரங்கன் யானை ஏறும்

மண்டபத்தின் வடக்கே, உள் ஆண்டாள் இடம் கொண்ட உள் ஆண்டாள் மண்டபம் உள்ளது.

திருவரங்கன், உள் ஆண்டாள் மண்டபத்தின் முன் நின்று மாலை மாற்றிக் கொண்டு திருஉலாச் செல்லும் வழக்கமும் இருந்து வருகின்றது.

எம்பெருமானிடம் செலுத்தப்படும் பக்திப் பாதைகளை, இரண்டு வகையாகக் கூறலாம்.

தாய்க்குரங்கு, தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடும் பொழுது - குட்டிக் குரங்கு தாயின் வயிற்றை மிகக் கவனமாகப் பிடித்துக் கொள்வதைப் போன்றது, ஒருவகைப்பட்ட பக்திநிலை!

இத்தகைய பக்தியில் ஓடும் தாய்க்குரங்காக எம்பெருமானையும், விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் குட்டிக் குரங்காகப் பக்தி செலுத்துவோரையும் - கற்பனை செய்து கொள்ளலாம்.

மற்றொரு வகைப்பட்ட பக்தி நிலையாவது - தாய்ப்பூனை தன் குட்டியைக் கவ்விக் கொண்டு ஓடுவதைப் போன்றது!

தாய்ப்பூனை கூர்மையான நகங்களையும், பற்களையும் கொண்டிருந்தாலும், தன் குட்டியைக் கவ்விக் கொண்டு ஓடும் பொழுது - குட்டி மீது தாய்ப்பூனை கொண்டுள்ள பாச உணர்வால், குட்டியின் மீது எவ்விதமான கீறலும், சேதமும் ஏற்படாத நிலையில் மிக லாவகமாக - தாய்ப்பூனை, தன் குட்டியைக் கவ்வி கொண்டு ஓடும்!

இத்தகைய பக்தியில் தாய்ப்பூனையாக எம்பெருமானையும், பூனைக் குட்டியாக பக்தி செலுத்துவோரையும் கூறலாம்!

இத்தகைய இரண்டு வகைப்பட்ட பக்திகளிலும் ஆண்டாள் நாச்சியாரின் பக்திப் பாதை - தாய்ப்பூனையானது தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைப் போன்ற பாசம் அமைந்தது இதுவே- ஆண்டாளாகிய கோதையின் பக்திப் பாதைய!

பரம புருஷ நாயகனுடன் தங்களை இணைத்த பக்தி வெள்ளப் பெருக்கை பிரபந்தப் பாசுரங்களாக வடிக்க - ஞானப் பாலமாகவும், இன்னிசைக் கருவியாகவும் அமைந்த தமிழைப் பெரியாழ்வார் மறந்து விடாமல் - தமிழ் இன்னிசை மாலை, ஈத்த தமிழ் இவை, சீர்மலி செந்தமிழ், தமிழ் பத்தும், விரித்த தமிழ், தூய தமிழ்ப்பத்து, செந்தமிழ், ஒண் தமிழ், செய்த தமிழ் மாலை, திருவரங்கத் தமிழ், வியன் தமிழ் - எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தன் தந்தையின் வழியில் ஆண்டாளும் - சங்கத் தமிழ், இன்தமிழ், கோதை வாய்த்தமிழ், தூய தமிழ், கோதை தமிழ், செந்தமிழ் எனவும் குறிப்பிட்டுப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடியுள்ளாள்.

கோதையின் பக்திப் பாதையில் - ஆண்டாள், தன் சரீரத்துடன் இறைவனுடன் கலந்து சங்கமமாகிய நாயகியின் பக்தி நிலை, உலகத்திலேயே எங்கெங்கும் இல்லாத, கேட்டறியாத, சொல்லியறியாத ஒன்று!

திருப்பாணாழ்வாரும், திருவரங்கனின் திருமேனியுடன் ஜோதி மயமாக சங்கமமாகி மறைந்தார் என்ற ஒரு செய்தியும் உண்டு! ஆனால், பாணர் - நாயக நாயகி பக்திமையில் ஈடுபாடு கொண்டவர் அல்லர்! மேலும், அவர் ஆணாகவே பிறந்தவர்!

மனித சரீரத்தோடு மண்ணுலகை விட்டு விண்ணுலகு நோக்கிச் சென்ற திரி சங்கு பட்ட அவதியையும், மண்ணில் அவதரித்த வடிவத்துடன் கதிரவனைப் பிடிப்பதற்காக விண்ணில் பறந்து சென்ற சிவாம்சம் கொண்ட அனுமன் வாய் சிவக்கப் பெற்ற நிலையில் மண்ணிற்கே மீண்டும் வந்த வரலாற்றையும் நாம் அறியாதவை அல்ல!

வடலூர் இராமலிங்க வள்ளலார், பட்டினத்தார், நந்தனார் - போன்றவர்கள், தங்கள் சரீரங்களை இழந்த நிலையிலேயே- ஜோதியாகவும், லிங்கமாகவும் இறைவனோடு கலந்துள்ளனர்!

சித்தர்களும், ஞானிகளும் இறுதியில் சித்தி பெறும் ஜீவ சமாதி, ஜல சமாதி முதலியவைகளிலும்கூட - சரீரங்கள் இறைவனோடு சங்கமம் ஆவதில்லை!

கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தி கை வந்தவர்கள் கூட, தங்கள் சரீரத்தோடு விண்ணிலோ, மண்ணிலோ சஞ்சரிக்க முடியாது!

எந்த வகையில் பார்த்தாலும் - கோதையின் பக்திப் பாதையில், ஆண்டாள் தன் சரீரத்துடன் இறைவனுடன் நாயகியாக சங்கமம் ஆகிய நிலை - ஈடு இணையற்ற ஒன்று!

பக்த மீராவும் கூட, தன் சரீரத்துடன் கண்ணனுடன் சங்கமித்ததாகவும் ஒரு வரலாறு உள்ளது! ஆயினும் - மீராவும், தன் வாழ்க்கையில் வேறு ஒரு நாயகனைத் தன் கணவனாக ஏற்றுக் கொண்டவள்! ஆண்டாளைப் போன்ற கன்னிமை கழியாத சரீர நிலையில் அமைந்த ஒரு வாழ்க்கை அமைப்பு மீராவிற்கும் அமையவில்லை! இந்நிலையிலும் - ஆண்டாளின் நாயக நாயகி சங்கமத்துவம் ஒப்பற்ற மாசற்றது!

ராதையும் கூட, மீராவைப் போலப் பிறன் மனைவியே! கோதையின் பக்திப் பாதையில் - ஆண்டாள், அழகருக்குச் செய்வதாகக் கூறிய நேர்த்திக் கடனைத் தீர்க்காமலிருந்ததும் - ஒரு குற்றமே அல்ல! எங்கெங்கும் நேர்த்திக் கடன்கள், நினைத்தது நிறைவேறிய பின்பே இறைவனுக்கு - நேர்ந்து கொண்டவர் களால் நிறைவேற்றப்படும்! ஆனால் - நினைத்தது நிறைவேறிய பின்புதான் - இந்நில உலகில் ஆண்டாள், வாழவில்லையே? எப்படி நேர்த்திக் கடனை, அவளால் அழகருக்குச் செலுத்த முடியும்? ஆயினும் -

உடையவர், ஆண்டாளின் தமையன் நிலையில் விளங்கி ஆண்டாளின் நேர்த்திக் கடனையும் நிறைவேற்றி - எந்தக் குறையும் ஏற்படாமல் செய்துவிட்டார்!

கோபி கோதை ஆண்டாள் நாச்சியின் பக்திப் பாதையில், அவள் அனுபவித்துப் பாடிய பிரபந்தங்களில் - எவ்வளவோ நுணுக்கமான தத்துவார்த்த விளக்கங்கள் எல்லாம், நாமே யூகித்து உய்த்து உணரும் நிலையில் அமைந்துள்ளன.

உதாரணமாக - வாழ்ந்து வரும் மனிதர்கள் காணும் திருமணக் கனவுகள் அமங்கலமான பலாபலன்களைத் தரும்பொழுது - கோபி ஆண்டாள் கண்ட மங்கல மணக்கோலக் கனவு மட்டும், நினைவிலும் மங்கலமாகவே முடிந்து, அரங்கனுடன் தன் சரீரத்துடன் சங்கமம் ஆகிவிட்டாள். அதைப் போலவே -

ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறுமாத தக்ஷிணாயன காலம், மரணத்திற்கு ஏற்ற காலம் அல்ல என்றும் - தை முதல் ஆனி மாதம் முடிய உள்ள உத்தராயன காலமே சுவர்க்கம் பெறுவதற்குரிய நிலையில் மரணம் அமைய வேண்டிய நற்காலம் என்றும் சொல்லப்படுகின்றது. மகாபாரத யுத்தத்திலும், உத்தராயன காலத்தை எதிர் நோக்கித் தன் உயிரை விடுவதற்காகப் பிதாமகர் பீஷ்மர் அம்புப்படுக்கையில் காத்துக் கிடந்தார் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

தக்ஷிணாயன காலத்தைத் தேவர்கள் உறங்கும் பொழுதாகவும், உத்தராயன காலத்தைத் தேவர்கள் விழித்திருக்கும் பொழுதாகவும் நம்பப்படுகின்றது. அதனால்தான் - உத்தராயன காலத்தில் வரும் மாசிமாத சிவராத்திரியும், பங்குனி உத்திரமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

ஆனால் - கோபி ஆண்டாள், தான் மார்கழி மாத நோன்பு நோற்ற தக்ஷிணாயனத்தில் வரும் வைகுண்ட ஏகாதசிக்கே முதன்மை தந்து - இம்மார்கழியில் வரும் வைகுண்ட ஏகாதசியில் தான் பரமபதம் அடைதல் சிறப்புடையது என்ற கருத்துப்படத்

தன் திருப்பாவையின் பத்தாவது பிரபந்தத்தில் **'தோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!'** என்று பாசுரம் பாடியுள்ளாள். கோபி ஆண்டாள், தான் நினைத்தது நிறைவேற மார்கழி நோன்பைத் தேர்ந்தெடுத்ததிலும் ஒரு தத்துவார்த்தம் அடங்கியுள்ளது. தட்சணாயன காலம் முடிவு பெறும் மாதமாக மார்கழியும், உத்தராயன காலத்தில் புத்தாண்டு துவங்கும் சித்திரையும் அமைந்துள்ளன.

எந்த ஆண்டை எடுத்துக் கொண்டாலும், **மார்கழி மாதம் எந்தக் கிழமையில் பிறக்கின்றதோ, அதே கிழமையில்தான் – அடுத்துத் துவங்கும் ஆண்டின் முதல் மாதமாகிய சித்திரையும் பிறந்து வருகின்றது.** ஆக, மார்கழியும் சித்திரையும் ஒரே கிழமையில் பிறந்து வந்து கொண்டிருப்பதால் - இக்கிழமையின் அடிப்படையில் தட்சணாயனமும், உத்தராயனமும் ஒன்றோடு ஒன்று சங்கமம் ஆகி - இரண்டு ஆண்டுகளின் வழிபாட்டுப் பலாபலன்கள் மார்கழி மாத நோன்பிலேயே கிடைத்து விடுகின்றன. இக்காரணத்தாலும், கே.பி. ஆண்டாள் மார்கழி மாதத்தைத் தன் நோன்பு நோற்ற மாதமாகத் தேர்ந்தெடுத்துள்ளாள்.

தட்சணாயன ஆடியில் பூரத்தில் அவதரித்து - இதே தட்சணாயன மார்கழியில் நோன்பு நோற்று, உத்தராயனப் பங்குனி உத்திரத் திருநாளில் அரங்கத்து அழகிய மணவாள னுடன் சங்கமமான கோபி ஆண்டாள் நாச்சி - **ஓர் ஆண்டில் எம்பெருமானை எண்ணி வழிபடும் எல்லா நாட்களுமே நல்லவை! நல்லவை!** என்று தன் பரமாத்ம சங்கம பக்திப் பாதைக்குள் நிரூபித்துவிட்டாள்! அதைப் போலவே -

கோபி ஆண்டாள், திருப்பாவை பதின்மூன்றாவது பிரபந்தத்தில் 'வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று!' என்று வரும் பாசுர அடியும் கவனிக்கத்தக்கது.

இப்பாசுரஅடியை வைத்துக் கொண்டு - வரலாற்று ஆசிரியர்களும், திவ்வியப்பிரபந்த உரை வகுத்து நுணுக்கம் கண்ட பெருமக்களும் இப்பாசுர அடியை மையமாகக் கொண்டு, ஆண்டாளின் வாழ்ந்த காலத்தை ஆராய்ச்சி செய்து - ஒவ்வொரு முடிவைக்கூறி வருகின்றார்கள்.

இத்தகைய ஆண்டாள் வாழ்ந்த கால ஆராய்ச்சி, ஆன்மீக நிலையில் எப்படிப்பட்ட ஆன்மீக தத்துவ சாரத்தைத் தந்து வருகின்றது என்பதே விளங்கவில்லை.

ஆண்டு, மாதங்களாகவும் - மாதங்கள், கிழமைகளாகவும்

பிரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அமைந்த கிழமைகள் ஏழும், ஏழு கிரகங்களின் பெயர்களாகவே அமைந்துள்ளன. இவற்றுள்-

ஞாயிறும், திங்களும் உலகத்திற்கு ஒளியைத் தந்து பகல், இரவுகளை ஏற்படுத்தி வரும் கிரகங்கள் ஆகும்! சூரியனைக் கொண்டே, ஆண்டில் வரும் அயனங்களாகிய காலங்களும் - சந்திரனைக் கொண்டே, மாதங்களில் வரும் வளர்பிறை, தேய்பிறைகளும் வகுக்கப்படுவதோடு - சூரிய சந்திரர்களால் நாழிகை, திதி, நக்ஷத்திரம், இராகு, எமகண்ட, குளிகைகளின் நாளமைப்பு ஆகியவை பகுத்துக் கணக்கிடப்படுகின்றன.

செவ்வாய், சிவந்த நிறம் கொண்ட சிவாம்சம் வாய்ந்தது! சிவனின் நெற்றிக்கண் வியர்வை நிலத்தில் விழுந்து செவ்வாய் உருவானதாகக் கூறப்படுகின்றன. அத்துடன் செவ்வாய்க்கு அங்காரகன் என்ற பெயரும் உண்டு. அங்காரக அதிபதியாக முருகப்பெருமான் குறிப்பிடப்படுகின்றான். விஞ்ஞான அறிவியலாளர்களும் செவ்வாய், சிவந்த நிறத்தோடு காணப்படுவதாகவும் - பூமியைப் போல நிலம், நீர், உயிரினங்கள் இக்கிரகத்தில் காணப்படுவதாகவும் கூறுகின்றார்கள். செவ்வாயைப் பூமியின் புத்திரன் என்று கருதும் மரபும் உண்டு.

புதன், அறிவு நுட்ப அம்சம் கொண்ட அதிபதியான கிரகம் ஆகும். புத்தி மேம்பாடுபெற்ற இப்புதன், நாராயணனுக்குரிய இன்றியமையாத வழிபாட்டு நாளாகும்.

வியாழன் என்பது, தேவகுருவாகிய பிரகஸ்பதி! வெள்ளி என்பது, அரக்க குருவாகிய சுக்கிரன்! - வியாழன், பிரமதேவனின் வழியில் பிறந்தவன்! வெள்ளியோ, சிவபெருமானின் சுக்கிலத்திலிருந்து உருவானவன்!

மழை பொழிவதை முன்னதாகவே விடிவெள்ளியாக வானில் காட்டுபவன், சுக்கிரன்! மரணம் அடைந்தவர்களையும் உயிர் பிழைக்கச் செய்யும் மிருத சஞ்சீவினி மந்திரம் தெரிந்தவன், சுக்கிரன்! அத்துடன் சகல சரீர சுகபோகங்களுக்கும், சுக்கிரனே அதிபதியாக விளங்கி - மாபெரும் லாப அதிர்ஷ்டங்களை சுக்கிர திசையாக மாறி, வாரி வாரிக் கொடுப்பவனும், இவனே!

சனியோ - மண்ணிலும் விண்ணிலும் உள்ளவர்களை விதி வழி ஆட்டிப் படைத்து அரசாள்பவன்! அதே நேரத்தில் வாரியும் வழங்குபவன்! நாராயணனுக்குரிய நாளாகக் கருதப்படும் சனி - பகவான், ஈஸ்வரன் ஆகிய அந்தஸ்துக்களையும் கொண்டவன்!

மழையின் வருகையை உணர்த்தும் வெள்ளிக்குரிய திசை, சூரியன் தோன்றும் கிழக்கு! வியாழனுக்குரிய திசையோ. வடக்கு!

விடி வெள்ளி, வைகறையில் ஜொலித்தால், வற்றாத மழை! மங்கி விட்டாலோ, நாட்டில் கடும் பஞ்சம்! வியாழனை விடவும், வெள்ளியே லோகக்ஷேமங்களுக்கு உகந்தது! ஆனால் - தேவகுருவாகிய வியாழனும், அசுர குருவாகிய வெள்ளியும் வானில் இணைந்து உதயமாக மாட்டார்கள்! வியாழன் மறையும் பொழுதே, வெள்ளி முளைப்பான்!

இத்தகைய அடிப்படையான கருத்துக்களைக் கொண்டிருந்த கோபி ஆண்டாள் - தன் திருப்பாவையின் பதின்மூன்றாவது பிரபந்தத்தில் உலக நன்மைகளுக்காக வந்து அவதரித்த கண்ணனையும், இராமனையும் எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்டதோடு - உலகம் செழிக்க மழை தரும் ஆற்றலைக் கொண்ட வெள்ளி முளைத்ததை **'வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று !'** என்று குறிப்பிட்டுள்ளாள். மேலும் -

வாரத்தில் மாறிமாறி வரும் ஏழு கிழமைகளும், ஏழு நாட்களுக்கு ஒருமுறை பிறக்கின்றது! பிறகு, பிறந்து இறக்கின்றது! இறந்தது, மீண்டும் பிறக்கின்றது! பிறந்தது, மீண்டும் இறக்கின்றது! இறந்தது, மீண்டும் பிறக்கும்! பிறந்தது, மீண்டும் இறக்கும்! இக்கிழமைகள் பிறப்பதும், இறப்பதும் - ஏழேழ் பிறவிகளைக் கொண்ட மனித உயிர் பிறந்து, இறந்து - பின்பு பிறப்பதைப் போன்றது.

ஜீவாத்மாவிற்குப் பிறவி என்பது, உறங்கி விழிப்பதைப் போன்றது! மரணம் என்பது, உறங்குவதைப் போன்றது! ஏழேழ் பிறவிகளிலும் நம்பிக்கை கொண்ட கோபி ஆண்டாள் - மனித வாழ்வைப் போலவே அமைந்துள்ள ஏழு ஜனன மரணங்களைத் தவறாமல் கொண்டு, மாறிமாறி வந்து கொண்டிருக்கும் கிழமைகளைக் குறிப்பிட்டே 'வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று!' என்று பாடினாள். அடுத்து -

கோபி ஆண்டாள், மதி நிறைந்த நன்னாளில் நோன்பை நோற்று - அதே முழுமதி நாளில் நோன்பை முடித்ததிலும் ஓர் உண்மை பொதிந்துள்ளது. ஒவ்வொரு கிரகத்திற்கும் உரிய மொழி என்று கூறப்படுவதில், சந்திரனுக்குரிய மொழியாகத் தமிழ் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டாள், பாடிய அவ்வளவு பாசுரங்களும் தமிழில் அல்லவா அவளால் பாடப்பட்டுள்ளன? கோபி ஆண்டாளின் நாவில் பாசுரங்களாகத் தவழ்ந்து நடமாடிய தமிழைத் தன் மொழியாகக் கொண்ட சந்திரனை, கோபி ஆண்டாள் கொண்டாடாமலா இருப்பாள்? அதனாலேயோ, என்னவோ - சந்திரனின் முழுமதி நாளில் தன் மார்கழி நோன்பைத் தொடங்கி இருக்கின்றாள், ஆண்டாள்!

அது மட்டுமா? தன் நாச்சியார் திருமொழியின் எட்டாவதாக மேகங்களை, கோபி ஆண்டாள் தூதுவிட்ட திருவேங்கடவனின் திருமலையும் - சந்திர க்ஷேத்திரம் அல்லவா?

ஸ்ரீ கிருஷ்ணாவதார யுகத்திற்கு ஈடு இணையற்ற கோபி ராதையாக இருந்தால் - நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கலியுகத்தின் கோபி - கோதை தான்! திருவரங்கனின் திருமேனியில் சங்கமமாகிக் கிடக்கும் கலியுகக் கோபி கோதை ஆண்டாள் நாச்சி, அரங்கத்து அழகிய மணவாளனுடன் கூடி நமக்கெல்லாம் அருள்மழையை என்றென்றும் வாரி வழங்கி வருகின்றாள்!

நாம் அனைவரும் கோதையின் பக்திப் பாதையின் ஞான வழியில் நடந்து, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் பேரருளைப் பெறுவோமாக! வாழ்க, ஆண்டாளின் திருநாமம்!

**'திருஆடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே!**
**திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே!**
**பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!**
**பெரும் பூதூர் மாமுனிக்குப் பின் ஆனாள் வாழியே!**
**ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே!**
**உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே!**
**மருவாரும் திருமல்லி வளநாடு வாழியே!**
**வண் புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே!'**

கோபி கோதை ஆண்டாள் நாச்சியார் - திருவடிகளே சரணம்!
ஓம் நமோ நாராயணாய!